14-Sec

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
LAID ON THE TABLE OF THE
HOUSE ON
25 JAN 1983

தமிழ்நாடு சட்ட மன்றம்

மன்றத்தில் வைக்கப்படும் ஆவணங்கள்

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், சங்கனாங்குளம் கிராமத்தில் 1980 ஏப்ரல்-மே திங்களில் 17 ஆதி திராவிடப் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர் என்றும், மணி என்ற ஆதி திராவிடர் ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்றும் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணை.

மாண்புமிகு நீதிபதி

திரு. கே. எஸ். இராமமூர்த்தி

விசாரணைக் கமிஷன் அறிக்கை

©
தமிழ்நாடு அரசு
1982


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சங்கனாங்குளம் சம்பவம் பற்றி

நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி

விசாரணைக் கமிஷன் அறிக்கை

1982

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

106-7—A


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

வரிசை எண். விவரம்.

தொகுதி I.

I. முகப்புரை. .. ..

II. கற்பழிப்பு. .. ..

1. இராஜசெல்வம். .. ..
2. பிரேமா .. ..
3. வசந்தி .. ..
4. தேவர் பக்கம் கண்ணம்மாளின் சார்பு. .. .. ..
5. மஞ்சுளா: .. ..
6. வசந்தா .. ..
7. கிரேஸ் .. ..
8. மைக்கேல் அம்மாள் .. ..
9. கற்பழிப்பு பற்றிய முடிவு. .. ..

III. கொலை.

1. கொலை பற்றிய நேரடி சாட்சிகளின் விவாத விவரம்.
2. மணியின் கொலை இயற்கையானதா? தேவர்கள் வழக்கு பொய்யானதா?
3. வழக்குத் தொடர்பில்லாத ஒப்பு மூலம். .. .. ..

தொகுதி II.

(4) சா. ஆ. பி. 10 புனைபெயரில் எழுதப்பட்ட மனு—தேவர் வகுப்பினருக்கு, காவல்துறை சப்-இன்பெக்டர் கிருஷ்ண சாமிக்கும் இடையே உள்ள வஞ்சகக் கூட்டு.

(5) 360/80ஆம் எண் குற்ற வழக்கு பற்றி விசாரணை—ஐயத்திற்கிடமான குழ்நிலையில் மணி மரணம்—தேவர் வகுப்பினருக்கும் இன்ஸ்பெக்டர் அருணாசலத்திற்கு மிடையே வஞ்சகக்கூட்டு.

(6) அவசரம் அவசரமாக மனிதத்தன்மையற்ற முறையில் சடலத்தை எரித்தல்.

(7) நீலகண்டத் தேவர், ஆதி திராவிடர்களை தூண்டிவிட்டாரா?

(8) மணியின் சடலத்தை எரிப்பதற்கான செலவு குறித்த பேச்சு வார்த்தை.

(9) சந்தர்ப்ப சாட்சியம் (மணியின் சடலத்தை தேவர் வகுப்பினர் இறக்கி விட்டது).

(10) முடிவிற்கான தோற்றுவாய் .. ..

11) தேவர் வகுப்பினர்மீது பாதகமான கருத்துக்கள் .. ..

(12) கொலை பற்றிய தீர்ப்பு .. ..

வரிசை எண். விவரம்.

IV கருத்துரைகள் .. ..

V பாராட்டும் நன்றி தெரிவித்தலும் .. ..

VI இணைப்புகள்—

1. இணைப்பு I—(கமிஷனை நியமித்து வெளியிடப்பட்ட அறிவிக்கை).

2. இணைப்பு II—(ஆதி திராவிடர்களின் மரபுவழிப்பட்டியல்).

3. இணைப்பு III—(நிகழ்விட வரை படம்) .. .. ..

4. இணைப்பு IV—(தேவர் வகுப்பினரின் மரபுவழிப்பட்டியல்) ..

5. இணைப்பு V—(வள்ளியூர் காவல்துறை உதவி சூப்பிரண்டு அளித்த அறிக்கை) (சா. ஆ. ஜி. 25).

6. இணைப்பு VI—(சாட்சிகளின் பட்டியல்) .. .. ..

7. இணைப்பு VII—(சான்றாவணங்களின் பட்டியல் 'ஏ' தொடர்).

8. இணைப்பு VIII—(சான்றாவணங்களின் பட்டியல் 'பி' தொடர்).

9. இணைப்பு IX—(சான்றாவணங்களின் பட்டியல் 'ஜி' தொடர்).

10. இணைப்பு X—(கமிஷனின் விதி முறைகள்) .. .. ..

11. இணைப்பு XI—(ஆய்வு அறிக்கைகள்) .. .. ..

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

©
தமிழ்நாடு அரசு
1982

பொது (சட்டமும்-ஒழுங்கும்-அ)த் துறை

அரசாணை நிலை எண் 1794, நாள் : 15 அக்டோபர் 1982

(புரட்டாசி 29, துந்துபி, திருவள்ளுவராண்டு 2013)

சட்டமும்—ஒழுங்கும்—திருநெல்வேலி மாவட்டம்—நாங்குநேரி வட்டம்—சங்கனான்குளம் கிராமத்தில் 1980 ஏப்ரல்-மே திங்களில் 17 ஆதி திராவிடப் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர் என்றும் மணி என்ற ஆதி திராவிடர் ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்றும் கூறப்பட்ட குற்றச் சாட்டுகளைத் தொடர்ந்து, பார்வையில் குறிப்பிட்ட விசாரணையில் ஒரு நபர் ஆணைக் குழுவாக சென்னை உயர்நீதி மன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு. கே. எஸ். ராமமூர்த்தி அவர்களை அரசு நியமித்தது. இந்த ஆணைக் குழுவின் விசாரணைக்குட்பட்ட பொருட்கள் பின்வருமாறு :—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், சங்கனான்குளம் கிராமத்தில் 1980 ஏப்ரல்-மே திங்களிலும் அதன் பிறகும் ஆதி திராவிட மகளிர் சிலர் கற்பழிக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட நிகழ்ச்சி பற்றியும், மணி என்பவர் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது பற்றியும் விசாரணை செய்து அறிக்கை அனுப்ப வேண்டும்.

(ஆ) மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளில் உண்மை உள்ளதா என்பதைக் கண்டறிந்து இந்த நிகழ்ச்சிக்குப் பொறுப்பானவர்களைக் கண்டறிய வேண்டும்.

(இ) இத்தகைய நிகழ்ச்சிகள் வருங்காலத்தில் நிகழாதவாறு தடுப்பதற்கான வழிவகைகளைப் பரிந்துரைக்க வேண்டும்.

(2) இவ்விசாரணைக் குழு அதன் முன் கூறப்பட்ட சாட்சியங்களின் வாக்குமூலங்களை ஆராய்ந்து, தனது முக்கிய முடிவுகளைக் கீழ்க்கண்டவாறு தந்துள்ளது:—

(அ) கற்பழிப்பு பற்றிப் பேசிய அனைத்துப் பெண்களுமே திரு. காசி என்பவருக்கு ஏதேனும் ஒரு வகையில் சொந்தக்காரர்களாகவே இருக்கிறார்களே தவிர வேறு யாருமில்லை. இச் சாட்சியங்கள் யாவும் காசி என்பவரால் கொல்லி கொடுக்கப்பட்டவையே. மேலும், அப் பெண்கள் கூறும் சாட்சியங்களில் வேறுபாடுகளும், முரண்பாடுகளும், நேரம், காலம், இடம் பற்றிய பொருத்தமின்மைகளும் உள்ளன. எனவே ஆதி திராவிடப் பெண்கள் கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டு ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று.

(ஆ) திரு. மணி கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் குற்றச் சாட்டைப் பொறுத்தவரை, திரு. மாடசாமித் தேவர், திரு. சங்கரத் தேவர் மற்றும் ராமச் சந்திரத் தேவர் ஆகியோருக்கு எதிராக சில முக்கிய சூழ்நிலை சுந்தர்ப்ப சாட்சிகள் இருப்பதாகத் தோன்றினாலும், ஒரு முழுமையான கருத்து ஏதும் உருவாகவில்லை. அரைக் குறையான விவரமே வருகிறது. எனவே மேற்கூறப்பட்ட மூவரும் குற்றவாளிகள் அல்ல என்றாலும் அது கௌரவமான, கண்ணியமான விடுவிப்பு அல்ல (It is no an honourable acquittel) சந்தேகத்துக்கிடமில்லாத வகையில் குற்றம் நிருபிக்கப்படவில்லை என்பதால் மட்டுமே அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள்.

பார்வை—

(1) அரசாணை நிலை எண் 2730, பொது (சட்டமும்-ஒழுங்கும்-அ)த் துறை, நாள்: 11-12-1980.

(2) நீதிபதி திரு. கே. எஸ். ராமமூர்த்தி, விசாரணைக் குழுவின் நேர்முகக் கடித எண் 1/80-137, நாள் : 28-4-1982.

ஆணை—அரசாணை நிலை எண் 1794, பொது (சட்டமும்-ஒழுங்கும்-அ), நாள் : 15 அக்டோபர் 1982.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், சங்கனான்குளம் கிராமத்தில் 1980 ஏப்ரல்-மே திங்களில் 17 ஆதி திராவிடப் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர் என்றும் மணி என்ற ஆதி திராவிடர் ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்றும் கூறப்பட்ட குற்றச் சாட்டுகளைத் தொடர்ந்து, பார்வையில் குறிப்பிட்ட விசாரணையில் ஒரு நபர் ஆணைக் குழுவாக சென்னை உயர்நீதி மன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு. கே. எஸ். ராமமூர்த்தி அவர்களை அரசு நியமித்தது. இந்த ஆணைக் குழுவின் விசாரணைக்குட்பட்ட பொருட்கள் பின்வருமாறு :—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், சங்கனான்குளம் கிராமத்தில் 1980 ஏப்ரல்-மே திங்களிலும் அதன் பிறகும் ஆதி திராவிட மகளிர் சிலர் கற்பழிக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட நிகழ்ச்சி பற்றியும், மணி என்பவர் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது பற்றியும் விசாரணை செய்து அறிக்கை அனுப்ப வேண்டும்.

(ஆ) மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளில் உண்மை உள்ளதா என்பதைக் கண்டறிந்து இந்த நிகழ்ச்சிக்குப் பொறுப்பானவர்களைக் கண்டறிய வேண்டும்.

(இ) இத்தகைய நிகழ்ச்சிகள் வருங்காலத்தில் நிகழாதவாறு தடுப்பதற்கான வழிவகைகளைப் பரிந்துரைக்க வேண்டும்.

(2) இவ்விசாரணைக் குழு அதன் முன் கூறப்பட்ட சாட்சியங்களின் வாக்குமூலங்களை ஆராய்ந்து, தனது முக்கிய முடிவுகளைக் கீழ்க்கண்டவாறு தந்துள்ளது:—

(அ) கற்பழிப்பு பற்றிப் பேசிய அனைத்துப் பெண்களுமே திரு. காசி என்பவருக்கு ஏதேனும் ஒரு வகையில் சொந்தக்காரர்களாகவே இருக்கிறார்களே தவிர வேறு யாருமில்லை. இச் சாட்சியங்கள் யாவும் காசி என்பவரால் கொல்லி கொடுக்கப்பட்டவையே. மேலும், அப் பெண்கள் கூறும் சாட்சியங்களில் வேறுபாடுகளும், முரண்பாடுகளும், நேரம், காலம், இடம் பற்றிய பொருத்தமின்மைகளும் உள்ளன. எனவே ஆதி திராவிடப் பெண்கள் கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டு ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று.

(ஆ) திரு. மணி கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் குற்றச் சாட்டைப் பொறுத்தவரை, திரு. மாடசாமித் தேவர், திரு. சங்கரத் தேவர் மற்றும் ராமச் சந்திரத் தேவர் ஆகியோருக்கு எதிராக சில முக்கிய சூழ்நிலை சுந்தர்ப்ப சாட்சிகள் இருப்பதாகத் தோன்றினாலும், ஒரு முழுமையான கருத்து ஏதும் உருவாகவில்லை. அரைக் குறையான விவரமே வருகிறது. எனவே மேற்கூறப்பட்ட மூவரும் குற்றவாளிகள் அல்ல என்றாலும் அது கௌரவமான, கண்ணியமான விடுவிப்பு அல்ல (It is no an honourable acquittel) சந்தேகத்துக்கிடமில்லாத வகையில் குற்றம் நிருபிக்கப்படவில்லை என்பதால் மட்டுமே அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள்.

எண் 1794, பொது (சட்டமும்-ஒழுங்கும்-அ), நாள்: 15 அக்டோபர் 1982

(இ) காவல் உதவி ஆய்வாளர் திருஷ்ணசாமியும், ஆய்வாளர் அருணாசலமும், நேர்மையற்ற முறையில் பிறருடன் தீய கூட்டுச் சேர்ந்து தீய சூழ்ச்சிகளில் ஈடுபட்டனர்.

விசாரணைக் குழுவின் மேற் கூறப்பட்ட முடிவுகள் அரசால் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன.

(3) மேலும், இவ்விசாரணைக் குழு கீழ்க்கண்ட முக்கியமான பரிந்துரைகளையும் தந்துள்ளது—

(அ) மாடசாமித் தேவர், சங்கரத் தேவர் முதலானோரின் நடவடிக்கைகள் நெருக்கமாகவும், கண்டிப்பாகவும் கண்காணிக்கப்பட வேண்டும்.

(ஆ) திசையன்விளை காவல் துறை ஆய்வாளர், உதவி ஆய்வாளர் ஆகியோரும் வள்ளியூர் காவல் துறை உதவி கண்காணிப்பாளரும், தேவர் வகுப்பினரைச் சாராத வேறு வகுப்பினராக இருத்தல் நலம்.

(இ) திசையன்விளை காவல் நிலையத்திலும், வள்ளியூரிலும் உள்ள காவல் துறை அதிகாரிகளின் பணிகளைப் பொறுத்தவரை திருநெல்வேலி மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் போன்ற உயர்மட்ட அதிகாரிகள் நேரடிக் கட்டுப்பாடு செலுத்தி கண்காணிக்க வேண்டும்.

(ஈ) திசையன்விளைக் காவல் துறை அதிகாரிகள் சங்கனாங்குளம் கிராமத்தைத் திறமையான முறையில் மேற்பார்வையிட வகைசெய்ய, சங்கனாங்குளம் கிராமத்திற்குச் செல்லும் அனுகுசாலையில் நாங்குநேரி திசையன்விளை சாலையை இணைப்பதற்குச் சாலை ஒன்று உடனடியாக அமைக்கப்பட வேண்டும்.

(உ) இப்பகுதியில் கள்ளச் சாராயம் வடித்து இறக்குவது பெரிய அளவில் நடைப்பெற்று வருகிறது. காவல் துறையினர் இது பற்றிக் கவனமாக நடவடிக்கை எடுத்து கள்ளத் தனமாகச் சாராயம் வடித்து இறக்குவதைத் தடுக்க அடிக்கடி திடீர் சோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

(ஊ) சங்கனாங்குளம் ஆதி திராவிடர்கள் தங்களுடைய வாழ்க்கையை தாங்களே நடத்த இயலும் வகையில் சிறுதொழில் துறையின் சிறப்புப் பிரிவு ஒன்று அங்கு தொடங்கப்படலாம்.

(எ) மாடசாமித் தேவர் அல்லது சங்கரத் தேவர் அல்லது ராமச்சந்திரத் தேவர் ஆகியோரின் குடும்பத்தினர் எவரும் எந்தக் கோயிலுக்கும் அறங்காவலராகவோ, (Trustee) அல்லது எந்த கிராமத்துக்கும் கிராம முன்சீப்பாகவோ, கர்ணமாகவோ நியமிக்கப்படக்கூடாது.

(ஐ) மாடசாமித் தேவர் அவருடைய சகோதரர்கள் ஆகியோரின் குடும்பத்தினர் எவரும் துப்பாக்கி வைத்திருப்பதற்கான உரிமம் (Gun Licence) கொண்டிருந்தால் பொது மக்களின் பாதுகாப்பு கருதி அது உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.

(4) மேலே பத்தி 3-ல் கூறப்பட்டுள்ள ஆணைக் குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இப் பரிந்துரைகளின் மீது எடுக்கப்படவேண்டிய மேல் நடவடிக்கை பற்றிய ஆணைத் தனியாக வெளியிடப்படும்.

(ஆளுநரின் உத்தரவுப்படி)

இரா. கிருபாகரன்,
அரசு இணைச் செயலர்.

பெறுநர் :

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம்.
காவல் துறை இயக்குநர், சென்னை-4.
ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர், சென்னை-1
நிர்வாக அதிகாரி, தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் கழகம், 'குறளகம்', சென்னை-1.
ஆணையாளர், இந்து அறநிலைய மற்றும் அறக் கட்டளைத் துறை, சென்னை-34.
ஆணையாளர், வருவாய் நிர்வாகத் துறை, சென்னை-5.
காவல் துறைத் தலைவர் (மதுவிலக்கு மற்றும் அமுல் படுத்தல்), சென்னை-10.
மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர், திருநெல்வேலி.

நகல் :

உள் துறை, சென்னை-7.
சட்டத் துறை, சென்னை-9.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, சென்னை-9.
வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, சென்னை-9.
வருவாய்த் துறை, சென்னை-9.
பொது (சட்டமும் ஒழுங்கும்-பி) துறை, சென்னை-9.
மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வுத் துறை, சென்னை-9.

சங்கனாங்குளம் சம்பவம் பற்றி நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி விசாரணைக் கமிஷன் அறிக்கை

தொகுதி–I

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சங்கனாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த (ஆதிதிராவிடர் குடியிருப்பு) ஆதி திராவிடர்களைத் தேவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் கொடுமை செய்ததாக வும், ஆதிதிராவிட மகளிர் பலர் கற்பழிக்கப் பட்டனர் என்றும், இராஜசெல்வம் என்ற பெண் மணியின் கணவரான மணி என்ற ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர் கொலை செய்யப்பட்டார் என்றும், மேற்கு சங்கனாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த ஆதி திராவிடர்கள் 1980ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் எரிச்சி செய்தனர்.

2. இந்த அறிக்கையில் '' தேவர்கள் '' என்ற சொல் குறிக்கும் இடங்களில் எல்லாம், மாடசாமித் தேவர், சங்கரத் தேவர், இராமசந்திரத் தேவர் ஆகிய மூன்று சகோதரர்களையே அச்சொல் குறிப்பிடும். இவர்கள் பணக்காரர்கள்; செல் வாக்கு மிக்கவர்கள்: அதிகாரம் வாய்ந்தவர்கள். இவர்கள் மேற்கு சங்கனாங்குளம் கிராமத்தில் வாழ்கின்றனர். இந்த கிராமத்திலும் அருகிலுள்ள கிராமங்களிலும் இவர்களுக்கு நிலபுலன்கள் உள்ளன. சுமார் 150 வீடுகளைக் கொண்ட மேற்கு சங்கனாங் குளத்தில் சுமார் 500 பேர் வாழ்கின்றனர். ஒரு மைல் தொலைவிலுள்ள மேற்கு சங்கனாங் குளத்தில் ஆதி திராவிடர் குடியிருப்பு மட்டுமே உள்ளது. சுமார் 20 வீடுகள் கொண்ட இக் குடியிருப்பில் 60 பேர் வசிக்கின்றனர். இவர்கள் அனைவரும் கிறித்தவர்கள். சீர்குலைந்த பிறிய குடிசைகளில் இவர்கள் இருந்து வருகின்றனர். இவர்களில் பலர் தங்கள் வீடுகளைவிட்டுச் சென்று விட்டனர். மேற்கு சங்கனாங்குளம் இப்பொழுது வெறிச்சோடிக் காணப்படுகிறது. இங்குள்ள ஆதி திராவிடர்கள் விலங்குகளைப்போல் ஒதுங்கி வாழ் கின்றனர். பகல் நேரத்தில் அருகிலுள்ள கிராமங் களுக்குச் சென்று இவர்கள் விவசாயக் கூலிகளாகப் பிழைக்கின்றனர்.

3. ஆதி திராவிடர்களுக்குக் கொடுமைகள் இழைக்கப்பட்டதாகவும், 1980 மார்ச்சு திங்களில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மணி என்பவர் சித்திரைத் திங்கள் முதல் வாரத்தில் (அதாவது மார்ச்சு முடிந்து ஏப்ரல் தொடக்கத்தில்) கொலை செய்யப் பட்ட தாகவும், ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த மகளிர் பலர் கற்பழிக்கப்பட்டதாகவும் சொல்லி ஆதி திராவிடர்கள் கிளர்ச்சி செய்தனர்.

4. 1980 மே திங்களில் அ.இ.அ.தி.மு.க. வைச் சேர்ந்த திரு ஜான் வின்சென்ட் நாங்குனேரி சட்ட சபைத் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கொலை செய்யப் பட்ட மணியன் நெருங்கிய உறவினரும், ஆதி திராவிடர்களிடையே மிகுந்த செல்வாக்கு வாய்ந்தவருமான காரி என்பவர் மேற்கு சங்கனாங் குளம் கிராமத்தில் எம். ஜீ. ஆர். இளைஞர் நற்பணி மன்றம் '' ஒன்றைத் தொடங்கினார். இந்த மன்றத்தை அமைக்க அவர் ஆர்வமாகப் பாடுபட்டார். ஆதி திராவிடர்களின் நலனைப் பேணிக்காப்பதையே நோக்கமாகக் கொண்ட இம் மன்றத்தின் நற்பணிகளில் அவர் மிகுந்த அக்கறை காட்டினார். மேற்கு சங்கனாங்குளத்தின் பெயரை '' அண்ணா நகர் '' என்று மாற்றி அமைக்கவும், அ.இ.அ.தி.மு.க. கொடியை அங்கே ஏற்றிவைக்க வும் அவர் 24—9—1980 அன்று அந்தக் கிராமத்தில் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். திருநெல் வேலியில் இருந்துவரும் செல்வாக்கு வாய்ந்த நீலகண்டத் தேவர் என்பவர் இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். நீலகண்டத் தேவருக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் சங்கனாங்குளம் கிராமத்திலும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் ஏராளமான நிலபுலங்கள் உள்ளன. இந்த நிலங்களை குறி ஏழாண்டுகளாகக் கவனித்து வந்தார். நீல கண்டத் தேவரிடமும் அவருடைய சகோதரர் களிடமும் பணிபுரிபவர்களில் இவர்தான் மிகவும் முதன்மையானவர். அவர்களுடைய நிலங்களைப் பற்றிய எல்லா நடைமுறைகளிலும் நீலகண்டத் தேவர் காரியையே நம்பியிருந்தார். 24—9—1980 அன்று மேற்கு சங்கனாங்குளத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் உரையாற்றுமாறு சட்ட மன்ற உறுப்பினர் திரு ஜான் வின்சென்ட் அவர்களைக் காரி கேட்டுக்கொண்டார். திரு நீலகண்டத் தேவர் தலைமை தாங்கிய அக்கூட்டத்தில் திரு ஜான்வின்சென்ட் உரையாற்றினார். சித்திரைத் திங்கள் முதல் வாரத்தில் மணி என்பவர் கொலை செய்யப்பட்டது குறித்தும், ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த 17 பெண்கள் தேவர் வகுப்பைச் சேர்ந்தவர்களால் கற்பழிக்கப்பட்டது குறித்தும், ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மகளிர் திரு ஜான் வின்சென்ட் அவர்களிடம் கூட்டம் முடிந்த பிறகு புகார் செய்தனர். அவர் மேற்கு சங்கனாங் குளம் கிராமத்தில் உள்ள மாதாகோயிலுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு நங்களுக்கு இழைக்கப் பட்ட கொடுமைகளை அங்கு அவரிடம் எடுத் துரைத்தனர். அச்சமயம் மாதாகோயிலின் கதவு களும், சன்னல்களும் மூடப்பட்டு கற்பழிப்புச் சம்பவங்கள் பற்றி அவரிடம் இரகசியமாகத் தெரிவிக்கப்பட்டன. இச்சம்பவத்தில் கற்பழிக்கப் பட்ட ஆதிதிராவிடப் பெண்களின் பெயரும், கற்பழித்தவர்களின், அதாவது தேவர் வகுப்பைச் சேர்ந்தவர்களின் பெயர்களும் கொண்ட முழுப் பட்டியல் அவரிடம் அளிக்கப்பட்டது. கற்பைப் பறிகொடுத்த ஆதிதிராவிட மகளிர் அதைப் பலர் முன்னிலையில் அவரிடம் சொல்லத் தயங்கி மாதா கோயிலுக்குள் அவரை அழைத்துச் சென்று அங்குள்ள கதவுகளையும், சன்னல்களையும் மூடி விட்டு இரகசியமாக அவரிடம் விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். திரு ஜான் வின்சென்ட், அவர்கள் சொன்ன விவரங்களை எல்லாம் தன்னுடைய நாட்குறிப்பேட்டில் குறித்துக் கொண்டார். அவர்கள் அளித்த புகார்கள் உண்மை யானவையே என்று அவர் உணர்ந்தார். இது பற்றி உடனடியாகப் புலன் விசாரணை மேற் கொண்டு, மேற்கு சங்கனாங்குளத்தில் தேவர் வகுப்பினரால் கொடுமையிழைக்கப்பட்ட மகளி ருக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்றும், அவர்களின் துயர் துடைக்கப்பட வேண்டுமென்றும் அவர் கருதினார். அவரைப் பொறுத்தவரையில் தேவர்வகுப்பினருக்கெதிராகக்கூறப்பட்டபுகார்கள் எல்லாம் உண்மையானவையே என்றுஅவர்உளமார

நம்பினார். அவர் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டார். மேற்கு சங்கனாங்குளம் கிராமத்தில், தாம் பார்த்தவை பற்றியும், தம்மிடம் சொல்லப்பட்டவை பற்றியும், கிராமத்திற்குச் சென்றபோது அங்கிருந்த சூழ்நிலை பற்றிய தன் யூடைய கருத்துக்களையும், மாவட்ட ஆட்சியாள ரிடமும், காவல்துறை ருப்பிரண்டிடமும் அவர் எடுத் துரைத்தார். மாவட்ட ஆட்சியாளருக்கு அவர் அனுப்பிய 25—9—1980 நாளிட்ட கடிதமும், ஏனைய அதிகாரிகளுக்கு அனுப்பிய அக் கடிதத்தின் நகல்களும் சா. ஆ. 66 என்ற குறியிடப்பட்டுள்ளன. இதில் சொல்லப்பட்டுள்ளதாவது :

****'' சங்கனாங்குளம் கிராமம், சங்கனாங் குளம் அரிஜனச் சேரிப் பகுதிக்கு 24—9—1980 ஆம் நாள் நாங்குநேரி யூனியன் ஜீப்பில் சுற்றுப் பயணம் போயிருந்தேன். அதுசமயம். 40 பெண்கள் என்னிடம் கண்ணீரும், கம்பலையுமாக இதனடியில் கண்ட கோரிக்கையைச் சொன்னார்கள். அதனை உடனே நிவர்த்திசெய்ய சம்பந்தப்பட்ட சங்னாங் குளம் கிராம முன்சீப் திரு ராமச்சந்திரன் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து அவர் ராம முன்சீப் வேலையை ரத்து செய்து அரிஜன குலப்பெண்கள், வாலிபப் பிள்ளைகளின் கற்புக்கும், உயிருக்கும் பாதுகாப்பு கொடுக்கும்படி பணிவன்புடன்கேட்டுக் கொள்கிறேன்:—

1. சங்கனாங்குளம் கி. மு. ராமச்சந்திரன் தேவர் என்பவர் வலுக்கட்டாயமாக பெண்களை இழுத்து கற்பழிப்பதாக பெண்கள் புகார் செய் தார்கள்.

2. ஜனாதிபதி ஆட்சியின்போது 1980ம் ஏப்ரல் ஒரு அரிஜன சகோதரன் மணியை அடித்துக் கொன்று எரித்தது (அரிஜன இருள்துவர்கள் எரிக்கமாட்டார்கள்) இதனை செய்தது கிராம முன்சீப் ராமச்சந்திரன்.

3. வேலைக்கு அழைத்து பேசிய சம்பளத்தை விடக் குறைவாக கூலியை கொடுப்பது, வேலை செய்யும்போது கற்பை குறையாட பல வழிகளைக் கையாள்வது.

4. இது குறித்து பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார்கள் கொடுத்து இருக் கின்றார்கள்.

ஆகையால் மரியாதைக்குரிய மாவட்ட ஆட்சி யாளர் அவர்கள் கிராம முன்சீப் ராமச்சந்திரன் மீது நடவடிக்கை எடுத்து சரியான நெய்வநீதி யான தீர்வு காணும்படியும், என் தொகுதியிலுள்ள சங்கனாங்குளம் அரிஜன நெஞ்சுவ சகோதரி களுக்கும், தாய்மார்களுக்கும் தங்கள் கற்பை பிறர் பறித்துவிடாதவண்ணம் நடவடிக்கை எடுக்கும் படியும் அன்புடன் வேண்டுகிறேன் ''****

5. சட்டமன்ற உறுப்பினர் திரு ஜான் வின்சென்ட் அவர்களின் குற்றச்சாட்டுகள் கடுமையானவை ; எனவே, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர் உடனடியாக 27—9—1980 அன்று கூட்டம் ஒன்றைக் கூட்டினார். இக்கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியாளரும், மாவட்டக் காவல் துறை அதிகாரிகளும், ஏனைய அதிகாரிகளும் வந்திருந் தனர். இக்கூட்டத்தின் நடவடிக்கைகளும், திரு ஜான் வின்சென்ட் அவர்களின் குற்றச்சாட்டுகளும் எல்லாம் பத்திரிகைகளிலும் வெளியிட்டபட்டன. இந் நிலையில் நீலகண்டத் தேவரின் சகோதரர் செல்லத்துரையும் முருகனும், தேவர் வகுப்பினர் இழைத்த கொடுமைகள் பற்றிச் சேரன்மாதேவி கோட்டாட்சியரிடம் மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர். அந்த அதிகாரி இது தொடர் பாக 16—9—1980 அன்று, சங்கனாங்குளம் கிராமத்திலிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ள வடக்கு விஜயநாராயணம் என்ற இடத்தில் விசா ரணை ஒன்றை நடத்தினார். இந்த விசாரணைக்கு வருமாறு மாடசாமித் தேவருக்கும், சங்கரத் தேவருக்கும் அறிவிப்புகள் அனுப்பப்பட்டன. ஆனால், அவர்கள் அறிவிப்புகளைப் பெற்றுக் கொள்ளாமல் வேண்டுமென்றே விசாரணைக்கு வரவில்லை. விசாரணைக்கு வந்தால் கோட் டாட்சியர்களின் கேள்விகளுக்கும், குற்றச் சாட்டுகளுக்கும் தாங்கள் பதில் சொல்லவேண்டுமே என்று அஞ்சினார்கள் போலும். மேற்கு சங்கனாங் குளம் கிராமத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் பலர் இந்த விசாரணைக்கு வந்து தங்களுக்கு நேர்ந்த துயரை எடுத்துரைத்தனர். கோட்டாட்சியர், அவர்களிடமிருந்து வாக்கு மூலங்களைப் பெற்று, அவர்களுடைய கையெழுத்துக்களையும் வாங்கிக்கொண்டார். இந்த விசாரணையில் காரி முக்கிய பங்கு வகித்தார். ஆதி திராவிடர்களை விசாரணைக்கு வரச்செய் வதற்கும், அவர்கள் தங்கள் வாக்குமூலங்களைக் கொடுப்பதற்கும் இவர் மிகவும் உறுதுணையாக இருந்தார். விசாரணை 16—9—1980 அன்றே முடிக்க இயலவில்லை. எனவே, கோட்டாட்சியர் இந்த விசாரணையை சேரன்மா தேவியில் 22—9—1980 என்று மீண்டும் நடத்தினார். மாடசாமித் தேவரும், அவரின் சகோதரர்களும் இந்த விசாரணைக்கும் வராம லேயே நழுவி விட்டனர். இந்த விசாரணையில், நீல கண்டத் தேவரின் குடும்பத்தினர் தங்களுக்கு ஏற் பட்டுள்ள பிரச்சினைகளை எடுத்துரைத்ததுடன் தேவர் வகுப்பினர்களுக்கு எதிராகச் சில குற்றச் சாட்டுகளையும் கொடுத்தார்கள். விசாரணை முடிந்த தவணை கோட்டாட்சியர் வின் வான அறிக்கை ஒன்றை மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்பினார் (30—9—1980 நாளிட்ட சா. ஆ. ஜீ. 23) அதில் '' ஆதி திராவிடர்களைத் துன்புறுத்தியது, பெண்களுக்குத் தொல்லை கொடுத்தது, கற்பழித்தது, கொலைகளை மறைத்தது ஆகியவை தொடர்பான குற்றச்சாட்டு களை எளிதில் தள்ளிவிட முடியாது'' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். தேவர் வகுப்பினருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, ஆதி திராவிடர்களின் கிளர்ச்சி தொடர்ந்தது. திரு ஜான் வின்சென்ட் ஆதி திராவிடர்களின் பக்கம் இருந்தார். மேற்கு சங்கனாங்குளம் கிராம மக்கள் பல மனுக்களை காவல் துறை அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சி யாளருக்கும், தமிழக முதல்வருக்கும் அனுப்பினார் கள். திரு ஜான் வின்சென்ட் அவர்களும் பல மனுக்களை அனுப்பினார். தேவர் சகோதரரின் மைத்துனரும், ஒழுக்கக் கண்காணிப்பு ஆய்வாளரு மான இராமகிருஷ்ணன் என்பவரின் ஆதரவினால் தான் இக் கொடுமைகள் இழைக்கப்பட்டன என்றும் இக் கொடுமைகளை மூடி மறைக்க இராம கிருஷ்ணன் பெரிதும் உடைந்தையாக இருந்தார் என்றும் ; உள்ளூர்க் காவல்துறை அதிகாரிகள் இராமகிருஷ்ணைக் கண்டு அஞ்சி, தேவர் சகோதரர்களுக்கு எதிராக நடவடிக்கையும் எடுக்கத் தயங்கினர் என்றும் அந்த மனுக்களில் சொல்லப் பட்டிருந்தது. இதற்கு இடையில் திரு ஜான் வின்சென்ட் 1—10—1980 அன்று தமிழக முதல்வருக்கு மனு ஒன்றை அனுப்பினார். ஆதி திராவிடர்களுக்குத் தேவர் வகுப்பினர் இழைத்த கொடுமைகள் பற்றியும், ஆதி திராவிடப் பெண்கள் கற்பழிக்கப்பட்டது குறித்தும், ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த மணி என்பவர் கொலை செய்யப்பட்டது குறித்தும் விளக்கமாக அவர் அம் மனுவில் குறிப்பிட்டிருந்தார். கோட்டாட்சியரின் 30—9—1980 நாளிட்ட

அறிக்கையின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியாளர் 6—10—1980 அன்று அரசுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பினார். சங்கனாங்குளம் கிராமத்திற்குத் தாம் சென்றது பற்றியும், காவல்துறை ரூப்பிரண்டு அக் கிராமத்திற்குச் சென்றது பற்றியும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டு, ஆதி திராவிடர்களின் குற்றச்சாட்டுகளில் உண்மை எதுவும் இல்லை என்று அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். காவல்துறை ரூப்பிரண்டு இக் கிராமத்திற்கு 1—10—1980 அன்று சென்று, ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த பலரை நேரடியாக விசாரித்து, தன்னுடைய அறிக்கையை 3—10—1980 அன்று காவல்துறை டைரக்டர்-ஜெனரல் அவர்களுக்கு அனுப்பினார் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஆதி திராவிடர்களின் புகார்களுக்கு ஆதாரம் ஏதுமில்லை என்று தன்னுடைய விசாரணையிலிருந்து தெரிவந்ததாக அவர் குறிப்பிட்டிருந்தார். திரு ஜான் வின்சென்டும், ஆதிதிராவிடர்களும் தங்கள் பிளர்ச்சியைத் தொடர்ந்து செய்தனர்; தமிழக முதல்வருக்கும் பல மனுக்களை அனுப்பினர். இந்த விவகாரம் பத்திரிகைகளினால் பெரிதுபடுத்தப்பட்டதாலும், அடுக்கடுக்கான மனுக்கள் அவ்வப்போது ஆதி திராவிடர்களால் தமிழக முதல்வருக்கு அனுப்பப்பட்டு வந்ததாலும், இதுபற்றித் தீர விசாரித்து அறிக்கை ஒன்றை அனுப்புமாறு தென்னை மாவட்ட ஆட்சியாளருக்கு அரசு 22—10—1980 அன்று ஆணை பிறப்பித்தது. மாவட்ட ஆட்சியாளர் 1—12—1980 அன்று இது தொடர்பாகத் தன்னுடைய அலுவலகத்தில் விரிவான விசாரணை ஒன்றை நடத்தி ஆதி திராவிடர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்தார்.

6. நிலமை இவ்வாறிருக்க, பத்திரிகைகள் இந்த விவகாரத்திற்கு முதன்மை அளித்து தொடர்ந்து செய்திகளை வெளியிட்டு வந்தன. ஆதி திராவிடர்கள் இந்தியப் பிரதமருக்கும் புகார் மனுக்களை அனுப்பினர். மேலும் பிரதமரை நேரில் சந்தித்துத் தங்கள் புகார்களைக் கொடுக்க ஜாஜெல்வல், மஞ்சுளா போன்ற ஆதி திராவிடப் பெண்கள் சிலர் புதுடில்லிக்குச் சென்றனர். அங்கு அவர்கள் பிரதமரையும் சந்தித்து, தேவர் வகுப்பினர் தங்களுக்கு இழைத்த கொடுமைகள் பற்றியும், தாங்கள் கற்பழிக்கப்பட்டது பற்றியும், மணி என்பவர் கொலை செய்யப்பட்டது பற்றியும் விவரிக்கும் மனு ஒன்றைக் கொடுத்தனர். (சா. ஆ. ஏ. 16, ஏ. 48.) அதே சமயத்தில் இந் நிகழ்ச்சிகள் பற்றி நாடாளுமன்றத்திலும் கேள்விகள் எழுப்பப்பட்டன. ஆதி திராவிடர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு முடிவு காண தமிழக அரசு, என்ன நடவடிக்கை எடுத்தது என்பன போன்ற வினாக்கள் எழுப்பப்பட்டன. இந்நிலையில் சங்கனாங்குளம் கற்பழிப்புச் சம்பவங்கள் பற்றியும், மணி இறந்த சூழ்நிலைகள் பற்றியும் விசாரணை செய்யுமாறு இந்த 'ஒருநபர் கமிஷனை' தமிழக அரசு 11—12—1980 அன்று நியமித்தது. கமிஷனின் ஆய்வு வரம்பு வருமாறு—

(1) திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி வட்டம் சங்கனாங்குளம் கிராமத்தில் ஆதி திராவிட மகளிர் சிலர் கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது பற்றியும், மணி என்பவர் கொலை செய்யப்பட்டதாக கூறப்பட்டது பற்றியும் விசாரணை செய்து அறிக்கை அனுப்ப வேண்டும்.

(2) மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளில் உண்மை உள்ளதா என்பதைக் கண்டறிந்து, இந்த நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டறிய வேண்டும்;

(3) இத்தகைய நிகழ்ச்சிகள் வருங்காலத்தில் நிகழாதவாறு தடுப்பதற்கான வழிவகைகளைப் பரிந்துரைக்க வேண்டும்.

7. 11—12—1980 அன்று நான் பதவி ஏற்றேன். முதன் முறையாக 25—12—1980 அன்று சங்கனாங்குளம் சென்றேன். ஆதி திராவிட வகுப்பை சேர்ந்த ஆண்களும் பெண்களும் மாதா கோயிலில் திரண்டு வந்து என்னைச் சந்தித்தனர். இந்தக் கமிஷனின் நோக்கம் பற்றி நான் அவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தேன். நேரடியாக நிலைமையை அறியவே நான் அங்கு வந்துள்ளேன் என்பதையும் அவர்களுக்கு விளக்கினேன். அதன் பின்னர் 1952 விசாரணைக் கமிஷன் சட்டத்தின் கீழ் வழக்கமாக அனுப்படும் அறிவிப்புகள் அனுப்பப்பட்டன. இதில் அக்கறை கொண்டோரும் விசாரணைக்குப் பொருத்தமான தகவல்களைக் கொடுக்கும் நிலையில் உள்ளவர்களும் தங்கள் வாக்குமூலங்களைப் பதிவு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டது. தேவர் வகுப்பினர் தரப்பிலும், ஆதி திராவிடர் தரப்பிலும் சேர்த்து மொத்தம் 75 வாக்குமூலங்கள் பெறப்பட்டன. சட்ட மன்ற உறுப்பினர் திரு ஜான் வின்சென்ட் அவர்கள் கொடுத்த வாக்குமூலமும் இதில் அடங்கும். ஆதி திராவிடர் தரப்பில் 28 சாட்சிகள் விசாரிக்கப்பட்டன. தேவர் வகுப்பினர் தரப்பில் 14 சாட்சிகள் விசாரிக்கப்பட்டன. இவர்களைத் தவிர, மாவட்ட ஆட்சியாளர், காவல் துறை ரூப்பிரண்டு, கோட்டாட்சியர் ஆகியோரும் விசாரிக்கப்பட்டனர். இந்த விவகாரம் தொடர்பாக 250 சான்றாவணங்கள் கொடுக்கப்பட்டன. அரசுத் தரப்பு சாட்சிகள் சென்னையில் கமிஷன் அலுவலகத்தில் விசாரிக்கப் பட்டனர். ஏனைய சாட்சிகள் அனைவரும் திருநெல்வேலியில் விசாரிக்கப்பட்டனர். கமிஷன் சங்கனாங்குளம் கிராமத்தை ஆறு முறை பார்வையிட்டது. கமிஷன் தனது விசாரணையையும், விவாதங்களையும் 5—3—1982 அன்று முடித்துக் கொண்டது. திரு அசோக்குமார், திரு டேவிட் ஆகிய வழக்குரைஞர்கள், ஆதி திராவிடர்கள் தரப்பில் வாதிட்டனர். திரு வெங்கடாச்சாரி தேவர் வகுப்பினர் சார்பில் வாதிட்டார். திரு ஜான் பொன்னையா கமிஷன் சார்பாகவும், திரு பெரிய நாயகம் காவல் துறை அரசு ஆலோசர் சார்பாக வும் வாதிட்டனர். மொத்தம் 26 நாட்கள் வாதம் நடைபெற்றது. திரு டேவிட், திரு அசோக் குமார் ஆகியோர், ஆதி திராவிடர்களின் சார்பாக விரிவான குறிப்புகள் அடங்கிய வாதங்களை எழுத்து மூலமாகக் கொடுத்துள்ளனர்.

8. தேவர் வகுப்பினரின் வழக்குரைஞர் திரு வெங்கடாச்சாரி, 9—2—1982 முதல் 26—2—1982 வரை தனது வாதங்களை எடுத்துரைத்தார். 25—2—1982 அன்று பிற்பகல் கமிஷன் திரு சங்கரத் தேவர் சகோதரர் திரு எஸ். ஞானசேந்திர தேவருக்கு அறிவிப்பு ஒன்றினை அனுப்புமாறு ஆணை யிட்டது. பொய்ச் சாட்சியம் சொன்னதற்காக திரு ஞானசேந்திர தேவர் மீது இ.பி.கோ. 193-ஆம் பிரிவின் கீழ் ஏன் வழக்கு தொடரக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு அந்த அறிவிப்பில் கண்டிருந்தது.

9. திரு வெங்கடாச்சாரி 25—2—1982 பிற்பகலும், தொடர்ந்து 26—2—1982-லும் வாதிட்டார். விசாரணை 1—3—1982-க்கு ஒத்திவைக்கப்பட்டது. 26—2—1982 அன்று கமிஷன் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையில் திரு வெங்கடாச்சாரி, தாம் தமது தரப்பில் சட்ட நுணுக்கங்கள் அனைத்தையும் எடுத்துரைத்துவிட்டதாகவும் இன்னும்

ஒன்றிரண்டு விளக்கங்களே எஞ்சியுள்ளன என்றும், அவற்றுக்காக 1–3–1982 அன்று ஒரு மணி நேரம் தாம் எடுத்துக்கொள்வதாகவும் கூறினார்.

10. பொய்ச் சாட்சியம் சொன்னதற்காக திரு இராமச்சந்திர தேவர் மீது ஏன் வழக்குத் தொடரக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டு மாறு கமிஷன் அவருக்கு 25–2–1982 அன்று அறிவிப்பை அனுப்பியதன் காரணமாக, திருவாளர்கள் மாடசாமித் தேவரும், சங்கரத் தேவரும் விசாரணை நடவடிக்கையிலிருந்து விலகிக்கொள்வதாக திரு வெங்கடாச்சாரி 1–3–1982 அன்று மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அதன் பின்னர், அரசு, காவல் துறை தரப்பில் வாதிட்ட திரு பெரியநாயகம், 1–3–1982 முதல் 4–3–1982 வரையில் தம் வாதத்தைத் தொடர்ந்தார். ஆதி திராவிடர்கள் சார்பில் வழக்குரைஞராக திரு அசோக்குமார், 5–3–1982 அன்று சிறிது நேரம் தமது வாதத்தைத் தொடர்ந்து, எதிர்த் தரப்பு வழக்குரைஞர்களின் வாதங்களுக்கான தமது பதிலையும் எடுத்துரைத்தார்.

11. வாதங்கள் 5–3–1982 அன்று முடிவுற்றன. தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

12. ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த 17 பெண்களைத் தேவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் கற்பழித்தனர் என்ற புகாரை முதலில் கருத்தில் கொள்வோம். சங்கரத் தேவர், சின்னதம்பி தேவர் ஆகிய இருவர் மீது மட்டுமே இக்குற்றச் சாட்டு உள்ளது. மாவட்ட ஆட்சியாளர், காவல் துறை அதிகாரிகள், தமிழக முதல்வர், இந்தியப் பிரதமர் ஆகியோருக்கு ஆதி திராவிடர்கள் அனுப்பிய புகார்கள் அனைத்திலும் 17 பெண்கள் கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டுள்ளதை இங்குக் குறிப்பிட வேண்டும். ஆனால் விசாரணையின்போது 7 பெண்கள் தொடர்பான வழக்குகள் மட்டுமே சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் இங்குக் குறிப்பிட்டாக வேண்டும்.

13. ஆதி திராவிடர்கள் தரப்பில் வாதிட்ட திரு அசோக் குமார் தமது வாதத்தில், குறிப்பிட்ட தாவது : கமிஷனின் அதிகார வரம்பு 1980 ஏப்ரல்-மே இங்களில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி விசாரிப்பதேயாகும். எனவேதான், 7 நிகழ்ச்சிகளைப் பற்றி மட்டுமே குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன. அதாவது, ஏனைய கற்பழிப்பு நிகழ்ச்சிகள் 1980 மார்ச்-ஏப்ரல் திங்களுக்கு முன்னர் நடந்தன என்று அவர் குறிப்பாகத் தெரிவிக்கிறார். இந்த வாதத்தில் வலு விருப்பதாக நான் கருதவில்லை. தேவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் இழைத்த கொடுமையின் காரணமாக, 17 பெண்கள் கற்பழிக்கப்பட்டனர் என்று திரு ஜான் வின்சென்ட் அவர்களும், ஏனைய ஆதிதிராவிடர்களும் கூக்குரல் எழுப்பி விளர்ச்சி செய்து, இந்நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்களைத் திரு ஜான் வின்சென்ட் தன்னுடைய நாட் குறிப்பேட்டில் குறித்துள்ளபோது, திரு ஜான் வின்சென்ட் அவர்களும், ஏனைய ஆதி திராவிட மக்களும் கமிஷன் விசாரணை வரம்பை 1980 சனவரியிலிருந்தே தொடங்க வேண்டும் என்று கேட்டிருக்கலாம் அல்லவா ?

14. 1980 மார்ச்-ஏப்ரலுக்கு முன்னரே 10 பெண்கள் கற்பழிக்கப்பட்டிருந்தால், பாதிக்கப்பட்ட ஆதி திராவிடத் தலைவர்கள் அதனை விட்டுவிட்டிருக்க மாட்டார்கள். கமிஷன் விசாரணை வரம்பை மாற்றியமைக்குமாறு அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். இது தொடர்பாக எவ்விதப் பிரச்சினையும் எழுவில்லை விசாரணை வரம்பை மாற்றியிருக்கவேண்டுமென்று ஆதிநிராவிடர்கள் கேட்டிருந்தால் அரசு அவர்களின் வேண்டுகோளுக்குக் கட்டாயம் செவி சாய்த்திருக்கும். எனவே, 31–3–1980-க்கு முன்னர் கற்பழிப்பு நிகழ்ச்சி எதுவும் நடைபெறவில்லை என்பதும், முதல் கற்பழிப்பு நிகழ்ச்சி சித்திரை முதல் வாரத்தில் நடந்திருக்க வேண்டுமென்பதும், அதாவது இராஜசெல்வம் 31–3–1980 அன்று கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் நிகழ்ச்சி நடந்திருக்க வேண்டும் என்பதும் தெளிவாகிறது. ஆதி திராவிடர்கள் கண்மூடித்தனமான குற்றச்சாட்டுக்களைக் கொடுத்துள்ளார்கள் என்பதையும், அவர்கள் சாட்சியம் குறிப்பாக, வாய்மொழிச் சாட்சியம் கவனமாகப் பரிலனை செய்யப்படுவதற் குரியதாகும் என்பதையும் வலியுறுத்தவே நான் தொடக்கத்திலேயே இவ்வாறு குறிப்பிடுகிறேன். 7 நிகழ்ச்சிகளை 17 நிகழ்ச்சிகளாகப் பெரிது படுத்தியுள்ளார்கள் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

15. பொதுவான கருத்து ஒன்றை இந்நிலையில் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த 7 கற்பழிப்பு நிகழ்ச்சிகளைப் பொறுத்த வரையிலும் கூட, கற்பழிப்பு நடந்தவுடன் காவல் துறை அதிகாரிகளுக்கோ, ஏனைய அதிகாரிகளுக்கோ உடனடியாகப் புகார் செய்யப்படவில்லை. கற்பழிக்கப் பட்டவர்களோ, கற்பழித்தவர்களோ. உடனடியாக மருத்துவப் பரிசோதனை செய்யப்பட வில்லை. மருத்துவப் பரிசோதனை தொடர்பான சாட்சியம் இன்றியும், கற்பழிக்கப்பட்டவர்கள் அல்லது கற்பழித்தவர்கள் உடலில் ஊறு ஏற்பட்டுள்ளது என்பதற்கான சாட்சியம் இல்லாமலும் இந்த நிகழ்ச்சி நடந்தது உண்மையா இல்லையா என்பதைத் தீர்மானிக்க முடியாது. மருத்துவப் பரிசோதனை பற்றிய சாட்சியம் உண்மையைக் கண்டறிய பெரிதும் முக்கிய மாகும். வாய்மொழிச் சாட்சியத்தை நன்கு ஆய்ந்து, அதில் ஏதேனும் உண்மை உள்ளதா என்பதை அறியவும், மருத்துவச் சாட்சியம் மிகவும் இன்றியமையாதது. சாதாரணமாக கற் பழிப்பு நடந்தவுடன் உடனடியாகப் புகார் தரத் தவறினாலும், கற்பழித்தவர் அல்லது கற்பழிக்கப்பட்டவர் மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்படப்படத் தவறினாலும் சம்பந்தப்பட்டவர்களின் மறைவிடங்களை மருத்துவச் சோதனைக்கு உட்படுத்தாவிடினும் புகார் செய்ய நீண்ட காலதாமதம் ஏற்படுத்தினாலும் அந்தப் புகார் ஐயத்திற்கிடமானதாக அமையும். ஏனெனில் கற்பழிப்பு நடந்தது என்பதை இத்தகைய சூழ்நிலைகளில் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்க முடியாது.

16. இந்தவழக்கில் மருத்துவச் சோதனை செய்யப்படாததற்கும், புகார் செய்வதில் நீண்ட தாமதம் ஆனதற்கும் நான் அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதற்கான காரணங்களைக் கீழே விவரித்துள்ளேன்.

17. சங்கரத் தேவர், அவரின் சகோதரர்கள் குடும்பம் மிகவும் வலிமை வாய்ந்த குடும்பமாகும். சங்கரத் தேவரும் மாடசாமித் தேவரும் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக '' ரௌடிகள் '' என்று காவல் துறை ஆவணங்களிலேயே குறிப்பிட்டப்பட்டுள்ளனர். கிராம குற்ற நிகழ்ச்சிகள் ஆவணங்களில் காவல் துறை அதிகாரிகள் பதிவு செய்துள்ள குறிப்புகளிலிருந்து இந்த இரண்டு சகோதரர்களும் தங்கள் மோசமான நோக்கங்களுக்காக

எதை வேண்டுமானாலும் செய்யத் தயங்காதவர்கள் என்று தெரியவருகிறது. இவர்கள் கொடுமையானவர்கள், பழிபாவத்துக்கு அஞ்சாதவர்கள். இவர்கள் ஆள் பலமும், பண பலமும் அரசியல் செல்வாக்கும் படைத்தவர்கள் என்பதும் காவல் துறை அதிகாரிகள் இவர்களுக்கு உடந்தையாகச் செயற்பட்டார்கள் என்பதும், காவல் துறை உதவி சூப்பிரண்டு திரு கோபாலகிருஷ்ணன் அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. (சா. ஆ.ஜி. 25 நாள் 5–8–1980.) தேவர் வகுப்பினர் தங்களுக்கு எதிராகச் செயற்படும் எவரையும் தாக்கி இன்னல் தரத் தயங்காதவர்கள். 5–8–1980 நாளிட்ட சா.ஆ.ஜி. 25 என்ற குறிக்கையிலிருந்து ஒரு பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

'' சங்கனாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த வாலிபால் மாடசாமியும், அவரின் சகோதரர் சங்கரனும் அப்பகுதியில் சமூக விரோத சக்திகள் என்பதும், அவர்களது சாதி, அரசியல் செல்வாக்கு, ஆள் பலம் ஆியவை காரணமாக அப்பகுதியில் அவர்கள் அதிகாரம் செலுத்துகின்றனர் என்பதும் உண்மையே. மேலும், இவர்களின் மைத்துனர் திருநெல்வேலியில் ஒரு கடைக் கண் காணிப்பு இன்ஸ்பெக்டராக உள்ளதால் இவர்களுக்குத் தைரியமும் அதிகமாகி விட்டது. விஜயநாராயணம் காவல் நிலையம், திசையன்விளை காவல் நிலையம் ஆியவற்றில் காவல் துறைப் பணிகளில் இவர்கள் தலையிடுகின்றனர். இவர்களுக்கு எதிராக வரும் புகார்கள் 'மொட்டைக்' கடிதமாகவும் புனைப் பெயரில் எழுதப்பட்ட தாகவும் இருக்கும். இவர்களின் போக்கிற்கு தனக்கு அஞ்சி இவர்களுக்கெதிராக நேரடி சாட்சியம் சொல்ல எவரும் முன்வருவதில்லை. இப்பகுதியில் கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழிலுக்கும் இவர்களே காரணம் என்று சந்தேகிக்கப்படுகிறது.''

18. சங்கனாங்குளம் கிராமத்தில் குற்ற நிகழ்ச்சிகள் ஆவணத்தில் (பகுதி 4) சங்கரத் தேவரைப் பற்றியும், மாடசாமித் தேவரைப் பற்றியும் மிகவும் கேவலமான, கொடுமையான குறிப்புகளைக் காணலாம். தேவர் வகுப்பினரின் ரௌடித்தனம் பற்றியும், தங்களை மிஞ்சியவர்கள் எவரும் இல்லை என்ற ஆணவமான செருக்கு பற்றியும், எல்லோரும் தங்களின் கைப்பிடிக்குள்ளேயே இருக்க வேண்டும் என்று அவர்கள் எண்ணியது பற்றியும், 26–6–1976 நாளிட்ட குறிப்பேட்டில் காணலாம். அப்பகுதிவாழ் மக்கள் தேவர் வகுப்பினரிடம் எந்த அளவுக்கு அஞ்சி நடுங்கினார்கள் : அவர்களின் அட்டூழியத்துக்கு ஆட்பட்டவர்கள் அவர்களைப் பற்றிப் புகார்செய்ய எந்த அளவுக்கு அஞ்சினார்கள்; தேவர்வகுப்பினர் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டிய அவசியம் இருந்தது என்பன பற்றி எல்லாம் இக்குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. 20 ஆண்டுகளுக்கு மேலாக தேவர் வகுப்பினரின் செய்துவரும் அட்டூழியங்கள் பற்றி குற்ற நிகழ்வுகள் பற்றிய ஆவணங்களிலும், ரௌடிகள் பற்றிய குறிப்பேடுகளிலும் விவரமாக விளக்கப்பட்டுள்ளன. காவல் துறை அதிகாரிகள் அதாவது, இன்ஸ்பெக்டர் அருணாசலமும், சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமியும் தேவர் வகுப்பினரிடையே அடியோடு சரணாகதி அடைந்து விட்டனர். தேவர் வகுப்பினர் கைப்பாவையாக அவர்கள் செயல் பட்டனர் என்பது இந்த நிலையிலேயே தெளிவாகிறது. சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமியும், (ஜி.டபிள்யு. 2) இன்ஸ்பெக்டர் அருணாசலமும் (ஜி. டபிள்யு. 6) தேவர் வகுப்பினருக்கு உடந்தையாக இருந்தனர் என்பதையும் பொய் ஆவணங்களைத் தயாரிப்பது, பொய்ச் சாட்சியங்களை உருவாக்குவது போன்ற மோசமான செயல்களில் கூட அவர்கள் ஈடுபட்டார்கள் என்பது விசாரணையில் தரப்பட்ட ஆவணங்களிலிருந்து தெரியவருகிறது. தேவர் வகுப்பினர் சமூக விரோதிகள்; தங்களது சாதி, அரசியல் செல்வாக்கு, ஆள் பலம் ஆியவற்றின் காரணமாக அப்பகுதியில் கெடுநடவடிக்கை செய்யும் அதிகாரம் செலுத்தி வந்தனர் என்பதைக் காவல் துறை உதவி சூப்பிரண்டு தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். விஜயநாராயணம், நெல்லை விளை ஆகிய காவல் நிலையங்களின் பணிகளில் தேவர்கள் தலையிட்டனர் என்பதும் அவருடைய அறிக்கையிலிருந்து தெரியவருகிறது.

19. இராமச்சந்திரத் தேவர் இவர்களுக்கெல்லாம் எனைத்தவர் அல்ல. 17 ஆண்டுகளாக கிராம முன்சீப்பாகச் செயல்பட்டதன் காரணமாகத் தன்னுடைய பதவியைத் தமக்குச் சாதகமாக முழுவதும் பயன்படுத்திக் கொண்டார். பொய் ஆவணங்களைத் தயாரிப்பதிலும் ஏனைய இழிவான செயல்களிலும் இவர் தன்னுடைய சகோதரர்களுக்குப் பக்கபலமாக இருந்தார்.

20. இவர்களுடைய அடாவடித்தனத்துக்கு மக்கள் அஞ்சியதால் இவர்களுக்கு எதிராகச் சாட்சியம் சொல்ல எவரும் முன்வரவில்லை. இவர்களுக்கு எதிராகக் கொடுக்கப்படும் புகார்க் கடிதங்கள் அனைத்தும் புனைப் பெயரிலேயும், மொட்டைக் கடிதங்களாகவுமே இருந்தன. அப் பகுதியில் கள்ளச் சாராயம் காய்ச்சவதற்கு இவர்களே காரணமானவர் என்று காவல் துறை உதவி சூப்பிரண்டு குறிப்பிட்டுள்ளார்.

21. தேவர் வகுப்பினர் தங்கள் மைத்துனரான ஒழுக்கங்காணிப்பு இன்ஸ்பெக்டராகிய இராமகிருஷ்ணனின் உதவியுடன் உள்ளூர்க் காவல் துறையினரை உதாசீனமாக நடத்தும் அளவுக்கு துணிச்சல் பெற்றிருந்தனர்; வழக்குகள் புலன் விசாரணையில் தலையிட்டனர்; முக்கியமான சாட்சிகளை அச்சுறுத்திக் கலைத்தனர்; அதன் பலனாகக் காவல் துறையினரின் பணி தடைப்பட்டது என்பன போன்ற தகவல்கள் கமிஷன் முன் வைக்கப்பட்ட ரௌடிகள் குறிப்பேடுகளிலிருந்தும் ஏனைய சாட்சியங்களிலிருந்தும் தெரியவருகிறது.

22. கிராமம் எந்த அளவுக்குப் பிளவு பட்டிருந்தது; கிராமத்தின் அமைதியைக் குலைப்பதில் தேவர் வகுப்பினர் எந்த அளவுக்குக் காரணமாக இருந்தனர்; காவல் துறையினர் அவர்களுக்கு அஞ்சி தங்கள் கடமைகளைச் செய்வதற்கு எந்த அளவுக்குக் கையாலாகாதவர்களாக இருந்தனர் என்ற விவரங்கள் மேற்குறிப்பிட்ட குறிப்பேடுகளிலிருந்து தெரியவருகின்றன. காவல் துறை அதிகாரிகள் கோழைகள் : தேவர் வகுப்பினரின் அட்டூழியங்களை தடுத்து நிறுத்த துணிவில்லாதவர்கள் என்று குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

23. மேற்குறிப்பிட்ட குறிப்பேடுகளில் தேவர் வகுப்பினர் பற்றி எழுதப்பட்ட விவரங்கள் அனைத்தையும் வழக்குரைஞர் திரு அசோக்குமார் தன்னுடைய வாதத்தின்போது குறிப்பிட்டார்.

24. தேவர் வகுப்பினர்கள் சமூக விரோதிகள் என்பதையும் அவர்களது நடவடிக்கைகளைக் கண்காணிக்க வேண்டும் என்பதையும், சங்கனாங்குளம் காவல் துறை அதிகாரிகள் எழுதி வைத்துள்ளனர்.

25. கொலை வழக்கு ஒன்றில் மாடசாமித் தேவர் அரசுத் தரப்பு சாட்சிகளைக் கலைத்து, அதன் காரணமாக அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டதை மேற்குறிப்பிட்ட ஆணவங்களிலிருந்து வழக்குரை ஞர் திரு அசோக்குமார் எனது கவனத்துக்குக் கொண்டு வந்தார். அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தாவது (சா. ஆ. ஏ. 166).

''நிசையன்விளை எல்லைக்குட்பட்ட ஆத் துக் குடியிருப்பு என்ற இடத்தில் நடந்த கொலை வழக்கு ஒன்றில் மாடசாமிக் கும்பல் அரசுத் தரப்புக்கு எதிராகச் செயல்பட்டது என்பதும் ; சங்கரனாங்குளத்தைச் சேர்ந்த பத்து பேர் மாடசாமியின் கட்டளைப்படி சாட்சிகளை அச்சுறுத்த நீதிமன்றத்திற்குச் சென்றனர் என்பதும் தெரியவருகிறது. இதனாலேயே இந்த வழக்கிலும் குற்றம் சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப் பட்டார்.''

26. 30-1-1980 முதல் 18-12-1980 முடிய உள்ள கால அளவில் திருஞானசாமி நிசையன் விளை காவல் நிலையத்தில் சப்-இன்ஸ்பெக்டராக பணிபுரிந்தார். இவர் எந்த அளவுக்கு தேவர் களின் கையாளாக இருந்தார் என்பதையும் முக்கியமான வழக்கு ஒன்றில் புலன் விசாரணை யின்போது இவர் எந்த அளவுக்குத் தேவர் வகுப்பினர்களுக்கு உடந்தையாக இருந்து பொய் ஆவணங்களைத் தயாரித்தார் என்பதையும் பின்னர் நான் விளக்குகிறேன். தேவர் வகுப்பினர்கள் எந்த அளவுக்கு மோசமான வர்கள், போக்கிரிகள், உள்ளூர்க் காவல் துறை யினர் மீது அவர்கள் எந்த அளவுக்கு அதிகாரம் செய்து வந்தார்கள் ; பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் அஞ்சி காவல் துறையினரிடம் புகார் செய்ய எந்த அளவுக்குத் தயங்கினார்கள் என்பதை மீண்டும் மீண்டும் எடுத்துரைக்கத் தேவையில்லை.

27. எனவே, ஆதி நிராவிடர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பற்றிக் காவல் துறையினரிடம் உடனடியாகப் புகார் செய்ய வில்லை என்பது பற்றி நான் அதிக முக்கியத்துவம் கொடுக்கத் தயாராக இல்லை. ஆதி நிராவிடர்கள் கல்வி அறிவு இல்லாதவர்கள் ; விலங்குகள் போன்று ஒதுங்கி வாழ்ந்தவர்கள் ; தேவர் வகுப்பினர்களைக் கண்டு அஞ்சி நடுங்கியவர்கள் ; இக்கண்ணோட்டத்திலிருந்துதான் இவ்வழக்கில் ஆதி நிராவிடர்களின் சாட்சியத்தைப் பரந்த மனப்பான்மையுடன் பரிசீலன செய்ய வேண்டும்.

28. கற்பழிப்பு வழக்குகளில் சாட்சியம் அளிக் கும் சாட்சிகளின் கூற்றுகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை என்று உச்ச நீதிமன்றம் அண்மை யில் ஒரு வழக்கில் தீர்ப்பு அளித்திருந்ததை (1980 எஸ்.சி.சி. 947) வழக்குரைஞர் திரு அசோக்குமார் எண்ணுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார். சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய னவாக இருக்க வேண்டும் என்பது சட்டப்படி அவசியமல்ல என்றாலும், குறிப்பிட்ட சூழ்நிலை களில் அவை நம்பத் தகுந்தவையாகவும், விவேக மாகவும், இருக்க வேண்டும் என்று அத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. 1980ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கொன்றில் நீதிபதி கிருஷ்ணய்யர் பின்வருமாறு(பக்கம் 948-ல்) குறிப்பிட்டுள்ளார் :

''குற்றம் சாட்டுபவரது சாட்சியத்தின் ஒத்த தன்மையுள்ள மற்றொரு சாட்சியம் கண்டிப்பாக அமைய வேண்டும் என்பது சட்டப் பிரச்சினை அல்ல. குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அத்தகைய சாட்சியத் தைக் கோருவது விவேகமான செய லாகும். பல்வேறு சூழ்நிலைகளில் கொடுக்கப்படும் வாய்மொழிச் சாட்சியங் கள் ஒத்தப்பச் சூழ்நிலைச் சாட்சியங்கள் ஆகியவற்றை ஒரே அடிப்படையில் கருதிப் பார்க்காமல் நடைமுறைக்கேற்ற வாறு கருதிப் பார்க்க வேண்டும். அப்படி செய்யவில்லை என்றால் சட்டம் உணர்ச்சி யற்றதாக ஆகிவிடும். தாக்கியவர், அல் லது தாக்கப்பட்டவர் உடலில் காயம் இருப்பதோ, இல்லாததோ முக்கியமல்ல. மேற்குறிப்பிட்ட கண்ணோட்டத்தில் தான் இதனையும் கவனிக்க வேண்டும்.''

29. நீதிபதி திருஞ்ணய்யர் அளித்த மற்றொரு தீர்ப்பையும் திரு அசோக்குமார் என் கவனத்திற் குக் கொண்டுவந்தார் (1980 உச்ச நீதிமன்ற வழக்குகள் பக்கம் 667-668) :

''சட்டத்தில் உள்ள நீண்ட சொற்றொடர் களையும் அதில் கொடுக்கப்பட்டுள்ள பாகாப்பையும் விட கற்பழிப்பு வழக் கொன்றில், சமுதாயத்தில் தனது கூட மையை உணர்ந்த நீதிபதி நிறைந்த பாது காப்பை அளிக்க முடியும். நீதிமன்றம் இத்தகைய வழக்குகளை விசாரிக்கையில் ஒரு பெண்ணின் உணர்வுகளையும் உணர்ச் சிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஒரு ஆண் பலாத்காரமாகத் தன்னைக் கற்பழித்தது பற்றிய விவரங்களைச் சொல்ல எந்தப் பெண்ணும் தயங்குவாள். இதனைப் பொருத்தமாகக் கருத்திற் கொண்டு சாட்சியங்களை ஆராய வேண்டும்.''

30. நீதிபதி கிருஷ்ணய்யர் மேலும் தெரிவித் துள்ள சில கருத்துக்களை திரு அசோக்குமார் எடுத்துரைத்தார் (1980 உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் பக்கம் 669) :

''ஒத்த தன்மையுள்ள சாட்சியம் என்று கருதப்படக்கூடிய சாட்சியம் பற்றிப் பொருள் விளக்கம் கூறுவது இயலாத தாகும். ஒவ்வொரு வழக்கிலும் உள்ள சூழ்நிலை சந்தர்ப்பங்களுக்கேற்பவும், குற்றத்தின் தன்மைக் கேற்பவும், இந்தச் சாட்சியம் அமையும்.''

31. ஒத்த தன்மையுள்ள சாட்சியமின்றி ஒரு வருக்குத் தண்டனை கொடுக்க இயலாது என்பது சட்டமாகும் என்ற கருத்து ஏற்கப்படவில்லை என்று 1973 உச்ச நீதிமன்ற வழக்கொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பக்கம் 417.)

32. சாதாரணமாக ஒரு பெண் நீதிமன்றத்துக்கு வந்து, சாட்சிக் கூண்டில் நின்று, தான் கற்பழிக்கப்பட்ட விவரங்களை எளிதில் எடுத் துரைக்கமாட்டாள்; எனவே அப்பெண் அளிக்கும் சாட்சியம் சாதாரணமாகவே உண்மையாகவே இருக்கும் என்று நீதிமன்றம் கருத வேண்டும். ஏனைய சாட்சியங்களின் அடிப்படையிலும், அந்த வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு அந்த வழக்கை முடிவு செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் சில வழக்கு களில் தீர்ப்பளித்துள்ளதை திரு. அசோக்குமார் என்னுடைய கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

33. சட்டத்தை அலசி ஆராய்வதோ, குறிப்பிட்ட வழக்குகள் பற்றி இங்கு விவரிப்பதோ தேவையற்றதாகும். இத்தகைய வழக்குகளில் நீதிமன்றங்கள் அண்மைக் காலமாகக் கண்டிப்பான கண்ணோட்டத்தில் தீர்ப்பளிப்பதில்லை. ஒத்த தன்மையுள்ள சாட்சியங்கள் வேண்டுமென்று நீதிமன்றங்கள் கேட்பதில்லை. பொதுவாக பெண்கள் நீதிமன்றத்துக்கு வந்து தங்களது சாட்சியங்களை, அதாவது தாங்கள் கற்பழிக்கப்பட்டது பற்றிய விவரங்களை, அதாவது அந்தக் கற்பழிப்பு எப்படி நடந்தது, எவ்வாறு நடந்தது, எங்கு நடந்தது என்ற விவரங்களை எல்லாம் சொல்வதற்குத் தயங்குவார்கள். அத்தகைய சம்பவம் உண்மையாக இருந்தாலன்றி அவர்கள் சாட்சியமளிக்க முன்வரமாட்டார்கள். எனவே பெரும்பான்மையான வழக்குகளில் அவர்கள் அளிக்கும் சாட்சியங்களுக்கு ஆதரவான சாட்சியங்கள் தேவையில்லை. ஆனால், இதில் ஒரு முக்கியமான அம்சத்தைக் கவனிக்க வேண்டும். ஒத்த தன்மையுள்ள சாட்சியமின்றி, பாதிக்கப்பட்டவர் அளிக்கும் சாட்சியம் கவனமாக ஆய்ந்து பார்க்கப்பட வேண்டும். அந்தச் சாட்சியம் உண்மையாக இருக்குமா? அந்தச் சாட்சியத்தில் உண்மைத்தன்மை இருக்கிறதா என்பதைப்பற்றி எல்லாம் கவனமாக ஆய்ந்து பார்க்க வேண்டும். பாதிக்கப்பட்டவர் வாய் மொழியாக அளிக்கும் சாட்சியம், குறிப்பாக காலங்கடந்து கொடுக்கப்படும் புகார் ஒன்றை விசாரிக்கையில் ஒத்த தன்மையுள்ள சாட்சியமின்றி, பாதிக்கப்பட்டவர் என்று தன்னைச் சொல்லிக்கொள்கிற ஒருவர் அளிக்கும் சாட்சியத்தை மட்டுமே நம்பி ஒருவருக்குத் தண்டனை கொடுக்கக் கூடாது. பாதிக்கப்பட்டவர் அளித்துள்ள சாட்சியம் இயல்பானதாகவும், உண்மையானதாகவும் அடிப்படையில் நேர்மையானதாகவும் இருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர் சாட்சியமளிக்கையில் உண்மையைத் திரித்துக் கூறும் அல்லது கற்பனையாகப் புனைந்து கூறும் விவரங்கள் அடங்கியிருக்கக்கூடாது. இந்தக் கண்ணோட்டத்தில்தான் இந்த 7 சம்பவங்களை நான் விசாரணை செய்யப் போகிறேன்.

34. தேவர் சகோதரர்கள் இருவரும் ஊரறிந்த ரவுடிகள். செல்வாக்கு மிக்கவர்கள். அதிகாரம் படைத்தவர்கள்: காவலரின் உதவியைப் பெற்றவர்கள். எனவே, கற்பழிப்புச் சம்பவங்கள் பற்றிக் காவங்கட்ந்த புகார் செய்யப்பட்டது குறித்து நாம் அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டியதில்லை. 5—8—1980 வரையில் நடைபெற்ற சம்பவங்களுக்குத்தான் இந்நிலை பொருந்தும். அதற்குப் பின்னர் நடைபெற்ற சம்பவங்களுக்கு இது பொருந்தாது. 1980 ஆகஸ்டு முதல் வாரத்திலிருந்து நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. ஆதிராவிடர்களின் தலைவரான காசி துணிச்சலுடன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். தேவர் சகோதரர்களிடம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த அச்சம் அறவே அகன்றது.

35. கற்பழிக்கப்பட்டவர்கள் வருமாறு: (1) மணியின் மனைவி இராஜசெல்வம் (அரசுத் தரப்புச் சாட்சி-1.), (2) இராஜசெல்வத்தின் சகோதரி பிரேமா (அ.த.சா. 7), (3) இராஜசெல்வத்தின் சகோரியும் இராஜ் என்பவனின் மகளுமான வசந்தா (அ.த.சா. 8), (4) இராஜசெல்வத்தின் ஒன்றுவிட்ட சகோதரியும் வசந்தியின் சகோதரியும் முத்தையாவின் மகளுமான மஞ்சுளா (அ.த.சா. 9), (5) இராஜசெல்வத்தின் ஒன்றுவிட்ட சகோதரியும் முத்தையாவின் மகளுமான வசந்தி (அ.த.சா. 10), (6) காசியின் சகோதரி கிரேசி (அ.த.சா. 12), (7) பூர்ணம் மாளின் மகள் மைக்கேல் அம்மாள் (அ.த.சா. 22).

36. ஆதிராவிடர்களின் தலைவரும் பாதுகாவலருமாய காசியின் நெருங்கிய உறவினர்களே கற்பழிக்கப்பட்டவர்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது மிகவும் முக்கியமாகும். காசியுடன் தொடர்பிலாத வேறு எந்தக் குடும்பத்தினரும் இத்தகைய சம்பவம் பற்றிப் புகார் செய்யவில்லை என்பது விந்தையாகும். முத்தையா என்பவரும் இராஜ் என்பவரும் சகோதரர்கள். முத்தையாவின் மூத்த மனைவி சொர்ணத்தின் மகளாகிய புஷ்பம் காசியின் மனைவியாவாள். மஞ்சுளாவும் வசந்தியும் முத்தையாவின் இளையதாரமாகிய கண்ணம்மாவின் மகள்களாவார்கள். காசியின் மனைவியாகிய புஷ்பமும் மஞ்சுளாவும், வசந்தியும் ஒன்றுவிட்ட சகோதரிகள். இவர்கள் இரு தாரங்களின் மூலம் ஒரே தந்தைக்குப் பிறந்தவர்கள். இராஜசெல்வம், பிரேமா, வசந்தா ஆகியோர் இராஜ்-ஜெயமணி தம்பதிகளின் (அ.த.சா.2) புதல்விகள். இதனால், இராஜ செல்வம், பிரேமா, வசந்தா ஆகியோரும் புஷ்பம், மஞ்சுளா, வசந்தா ஆகியோரும் ஒன்றுவிட்ட சகோதரிகளாகிறார்கள். காசியும் கிரேசியும் பெருமாளின் மக்களாவார்கள். எனவே, இவர்கள் சகோதர சகோதரிகள் ஆவார்கள். காசியின் மாமியாரான சொர்ணத்தின் சகோதரி பூர்ணம்மாள் என்பவரின் மகள் மைக்கல் அம்மாள். அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள மரபு வழி விளக்கப்படம், சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் காசியின் நெருங்கிய உறவினர்கள் என்பதைக் காட்டுகிறது.

37. கோட்டாட்சியர் நடத்திய விசாரணையிலும், காவல்துறை உதவி சூப்பிரண்டு நடத்திய விசாரணையிலும், கமிஷன் விசாரணையிலும், காசி முக்கியமான பங்கெடுத்துக்கொண்டு சாட்சியங்களைக் கொண்டு வந்தார். இன்னும் சொன்னால் ஆதிராவிடர்களின் சார்பாக விசாரணையில் பங்கு கொண்டவர் இவர்தான் என்று குறிப்பிடலாம். சாட்சியங்களை அழைத்து வந்து அவர்கள் கமிஷன் முன் சொல்ல வேண்டியவற்றை அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்தார். காசி மிகவும் கெட்டிக்காரர். நுண்ணிய அறிவுடையவர் என்பது என்னுடைய கருத்து. ஆதி திராவிடர் தரப்பில் சாட்சியங்கள் சொன்ன அனைவரும் காசியின் கைப்பொம்மைகள் என்ற எண்ணமே எனக்கு ஏற்பட்டது. சாட்சிகளை அழைத்து வந்த அதிகாரிகளின் முன்னர் வாக்குமூலங்களைக் கொடுக்கச் செய்வதில் காசி மிகுந்த அக்கறை காட்டினார் என்று கோட்டாட்சியரும் காவல் துறை உதவி சூப்பிரண்டும் தங்கள் அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளனர். கோட்டாட்சியரும் முன்னர் காசியும் வாக்கு மூலம் ஒன்றைக் கொடுத்துள்ளார். கோட்டாட்சியர் காவல்துறை உதவி சூப்பிரண்டு ஆகியோர் முன்னர் ஏனையோர் கொடுத்த வாக்கு மூலங்களில் இவர் மேற்கையெழுத்திட்டுள்ளார்.

38. இந்த ஆதிராவிடப் பெண்கள் கல்வி அறிவில்லாதவர்கள். விலங்குகள் போல் வாழ்ந்த வர்கள். தேவர்களுக்கு எதிராகச் சாட்சியம் அளித்தால், அவர்கள் தங்களைத் துன்புறுத்துவார்கள், கொலை செய்யவும் அஞ்சமாட்டார்கள் என்ற அச்சத்திலேயே வாழ்ந்தவர்கள். இவற்றையெல்லாம் கருதியே அவர்கள்

சாட்சியத்தை நான் பரந்த சிந்தையுடனேயே பரிசீலனை செய்துள்ளேன். அதே சமயத்தில் அதிகாரிகளின் விசாரணையிலும், கமிஷன் விசாரணையின்போதும், காசி காட்டிய அக் கறையையும் நான் கருத்தில் கொண்டுள்ளேன்.

39. சாட்சியங்களைக் கவனமாகவும், ஆழ்ந் தும், ஆய்ந்து பார்த்ததில் ஆதி நிராவிடர்கள் இக் கற்பழிப்புச் சம்பவங்கள் பற்றிய குற்றச் சாட்டுகளை நிரூபிக்கத் தவறிவிட்டார்கள் என்பது எனது தெளிவான கருத்தாகும்.

40. சங்கரத்தேவர் இராஜசெல்வத்தைக் கற் பழித்ததாகச் செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டை நாம் ஆராயலாம். இராஜசெல்வம் கமிஷன் முன் தாக்கல் செய்த வாக்குமூலம் (த.அ.ஏ. 1) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சித்திரை முதல்வாரத்தில் அதாவது 1980 மார்ச் 31-ம் தேதி அன்று பிற்பகல் 2-30 மணி அளவில் சங்கரத் தேவர், தன்னை கற்பழித்ததாக அப் புகாரில் சொல் லப்பட்டுள்ளது. இராஜசெல்வத்தின் வாய் மொழிச் சாட்சியத்தைப் பரிசீலனை செய்யு முன்னர், இராஜசெல்வத்தின் வாக்குமூலத் தில் முக்கியமான பகுதியை நான் எடுத்து எழுதுவதும் அவசியமாகும். அது வருமாறு:

''போன வருடம், சித்திரை மாதம், என் புருஷன் மனுவேல் என்ற மணி, மிளகு செடி பயிரிட்டு தண்ணீர் பாய்ச்சும் வேலைக்குப் போயிருந்தார். மதியம் சுமார் 2 மணிக்கு அவருக்கு கஞ்சி கொண்டு போனேன். தோட் டத்தில் சங்கரத் தேவரும் இருந்தார். சங்கரத் தேவர் என்னைக் கண்டதும் என் கணவரை உடனே வெந்தியாபுரத்தில் போய் சிகரெட் வாங்கி வரும்படி அனுப்பினார். என் கணவர் சென்று விட்டார். நான் கஞ்சி கலயத்தை மோட்டார் ரூமின் பக்கத்தில் போய வைக்கப் போனேன். அவர் ரூமிற்குள் வைக்கச் சொன்னார். நான் ரூமிற்குள் வைத்தேன். திடீரென்று உள்ளே வந்து கதவை அடைத்துவிட்டு என்னைக் கட்டிப் பிடித்தார். நான் சத்தம் போட்டேன். அவருடன் போராடினேன். என்னை விட்டு விடும்படி கெஞ்சிக் கேட்டேன். ஆனால், அவர் பலாத்காரமாக என்னை மேலே தள்ளி என் சட்டையைக் கிழித்து என் மார்பை பிடித்து மார்பில் நகம் பட்டிருந்தது. என் னுடைய சேலையில் இந்நிரியம் பட்டிருந்தது. நான் எவ்வளவோ திமிரியும் என்னால் மீள முடியவில்லை. என்னை பலாத்காரமாக சம்ப வம் பண்ணினார். என்னை கற்பழித்து விட் டார். யாரிடமும் சொல்லக்கூடாது என்று சொன்னார். கொன்றுவிடுவேன் என்ற பய முறுத்தினார். நான் என்ன செய்வது என்று தெரியாமல் நின்றுகொண்டிருந்தபோது என் புருஷன் வந்துவிட்டார். சங்கரத் தேவர் என் புருஷனை வீட்டிற்குப் போகும்படி சொன்னார். நானும் என் கணவரும் வீட்டிற்குப் போனோம்''.

41. தன்னைப் பார்த்ததும், தன்னைக் கற்ப பழிக்கத் திட்டமிட்ட அதற்காகவே தன் கணவன் மணியைச் சிகரெட் வாங்கிவர அடுத்த நிமாத திற்கு அனுப்பினார் என்றும், கணவன் இல்லாத அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு தன்னைக் கற்பழித்துவிட்டார் என்பதும் அவ ளுடைய குற்றச்சாட்டு. கமிஷன் முன் இராஜ செல்வம் கொடுத்த சாட்சியமும், வாக்குமூலத்தி லிருந்து மேலே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் அவள் கூறியுள்ளதும் ஒன்றாகவே அமைந்துள்ளது.

42. இச்சம்பவம் பற்றித் தாம் வீடு திரும்பிய தும் தன்னுடைய ஒன்றுவிட்ட சகோதரி புஷ்பம், தன் னுடைய தாய் ஜபமணி ஆகியோரிடம் சொன்னதாக இராஜசெல்வம் தன் னுடைய வாய் மொழிச் சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

43. ஆதி நிராவிடர்களுக்குத் தேவர் சகோதரர் களிடம் இருந்த பயம் 1980 ஆகஸ்டு முதல் வாரத்திலேயே நீங்கிவிட்டது என்றும், தேவர் சகோதரர்கள் இழைத்த கொடுமைகள் பற்றி காசி வெளிப்படையாகக் குற்றம் சாட்டி, காவல் துறையினரிடம் புகார் செய்தபோது, கோட்டாட்சியரியின் முன்னர் இராஜசெல்வம் ஏன் வரவில்லை என்பதற்கு விளக்கம் ஏதும் இல்லை என்றும், குறிப்பாகப் பாதிக்கப் பட்டவர்களில் முதல் பெண்மணி இவர்தான் என்பதையும், கோட்டாட்சியர் நடத்திய விசாரணையில் சாட்சிகளைக் கொண்டு வருவதில் காசி முக்கியமான பங்கு எடுத்துக்கொண்டார் என்பதையும் கருதிப் பார்க்கையில் இராஜ செல்வம் இந்த அதிகாரி முன் சாட்சியம் அளிக்க ஏன் வரவில்லை என்பதற்கு எவ்வித விளக்கமும் இல்லை என்றும் ஏற்கெனவே நான் குறிப்பிட்டுள்ளேன். இது தேவர் சகோதரர்களுக்கு முகவும் சாதகமான ஒன்றாகும்.

44. காவல் துறை உதவி ரூப்பிரண்டு நடத்திய விசாரணையில் இராஜசெல்வம் கொடுத்த வாக்கு மூலத்தை அடுத்து எடுத்துக்கொள்வோம். வள்ளியூர் சப்-டிவிஷன் உதவி ரூப்பிரண்டு 25-3-1980 முதல் 20-1-1981 முடிய அப்பதவி யில் இருந்தார். குற்றச்சாட்டு உண்மை யானதுதானா என்பதைக் கண்டறிய இது மிகவும் முக்கியமானதாகும். காவல்துறை உதவி ரூப்பிரண் டின் முன் இராஜசெல்வம் கொடுத்த வாக்கு மூலம் முழுவதையும் எடுத்து எழுதுவது மிகவும் அவசியமாகும். (சா. ஆ. எ. 9 நாள் 29-9-1980.)

'' எனக்குச் சொந்த ஊர் சங்கனாங் குளம். என்னை என் ஊரைச் சேர்ந்த சுடலை மகன் மணி என்பவருக்கு கல்யாணமாகி ஒரு வருடம் ஆகிறது. ஷே. மணி சங்கனாங் குளத்தில் சங்கரத் தேவர் வீட்டில் வேலை பார்த்து வந்தார். சம்பளப்பணம் கேட்ட தாவா சம்பந்தமாக சங்கரன் வீட்டிலேயே தகராறு ஏற்பட்டு என் ஊருக்கு திரும்ப கொண்டு வரும்போது என் புருஷனுக்கு உயிரில்லை. அவரது இறப்பு சம்பந்தமாக இது வரைக்கும் நேரில் எந்த அதிகாரியிடமும் சம்பவம் நடந்தவுடன் புகார் கொடுக்கவில்லை. ஷே மணியின் பிரேதத்தை சங்கனாங்குளம் தேவர்களும், எங்கள் ஊரைச் சேர்ந்த பூதத் தான், செல்லையா, முத்தையா, சுந்தராஜ் இவர்களும் சேர்ந்து எரித்து விட்டார்கள். சமீபத்தில் தான் இது சம்பந்தமாக அதிகாரி களுக்கு தபால் மூலம் மனு செய்திருக் கிறார்கள். நானும் ஷே சங்கரத் தேவர் வீட்டில் புருஷன் இறந்த காலத்தில் வேலை செய்தேன். இரண்டு மாதத்திற்கான கூலி ரூ. 180 இது வரைக்கும் சங்கரத்தேவர்

கொடுக்கவில்லை. என்னுடைய வீட்டிலிருந்து இரண்டு கோட்டை நெல்லையும் சங்கரத் தேவர் எடுத்துக் கொண்டு போய்விட்டார். என்னுடைய புருஷன் என்னை தோட்டத்தில் வைத்து சங்கரத்தேவர் என்னை கற்பழிக்க முயன்ற போது அடித்தார். இது சம்பவம் என் புருஷன் சாவதற்கு சுமார் 8 நாட்களுக்கு முன்னால் மதியம் 3 மணிக்கு எங்க ஊர் கோயிலுக்குத் தென்புறமுள்ள தோட்டத்தில் வைத்து நடந்தது. நானாவது, என் புருஷனாவது இது சம்பந்தமாக யாருகொண்டு யாரிடமும் அப்போது தெரிவிக்கவில்லை. இன்று 29-9-1980 தேதி என்னைக் கூப்பிட்டு விசாரிக்க இந்த வாக்கு மூலத்தில் தெரிவிக்கிறேன் ''.

45. இராஜசெல்வத்தைக் கற்பழிக்க முயற்சி தான் செய்யப்பட்டதே ஒழிய, இராஜசெல்வம் உண்மையில் கற்பழிக்கப்படவில்லை என்பது இதிலிருந்து தெரிவராகிறது.

46. கோட்டாட்சியர் வடக்கு விஜயநாராயணம் என்ற இடத்தில் விசாரணையை நடத்தியபோதும், 22-9-1980 அன்று விசாரணை சேரன்மாதேவியில் தொடர்ந்த போதும், ஆதி திராவிடர்கள் தரப்பில் 30 பேர் சாட்சியம் சொன்னார்கள்.

47. காவல் துறை உதவி சூப்பிரண்டு முன் இராஜசெல்வம் கொடுத்த வாக்கு மூலத்தைப் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளுமுன், இந்த அதிகாரி சங்கனாங்குளம் கிராமத்திற்கு எந்தச் சூழ்நிலையில் சென்றார் என்பதைக் குறிப்பிடுவது அவசியமாகிறது. சட்டமன்ற உறுப்பினரான திரு ஜான் வின்சென்ட் 24-9-1980 அன்று மேற்கு சங்கனாங்குளம் கிராமத்திற்குச் சென்றார். தேவர் வகுப்பினர் ஆதி திராவிடர்களுக்கு இழைத்த கொடுமைகளை விசாரித்தறிந்தார். அந்த விவரங்களை அவர் தன் நாட்குறிப்பேட்டில் குறித்துக் கொண்டார். இச்சம்பவங்கள் பற்றி மாவட்ட ஆட்சியாளருக்குப் புகார் செய்தார். 27-9-1980 அன்று நடந்த கூட்டத்தில் மேற்கு சங்கனாங்குளத்தில் நடைபெற்ற கற்பழிப்புச் சம்பவங்கள் பற்றியும், மணி கொலையுண்டது பற்றியும் பேசினார். இது நடந்தது 27-9-1980 அன்று. காவல் துறை உதவி சூப்பிரண்டு காலடைத்தாமல் 29-9-1980 அன்று மேற்கு சங்கனாங்குளத்துக்கு விரைந்தார். புகார்கள் குறித்து நேரடியாக விசாரணை செய்து உண்மையைக் கண்டறியவே அவர் அங்குச் சென்றார். திரு. ஜான் வின்சென்ட் பொதுக் கூட்டத்தில் பேசியதைத் தொடர்ந்து, காவல்துறை உதவி சூப்பிரண்டு போன்ற பெரிய அதிகாரி அந்த இடத்திற்கு விரைந்தது சாதாரணமான நிகழ்ச்சி அல்ல. உண்மையைக் கண்டறியவும், ஆதி திராவிடர்கள் அச்சமின்றி தங்கள் குறைகளை எடுத்துச் சொல்ல ஊக்கமளிக்கவுமே அவர் அங்குச் சென்றார்.

48. காவல் துறை உதவி சூப்பிரண்டு அக் கிராமத்திற்குச் சென்றபோது ஆதி திராவிடர்கள் தேவர் சகோதரர்களுக்கு அஞ்சி நடுங்கி வாழ்ந்தார்கள் என்றும், எனவே அவர்கள் வெளிப்படையாகத் தைரியத்துடன் தங்கள் குறைகளைச் சொல்ல முடியவில்லை என்றும், ஆதி திராவிடர்கள் தரப்பில் வாதிட்ட வழக்குரைஞர் அணித்தரமாகச் சொல்லவில்லை. காவல்துறை உதவி சூப்பிரண்டு அக்கிராமத்திற்குச் சென்றபோது ஆதிதிராவிடர்கள் அவரிடம் உண்மையைச் சொல்ல அஞ்சவில்லை என்பதும் என்னுடைய கருத்தாகும்.

49. ஆதி திராவிடர்கள் காயல்துறை உதவி சூப்பிரண்டிடம் சொன்னது ஒன்று : ஆனால் காவல் துறை அதிகாரிகள் எழுதிக் கொண்டதோ வேறு என்று ஆதி திராவிடர்களின் தரப்பில் வாதிட்ட வழக்குரைஞர் கூறினார். இதற்கு ஆதாரம் ஏதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. காவல் துறை உதவி சூப்பிரண்டுக்கு முன் வாக்குமூலம் அளிக்கையில் ஏற்பட்ட சிக்கலான சூழ்நிலையிலிருந்து தப்பவே இத்தகைய முயற்சி செய்யப் படுகிறது. காவல்துறை உதவி சூப்பிரண்டு ஒரு தலைப் பட்சமாக நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டுக்கோ அல்லது தேவர் சகோதரர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் அவர்கள் கொடுத்த சாட்சியங்களைத் திரித்து எழுதிக்கொண்டார் என்ற குற்றச் சாட்டுக்கோ ஆதாரம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்த அதிகாரி பதிவு செய்துள்ள வாக்குமூலங்கள் அனைத்தும் உண்மை யானவை ; சம்பந்தப்பட்ட ஆதி திராவிடப் பெண்களால் சொல்லப்பட்டவை என்றே நான் உறுதியாக நம்புறேன்.

50. காவல் துறை உதவி சூப்பிரண்டு விசாரணை நடத்தியபோது ஆதிதிராவிடர்கள் வாக்கு மூலங்கள் அளிக்கையில் காரி முழு நேரமும் அங்கிருந்தார் என்பதும், அவர்களது வாக்கு மூலங்கள் அவர்களுக்குப் படித்துச் சொல்லப்பட்டு அவை சரியென்று அவர்களும் ஒப்புக்கொண்ட பின்னர், அந்த வாக்கு மூலங்களில் காரியும் கையொப்பமிட்டுள்ளார் என்பதும் காவல்துறை உதவி சூப்பிரண்டு திரு. கோபால கிருஷ்ணா (அ.சா. 8) அளித்த சாட்சியத்திலிருந்து தெரிய வருகிறது. தாம் நடத்திய விசாரணையில் சாட்சிகளைக்கொண்டு வருதல், அவர்கள் தங்கள் வாக்குமூலங்களைச் சொல்வதற்கு உதவி செய்தல் போன்றவற்றில் காரி மிகவும் அக்கறை எடுத்துக் கொண்டார் என்று திரு. கோபாலகிருஷ்ணா தன்னுடைய சாட்சியத்தில் கூறியுள்ளார். இதையே கோட்டாட்சியரான திரு. திருவேங்கடமும் (அ.சா. 7) தன்னுடைய சாட்சியத்தில் உறுதி செய்துள்ளார். எனவே, ஆதி திராவிடர்கள் எவ்விதஅச்சமும் இன்றி இந்த அதிகாரிகளின் முன்னர் தங்கள் சாட்சியங்களை அளித்தனர் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

51. சங்கரத்தேவர் தன்னைக் கற்பழித்ததாக இராஜசெல்வம் அளித்த சாட்சியத்தைப் பரிசீலிப்பதற்கு முன்னர், கோட்டாட்சியர் தி. திருவேங்கடம் மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்பிய இரகசிய அறிக்கையைக் குறிப்பிடுவது அவசியமாகும். (சா. ஆ. தி. 23 நாள் 30-9-1980) ஆதிதிராவிடப் பெண்கள் கற்பழிக்கப்பட்டதாக ஆதி திராவிடர்கள் புகார் செய்த போதிலும் இந்தச் சம்பவங்கள் பற்றிச் சாட்சியளிக்க எவரும் முன் வரவில்லை என்று கோட்டாட்சியர் குறிப்பிட்டுள்ளார். கோட்டாட்சியரின் குறிப்பு வருமாறு :

'' 10. துன்புறுத்தியது. பெண்களுக்குத் தொல்லை கொடுத்தது, கற்பழித்தது, கொலை களை மறைத்தது போன்ற கொடுமைகளை எளிதில் தள்ளிவிடமுடியாது. ஆயினும் மீன் பிடி முத்தகையை இரண்டாவது முறையாக அதிகத்

தொகைக்கு ஏலமிட்டதும், வாத்து வளர்ப்புக் குத்தகையை ஏலத்துக்கு விட்டதும் உண்மையாக நடந்தது என்று நிரூபிக்கப்பட்டது. செய்தித் தாள்களில் அவ்வப்போது வரும் கற்பழிப்புச் சம்பவம் பற்றிச் சாட்சியம் சொல்ல எவரும் முன்வரவில்லை. இது தொடர்பாகக் காவல் துறையிடம் புகார் எதுவும் கொடுக்கப் படவில்லை".

52. தன்னுடைய மைத்துனியைக் கற்பழிக்க முயற்சி நடந்தபோது மட்டுமே காசி புகார் செய்தார் என்றும் சின்னத்தம்பி பெண்களுக்குத் தொல்லை கொடுத்தார் என்று மட்டுமே கூறினார் என்றும் கோட்டாட்சிய திரு. திருவேங்கடம் தன்னுடைய அறிக்கையில் ஆறாவது பத்தியில் குறிப்பிட்டுள்ளார். (சா.ஆ. ஜி. 23) ஆதிதிராவிடப் பெண்கள் கற்பழிக்கப்பட்டதாகக் காசி குறிப்பிடவில்லை. ஆதிதிராவிடப் பெண்கள் தேவர் வகுப்பைச் சேர்ந்தவர்களால் உண்மையில் கற்பழிக்கப்பட்டிருந்தால் அதை சொல்வதற்குத் தயங்கியிருக்க மாட்டார்கள். தங்களுக்குத் தொல்லை தரப்பட்டது, கற்பழிக்க முயற்சி செய்யப்பட்டது என்பனபோன்ற சாரமற்ற வாக்குமூலங்களை அவர்கள் கொடுத்திருக்க மாட்டார்கள். தாங்கள் அவ்வாறு கற்பழிக்கப் பட்டிருந்தால். அச்சம்பவம் எங்கு, எப்பொழுது, யாரால் எப்படி நடந்தது என்பன போன்ற விவரங் களை அவர்கள் சொல்லியிருக்க முடியும். ஆனால் அவர்கள் சொல்லவில்லை. இது ஏன் என்று வழக்குரைஞர் திரு. அசோக்குமாரால் விளக்க முடியவில்லை. செய்தித் தாள்களில் அவ்வப் போது வரும் கற்பழிப்புச் சம்பவம் பற்றிச் சாட்சியம் சொல்ல எவரும் முன்வரவில்லை என்று கோட்டாட்சியர் கூறியது சரியே.

53. கோட்டாட்சியர் நடத்திய விசாரணை யின்போது, கற்பழிப்புச் சம்பவம் பற்றிச் சாட்சியம் சொல்ல எவரும் முன் வரவில்லை என்ற முக்கியமான பின்னணியுடன் இந்த அறிக்கையைத் தொடங்குவோம். இரண் டாவதாக, காவல் துறை உதவி சூப்பிரண்டு நடத்திய விசாரணையில் இராஜசெல்வம் மிக எளிய முறையில் தெளிவாகச் சாட்சியமளித் துள்ளார். சாட்சியம் வெளிப்படையாக அமைந் துள்ளது. இதில் எவ்வித சிக்கலும் இல்லை. கற்பழிக்க முயற்சி மட்டுமே நடந்ததாக அவர் (இராஜசெல்வம்) புகார் கொடுத் துள்ளார். எனவே இராஜசெல்வம் கற்பழிக்கப் பட்டார் என்ற குற்றச்சாட்டு அடிப்படைப் போகிறது. இது பற்றி திரு. அசோக்குமார் ஏதும் விளக்கம் சொல்ல இயலவில்லை.

54. சா. ஆ. ஏ. 9லிருந்து மற்றொரு முக்கிய மான தகவல் புலப்படுகிறது. தன்னுடைய கணவர், இறந்ததற்கு எட்டு நாட்களுக்கு முன்னர், கோவில் தென்புறத் தோட்டத்தில் பிற்பகல் 3 மணியளவில் சங்கரத் தேவர் தம்மைக் கற்பழிக் முயன்றார் (முயன்றார் என்ற சொல்லைக் கவனிக்கவும்) என்று இராஜசெல்வம் தமது வாக்குமூலத்தில் (சா.ஆ.ஏ. 9) கூறியுள்ளார். இந்த முரண்பாடு மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் இராஜசெல்வம் கொடுத்த குற்றச்சாட்டின் அடிப்படையே இதனால் தகர்ந்து விடுகிறது. தாம் கற்பழிக்கப்பட் டதும், தன் கணவரே கொலையுண்டதும் ஒன்றுக் கொன்று தொடர்புடையனவாகும் என்றும், தாம் கற்பழிக்கப்பட்ட காரணத்தாலேயே தன் கணவர் சங்கரத் தேவரிடம் தனக்குள்ள தொடர்புகளை அறவே துண்டித்துக் கொள்ள முடிவு செய்தார் என்றும், தன்னுடைய சம்பளக் கணக்கைத் தீர்த்துக் கொள்ள சங்கரத்தேவரின் வீட்டுக்கு மணி சென்றபோது சங்கரத்தேவரால் கொலை செய்யப்பட்டார் என்பது இராஜசெல்வம் கடிதன் முன்பு கொடுத்த வாக்குமூலமாவும் சாட் சியமாகவும் உள்ளன. இதையே வேறு வகையாகச் சொன்னால் இராஜசெல்வம் கற்பழிக்கப்பட்டதும், மணி கொலையுண்டதும் ஒன்றுக்கொன்று நெருங் கிய தொடர்புடையனவாகும். வழக்கின் விவரங் களை எப்படி ஜோடித்துச் சொல்வது என்பதை இராஜ செல்வம் முடிவு செய்யவில்லை என்பதும், அவ்வப்போது வாய்க்கு வந்தபடி பொய் சொன்னார் என்பதும், கற்பழிப்பு நடந்த நாள் பற்றி சா.ஆ.ஏ. 9-ல் வெளியான முரண்பாட்டிலிருந்து தெரியவரு கிறது. இராஜசெல்வத்தின் சாட்சியம் நம்பக மானது அல்ல என்பதற்கு சா. ஆ. ஏ. ஒன்பதே போதுமானதாகும் என்பது எனது கருத்தாகும். மணி இறந்ததற்கு எட்டு நாட்களுக்கு முன்னரே தம்மைக் கற்பழிக்க முயற்சி நடந்ததாக இராஜ செல்வம் கொடுத்த குற்றச்சாட்டு, மணி கொலை யுண்டது பற்றிய குற்றச் சாட்டுக்குக் கட்டியங் கூறுகிறது.

55. இராஜசெல்வத்தின் வாய்மொழிச் சாட்சி யம் பயனற்றது, பொய்யானது, எனக்கு இது சரி என்று படவில்லை.

56. ஆ. சா. ஏ. 9 தொடர்பாகவும், ஏனைய தகவல்கள் தொடர்பாகவும், இராஜசெல்வம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அந்த குறுக்கு விசாரணையில் அவரால் சரியான பதில் சொல்ல முடியவில்லை. இவருடைய சாட்சியம் முன்னுக்குப் பின் முரணாக உள்ளது. சா.ஆ.ஏ. 9-ல் அவர் கொடுத்துள்ள வாக்கு மூலத்தைக் கருதிப் பார்க்கையில் இவருடைய சாட்சியம் பொய்யானது என்று புலனாகிறது.

57. இராஜசெல்வத்தின் சாட்சியம் முழுதும் பொய்யானது, நம்ப முடியாதது என்று தெளிவாகி விட்டபடியால் இவருடைய சாட்சியத்தை மற்ற ஒரு வரது சாட்சியத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கவேண்டிய அவசியமில்லை. இராஜசெல்வத்தைப்போல் புஷ்பமும் (அ. த. சா. 11) சரளமாகப் பொய் கூறியுள்ளார். இவருடைய சாட்சியமும் உண்மை என்று எனக்குப் படவில்லை. இவர் காசியின் மனைவி என்பது ஒன்றே போதும். எனவே, இது தொடர்பாக வேறு எந்த கருத்துரையும் தேவை யில்லை. தம்மைக் கற்பழிக்க நடந்த முயற்சி பற்றி புஷ்பத்திடம் சொன்னதாக அ.சா.ஏ. 9-ல் இராஜசெல்வம் கூறவில்லை. காவல் துறை உதவி சூப்பிரண்டின் முன் கொடுத்த வாக்கு மூலத்தில் தான் சங்கரத்தேவரால் கற்பழிக்கப்பட்டதாக இராஜசெல்வம் தம்மிடம் சொல்லவில்லை என்று புஷ்பம் கூறியுள்ளார். எனவே, ஒப்பிட்டுப்பார்க் கும் சாட்சியமாக எடுத்துக் கொண்டால் புஷ்பத் தின் சாட்சியம், பொய்யானது, உதவாதது, ஏற்க முடியாதது.

58. முக்கியமான சாட்சியமே பொய்யானது, உதவாதது, பயனற்றது என்றால் இதனை இன் னொரு சாட்சியத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

59. நாங்குனேரி வட்டாட்சியர் (இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்) 1980ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் நாளன்று சவ விசாரணையை

நடந்தியபோது, இராஜசெல்வம் அவர்முன் வாக்கு மூலம் ஒன்றைக் கொடுத்தார் (சா. ஆ. ஏ. 7). இந்த வாக்குமூலத்தில் இராஜசெல்வம் வேறு விதமாகச் சொல்லியுள்ளார். கற்பழிப்பு முதல் நாள் நடந்ததாகவும், அடுத்த நாள் கொலை நடந்ததாகவும் அவர் கூறினார். அதாவது கற்பழிப்பும் கொலையும் நடந்த நாட்களை மாற்றிச் சொல்லியிருக்கிறார். மணிக்கும் சங்கர் தேவருக்கும் வாய்ச்சண்டை நடந்ததாகவும் அவர் கூறியுள்ளார். இராஜசெல்வம் சரளமாகப் பொய் சொல்லியுள்ளார்என்பதும், அவருடையவாக்குமூலம் நம்பத் தக்கது அல்ல என்பதும் இதிலிருந்து தெளிவாகிறது. இராஜசெல்வம் தமிழக முதல்வருக்கு அனுப்பிய மனு 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22ஆம் நாளிட்ட அ.சா.ஏ. 38 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

60. இந்த மனுவைப் படித்துப் பார்த்தால், இதை அவர் தாமாக எழுதவில்லை என்பதும், யாரோ ஒரு புத்திசாலியால் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதும் தெரியவரும். தாம் பிற்பகல் 2 மணிக்குக் கற்பழிக்கப்பட்டதாகவும், மாலை 6 மணி அளவில் மணி கொலை செய்யப்பட்டார் என்றும் இராஜசெல்வம் இதில் விவரமாகவும், விளக்கமாகவும் குறிப்பிட்டுள்ளார். அதாவது கற்பழிப்பும் கொலையும் ஒரே நாளில் நடந்ததாகவும், ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்றும் அவர் கூறியுள்ளார். சா. ஆ. ஏ. 38ல் முக்கியமான தகவல் விடுபட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கற்பழிப்பு பற்றி தாமும் தம்முடைய கணவர் மணியும் பேசிக் கொண்டதாக அதனாலேயே சங்கரத் தேவரின் தொடர்பை துண்டித்துக் கொள்ள முடிவு செய்ததாகவும், தன் னுடைய சம்பளக் கணக்கைத் தீர்த்து விடுமாறு மணி சங்கரத்தேவரை கோபமாகக் கேட்டதாகவும், அதனால் வெகுண்ட சங்கரத் தேவர் மணியைக் கொலை செய்து விட்டார் என்றும் இராஜசெல்வம்கொல்ல வில்லை. இத்தகவல்கள் விடுபட்டிருப்பது மிகவும் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று. தமிழக முதல்வருக்கு அனுப்பப்பட்ட மனு (சா. ஆ. ஏ. 38) மிகவும் கவனமாக எழுதப்பட்டுள்ளது, எல்லா விவரங்களும் அடங்கியது, மீறி மன்ற விசாரணையில் அல்லது வேறு விசாரணையில் அது பயன்பட வேண்டும் என்ற நிட்டதுடனே எழுதப்பட்டது என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்த மனுவில் வெளிப்படையாகப் பொய்யான விவரங் கள் எழுதப்பட்டுள்ளன. தேவர்கள் அடுத்த நாள் காலை இராஜசெல்வத்தின் இல்லத்தில் திரண்டு தாங்கள் செய்த இறுதிச் சடங்குச் செலவைத் தங்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றும், இச்சம்பவத்தை முடிமறைக்க சப்-இன்ஸ்பெக் டருக்குக் கொடுக்கப்பட்ட பணத்தையும் தங்க ளுக்குத் திருப்பித் தர வேண்டுமென்றும் தேவர்கள் கேட்டதாக இராஜசெல்வம் அந்த மனுவில் குறிப் பிட்டுள்ளார். காவல் துறையினருக்குச் சங்கரத் தேவர் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் கூற்று வேண்டுமென்று பொய்யாகச் சொல்லப்பட்டதா கும். அதாவது மணியின் சடலம் அவரிட் டிற்குக் கொண்டு செல்லப்பட்டபோது, மணியின் மரணம் பற்றி விசாரிக்கக் காவல் துறையினர் வருவர் என்றும், இராஜசெல்வம் காவல் துறையின ருக்குப் பதில் சொல்லித் தான் ஆக வேண்டுமென் றும் சொன்னதாகக் கொடுக்கப்பட்ட பொய்யான வாக்குமூலத்துக்குச் சாதகமாக மேற்குறிப்பிட் டுள்ள பொய் சொல்லப்பட்டுள்ளது. சங்கரத் தேவர் காவல் துறையினருடன் இந்தச் சம்பவத்தை மூடிமறைப்பதற்காகப் பேரம் பேசினார் என்றும் அதாவது, இது இயற்கையான மரணம் அல்ல என்பதற்காகவும், அதனாலேயே அதை மூடி மறைக்க அன்றே இரவோடு இரவாக இறுதிச் சடங்குகள் நடத்தி முடிக்கப்பட்டன என்கின்ற விவரம் வெளியில் தெரியாமல் இருக்கவே சங்கரத் தேவர் காவலர்க்குப் பணம் கொடுத்தார் என்றும் நினைக்கும் வகையில் அந்த மனு அமைந்திருந்தது.

61. சங்கரத் தேவர் மணியைத் தாக்கியதாகத் தாங்கள் கண்களால் பார்த்ததாக, க சியும் இராஜ சிங்கும் தன்வீடம் வந்து சொன்னார்கள் என்று இராஜசெல்வம் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளது இன்னும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மணி சங்கரத் தேவரால் தாக்கப்பட்டு கொலை செய்யப் பட்டதைத் தாங்கள் நேரில் பார்த்ததாகத் தம் மிடம் சொன்னார்கள் என்று அம்மனுவில் குறிப் பிடப்பட்டுள்ளது.

62. கொலைக் குற்றச்சாட்டு பற்றி, குறிப்பாக காசி, சிங் ஆகியோர் கொலை நடந்ததை நேரில் பார்த்ததாகச் சொல்லப்படும் சாட்சியத்தை இப் போது பார்ப்போம். கொலை நடந்ததை அவர் கள் நேரில் பார்த்ததாகச் சொல்வது வெண்டு மென்றே சொன்ன பொய்ச் சாட்சியமாகும் என்பது தெரியவரும். பிற்காலத்தில் விசாரணை ஏதாவது நடந்தா , இந்த வாக்குமூலத்தை, அதில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற உள் நோக்கத் தோடு இத்தகைய வாக்குமூலத்தைக் கொடுக்க மாறு இராஜசெல்வம் தூண்டிவிடப்பட்டுள்ளார். இராஜசெல்வம் பழி பாவத்திற்கு அஞ்சாதவர், ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு பொய்யைச் சொல்ல தயங்காதவர், பொய் சொல்வதையே தொழிலாகக் கொண்டவர், நிட்ட மிட்டுச் சதி செய்பவர்களுக்குப் பக்கபலமாக இருப்பவர் என் பதையெல்லாம், முதலமைச்சருக்கு அனுப்பப்பட் டுள்ள மனுவிலிருந்து தெளிவாகிறது.

63. இராஜசெல்வம் டெல்லிக்குச் சென்றது பற்றி அத்தக் கவலிப்போம். இராஜசெல்வம் சார்பாக ஆங்கிலத்தில் ஒரு மனு தயாரிக்கப்பட்டு, அதில் அவர் கையெழுத்திட்டு இந்தியப் பிரதம ரிடம் நேரடியாகக் கொடுத்தார். இராஜசெல்வத் துடன் டெல்லிக்குச் சென்ற வழக்குரைஞர் திரு. அசோக்குமாரின் சாட்சியத்திலிருந்து இது தெரிய வருகிறது.

64. இந்த மனு ஆங்கிலத்தில் மிகவும் கவன மாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. அவசரமாகத் தயா ரிக்கப்பட்டதாகவோ, அரட்டையாக எழுதப் பட்டதாகவோ இதைச் சொல்ல முடியாது. இந்த மனு சா. ஆ. ஏ. 16 ஆகும். இதைக் கவனமாகப் பரிசீலனை செய்தோம். அந்த மனுவில் உள்ள பிழைகள் கையால் திருத்தப்பட்டுள்ளன. மனு வில் உள்ள விவரங்கள் உண்மிப்பாகவும், கவன மாகவும் சரிபார்க்கப்பட்டுப் பிரதமரிடம் நேரடி யாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

65. கற்பழிப்பும், கொலையும் இரண்டு வெவ் வேறு நாட்களில் நடைபெற்றதாக இராஜசெல்வம் அந்த மனுவில் குற்றம் சாட்டியுள்ளார். வெவ் வேறு நாட்களில் இச் சம்பவங்கள் நடைபெற்ற தாகச் சொல்லப்படுவதே, இந்தச் சாட்சியம் பொய் யானது என்பதற்கு ஆதாரமானதாகும்.

66. தூண அமைச்சர் திரு. ஆர். வீ. சாமி நாதன் அவர்கள் மீதும், நாடாளுமன்ற உறுப் பினர் திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் மீதும் இந்த மனுவில் சில குற்றச்சாட்டுகள் கொடுக்கப் பட்டுள்ளன. அரசியல் ஆதாயம் தேடும் சிலரின் கைப்பாவையாக, இராஜசெல்வம் இந்த மனுவைக் கொடுத்துள்ளார்.

67. மாவட்ட ஆட்சியாளரிடம் இராஜசெல்வம் அளித்த சாட்சியம் 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1ஆம் நாளிட்ட சா. ஆ. ஏ. 39 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கற்பழிப்பும் கொலையும் இரு வேறு நாட்களில் நடைபெற்றதாக இராஜசெல்வம் இதிலும் குறிப்பிட்டுள்ளார். கற்பழிப்பும் கொலையும் இரு வேறு நாட்களில் நடைபெற்றதா, அல்லது ஒரே நாளில் நடந்ததா என்பதே இக் குற்றச்சாட்டுக்கு ஆணிவேர் போன்றதாகும். இராஜசெல்வம் சொல்வது உண்மையாக இருந்தால் இத்தகைய அடிப்படையான விஷயத்தையே அவர் எவ்வாறு தவறாகச் சொன்னார் என்பது வியப்புக்குரியதாகும்.

68. இந்நிகழ்ச்சி 1980ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31ஆம் நாளன்று நடந்ததாக மாவட்ட ஆட்சியாளர் முன் சொல்லிய சாட்சியத்தில் இராஜசெல்வம் கூறியுள்ளார். திட்டமிட்டச் சதி செய்பவர்களின் தூண்டுதலினாலேயே அவர் இந்த வாக்குமூலத்தைக் கொடுத்திருக்கிறார்.

69. இந்த வாக்குமூலத்திலும், சங்கரத் தேவர் மணியைத் தாக்கிக் கொலை செய்ததை, நேரில் பார்த்ததாகக் காசி தன்னிடம் கூறினார் என்று இராஜசெல்வம் கூறியுள்ளார்.

70. கொலை நிகழ்ச்சிக்கு கண்ணால் பார்த்த சாட்சியம் வேண்டும் என்பதற்காகவே காசியின் சாட்சியம் உருவாக்கப்பட்டிருக்கிறது. கொலையைக் காசி நேரில் பார்க்கவில்லை என்னும் என் கருத்தை பின்வரும் பத்தினளில் நான் விளக்கியுள்ளேன். அப்படியிருக்கையில் கொலையைத் தாம் நேரில் பார்த்ததாக இராஜசெல்வத்திடம் காசி கூறியிருக்க முடியாது. இராஜசெல்வத்தின் சாட்சியமும் வாக்குமூலங்களும் நம்பத்தகுந்தது அல்ல என்பதையே இவையெல்லாம் நிரூபிக்கின்றன. ஏனெனில் இராஜசெல்வத்தின் சாட்சியத்திலும் வாக்குமூலங்களிலும் முரண்பாடுகள் உள்ளன. உண்மை திரித்துக் கூறப்பட்டுள்ளது. அதில் பொய்கள் மலிந்துள்ளன.

71. இக்காரணங்களினாலேயே இராஜசெல்வத்தின் குற்றச்சாட்டு முழுதும் பொய்யானது என்று கருதி எவ்விதத் தயக்கமுமின்றி இதனைத் தள்ளிவிடுகிறேன். காவல்துறை உதவி சூப்பிரண்டின் முன் சா. ஆ. ஏ. 39ல் அவர் கொடுத்த வாக்குமூலமே முடிவானது. இதனால் அவர் குற்றச்சாட்டு அடிப்படையற்றதாகிறது.

72. இராஜசெல்வத்தின் சகோதரி பிரேமாவின் குற்றச்சாட்டை அடுத்து எடுத்துக் கொள்வோம். இவர் அ.த.சா. 7ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். சங்கரத் தேவரின் மகன் சின்னத்தம்பி தம்மைக் கற்பழித்தார் என்பது இவருடைய குற்றச்சாட்டு. இவர் கமிஷன்முன் வாக்குமூலம் ஒன்றைக் கொடுத்துள்ளார். (சா. ஆ. ஏ. 45). அந்த வாக்குமூலத்திலிருந்து முக்கியமான பகுதியைக் கீழே கொடுத்துள்ளோம் :—

"எனக்கு சொந்த ஊர் சங்கனாங்குளம். நான் அறிஞன வகுப்பைச் சேர்ந்தவள். நான் இருளுஞ்சு மத்தைச் சேர்ந்தவள். எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. சுமார் 8 மாதத்துக்கு முன்பு ராமையாத் தேவர் கிணற்றிற்கு விறகுக்காக போயிருந்தேன். அப்போது சுமார் காலை 11 மணியிருக்கும். சங்கனாங்குளம் சங்கரத் தேவர் மகன் சின்னத்தம்பி தேவர் வயல்காட்டில் வயலைப் பார்த்துக் கொண்டிருந்தார். என்னைப் பார்க்கவும் எனக்கு வடபுறம் உள்ள உடைக்குள் இழுத்துக் கொண்டு போய் மேலே போட்டு பலாத்காரமாக கற்பழித்துவிட்டார். எனக்கு ரத்தம் வந்தது. இந்திரியம் என் துணிகளிலும் துடையிலும் பட்டிருந்தது. நான் சத்தம் போராமலிருக்க வாயில் அவர் துண்டை வலத்து மூடிக் கொண்டார். நான் ஊரில் வந்து அத்தோணி அக்காவிடம் சொன்னேன். அவள் என் துணிகளில் பட்டிருந்ததைப் பார்த்தாள். அதன்பின் துணிகளை மாற்றினேன். என் அம்மாவிடமும் சொன்னேன். சின்னத்தம்பித் தேவர் பெரிய போக்கிரி, பணக்காரர், அவர் சித்தப்பா கி. முதனார் நான் பயந்து புகார் செய்யவில்லை. அதன் பின்பு போலீஸ் அதிகாரிகளும், அரசியல் தலைவர்களிடமும் சொன்னேன்."

73. இராமையாத் தேவரின் வீட்டின் அருகே உள்ள வயல்களிலிருந்து சுள்ளி பொறுக்கத் தாம் காலை 11 மணி அளவில் சென்றதாகவும், அச் சமயம், சங்கரத் தேவரின் மகன் சின்னத்தம்பி அங்கு வந்து மூட்புதர்களின் மறைவில் தன்னை இழுத்துச் சென்று பலவந்தமாகத் தம்மைக் கற்பழித்ததாகவும், அதனால் ரத்தப் போக்கு ஏற்பட்டதாகவும், அவருடைய ஆண் உறுப்பு தன்னுடைய தொடையில் பட்டதாகவும், கற்பழிப்புக்குத் தோதுவாக தாம் கூச்சலிடாமல் இருக்க தம் வாயில் துணியை வைத்துத் திணித்தார் என்றும் பிரேமா குற்றஞ் சாட்டியிருக்கிறாள். அச் சம்பவத்திற்குப் பின் உடனே தான் வீடு திரும்பிய தாகவும், அத்தோணி அம்மாளிடமும் (அ. த. சா. 22), ஜெயமணியிடமும் (அ. த. சா. 2) இச் சம்பவம் பற்றிக் கூறியதாகவும் சொன்னார்.

74. பிரேமா காசியின் நெருங்கிய உறவினராக இருந்தபோதிலும், கோட்டாட்சியர் அல்லது காவல்துறை உதவி சூப்பிரண்டு விசாரணை செய்தபோது, இது தொடர்பாக பிரேமா வாக்குமூலம் எதையும் கொடுக்கவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

75. பிரேமா சின்னத் தம்பியினால் கற்பழிக்கப்பட்டது பற்றி மாவட்ட ஆட்சியாளரின் அறிக்கையில் (சா. ஆ. ஜி. 32) 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21ஆம் நாள் கண்டிருப்பது உண்மைதான். சங்கரத் தேவர் தன்னைக் கற்பழித்ததாகப் பிரேமா தன்னிடம் கூறினார் என்று ஜெபமணி தனது வாக்குமூலத்தில் (சா. ஆ. ஏ. 3) கூறியுள்ளார். ஜெபமணி தாம் கொடுத்த வாக்குமூலத்தில் தம் பெண் பிரேமா அறுவடைக்குச் சென்றபோது சங்கரத் தேவரினால் கற்பழிக்கப்பட்டதாகக் கூறியுள்ளார். இச் சம்பவம் நிகழ்ந்த அன்றே, வேலைக்குச் சென்று திரும்ப தன் தாய் மாலையில் வீடு திரும்பியதும் சொல்லியிருந்திருந்தால், கற்பழித்தது சங்கரத் தேவர் என்று ஜெபமணி தன்னுடைய வாக்குமூலத்தில் சொல்லியிருக்க மாட்டார். இந்த முரண்பாடு இவ் வழக்கில் முக்கியமானதாகும். எனவே, மாவட்ட ஆட்சியாளரிடம் இவர் கொடுத்த வாக்குமூலத்தை நம்புவது கடினமாக உள்ளது. வருவாய்க் கோட்டாட்சியரின் முன் அல்லது காவல் துறை உதவி சூப்பிரண்டின் முன் எவ்விதப் புகாரும் செய்யப்படவில்லை என்பதையும், அதற்கான விளக்கம் ஏதும் இல்லை என்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டியுள்ளது.

76. திருநெல்வேலி மாவட்டக் காவல் துறை சுப்பிரண்டு விரிவான விசாரணை நடத்த 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1ஆம் நாளன்று அக் கிராமத்திற்குச் சென்றபோது பிரேமா உட்பட கற்பழிக்கப்பட்ட எவரும் அவர் முன் வந்து புகார் செய்யவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

77. பிரேமா கூசாமல் பொய் சொல்லுகிறார். இவருடைய சாட்சியம் எனக்குத் திருப்தி அளிக்க வில்லை. இவர் காசியின் கையாள். அவர் ஆட்டியபடி எல்லாம் ஆடுகிறார். குறுக்கு விசாரணையில் இவரால் பதில் சொல்ல முடியவில்லை. கற்பழிப்பு நடந்ததாகச் சொல்லப்படும் இடம் மிகவும் வசியற்றது என்பதையும், கற்பழிப்புக்கு வசியாக ஒருவரால் அங்கு படுக்க முடியாது என்பதையும் கமிஷனின் கவனத்திற்குக் கொண்டு வரும் வகையில், முட்புதர்கள் பற்றியும், மரங்கள் பற்றியும் தேவர்களின் வழக்குரைஞர் குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்ட போது பிரேமா வால் சரிவரப் பதில் சொல்ல முடியவில்லை. குற்றஞ் சாட்டப்பட்ட சின்னத்தம்பி விசாரிக்கப் படவுமில்லை. அவர் தம்மீது உள்ள குற்றச் சாட்டை மறுக்கவுமில்லை என்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டியுள்ளது. இதிலிருந்து அவருக்குப் பாதகமாக முடிவு செய்யலாம் என்றாலும், பிரிவி கௌன்சில் வழக்கு ஒன்றில் (சட்டக் குறிப் பேடு 13, பக்கம் 273) சாட்சி ஒருவரை விசாரிக்கா மல் விட்டுவிட்டாலும், அவனும் ஒன்ற மறைத் தாலும் குற்றம் நிரூபிக்கப்பட்டால்தான் அவருக்கு எதிராக முடிவு செய்யலாம். இந்த வழக்கில் பிரேமா கொடுத்துள்ள குற்றச்சாட்டு பொய்யா னது என்று நிரூபிக்கப்பட்டுவிட்டது. சின்னத் தம்பி விசாரிக்கப்படாததினால் புதிதாக எந்த உண்மையும் வெளிப்பட்டுப் போவதில்லை.

78. அடுத்த வழக்கு வசந்தியின் குற்றச்சாட்டு தொடர்பானதாகும். சின்னத்தம்பி தன்னைக் கற்பழித்ததாக இவர் குற்றம் சாட்டியுள்ளார். இவள் முத்தையாவின் இளைய தாரம். கண்ணம் மாவின் இரண்டாவது மகள். 16 வயதான இவர் காசியின் மனைவி புஷ்பத்தின் தங்கை. கமிஷன் முன் கொடுத்த வாக்குமூலம் சா. ஆ. 46 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது வருமாறு :

'' எனக்கு சொந்த ஊர் சங்கனாங்குளம். நான் அரிஜன வகுப்பைச் சேர்ந்தவள். நான் கிருஸ்துவ மதத்தைச் சேர்ந்தவள். எனக்குக் கல்யாணம் ஆகவில்லை. சுமார் 9 மாதங்களுக்கு முன் என்னுடைய வெள்ளாடு சங்கரத் தேவர் கிணற்றில் விழுந்து விட்டது. மிளகு செடி பயிர் இருந்தது. ஷே சங்கரத் தேவர் மகன் சின்னத் தம்பி என் ஆட்டை பிடித்துப்போ என்றார். பம்பு செட் ரூம் பக்கம் கட்டிக் கிடந்தது. சுமார் 6 மணி இருக்கும். நான் அவிழ்க்கப் போனேன். அப்போ அவர் என்னை ரூமுக்குள் இழுத்து மேலே படுக்கப் போட்டு கற்பழித்து விட்டார். எனக்கு ரத்தமாக வந்தது. என் துணிகளிலும் ரத்தமும் இந்தியமும் பட்டது. என்னால் எவ்வளவோ தப்ப முயன்றும் முடியவில்லை. என் மார்பைக் கடித்து விட்டார். அதன்பின் நான் குட்டியை அவிழ்த்துக் கொண்டு வீட்டிற்கு வந்து நேரிடம் சொன்னேன். என் தாயாரிடமும் நடந்த விபரம் சொன்னேன். அதன் பின் போலீஸ் அதிகாரிகள் தலைவர்களிடமும் சொன்னேன். சின்னத்தம்பி தேவர் பெரிய போக்கிரி. பணக்காரர். அதனால் புகார் செய்யவில்லை. கிராம முன்சீப் அவர் தித்தப்பா. அவரிடம் பயந்து ரிப்போர்ட் செய்ய வில்லை. ''

79. கூலி வேலைக்காகத் தான் சென்றதாகவும் அச்சமயம் மேய்ச்சலுக்காக தனது ஆட்டையும் ஓட்டிச் சென்றதாகவும், மாலை 6 மணி அளவில் வேலையிலிருந்து திரும்பி வருகையில் தனது ஆடு காணவில்லை என்றும், அப்போது அங்கு வந்த சின்னத்தம்பி (சங்கரத்தேவரின் மகன்) அந்த ஆடு பம்பு செட் அறை அருகே கட்டப்பட்டிருக்கிறது என்று அவர் சொன்னதாகவும், அதன்பேரில் ஆட்டை அவிழ்த்து வர அங்கே தான் சென்றபோது சின்னத்தம்பி பலாத்காரமாகத் தன்னைக் கற் பழித்ததாகவும் வசந்தி தனது வாக்குமூலத்தில் கூறியிருக்கிறார். தனக்கு ரத்தமாக வந்தது என்றும், துணியில் ரத்தம் பட்டது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். வீடு திரும்பியவுடன் இச் சம்பவம்பற்றி தாம் காசியின் சகோதரி கிரேடிம் (அ. த. சா, 12) சொன்னதாகக் குறிப்பிட்டுள்ளார். தனது தாய் கண்ணம்மாளிடமும் (அ. த. சா. 7) இதுபற்றிக் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

80. கோட்டாட்சியர் விசாரணை நடத்தியது பற்றியது தமக்குத் தெரியும் என்றும், ஆதி திராவிடப் பெண்கள் கற்பழிப்புச் சம்பவங்கள் பற்றிப் புகார் கூற இந்த விசாரணைக்குச் சென்ற னர் என்றும் வசந்தி ஒப்புக்கொள்கிறார். ஆனால், இந்த விசாரணையில் தம்முடைய வாக்கு மூலத்தைக் கொடுக்க வசந்தி செல்லவில்லை. இதேபோன்று காவல்துறை உதவி சுப்பிரண்டு நடத்திய விசாரணைக்கும் இவர் வரவல்லை.

81. காவல் துறை உதவி சுப்பிரண்டு மேற்கு சங்கனாங்குளத்திற்கு வந்து விசாரணை நடத்தியது மிகவும் முக்கியமானது என்று ஏற்கெனவே குறிப் பிட்டுள்ளேன். திரு ஜான் வின்சென்ட் இக் கிராமத்திற்கு வந்து மக்களிடம் பேசிய பின்னரும், 1980ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27ஆம் நாள் அன்று திருநெல்வேலியில் நடந்த கூட்டத்தில் இதுப்பற்றி அவரும், ஏனையோரும் பேசிய பின்னருமே காவல் துறை உதவி சுப்பிரண்டு இக்கிராமத்திற்கு வந்தார்.

82. காவல்துறை உதவி சுப்பிரண்டு சங்கனாங் குளம் கிராமத்துக்கு 1980ஆம் ஆண்டு செப்டம் பர் திங்கள் 29ஆம் நாளன்று வந்தார். திரு ஜான் வின்சென்ட் 1980ஆம் ஆண்டு செப் டம்பர் திங்கள் 27ஆம் நாளன்று கூட்டத்தில் பேசினார். காவல் துறை உதவி சுப்பிரண்டு சங்கனாங்குளத்திற்கு எதற்காக வருகிறார் என் பதைக் கிராம மக்கள் அனைவரும் அறிவர். வசந்தி சின்னத்தம்பியினால் கற்பழிக்கப்பட்டிருந் தால் அவள் கோட்டாட்சியர் அல்லது காவல் துறை உதவி சுப்பிரண்டு நடத்திய விசாரணைக்கு வந்து புகார் கொடுத்திருப்பார். இது குறிப்பாகக் காசி ஆதி திராவிடர்களுக்கு பக்கபலமாக நின்று இந்த விசாரணையில் அவர்களுக்கு உதவியாக இருந்ததால் வசந்தி தயங்கியதற்குக் காரணமே இல்லை.

83. வசந்தி காசியின் நெருங்கிய உறவினர். கற்பழிப்பு பற்றி கிரேடிம் தான் சொன்னதாக வசந்தி கூறுகிறார். ஆனால் கிரேடியோ காவல் துறை உதவி சுப்பிரண்டின் முன் தாம் அவித்த வாக்குமூலத்தில் (சா. எ. 61) இதுபற்றிக் குறிப் பிடவில்லை.

84. மாவட்ட ஆட்சியாளரின் 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21ஆம் நாளிட்ட அறிக்கையில் (சா. ஆ. ஜி. 32) வசந்தியின் வாக்குமூலம் முழு வதும் மாறுபட்டதாக உள்ளது. தாம் சங்கரத் தேவரால் கற்பழிக்கப்பட்டதாக அதில் அவர் கூறி

யுள்ளார். ஆதி திராவிடப் பெண்கள் வாய்க்கு வந்தபடி பெயர்களை மாற்றிச் சொல்லியுள்ளார் சுவ என்பது இதிலிருந்து தெரியவருகிறது. எனவே வசந்தியின் சாட்சியத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை.

85. மஞ்சுளா, வசந்தி ஆகியோரின் தாய் கண்ணம்மாவின் சாட்சியம் பற்றி அடுத்துக் கவனிப் போம். கண்ணம்மாள் எதற்கும் அஞ்சாதவள். தேவர்கள் கண்ணம்மாளைத் தங்கள் பக்கம் இழுத்துக்கொண்டு விட்டனர் என்பதற்குக் கண்ணம்மாளின் சாட்சியமே ஆதாரம். கண்ணம்மா தேவர் தரப்புச் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

86. உண்மையைக் கண்டறிவதில் கமிஷனுக்கு குழப்பத்தை ஏற்படுத்தவே தேவர்கள் கண்ணம்மாவைத் தன்பக்கம் இழுத்துக்கொண்டனர் என்று திரு அசோக்குமார் கூட்டிக்காட்டியுள்ளார். தேவர்களின் இந்த மோசமான நடத்தை, அவர்களுக்கு எதிரான சந்தர்ப்ப சாட்சியங்களுக்கு முக்கியமான ஆதாரமாகும் என்று வழக்குரைஞர் திரு அசோக் குமார் குறிப்பிடுகிறார். இக்கருத்தை நானும் ஏற்கிறேன். இந்தச் சாட்சியம் என் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. மணியின் சடலத்தை எடுத்துச் சென்று இராஜசெல்வம் வீட்டில் தேவர்கள் போட்டுவிட்டனர் என்று கண்ணம்மாள் கொடுத்த வாக்கு மூலம் உண்மையாக இருந்தாலன்றி கண்ணம்மாவைத் தேவர்கள் தங்கள் பக்கம் இழுத்துக்கொள்ளும் இந்த மோசமான முயற்சியைச் செய்திருக்க மாட்டார்கள்.

87. கண்ணம்மாள் எனி முன் கொடுத்த சாட்சியம் முழுவதும் பொய். அதில் உண்மையே இல்லை.

88. கண்ணம்மாள் 1981ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 7ஆம் நாளன்று வாக்குமூலம் ஒன்றைத் தாக்கல் செய்தார். (சா. ஆ. ஏ. 132) அதன் ஒரு பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

"எனக்கு சொந்த ஊர் சங்ஙனங்குளம். என் கணவர் திருமலாபுரத்தில் கொத்தனார் வேலை பார்த்து வந்தார். அவருடன் என் இரு மகள்களும் தங்கியிருந்து ஆடு மேய்த்து வந்தார்கள். நான் இரு மகள்களுடன் சங்ஙனங்குளத்தில் தங்கி கூலி வேலை செய்து பிழைத்து வந்தேன். எனது மகள் மஞ்சுளா சுமார் 1½ வருடத்திற்கு முன்பு திருமணமானது. சுமார் 1 வருடமாக அவள் கணவனுடன் பேச்சு வார்த்தையில்லாமல் என்னுடன் வாழ்ந்து வந்தாள். சுமார் 7 மாதங்களுக்கு முன், ஒருநாள் நானும், என் இளைய மகளும் என் கணவரைப் பார்க்க திருமலாபுரம் சென்றிருந்தோம். மறுநாள் மத்தியானம் ஊருக்குத் திரும்பியபோது என் மகள் தன்னை சங்கரத்தேவர் குமாரர் சின்னத்தம்பி, அருவாளை காட்டி மிரட்டி பயமுறுத்திக் கற்பழித்துவிட்டதாகவும், நெற்றியிலும், இடது மார்பிலும் காயம் ஏற்படுத்திவிட்டதாகவும் சொன்னாள். நான் இந்த விஷயத்தை யாரிடமும் சொல்லாதே, நமக்குத்தான் கேவலம். அவர் குடும்பத்தாரை நம்மால் ஒன்றும் செய்யமுடியாது என்று சொன்னேன். பின்னால் எங்கள் ஊருக்கு விசாரணைக்கு வந்த அதிகாரிகளிடமும், அரசியல் கட்சித் தலைவர்களிடமும் சொன்னேன். இதற்கு சுமார் 2 மாதம் முன்பு என் இளைய மகள் வசந்தியை சின்னத்தம்பி என்பவர் அவருடைய கௌரவத்திற்கு பங்கம் செட்டில் மைத்து கற்பழித்துவிட்டதாக என் மகள் சொன்னாள். நான் இந்த விஷயத்தை யாரிடமும் சொல்லாதே என்று சொல்லிவிட்டேன்.

89. சின்னத்தம்பி மஞ்சுளாவையும், வசந்தியையும் கற்பழித்தார் என்ற குற்றச்சாட்டை இந்த வாக்குமூலம் (சா. ஆ. ஏ. 132) உறுதிப்படுத்து கிறது.

90. மணி, சங்கரத்தேவர் வீட்டிற்குத் தன் னுடைய சம்பளக் கணக்கைத் தீர்த்துக்கொள்வதற் காகச் சென்றதாகவும், அவரது உடல் தேவர்களால் மாட்டு வண்டியில் கொண்டுவரப்பட்டதாகவும், அந்தச் சடலத்தை சங்கரத்தேவர் இராஜசெல்வம் வீட்டில் வைத்தார் என்றும், மசானம், நெல்லையா முதலியோர் இந்த உடலை எரித்தனர் என்றும், இன்ஸ்பெக்டர் அருணாசலம் முன் கொடுத்த வாக்குமூலத்தில் கண்ணம்மாள் கூறியுள்ளார். இந்த நிகழ்ச்சி முழுவதையும் காதி தம் கண்ணால் பார்த்ததாகவும் அதைத் தம்மிடம் சொன்னதாக வும் கண்ணம்மாள் கூறியுள்ளார். கண்ணம்மாள் தாம் தாக்கல் செய்த (டி.பி.டபிள்யூ 7) வாக்கு மூலத்திலும் 161-வது வாக்கு மூலத்திலும் ஆதி திராவிடர்களுக்குப் பக்கபலமாகச் சாட்சியம் கூறியுள்ளது இதிலிருந்து தெரியவருகிறது. இந்தச் சாட்சியம் தேவர்களுக்கு முற்றிலும் விரோதமாக அமைந்துள்ளது. அவர்களுக்கு எதிராக அமைந்துள்ள சந்தர்ப்ப சாட்சியத்திற்கு வலுவான ஆதாரமாக இது அமைந்துள்ளது. அதாவது, மணியின் சடலம் சங்கரனால் இராஜ செல்வத்தின் வீட்டில் வைக்கப்பட்டது என்ற சாட்சியம் மிகவும் முக்கியமானது. இதுபற்றி மேலும் விளக்கத் தேவையில்லை. கொலை, கற்பழிப்பு ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு ஆதி திராவிடர்களுக்குச் சாதகமான முக்கிய சாட்சி கண்ணம்மாள் என்பது வெளிப்படையாகும். தமிழக முதல்வருக்கு 40 ஆதி திராவிடர்கள் சேர்ந்து கையெழுத்திட்டு அனுப்பிய மனுவில் கண்ணம்மாளும் கையெழுத்திட்டுள்ளார். தேவர் கள் செய்த கொடுமைகள் பற்றிய முழு விவரங் களும் இந்த மனுவில் (அ. சா. ஏ. 133) குறிப்பிடப் பட்டுள்ளன. 1980 அக்டோபர் முதல் வாரத்தில் 30 ஆதி திராவிடர்கள் ஒன்றுசேர்ந்து தமிழக முதல்வருக்கு மற்றொரு மனுவையும் அனுப்பினர் (சா. ஆ. ஏ. 138), இதிலும் கண்ணம்மாள் கையெழுத்திட்டுள்ளார்.

91. கண்ணம்மாள் தங்கள் தரப்பில் முக்கிய மான சாட்சி என்று திரு அசோக்குமார் விசாரணை யில் வெளிப்படையாகக் கூறியுள்ளார். ஆனால், இந்த முக்கிய சாட்சியை திரு அசோக்குமார் விசாரிக்க முடியவில்லை. சா. ஆ. ஏ. 132 என்ற வாக்குமூலம் திரு அசோக்குமாரின் முன்னிலையில் கண்ணம்மாவால் கையெழுத்திடப்பட்டது. இதில் திரு அசோக்குமார் அத்தாட்சிக் கையெழுத்து இட்டுள்ளார். எனவே, இந்த வாக்குமூலத்தில் உள்ளவைகள் கண்ணம்மாவிற்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும். திரு அசோக்குமார் வாக்கு மூலத்தைப் படித்து காண்பித்து விளக்கிய பின்னரே கண்ணம்மாள் அதில் கையெழுத்திட்டிருக்க முடியும். எனவே இந்த வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளவைகளிலிருந்து அவர் தப்பிக்க முடியாது.

92. கண்ணம்மாள் ஆதி திராவிடர்களுக்குச் சார் பாக சாட்சியம் சொல்ல மறுத்தார். அவருடைய வாக்குமூலமும் சாட்சியமும் மற்றவர்களுடன் அவரும் கையெழுத்திட்டு முதல்வருக்கு அனுப்பிய மனுக்களும், இன்ஸ்பெக்டர் அருணாசலம் முன் அவர் அளித்த வாக்குமூலமும் தங்களுக்கு எதிராக ஆளித்தரமாக அமைந்தது என்பதை அறிந்த தேவர்கள் அவரைக் கங்ஙள் பக்கம் இழுத்துக் கொண்டனர். எனவே கண்ணம்மாள்

டி.பி.டபின்யூ. 7-ஆக விசாரிக்கப்பட்டார். தேவர்களின் மோசமான இச் செய்கையினால் ஆதி நாராவிடர்கள் தரப்பு வலுவிழந்துவிட்டது. கண்ணம்மாள் உறுதிமொழி எடுத்துக்கொண்டு சாட்சியம் அளித்தவள்; தன்னுடைய மகள்கள் கற்பழிக்கப்பட்டதுபற்றி தமிழக முதல்வருக்கு அனுப்பிய புகாரில் கையெழுத்திட்டவர்களில் ஒருவர்; அப்படியிருக்கையில் இவர் தான் பெற்ற மகள்களுக்குப் பாதகமாகவும் ஆதி நாராவிடர்களுக்கு எதிராகவும், தேவர்களுக்கு சாதகமாகவும் எப்படிச் சாட்சியமளித்தார் என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. கண்ணம்மாளின் இந்த மனமாற்றம், தேவர்களிடம் திடீரென்று ஏற்பட்ட பாசத்தாலா? அல்லது, கமிஷனுக்கு உதவியாக உண்மையைத் தாம் சாட்சியம் அளிக்க வேண்டும் என்கிற உயர்ந்த நோக்கத்தாலா? என்றால், இதில் எதுவுமில்லை. இதை, மோசமான செய்கை என்றுதான் சொல்ல வேண்டும்.

93. கண்ணம்மாள் கமிஷன் முன் இப்பொழுது சொல்லுவதுபோல், மணி மார்நாட்டிலுள்ள மரணம் அடைந்தார் என்று தன்னுடைய சாட்சி. ஏ. 132 வாக்குமூலத்தில் கூறவில்லை. மேலும்: இன்ஸ்பெக்டரின் முன் கொடுத்த 161-வது வாக்குமூலத்திலும் அவர் இப்பொழுது சொல்லியதற்கு நேர் மாறாகவே சொல்லியுள்ளார். அதாவது, சங்கரத்தேவராலும், அவரது கையாட்களாலும் மணி கொல்லப்பட்டார்; அவரது சடலம் மாட்டு வண்டியில் எடுத்து வரப்பட்டு இராஜசெல்வத்தின் வீட்டில் வைக்கப்பட்டது என்று அவர் அந்த வாக்குமூலங்களில் குறிப்பிட்டிருந்தார். இதிலிருந்தே அவர்து சாட்சியத்தை நம்பமுடியாது என்று தெளிவாகிறது.

94. தன்னுடைய மகள்கள், தாங்கள் கற்பழிக்கப்பட்டதாகத் தன்னிடம் கூறினார்கள் என்று முதலில் தன் வாக்குமூலத்தில் கூறினீர்கள், இப்பொழுது அதை மாற்றித் தம் பெண்கள் தன்னிடம் எதுவுமே சொல்லவில்லை என்று சாதிக்கிறார். தமிழக முதல்வருக்கு அனுப்பப்பட்ட மனுக்களில் தன்னுடைய கையெழுத்து இருப்பதாக அவர் ஒப்புக்கொள்கிறார். தம் பெண்கள் மஞ்சுளா, வசந்தி போட்ட கையெழுத்துகளுக்கு கீழ் தாம் கையெழுத்திட்டதாக அவர் ஒப்புக்கொள்கிறார். தமிழக முதல்வருக்கு அனுப்பிய மனுக்களில் கூறப்பட்டவை பற்றியும், இன்ஸ்பெக்டர் அருணாசலம் முன் அவர் கொடுத்த வாக்குமூலத்தில் கூறியுள்ளது பற்றியும் அவர் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட போது அத்தகைய வாக்குமூலங்களைத் தாம் கொடுக்கவே இல்லை என்று ஒரே யடியாக மறுத்துவிட்டார். இவர் எதற்குமே அஞ்சாதவர் என்பதையும் முதலில் தாம் அளித்துள்ள வாக்குமூலங்களை மறுத்து, தேவர்கள் சார்பாகச் சாய்ந்துவிட்டார் என்பதையும் இது விளக்குகிறது.

95. ஆதி நாராவிடர்களிடம் நேரடியாகக் கலந்துரையாட தமிழக முதல்வர் சங்கராங்குமம் சென்றதும், ஆதிநாராவிடர்களின் குறைகளையும், தேவர்களால் அவர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளையும் கேரில் அவர் விசாரித்தறிந்தார் என்பது அனைவரும் அறிந்ததே. தமிழக முதல்வர் அங்கு எதற்காக வந்தார் என்பதும் கண்ணம்மாளுக்குத் தெரியும். அப்போது எடுக்கப்பட்ட நிழற்படத்தில் தன்னுடைய பெண்களுடன் அவர் காணப்படுகிறார். (அ.சா.ஏ. 134.) ஆனால், அவர் இதையும் மறுக்கிறார்.

96. இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியிடம் நேரடியாக மனு கொடுப்பதற்காக மஞ்சுளா, இராஜசெல்வம், அசோக்குமார் ஆகியோர் டெல்லிக்குச் சென்றபோது, நிழற்படம் ஒன்று எடுக்கப்பட்டது. (சா.ஆ.ஏ. 140) இந்த நிழற்படம் மிகவும் தெளிவாக உள்ளது. மஞ்சுளா அதில் நிற்பது நன்றாகத் தெரிகிறது. இதில் சிக்கல் எதுவும் இல்லை. எனினும், இந்த நிழற்பட்டத்தில் தன் பெண் மஞ்சுளா நிற்பதைத் தன்னால் பார்க்கமுடியவில்லை என்றும், நிழற்பட்டம் மங்கலாக இருக்கிறது என்றும், தன்னுடைய பார்வை மங்கியிருக்கிறது என்றும் கண்ணம்மாள் பாசாங்கு செய்தார். அவர் திட்டமிட்டு, தேவர்கள் சொல்லிக்கொடுத்தபடி பொய் சொல்கிறார்.

97. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்ட அறையில் அணைவருக்கும் தெரியும் வகையில் இடம் பெற்றிருந்த நிழற்படங்கள் தனக்குத் தெளிவாகத் தெரிவில்லை என்று அவர் பசாங்கு சய்.. ர் ரு விசாரணை அரசு தரப்பு வழக்குரைஞர் ஒரு பெரியநாயகம், இவர் முன்னர் கொடுத்த வாக்குமூலமே உண்மையானது என்றும், தற்போது கமிஷன் முன் கொடுத்துள்ள சாட்சியம் பொய்யானது என்றும் கூறினார். அவர் முன்னர் கொடுத்த வாக்குமூலத்தை (சா. ஆ. ஏ. 132) அவரிடம் காட்டிக் கேட்டபோது அவர், வாக்குமூலம் எதிலும்தாம் கையெழுத்திடவே இல்லை யென்றும், அரசாங்கம் தனக்குவீடு தரப்போகிறது என்று தம்மிடம் வெற்றுத்தாளில் கையெழுத்து வாங்கியதாகவும் பிரமடியாகச் சொல்லிவிட்டார்.

98. கண்ணம்மாள் தேவர்கள் சார்பாகச் சாய்ந்து விட்டார் என்பதை அறிந்த திரு அசோக்குமார் அவரை நுணுக்கமாகக் குறுக்கு விசாரணை செய்தார். அவர் தேவர் பக்கம் சாய்ந்துவிட்டார் என்பதும், திட்டமிட்டு அவர்கள் சொல்லிக் கொடுத்துள்ளபடி பொய் சாட்சியம் அளிக்கிறார் என்றும், அவர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் பொய் என்பதும், அவர் தேவர்களின் கைப்பாவையானார் என்பதும் தெள்ளத் தெளிவாகி விட்டது.

99. கண்ணம்மாளைத் போன்ற கட்சி மாறும் சாட்சிகளை விசாரிப்பது அர்த்தமற்றது: வேடிக்கையானது; இத்தகைகுரியது என்பதைத் தெளிவுக்குவே நான் இவ்வளவு விவரங்களையும் கூறியுள்ளேன்.

100. கண்ணம்மாவைத் தங்கள் தரப்பு சாட்சியமாக தேவர்கள் மாற்றியது மிகவும் மோசமான தாகும். இது சந்தர்ப்பச் சாட்சியத்தை வலுவிழக்கச் செய்யும் வகையில், கமிஷனின் விசாரணையில் குழப்பத்தை ஏற்படுத்தும் செயலாகும். 'சாட்சியம் பற்றிய சட்டம்' என்ற நூலில் (ஆசிரியர்கள்: உட்ராஃப், அமீர் அலி) 812-வது பக்கம் விதி 112-ல் குத்தகை கருத்து சொல்லப்பட்டுள்ளது. (தொகுதி—3 14-வது பதிப்பு— 1981).

101. பாதாண்பது வயதான மஞ்சுளாவின் வாக்குமூலத்தை இனிக் காணலாம். இவர் கண்ணம்மாவின் மகள். காமினி மனைவி-புஷ்பத்தின் தங்கை. இவர் தன் கணவனை விட்டுப் பிரித்து காமினி பாதுகாப்பில் வாழ்பவர். ஒரு நாள் தனது தாய், தன் தந்தையைப் பார்க்க (முத்தையா) இருமலபுரம் சென்றதாகவும், அன்று சங்கரத் தேவரின் மகன் இன்னத்தம்பி நள்ளிரவில் மஞ்சுளாவின் வீட்டிற்கு வந்து, கதவைத் திறந்து கொண்டு

வீட்டில் "நுழைந்து தங்களைப் பலவந்தமாகக் கற்பழித்தார் என்பது இவருடைய குற்றச்சாட்டு. இவர் கமிஷன் முன் அளித்த சாட்சியம் (சா. ஆ. ஏ. 47) வருமாறு :

''எனக்கு சொந்த ஊர் சங்கனாங்குளம். எனக்கு திருமணமாகி 1½ வருடமாகிறது. எனக்கும் என் புருஷனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு சுமார் ஒரு வருட காலமாக என் தாயருடன் சங்கனாங்குளத்தில் வசித்து வருகிறேன். என் அப்பா திருமலாபுரத்தில் தங்கியிருந்து கொத்தனார் வேலை பார்த்து வந்தார். அவருடன் என் தம்பி மார்களும் தங்கியிருந்தார்கள். போன மாதம் ஒரு நாள் காலை என் அம்மாவும் தங்கையும் என் அப்பாவைப் பார்த்து வரப் போனார்கள். அவர்கள் திரும்பி வராததால் நான் தனியாக வீட்டில் படுத்திருந்தேன். என் வீடு அறிஜன தெருவில் ரேடியோ நிலையத்திற்கு வடபுறம் இருக்கிறது. அன்று என் வீட்டில் சுவரொட்டி மண்ணெண்ணை விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இரவு சுமார் 11 மணிக்கு நான் தூங்கிக் கொண்டு இருக்கும் போது, எங்கள் வீட்டுமுன் வாசல் கதவைத்திறந்து கொண்டு ஒரு ஆள் வீட்டிற்குள் வரும் சப்தம் கேட்டு பயந்து அது யார் என்று சத்தம் போட்டு உடனே நான் எழுந்தேன். வீட்டிற்குள் அரிவாளுடன் வந்த சங்கரத்தேவர் மகன் சின்னத் தம்பி ''சத்தம் போடாதே'' என்று என் வாயை பொத்தினார். நான் அவரிடமிருந்து திமிறி விடுவிக்க முயற்சிக்கும்போது, என்னை வேகமாகத் தள்ளினார். நான் கதவில் போய் மோதி கீழே விழுந்தேன். என் நெற்றியில் நீண்ட வெட்டுக் காயம் ஏற்பட்டது. அதை தடும்பு இன்னும் இருக்கிறது. நான் கீழே விழுந்தவுடன் என் சேலை முந்தாணையை வைத்து என் வாயில் சின்னத்தம்பி அமுக்கினார். அரிவாளைக் காட்டி ''சிறுக்கி பிள்ளை'' சத்தம் போட்டால், துண்டாக வெட்டிவிடுவேன்'' என்று மிரட்டி, என்னை பல வந்தமாகக் கற்பழித்தார். என்னுடைய இடது மார்பில் அருகே நகம் பட்டு கோரை ஏற்பட்டது. என்னுடைய பாவாடையிலும், தொடையிலும் இந்திரியம் பட்டிருந்தது. என்னைக் கற்பழித்துவிட்டு பின்வாசல் கதவைத் திறந்து கொண்டு வெளியில் போய்விட்டார். நான் உடனே பக்கத்து வீட்டில் இருந்த என் அக்காள் புஷ்பத்திடம் விபரத்தைச் சொன்னேன். அவள் என் நெற்றியில் இருந்த காயத்தைத் துடைத்து மருந்து போட்டாள். நான் என் வீட்டைப் பூட்டிவிட்டு, என் அக்காள் புஷ்பம் வீட்டிலேயே படுத்துக் கொண்டேன். மறுநாள் ஊரிலிருந்து வந்த என் அம்மாவிடமும் சொன்னேன். நிராம முன்சீப் மெ சின்னத்தம்பியின் சித்தப்பாவானதாலும் ஏற்கெனவே எங்கள் ஊரில் என் சொந்தக்காரி ராஜசெல்வம் கற்பழிக்கப்பட்டதைத் தட்டிக் கேட்ட அவள் கணவர் மனுவேல் என்ற மணியை மெ சின்னத்தம்பி குடும்பத்தார் கொலை செய்த விபரம் எனக்குத் தெரிந்ததாலும், நாங்கள் பயந்துகொண்டு உடனடியாகப் புகார் கொடுக்கவில்லை. சுமார் 1 மாதம் கழித்து, திசையன்விளை போலீசார் என்னை விசாரிக்கும் போது, விபரத்தைச் சொன்னேன். அதிலிருந்து ஒரு மாதம் கழித்து ஆர்.டி.ஓ. விசாரணையிலும் எங்கள் ஊர் எம்.எல்.ஏ. விடமும், அதன்பின் வந்த மந்திரிகளிடமும், அரசியல் தலைவர்களிடமும் சொன்னேன். சுமார் 3 மாதத்திற்கு முன்பு பிரதமர் இந்திரா காந்தியை டில்லியில் சந்தித்து புகார் மனு கொடுத்தேன்.''

102. சின்னதம்பியின் பிடியிலிருந்து தான் திமிறியபோது சின்னத்தம்பி அரிவாளை எடுத்துக் காட்டிப் பயமுறுத்தித் தன்னைப் பலவந்தமாக கற்பழித்தார் என்பது மஞ்சுளாவின் குற்றச் சாட்டு. தாம் திமிறியபோது கதவில் போய் மோதி தரையில் விழுந்ததாகவும், அதனால் தனது நெற்றியில் காயம் பட்டதாகவும் அவர் கூறுகிறார். கற்பழித்தவுடன் சின்னதம்பி வீட்டின் பின் புறம் வழியாக ஓடிவிட்டார். உடனடியாக மஞ்சுளா இதனைத் தனது அக்காள் புஷ்பத்திடம் சொல்லித் தனக்கு நெற்றியில் ஏற்பட்ட காயத்தையும் காட்டினார். புஷ்பம் அதற்கு மருந்திட்டாள். கற்பழிப்புக்குப் பின்னர் தன் அக்கா வீட்டிலேயே தூங்கியதாக அவர் மேலும் கூறுகிறார். மறுநாள் தாயார் திருமலாபுரத்திலிருந்து திரும்பியவுடன் நடந்த நிகழ்ச்சியைக் கூறினார்.

103. மஞ்சுளாவின் சாட்சியத்திற்கு ஆதரவாக இருப்பது அவளின் தமக்கை புஷ்பத்தின் சாட்சியமே. காசியின் மனைவி என்ற முறையில் இவரது சாட்சியமே ஒவ்வொரு வழக்கிலும் ஆதரவான சாட்சியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது உண்மையில் விநோதமானதாகும். கோட்டாட்சியரின் முன் அவர் அளித்த வாக்குமூலத்தில் (சா. ஆ. ஏ. 70 நாள் 16-9-1980) மஞ்சுளா கூறியுள்ளதாவது :

எங்கள் வீட்டு முன்னால் சங்கரபாண்டியன் மெனரு உள்ளது. அவரது மகன் சின்னத் தம்பி தேவர் மெனற்றுக்கு எப்போதும் வந்து இருப்பார். வீசில் அடித்து எனனை வா என்று கூப்பிடுவார். நான் போகாமல் இருந்தால் என் வீட்டுக்கு வந்து நான் வேலைக்குக் கூப்பிட்டால் ஏன் வரவில்லை என்று கூறுவார். உனக்கு அவ்வளவு திமிரா என்று எல்லாம் ஏசுவார். ஒரு நாள் நானும் எங்கள் பாட்டியும் ஊருக்குப் போய் விட்டு வந்தோம். அன்றைக்கும் சின்னத்தம்பி தேவர் எதிரில் வந்தான். நான் பின்னால் வந்தேன். என்னை கையை நீட்டிக் கூப்பிட்டார்கள். நான் ஏசிவிட்டு வந்தேன். மறுநாள் வீட்டுக்கு வந்து நான் வேலைக்கு வா என்று கூப்பிட்டான். நீ ஏன் வேலைக்கு வரவில்லை என்று கேட்டார்கள். எங்கள் அம்மா வீட்டில் இருக்கிறார். எங்கள் அம்மாவிடம் சென்று வெண்டியது தானே என்று கேட்டேன். நீங்கள் எத்தனை நாளைக்குக் கூப்பிட்டால் வராமல் போவீர்கள். ஒத்தையில் எப்படியும் வந்துதானே ஆகனும், நான் பார்த்துக்கொள்கிறேன் என்று கூறுகிறார்கள். ஊருக்கு வடக்கே கொஞ்சதூரம் தள்ளி குடிதண்ணீர் கிணறு உள்ளது. கிணற்றுக்குப் பக்கத்தில் அவர்களது வயக்காடு உள்ளது. பயிர் ஒன்றும் இடவில்லை. நான் தண்ணீருக்குச் சென்றேன். அப்போது அவர்கள் சைக்கிளில் வந்தார்கள். சைக்கிளை நிப்பாட்டிவிட்டு கிணற்றுக்கு வந்தார்கள். 'நில் நீ' என்று கூறினார்கள். நான் குடத்தை எல்லாம் லவத்து விட்டு பயந்து ஓடிவந்து விட்டேன். ஊரிலிருந்து எங்கள் அம்மாவுக்கு சுட்டிக் கொண்டு போனேன். அவர் அங்கிருந்து போய்விட்டார். நாங்கள் தண்ணீர் எடுத்து வந்துவிட்டோம். மறுநாள் காலையில் வந்தார்கள். நீங்கள் வேறு எங்கும் வேலைக்குப் போகக் கூடாது.

நாங்கள் எங்கு கூப்பிட்டாலும் வரவேண்டும் என்று கூறினார்கள். சரி என்று சொல்லிவிட்டு நாங்கள் அவர்கள் கூப்பிடும் போது போகவில்லை. அடித்து விடுவோம் என்று பேசுகிறார்கள். எங்களுக்குப் பாதுகாப்புத் தேவை.

என் தம்பி கிணற்றில் விழுந்து இறந்து போனான். அன்று இரவு 10 மணிக்கு மேற்கே இருந்து சங்கரபாண்டியன் வீட்டுக்கு வந்தார்கள். எங்கள் அப்பா வீட்டில் அழுதுகொண்டு இருந்தார்கள். எங்கள் அப்பாவை அனுப்பிவிட்டு, எங்கள் அக்கா வீடு மெத்தே இருக்கிறது, அங்கு போய் கதவு தட்டி பிருக்கிறார். படிக்கக் கேட்டேன், சரியாக உள்ளது.''

104. மஞ்சுளா கூறியது அத்தனையும் பொய் என்று கூறி அதனை நிராகரிப்பதில் நான் சிறிதும் தயங்கவில்லை. அவர் கோட்டாட்சியர் முன்பு வாக்குமூலம் அளிக்கையில் (சா. ஆ. ஏ. 70) சின்னத்தம்பி பெண்களைக் கேலி செய்ததைப் பற்றித்தான் கூறியுள்ளார். கற்பழித்தது பற்றியோ, சின்னத்தம்பி அவருடைய வீட்டிருள் நடு நிசியில் நுழைந்து அவரைக் கீழே தள்ளி கற்பழித்தது பற்றியோ எதுவும் கூறவில்லை. இப்போதுதான் மஞ்சுளா கமிஷனின் முன்பு விவரக் கூறுகிறார்.

105. இதுபோலவே அவர் 29-9-1980 அன்று காவல் துறை உதவி சுப்பிரண்டு முன்பு அளித்த வாக்குமூலத்திலும் (சா.ஆ.ஏ. 69) சின்னத்தம்பி கற்பழித்தது பற்றி எதுவும் கூறவில்லை. சா.ஆ.ஏ. 69 மேலே சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது :

> எனக்குச் சங்கனாங்குளம் என்னைச் சங்கனாங்குளத்தில் முத்தையா என்பவருக்குக் கல்யாணமாகி 1 வருடமாகிறது. எனக்கும் என் புருஷனுக்கும் விவகாரத்து நடந்து சுமார் 7 மாதங்களாகிறது. நான் தற்சமயம் என் தாயார் கணணம்மாவுடன் குடியிருக்கிறேன். சங்கனாங்குளத்தைச் சேர்ந்த சங்கரத் தேவர் மகன் சின்னத்தம்பி சுமார் 3 மாதங்களுக்கு முன்பு என் வீட்டுத் தெற்குப்புள்ள அவருடைய தோட்டக் கிணற்றில் இருந்தார். மேல ஒர கிணற்றிலிருந்து பார்த்தால் என் வீடு தெரியும். என்னை மேற்சின்னத்தம்பி விரல் அடித்துக் கூப்பிட்டார். அப்போது சுமார் மணி 4 மணி இருக்கும். முதல் தூத்துக்கிட்டிருந்தேன். நான் பாராது மாதிரி இருந்ததைப் பார்த்து மேற்சின்னத் தம்பி என் வீட்டிற்கு வந்தார். வீட்டிற்கு வந்து நான் கூப்பிட்டேன் காது கேட்கவில்லையா அவ்வளவு நிமிஷம் என்று என்னைக் கேட்டார். நான் செல்லத் துரைப் பாண்டியனுக்கு வேலை செய்து வருகிறேன். என் வீட்டுக்கு வேலைக்கு வராமல் அவர் வீட்டு வேலை செய்கிறாயே என்று கேட்டுப் போய் விட்டார். மறுநாள் காலை வீட்டுக்கு வடக்கேயுள்ள கிணற்றில் தண்ணீர் எடுக்கப் போகும்போது மேற்சின்னத்தம்பி கிணற்றுக்கு சைக்கிளில் வந்தவர் சைக்கிளை ஊருக்குக் கீழ்ப்பக்கம் வைத்து விட்டு தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்த என்னை ''ஏய் நில்லு'' என்று கூப்பிட்டார். நான் பயந்து ஓடிவந்துவிட்டேன். அந்த நேரத்தில் வேறு யாரும் கிணற்றுப் பக்கம் இல்லை. இது விபரத்தை என் தாயாரிடம்தான் சொன்னேன். என் மாமாவிடம் காசியிடம் சுமார் 1 மாதம் கழித்துத்தான் தெரிவித்தேன். என் மாமா என்னைப் பார்த்து நீ ஏன் பயந்து வந்துவிட்டாய், உன்னை வேலைக்குத் தான் கூப்பிட்டிருப்பாங்க என்று என்னிடம் சொன்னார். இது சம்பந்தமாக நான் இன்றுதான் தங்களிடம் தாங்கள் விசாரிக்க நான் சொல்லுகிறேன். தம்பி இறந்து சுடுகாட்டிறுகு சங்கர் தேவர் வரவில்லை. படிக்கக் கேட்டேன். நான் சொன்னபடி சரி.''

106. இங்குங்கூட அவர் பெண்களைக் கிண்டல் செய்தது பற்றித்தான் கூறுகிறார். கோட்டாட்சியர் முன்பும் காவல் துறை உதவி சுப்பிரண்டு முன்பும் மஞ்சுளா அது வேறு விதமான வாக்குமூலங்கள் கொடுத்து இருப்பதைப் பார்க்கும்போது, கற்பழித்ததாகக் கூறும் அவருடைய சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கற்பழித்த சம்பவத்தைக் கோட்டாட்சியர் முன்போ, காவல் துறை உதவி சுப்பிரண்டு முன்போ ஏன் கூற வில்லை என்று அவரைக் கேட்டதற்கு அவரிட மிருந்து அதற்கு விளக்கம் வரவில்லை. கோட்டாட்சியர் முன்பு அளித்த வாக்குமூலத்தையும் (சா. ஆ.ஏ. 70), காவல் துறை உதவி சுப்பிரண்டு முன்பு அளித்த வாக்குமூலத்தையும் (சா.ஆ.ஏ. 69) பார்க்கும்போது, சின்னத்தம்பி மஞ்சுளாவைக் கற்பழித்த சம்பவம் எப்படி கமிஷனின் முன்பு கூறப்பட்டது என்பதை நினைக்க வியப்பாக இருக்கிறது.

107. அவர் கூறியது அத்தனையுமே பொய். அதற்கு ஆதாரமே இல்லை என்பது தெளிவு. மஞ்சுளாவின் வழக்கு சாரமற்றது. மேற்கண்ட வாறு ஆராய்ந்ததில் அவருடைய சாட்சியம் முற்றிலும் பொய், நம்பத் தகாதது எனத் தெரிகிறது.

108. இந்தக் கட்டுக் கதையை உண்மை என நம்ப வைக்க மஞ்சுளா அவருடைய உறுதிமொழிப் பத்திரத்தில் அவருடைய தாய் மஞ்சுளாவின் தந்தையைக் காண திருமலாபுரம் சென்றிருப்பதாகவும், சின்னத்தம்பி இதனை அறிந்துகொண்டு, அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தவியாகத் தூங்கிக்கொண்டிருந்த மஞ்சுளாவின் வீட்டிற்கு வந்ததாக நாம் எண்ணிக்கொள்ள வேண்டும் என்பதற்காக, மஞ்சுளா தன் தந்தையைக் காண தாயார் திருமலாபுரம் சென்றதாகக் குறிப்பிட்டிருந்தார். மஞ்சுளா தன் வாக்குமூலத்தில் புஷ்பத்துடன் தூங்கிக்கொண்டிருந்ததாகக் கூறியள்ளார். இதிலிருந்து மஞ்சுளா பொய்யாகவும், முன்னுக்குப் பின் முரணாகவும் வாக்குமூலம் அளிக்கிறார் என்பது தெரிகிறது.

109. அடுத்து சங்கரத் தேவர் வசந்தாவைக் கற்பழித்த சம்பவத்தை ஆராய்வோம். கமிஷனின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட உறுதி மொழிப் பத்திரம் மேலே சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (சா.ஆ.ஏ. 51).

> ''எனக்கு சொந்த ஊர் சங்கனாங்குளம். நான் அறிஞ வகுப்பைச் சேர்ந்தவள். எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. என் வீடு நிறுத்துவ குரு தேவதாஸ் வீட்டிற்கு மிழக்கே இருக்கிறது. சுமார்

7 மாதத்திற்கு முன்பு என் சொந்தக்காரப் பையன் இறந்து போய்விட்டான். அது விஷயமாக தெருவில் உள்ளவர்கள் எல் லோரும் போய்விட்டார்கள். இரவு சுமார் 2 மணிக்கு நான் தனியாக வீட்டில் இருந் தேன். அதுசமயம் சங்கனாங்குளம் சிவ சுப்பிரமணியத் தேவர் மகன் சங்கரத் தேவர் என் வீட்டுக் கதவைத் தட்டி தண்ணீர் கேட்டார். நான் கதவைத் திறக்கவும் வீட்டிற்குள் நுழைந்து என்னை மேடு தூக்கிப்போட்டு பலாத் காரமாக கற்பழித்துவிட்டார். நான் தடுத்தும் முடியவில்லை. என் துணி களில் இந்திரியம் பட்டிருந்தது. துடை யிலும் பட்டிருந்தது. ரத்தக் கறையும் பட்டிருந்தது. அதன் பின் அவர் போய் விட்டார். என் வீட்டிற்குள் லைட் இருந் தது. அதன்பின் நான் மதக் குருவிடம் என்னை மானபங்கப்படுத்தியவிஷயத்தை சொன்னேன். நான் என் தாயாருக்கும் இந்த விவரம் சொன்னேன். அதன்பின் போலீஸ்காரர்களிடமும் மற்றும் அரசியல் தலைவர்களிடமும் சொன்னேன். சங்கரத் தேவர் பெரிய பணக்காரர், பெரிய போக் கிரி, அதனால் பயந்துகொண்டு புகார் கொடுக்கவில்லை.''

110. ஒருநாள், ஜோசப் என்னும் பையன் கிணற்றுக்குள் விழுந்து இறந்துவிட்டதாகவும், அச்சமயம், அதிகாலை சுமார் 2 மணிக்கு மக்கள் தெருவில் உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டு இருந்ததாகவும் அவர் கூறுகிறார். அப்போது சங்கரத் தேவர் மேற்கு சங்கனாங்குளத்திற்கு (ஆதி நிராவிடர் குடியிருப்பு) வந்து வசந்தா தூங்கிக்கொண்டிருந்த வீட்டின் கதவை உதைத்த தாகவும், கதவு திறந்துகொண்டபோது, சங்கரத் தேவர் தண்ணீர் கேட்டதாகவும், அதன் பின்னர் வசந்தாவைச் சங்கரத் தேவர் வலுக்கட்டாயமாக கற்பழித்துவிட்டதாகவும், தான் எவ்வளவோ போராடியும் தப்ப முடியவில்லை என்றும் அவர் கூறுகிறார். அதன் பின்னர், இச்சம்பவத்தினை மதக் குருவிடம் (இவர் அ.த.சா. 17 ஆக விசாரிக் கப்பட்டுள்ளார்) கூறியதாக வசந்தா தெரிவிக் கிறார். இவர் கூறியது அத்தனையும் இயற் கைக்கு மாறானதாகவும், புனைந்துரைக்கப்பட்ட தாகவும் தோன்றுகிறது. வசந்தா அவருடைய வீட்டில் தனியாக தூங்கிக்கொண்டிருந்ததும், அவருடைய தாயார் திருமலாபுரம் சென்றதும், சங்கரத் தேவருக்கு எப்படித் தெரியும்? மேற்கு சங்கனாங்குளத்திலிருந்து அர்த்த ராத்திரியில் காலை 2 மணிக்கு யாரும் அங்கு வந்து தண்ணீர் கேட்க மாட்டார்கள்.

111. வசந்தா காசிக்கு நெருங்கிய உறவினராக இருந்தாலும் கூட, கோட்டாட்சியர் முன்போ, காவல் துறை உதவி சூப்பிரண்டு முன்போ வசந்தா இது பற்றி வாக்குமூலம் எதுவும் கூறவில்லை. காவல் துறை உதவி சூப்பிரண்டும் கோட்டாட்சி யரும் விசாரித்தபோது, சாட்சிகளைச் சேகரித்து அழைத்து வர காசி பொறுப்பு வகித்ததோடு இதில் முக்கிய பங்காற்றினார். மாவட்ட ஆட்சி யரின் அறிக்கையைப் (சா.ஆ.ஜி. 32) பார்த்தபோ இது பற்றி மாவட்ட ஆட்சியரிடம் வசந்தா புகார் எதுவும் செய்யவில்லை எனத் தெரிகிறது.

112. கண்ணம்மாளின் மகள்கள் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு சம்பவத்தையும் பொறுத்த வரையில், தாயார் திருமலாபுரம் சென்றதாகவும், குற்ற வாளி அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வீட்டிற்குள் நுழைந்து கற்பழித்ததாக ஒரே மாதிரியான விளக்கம் மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது. இக் கதை விசித்திரமாக இருக்கிறது. புனைந்து கூறப்பட்டிருக்கிறது. சொன்னதைச் சொல்லும் இனிப்பிள்ளை போல, இவர்கள் தங்களுடைய வாக்குமூலங்களில், தாங்கள் கற்பழிக்கப்பட்ட போது, தங்களுடைய தாய் கிராமத்தில் இல்லை யென ஒரே மாதிரியாகக் கூறியுள்ளனர். பெண் கள் வீட்டில் தனியாகத் தூங்கிக்கொண்டிருந்த தையும், அவர்களுடைய தாயார் திருமலாபுரம் சென்றிருந்ததையும் சின்னத்தம்பியோ சங்கரத் தேவரோ எப்படி அறிந்திருக்க முடியும் என்பதை என்னால் அனுமானிக்க முடியவில்லை.

113. ஜெபமணியின் (அ.த.சா. 2) உறுதி மொழிப் பத்திரத்தில், வசந்தாவைச் சின்னத் தம்பியும், பிரேமாவை சங்கரத் தேவரும் கற் பழித்ததாக ஜெபமணி கூறியிருப்பதில் பெரிதும் முரண்பாடு காணப்படுகிறது. ஆதி நிராவிடர்கள் வகை தொகையின்றி தவறான வாக்குமூலம் கொடுத்துள்ளதினால், அவர்களுடைய வழக்கு பொய்யானதாகத் தோன்றுகிறது.

114. ஒவ்வொரு சமயமும் கண்ணம்மாளின் மகள்கள் கற்பழிக்கப்பட்ட சமயம் தாயார் வேறொரு இடத்திற்குச் சென்று இரவில் அங்கு தங்கியிருப்பதை நினைத்துப் பார்க்கவே வியப்பாக இருக்கிறது. தாயார் இல்லாதபோது அவளுடைய மகள்களில் ஒருத்தி கற்பழிக்கப்பட் டிருந்தால், அதற்குப் பின் தம் மகள்களைத் தனியாக விட்டுவிட்டு இரவு நேரத்தில் மேற்கு சங்கனாங்குளத்தை விட்டுத் தாயார் சென்றிருக்க மாட்டார்.

115. மத குருவின் சாட்சியம் (அ.த.சா. 17) சாரமற்றது. பொய்யானது, அதனை நான் நம்ப வில்லை. இது பற்றி மேற்கொண்டும் கூற வேண் டிய அவசியமில்லை. காவல் துறை உதவி சூப்பிரண்டு முன்பு 29-9-1980 அன்று அளித்த வாக்கு மூலத்தில் (சா.ஆ.ஏ. 79) மேற்கு சங்கனாங் குளத்தில் கற்பழிப்பு சம்பவம் எதுவும் நடக்க வில்லை எனக் கூறும் வாக்குமூலத்தில் முதலில் கையெழுத்திட்ட நபர் தேவதாஸ் என்பதை மட்டும் கூறுவது போதுமானது. அவருக்குப் பின்னர் அதில் கையெழுத்திட்ட பலர், வசந்தாவைக் கற்பழித்ததாகக் கூறும் சாட்சியத்துக்கு ஒத்த தாகக் கேட்டனர் தேவதாஸ் சாட்சியம் அளித்திருந் தாலும், கமிஷனின் முன்பு பொய்யாகச் சாட்சியம் அளித்துள்ளார் என்று காவல் துறை உதவி சூப்பிரண்டு முன்பு கூறியுள்ளனர்.

116. சங்கரத் தேவர் சிவந்தியாபுரத் திலுள்ள அவருடைய அரிசி ஆலையில் காசியின் சகோதரி ரெசியைக் (அ.த.சா. 12) கற்பழித்த தாகக் கூறப்படும் சம்பவத்தை இப்போது ஆராய் வோம். ரெசி, கமிஷனின் முன்பு உறுதிமொழிப் பத்திரத்தைத் தாக்கல் செய்தார். அது சா.ஆ.ஏ. 59. காசியின் வீட்டில் தான் வசிப்ப தாகவும் அவரையே நம்பியிருப்பதாகவும் ரெசி ஒப்புக்கொண்டிருப்பதை நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். அவருடைய உறுதிமொழிப் பத்திரம் (சா.ஆ.ஏ. 59) கீழே சுருக்கமாகக் குறிப் பிடப்பட்டுள்ளது :—

''எனக்கு சொந்த ஊர் சங்கனாங்குளம். சுமார் 8 மாதங்களுக்கு முன்பு நான் தெற்கு விஜயநாராயணம் சங்கரத் தேவர் ரைஸ் மில்லுக்கு மதியம் 2 மணிக்கு நான் புழுங்கல் அரைப்பதற்கு கொண்டு

போயிருந்தேன். அங்கு கீழ் வாசல் மட்டும் திறந்திருந்தது. மற்றதெல்லாம் அடைத்திருந்தது. நான் புழுங்கல் சாக்கைக் கீழே போட்டு உட்கார்ந்திருந்தேன். சங்கரத் தேவர் நாற்காலியில் இருந்தார். 'நயினா, அரைப்பதற்குரிய ஆள் எங்கே?' என்று கேட்டேன். அவர் 10 நிமிஷம் பொறு, மோட்டார் ரிப்பேராக இருக்கிறது, இப்பொழுது ஆள் வந்து விடுமென்று சொன்னார். நான் அப்போது மெதுவாக எழுந்து வெளியே சென்றேன். உடனே கதவை அடைத்து என்னைக் கீழே தள்ளி படுக்க வைத்து பலாத்காரமாகக் கற்பழித்துவிட்டார். என் துணிகளிலும், துடையிலும் இந்திரியம் பட்டது. அதன் பின் நான் வீட்டில் போய் என் தாய் பேச்சியிடம் காண்பித்துச் சொன்னேன். அவள் வேறு துணிகளை மாற்றும்படிச் சொன்னாள். வெளியில் சொல்லாதே, சொன்னால் வீண் வம்பு வந்து சேரும் என்று ஆறுதல் கூறினாள்."

தொடர்பான பகுதி மட்டுமே இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது.

117. கிரேசி, சங்கரத் தேவரின் அரிசி ஆலைக்குப் போவதாகவும், அங்குச் சங்கரத் தேவர் நாற்காலியில் அமர்ந்திருந்ததாகவும், மோட்டார் பழுதுற்றிருப்பதாகவும், அதனைப் பழுதுபார்க்க சம்பந்தப்பட்ட நபர் விரைவில் வருவார் என்றும், சற்று நேரம் காத்திருக்கும்படித் தன்னிடம் கூறிய தாகவும் கிரேசி வாக்குமூலம் அளிக்கிறார். அரிசி ஆலையில் தன்னைத் தவிர வேறு எவரும் இல்லை என்று அவர் மேலும் கூறுகிறார். அப்போது சங்கரத் தேவர் கதவை அடைத்துவிட்டு பெர்சியை பலாத்காரமாகக் கற்பழித்தார். கிரேசி எவ்வளவோ எதிர்த்த போதிலும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை. அதன் பின்னர் உடனே கிரேசி வெளியே ஓடி நடந்தவை அனைத்தையும் தன் தாயார் பேச்சியிடம் (இவர் விசாரிக்கப்படவில்லை) கூறினார். கிரேசி காவல் துறை உதவி கும்பிரண்டு முன் அளித்துள்ள வாக்குமூலம் (சா.ஆ.ஏ. 61) முற்றிலும் முரணானதாக உள்ளது என்பதை இங்குக் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாகும். காவல் துறை உதவி கும்பிரண்டு முன் அவர் அளித்த வாக்குமூலத்தில், தான் அரிசி ஆலைக்குள் நுழைந்தபோது சங்கரத் தேவர் ஒட்டுநரை வெளியே அனுப்பிவிட்டதாகவும், தான் மட்டும் அங்கிருந்த நெல்லைக் கிண்டிக் கொண்டிருந்ததாகவும், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சங்கரத் தேவர் தன்னை அருகில் வரும்படி அழைத்தார் என்றும் தன்னைக் கற்பழிக்கும் நோக்கத்துடன்தான் சங்கரத் தேவர் தன்னை அருகில் வரும்படி அழைத்ததாகவும் அவர் கூறியுள்ளார். நெல்லை அங்கேயே போட்டுவிட்டு ஆலையிலிருந்து ஓடிவந்துவிட்டதாக கிரேசி கூறினார். தன்னைக் கற்பழித்தது பற்றித் தன் தாயார் பேச்சியிடம் கூறியதாகவும், இதனை வெளியில் யாரிடமும் சொல்ல வேண்டாமென்று தாயார் தன்னிடத்தில் கூறியதாகவும், கிரேசி மேலும் சாட்சியம் அளிக்கிறார். எனவே, கிரேசி முதலில் கூறியபடி பார்த்தாலுங்கூட கற்பழிக்க முயற்சி செய்யப்பட்டதாகத்தான் தெரியவரும். இதனை முயற்சி என்று கூட கூற முடியாது. கிரேசியை அருகில் வரும்படி சங்கரத் தேவர் அழைத்திருக்கிறார் அவ்வளவே. இது கற்பழிப்பு சம்பவமாகத் தவறாகத் திரித்துக் கூறப்பட்டுள்ளது. கிரேசி கமிஷனின் முன்பு அளித்த உறுதிமொழிப் பத்திரம் (சா.ஆ.ஏ. 59) உண்மைக்குப் புறம்பானது; மனம் போனபடி பொறுப்பற்ற விதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

118. மேற்கண்டவாறு விவாதித்ததில், காசியினால் துண்டிவிடப்பட்ட இந்த ஆதி திராவிடப் பெண்களும், மகளிரும் கூட்டமாகச் சென்று திரு ஜான் வின்சென்ட், எம்.எல்.ஏ.விடம் தங்களைச் சங்கரத் தேவரும், அவருடைய மகன் சின்னத்தம்பித் தேவரும் கற்பழித்துவிட்டதாகப் பொய்யாகக் கூறி அவரை நம்பவைத்தனர் என்பது தெரியவருகிறது. மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டம் நடைபெறும் கூடத்தில் திரு ஜான் வின்சென்ட், எம்.எல்.ஏ. இது பற்றிப் புகார் செய்தார். ஆதி திராவிட மகளிரும் பெண்டிரும் தன்னிடம் கூறியதை அப்படியே நம்பி உயர் அதிகாரிகளுக்குப் பல மனுக்களை அனுப்பினார்.

119. 1980-ஆம் ஆண்டு மார்ச்சு-ஏப்பிரல் மாதத்தில் நடந்த கொலை, கற்பழிப்புச் சம்பவங்கள் எவற்றையும் திரு ஜான் வின்சென்ட் நேரில் பார்க்கவில்லை. ஆதி திராவிடர்கள் 1980 செப்டம்பர் மாதத்தில் இவரிடம் புகார் செய்தபோது தான் அவர் இந்த வழக்கில் இடம் பெறுகிறார். அந்த முறையீடுகளை அவர் அப்படியே நம்பினார். அத்தொகுதி எம்.எல்.ஏ. என்ற முறையில் அவர் இதில் ஆர்வம் காட்டி அதிகாரிகளுக்கு முறையீடுகளை அனுப்பினார். இப்புகார்கள் விசாரிக்கப்பட்டு, உண்மை தெரியவருமென அவர் நம்பினார். ஆதி திராவிட மகளிரும் பெண்டிரும், காசியும் சிங்கும் அவரிடத்தில் என்ன கூறினரோ அது தொடர்பாக மட்டுமிதான் அவர் சாட்சியம் அளித்திருக்கிறபடியால், அவருடைய வாய்மொழிச் சாட்சியத்தை இங்கு விரிவாக விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. ஆதி திராவிடப் பெண்டிரும் மகளிரும், காசியும் சிங்கும் கமிஷனின் முன்பு விசாரிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் என்ன கூறினரோ அதையேதான் ஜான் வின்சென்ட் தன்னுடைய சாட்சியத்தில் கூறியிருக்கிறார். நடந்ததாகக் கூறப்படும் சம்பவத்தை அடுத்த சுமார் ஆறு நிங்களுக்குப் பின்னர் ஆதிதிராவிடர் இவரிடம் கூறியதாகத் திரு ஜான் வின்சென்ட் சாட்சியம் அளித்திருப்பது மேற்படி சம்பவத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதாகத் தெரியவில்லை. இதனால், திரு ஜான் வின்சென்டின் சாட்சியத்தை விரிவாக விவாதிக்க வேண்டிய அவசியமில்லை; அதனால் பயன் ஏதும் விளையப்போவதில்லை என்று நான் கருதுகின்றேன். அரசியல் கட்சிக்காரர்கள் தங்களுக்கிடையே உள்ள கருத்து வேறுபாடுகளையும், பகையையும் தீர்த்துக்கொள்ள விசாரணைக் கமிஷன் இடமாகாது.

120. கடையொக உள்ளது மைக்கேல் அம்மாள் கற்பழிப்புச் சம்பவமாகும். கமிஷன் மூன்று தாக்கல் செய்யப்பட்ட உறுதி மொழிப்பத்திரம் (சா.ஆ.ஏ. 122) ஆகும். அது மேலே சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது:

"எனக்கு சொந்த ஊர் சங்கனாங்குளம். எனக்கு கல்யாணம் ஆகவில்லை. நான் அரிஜன வகுப்பைச் சேர்ந்தவள். போன வருடம் பங்குனி மாதத்தில் சங்கரத் தேவருக்கு சங்கனாங்குளத்தில் கருங்கல் கிணற்றில் விஜயநாராயணத்தில் அறுவடை கூலி வேலைக்குப் போயிருந்தேன். சுமார் 3 மணிக்கு வேணுகோபால் தேவர் வாழைக் கிணற்றிற்கு தண்ணீர் குடிக்கப் போனேன். அங்கு சங்கரத் தேவர் மகன் சின்னத்தம்பி தேவர் வயலில் இருந்து ஒரு வாழைக் கிணற்றிற்கு தண்ணீர் குடிக்க வந்தவர் என்னை வாழைக்குள்.

இழுத்துக்கொண்டு போய் பலாத்காரமாக கற்பழித்துவிட்டார். என்னை சத்தம் போடவிடாமல் என் வாயில் கையை வைத்து அமுக்கிக் கொண்டார். என்னுடைய பாவாடையில் இந்தியாம் பட்டிருந்தது. என்னை பலவந்தமாக சம்பவம் செய்ததால் எனக்கு இரத்தம் வந்துகொண்டே யிருந்தது. எனக்கு வேதனை தாங்க முடியவில்லை. நான் களத்தில் இருந்த என் தாயார் பூரணத்திடம் விபரத்தைச் சொன்னேன். அவள் என்னை வீட்டிற்குப் போகும்படி சொன்னாள். நான் வீட்டிற்குப் போய் என் அண்ணணிடம் சொன்னேன். அதன் பின் நான் குளித்துவிட்டு துணிகளை மாற்றினேன். ஷே சங்கரத் தேவர் மகன் சின்னத்தம்பித் தேவர் பெரிய பணக்காரர். பெரிய போக்கிரி. ராமம முன்சீப் அவர் சித்தப்பா. அதனால் அவரிடம் பயந்துகொண்டு புகார் செய்யவில்லை. சுமார் நான்கு மாதங்கள் கழித்து நிசையன்வினை போலீஸ்காரர் வந்து விசாரித்தார்கள். அவர் களிடம் நடந்த விபரத்தைச் சொன்னேன். அதன்பின்பு ஊருக்கு வந்த ஜனாகிளிடமும், அரசியல் தலைவர்களிடமும் சொன்னேன்".

121. பதினெட்டு வயதான மைக்கேல் அம்மாள் காசியின் உறவினர். புஷ்பத்தின் தாயாரும் மைக் கேல் அம்மாளின் தாயாரும் சகோதரிகள். புஷ்பம் காசியின் மனைவி. மைக்கேல் அம்மாள் காசியின் மைத்துனி.

122. விஜயநாராயணம் என்ற இடத்தில் தான் அறுவடை கூலி வேலைக்குச் சென்றதாகவும் பிற்பகல் 3 மணி அளவில் தனக்குத் தாகம் எடுத்த தாகவும் சிறிது தொலைவில் உள்ள வேணு கோபாலத் தேவர் என்பவரது தோட்டத்தில் உள்ள கிணற்றுக்குச் சென்றதாகவும் அச்சமயம் சங்கரத் தேவரின் மகன் சின்னத்தம்பி அங்கு வந்து தன்னை வாழைத் தோட்டத்திற்கு இழுத்துச் சென்று பலவந்தமாகக் கற்பழித்ததாகவும் இவர் குற்றம் சாட்டியுள்ளார்.

123. இச்சம்பவம் பற்றி தமது தாயார் பூர்ணம்மாவிடம் (அ.த.சா. 23) கூறியதாகவும் அவர் கூறியுள்ளார்.

124. இவரது குற்றசாட்டு முழுவதும் பொய் என்பதற்கான காரணங்களை மேலே கொடுத்துள் ளேன். இந்தக் கிணறு அமைந்துள்ள இடத்தையும், கிணற்றுக்குள் இறங்கித் தண்ணீர் எடுக்க முடியுமா என்பதைக் கண்டறியவும் ஏனைய விவரங்களை அறிந்து கொள்வதற்காகவும் மெக்கு சங்கணாங் குளம் கிராமத்திற்கு நான் நேரில் சென்றேன்.

125. இந்த கிணற்றை நான் நேரில் பார்த் தேன். இந்த கிணற்றில் இறங்கி தண்ணீர் எடுப்பது என்பது சாத்தியமல்ல என்பதுதான் என்னுடைய கருத்தாகும். இந்த கிணற்றுக்குள் இறங்கவேண்டுமானால் அது எவ்வளவு கடின மானது என்பதை நான் என்னுடைய ஆய்வுக் குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளேன். இந்த கிணற்றில் உள்ள படிக்கட்டுகளில் இறங்குவது அபாயகர மானது ஆகும். கைப்பிடிச் சுவர் ஏதும் இல்லை. முதல் படிக்கட்டுக்கும் இரண்டாவது படிக்கட்டு கும், அடுத்த ஒவ்வொரு படிக்கட்டிற்கும் இடையே ஒரு அடி முதல் ஒன்றரை அடி வரை இடைவெளி உள்ளது. இப் படிக்கட்டுக்களைச் சாதாரணமாக யாரும் உபயோகிப்பதில்லை. கிணற்றில் இறங்கித் தண்ணீர் எடுப்பதற்கு இக்கிணறு பயன்படாது. தண்ணீர் மிகவும் ஆழத்தில் உள்ளது. உள்ளே இறங்கிய பின்னர் மேலே வருவது மிகவும் கடின மாகும். அபாயகரமானதுமாகும். எப்பொழுதாவது ஒருமுறை தான் இப் படிக்கட்டுக்கள் பயன்படுத்தப் படுகின்றன. இக்கிணற்றைவிட மிகவும் அருகில் வேறு கிணறுகள் உள்ளன என்றும் அக்கிணறுகளில் இருந்து நல்ல நீர் கிடைக்கிறது என்றும், அக் கிணறுகளுக்கு மைக்கேல் அம்மாள் வேலை செய்து கொண்டிருந்த இடத்திலிருந்து எளிதில் செல்ல முடியும் என்றும் குறுக்கு விசாரணையிலிருந்து தெரிய வருகிறது.

126. அருகில் உள்ள கிணறுகளுக்குச் செல்லா மல் இரண்டு பர்லாங்கு தொலைவில் உள்ள வேணுகோபால் தேவரின் தோட்டத்திற்கு மைக் கேல் அம்மாள் சென்றிருக்கமாட்டாரென்பதும் குறுக்கு விசாரணையிலிருந்து தெரிகிறது. காவல் துறை உதவி சூப்பிரண்டு, கோட்டாட்சியர் ஆகியோர் நடத்திய விசாரணைகள் பற்றி தமக்குத் தெரியுமென்று மைக்கேல் அம்மாள் ஒப்புக் கொள்கிறார். ஆயினும் இந்த விசாரணைகளில் அவர் எவ்வித வாக்குமூலத்தையும் கொடுக்க வில்லை.

127. மாவட்ட ஆட்சியர்முன் கொடுத்த வாக்குமூலத்தில் (சா.ஆ.இ. 32) தாம் சங்கரத் தேவரால் கற்பழிக்கப்பட்டதாக மைக்கேல் அம்மாள் கூறியுள்ளார். ஆனால் கமிஷன்முன் கொடுத்துள்ள வாக்குமூலத்தில் தம்மைச் சின்னத் தம்பித் தேவர் கற்பழித்ததாகக் கூறியுள்ளார். ஆதி நிராவிடப் பெண்கள் கொடுத்துள்ள குற்றச் சாட்டுகளில் பெயர்களும் தேதிகளும் நேரமும் மாறுகின்றன என்பதும் தேவர்களின் பெயர்கள் மாற்றி மாற்றிச் சொல்லப்படுகின்றன என்பதும் இதிலிருந்து தெரியவருகிறது. பெயர்களிலும் தேதிகளிலும் உள்ள முரண்பாடுகளைக் கவனிக்கு மிடத்து குற்றச் சாட்டுகள் உண்மையாக இருக்க முடியாது என்றே தோன்றுகிறது.

128. மைக்கேல் அம்மாளின் சாட்சியத்தை என்னால் ஏற்க முடியவில்லை.

129. ஆவண சாட்சியங்களையும் வாய்மொழி சாட்சியத்தையும் ஆய்ந்து பார்த்தால் ஆதி நிராவிடப் பெண்களின் குற்றச்சாட்டை ஏற்க முடியாது என்பது தெளிவாகிறது. கற்பழிப்புச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டதாகச் சொல்லப் படும் பெண்கள் அனைவரும் காசியின் நெருங்கிய உறவினர்கள்; அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர் கள்; அவரது பாதுகாப்பில் வாழ்பவர்கள்; அவர் வீட்டிலேயே வசிப்பவர்கள். காசியின் உறவினர் அல்லாத வேறு எவரும் இத்தகைய குற்றச்சாட்டு எதையும் கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

130. மணி இறந்த சும்நிலைகளை இப்பொழுது கவனிப்போம்.

131. ஆதிநிராவிடர்களின் குற்றச்சாட்டு வருமாறு:—

மேற்கு சங்கனாங்குளம் கிராமத்திற்குச் செல்லும் நான்கு சாலை சந்திப்பில் தெருவிளக்கின் அருகே மணி தேவர்களால் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டு இறந்தார். தாக்குதல் காரணமாக மணி இறந்தார்; சங்கரத் தேவர் தன்னுடைய வீட்டிலிருந்து மாட்டுவண்டியைக் கொண்டு வருமாறு தன்னுடைய கையாட்களுக்குக் கட்டளை யிட்டார்; மணியின் சடலம் மாட்டுவண்டியில்

வைக்கப்பட்டு சங்கரத் தேவரின் கட்டளைப்படி மணியின் வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது; மணியின் வீட்டின் முன் சடலம் வைக்கப்பட்டது. அதன் பின்னர் சடலத்தை விரைவில் எரிக்க வேண்டிய ஏற்பாடுகளை சங்கரத்தேவர் மேற் கொண்டார்; விறகு, மண்ணெண்ணை அகியவற்றை எடுத்து வரச்செய்தார். சுந்தரராஜன் என்பவருடைய வீட்டைச் சேர்ந்த கிணற்றின் அருகே சடலத்தை எடுத்துச் செல்லுமாறு தன்னுடைய ஆட்களுக்குக் கட்டளையிட்டார். இரவு 10 மணியிலிருந்து 2 மணிக்குள் அச்சடலம் எரிக்கப்பட்டது. சடலத் தின் சாம்பலும் எலும்புகளும் மறைந்தில் போடப் பட்டன. ஈமச்சடங்கு தொடர்பான ஏற்பாடு கள் முழுவதையும் சங்கரத் தேவரின் கட்டளை களினால் செய்யப்பட்டன. இராஜசெல்வமோ, அவரு டைய தாயாரோ தந்தையோ ஆதி திராவிடர்களில் வேறு எவருமோ இதில் தலையிட அனுமதிக்கப்பட வில்லை. சங்கரத் தேவருக்கு அஞ்சிய ஆதிதிராவிடர் கள் வாய் திறக்கவில்லை. அப்பகுதியள கிராமங்களில் உள்ள மணியின் உறுப்பினர்களுக்கு செய்தி அனுப்பிய பின்னர் மணியின் சடலம் மறு நாள் எரிக்கப்படலாம் என்று கூட அவர்களால் சொல்ல முடியவில்லை.

132. சங்கரத்தேவர் மணியை அடித்துக் கொலை செய்ததை இராஜசிங், காசி, ஸ்டாலின் ஆகியோர் நேரில் பார்த்தனர் என்பது இராஜசெல்வத்தின் குற்றச்சாட்டு. மணியின் சடலத்தை எரித்த மறுநாள் இத்தவலை காசி, இராஜசிங் ஆகியோர் தன்னிடம் கூறியதாக இராஜசெல்வம் கூறியுள் ளார். சங்கரத்தேவரும் அவரது ஆட்களும் மணியை அடித்துக் கொன்றதையும் அதன் பின்னர் சங்கரத்தேவர் கட்டளைப்படி மணியின் சடலம் மாட்டுவண்டியில் வைக்கப்பட்டு மணியின் வீட்டிற் குக் கொண்டு வரப்பட்டதையும் இராஜசெல்வத் தின் வீட்டில் அச்சடலம் வைக்கப்பட்டதையும் தாங்கள் நேரில் பார்த்ததாகவும் தன்னிடம் கூறினர் என்று இராஜசெல்வம் கூறியுள்ளார்.

133. தேவர்களின் கொடிய நடத்தை, இந்த வழக்கில் உள்ள சந்தர்ப்ப சாட்சியம் ஆகியவற் றைக் கொண்டு பார்த்தால் சங்கரத்தேவர் மணியைக் கொலை செய்தார் என்பது தெளி வாகும் என்று ஆதி திராவிடர்கள் சாதிக்கின்றனர்.

134. காசி, இராஜசிங், ஸ்டாலின் ஆகியோ ருடைய நேரடி சாட்சியத்தை முதலில் சுவனிப்போம்.

135. மேற்கு பிழக்கு சங்கனாங்குளம் ஆகிய கிராமங்களுக்கு நான் பலமுறை சென்றேன். சங்கரத்தேவர் ஈவு இரக்கமின்றி மணியை அடித்துக் கொன்றதாகச் சொல்லப்படும் இடத்தையும் அதாவது நான்கு சாலைகள் சந்திக்கும் இடத்தையும், விளக்குக் கம்பத்தின் அருகே அமைந்துள்ள இடத்தையும் நான் பார்வையிட்டேன்.

136. குற்றவியல் புலனாய்வு சிறப்புப் பிரிவின் இன்ஸ்பெக்டர் எஸ். இராமசாமி அவர்கள் தயா ரித்துள்ள வரைப்படத்தில் களம், விளக்கு கம்பத் தின் அருகே உள்ள நான்கு சாலை சந்திப்பு, மணி கொலையுண்டதாகச் சொல்லப்படும் இடம் கந்தையா தேவரின் வீடு, மேற்கு சங்கனாங்குளத் திற்குச் செல்லும் சாலை ஆகிய விவரங்களும், ஏனைய தொடர்பான விவரங்களும் கண்டுள்ளன. வரைபடம் இதனுடன் இணைக்கப்பட் டுள்ளது. இந்த வழக்கைப் புரிந்து கொள்ளவும் உண்மையைக் கண்டறியவும் இந்த வரைபடம் மிகவும் உதவியாக உள்ளது. திரு இராமசாமி அவர்கள் தன்னுடைய பணியைச் செவ்வனே செய்துள்ளார். (இணைப்பு 3.)

137. காசியின் சாட்சியம் வருமாறு.—மாலை 5 மணியளவில் அவரும் அவரு சகோதரரும் செல்லத்துறையின் மாட்டுவண்டியில் நெற்பதரை ஏற்றி கொண்டிருந்தனர். இந்த இடம் நான்கு சாலைகள் சந்திப்பு, தெரு விளக்கு ஆகியவற்றி லிருந்து 200 அடி தொலைவில் உள்ளது; அச்சமயம் சங்கரத்தேவர் மணியின் பிடரியில் கையை வைத்து தன்னுடைய வீட்டின் பின்புறமாக தள்ளிக் கொண்டு வந்தார். சங்கரத்தேவரும் மணியும் அந்த இடத்தில் அருகே வந்தனர். நான்கு சாலை சந்திப்பில் மேற்கே திரும்பினர், அந்த இடத்தில் சங்கரத்தேவரும் அவரது கையாட்களும் சங்கரத் தேவரின் மகனும் சகோதரர்களும் மணியை அடித்தனர். ''செருக்கிப் பையா, சம்பளமா கேட்கிறாய்'' என்று சங்கரத்தேவர் கோபமாகக் கத்தினார். இவ்வாறு சொல்லிக்கொண்டு அவர்கள் மணியின் முதுகில் அடித்தனர். அடி தாள முடி யாத் மணி உறக்கக் கதறினார். மல்லாந்த நிலையில் கீழே விழுந்தார். மணி சாகவேண்டும் என்று சொல்லிக்கொண்டு சங்கரத்தேவர், மணியின் கழுத்தில் காலை வைத்து அழுத்தினார். மணி மூச்சுத் திணறி இறந்தார். இது காசியின் சாட்சியம்.

138. காசி மேலும் கூறியதாவது.—அதன் பின்னர் மாட்டு வண்டி ஒன்றைக் கொண்டு வருமாறு சங்கரத்தேவர் சண்முகசுந்தரத்திற்குக் கட்டளை யிட்டார். மாட்டுவண்டி கொண்டுவரப்பட்டது. மணியின் சடலம் மாட்டுவண்டியில் வைக்கப்பட்டு மேற்கு சங்கனாங்குளம் கிராமத்திற்கு (ஆதி திரா விடர் குடியிருப்பு), எடுத்துச் செல்லப்பட்டது. சங்கரத்தேவரும் அவருடைய ஆட்களும் அத்த வண்டி யைத் தொடர்ந்து சென்றனர். மணியின் சடலம் மணியின் வீட்டில் வராண்டாவில் வைக்கப்பட்டது.

139. காசி தமது சாட்சியத்தில் மேலும் கூறியுள்ள தாவது.— மணியின் சடலத்தை வண்டியிலிருந்து இறக்கியபின்னர் இராஜசெல்வம் அங்கு வந்ததாகவும் மணி விஷம் சாப்பிட்டு இறந்ததாகச் சங்கரத் தேவர் இராஜசெல்வத்திடம் சொன்னார். சங்கரத் தேவரும் அவரது ஆட்களும் அடித்ததனாலேயே மணி இறந்தார் என்று இராஜசெல்வம் கூறினார். இச்சம்பவம் முழுவதையும் தாங்கள் நேரில் கண்டதாகக் காசி, சிங் ஆகியோர் கூறியுள்ளனர்.

140. மணி தாக்கப்பட்டுக் கொலை செய்யப் பட்டதைத் தாங்கள் நேரில் பார்த்ததாகக் காசி, சிங் ஆகியோர் சாட்சியமளித்தனர். இராஜசெல்வத்தின் வாக்குமூலம் வேறு வகையில் அமைந்துள்ளது என்பதை இங்கே குறிப்பிடவேண்டும். தமது கணவரும் தானும் வீட்டை அடைந்த பிறகு தமது கணவர் சம்பளக் கணக்கைத் தீர்த்துக் கொள்வதற்காகச் சங்கரத்தேவரின் வீட்டிற்குச் சென்றார் என்றும் அதன் பின்னர் நடந்தது எது வும் தமக்குத் தெரியாது என்றும் மாலை 6 மணி யளவில் மணியின் சடலம் மாட்டு வண்டியில் தமது வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டது தான் தமக்கு தெரியுமென்றும் மாட்டுவண்டியைச் சண்முகசுந்த ரம் ஓட்டி வந்தார் என்றும், சடலத்தை எவ்வாறு வண்டியிலிருந்து இறக்க வேண்டும், தாமதமின்றி எரிக்க வேண்டும் என்று சங்கரத் தேவர் கட்டளை யிட்டு கொண்டிருந்தார் என்றும் இராஜசெல்வம் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வேறு வகையில் சொன்னால் மணி தமது வீட்டிலிருந்து சங்கரத் தேவர் வீட்டிற்குச் சென்றது முதல் மணியின் சடலம் தன்னுடைய வீட்டிற்கு எடுத்து வரப்பட்டது வரை நடந்த விவரங்கள் தனக்குத் தெரியாது என்பதே இராஜசெல்வத்தைப் பொறுத்த வரையில் அவருடைய கூற்றாகும். மாட்டுவண்டியிலிருந்து சடலம் இறக்கப்பட்டதைத் தவிர அவருக்கு வேறு எதுவும் தெரியாது. அதன் பின்னர் சங்கரத்தேவர் மற்றவர்களுக்கு என்ன கட்டளையிட்டார் என்பது பற்றியும் சடலத்தை இரவோடு இரவாக எரிப்பதற்கு என்ன ஏற்பாடுகள் செய்தார் என்பது பற்றியுமே இராஜசெல்வம் தன்னுடைய சாட்சியத்தில் குறிப்பிடுகிறார்.

141. மாட்டு வண்டி சண்முகசுந்தரத்தினால் ஓட்டி வரப்பட்டது என்பதும், சடலம் மணியின் வீட்டில் இறக்கப்பட்டது என்பதும் தாம் அதனைத் தன்னுடைய கண்களால் பார்த்ததாகவும் ஆனால் சங்கரத் தேவரிடம் இருந்த பயத்தினால் அங்கு அழுதுகொண்டிருந்த இராஜசெல்வம், அவருடைய தாய் ஜெபமணி ஆகியோரிடமோ ஏனையோரிடமோ ஒன்றும் சொல்லவில்லை என்றும் காசி கூறியுள்ளார். தாமும் தம்முடைய சகோதரர் இராஜாசிங்கும் சங்கரத் தேவரிடம் இருந்த பயம் காரணமாக சங்கமாங்குளத்திலிருந்து 3 பர்லாங் தொலைவிலுள்ள வெந்தியாபுரம் என்ற இடத்திற்கு உடனடியாக சென்றதாகவும் அங்கு ஒரு பள்ளிக் கூடத்தில் இரவைக் கழித்ததாகவும், காலை 7-30 மணி அளவில் சங்கமாங்குளம் திரும்பியதாகவும் அப்போழுது மணி இறந்த சூழ்நிலை பற்றி அதாவது, சங்கரத் தேவரும், அவருடைய ஆட்களும் மணியை மிருகத்தனமாக அடித்துக் கொன்றது பற்றியும், தானும் இராஜசிங்கும் அந்த நிகழ்ச்சியை நேரில் பார்த்தது பற்றியும் இராஜசெல்வத்திடமும், ஏனையோரிடமும் சொன்னதாகவும், காசி குறிப்பிட்டுள்ளார்.

142. கற்பழிப்புச் சம்பவம் பற்றி இராஜசெல்வம் கொடுத்த வாக்குமூலத்தில் (சா..ஆ.ஏ. 1) ஒரு முக்கியமான பகுதி எடுக்கொணவே கொடுக்கப்பட்டுள்ளது. மணியின் மரணம் குறித்து இராஜ செல்வம் கொடுத்த வாக்குமூலத்தில் தொடர்பான பகுதி மேமே கொடுக்கப்பட்டுள்ளது :

" நானும் என் கணவரும் வீட்டிற்குப் போனோம். அவரிடம் நற்பழித்த விவரத்தை அழுது கொண்டே சொன்னேன். இந்த ஊரில் இருக்க முடியாது. வேறு எங்காவது போய்விடலாம் என்று சொன்னேன். தான் போய் சங்கரத் தேவரிடம் சம்பளம் பாக்கியை கணக்கு தீர்த்து வாங்கி வருவதாக சொல்லிவிட்டுப் போனார். அப்போழுது மாலை சுமார் 4 மணி இருக்கும். நான் என் வீட்டில் என் அம்மாவிடமும் எங்க ஊர் பஞ்சாயத்தார் கற்பழித்த விபரத்தைச் சொன்னேன். சங்கரத் தேவரும், அவருடைய ஆட்களும் பொல்லாதவர்கள். ஆதலால் நாங்கள் எங்கும் போய் சொல்ல முடியாத நிலை. தவிரவும் போலீஸ் அதிகாரிகளுடன் அவர்களுக்கு நெருங்கிய பழக்கம் உண்டு. அன்று மாலை சுமார் 6 மணிக்கு சங்கரத் தேவர், அவர் தம்பிகள், இராமச்சந்திரன், சந்திரன் அவர்களும், சங்கரத் தேவர் மகன் சின்னத் தம்பியும் வள்ளிநாயகத் தேவர் மகன் சண்முகசுந்தரத் தேவர், இந்தரத் தேவர் மகன் பலவேசக் கண்ணு தேவர், அவர் மகன் சித்திரைத் தேவர் இன்னும் சில பேர்களும் ஒரு மாட்டு வண்டியில் என் புருஷனைக் கொண்டு வந்து என் வீட்டு முத்தத்தில் போட்டார்கள். வண்டியை வள்ளி நாயகத் தேவர் மகன் சண்முக சுந்தரத் தேவர் ஓட்டி வந்தார். என் புருஷனுக்கு உயிர் இல்லை. என் கணவர் அடிபட்ட உடம்பில் வீக்கமாக இருந்தது. சங்கரத் தேவர் உன் கணவன் மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்டு விட்டான் ' என்று சொன்னார். நானும் என் அம்மாவும் 'நீங்கள் என் கணவரை கொன்று விட்டீர்களே ' என்று சொல்லி அழுதோம். என் கணவர் மருந்து குடித்ததாக எந்த வீச்சமுமில்லையே என்று நான் சொன்னதற்கு அவர்கள் கோபப்பட்டுக் கொண்டு உங்களை நான் என்ன செய்கிறேன் பார் என்று சொல்லிவிட்டு வண்டியை எடுத்துக் கொண்டு சென்றார்கள். சேரியில் உள்ளவர்கள் பயந்து ஓடிவிட்டார்கள். கொஞ்ச நேரம் கழித்து சங்கரத் தேவரும், மேலே சொன்ன தேவர் கூப்பிளானும் மற்றும் சிலரும் கூட்டாக வந்தார்கள். அவர்களுடன் தேவ மார்களுக்கு வேலை செய்யும் நாகவன் மாட சாமியும் கூட வந்தார். ஒரு மாட்டு வண்டியில் விறகும், மண்ணெண்ணையும் கொண்டு வந்தார்கள். என் புருஷனுடைய உடலை வண்டியில் தூக்கிப் போட்டு ஊருக்கு தெற்கே கொண்டு போனார்கள். அங்கு போய் பிரேதத்தை எரித்து விட்டதாகவும், எலும்பையும், சாம்பலையும் பக்கத்து கிணற்றில் போட்டுவிட்டதாகவும் எங்கள் தெருவில் மசானமும் இன்னும் சிலரும் சொன்னார்கள். சங்கரத் தேவரிடம் சம்பளம் பாக்கி கேட்கப்போன என் புருஷனை இன்று சாயங்காலத்தில் சுமார் 5 மணிக்கு சங்கரத் தேவர் அவரது தம்பிகள் ராமச்சந்திரத் தேவர், சந்திரத் தேவர் மேற்படி சங்கரத் தேவரின் மகன் சின்னத் தம்பி, சண்முகசுந்தரத் தேவர், சித்திரைத் தேவர் மகன் பலவேசக் கண்ணுத் தேவர் அவர் மகன் சித்திரை இவர்களும் மற்றும் சிலரும் சந்திரத் தேவர் வீட்டிற்கு கிழக்குப்பக்கம் தெருவில் வைத்து அடித்தார்கள் என்றும், அதனால் என் புருஷன் இறந்துபோனார் என்றும், அதை நேரில் பார்த்த தாகவும், எங்கள் ஊர் பெருமாள் மகன் காசியும், அவரது தம்பி சிங்கம் எனும் மாடசாமி மற்றும் சாலையில் சொன்னார்கள். சங்கரத் தேவர் தம்பி இராமச்சந்திரன், எங்கள் ஊர் இ.மு. ஆக இருப்பதாலும் அவர்களுக்கு நிசையன்வில போலீஸ் வேண்டியவர்களாகவும் இருப்பதினால் என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தோம். சுமார் காலை 10 மணி அளவில் மேற்படி சங்கரத் தேவரும், தேவரது மனைவும் எங்கள் வீட்டிற்கு வந்து உன் புருஷனை கூட்டி எரித்த வகைக்கு நிறைய ரூபாய் செலவாகி விட்டது. உன்னிடம் இருக்கும் பணத்தைக் கொடு என்றார்கள். பணம் இல்லை என்றும், வேறு வழியில்லாமல் வீட்டில் கிடந்த இரண்டு கோட்டை நெல்லையும், நான் கழற்றி வைத்திருந்த என் தங்கப் பொட்டு தாலி ரூபாய் 100 பெறுமானதைக் கொண்டு போய் விட்டார்கள். சங்கரத் தேவரும், அவரது ஆட்களும் என் புருஷனை அடித்துக் கொலை செய்து விட்டு அதை மறைப்பதற்காக இப்படிச் செய்துவிட்டார்கள். எங்கள் குடும்பத்தினர் திகில்துவர்கள், என் கணவனும் திருஸ்துவன். எங்கள் ஊரில் பிரேதங்களை எரிப்பது கிடையாது.

கொலையை மறைப்பதற்காக எரித்து விட்டார் கள். சுமார் ஒரு வாரம் கழித்து கி.மு. இராமச் சந்திரத் தேவர் என்னை கூப்பிட்டு விட்டு என்னை என் புருஷன் இறந்து விட்டதற்காக கையெழுத்து வாங்கினார். யார் கேட்டாலும் உன் புருஷன் வாய்குத்தினாலதான் செத்தான் என்று சொல்ல வேண்டும். இல்லையென்றால் உனக்கு ஆபத்து வரும் என்றார் மிரட்டி அனுப்பி விட்டார்கள். இது விஷயமாக நாங்கள் எந்தவித ந டவடிக்கையும் எடுக்க முடியாமல் இருந்து விட்டோம். சில மாதங்கள் கழித்து நிசையன்வேளை போலீஸ் இன்ஸ் பெக்டரும் மற்றும் போலீஸ், ரெவின்யூ அதிகாரி களும், எங்கள் ஊரில் வந்து விசாரித்தார்கள். நானும் மற்றவர்களும் நடந்த விபரங்களை அவர் களிடம் சொன்னோம். சங்கரத்தேவர் வகை யறாக்களால் கற்பழிக்கப்பட்டு துன்பப்படுத்தப் பட்ட எங்கள் தெருவில் உள்ள மற்ற பெண்களும் அவரவர் துன்பங்களைச் சொன்னார்கள். எங்கள் தெரு காசியும், அவர் தம்பி சிங்கும், என் புருஷன் கொலை செய்யப்பட் து சம்பந்தமாக அவர்கள் பார்த்த விஷயங்களைச் சொன்னார்கள். ஆனால் சங்கரத் தேவரின் அண்ணன் மாடசாமித் தேவரும், அவருடைய நண்பருமான கோகுர்ராம், எம்.பி. அவர்களும் இட்டமிட்டு மத்திய மந்திரி அவர்களை எங்கள் ஊருக்கு கூட்டி வந்து மாடசாமித் தேவர் வீட்டில் விருந்து வைத்து தவறான ஒரு பத்திரிகைச் செய்தியைக் கொடுக்கச் செய்து விட்டார்கள். இது சம்பந்தமான அதிகாரிகள் விசாரணையை சரி வர நடத்த விடாமல் செய்து விட்டார்கள். போலீஸ் அதிகாரிகளும், ரெவின்யூ அதிகாரிகளும் எங்கள் கேஸ்களை சரியாக விசாரிக்காமல் வேண்டு மென்றே முன்னுக்குப் பின் முரண்பாடான தவறான ரிக்கார்டுகளை உண்டு பண்ணியிருக்கிறார்கள்".

143. சம்பவத்திற்கு தான் நேரடி சாட்சியாக இல்லையென்றும் மணியின் சடலம் மாட்டு வண்டி யிலிருந்து தனது வீட்டில் இறக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்ட நிகழ்ச்சிக்குப் பின்னர் உள்ள சம்ப வத்தைப் பற்றியே தான் பேசவதாகவும் கமிஷன் முன் ராஜசெல்வம் அளித்த உறுதிமொழிப் பத்திரத்தின் (சா. ஆ. ஏ. 1) மேற்சொன்ன நகலி லிருந்து தெளிவாகத் தெரிகிறது.

144. கமிஷன் முன் சாசி அளித்த (அ. த.சா. 3) உறுதிமொழிப் பத்திரத்தில் (சா. ஆ. ஏ. 19) தொடர்புடைய பகுதியை நகல் எடுப்பது அவசிய மாகிறது. மணியின்மீது கொலை செய்யும் அளவுக்குத் தாக்குதல் நடந்த நிகழ்ச்சிக்குத் தான் நேரடிச் சாட்சி என்று காசி அதில் கூறியுள்ளார்:—

"1980 செப்டெம்பர் மாதத்தில் மாலை சுமார் 5 மணிக்கு நானும், எனது தம்பி சிங்கும் சங்கனாங் குளம் சந்திரத் தேவர் வீட்டிற்கு மேற்புறமும், அவரது அண்ணன் சங்கரத் தேவர் வீட்டிற்கு பின்புறமும் உள்ள களத்தில் அடித்துப் போட்டி ருந்த கழிவு நெல் பதரை சங்கனாங்குளம் டி.ஏ.கே. செல்லதுரை தேவர் தோட்டத்திற்கு அள்ளிக் கொண்டு போவதற்கு வண்டியில் அள்ளிப்போட்டுக் கொண்டிருந்தோம். அப்போழுது சங்கரத்தேவர் என் ஊர் ராஜசெல்வத்தின் கணவர் மனுவேல் என்ற மணியை தலையில் பின்பக்கம் கழுத்தைப் பிடித்து தள்ளிக் கொண்டு அவர் வீட்டு பின்வாசல் வழியாக வந்தார். அவருடன் அவரது மகன் சின்னத்தம்பியும் வந்தார். அவரை நாங்கள் வேலை செய்து கொண்டிருந்த களத்திற்கு மேல் புறம் உள்ள சந்தில் கொண்டு போனார்கள். அவரு மனுவேல் என்ற மணியை நிறுத்திக் கொண்டு சங்கரத் தேவரின் சகோதரர்கள் இராமச்சந்திரன், சந்திரன் ஆகியோரை அங்கு வரும்படி கூப்பிட் டார். "செருக்கி பிள்ளையை கொல்லுங்க" பறப்பயல் இதுதான் சம்பளம் கேட்கும் லட்ச ணமா?" என்று சங்கரத் தேவர் சொல்லிக்கொண்டு மனுவேல் என்ற மணியின் முதுகில் கையால் அடித் தார். உடனே அவர் மகன் சின்னத் தம்பி, தம்பிகள் சந்திரத் தேவர், ராமச்சந்திரத் தேவர் ஆகியோரும் மனுவேல் என்ற மணியை மாறிமாறி கையால் அடித்தார்கள். மனுவேல் என்ற மணி வலி தாங்காமல் அலறினான். உடனே வள்ளி நாயகத் தேவா மகன் சண்முகத் சுந்தரத் தேவர், சித்திரைத் தேவர் மகன் பலவேசக் கண்ணுத் தேவர், அவர் மகன் சித்திரை ஆகியோர் வந்து மனுவேல் என்ற மணியை அடித்து நொறுக்கினார் கள், மனுவேல் என்ற மணி வலி பொறுக்க முடியாமல் கீழே விழுந்தான். அவனை சங்கரத் தேவர் இதோடு சரி பல எனறு நெஞ்சில் ஏறி மிதித்தார். மனுவேல் என்ற மணிக்கு பேச்சு மூச்சு இல்லாமல் போய் இறந்து விட்டான். உடனே சங்கரத் தேவர் மற்றவர்களைப் பார்த்து வண்டியில் போட்டுக் கொண்டு வாருங்கள் என்று சொன்னார். சண்முகசுந்தரத் தேவர் வண்டி யைப் போட்டுக் கொண்டு வந்தார். அவர்கள் செத்துக் கிடந்த மனுவேல் என்ற மணியின் பிணத்தை வண்டியில் தூக்கிப்போட்டு சங்கனாங் குளம் சேரிக்கு வண்டியுடன் போனார்கள். நானும், என் தம்பி சிங்கும் பதர்களை அள்ளி வண்டியை டி. ஏ. கே. செல்லத்துரை வீட்டின் பக்கத்தில் விட்டுவிட்டு பின்னால் எவ்ஸ் வீட்டிற்குப் போய் விட்டோம். வீட்டில் மனுவேல் என்ற மணியின் பிணம் அவன் வீட்டு முத்தத்தில் போடப்பட்டி ருந்தது. சங்கரத் தேவர் மனுவேல் என்ற மணியின் மனைவி ராஜசெல்வத்திடம் 'உன் புருஷன் மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்டான்' என்று சொல்லிக் கொண்டிருந்தார். அவளும் அவளது தாயார் ஜெபமணியும் நீங்கள்தான் கொன்று விட்டீர்கள் என்று சொல்லிக்கொண்டு அழுதார் கள். உடனே சங்கரத் தேவரும் மற்ற தேவர் களும் உங்களை என்ன செய்கிறேன் பார் என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். நாங்கள் அவர் கள் அடித்ததை நேரில் பார்த்ததினால் எங்களை ஏதாவது செய்து விடுவார்கள் என்று பயந்து பக்கத்து ஊர் சிவந்தியாபுரம் போய்விட்டோம் மறுநாள் காலையில் ஊருக்கு வந்தோம். முதல் நாள் இரவில் சங்கரத் தேவரும் அவரது ஆட்களும் மனுவேல் என்ற மணியின் உடலை எடுத்துக் கொண்டு போய் எரித்து விட்டதாகவும் கேள்விப் பட்டோம். ராஜசெல்வத்திடமும், அவளது அம்மாளிடமும் மனுவேல் என்ற மணியை சங்கரத் தேவர் வகையறா அடித்துக் கொன்ற விபரத்தைச் சொன்னோம். சங்கரத் தேவர் அவரது அண்ணன் வாலிபால் மா சாமித் தேவர், அவரது தம்பி கி.மு. ராமச்சந்திரத்தேவர், அவரது தம்பி சந்திரத் தேவர் இவர்கள் அனைவரும் பொல்லாதவர்கள். பணக்காரர்கள் அவர்களை எதிர்த்து அந்த ஊரில் நாங்கள் வாழமுடியாது. ஆகவே நாங்கள் உடனடி யாக அவர்களை எதிர்த்து அந்த ஊரில் வாழ முடியாது என்ற காரணத்தினால் இந்த விஷயங் களை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவில்லை. பல மாதங்கள் கழித்து எப்படியோ போலீஸ் அதிகாரி கள் நிசையன்வேளை இன்ஸ்பெக் ர், வள்ளியூர் ஏ.எஸ்.பி., சேரன்மகாதேவி ஆர்.டி.ஓ. மற்றும்

சில போர்கள் இது விஷயமாக விசாரித்தார்கள். அப்போது நானும், எனது தம்பி சிங்கும் நடந்த விபரங்களைச் சொன்னோம் ''.

145. கமிஷன் முன் தாக்கல் செய்யப்பட்ட இராஜசிங்கின் உறுதிமொழிப் பத்திரத்தை (சா. ஆ. ஏ. 25) நகல் எடுப்பது அவசியமில்லை. ஏனெனில் அவரது உறுதிமொழிப் பத்திரத்தில் உள்ள விவரங்கள் அவருடைய சகோதரர் காசி அளித்துள்ள உறுதிமொழிப் பத்திரத்தில் உள்ள விவரங்களைப் போன்றே உள்ளன.

146. காசி தனது உறுதிமொழிப் பத்திரத்தில் (சா. ஆ. ஏ. 19) என்ன சொல்லியுள்ளாரோ அதை ஒத்து அவர் வாய்மொழிச் சாட்சியத்தை அளித்துள்ளார். காசி, இராஜசிங் ஆகியோரின் கூற்றை ஏற்றுக்கொள்வதில் பல பிரச்சினைகள் உள்ளன.

147. ஆவண, வாய்மொழிச் சாட்சியத்தைக் குறிப்பாக ஆவண சாட்சியத்தைக் கவனமாக ஆராய்ந்ததன்பேரில் காசியின் கூற்றை நான் ஏற்றுக்கொள்ள இயலாது; அது முற்றிலும் பொய்யானது; ஏற்றுக் கொள்ள முடியாதது. தொடர்புடைய ஒவ்வொரு பகுதியிலும் அவர் பொய்யைக் கூறியுள்ளார். உண்மைக்கு மதிப்புக் கொடுக்காமல் எவ்வித தயக்கமும் இன்றி வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு கருத்துக்களைச் சொல்லக்கூடிய நபர் அவர் (காசி) என்ற ஒரு எண்ணத்தை விசாரணையின்போது நான் கொண்டுள்ளேன்.

148. சம்பவத்திற்குச் சில மாதங்கள் கழித்து காவல் துறை அதிகாரிகளும் ஏனைய அதிகாரிகளும், அதாவது கோட்டாட்சியர், சேரன்மாதேவி. காவல் துறை உதவி முப்பிரண்டு, வள்ளியூர் ஆசியோர் சங்கரநாராயணத்திற்கு வந்ததாகவும் அச் சமயத்தில் தானும் தன் சகோதரர் இராஜசிங்கும் உண்மையில் என்ன நடந்தது, தாங்கள் எந்த நிகழ்ச்சியைப் பார்த்தோம் என்பதை அதிகாரிகளுக்கு கூறியதாகவும், சங்கரத் தேவர் சாலையின் நாற்சந்திக்குள் விளக்குக் கம்பத்திற்கு அருகே மணி மரணம் அடையும் அளவிற்கு அடித்துக் கொலைத் தாக்குதலுக்குத் தாங்கள் நேரடி சாட்சிகள் என்றும் காசி தனது உறுதிமொழிப் பத்திரத்தில் (சா. ஆ. ஏ. 19) கூறினார். சம்பவத்திற்குத் தாங்கள் நேரடி சாட்சிகள் என்பது காசியும் இராஜசிங்கும் அதிகாரிகளிடம் கூறினார்களா என்பதும் அவர்கள் மணியை இறக்கும் அளவுக்கு அடித்ததாக சொல்லப்படுகிற காட்சியை கண்களால் பார்த்தார்களா என்பதும் முக்கியமான பிரச்சினையாகும்.

149. வடக்கு விஜயநாராயணம், கோட்டாட்சியர் முன்பு காசி அளித்த வாக்குமூலத்தை (சா.ஆ. ஏ. 20, நாள் 1980ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 16) அது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் நான் முதலில் குறிப்பிடுவேன். காசியின் வாக்குமூலம் முழுவதும் மேலே கொடுக்கப்பட்டுள்ளது :—

'' நான் டி. ஏ.கே.செல்லத்துரை பாண்டியன் வீட்டில் வேலை செய்கிறேன். என் அண்ணன் மணி சங்கரபாண்டியன் வீட்டில் வேலை பார்த்து வந்தார். சுமார் 6 மாதத்துக்கு முன் என் அண்ணன் மணியின் பிரேதத்தைக் கொன்று வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டு வந்தார்கள். இது சுமார் மாலை 4 மணி இருக்கும். சங்கர பாண்டியன் வண்டியில் போட்டு சங்கர பாண்டியனுடன் வண்டி வந்தது. பிரேதத்தைப் போட்டுவிட்டு போலீசு வரும் போலீசுக்கு பதில் சொல்லுங்கள் என்று அவர் ஏசினார். நாங்கள் பயந்து போய் ஒளிந்து கொண்டோம். அவர்கள் பிரேதத்தை எடுத்துக் கொண்டு போய், அவர்கள் கட்டு எரித்து விட்டார்கள். நாங்கள் காலையில்தான் வீடு வந்தோம். பெண்கள் தான் நடந்த விஷயத்தைக் கூறினார்கள், நிராம முன்சீப், சங்கர பாண்டியன் அவர்கூட சேர்ந்தவர்கள் ஒரு பத்து பேர் அங்கு இந்த வேலை செய்ததாகக் கூறினார்கள். இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு போலீஸில் இதுபற்றி வந்து விசாரித்தார்கள். ''நீ ஏதாவது மனு போட்டுவிட்டாயா '' என்றுகேட்டுக் கொண்டு என்னை அடிக்க வந்தார்கள். நான் பயந்து ஓடி விட்டேன். நீ இந்த ஊரில் இருக்கக் கூடாது ஓடிவிடு என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்கள். 15 நாட்கள் கழித்து என் மைத்துனன் வயது 11 ஜோசப் கிணற்றில் விழுந்து விட்டான். நீ இறங்கி எடு என்று சங்கர பாண்டியன் கூறினார். ''எடுத்து விடு'' நான் போலீசெல்லாம் சொல்லி ஆச்சி நீங்கள் போய் எடுத்து கட்டு விடுங்கள், நான் 10 மணிக்கு வருகிறேன் என்று அவர் கூறினார். நாங்கள் எல்லோரும் சுடுகாட்டுக்கு சென்று திருந்தோம். 10 மணிக்கு அவர் என் கொழுந்தியாள் வீட்டில் தலியாக இருந்தபோது அவரை அவர் கையை பிடித்து இழுத்திருக்கிறார். அந்தப் பெண் கூச்சல் போட்டுக் கொண்டு என் வீட்டுக்கு ஓடி வந்து விட்டாள். நான் வந்த பிறகு என்னிடம் இது சம்பந்தமாகக் கூறினாள். ''நான் வெளியே சொல்லி விடுவேன் '' என்று பயந்து ஆட்களை அழைத்துக் கொண்டு வந்து, என்னை அடிக்க வந்தார்கள். நான் அவர்களிடம் சிக்க வில்லை. பிசிசை பாண்டியன் என்பவர் அடிக்க வந்த ஆட்களில் ஒருவர் 7, 8 தடவை என்னை அடிக்க தேடி வந்தார்கள். நான் இவர்களைக் கண்டவுடனே மறைந்து விடுவேன். என் தம்பியிடம் என்னை வெட்ட வந்ததாகக் கூறுவார்கள். எங்களுக்குத் தருந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். பெண்களுக்கும் பாதுகாப்பும் தேவை படிக்கக் கேட்டேன். சரியாக இருக்கிறது. ''

150. காசியின் வாக்குமூலம் (சா. ஆ. ஏ. 20) மிகவும் எளிமையானது ; சுருக்கமானது ; இதில் பொருள் விளக்கம் கூற எந்தப் பிரச்சினையும் இல்லை.

151. மணியின் சடலம் மாட்டு வண்டியில் கொண்டு செல்லப்பட்டதைப் பார்த்ததாகமட்டுமே காசி தனது வாக்குமூலத்தில் கூறியுள்ளார். சங்கரத் தேவருக்குச் சொந்தமான மாட்டுவண்டியில் மணியின் சடலம் எடுத்துச் செல்லப்பட்டதைத் தான் பார்த்ததாகவும் ஆதி நிராவிடர் குடியிருப்புக்குச் சென்ற அந்த வண்டியில் பின்னர் சங்கரத் தேவர் வந்ததாகவும் அவர் தமது வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

152. நடந்த விவரங்களை அடுத்த நாள் தான் ஊர் திரும்பியதும் அங்கிருந்த பெண்கள் தம்மிடம் கூறியதாக இந்த வாக்குமூலத்தில் (சா. ஆ. ஏ. 20) காசி கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இந்த விவரங்களை தான் அப் பெண்களுக்குக் கூறியதாக இன்னொரு வாக்குமூலத்தில் அவர் கூறியிருப்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

153. காசி மாட்டு வண்டியில் நெற்பதரை ஏற்றிக்கொண்டிருந்தார் என்றும், சங்கரத் தேவர் மணியை தமது வீட்டின் பின்புறத்திலிருந்து தள்ளி

வந்ததை அங்கிருந்தே பார்த்தார் என்றும் சங்கரத் தேவரும் அவரது ஆட்களும் மணியை அடித்துச் சாகடித்ததைப் பார்த்ததாகவும் இந்த வாக்கு மூலத்தில் (சா. ஆ. ஏ. 20) அவர் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை.

154. மணியின் சடலம் அவரது வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது பற்றியே இந்த வாக்கு மூலத்தில் (சா. ஆ. ஏ. 20) காசி குறிப்பிடுகிறார். இந்த வாக்குமூலத்தில் காசி சொல்லி உள்ள தெல்லாம் உண்மையே என்று அவரின் சகோதரர் இராஜசிங் கோட்டாட்சியர் முன் மிகவும் சுருக்க மாக வாக்குமூலம் அளித்துள்ளார். (சா. ஆ. ஏ. 24).

155. நான்கு சாலைகளும் சந்திக்கும் இடத்தில் தெரு விளக்கின் அருகே மணி தாக்கிக் கொல்லப் பட்டதைக் காசியும் இராஜ சிங்கும் நேரில் பார்த் திருந்தால் அவர்கள் கோட்டாட்சியர், வட்டக்கு விஜயநாராயணத்தில் விசாரணை நடத்தியபோதே சொல்லியிருக்க வேண்டும். (சா. ஆ. ஏ. 19) என்ற தனது வாக்குமூலத்திலும் வாய் மொழி காட்சி யத்திலும் அவர் கொடுத்துள்ள முழு விவரங் களையும் கோட்டாட்சியர் நடத்திய விசாரணையில் கொடுத்திருக்கவேண்டும்.

156. கோட்டாட்சியரும் காவல் துறை உதவி சூப்பிரண்டும் நடத்திய விசாரணைகளில் காசி பெரும் பங்கு எடுத்துக்கொண்டார் என்பதையும் சாட்சியங்கள் பலவற்றில் காசி அத்தாட்சிக் கையொப்பம் இட்டுள்ளார் என்பதையும் கோட் டாட்சியர் காவல் துறை உதவி சூப்பிரண்டு ஆகியோர் நடத்திய விசாரணைகளில் ஆதி நிராவிடப் பெண்கள் வந்து சாட்சியம் அளிக்க இவர் பெரிதும் பொறுப்பாக இருந்ததையும் நான் ஏற்னவே குறிப்பிட்டுள்ளேன்.

157. அச் சமயத்தில் ஆதி நிராவிடர்களுக்குத் தேவர்களிடம் இருந்த அச்சம் அனைது விட்டது. 1980ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5ஆம் நாள் முதற்கொண்டு காவலர் பாதுகாப்பு இருந்தது. தேவர் வகுப்பினருக்கு எதிராக வெளிப்படை யாகச் சாட்சியம் அளிக்கும் தைியம் காசிக்கும் இராஜசிங்குக்கும் ஏற்பட்டு விட்டது.

158. கோட்டாட்சியர் நடத்திய விசாரணையில் வடக்கு விஜயநாராயணத்தில் 40 பேருக்கு மேல் கலந்து கொண்டிருந்தனர். மணி கொலையுண் டதைக் காசி, சிங் ஆகியோர் நேரடியாகப் பார்த் திருந்தால் அதுபற்றி அந்த விசாரணையில் அவர்கள் தாராளமாகச் சொல்லியிருக்கலாம்.

159. 1980ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5ஆம் நாளன்று சப்-இன்ஸ்பெக்டர் திருஞ்ஞசாமி அவர் களிடம் சம்பவம் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய புகார் ஒன்றை எழுத்து மூலமாகக் கொடுத்த தாகவும், 1980ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5ஆம் நாளுக்குப் பின்னர் தேவர் வகுப்பினரிடம் பயம் இருந்த நிலைமை மாறிவிட்டது என்றும் காசி ஒர் இடத்தில் சொல்லியுள்ளார். ஆதி நிராவிடர் களுக்கு தேவர் வகுப்பினரிடம் பயம் இருந்த நிலைமை இத் தேதிக்குப் பின்னர் மாறி விட்டது என்பதை நானும் குறிப்பிட்டுள்ளேன்.

160. மணியின் சடலம் சங்கரத் தேவரின் வண்டி யில் எடுத்துச் செல்லப்பட்டு சங்கரத் தேவரின் கட்டளைப்படி மணியின் வீட்டில் வைக்கப்பட்டது என்பதை மட்டும் தான் அவர் (சா. ஆ. ஏ. 20) தமது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். மணி சங்கரத் தேவராலும் அவரது ஆட்களாலும் அடித்துக்கொல்லப்பட்டதைத் தானும் தனது சகோதரர் சிங்கும் நேரடியாகப் பார்த்த முக்கிய மான தகவலை அவர் விசாரணையில் சொல்லாமல் விட்டுவிடுவதற்கான காரணம் ஏதுமில்லை. எனவே காசியும் சிங்கும் மணி கொலை செய்யப்பட்டதை நேரடியாக பார்க்கவில்லை என்பது இந்த வாக்கு மூலத்திலிருந்து தெளிவாகிறது.

161. காவல் துறை உதவி சூப்பிரண்டு முன்னர் காசி எவ்வித வாக்குமூலத்தையும் கொடுக்கவில்லை என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

162. இங்கு ஒரு விவரத்தை மீண்டும் சொல்ல வேண்டியுள்ளது. அதாவது காவல துறை உதவி சூப்பிரண்டு நடத்திய விசாரணையில் காசி பெரும் பங்கு வகித்தார்; சாட்சிகளை அவர்தான் விசாரணைக்கு அழைத்துவந்தார்; ஆதிநிராவிடர்கள் கொடுத்த வாக்குமூலங்களில் அவர் அத்தாட்சிக் கையெழுத்திட்டார்; குறிப்பாக கிரேஸ், இராஜ செல்வம், புஷ்பம், மஞ்சுளா ஆகியோர் கொடுத்த வாக்குமூலங்களில் இவர் அத்தாட்சிக் கையெழுத் திட்டுள்ளார் என்பதை இங்குக் குறிப்பிட வேண் டும்.

163. காவல் துறை உதவி சூப்பிரண்டு பெரிய அதிகாரி, சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜான் வின்சென்ட் திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்ட அலுவலில் நிகழ்த்திய உரைக்குப் பின்னர் காவல் துறை உதவி சூப்பிரண்டு சங்கரங் குளத்திற்குச் சென்றது மிகவும் முக்கியமான நிகழ்ச்சியாகும். ஆதி நிராவிட வகுப்பைச்சேர்ந்த மணி, தேவர் வகுப்பைச் சேர்ந்தவர்களால் கொலை செய்யப்பட்டார் என்ற குற்றச்சாட்டு உண்மையானதுதானா என்பதைக் கண்டறியவே அவர் இங்கு வந்தார். சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜான் வின்சென்ட் மேற்கு சங்கரங்குளம் கிராமத்திற்கு 24-9-1980 அன்று வந்ததற்கும் மணியை மூர்க்கத்தனமாகத் தேவர் வகுப்பினர் தாக்கிக் கொலை செய்து அவரது சடலத்தை உடனடியாக எரித்துவிட்டனர் என்ற குற்றச் சாட்டை 27-9-1980 அன்று திருநெல்வேலியில் நடந்த கூட்டத்தில் தமது உரையின்போது குறிப் பிட்டதற்கும் காசியே பொறுப்பானவர்.

164. மணி கொலை செய்யப்பட்டதைக் காசி நேரடியாகப் பார்த்திருந்தால் காவல் துறை உதவி சூப்பிரண்டு நடத்திய விசாரணையில் இதை ஏன் சொல்லவில்லை என்பது எனக்கு விளங்கவில்லை இதை எடுத்துக்கொண்டபோதிலும், அவர் வேண்டுமென்றே வேறு எந்த வாக்குமூலத்தையும் கொடுக்கவில்லை என்றும், பின்னர் அவியும் நேரிடின் பொருத்தமான நேரத்தில் வாக்கு மூலம் ஒன்றைத் தாம் கொடுக்கலாம் என்பதே அவரது நோக்கமாகும் என்றும் வழக்குரைஞர் திரு வெங்கடாச்சாரி அவர்கள் கூறியதில் சார முள்ளது என்று எனக்குத் தோன்றுகிறது. வேறு வகையில் சொன்னால் காவல் துறை உதவி சூப்பிரண்டு விசாரணை நடத்தியபோது காசி மேற்கொண்டு என்ன செய்வது, என்ன சொல்வது என்று நிட்டமிட்டுக்கொண்டிருந்தார் என்பதையும், வருங்காலத்தில் இது பற்றி விசாரணை செய்யப்படுகையில் தாம் என்ன பங்கு வகிக்க வேண்டும் என்பதை முடிவு செய்யாத

நிலையில் இருந்தார் என்றும் திரு. வெங்கடாச்சாரி சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

165. சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜான் வின்சென்ட் மாவட்ட ஆட்சியருக்குக் கொடுத்த புகாரும் கோட்டாட்சியர் காவல் துறை ரூப்பிரண்டு, துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல், காவல் துறை உதவி ரூப்பிரண்டு ஆகியோருக்கு அனுப்பிய நகல்களும் தெளிவாக உள்ளன. (சா.ஆ.ஏ. 66 நாள்: 25–9–1980) இது மிகவும் முக்கியமானதாகும். திராம முனிசீப் இராமச்சந்திரன்தான் மணியை அடித்துக் கொன்றார் என்று திரு. ஜான் வின்சென்ட் தனது புகாரில் நிட்டவட்டமாகக் கூறியுள்ளார். காசியின் சாட்சியம் முழுவதும் பொய் என்பதற்கு சா.ஆ.ஏ. 66 என்ற ஆவணமே ஆதாரமாகும் என்று திரு. வெங்கடாச்சாரி சொல்வதில் உண்மையிருக்கிறது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

166. திரு. ஜான் வின்சென்ட் சங்கனாங்குளம் திராமத்திற்குச் சென்றபோது ஆதி திராவிடர்கள் அவரிடம் மணியைக் கொன்றது இராமச்சந்திரன் என்று சொல்லியிருக்க வேண்டும். சங்கரத் தேவர் மணியைக் கொன்றார் என்று அவரிடம் சொல்லியிருக்க மாட்டார்கள். எனவே தான் அவர் தமது புகாரில் இராமச்சந்திரன் மணியைக் கொன்றார் என்று ஆனித்தரமாக சொல்லியிருக்க வேண்டும் என்று திரு. வெங்கடாச்சாரி வாதிட்டுள்ளார். இராமச்சந்திரன் மணியைக் கொன்றதாகச் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜான் வின்சென்ட் கூறியதிலிருந்தே மனி எப்படி இறந்தார் என்பது ஆதி திராவிடர் எவருக்கும் தெரியாது; ஒவ்வொரு விசாரணையிலும் ஒவ்வொரு மாதிரியாகச் சாட்சியம் அளிக்குமாறு அவர்களுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது திரு. வெங்கடாச்சாரியின் வாதமாகும். இந்த வாதத்தைத் தயங்காமல் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

167. காவல் துறை ரூப்பிரண்டு திரு. ஆர். இராஜகோபாலன் 1–10–1986 அன்று ஆதி திராவிடர் குடியிருப்புக்குச் சென்றது அடுத்த முக்கியமான நிகழ்ச்சியாகும். இவர் மிகவும் நுணுக்கமாகவும் விரிவாகவும் விசாரணை செய்தார். சாட்சிகள் பலரை விசாரணை செய்தார். அறிக்கை ஒன்றை அரசுக்கு அனுப்பினார். இந்த அறிக்கை மிகவும் தெளிவானது; உண்மை நிலையை எடுத்துரைக்கிறது.

168. காவல் துறை ரூப்பிரண்டு ஆதி திராவிடர்களிடம் மிகவும் பரிவாகவும், கனிவுடனும் நடந்து கொண்டார் என்பதை நான் விசாரணையிலிருந்து அறிகிறேன். ஆதி திராவிடர்கள் தேவர் சகோதரர்களைக் கண்டு அஞ்சி நடுங்கினார்கள் என்பதை அவர் நன்கு உணர்ந்து கொண்டார். ஆதி திராவிடர்களிடம் கனிவாகவும், பரிவாகவும் நடந்து கொள்வதாலேயே விசாரணையினால் எந்த விதமான பயனும் கிடைக்காது என்பதும், தேவர் வகுப்பினரிடம் இருந்த அச்சத்தினால் ஆதி திராவிடர் எவரும் தேவர்களுக்கு எதிராகச் சாட்சியம் சொல்ல முன்வர மாட்டார்கள் என்பதையும் உணர்ந்துகொண்ட அவர் தமது விசாரணையை மிகவும் கவனமாக நடத்தினார். ஆதி திராவிடர்களிடையே நம்பிக்கையை ஊட்டினார், இதனால் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் பெருமளவில் விசாரணைக்கு வந்து சாட்சியமளித்தனர்.

169. காவல் துறை ரூப்பிரண்டு நடத்திய விசாரணையில் பங்கு கொண்ட காசி, தானும் தன்னுடைய சகோதரரும் கொலை நிகழ்ச்சியை நேரடியாகப் பார்த்ததாகப் பின்னர் அவர் கூறிய விவரங்களைக் காவல் துறை ரூப்பிரண்டிடம் கூறவில்லை; இது வருந்தத் தக்கதாகும்.

170. தானும் தன்னுடைய சகோதரனும் நெற் பதர வண்டியில் ஏற்றிக்கொண்டிருந்தபோது, நான்கு சாலை சந்திப்பில் சங்கரத் தேவர் மணியை இழுத்து அடித்துச் சென்றதையும் அவர் கழுத்தில் ஏறி நின்று அழுத்தி அவரைக் கொன்றதையும் தானும், தன்னுடைய சகோதரர் சிங்கும் நேரடியாகப் பார்த்ததாகவும், பின்னர் சொன்ன தகவல்களை காசி காவல் துறை ரூப்பிரண்டிடம் வேண்டுமென்றே சொல்லவில்லை என்பதும் எனது கருத்தாகும்.

171. காசி கூர்மையான அறிவு படைத்தவர்; தந்திரமானவர்; மணி இறந்த சூழ்நிலை பற்றி விசாரணை செய்யக் காவல் துறை ரூப்பிரண்டு சங்கரநாங்குளம் திராமத்திற்கு வந்தபோது, ஆதி திராவிடர்கள் தேவர் வகுப்பினருக்கு அஞ்சி முழு விவரங்களையும் சொல்லவில்லை என்பதை அவர் அறிவார். இவர் மணி கொலையுண்டதை நேரடியாகப் பார்த்திருந்தால் அதுபற்றிய விவரங்களைக் காவல் துறை ரூப்பிரண்டிடம் சொல்லியிருப்பார். மணி தேவர் வகுப்பினரால் கொலை செய்யப்பட்டார் என்ற சுருக்கமாகச் சொல்லித் தமது வாக்குமூலத்தை முடித்துவிட்டார். காவல் துறை உதவி ரூப்பிரண்டு நடத்திய விசாரணையின்போது, எதுவும் சொல்லாதிருந்தது போல, இப்போதும் மவுனம் சாதித்தார்; இவர் தன் மனத்திற்குள் நிட்டங்கள் நிட்டி வந்தார் என்று தோன்றுகிறது. ஏனெனில் இந்த விசாரணையிலும் நிட்டவட்டமான ஒரு வாக்குமூலத்தை இவர் அளிக்கவில்லை. இவரது நடத்தை ஐயத்திற்கு இடமானது; சந்தேகத்திற்கு உரியதாகும். காவல் துறை ரூப்பிரண்டிடம் விவரங்களை கூறத் தவறியதன் காரணமாகக் காசியின் சாட்சியம் பொய்யானது; நடந்தது என்று கூறி இவரது சாட்சியத்தைத் தள்ளிவிடுகிறேன்.

172. காவல் துறை ரூப்பிரண்டு தன்னுடைய பணியைச் செவ்வனே முடித்த போதிலும், காசி ஒத்துழைக்காததால் காவல்துறை ரூப்பிரண்டு அறிக்கை ஒன்றை அனுப்புவதைத் தவிர வேறு எதையும் செய்ய முடியவில்லை. மணியின் சடலம் தேவர் வகுப்பினராலும், ஆதி திராவிடர்களாலும் சேர்ந்து எரிக்கப்பட்டது என்பது என்னுடைய முடிவாகும். காவல் துறை ரூப்பிரண்டும் இதே முடிவைத் தெரிவித்துள்ளது கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இவரது அறிக்கை மிகவும் நுட்பமானது. நிலைமையைத் திறமையாகவும் விவேகத்துடனும், கையாண்டு இவர் ஆதி திராவிடர்களிடையே இருந்த அச்சத்தை அகற்றினார் என்பதையும் நான் இங்கே குறிப்பிட வேண்டும்.

173. காசி தமிழக முதல்வருக்கு அனுப்பிய மனு பற்றி நான் அடுத்துக் கூற விரும்புகிறேன். (சா.ஆ.ஏ. 129; நாள் 15–10–1980) இது மிகவும் முக்கியமான ஆவணமாகும். காசி தன்னுடைய முந்தைய வாக்குமூலத்திலும் (சா. ஆ.ஏ. 19.) கமிஷன் முன் அளித்த வாக்குமூலத்திலும் காசி கூறியுள்ளது முழுவதும் பொய் என்பதும், காசி பழி பாவத்திற்கு அஞ்சாதவர் என்றும் உண்மைக்கு மதிப்பு கொடுக்காதவர் என்னும் அவரது சாட்சியத்தைக் கருத்தில் கொள்ள முடியாது என்பதும் தமிழக முதல்வர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட மனுவிலிருந்து தெரியவருகிறது. இந்த மனுவில்

மூன்றாவது பத்தியில் கண்டுள்ளதை மேலே கொடுத்துள்ளேன்.

''3 : சுமார் ஒராண்டிற்கு முன்னர் ஆதிநாராயண வகுப்பைச் சேர்ந்த சுடலை என்பவரின் மகன் மணி என்பவர் சங்கரத் தேவரிடம் நான்கைந்து மாதங்களாகப் பணி செய்து வந்தார். சுமார் 7 மாதங்களுக்கு முன்னர் மணி வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது அவரின் மனைவி அவருக்கு உணவு எடுத்துச் சென்றார். அங்கிருந்த சங்கரத் தேவர் மணியை சிகரெட்டை வாங்கி வரும்படி அனுப்பிவிட்டு மணி போனவுடன் அவரது மனைவிக்குத் தொந்தரவு கொடுத்தார். மணி திரும்பியதும் தமது மனைவி அழுதுகொண்டிருப்பதைப் பார்த்தார். மனைவி கற்பழிக்கப்பட்ட விவரத்தை, அவரிடமிருந்து தெரிந்து கொண்டார். வேறு எந்த வேலையும் செய்யாமல் இருவரும் வீடு திரும்பினர். சங்கரத் தேவரிடம் உள்ள பயம் காரணமாக அவர் இந்த விவரத்தை கிராம முன்சீப்பிடம் (முன்றாவது எதிர் மனுதாரர்) கூறவில்லை. அன்று மாலையில் மணி இரண்டாவது எதிர் மனுதாரராகிய சங்கரத் தேவரிடம் சென்று தான் வேலை செய்த நாட்களுக்குச் சுூலியை கொடுக்கும் படி அவரைக் கேட்டார். இதனால் சங்கரன் கோபமடைந்தார். அவரும் மற்றவர்களும் மணியைத் தாக்கினார்கள். மணி அந்த இடத்திலேயே இறந்துவிட்டார். அவரது உடலை ஒரு வண்டியில் வைத்து சடலத்தை மணியின் வீட்டில் வைத்தார்கள். மணி தற்கொலை செய்துகொண்டதாக அவரது மனைவியிடமும், ஏனையோரிடமும் சொன்னார்கள். பின்னர் 15 தேவர்களும் அவர்களது முடிருந்தபவரும், சாமி என்பவரது மகன் மாடசாமி என்ற முடிருந்துபவரும் சங்கரத் தேவர் சுட்டலையில் மணியின் சடலத்தைப் புதைத்தனர். அடுத்த நாள் சங்கரத் தேவர் மணியின் வீட்டிற்குச்சென்று அவரது மனைவியின் பொன் தாலியைப் பிடுங்கிக்கொண்டார். அதைத் தவிர மணியின் இறுதிச் சடங்குகளுக்கான செலவை ஈடு செய்யும்பொருட்டு மணியின் வீட்டிலிருந்து 4 மூட்டை நெல்லையும் எடுத்துச் சென்றார். மூன்றாவது எதிர் மனுதாரரும் தம்மைத் துன்புறுத்துவார் என அஞ்சிய மணியின் மனைவி கிராமத்தை விட்டுச் சென்றார். இந்த விவரம் கிராமத்தினர் அனைவருக்கும் தெரிந்த போதிலும் கிராம முன்சீப் உட்பட எதிர் மனுதாரர்கள் பொல்லாதவர்களாக இருந்ததன் காரணமாக காவல் துறையினர் அவர்களுக்கு உதவியாக இருந்ததாலும் எவரும் புகார் செய்யவில்லை.''

174. மணி முற்றிலும் வேறுபட்ட சூழ்நிலையில் சங்கரத் தேவரினால் கொலை செய்யப்பட்டார் என்றும் அக்கொலையைத் தான் நேரில் கண்டதாகவும், மேற்குறிப்பிட்ட மனுவில் காசி கூறுகிறார். அதாவது சங்கரத் தேவரின் வீட்டில் மணி தாக்கப்பட்டார் என்று பொருள்பட இந்த மனுவில் குற்றம் சாட்டியுள்ளார். சா.ஆ.ஏ. 129-ன் 3-வது பத்தியில் காசி சொல்லியுள்ளது மிகவும் தெளிவாகவும் நிட்டவட்டமாகவும் நேரடியாகவும் உள்ளது. வேறு வகையில் சொன்னால் சங்கரத் தேவரின் வீட்டில் சங்கரத் தேவருக்கும் மணிக்கும் இடையே மணியின் சம்பளம் பற்றி வாய்ச் சண்டை ஏற்பட்டு மணி அடித்துக் கொல்லப்பட்டார். அதாவது சங்கரத் தேவரின் வீட்டிலேயே தாக்கப்பட்டு அந்த இடத்திலேயே இறத்தார் என்று தெளிவாகவும், நிட்டவட்டமாகவும் கூறுகிறார்.

175. சங்கரத் தேவர் தமது வீட்டிலேயே மணியைக் கொலை செய்தார் என்ற பொய்யான வழக்கு ஒன்றைத் தொடுக்க காசி இதற்குள் நிட்டமிட்டார். அதாவது 15–10–1980-க்கு முன்னர் இவர் இவ்வாறு நிட்டமிட்டார். சா.ஆ.ஏ. 129-ல் கொடுக்கப்பட்டுள்ள வாக்குமூலம் மாரி சங்கரத் தேவரின் வீட்டின் பின்புறத்திலிருந்து தெரு விளக்கு வரையில் இழுத்துச் செல்லப்பட்டு அங்கு அடித்துக் கொல்லப்பட்டார் என்ற வாக்குமூலத்திற்கு முற்றிலும் முரணாக உள்ளது. இந்த இரு வாக்குமூலங்களும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளன. ஒன்றுக்கொன்று அடிபட்டுப் போகிறது. சா.ஆ.ஏ. 129-ல் உள்ள வாக்குமூலம் காசி கமிஷன் முன் கொடுத்த வாய்மொழிச் சாட்சியத்திற்கு முற்றிலும் முரணாக இருப்பதோடு அவரது வாய்மொழிச் சாட்சியத்தை அடியோடு தகர்த்து விடுகிறது.

176. காசியின் நிட்டங்கள் 22–10–1980 நாளிட்ட சா.ஆ.ஏ. 38 என்ற மனுவில் வெளியாகின்றன. இது இராஜசெல்வம் தமிழக முதல்வருக்கு அனுப்பிய ஒரு மனுவாகும். சங்கரத் தேவரும் அவரது ஆட்களும் மணியை அடித்துக் கொன்றதைக் கண்கூடாகப் பார்த்ததாகக் காசியும் இராஜசிங்கும் தன்னிடம் சொன்னார்கள் என்று முதன் முறையாக இந்த மனுவில்தான் இராஜ செல்வம் குறிப்பிடுகிறார். காசியின் அடுத்த நிட்டம் இதிலிருந்து தெளிவாகிறது. மணி சங்கரத் தேவரினால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டதைத் தாங்கள் நேரில் பார்த்ததாக சாட்சிய மளிக்க அவர் நிட்டமிட்டுவிட்டார். இராஜ செல்வத்தின் மனுவில் குறிப்பிட்ட பகுதி மேலே கொடுக்கப்பட்டுள்ளது :—

''இதற்குப் பின் என் கணவர் எப்படிச் சென்றார் என்ற விபரத்தை எங்கள் காலனியைச் சேர்ந்த பெருமாள், குமாரர்களான காசி-1 திங்-2 ஆகியவர்கள் என் கணவரை, சங்கரன் குளத்தில் வைத்து, சங்கரத் தேவர், அவர் தம்பிகளான ராமச்சந்திர தேவர், சந்திர தேவர், அவர் மகன் சின்னத்தம்பித் தேவர் மற்றும் அவர் வயதைரா ஆட்களும் சேர்ந்து அடித்துக் கொலை செய்ததை நேரில் கண்டதாக என்னிடம் சொன்னார்கள்.''

177. சங்கரத் தேவர் மணியை மிருகத்தனமாகத் தாக்கி கொலை செய்ததைக் காசி தன் கண்களால் பார்த்தாக மறுநாள் தம்மிடம் சொல்லியதாக இராஜசெல்வம் மாவட்ட ஆட்சியர் முன்விலையில் 1–12–1980 அன்று கொடுத்த வாக்குமூலத்தில் (சா.ஆ.ஏ. 39) கூறியுள்ளார்.

178. சங்கரத் தேவரால் மணி கொலை செய்யப்பட்டதை தானும் தன்னுடைய சகோதரர் இராஜசிங்கும் நேரில் பார்த்ததாகச் சாட்சியம் அளிக்க காசி முடிவு செய்துவிட்டதையே இந்த வாக்குமூலம் தெரிவிக்கிறது.

179. ஆவண சாட்சியங்களிலிருந்தும் காசி முக்கியமான விசாரணைகளில் நடந்துகொண்ட விதத்திலிருந்தும் காசியின் வாக்குமூலம் முற்றிலும் பொய்யானது என்பதும் அவரும் அவரது

சகோதரர் இராஜசிங்கும் நேரடி சாட்சிகள் அல்ல என்பதும் தெரியவரும்.

180. காசி, இராஜசிங் ஆகியோர் என் முன் அளித்த வாய்மொழிச் சாட்சியத்தை இப்பொழுது பார்ப்போம். இவர்களின் சாட்சியம் உண்மை என்று எனக்குப் படவில்லை. இவர்கள் சாட்சியம் செயற்கையானது; உண்மையை நிரூத்துச் சொல்லப்பட்டது; முரண்பாடுகள் நிறைந்தது. உண்மை என்பது என்ன என்பதை இரண்டு சகோதரர்களுமே அறியாதவர்கள்; சரளமாகப் பொய் சொல்பவர்கள். கொலையைக் கண்கூடாகப் பார்த்த பிறகு இருவரும் இராஜசெல்வம் வீட்டிற்குச் சென்றதாகவும், இராஜசெல்வமும் அவர் தாய் ஜெபமணியும் அழுதுகொண்டிருந்ததைப் பார்த்த தாகவும், அவர்களிடம் எதுவும் கூறாமல் நேரடியாகச் வெந்திபுரம் சென்றதாகவும், மறுநாள் காலையிலேயே சங்கனாங்குளம் திரும்பியதாகவும் அதன் பின்னரே கொலையைப் பற்றி இராஜசெல்வத்திடம் கூறியதாகவும் இவர்கள் தங்கள் வாக்குமூலத்தில் குறிப்பிடுகின்றனர். அருமையான கட்டுக்கதை. கட்டுக்கதையிலும் நம்ப முடியாத அளப்புக் கதை. தேவர் சகோதரர்களிடம் தங்களுக்கு இருந்த அச்சம் காரணமாக வெந்திபுரத்திற்கு ஓடிவிட்டதாகவும், அதனால் தான் கொலையைத் தாங்கள் கண்கூடாகப் பார்த்ததை இராஜசெல்வத்திடம் சொல்ல முடியவில்லை என்றும், இவர்கள் கூறியுள்ளதை என்னால் ஏற்க முடியவில்லை; இக்கதை நகைப்பிற்கிடமானது; நம்ப முடியாதது. கற்பழிக்கப்பட்ட தாசச் சொல்லப்படும் எழுவரும் காசியின் நெருங்கிய உறவினர்கள்; பொய்ச் சாட்சியம் சொல்லும்படி காசியினால் தூண்டப்பட்டவர்கள். எனவே காசியின் சாட்சியம் நம்பமுடியாதது.

181. சங்கனாங்குளத்திற்குகே வேறு கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களில் ஆதி திராவிடர்கள்: கோனார்கள்; முகலிம்கள் ஆகியோர் ஏராளமாக உள்ளனர். மணியின் சடலம் மாலை 6 மணியிலிருந்து இரவு 10 மணி வரை இராஜசெல்வத்தின் வீட்டில் வைக்கப்பட்டிருந்தால், அச்செய்தியைப் பக்கத்திலுள்ள கிராமங்களில் பரப்பி மணி கொலையுண்டதைப் பற்றி பிரச்சாரம் செய்து பெரியதொரு கூட்டத்தையே கூட்டியிருக்கலாம். மக்கள் திரண்டு எழுந்திருந்தால் காவல் படையினர் உடனே அங்கு வந்திருப்பர்; தேவர் வகுப்பினர் குற்றம் புரிந்திருந்தால் அவர்கள் உடனே தப்பி செய்யப்பட்டிருப்பர். அண்மையிலுள்ள கிராமங்களில் 200-க்கும் மேற்பட்ட ஆதி திராவிடர்கள் வசிக்கின்றனர். மணி கொலை செய்யப்பட்டதைக் காசி நேரில் பார்த்திருந்தால் அவர் எளிதில் இச் செய்தியைப் பரப்பி அனைவரையும் அழைத்து வந்து மணி அடிபட்டு இறந்து கிடப்பதை அவர்களே நேரில் பார்க்கும்படி செய்திருக்கலாம். அவ்வாறு செய்திருந்தால், மக்கள் கூட்டத்தில் எழுச்சியை எளிதில் அடக்க முடியாது. தேவர் சகோதரர்களையும் கையும் களவுமாகப் பிடித்திருக்கலாம். காவல் படையினரும் உடனடியாக அங்கு விரைந்து சடலத்தை கைப்பற்றியிருப்பர்.

182. சங்கனாங்குளத்திற்கு அருகேயுள்ள கிராமங்களுக்கும் நிசையன் விளைக்கும் இடையே அடிக்கடி பேருந்துகள் ஓடுகின்றன என்பதை அனைவரும் அறிவர். காசி மதிநுட்பம் நிறைந்தவர்; எனவே அவர் விரும்பியிருந்தால் நிசையன் விளைக்கு ஓடி அங்குள்ள காவல் நிலையத்தில் புகார் செய்திருக்கலாம். வடக்கு விஜயநாராயணம் சங்கனாங்குளத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. எனவே காசி வடக்கு விஜயநாராயணத்திற்கு ஏன் செல்லவில்லை என்பதும், காவல் துறை அதிகாரிகள் இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கும் வகையில் ஏன் புகார் செய்யவில்லை என்பதும் எனக்குப் புரியவில்லை. மணி கொலையுண்டதை தான் நேரடியாகப் பார்த்ததாகவும், மணியின் உடல் அவரது வீட்டில் கிடப்பதாகவும் காவல் துறை அதிகாரி எவரிடமாவது காசி கூறியிருந்தால் காவற் படையினர் கட்டாயம் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுத்திருப்பார்கள்.

183. பரப்பாடியிலும், விஜயநாராயணத்திலும் அருகிலுள்ள கிராமங்களிலும் ஒரு தந்தி அலுவலகம் இருக்கிறது. இந்த அலுவலகத்திலிருந்து காசி நிசையன்வினை காவல் நிலையத்திற்கு எளிதில் தந்தி ஒன்றை அனுப்பி இருக்க முடியும்.

184. மணி கொலையுண்டது பற்றி தானும் இராஜசெல்வமும் 5—8—1980 அன்று சங்கனாங்குளத்தில் சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமியிடம் புகார் செய்ததாகவும் சப்-இன்ஸ்பெக்டர் அவர்களது புகாரினை எழுதிக்கொண்டு தங்களது கையெழுத்துக்களை அவற்றில் பெற்றுக்கொண்டார் என்றும், காசி கூறியுள்ள சாட்சியம் முழுவதும் பொய்; காவல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள பொதுக்குறிப்பேடு, ஏனைய ஆவணங்கள் ஆகியவற்றில் இத்தகைய புகார் காணப்படவில்லை. காசி காவல் நிலையத்தில் இத்தகைய புகார் கொடுத்திருந்தால், அவர் அப்புகாரை அதோடு விட்டிருக்க மாட்டார்; மேற்கொண்டும் நடவடிக்கை எடுத்திருப்பார். இதுபற்றி மௌனமாக இருந்திருக்க மாட்டார். காவல் நிலையத்தில் 5—8—1980 முன்னர் புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்பதில் எனக்கு ஐயமில்லை. அத்தகைய புகார் கொடுக்கப்பட்டிருந்தால், காசி அது தொடர்பாக மேற்கொண்டும் நடவடிக்கை எடுத்து வழக்குரைஞர்களின் உதவியுடன் மேலதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருப்பார். சப்-இன்ஸ்பெக்டர் தம் புகார் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை மேலதிகாரிகளிடம் சொல்லியிருப்பார். எனவே காசியின் வாய்மொழிசாட்சியம், முழுவதும் பொய்யானது அவருடைய சுற்றளையில் தோன்றியதாகும்.

185. காசியின் சாட்சியம் முழுவதும் பொய்யானது; நம்ப முடியாதது என்பதை நிரூபிக்கவே இந்த விவரங்கள் எல்லாம் நான் எடுத்து எழுதியுள்ளேன். மணி கொலையுண்டபோது சாலை சந்திப்பில் ஏழு பேர் இருந்தனர் என்று காசி ஒப்புக்கொள்கிறார். அங்கு ஏழு பேர் இருந்திருந்தால் அவர்களில் எவரேனும் ஒருவராவது மணியிடம் கருணை காட்டி அதில் தலையிட்டிருப்பார் அல்லது அக்கொலையைப்பற்றி காவல் நிலையத்திற்குச் செய்தியாவது கொடுத்திருப்பார். சங்கரத் தேவர் மணியைத் தாக்கி கொலை செய்ததை நேரடியாகப் பார்த்திருந்தால் அந்த ஏழு எட்டு நபர்களையாவது விசாரித்து இருக்கலாம்.

186. மணி கொலை செய்யப்பட்டதைத் தாம் நேரில் பார்த்ததாக சவ விசாரணையிலும் காசி கூறவில்லை. (சா. ஆ. ஏ. 21 நாள்—14—11—1980) என்பதை தேவர் சகோதரர்களின் வழக்குரைஞராள திரு வெங்கடாச்சாரி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

187. சங்கரத்தேவர் மணியைத் தாக்கி கொலைச் செய்ததைக் காசி, இராஜசிங் ஆகியோர் நேரில் பார்த்ததாகக் கூறப்படுவதைப் பொறுத்த

வரையில் நான் ஒன்று சொல்வேன் ; 19—5—1981 அன்று சங்கனாங்குளத்திற்கு நான் நேரில் சென்றேன். சங்கரத் தேவரின் வீட்டில் பின் புறத்தை நான் நோட்டம் பார்த்தேன் ; வீட்டின் பின்புறத்தில் முட்புதர்கள் நிறைந்துள்ளன. முட் புதர் நிறைந்த இந்த இடத்தைத் தெரிந்தெடுத்து சாலைகள் சந்திக்கும் இடத்தில் பலர் கூடியிருக்கும் சமயத்தில் மணியை அடித்து கழுத்தில் ஏறி மிதித்து அவரைக் கொன்றிருப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை. இது பற்றி எனது ஆய்வுக் குறிப்புகளிலும் நான் குறிப்பிட்டுள்ளேன்.

188. கொலை நடந்த இடத்திற்கும் காசி நெற்பதரை ஏற்றிக் கொண்டிருந்த இடத்திற்கும் இடையே குறைந்தது 200 அடி தொலைவு இருக்கலாம் என்று நான் குறிப்பிட்டுள்ளேன். களத்தில் அருகே நிற்பவர் ஒருவர் 200 அடிக்கப்பால் மேடு விழுந்து இடக்கும் மணியைப் பார்க்க முடியுமா ? சங்கரத்தேவர் மணியின் கழுத்தில் ஏறி மிதித்து அவரைக் கொல செய்வதைப் பார்க்க இயலுமா ? என்பதைக் கண்டறிய நான் நேரடியாக முயன்று பார்த்தேன். 200 அடி தொலைவில் என்ன நடக்கிறது என்பதைக் கண்டறிவது மிகவும் கடினம் என்பதை நான் கண்கூடாகத் தெரிந்து கொண்டேன்.

189. 200 அடி தொலைவில் இருந்து ஒருவரது கூக்குரலை கேட்க முடியுமா என்பதையும் கண்டறிய நான் நடவடிக்கை எடுத்தேன். மணி கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் இடத்தில் நான் நின்று கொண்டேன். காசியும் இராஜ கிங்கும் நெற்பதர் ஏற்றிக் கொண்டிருந்ததாக சொல்லப்படும் இடத்தில் காசியை நிற்கவைத்தேன். நான் நின்றுகொண்டிருந்த இடத்தில் இருந்து உரக்கக் கூவினேன். நான் சொன்னதைக் காசியால் கேட்க முடியவில்லை. ஒரே ஒரு முறை நான் மிகவும் உரக்கச் சில சொற்களைச் சொன்னேன். அவைதான் காசியின் காதில் விழுந்தது. எனவே களத்தின் அருகே நின்ற ஒருவர் நான்கு சாலை சந்திப்பிலிருந்து வரும் கூக்குரலைக் கேட்க முடியாது என்பதும், மேடு விழுந்து கிடக்கும் எதையும் பார்க்க முடியாது என்பதும், நான் சோதனையின் மூலம் கண்கூடாகத் தெரிந்து கொண்ட விவரமாகும்.

190. நான்கு சாலைசந்திப்பில் நடந்ததை தான் கண்டதாகவும், மணியின் கூக்குரலைத் தான் கேட்டதாகவும் காசி சொல்வதை ஏற்க முடியாது. எல்லாவற்றையும்விட கொலை நடந்ததாக சொல்லப்படுகிறும் இடத்தில் கொலை நடந்திருக்கவே முடியாது. இது மக்கள் நடமாடும் பொது இடமாகும். இந்த இடத்தில் சங்கரத் தேவர் மணியைக் கொலை செய்திருப்பார் என்பது இயலாத ஒரு காரியமாகும். நாலாப் பக்கங்களிலும் வீடுகள் நிறைந்த இடம் ; மக்கள் நடமாடிக் கொண்டிருக்கும் இடம் ; எனவே மக்கள் நடமாடிக் கொண்டிருக்கும் இந்த இடத்தை மணியைக் கொலை செய்வதற்கு சங்கரத்தேவர் தெரிந்தெடுத்திருப்பார் என்று சொல்வது நகைப்பிற்கிடமாகும். கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் இடத்தினருகே உள்ள கிணற்றிலிருந்து மக்கள் எப்போதும் தண்ணீர் எடுத்து கொண்டிருப்பதை நான் பார்த்தேன். இவற்றை எல்லாம் கருதும்பொழுது காசியின் வாக்குமூலம் நம்பமுடியாதது ; முற்றிலும் பொய்யானது.

191. இராஜசிங் சாட்சியத்தை விரிவாக விவாதிக்க வேண்டியது அவசியமில்லை. மணி கொலை செய்யப்பட்டதைத் தாமும் நேரடியாகப் பார்த்ததாக இவர் கூறுகிறார். இவரது சாட்சியமும், காசியின் சாட்சியம் போன்றே அமைந்துள்ளது. சிவந்தியாபுரம் ரோமத்தில்150 ஆதி நிராவிடர்கள் இருப்பதாக இவர் ஒப்புக்கொள்கிறார். இவர்கள் கூறுவதுபோல் மணி உண்மையில் கொலை செய்யப்பட்டிருந்தால் இவர்கள் எளிதில் சிவந்தியாபுரம் சென்ற அங்குள்ள ஆதி நிராவிடர்களைத் திரட்டி வந்திருக்கலாம். சிவந்தியாபுரத்திலிருந்து திசையன்விளை ஊருக்குக் காலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையில் அரை மணிக்கு ஒருமுறை பேருந்து இருப்பதாக சிங் ஒப்புக் கொள்கிறார்.

192. கொலை நடந்த இடத்தில் வசிக்கும் பலர் தங்களது வீடுகளிலிருந்து இக் கொலையைப் பார்த்துக்கொண்டிருந்ததாகச் சிங் கூறுகிறார். ஆனால் மணி மிருகத்தனமாக தாக்கப்பட்டபோதும் அவர் கதறியபோதும் எவரும் மனிதர்களோ, மனிதாபிமானமோ காட்டாமல் இதில் தலையிடாமல் பார்த்துக் கொண்டு இருந்தார்கள் என்பது அவரது வாக்குமூலமாகும். இவரது சாட்சியம் முற்றும்பாடுகள் நிறைந்தது ; முழுவதும் பொய்யானது. காசியின் வாக்குமூலத்தைவிட மோசமானது.

193. ஸ்டாலின் என்பவருடைய சாட்சியத்தை அடுத்ததாக எடுத்துக்கொள்வோம். மணி கொலை செய்யப்பட்டதைத் தாமும் நேரில் பார்த்ததாக இவர் கூறுகிறார். நான்கு சாலை சந்திப்பில் சங்கரத்தேவரும், அவருடைய ஆட்களும் மணியை அடித்துக் கொன்றதைக் கந்தையாத் தேவரின் வீட்டு மாடி வராண்டாவிலிருந்து தான் பார்த்ததாக இவர் கூறுகிறார். இவரது வாக்கு மூலம் (சா. ஆ. ஏ 34) பொய்யானது என்பதற்கு ஆயிரத்தாயான ஆதாரங்கள் உள்ளன.

194. ஸ்டாலின் சங்கரத்தேவரின் சகோதரராவ ரோம முன்சீப் இராமச்சந்திர தேவரிடம் 15 ஆண்டுகளுக்கு மேலாகப் பணி புரிந்து வந்தார். இவரது மாதச் சம்பளம் ரூ. 200. ஏதோ கருத்து வேறுபாடு காரணமாக இவர் இராமச்சந்திரத் தேவரிடம் பணியிலிருந்து 21—9—1980 அன்று விலகினார்.

195. கொலை நடந்ததாகச் சொல்லப்பட்ட நாளன்று அதாவது 31—3—1980 அன்று ஸ்டாலின் இராமச்சந்திரத் தேவரிடம் பணியில் இருந்தார். கமிஷன் முன் இவர் தாக்கல் செய்த வாக்கு மூலத்தில் (சா. ஆ. ஏ. 34) கூறப்பட்டுள்ளதாவது :

" ஏனக்கு சொந்த ஊர் சங்கனாங்குளம். நான் சுமார் 15 வருடங்களாக ராமம முன்சீப் இராமச்சந்திரன் வீட்டில் வேலை பார்த்தேன். சுமார் 9மாத காலமாக வேலையை விட்டுவிட்டேன். நான் ஷியார் அண்ணன் தம்பிமார்கள் கூப்பிட்டாலும் வேலை பார்ப்பேன். சுமார் 9 மாதங்களுக்கு முன் போன வருஷம் சுமார் மாலை 4-30 மணிக்கு சங்கரத்தேவர் வீட்டில் மாதச் சம்பளத்திற்கு வேலை பார்த்துவந்த மனுவேல் என்ற மணியை சந்திரத்தேவர் வீட்டிற்கு கிழ்புறம் உள்ள தெருவில் வைத்து சங்கரத்தேவர், ஷியார் மகன் சின்னத்தம்பி, சித்திரைத்தேவர் மகன் பலவேசக் கண்ணு, அவர் மகன் சித்திரை, வள்ளிநாயகத் தேவர் மகன் சண்முகசுந்தரம், சங்கரத்தேவர் தம்பிகள், இ. மு. ராமச்சந்திரன், சந்திரசேகரத் தேவர் இவர்கள் அடித்தார்கள். அவன் ஐயோ என்று விழுந்தான். எல்லோரும் மிதித்தார்கள். அடித்தார்கள். நான் பாண்டித்தேவர் வீட்டு மச்சில் ராமச்சந்திரத் தேவர் புழுங்கலை கூட்டி அள்ளிக் கொண்டிருந்தேன். காசியும், அவன்

தம்பி சிங்கும் கீழ்புறமாக நின்றார்கள். நான் ஒகாஞ்சம் பொருத்துப் பார்க்கும்போது ஷெயாரை பிரேதமாக வண்டியில் எடுத்துச் சென்றார்கள். இதை நான் வெளியில் சொன்னதால் என் அம்மாவை இரண்டு தடவையும் என்னை ஒரு தடவையும் அடித்தார்கள். இது சம்பந்தமாக போலீஸில் இரண்டு கேஸ்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். நான் எல்லா விசாரணை அதிகாரிகளிடமும், இதைப் பற்றி தெரியப்படுத்தியிருக்கிறேன். ஆர். டி. ஓ. வரையிலும் சொல்லியிருக்கிறார்கள். என்னையும் அப்பா அம்மாவையும் தாக்கினார்கள் .. .. .. ''

196. மணி கொலை செய்யப்பட்டபோது தான் பாண்டியத்தேவரின் வீட்டில் (இச்சந்தர்ப்பத்தில் கந்தையா தேவர் வீடு டி.பி.யூ. 8)மாடியில் புழுங்கல் நெல்லை குவித்துக் கொண்டிருந்த தாகவும், அச்சமயத்தில் ஏதோ கூக்குரல் கேட்டு அறையிலிருந்து வராண்டாவிற்கு வந்ததாகவும், வராண்டாவின் வலப்புறத்திலிருந்து சாளரம் வழியாகப் பார்த்ததாகவும், சங்கரத்தேவரும் அவரது ஆட்களும், மணியை அடித்துக் கொண்டிருந்ததை தான் பார்த்ததாகவும், பிழக்குப் பக்கத்தில், அதாவது களம் உள்ள இடத்தில் காரியும், இராஜ சிங்கும் அங்கு நின்று கொண்டிருந்ததையும் தான் பார்த்ததாகவும் இவர் தம் வாக்குமூலத்தில் கூறுகிறார். சம்பவம் நடந்த இடத்திலிருந்து 200 அடி தொலைவில் பிழக்குப் புறத்தில் காரியும், சிங்கும் இருந்ததாக இவர் கூறுகிறார்.

197. காரி, சிங் ஆகியோர் பிழக்குப் புறத்தில் 200 அடி தொலைவில் நின்று கொண்டிருந்ததை, ஸ்டாலின் பார்த்திருக்க முடியாது. இந்த வாக்கு மூலம் ஒன்றே இவரது சாட்சியம் பொய்யானது; நம்ப முடியாதது என்பதற்குச் சான்றாகும். காரி யும், சிங்கும் களத்தில் நின்று கொண்டிருந்த தாகவும், அவர்களை வராண்டாவின் வடப்புறத் திலுள்ள சாளரம் மூலமாகப் பார்த்ததாகவும் கூறி அவர்கள் அளித்த வாக்குமூலத்திற்கு ஆதரவாக இருப்பதே இவரது நோக்கமாகும்.

198. சிறிது நேரம் கழித்து மணியின் உடல் மாட்டு வண்டியில் எடுத்துச் செல்லப்பட்டதைத் தாம் பார்த்ததாக ஸ்டாலின் மேலும் கூறுகிறார். இந்தச் சம்பவம் பற்றிய கூட்டத்திலிருந்த ஒரு வரிடம் தான் சொன்னதற்காக சங்கரத்தேவர் தன்னையும் தனது தாயாரையும் அடித்ததாகவும் அவர் கூறுகிறார். மணி கொலை செய்யப்பட்டது பற்றி யாரிடமாவது கூறியிருந்தால் அவர் கண்டிப் பாகவும் உடனடியாகவும் காவற் படையினரிடம் அது பற்றித் தெரிவித்து இருப்பார்.

199. சேரன்மாதேவி கோட்டாட்சியர் விசாரணை நடத்திய போது இவர் சங்கரத்தேவ ருக்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய வாக்குமூலம் ஒன்றைக் (சா. ஆ. ஏ. 28 நாள் 22-9-1980) கொடுத்தார். தான் (ஸ்டாலின்) இலட்சுமணன் என்பவரையும், வேணுகோபால் என்பவரையும், தம்முடைய தந்தை அம்மா முத்துவையும் கொலை செய்ய வேண்டும் என்று பிச்சையா தேவர் மூலமாகச் சங்கரத்தேவர் சொல்லி அனுப்பினார் என்று அந்த வாக்குமூலத் தில் குற்றம் சாட்டியுள்ளார். இந்த குற்றச்சாட்டுக் கள் அனைத்தும் சங்கரத்தேவருக்கு எதிராகவே அமைந்துள்ளன. இந்த வாக்குமூலத்தை கொடுக்கையில் (சா. ஆ. ஏ. 28) தேவர் சகோதரர் களைக் கொண்டு ஸ்டாலின் அஞ்சவில்லை என்பதை வெளியாகிறது; இவ்வாக்கு மூலத்தின் முக்கிய மான பகுதி வருமாறு :—

''நான் தற்போது சங்கனாங்குளத்தில் குடி யிருந்து வருகிறேன். நான் 21—9—1980 ஆம் தேதி வரை மாடசாமி தேவர் சகோதரர்களுக்கு கையாளாக இருந்தேன். ஆண்டான் குளம் என்ற கிராமத்தில் மஞ்சுளை சட்ட மன்றத் தேர்தலில் ஓட்டு போடாமல் தடுத்ததற்கு நானும் உடந்தையாக இருந்தேன். மேற்படி சகோதரர் களுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாவிட்டால் அந்த கிராமத்தில் குடியிருக்க முடியாத சூழ்நிலை. 20—9—1980 தேதியன்று மாலை சுமார் 6மணிக்கு பிச்சையாத் தேவர் என்பவர் (சங்கரத்தேவரின் கையாள்) என்னிடம் வந்து லட்சுமணன், வேணு கோபால், என்னுடைய தந்தை அம்மாமுத்து இவர் கள் மூன்று பேரையும் உன் கையால் அழிக்க வேண்டும். அதற்கு என்ன செலவானாலும் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சங்கரத் தேவர் சொன்னதாக பிச்சையாத் தேவர் சொன்னார். நான் வாங்க பயந்தேன். நான் கொன்னதை செய்யாவிட்டால், என்னை யாரை விட்டே விரட்டி விடுவேன் என்று சொல்லச் சொன்னதாக பிச்சையா தேவர் சொன்னார். மேலும் வெளி யூரிலிருந்து ஆருவதைக்கு நாட்டு வெடி குண்டு மற்றும் அரிவாள்கள் என்னிடம் தந்து, கொலை செய்யும்படி சொன்னார். நான் மறுத்துவிட்டேன். மேற்படியாளர்கள் சொல்படி நடக்காததால் நான் ஊரில் இருக்க முடியாத சூழ்நிலை, சமூகம் கிருபை செய்து என்னைக் காப்பாற்றவேண்டும். படித்துப் பார்த்தேன், சொன்னபடி சரியாக இருக்கிறது ''

200. கொலை நடந்ததை ஸ்டான்லி கண்கூடாகப் பார்த்திருந்தால் அவர் அச்சம்பவம் பற்றியும் தாம் அதை நேரில் பார்த்தது பற்றியும் (சா.ஆ.ஏ. 28) தம்முடைய வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருப்பார். ஸ்டாலின் இச்சம்பவத்தைக் கண்கூடாக பார்க்க வில்லை என்பது ஆவணங்களிலிருந்து தெளி வாகிறது என்ற திரு வெங்கடாச்சாரி கூறுவதை நான் ஏற்றுக்கொள்கிறேன். திரு ஜான் வின்சென்ட் 27—9—1980 அன்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்ட அறையில் நிகழ்த்திய உரையையும், அதன் பலவாக்கு காவல் துறை உதவி சூப்பிரண்டு 29—9—1980 அன்று சங்கனாங்குளத்திற்கு விசாரணைக்கு வந்ததையும், ஸ்டாலின் அறிவார். இவர் காரியின் நெருங்கிய நண்பர் என்ற முறையில் அக்கிராமத்தைச் சேர்ந்த ஆதி நாராயிடர்களுக்கு நேர்ந்த கற்பழிப்பு, கொலை சம்பவங்கள் பற்றி உதவி சூப்பிரண்டின் மூலம் வாக்குமூலங்கள் அளித்ததை நன்கு அறிவார்.

201. மணி கொலை செய்யப்பட்டதை நேரில் பார்த்ததாகக் கூறும் ஸ்டாலின், காவல் துறை உதவி சூப்பிரண்டு விசாரணை நடத்தியபோது, விசாரணைக்கு வந்து வாக்குமூலம் அளிக்காதது வித்தையாகும். மாவட்ட ஆட்சியர் கிராமத்திற்கு வந்து நுணுக்கமாக விசாரணை செய்தபோதும், காவல் துறை சூப்பிரண்டு விசாரணை நடத்திய போதும் ஸ்டாலின் விசாரணையில் கலந்துகொண்டு எவ்வித வாக்குமூலமும் அளிக்கவில்லை.

202. ஸ்டாலின் தன்னுடைய வாக்குமூலத்தில் (சா.ஆ.ஏ. 34) காரி, சிங் ஆகியோரது பெயரைக் குறிப்பிடுவது உள்நோக்கத்துடன் செய்யப்பட் தாகும். காரி சிங் ஆகியோர் கூறியுள்ளதற்கு ஆதாரமான வாக்குமூலம் ஒன்றைக் கொடுப்பதே இதன் நோக்கமாகும். இதிலிருந்து அவரது வாக்கு மூலம் பொய் என்பது மெய்ப்பிக்கப்படுகிறது. இராஜசெல்வம் கொடுத்துள்ள பொய் வாக்கு மூலத்தைப் போன்று இவரது வாக்குமூலமும் அமைந்துள்ளது.

203. ஸ்டாலின் தந்தை அம்மாமுத்து மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர். இவர் 1948ஆம்ஆண்டிலிருந்து கட்சியிலிருந்து வருகிறார். இவர் விவசாயிகள் சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர். மணி என்பவர் அடித்துக் கொல்லப் பட்டதை ஸ்டாலின் உண்மையாகப் பார்த்திருந்தால் இவர் அத்தகவலை தனது தந்தையிடம் கட்டாயம் தெரிவித்திருப்பார். அம்மாமுத்துவும் உடனடியாக இச்செய்தியை அனைவருக்கும் அறிவித்திருப்பார்.

204. மணி கொலை செய்யப்பட்டதைப் பற்றியும் அவரது உடல் எரிக்கப்பட்டது பற்றியும் எலும்புகள், சாம்பல் ஆகியவை அருகிலுள்ள கிணற்றில் போடப்பட்டது பற்றியும் மாடசாமி என்கிற முடிருத்துபவர் தம்மிடம் கூறியதாக அம்மாமுத்து தமது வாக்குமூலத்தில் (சா. ஆ. ஏ. 49) கூறியுள்ளார்.

205. அம்மாமுத்து, தேவர் வகுப்பினருக்குப் பரம விரோதி என்பதும், மணி கொலை செய்யப் பட்டது குறித்து தகவல் அல்லது செம்பி இவரிடம் கிடத்திருந்தால் இவர் சும்மா இருந்திருக்க மாட்டார் என்பதும் அவரது சாட்சியத்திலிருந்து தெரியவருகிறது.

206. தேவர் சகோதரர்களுக்கும், ஸ்டாலினுக்கும் இடையே இருந்த மன வருத்தத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு மணி கொலை செய்யப்பட்டதை ஸ்டாலின் தேர்ல் பார்த்ததாகச் சாட்சியம் ஒன்றை உன்நோக்கத்துடன் காரி அறிமுகப்படுத்தியுள்ளார் என்பதில் எனக்கு எவ்வித ஐயமுமில்லை. ஸ்டாலின் கொடுத்த சாட்சியம் முற்றிலும் பொய்யாகும்.

207. 17—10—1981 அன்று நான் சங்கரன்கோவிலுக்குச் சென்றபோது கந்தையா தேவரின் வீட்டிற்கு சென்று மாடியையும், மேற்பகுதியையும் பார்வையிட்டேன். இது மிகச் சிறிய வீடு; மேற்பகுதியில் ஓர் அறையும் மாடியில் ஓர் அறையும் உள்ளன. வேறு எவ்விதமான இடவசதியும் இருப்பதாகச் சொல்ல முடியாது. சமயலறை பின்புறத்தில் உள்ளது. இது மிகவும் சிறியதாகும். இட நெருக்கடி மிகுந்ததாகும். வீட்டின் பின்புறத்தில் ஆடு, மாடுகள் கட்டி வைக்கப்பட்டுள்ளன. இங்கு ஒரே குப்பையும் கூளமுமாக உள்ளது. பின்புறத்தில் நெல் புழுங்குவதற்கு இடம் கிடையாது, எனினும் வீட்டின் பின்புறத்தில் நெல் புழுங்கப்பட்டதாகவும் காய வைப்பதற்காக அது மாடிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாவும் மணி கொலை செய்யப் பட்டதாகச் சொல்லப்படும் நாளில் நெல் உலர்ந்து விட்டதாகவும், உலர்ந்த நெல்லைத் தான் குவித்துக் கொண்டிருந்தபோது வெளியே பெரிய கூக்குரலைக் கேட்டதாகவும் ஸ்டாலின் சொன்னார். அவர் வராண்டாவிற்கு வந்து வடபுறத்திலுள்ள சாளரத்தின் வழியாக வெளியே சாலையில் நடப்பதைப் பார்த்தார்.

208. ஸ்டாலின் சாட்சியம் முழுவதும் பொய் என்பதை அந்த வீட்டைப் பார்வையிட்டதிலிருந்து நான் தெரிந்து கொண்டேன். கந்தையாத் தேவரின் வீட்டின் பின்புறத்தில் நெல் புழுங்குவதற்கு இடமே இல்லை. மாடியிலுள்ள அறையும் உபயோகமற்ற பலவகையான தட்டுமுட்டு சாமான்கள் வைக்கப்பட்டுள்ளன. மாடியிலுள்ள அறையை நெல் காயவைப்பதற்குப் பயன்படுத்தியிருக்க முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. மாடிக்குச் செல்லும் படிக்கட்டுகள் மரத்திலானவை. மிகவும் செங்குத்தானவை; நெருக்கமானவை; எனவே இப்படிக் கட்டுக்களில் நெல் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு ஏறிச்செல்வது கடினமாகும். வடபுறத்தின் வடகோடியிலுள்ள வளைவில் பனைமர ஓலைகள் இறுக கட்டப்பட்டுள்ளன. அடுத்த வீட்டில் நடப்பதையோ, சாலையில் நடப்பதையோ காண முடியாமல் தடுக்கும் வகையில் இவைக் கட்டப்பட்டுள்ளன. தெரு விளக்கும் சாலைகளின் சந்திப்பும் கிழக்குப் பக்கமாக அமைந்துள்ளன. கொலை நடந்ததாகச் சொல்லப்படும் இடத்தை மாடியிலுள்ள இடைவெளி வழியாகப் பார்க்க முடியாது.

209. அடுத்த வீட்டிலுள்ளவர்கள், இடைவெளி வழியாக நுழைவதைத் தடுப்பதற்காகவே இந்தப் பனை ஓலைகள் இருக கட்டப்பட்டுள்ளன என்றும் ஆண்டுக் கொருமுறை பழைய பனை ஓலைகள் அகற்றப்பட்டு, புதிய ஓலைகள் பொருத்தப்படும் என்றும் கந்தையாத் தேவர் தமது வாக்குமூலத்தில் கூறியுள்ளார். கந்தையாத்தேவர் வீட்டில் சுமார் 8 பேர் இருக்கின்றனர். அவருடைய மனைவி, குழந்தைகள், மாமியார் ஆகியோருடு வேறு சிலரும் இருக்கின்றனர்.

210. திரு. கந்தையாத்தேவர் விரிவாகச் சாட்சியம் அளித்துள்ளார். அவரது வீட்டில் 8 பேர் இருப்பதாக வாக்காளர் பட்டியல் குறிப்பிடுகிறது. இவ்வளவு சிறிய வீட்டில் எப்படி 8 பேர் வசிக்கின்றனர் என்பது எனக்கு வியப்பாக உள்ளது. அப்படி இருக்கையில் மாடி அறையில் நெல் எப்படி உலர வைக்கப்படுகின்றன என்பதும் எனக்குத் தெரியவில்லை.

211. கந்தையாத்தேவர் தன்னுடைய வீட்டில் வயதுக்கு வந்த பெண்கள் இருப்பதாகவும் அதனாலேயே வெளி ஆட்கள் தம் வீட்டிற்குள் வருவதைத் தாம் விரும்பவில்லை என்றும் தன்னுடைய சாட்சியத்தில் விளக்கியுள்ளார். வெளியார் தம் வீட்டிற்குள் வருவதைத் தாம் ஒருக்காலும் அனுமதிக்க முடியாது என்று அவர் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

212. வெளியாட்கள் குறிப்பாக ஆடவர் வீட்டிற்குள் வருவதை இவர் விரும்பவில்லை என்பதை ஆணித்தரமாகக் கூறியுள்ளார். இவர் வீட்டில் வயது வந்த பெண்கள் இருப்பதை வாக்காளர் பட்டியலில் இருந்தும் தெரிந்து கொள்ள முடியும்.

213. ஆதிதிராவிடர்களின் வழக்குரைஞர், கந்தையாத்தேவரை குறுக்கு விசாரணை செய்தார். இக்குறுக்கு விசாரணை மேலோட்டமானது; தொடர்ச்சியற்றது; பொருத்தமில்லாதது என்பதும் எனது கருத்தாகும். கந்தையாத் தேவரின் வீட்டில் மாடியில் தாம் நெல் உலர வைத்து கொண்டிருந்ததாக அல்லது குவித்து கொண்டிருந்ததாக ஸ்டாலின் சொல்லியுள்ள வாக்கு மூலத்தை நான் எவ்வித தயக்கமின்றித் தள்ளிவிடுகிறேன்.

214. மாடசாமித்தேவர், சங்கரத்தேவர், இராமச்சந்திரத்தேவர் ஆகிய மூன்று சகோதரர்களும் சொந்த அரிசி ஆலை வைத்துள்ளவர்கள். நெல் புழுங்க வைப்பதற்கும் காய வைப்பதற்கும் ஆலையிலேயே இவர்களுக்குப் போதிய வசதியுள்ளது. இத்தகவலைச் சாட்சியத்திலிருந்தும் என்னுடைய ஆய்வு குறிப்புகளிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

215. அரிசி ஆலையைச் சேர்ந்த தொழுவத்தில் பெரிய கற்கள் அடுப்புகளாகப் பயன்படுத்தப் பட்டிருப்பதை கண்டேன். நெல் புழுக்கவும் உலர வைக்கவும் இந்த இடம் பயன்படுத்தப் பட்டிருப்பதை நான் கண்டேன். இச்சகோதரர் களுக்கு தனித்தனியாக கிடங்குகள் உள்ளன. அவற்றில் அவர்கள் தங்கள் நெல்லை வைத்து வருகின்றனர்.

216. கந்தையாத்தேவரின் வீட்டிற்கு நான் சென்றபோது வடக்குப் பக்கத்திலுள்ள வளவு பனை ஓலைகளினால் இருக மூடப்பட்டிருப் பதை கண்டேன். மாடியிலுள்ள அறையி லிருந்து இந்த வளவிற்கு நான் வருவதற்குள் அங்குள்ள பனை ஓலைகளை அவசர அவசரமாக அகற்ற ஸ்டாலின் முயன்று கொண்டிருப்பதை யும் நான் கண்டேன்.

217. பனை ஓலைகள் இங்கு நிலையாக அமைக்கப்பட்டுள்ளன என்பது எனக்குத் தெளி வாகிறது. பக்கத்து வீடுகளில் உள்ளவர்கள் மாடி வராண்டாவிற்கு வருவதைத் தடுக்கவும் மழைச் சாரல் வராண்டாவிற்குள் வருவதைத் தடுக்கவும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

218. ஸ்டாலின் மதிநுட்பம் மிக்கவர்; கூர்மையான அறிவுடையவர். கமிஷன் முன்பு சாட்சிகளைக் கொண்டுவருவதிலும், சாட்சியம் சொல்ல அவர்களுக்குச் சுற்றுத் தருவதிலும் இவரும் காசியைப் போல முக்கியமான பங்கு எடுத்துக் கொண்டார். விசாரணை முழுவதிலும் சாட்சிகளுக்குப் பின்னணியில் நின்றுகொண்டு இவர் சொல்லிக் கொடுத்து கொண்டே இருந்தார். தம் தரப்பு வாதம் வெல்லவேண்டும் என்பதில் இவர் பெரிதும் அக்கறை கொண்டார். இவருடைய சாட்சியம் உண்மையென்று என் மன திற்குப் படவில்லை. எனவே இவர் சாட்சியம் பொய், பயனற்றது எனத் தயக்கமின்றித் தள்ளி விடுகிறேன்.

219. சுருக்கமாகச் சொன்னால், மணி கொலை செய்யப்பட்டதை நேரில் கண்டதாகச் சாட்சியம் அளித்த மூவரும் வேண்டுமென்றே பொய்ச் சாட்சியம் சொல்லியுள்ளனர். எனவே அவர்கள் சாட்சியத்தை நான் தள்ளிவிடுகிறேன்.

220. மணி கொலை செய்யப்பட்டதை நேரடியாகப் பார்த்ததாகச் சொல்பவர்களின் சாட்சியத்தின் அடிப்படையில் வழக்கு நன்கு அமையாவிட்டாலும், அவர்களது சாட்சியம் தள்ளிவிடப்பட்டாலும், மணியைக் தாக்கிக் கொன்றது சங்கரத்தேவரே என்று சந்தர்ப்ப சாட்சியங்கள் நிருபிக்கின்றன என்றும் சந்தர்ப்ப சாட்சியங்களை மொத்தமாகச் சுருதிப் பார்க்கு மிடத்து வேறு எவரும் இக்கொலையைச் செய் திருக்க முடியாது என்றும் வழக்குரைஞர் திரு. அசோக் குமார் அழுத்தத்திருத்தமாக வாதிட் டார்.

221. சந்தர்ப்ப சாட்சியங்கள் பலவற்றை அவர் கோவையாக எடுத்துக் காட்டினார். சங்கரத்தேவரின் நடத்தையையும் அவர் சாடி னார். இவையெல்லாம் ஒன்றுக்கொன்று தொடர் புடையனவாக அவருடைய குற்றத்தைச் சுட்டிக் காட்டியுள்ளன என்று அவர் கூறினார். மணி சங்கரத்தேவரால் கொலை செய்யப்பட்டதைக் கண்கூடாகப் பார்த்ததாகச் சொல்பவர்களின் சாட்சியத்தை அறவே தள்ளிவிட்டாலும், சங்கரத் தேவர்தான் மணியை தாக்கிக் கொன்றார் என்பதற்குப் போதுமான சந்தர்ப்ப சாட்சியம் இருப்பதாக அவர் ஆணித்தரமாக வலியுறுத்தி னார். திரு. அசோக்குமார் அவர்களின் இந்த வாதத்திற்கு மறுப்புத் தெரிவிப்பது சிறு கடினமாக இருந்தது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். தற்போதைய வழக்கு எளிதான வழக்கல்ல. சந்தர்ப்ப சாட்சியங்கள் இந்த வழக்கில் வலுவாக அமைந்துள்ளன.

222. உச்ச நீதிமன்றத்தின் சில தீர்ப்புகளை யும், உட்ராஃப் அமீர் அலி ஆகியோர் எழுதி யுள்ள சாட்சியம் சட்டம் என்ற நூலில் சொல்லப்பட்டுள்ள சட்ட வாசகங்களையும் தன் தரப்பிற்கு ஆதரவாக திரு. அசோக்குமார் எடுத்துக் கூறியுள்ளார்.

223. சந்தர்ப்ப சாட்சியத்தை அடிப்படை யாகக் கொண்டு அமைந்துள்ள வழக்கு ஒன்று, குற்றம் சாட்டப்பட்டவர் வேண்டுமென்றே பொய்யான வாக்குமூலத்தைக் கொடுத்தாலும் முன்னுக்குப்பின் முரணான வாக்குமூலங்களை அளித்தாலும் ஒன்றுக்கொன்றுத் தொடர்பில்லாத வகையில் சாட்சியம் அளித்தாலும், தம்முடைய குற்றம்பற்றிய உண்மைகள் அனைத்தையும் மறுத் தாலும், குற்றத்தில் தமக்குள்ள பங்கை மறுத்தா லும் அத்தகைய நடத்தை சந்தர்ப்ப சாட்சியக் கோவையில் முக்கியமான இணைப்புகளாகக் கருதப்படுமென்று அந்த நூலில் சொல்லப்பட்டிருப் பதை அவர் முதலில் எடுத்துக் காட்டினார். (சாட்சியச் சட்டம் 1981, 14வது பதிப்பு பக்கம் 2812 விதி. 111-ஆகியார்கள் உட்ராஃப், அமீர் அலி).

224. குற்றம் சாட்டப்பட்டவர், புலன் விசா ரணைக்காக வரும் காவல் துறை அதிகாரியுடன் உடந்தையாகவும், உள்ளாளாகவும் இருந்து குற்றப் புலன் விசாரணையைத் தடுத்தார், அல்லது குந்தகம் விளைவித்தார், சாட்சியத்தை மறைத் தார் என்று நிருபிக்கப்பட்டால் சந்தர்ப்ப சாட்சி யத்தை நிருபிக்க அதுவே வலுவான சான்றாகும் என்றும் திரு. அசோக்குமார் எடுத்துக் கூறினார். (பக்கம் 2812 விதி. 111).

225. வழக்கில் உண்மையைக் கண்டறிய, முக்கியமான சாட்சியத்தை அழிப்பதில் குற்றம் சாட்டப்பட்டவர் காரணமாக இருந்தாலும், அதில் முக்கியமான பங்கு வகித்தாலும் அதுவும் அவர் குற்றவாளி என்பதை நிருபிப்பதற்கான சந்தர்ப்ப சாட்சியத்தில் வலுவான சான்றாகும் என்றும் அவர் வாதிட்டார்.

226. வழக்கு ஒன்றில் பல்வேறு சம்பவங் களைப் பரிசீலனை செய்கையில் குறிப்பிட்ட ஒரு சம்பவத்தை விளக்குவது குற்றம் சாட்டப் பட்டவரின் கடமையாகும் நிலைமை ஏருவானால் அல்லது அத்தகைய நிலைமையை விளக்குவது குற்றம் சாட்டப்பட்டவரின் கடமை என்ற நிலைமை ஏற்பட்டு குற்றம் சாட்டப் பட்டவர் அத்தகைய நிலைமையை விளக்க மறுத் தால் அல்லது விளக்கம் தரத் தவறினால் அது சந்தர்ப்ப சாட்சியத்தின்படி அவர் குற்றம் செய்தவர் என்று நிருபிப்பதற்கான முக்கியமான சான்றாகும் என்றும் அவர் வாதிட்டார்.

227. பொய் வழக்குகளைத் தொடுத்தல், பொய் விளக்கங்களைக் கொடுத்தல், குற்றம் சாட்டப்பட்டவர் தன்னுடைய கடமையைச் செய் யாது குறிப்பிட்ட நிலை ஒன்றை விளக்கத் தவறுதல், குற்றப் புலன் விசாரணைக்குக் குந்தகம் விளைவித்து தடை செய்வதற்காகக் குற்றம் சாட்டப்பட்டவர் காவல் துறையினருடன்

உடந்தையாக இருத்தல் ஆகியவை சந்தர்ப்ப சாட்சியங்களில் நிரூபிப்பதில் முக்கியமான பங்கு வகிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

228. குற்றம் சாட்டப்பட்டவரைக் குற்றவாளி என்று நிரூபிக்க சந்தர்ப்ப சாட்சியங்களின் பல்வேறு கூறுகளை விளக்கும் வகையில் எழுதப் பட்டுள்ள தேற்றங்கள், வழிகாட்டிக் குறிப்புகளை மேற்குறிப்பிட்டவைகள் ஆகும். அவை ராஜாமி ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள இக்கோட் பாடுகளையும் குறிப்புரைகளையும் இந்த வழக்கில் எவ்வாறு பொருத்திப் பயன்படுத்துவது என்பது நம் முன் உள்ள பிரச்சினையாகும்.

229. மணியின் சடலம் மாட்டு வண்டியில் வைக்கப்பட்டுத் தேவர் சகோதரர்களால் மணியின் வீட்டில் வைக்கப்பட்டது என்பது நிரூபிக்கப்பட்ட வுடன் மணி எங்கு இறந்தார், எப்படி இறந்தார் என்பதை விளக்குவது தேவர் வகுப்பினரின் கடமையாகும் என்று ஆதி நாராயணர்களின் வழக்குரைஞர் திரு. அசோக்குமார் வாதிட்டார். அன்று 4 மணிக்கு எங்குச் சென்றார் என்பதும் சங்கரத் தேவரின் வீட்டிற்கு அவர் வந்தாரா, இல்லையா என்பதும் சங்கரத் தேவரின் வீட்டில் அவர் தாக்கப்பட்டாரா இல்லையா என்பதும், அவர் இயற்கையாக இறந்தாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா என்பதும் தெளிவாகத் தெரியாவிடினும் அவரது சடலத்தைத் தேவர் வகுப்பினர் மாட்டு வண்டியில் கொண்டு வந்து மணியின் வீட்டில் வைத்தார்கள் என்பது தெரிந்து விட்ட படியால் மேற் சொன்னவற்றையெல்லாம் விளக்குவது அவர்களது கடமையாகும் என்று திரு. அசோக்குமார் கூறினார்.

230. வேறு வகையில் சொன்னால் மணியின் சடலம் அன்று மாலை 6 மணிக்குச் சங்கரத் தேவரிடம் இருந்தது என்பது மெய்ப்பிக்கப்பட் டாலும், மணியின் சடலத்தைத் தேவர் வகுப்பினர் மணியின் வீட்டில் வைத்தார்கள் என்பது நிரூபிக்கப்பட்டாலும் அச்சடலம் தங்களிடம் எப்படி வந்தது என்பதை விளக்குவது தேவர் சகோதரர்களின் பொறுப்பாகும் : இதனை விளக்கத் தவறினால் அல்லது இதற்குச் சரியான விளக்கம் தர முடியாவிட்டால் சங்கரத்தேவர் மணியின் கொலையில் குற்றவாளி என்றே சொல்ல வேண்டும். சந்தர்ப்ப சாட்சியங்களாக அமைந்துள்ள மற்ற சம்பவங்கள் அந்த முடிவையே வலுப்படுத்தும். மணி கொலை செய்யப்பட்டதை நேரடியாகப் பார்த்ததாக கூறுபவர்களின் சாட்சியங்கள் நம்பப்படாது ; மாலை 4 மணிக்குப் பிறகு, மணி எங்குச் சென்றார் என்பது பற்றி ஒன்றும் தெரியாத திலிருந்து மணியின் சடலம் மாலை 6 மணிக்கு மணியின் வீட்டில் கொண்டு வைக்கப்பட்ட நேரம் வரையில் என்ன நடந்தது என்பதுபற்றி ஒன்றும் தெரியாத நிலையில் இத்தகைய வாதம் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

231. இரு தரப்பு வழக்குரைஞர்களின் வாதங் களையும் இரு தரப்புச் சாட்சியங்களையும் பற்றி விவரமாகப் பரிசீலனை செய்யும் முன்னர் இந்த வழக்கு மேற்கொணும் மூன்று அனுமானங் களிலேயே அமைந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன் :—

(i) சங்கர தேவர் மணியைக் கொன்றார் ; மணியின் சடலத்தை மாட்டு வண்டியில் எடுத்துச் சென்று மணியின் வீட்டில் வைக்கு மாறு கட்டளையிட்டார் ; சடலம் அவ்வாறே மணியின் வீட்டில் வைக்கப்பட்டது ; மணியின் உறவினர்களுக்குச் செய்தி அனுப்பாமல் சடலத்தை இரவோடு இரவாக எரிக்கச் சகுகரத் தேவர் ஏற்பாடு செய்தார் ; இவ்வாறு செய்தது மிகவும் கொடுமையாகும் ; மனிதத் தன்மை யற்றதாகும் ; கொலை பற்றியத் தடயங் களையும், சடலத்தை எரித்ததற்கான தடயங் களையும் அறவே அழிக்கும் நோக்கத்துடன் அவசரம் அவசரமாக இந்த ஏற்பாடுகளைச் செய்தார் ; அவருடைய ஆட்கள், அவருடைய கட்டளைகளை நிறைவேற்றினர். மணியின் சடலம் இரவு 9 மணியிலிருந்து 2 மணிக்குள் எரிக்கப்பட்டது. சாம்பல், எலும்பு, எரிக்கப் பட்ட இடத்திலிருந்த மண் ஆகியவையும் கதவில் இருந்த இரும்பு ஆணிகள் உட்பட அனைத்தையும் இரவிலேயே கிணற்றில் போட ஏற்பாடு செய்தார். இதனால் அவர் எரிக்கப் பட்டதற்கான தடயம் முழுவதும் அழிந்து விட்டது.

(ii) மணி சம்பவம் நடந்த நாளன்று கள்ளச் சாராயம் குடித்து அதனால் இறந்தார்.

(iii) வாழ்க்கையில் வெறுப்படைந்த மணி சங்கரத் தேவரின் வீட்டில் விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

232. மணியின் சடலத்தைத் தமது வேலை யாட்கள் மூலமாகவோ காரின் மூலமாகவோ ஜராஜசெல்வம் வீட்டிற்கு எடுத்துச் செல்லச் சங்கரத் தேவர் ஏற்பாடு செய்தார் ; அங்கு ஜராஜசெல்வம், அவருடைய பெற்றோர், உறவினர் ஆகியோருடைய முழு சம்மதத்துடன் மணியின் உறவினர்களுக்குச் செய்தி அனுப் பாமல் மணியின் சடலத்தை இரவோடு இரவாக எரிக்க ஏற்பாடு செய்தார். இச்செய்தி காவலர்க்கு தெரிந்தால் தொல்லை ஏற்படும் என்று அஞ்சியே அவ்வாறு செய்தார். காவல் துறையினருக்குத் தெரிந்தால் புலன் விசாரணை செய்வர், சவப் பரிசோதனை செய்வர், மணியின் மரணம் இயற்கையாக நேர்ந்ததா ? அல்லது அவர் கொலை செய்யப்பட்டாரா என்ற கேள்வியெல்லாம் எழுவதோடு எவராவது ஒருவர் கைது செய்யப்படுவதில் முடியும் என்று அஞ்சியே சங்கரத் தேவர் இந்த ஏற்பாடுகளை யெல்லாம் செய்தார் என்பது மேலே இரண்டாவ தாகவும், மூன்றாவதாகவும் குறிப்பிட்டுள்ள அனுமானங்களின் சாரமாகும்.

233. வேறு வகையில் சொன்னால் இந்த இரண்டு அனுமானங்களினாலும் தெரிய வருவது என்னவெனில், தேவர் சகோதரர்கள் என்ன செய்தாலும் இராஜசெல்வத்திற்கும் அவருடைய உறவினர்களுக்கும் தேவர்கள் உதவியே செய்தன, என்பதும் காவல் துறையினர் தொல்லை கொடுப்பதை இயன்ற வரையில் தவிர்க்கப்பாடுவதற் காகச் சடலத்தை விரைவில் எரிக்க இராஜ செல்வத்திற்கும் உறவினர்களுக்கும் அவர்கள் உதவியே செய்தனர் என்பதும் இதற்கு இராஜ செல்வமும் அவருடைய உறவினர்களும் மறுப்பின்றி ஒப்புக்கொண்டனர் என்பதும். தேவர் சகோ தரர்களின் ஆலோசனையை ஏற்றனர் என்பதும், அனைவரின் சம்மதத்துடன் மணியின் சடலம் இரவோடு இரவாக எரிக்கப்பட்டது என்பதும் ஆகும்.

234. இது தொடர்பாகக் காவல் துறை சுப்பிரண்டு அரசுக்கு அனுப்பிய அறிக்கையைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

(சா.ஆ.ஜி. 33 நாள் : 3–10–1980) இதில் பதிமூன்றாவது பத்தியின் இறுதியில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது : '' மணியின் சடலம், ஆதி நிராவி டர்கள், தேவர் வகுப்பினர் ஆகியோர் முன்னிலையில் எரிக்கப்பட்டது என்று தெரிய வருகிறது.''

235. இப்பொழுது இந்த வழக்கில் ஒரு முக்கியமான தகவ ற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். இது தேவர் வகுப்பிலருக்கு மிகவும் சாதகமாக உள்ளது. கொலை செய்த தாக உள்ள குற்றச்சாட்டில் கொலை செய்ததன் நோக்கம் எதுவெனச் சொல்லப்படவில்லை. மணி சங்கரத்தேவரின் வீட்டிற்குச் சென்று சம்பளப் பாக்கியைக் கேட்டதனாலேயே சங்கரத தேவர் அவமான மடைந்து மணியைத் தன்னுடைய வீட்டில் அந்த இடத்திலேயே கொலை செய்தார் என்பதையோ, தன்னுடைய வீட்டின் பின்புறத் திலிருந்து மணியைப் பிடியில் கைகொடுத்து சங்கரத்தேவர் தள்ளிக்கொண்டே வந்து சாலைச் சந்திப்பி மணியை அடித்துக் கொன்றார் என்பதையோ ஏற்றுக்கொள்வது கடினமாக உள்ளது. இராஜசெல்வம் சங்கரத் தேவரால் கற்பழிக்கப்பட்டார் என்ற குற்றச் சாட்டு பொய்யானது என்று நான் ஏற்கனவே கூறியுள்ளேன். எனவே இராஜசெல்வமும் மணியும் கலந்து பேசிக் கொண்டு சங்கரத் தேவருடன் உள்ள தொடர்பை துண்டித்துக் கொள்ள முடிவு செய்தனர் என்ற பிரச்சினையும், தன்னுடைய சம்பளப் பாக்கியை கேட்பதற்காக மணி, சங்கரத் தேவர் வீட்டிற்குச் சென்றார் என்ற பிரச்சினையும் எழவில்லை. கற்பழிப்பு குற்றச்சாட்டு பொய்யானது என்றால் அதன் காரணமாக மன வருத்தம் அடைந்த மணி தன்னுடைய சம்பளப் பாக்கியைப் பெறுவதற்காகச் சங்கரத் தேவரின் வீட்டிற்குச் சென்றார் என்று சொல்லப்படுவதும் பொய்யாகும். ஏனென்றால் இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் ஒன்றுக்கொன்று தொடர்பானவையாகும். காரண காரியமாக அமைந்தவையாகும். எனவே கொலைக்கு எந்த உள்நோக்கமும் இருந்ததாக இந்த வழக்கில் நிரூபிக்கப்படவில்லை. சம்பளப் பாக்கியைமணி கேட்டதனாலேயே சங்கரத் தேவர் வெகுண்டு மணியைத் தாக்கி கொலை செய்ததாகக் கூறப் படும் கதை பொய்யானதாகும்.

236. கொலை வழக்குகள் பலவற்றில், கொலைக்கு உள்நோக்கம் இருந்ததாக மெய்ப் பிக்கப்படாவிடினும், நேரடி சாட்சி களின் வாக்குமூல அடிப்படையில் கொலைக் குற்றம் நிருபிக்கப்பட்டுள்ளது. கொலைக்கு நோக்கம் இருக்க வேண்டும் என்பதோ, நோக்க மில்லாமல் ஒரு கொலை செய்யப்பட்டிருக்க முடியாது என்பதோ குற்றம் சாட்டப்பட்ட வருக்கு சாதகமான முடிவாக அமைந்த தாகவோ சான்றாகாது. எந்த விதமான விரோதமோ உள்நோக்கமோ இன்றியே கொலைகள் செய்யப் படுகின்றன என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

237. கொலைக்கு நோக்கம் இருக்க வேண்டும் என்று பிரச்சினை பற்றி ஆராய்கையில் சர்க்கார் எழுதியுள்ள சாட்சியச் சட்டம் என்ற நூலி விருந்து மேற்கோள் ஒன்றை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். *(தொகு. 1) (13வது பதிப்பு)* பக்கம். 82:—

> குற்றத்திற்கான நோக்கம்.—தாமாகச் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் ஒருவருக்கு ஒரு குறிக்கோள் இருக்கவேண்டும். பொதுவாக ஒவ்வொரு செயலுக்கும் அடிப்படையாக ஒரு நோக்கம் இருப்பது உலக இயல்பு. மனிதன் எந்திர முறையில் செயல்படும் விலங்கு அல்ல; பந்தபாசங்களுக்குக் கட்டுப்பட்ட மனிதன் விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்டவன்; அறிவும் தெளிவும் கொண்டவன், எனவே அவனுடைய குறிப்பிட்ட ஒரு செயலுக்கு இது தான் நோக்கம் என நாம் வரையறுத்துக் காண முடியாது. இதுபற்றி விக்ஸ் என்பவர் கூறுவ தாவது:— 'ஒருவருக்கு உண்மையாகவே அந்தி இழைக்கப்பட்டிருந்தாலும் அல்லது தமக்கு அந்தி இழைக்கப்பட்டிருப்பதாக அவர் கற்பனை செய்துகொண்டாலும் அவர் பழிவாங்கவே விரும்புவார். தமக்கு எதிராகச் செயல் படுபவரை அல்லது தாம் வெறுப்பவரை ஒழித்துக் கட்ட வேண்டும் என்றே நினைக் கிறார். பண முடையிலிருந்து விடுபட அல்லது வேறு ஏதாவது ஒரு இக்கட்டிலிருந்து விடுபட ஒருவர் விரும்புகிறார், தமக்குள்ள மதிப்பையும் நற்பெயரையும் பாதுகாத்துக் கொள்ள நினைக்கிறார். அந்த மதிப்பும் நற் பெயரும் பொதுவானதாக இருக்காமல் அல்லது ஒரு தொழிலுக்குரிய அல்லது ஓர் ஆண் அல்லது பெண்ணுக்குரிய நற்பெயரும் மதிப்புமாகவும் இருக்கலாம் அல்லது சுயநலத்தினால் அல்லது கடும் பகைமையினால் அவர் பழி வாங்க விரும்புகிறார்.'' கொலை வழக்கு ஒன்றில் நீதிபதி காம்ப்பெல் அளித்த தீர்ப்பு வருமாறு:— ''இக்கொலை எந்த நோக்கத்துடன் செய்யப் பட்டது என்ற விவர எழுமாயின் அந்த நோக் கத்திற்கென ஒரு முகன்மை இல்லை என்பதை உங்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். கொடுமையான கொலைகள் சாதாரண காரியங் களுக்காகச் செய்யப்படுகிள்ளவை என்பதை நாம் நடைமுறையில் அறிவோம்; சிறிதளவு ஆதாயம் பெறுவதற்காக அல்லது தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இடர்பாடுகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகக் கூட கொடுமையான கொலைகள் செய்யப்பட்டுள்ளன.'' ஆனால் குற்றத்திற் கான நோக்கம் இல்லாமலிருப்பது என்பது சாதாரணமாகக் குற்றம் சாட்டப்பட்ட வருக்குச் சாதகமாக அமையும் சூழ்நிலையாகும்''.

பக்கம் 83-ல் சொல்லப்பட்டுள்ளதாவது:—

> ''குற்றத்திற்கான நோக்கம் எதுவும் குறிப் பிடப்படாமலிருந்தால் அது சந்தர்ப்ப சாட்சியத் தில் மிகவும் முக்கியமாகும். குற்றம் சாட்டப் பட்டவருக்குச் சாதகமாக அமைந்துள்ளதாகவே இச்சூழ்நிலையைக் கருத வேண்டும். எனினும், சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு பார்த்தால், குற்றம் சாட்டப்பட்டவர் குற்ற வாளி எனத் தீர்மானிக்கக் காரணமிருந்தால் குற்றத்திற்கான காரணம் இல்லை என்கிற அடிப் படையில் தண்டனையைத் தவிர்க்க இயலாது. குற்றத்திற்கான காரணம் ஐயமற நிரூபிக்கப் பட்டிருந்தா ஒருவரைக் குற்றவாளி எனத் தீர்ப்பளிப்பதற்கு அது கூடுதலான சாட்சிய மாகும். குற்றத்திற்கான காரணம் வழக்கில் சொல்லப்படவில்லை யென்றால் குற்றம் தொடர் பான ஏனைய சாட்சியங்களை மிகவும் உன்னிப் பாகக் கவனிக்கவேண்டும்''.

குற்றத்திற்கான நோக்கம் எப்பொழுது அவசிய மில்லை'' என்பது.—குற்றம் சாட்டப்பட்டவர் ஒருவரைத் தாக்கினார் என்பதை நீதிமன்றம்

சந்தேகமறத் தெரிந்து கொண்டால் குற்றஞ் சாட்டப்பட்டவர் தம்மால் பழிவாங்கப்பட்டவரை ஏன் தாக்கினார் என்பதற்கான காரணமோ அவர்களிடையே முன்பே வெறுப்புணர்ச்சி இருந்ததா என்பதையோ பார்க்க வேண்டிய அவசியமில்லை. (நாராயணன் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1971 எஸ்.சி. 1656 ரெவரெண்ட் ஜெய்ன் ஹார்ட் 7 டபிள்யு, ஆர். சி.ஆர். 60). குற்றம் சாட்டப் பட்டவருக்கு எதிரான சாட்சியம் தெளிவாகவும், கோவையாகவும் நம்பகமாகவும் அமைந்திருந்தால், குற்றத்திற்கான நோக்கம் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பது அவசியமல்ல. (குருசெரியன் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1956 எஸ்.சி. 460 ; 1956 குற்ற வழக்கு சட்டப் பதிவேடு. 827: அப்பு என்பவருக்கு எதிரான வழக்கு ஏ.1971 எம். 194 ; சிவாஜி என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1973 எஸ். சி. 55 ; ஹரிபட் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1974 எஸ். சி. 1740, பொத்தா என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1975 எஸ். சி. 1252). குற்றத்திற் கான நோக்கம் நிரூபிக்கப்பட வேண்டும் என்பது முக்கியமாக இருந்தாலும் இது ஒவ்வொரு வழக் கிலும் தவிர்க்க முடியாத அளவிற்கு அவசியமில்ல (வாலி மட் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1949 பி. சி. 103 ; 53 சி. டபிள்யு. என் 318 ; யெஸ்வன்ட் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1973 எஸ். சி. 337). வழக்கு தொடர்பான விவரங்கள் தெளிவாக இருந்தால், குற்றம் எந்த நோக்கத்துடன் செய்யப்பட்டது என்பதை நிரூபிப் பது அவசியமல்ல. ஒரு குற்றத்தைச் செய்த தற்கான நோக்கம் குற்றவாளிக்கு மட்டுமே தெரியும், அவருடைய நோக்கம் என்னவாக இருக்கலாம், இருக்கக்கூடும் என்பதையே அரசு தரப்பினர் அனுமானிக்கவே முடியும் (ஹஷரத் என்பவருக்கு எதிரான வழக்கு ஆர் 32. சி. டபிள்யு. என 345) ; குற்றம் செய்ததற்கான நோக்கம் நிரூபிக்கப்படவில்லையென்றால், குற்ற நிகழ்வை நேரில் கண்டவருடைய சாட்சியம் ஏனைய முறையில் நம்பகமாக இருந்தால் அதனைத் தள்ளிவிட முடியாது (பஹால் என்ப வருக்கு எதிரான வழக்கு ஏ. 1976 எஸ்.சி. 2032). ஒரு குற்றம் எந்த நோக்கத்துடன் செய் யப்பட்டது என்பது நிரூபிப்பதாவது, அந்த குற்ற நிகழ்வு நடந்ததை நேரில் கண்டவருடைய சாட்சியத்தை மெய்ப்பிப்பதாகாது. (துவாரகா என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1931.119)''.

238. சந்தர்ப்ப சாட்சியம் நிறைந்துள்ள வழக்கு ஒன்றில், அக்குற்றம் எந்த நோக்கத் துடன் செய்யப்பட்டது என்பதை நிரூபிப்பது மிகவும் முக்கியமாகும். அது குற்றம் சாட்டப் பட்டவருக்குச் சாதகமாக உள்ள வலுவான சாட்சியமாகும் என்று கருதப்பட வேண்டும்.

239. சந்தர்ப்ப சாட்சியம் நிறைந்துள்ள வழக்கு ஒன்றில், குற்றம் எந்த நோக்கத்துடன் செய்யப் பட்டது என்பதை நிரூபிக்க முடியாத நிலையி , குற்றம் சாட்டப்பட்டவருக்குத் தண்டனை விதிக்க வேண்டுமாயின் அவருக்கு எதிரான சாட்சியம் தெளிவாகவும், கோவையாகவும் நம்பகமாகவும் இருக்க வேண்டும்.

240. சந்தர்ப்ப சாட்சியத்தின் அடிப்படையி லேயே ஒருவருக்கு எத்தகைய சூழ்நிலைகளில் தண்டனை விதிக்கப்ப வேண்டும் என்பதை விளக்கும் வகையி தேவர் சகோதரர்கள் வழக்குரைஞருான திரு. சாரி அவர்கள் சர்க்கார் எழுதியுள்ள சாட்சியச் சட்டம் என்ற நூலில் 37-ஆவதுபக்கத்தில(தொகுதி 1)கூறப்பட்டுள்ளதை எனது கவனத்திற்குக் கொண்டு வந்தார் :

'' வழக்கு ஒன்றில் சந்தர்ப்பச் சாட்சியத்தின் அடிப்படையிலேயே தீர்ப்பளிக்க வேண்டியிருந்தால் அத்தகைய சாட்சியம் மூன்று சோதனைகளுக்கு உட்படுத்தப்படவேண்டும். (1) ஒருவர் குற்றம் செய்திருக்க வேண்டும் என்று அனுமானிப்பதற்குச் சாதகமாக அமைந்துள்ள சூழ்நிலைகள் கோவை யாகவும், சந்தேகத்திற்கு இடமின்றியும் நிரூபிக்கப் படவேண்டும், (2) குற்றம் சாட்டப்பட்டவர் தான் குற்றவாளி என்பதைத் திட்டவட்டமாகச் சுட்டிக் காட்டும் வகையில் இந்த சந்தர்ப்ப சாட்சியம் அமைந்திருக்க வேண்டும், (3) இந்த சந்தர்ப்ப சாட்சியங்களை ஒன்று சேர்த்துப் பார்க்கையில் இவை கோவையாக அமைந்திருக்க வேண்டும், இக் குற்றத்தைக்குற்றம்சாட்டப்பட்டவரேசெய்திருக்க வேண்டும் ; வேறு எவரும் செய்திருக்க முடியாதுஎன்று முடிவு செய்யும் வகையில் சந்தர்ப்ப சாட்சியம் தடையின்றிக் கோவையாக அமைந் திருக்க வேண்டும். (சந்தர்ப்மாள் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1976 எஸ். சி. 917 ; எஸ்.பி. பட்நகர் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1979 எஸ். சி. 826 ; சரன்சிங் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1967, எஸ். சி. 520 ; அனுமந்த் என்பவருக்கு எதிராக உள்ள வழக்கு 1952, எஸ். சி. ஆர். 1091 ; ஏ. 1952 எஸ். சி. 343; கோவிந்த ரெட்டி என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1960 எஸ். சி. 29 ; 1960 குற்ற வழக்கு சட்டக் குறிப்பு 137 ; தயானந்தன் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1955 எஸ். சி. 801 ; 1955. 2 எஸ். சி. ஆர். 570 ; பகதூர்ம் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1954 ; எஸ். சி. 62 ; 1954 குற்ற வழக்கு சட்டக் குறிப்பு 1645 ; பழனிச்சாமி என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1968 பி. 177 ; கேதார் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1954 எஸ். சி. 660 ; 1954 குற்ற வழக்கு சட்டக் குறிப்பு, 1679 ; குதுஹல் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ.1954; எஸ். சி. 720; 1954 குற்ற வழக்கு சட்டக் குறிப்பு 1802); ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட் டவரைக் குற்றஞ்சாட்ட வேண்டுமாயின் சந்தர்ப்ப சாட்சியம்கோவையாகவும் முழுமையாகவும்இருக்க வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர் மட்டுமே அக்குற்றத்திற்குப் பொறுப்பானவர் என்பதைத் தவிர வேறு எந்த அனுமானமோ விளக்கமோ இல்லாத வகையில் அமைந்திருக்க வேண்டும். (ஜஸ்வந்த் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ.1979 எஸ். சி. 190 ; பகன்தாஸ் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1974 எஸ். சி. 898). குற்றம் சாட்ட் பட்டவர்தான் குற்றவாளி என்று முடிவு செய்யும் வகையில் சந்தர்ப்ப சாட்சியம் நியாயமான முறையில்அமைந்திருக்கவேண்டும். கட்டுக் கதையா கவோ, கற்பனையான அனுமானங்களாகவோ அமையாமல் அறிவிற்குகந்த வகையில் வழக்கில் உள்ள தகவல்கள், சூழ்நிலைகள் அடிப்படையில் அமைந்த சாட்சியமாக இருக்க வேண்டும். (மோகன்லால் என்பவருக்கு எதிரான வழக்கு 1974 எஸ். சி. 1144) சந்தர்ப்ப சாட்சியம் என்பது பல தகவல்கள் இணைந்ததாகவும் கோவையான சம்பவங்கள் அடங்கியதாகவும் இருக்க வேண்டும். இதிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி யாக இருந்தால், தப்பமுடியாத அளவுக்கு இருக்க வேண்டும். (ஆனந்த் சிந்தாமன் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1960 எஸ். சி. 500 ; 523 ; 1960.2.எஸ். சி. ஆர். 460 : பழனிச்சாமி என்பவ ருக்கு எதிரான வழக்கு) குற்றம் சாட்டப்பட்ட வரின் குற்றத்தை வெளிப்படுத்துகிற வகையில் அமைவதோடு, அவர் நிரபராதியாக இருந்தால்

அவருக்குப் பாதுகாப்பாகவும் அமைய வேண்டும். (மங்களலெஸ்வரி என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1954 எஸ். சி. 750 ; 1954 குற்ற வழக்கு சட்டக் குறிப்பு 1797 ; ரஹ்மான் என்பவருக்கு எதிரான வழக்கு, எஸ். 1972 எஸ். சி. 1101; அப்துல் கனி என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1973 எஸ். சி. 264 ; உமட்பாய் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1978, எஸ். சி. 424, சந்தர்ப்ப சாட்சியங்கள் குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தை நிரூபிக்கும் வகையில் அல்லது அவர் நிரபராதி என்பதை நிரூபிக்கும் வகையில் சந்தர்ப்ப சாட்சியங்கள் அமைந்திருக்க வேண்டும். இதில் ஏதேனும் ஐயப்பாடு இருந்தால் ஐயப்பாட்டினால் ஏற்படும் அனுகூலம் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அளிக்கப்பட வேண்டும். (பாரத் காமாஸ் கம்பெனிக்கும் சுரேந்திரு என்பவருக்கும் இடையே நடைபெற்ற வழக்கு ஏ. 1968 சி. 388).

பக்கம் 38.—

'' குற்றம் சாட்டப்பட்டவர்தான் குற்றவாளி என்பதை நிரூபிக்க சந்தர்ப்ப சாட்சியத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ள வழக்குகளில் (1) குற்றம் சாட்டப்பட்டவர்க்கு எதிராக உள்ள தகவல்கள் சூழ்நிலைகள் ஆகியவை குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது வேறு ஒருவர் நிரபராதி என்பதற்கு ஒவ்வாத வகையில் அமைந்து அவர் குற்றவாளியாகத்தான் இருக்க வேண்டும் என்ற விளக்கத்தைத் தவிர வேறு விளக்கம் கிடைக்காத வகையில் அமைந்திருக்க வேண்டும். (தூக்கு என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1977 எஸ். சி. 1063; குர்ஜிமல் என்பவருக்கும் இம்மாள் என்பவருக்கும் இடையே நடந்த வழக்கு சி. டபிள்யூ. என். 278, 286, ரகுநந்தன் என்பவருக்கு எதிரான வழக்கு 59 ஐ.சி. 858, பி. எல்.டி. 684 ; ஜகந்நாம் என்பவருக்கு எதிரான வழக்கு 48 ஐ.சி. 167 ; சேலே என்பவருக்கு எதிரான வழக்கு 42 ஐ. சி. 129; கமல் என்பவருக்கும் நந்தலால் என்பவருக்கும் இடையே நடந்த வழக்கு 56 சி. 738 ; ஏ. 1929 சி. 37 ; ரொஜ்ஹட்டின் என்பவருக்கு எதிரான வழக்கு 18 சி. டபிள்யூ. என். 1141 ; பாசன் கவுடா என்பவருக்கு எதிரான வழக்கு 1941 பம்பாய் 315 ; ஏ. 1941, பி. 13) ; சேர் முகமது என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1945 எல். 27 ; ஏராடு என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1956 எஸ். சி. 116 ; 1956 குற்ற வழக்கு சட்டக் குறிப்பு 559 ; மன்மோகன் என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1969, பி. யூ. 275) அப்படி இல்லையென்றால் இந்த ஐயப்பாட்டின் காரணமாக ஏற்படும் அனுகூலம் குற்றம் சாட்டப்பட்டவருக்கு கொடுக்கப்படவேண்டும். (அவாடி என்பவருக்கு எதிரான வழக்கு ஏ. 1971 எஸ். சி. 69 ; தவுல் என்பவருக்கு எதிரான வழக்கு 77 ஐ.சி. 600); (2) குற்றம் சாட்டப்பட்டவருக்குப் பாதகமாக அமைந்துள்ள சூழ்நிலைகளும் சந்தர்ப்ப சாட்சியங்களும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும். (ஜகூரா என்பவருக்கு எதிரான வழக்கு 35 சி. டபிள்யூ. என். 169 ; குலாம் மொய்தீன் என்பவருக்கு எதிரான வழக்கு 1954 சி. 503) சந்தர்ப்ப சாட்சியங்கள் ஒரு சிறு அளவு சந்தேகத்திற்கு இடமளித்தாலும் குற்றம் சாட்டப்பட்டவருக்குச் சாதகமான சாட்சியமே கருத்திற் கொள்ளப்படவேண்டும்.

241. சம்பவம் நடந்த நாளன்று மாலை 4 மணி அளவில் மணி தன்னுடைய வீட்டில் மாரடைப்பின் காரணமாக இயற்கையாக இறந்தார் என்பது தேவர் வகுப்பினர் தரப்பில் சொல்லப்படும் வாதமாகும். இதில் உண்மை இருக்கிறதா இல்லையா என்பதை இப்பொழுது கவனிப்போம்.

242. கிராம முனிசிப் இராமச்சந்திரத் தேவர் கமிஷன் முன் கொடுத்துள்ள வாக்கு மூலத்தில் குறிப்பிட்ட பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (சா. ஆ. பி. 24 நாள் 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6.):

'' என் சகோதரர் பண்ணையில் பணி புரியும் மணி பெரிய குடிகாரர். குடியின் காரணமாக மாரடைப்பினால் இறந்தார். அவருடைய உறவினர்களே ஈமச் சடங்குகளைச் செய்தனர். ஆனால், அவருடைய மரணம் எங்கள் மேல் அவதூறு சுமத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.'' தன்னுடைய வீட்டில் மாரடைப்பின் காரணமாக மணி மரணம் அடைந்தார் என்பது தேவர் வகுப்பினரின் வாதமாகும்.

243. சங்கரத் தேவரின் வாக்கு மூலம் (சா. ஆ. பி. 27, நாள் 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6) குறிப்பிடுவது :

'' மணி மாரடைப்பினால் இறந்ததாகவும், அவருடைய உறவினர் அவர்கள் வழக்கப்படி ஈமச் சடங்குகள் செய்ததாகவும் நான் அறிகிறேன். ''

244. மாடசாமித் தேவர் கொடுத்த வாக்கு மூலத்தில் (சா. ஆ. பி. 28, நாள் 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6) குறிப்பிடுவது :

'' திரு. சங்கரனின் வேலைக்காரனாகிய மணி என்பவர் சந்தேகமான சூழ்நிலையில் இறந்தார் என்பது மறைக்கப்பட்டுள்ளது என்ற குற்றச் சாட்டு மிகவும் அநியாயமான குற்றச்சாட்டு. எங்களுக்குத் தெரிந்த வரையில் மணி மாரடைப்பினால் இறந்தார். அவரது ஈமச் சடங்கு அவரது உறவினர்களால் நடத்தப்பட்டன. ''

245. மணி மாரடைப்பின் காரணமாக இயற்கையாக இறந்தார் என்பதும், அவரது ஈமச் சடங்குகளை அவரது உறவினர்களே செய்தனர் என்பதும் மாடசாமித் தேவரின் அசைக்க முடியாத வாக்கு மூலமாகும்.

246. தேவர் சகோதரர்கள் இந்த மூன்று வாக்கு மூலங்களைத் தவிர அவர்களுக்கு ஆதரவாக மூன்று ஆதி திராவிடர்களின் வாக்குமூலங்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

247. முத்தம்மாளின் வாக்குமூலம் (சா. ஆ. பி. 2 நாள் 1981ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23) நெல்லையாவின் வாக்குமூலம் (சா. ஆ. பி. 4, நாள் 1981ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23), நெல்லையாவின் தந்தை மசானத்தின் வாக்கு மூலம் (சா. ஆ. பி. 9, நாள் 1981ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23) ஆகியன மேற்குறிப்பிட்ட மூன்று வாக்குமூலங்களாகும்.

248. இந்த மூன்று ஆதி திராவிடர்களின் வாக்கு மூலங்கள் ஒரே மாதிரியாக அமைந்துள்ளன. எனவே ஒருவருடைய வாக்கு மூலத்தில் உள்ள ஒரு பகுதியை குறிப்பிட்டாலே போதும் :

'' சுமார் 11 மாசத்துக்கு முன்னாலே ஒருநாள் மணி நிறைய சாராயம் குடிச்சிட்டு சாங்காலம் வீட்ல இருந்தான். திடீர்னு மாரடைப்பால் இறந்திட்டான். அவன் இந்துவானதால அண்ணக்கி ராத்திரி எல்லாரும் சொந்தக்காரங்க வந்தபிறகு, என் புருஷன் மற்றும், மாசானம், நல்லையா,

செல்லையா மற்றும் ஊர்வஞ்சளவங்களெல்லாம் சேர்ந்து அவன் பிரேதத்தை முறைப்படி ராத்திரி தூக்கிட்டு போய் சுட்டு எரிச்சு மறுநாள் காலையில் சுந்தரராஜன் திண்றில் சாம்பல கரைச்சாங்க. மணிக்கு உயிர் போகும்போது நான், ராஜசெல்வம், அவள் பாட்டி வள்ளி ஆகியோர் பக்கத்தில் இருந்தோம். ''

249. மணி அளவுக்கதிகமாகக் குடித்ததின் காரணமாகத் தன் வீட்டில் இயற்கையாக மரணம் அடைந்தார் என்பதும், அவருடைய உறவினர்கள் அனைவரும் அன்றிரவே அவருடைய உடலைப் பழைய கதவு ஒன்றில் வைத்து எடுத்துச் சென்று எரிக்க அவருடைய சாம்பல், எலும்புகள், அக்கதவிலிருந்த இரும்பு ஆணிகள் ஆகியவற்றைச் சுந்தரராஜனுக்குச் சொந்தமான திண்றில் போட்டனர் என்பது தேவர் வகுப்பினருக்குச் சாதகமான ஆதி நிராவிடர்களின் வாக்கு மூலங்களிலிருந்து தெரிய வருகிறது.

250. இந்த மூன்று ஆதி நிராவிடர்களும், முத்தையா என்பவரும் தேவர் வகுப்பினருடன் சேர்ந்து வாக்குமூலங்களைக் கொடுத்துள்ளனர். இந்தச் சாட்சிகளைத் தேவர் வகுப்பினரின் சாட்சிகளாகக் கருத முடியாது என்றும், அவர்கள் சங்னாங்குளத்தைச் சேர்ந்த ஆதி நிராவிடர்களே என்றும், உண்மையைக் கண்டறிய கமிஷனுக்கு உதவுவதற்காகவே அவர்கள் தங்கள் வாக்குமூலங்களைக் கொடுத்துள்ளனர் என்றும் திரு. வெங்கடாச்சாரி வாதிட்டுள்ளார். இந்த வாதத்தில் உண்மை இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இந்த மூன்று சாட்சிகளையும் திரு. வெங்கடாச்சாரியின் உதவியாளராகிய திரு. இராஜேந்திரன் முதன்மையாக விசாரித்தார்.

251. இந்த மூன்று ஆதி நிராவிடர்களும் தேவர் வகுப்பினரின் தரப்பின் சாட்சிகள் என்பது அவர்களுடைய வாக்குமூலத்திலிருந்து தெரிய வரும். இவர்கள் தேவர் வகுப்பினரின் கையாள்கள்.

252. மணியின் சடலம் அவசர அவசரமாக அன்று இரவிலேயே எரிக்கப்பட்டதைக் குறிப்பிடுகையில் தேவர் வகுப்பினருக்கு எதிராகச் சில தகவல்களை இந்தச் சாட்சிகள் கொடுத்துள்ளனர். இந்தச் சாட்சியத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே, இந்த சாட்சிகள் தேவர் வகுப்பினரை சாட்சிகள் அல்ல என்று திரு. வெங்கடாச்சாரி கூறியுள்ளார். இதில் உண்மையிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இதை மீண்டும் எடுத்துரைப்பது தேவையற்றதாகும். நெல்லையா, செல்லையா, மசானம் ஆகியோர் தேவர் தரப்பு சாட்சிகளாகவே தங்கள் வாக்குமூலங்களைக் கொடுத்துள்ளனர் என்பதைச் சங்கரத் தேவர் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார். (பக்கம் 745).

253. முத்தம்மாளின் சாட்சியத்தை நாம் முதலில் பார்ப்போம். சம்பவம் நடந்த அன்று, மணிக்கும் அவருடைய மனைவி இராஜ செல்வத்துக்கும் சண்டை ஏற்பட்டதென்று அவர் கூறுகிறார். இந்த சண்டை பிற்பகல் 3-30 வரையில் தொடர்ந்தது. மணி, இராஜசெல்வத்தை ஒரு தடியால் அடித்தார். நிடீரென்று தனக்கு மார்பு வலிப்பதாக மணி கூறினார். அவர் மாரடைப்பினால் இறந்தார். அவர் இறந்தவுடன் தாம் பார்த்ததாக முத்தம்மாள் கூறுகிறார். தனக்கு மார்பு வலிப்பதாக மணி கத்தியதை தன்னுடைய வீட்டிலிருந்து கேட்டதாக அவர் கூறுகிறார். ஆனால், சா. ஆ. பி. 2 என்ற தன்னுடைய வாக்குமூலத்தில் அவர் மணிக்கும் இராஜ செல்வத்துக்கும் ஏற்பட்ட சண்டை அடித்தது பற்றியோ, மார்பு வலிக்கிறது என்று கத்தியது பற்றியோ குறிப்பிடவில்லை. மணியின் வீடும் தன் வீடும் எதிர் எதிராக உள்ளது என்றும், அதனால் தான் மணி இராஜசெல்வத்தை அடித்ததையும், மார்பு வலியால் மணி கத்தியதையும் தன்னுடைய வீட்டு வாசலிலிருந்தே பார்க்க முடிந்தது என்ற கருத்துப்படும் வகையில் முத்தம்மாள் சாட்சியமளித்தார்.

254. மார்பு வலிப்பதாக மணி கத்தியதையும் மாரடைப்பினால் இறந்ததையும் தான் நேரடியாகப் பார்த்ததாக இவர் கூறுகிறார். மணி மார்பு வலியினால் கத்தியிருந்தால், அவருக்கு உண்மையில் மாரடைப்பு ஏற்படடிருந்தால், நெஞ்சு வலியினால் மணி துடிப்பதை அவர் உண்மையில் நேரடியாகப் பார்த்திருந்தால், மணிக்கு உதவ அவர் ஓடிவந்திருக்க வேண்டும். ஆனால், தன் வீட்டிலிருந்து இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்ததாக அவர் ஒப்புக்கொள்கிறார்.

தான் எந்த உதவியும் செய்யவில்லை என்பதையும் அவர் ஒப்புக் கொள்கிறார். ஆதி நிராவிடர் குடியிருப்பில் குணசீலன் என்ற ஒமியோபதி மருத்துவர் இருப்பதாகவும், அவர் நோயாளிகளுக்கு ஊசி போட்டு மருந்து கொடுப்பதாகவும் ஒப்புக் கொள்கின்ற இவர், அந்த மருத்துவரை மணியின் வீட்டிற்கு அழைத்து வர எவ்வித முயற்சியும் எடுக்க வில்லை. இவர் தன்னுடைய சாட்சியத்தில் கூறியுள்ள எந்த விவரத்தையும், கமிஷன் முன்தாகவல் செய்துள்ள தன் வாக்கு மூலத்தில் குறிப்பிடவில்லை.

255. தன்னுடைய வீடும் மணியின் வீடும் எதிர் எதிராக இல்லை என்றும், எதிர் திசையில் ஒரு வீடு தள்ளி தன் வீடு இருப்பதாகவும் குறுக்கு விசாரணையில் இவர் ஒப்புக் கொண்டுள்ளார். தனது வீட்டின் கூரை தாழ இருப்பதாகவும், அவர் வீட்டில் துணுப வேண்டுமானால் குனிந்து செல்ல வேண்டுமெனவும் இவர் ஒப்புக் கொள்கிறார். எனவே தனது வீட்டின் வாசலில் நின்று கொண்டு மணியின் வீட்டில் நடப்பதை இவர் பார்த்திருக்க முடியாது என்பது புலனாகிறது.

256. முத்தம்மாளின் வீட்டுக் கூரை மிகவும் தாழ உள்ளது என்பதை என்னுடைய 1981ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 7ஆ நாளிட்ட ஆய்வுக் குறிப்புகளில் நான் குறிப்பிட்டுள்ளேன். முத்தம்மாள், தன்னுடைய வீட்டிலிருந்து இராஜசெல்வத்தின் வீட்டில் நடப்பதைப் பார்த்திருக்க முடியாது. மேலும், முத்தம்மாளின் வீடு மணியின் வீட்டிற்கு நேர் எதிரில் இல்லை. எதிர் வரிசையில் ஒரு வீடு தள்ளியே உள்ளது. மேலும், இவர் என் முன் சாட்சியம் அளித்த விதம் எனக்குத் திருப்தியாக இல்லை. இவரைப் பற்றியும், இவரது சாட்சியத்தைப் பற்றியும் எனக்கு நல்ல கருத்து ஏற்பட வில்லை. குறுக்கு விசாரணையில் இவர் நேரடியாகப் பதில் சொல்லவில்லை. தேவர் சகோதரர்களுக்கு உதவும் நோக்கத்துடன் இவர் சரளமாகப் பொய் சொல்லுகிறார் என்பது குறுக்கு விசாரணையிலிருந்து வெளியாகிறது.

257. சிறு கேள்விகளுக்குக்கூட முத்தம்மாள் நேரடியாக பதில் சொல்ல தயாராக இல்லை என்ற கருத்து முத்தம்மாளின் சாட்சியத்தைப் பதிவு செய்கையில் 619-வது பக்கத்தில் நான் குறிப்பிட்டுள்ளேன். தொடக்கம் முதல் இறுதி வரை இவர் சொல்வதெல்லாம் பொய் என்பதும், இவர் தேவர் சகோதரர் பக்கம் சார்ந்துள்ளார் என்பதும், அவருடைய சாட்சியத்திலிருந்து நன்றாகத் தெளிவாகிறது. இந்தச் சாட்சியப் பொறுத்த வரையில், மணி தன்னுடைய வீட்டில் இயற்கையாக

இறந்தார் என்பதை நிரூபிக்க தேவர் சகோதரர்கள் தவறிவிட்டனர். முத்தம்மாள் சாட்சியம் முழுவதும் பொய் : பயனற்றது.

258. அடுத்த சாட்சி நெல்லையார் ; இவர் தலையாரி. முத்தம்மாள் தனது சாட்சியத்தில் சொல்லியுள்ளதையே இவர் தமது சாட்சியத்திலும் சொல்லியுள்ளார். அன்று மாலை 4-30 அளவில் மணி தன்னுடைய மனைவியை அடித்தார் என்றும், மாரடைப்பினால் இறந்தார் என்றும் அவரது சடலம் அன்றிரவே எரிக்கப்பட்டது என்றும் அவர் தன்னுடைய வாக்கு மூலத்தில் கூறியுள்ளார்.

259. நெல்லையார், அவருடைய நந்தை மசானம் ஆகியோரின் வீடு இராஜசெல்வத்தின் வீட்டிலிருந்து இரண்டு மூன்று வீடுகள் தள்ளி இருக்கிறது. இந்த இரண்டு வீடுகளைத் தவிர, திறந்த வெளியும் உள்ளது. இத் தகவலை என்னுடைய ஆய்வுக் குறிப்புகளில் நான் குறிப்பிட்டுள்ளேன். இராஜ செல்வத்தின் வீட்டில் எவராவது சத்தம் போட்டால் நெல்லையாவின் வீட்டிலிருப்பவர்களுக்குக் கேட்காது என்பதையும் என்னுடைய ஆய்வுக் குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளேன். இந்த இரண்டு வீடுகளுக்கும் இடையே நீண்ட இடைவெளி உள்ளது. எனவே, மசானமும் நெல்லையாவும், இராஜ செல்வத்தின் வீட்டிலிருந்து எந்தச் சத்தத்தையும் கேட்க முடியாது. நெல்லையாவின் சாட்சியம் முழுவதும் பொய். இதை நான் ஏற்பதற்கில்லை. நெல்லையாவும் மசானமும் சங்கரத் தேவரின் கையாள்கள். தேவர் சகோதரர்களுக்கு ஆதரவாக பொய்ச் சாட்சியம் சொல்வதற்காக இவர்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

260. காவல்துறை உதவி சுப்பிரண்டின் முன்னர் நெல்லையா அளித்த வாக்குமூலத்தில் இதைப்பற்றி யெல்லாம் குறிப்பிடவில்லை என்பது முக்கியமானது. மணியின் மரணம் இயற்கையானதுதானா என்ற கேள்வி எழுந்து அதைப் பற்றி உதவி சுப்பிரண்டு புலன் விசாரணை செய்து கொண்டிருக்கையில், மாரடைப்பினால் மணி இறந்தை நெல்லையாவும் மசானமும் உண்மையாக நேரில் பார்த்திருந்தால் அவர்கள் அதுபற்றி உதவி சுப்பிரண்டிடம் சொல்லியிருக்க வேண்டும். மணி கொலை செய்யப்பட்டார் என்ற வதந்திக்கு ஆதாரமே இல்லையென்று அவர்கள் மறுப்புத் தெரிவித்து இருக்க வேண்டும். மணி இறந்த நிமிடத்திலிருந்து அவரது மரணம் இயற்கையானதல்ல, ஆனால் அவர் கொலை செய்யப்பட்டார் என்ற பேச்சு ஊரமைந்தில் அடிபட்டது என்று நெல்லையா தன்னுடைய வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார் என்பது முக்கியமாகும்.

261. மணியின் சடலம் அவசர அவசரமாக எரிக்கப்பட்டதென்று நெல்லையா கூறும் சாட்சியம் பொய்யானது. இவரது சாட்சியம் முற்றிலும் நம்பத்தகுந்ததன்று.

262. மணி தன்னுடைய வீட்டில் மாரடைப்பினால் இறந்தார் என்று தேவர் சகோதரர்கள் தரப்பில் சொல்லப்படுவதை நிரூபிக்க இந்த இரண்டாவது சாட்சியும் (நெல்லையா) தவறி விட்டார்.

263. அடுத்து நெல்லையாவின் நந்தை மசானத்தின் சாட்சியத்தைக் கவனிப்போம். இவருடைய சாட்சியமும் நெல்லையாவின் சாட்சியத்தைப் போன்றே அமைந்துள்ளது. முழுவதும் பொய்யானதாகும். மணி நெஞ்சு வலியினால் மாலை 4-30 அளவில் கத்தினார் என்றும், 15 நிமிடங்களுக்கு அவர் சத்தமிட்டுக் கொண்டிருந்தார் என்றும், அதன் பின்னர் ஒசை எதுவும் வரவில்லை என்றும் இவர் கூறியுள்ளார். வலி தாங்காது மணி இரைச்சலிட்டபோது மணியின் உதவிக்கு இவர் செல்லாதது விந்தையாக உள்ளது.

264. இவரது சாட்சியம் முழுவதும் பொய். குறுக்கு விசாரணையில் இவர் நேரடியாகப் பதில் சொல்லவில்லை. சடலம் எரிக்கப்பட்டது குறித்த கேள்விகளுக்கு இவர் பதிலளிக்காமல் மழுப்பினார். பல தகவல்களில் இவர் கூறியிருப்பது பொய். நெல்லையாவின் சாட்சியம் போன்று இவரது சாட்சியமும் பயனற்றது.

265. எனவே, மணி தன்னுடைய வீட்டில் மாரடைப்பினால் இறந்தார் என்பதைத் தேவர் வகுப்பினர் நிரூபிக்கத் தவறி விட்டனர். வேறு வகையாகச் சொன்னால், பொய் என்று தெரிந்திருந்தும், பொய் வழக்கு ஒன்றைத் தேவர் வகுப்பினர் கொண்டு வந்தனர் என்றும், சந்தர்ப்ப சாட்சியத்தில் இது முக்கியமானதென்றும், திரு. அசோக்குமார் வாதித்துள்ளதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

266. இந்த வழக்குக்கு நேரடி தொடர்பில்லாத ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை இப்போது கருதிப் பார்க்கலாம்.

267. சங்கரத் தேவர் மணியைத் தான் கொன்றதாகவும், மணியின் சடலத்தை எரித்ததாகவும், பூலோக பாண்டியத்தேவர் (அ.தா.சா. 21) முன்னரும், காசிப் பாண்டித்தேவர் (அ. த. சா. 24) முன்னரும் கூறினார் என்று திரு. அசோக்குமார் குறிப்பிட்டார்.

268. மாடசாமித்தேவருக்கும், அவருடைய சகோதரர்களுக்கும் பூலோக பாண்டியத் தேவருக்கும் அவருடைய சகோதரர்கள், மக்கள் ஆகியோருக்கும் உள்ள உறவு இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மரபு வழி விளக்கப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இணைப்பு (iv) மாடசாமித்தேவர், சங்கரத்தேவர், இராமச்சந்திரத்தேவர் எனவையோர் சுப்பிரமணியத் தேவரின் முதல், இரண்டாவது மனைவிகளின் பிள்ளைகள் என்பது தெரிய வரும். ஆறுமுகத் தேவர் சிவசுப்பிரமணியத் தேவரின் சகோதரர், பூலோக பாண்டியத்தேவர், சண்முகசுந்தரத்தேவர், குமாரசாமித் தேவர், காசி தேவர் ஆகியோர் ஆறுமுகத் தேவரின் பிள்ளைகள். குமாரசாமித் தேவரின் பிள்ளைகள் ஆறுமுகம், நீலகண்டத் தேவர், இலட்சுமணத் தேவர், செல்லத்துரை முத்தையா ஆகியோராகும். ஆறுமுகத் தேவரின் பிள்ளைகளாகிய பூலோக பாண்டியத் தேவரும் காசித் தேவரும் மாடசாமித் தேவர் சங்கரத் தேவர் ஆகியோரின் தந்தைவழி உறவினர். சங்கரத் தேவரும் இராமச்சந்திரத் தேவரும், நீலகண்டத் தேவர், இலட்சுமணத் தேவர், செல்லதுரை ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரர்கள். சங்கரத் தேவர் அவருடைய சகோதரர்களுக்கிடையேயும், பூலோகப் பாண்டியத் தேவர், குமாரசாமித் தேவர், காசித் தேவர், நீலகண்டத் தேவர், லட்சுமணத் தேவர், செல்லத்துரை ஆகியோரிடையேயும், பல ஆண்டுகளாக கூமுகமான உறவு நிலவி வந்துள்ளது. (இணைப்பு iv).

269. நீலகண்டத் தேவரும், அவருடைய சகோதரர்களும், மாடசாமித் தேவருக்கு மிகுந்த மரியாதை கொடுத்து வந்தனர். மாடசாமித் தேவரும், சங்கரத் தேவரும் செல்வமிக்கவர்கள். செல்வாக்கு உள்ளவர்கள். சங்கனாங்குளம் ராமமத்திலும், அதனை அடுத்துள்ள ராமங்களிலும் ஏராளமான நிலங்களை வைத்திருப்பவர்கள். நீலகண்டத் தேவருக்கும், அவருடைய சகோதரர்களுக்கும் ஏராளமான நிலங்கள் உள்ளன. நிலங்களைத் தவிர, நீலகண்டத் தேவர் திருநெல்வேலியில் வட்டிக்குக் கடன் கொடுக்கும் தொழிலைச் செய்து நல்ல ஆதாயம் ஈட்டி வந்தார்.

நீலகண்டன், இலட்சுமணன், செல்லத் துரை ஆகியோர் நிலையாக திருநெல்வேலியில் வசிப்பவர்கள். பூலோகபாண்டியத் தேவர், காசித் தேவர், குமார சாமித் தேவர் ஆகியோர் மிகக்க சங்கனாங்குளத்தில் நிலபுலங்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். கடந்த பத்தாண்டுகளாகக் காசியும் இராஜகிங்கும் நீலகண்டத் தேவரிடம் வேலை பார்த்து வந்தனர். நீலகண்டத் தேவர் குடும்பத்தைச் சேர்ந்த நில புலங்களை இவர்கள் கவனித்து வந்தனர். இந்த இரு குடும்பத்தினரிடையேயும், பரிவும் பாசமும் இருந்து வந்தது என்பதை நிருபிக்க இவர்கள் எழுதிக்கொண்ட கடிதங்கள் பல கமிஷனின் முன் சாட்சியமாக வைக்கப்பட்டன. மாடசாமித் தேவர், நீலகண்டத் தேவரும் பரிவும் பாசமும் காட்டிவந்தார் என்பதற்கான கடிதங்கள் பல கமிஷனின் முன் வைக்கப்பட்டன.

270. 1980 ஜூன் மாதம் வரை இந்த இரு குடும்பங்கள் இடையேயும் எந்த விதமான கருத்து வேறுபாடும் இல்லை என்று மாடசாமித் தேவர் தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். (பக்கம் 764). இந்த இரு குடும்பத்தினரிடையேயும் சொத்து தகராறு எதுவும் இல்லை என்பதையும் இராமச் சந்திரத் தேவரும் ஒப்புக்கொண்டுள்ளார். இக் குடும்பத்தினரிடையே சுமுகமான உறவு நிலவி வந்தது என்பதற்கு அடையாளமாக பல கடிதங்கள் வைக்கப்பட்டுள்ளன. (சா. ஆ. ஏ. 86 87, 93 முதலியன). தென் வீரியநாராயணம் இராமத்தினுள்ள சுடலை மாடசாமி கோயிலில் தாம் குறிப்பிடும் சிலரை அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும் என்று மாடசாமித் தேவர் கூறியதை நீலகண்டத் தேவர் ஒப்புக்கொள்ளவில்லை. எனவே அன்றைய நாளிலிருந்து அதாவது, 1980 ஜூலை திங்களுக்குப் பின்னரே இந்த இரு குடும்பத்தினர் இடையே மனக் கசப்பு ஏற்பட்டத் தொடங்கியது.

271. மாடசாமித் தேவர் நீலகண்டத் தேவருக்கு எழுதிய கடிதம் சா. ஆ. ஏ. 93 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் மாடசாமி தேவர் தம் கைப்பட ஏழு நபர்களின் பெயர்களை மேற் குறிப்பிட்ட கோயிலின் புறங்காவலர்கள் நியமனத்திற்காகக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக 1980 ஜூலை மாதத்திற்குப் பின்னரே இந்த இரு குடும்பத்தினரிடையேயும் இருந்த சுமுகமான உறவு மறைந்து மனக்கசப்பு ஏற்படத்தொடங்கியது.

272. ஆதிநாவிடர் வகுப்பைச்சேர்ந்த மணி இறந்ததுதொடர்பாகச் சங்கர தேவருக்கு எதிராகக் குற்றச் சாட்டுகள் அடங்கிய மனு ஒன்று (சா ஆ. பி.10, நாள் 11—4—1980) டி. ஐ. ஜி-க்கும் அதன் நகல்கள் மாவட்ட ஆட்சியருக்கும் ஏனையோருக்கும் அனுப்பப்பட்டன. இக்கடிதம் முத்தையா என்பவரால் கையெழுத்திடப்பட்டு இருந்தது. கடிதம் முழுவதையும் இங்கு கொடுப்பது அவசியமாகிறது:

"நாங்குநேரித் தாலூகா திசையன்விளை போலீஸ் சரகம் சங்கனாங்குளம் சேரியான பொது மக்கள் சார்பில் எழுதுவது.

1980-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் தேதியில் மணி என்பவர் விஷம் அருந்தி மரணம் அடைந்தார். மணி, கடலை என்பவரின் மகனாவார். இவரின் மரணத்துக்கு காரணம் வாலிபர் மாடசாமித் தேவரின் தம்பி சங்கரன் என்பவரே. மணியின் மனைவி இராஜசெல்வம். சங்கரன் வீட்டில் வேலை செய்து வருகிறார். இராஜசெல்வத்தைச் சங்கரன் வைப்பாக வைத்துக்கொண்டார். இதை அறிந்த மணி தன் மனைவி இராஜசெல்வத்தைக் கண்டித்தார். சங்கரன் மணியை கடுமையாக அடித்துப் போட்டு விட்டார். மனம் உடைந்த மணி விஷம் குடித்து விட்டு, சங்கரத்தேவர் வீட்டிற்கு போய்ப் படுத்துக் கொண்டார். சிறிது நேரத்தில் மரணம் அடைந்தார். சங்கரன் வீட்டிலேயே மரண மடைந்தார். பிரேதத்தைப் போலீஸிற்கு சொல்லாமலேயே எரித்துவிட்டார் சங்கரன். அவருடைய கையாள்களை வைத்து, அவரது கையாட்கள் வள்ளிநாயகத் தேவர் மகன் சண்முகசுந்தரம், 2. சொல்லிங்கும் பெருமாள் தேவர் மகன் சுடலைக்கண். 3. நாவிதன் சாமி மகன் மாடசாமி மற்றும் பலர்.

சங்கரத்தேவருக்கு இவ்வளவு தைரியத்திற்கு காரணம் பாளையங்கோட்டையில் விஜிலென்ஸ் இன்ஸ்பெக்டராக இராமகிருஷ்ணனின் உதவியே. இராமகிருஷ்ணன் லஞ்ச ஒழிப்பு அதிகாரியாகையா இருக்கிற போலீஸ்கள் சங்கரத்தேவருக்கு அடங்கியே நடக்கிறார்கள். இன்ஸ்பெக்டர் இராமகிருஷ்ணனுக்கு சங்கரத்தேவரின் தங்கையை திருமணம் செய்து கொடுத்திருக்கிறார் என்பது இதில் குறிப்பிடத்தக்கது. மற்றும் சங்கர தேவர், சங்கனாங்குளம் சேரியாகிய எங்களூரில் காலம் சென்ற கருணைத்தான் மனைவி நாகம்மாளோடும் தொடர்பு வைத்துக்கொண்டு இருக்கும் இக்கேயே முகாம் போவதைப் பார்த்தால் வேறு வேறு பெண்களுக்கு எல்லாம் ஒரே பயம். இந்தக் காமுகன் கண் நம்மீதும் படிந்துவிடக் கூடாதேவென்று. சங்கரத் தேவரின் இந்த லீலாவிநோத அட்டகாசங்களுக்கும், போலீஸ் துறையில் சர்வாதிகாரம் புரிவதற்கும் காரணம் இராமகிருஷ்ணனின் தைரியமே என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

இந்த விவரங்களையெல்லாம் நாகம்மாளின் தினை மாமா சுந்தரம் என்பவரிடம் தனியாக விசாரித்தால் தெரிய வரும். முத்தையா 11-4-80.

273. காவல் துறை புலன் விசாரணையை நடத்தியது. இந்த மனுவை எழுதிய முத்தையா என்பவரை சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமியால் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே, முத்தையாவால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் மனுவானது பொய்ப் பெயரில் எழுதப்பட்டதாக சப்-இன்ஸ்பெக்டர் அறிக்கை அனுப்பினார். இந்த மனுவைப்பற்றியும், சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி நடத்திய புலன் விசாரணை பற்றியும் நான் பின்னர் கூறுகிறேன். ஆனால் மாடசாமி தேவர் குடும்பத்தினருக்கும் நீலகண்ட தேவர் குடும்பத்தினருக்கும் இடையே கடுமையான மருத்து வேறுபாடுகள் ஏற்பட இந்த மனுவே அடிப்படைக் காரணமாக அமைந்தது என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

274. பொய்ப் பெயரில் எழுதப்பட்டுள்ள இந்த மனுபற்றி சங்கரத்தேவர் 1980 ஜூலை மாதம் முதற்கொண்டே பெரிது படுத்திவந்தார். நீலகண்டத் தேவரின் சகோதரரும், குமாரசாமித் தேவரின் மகனுமாகிய இலட்சுமணத் தேவரே இந்தக் கடிதத்தை விஷமத்தனமாக எழுதினார் என்றும், தமக்கு தொல்லை கொடுக்கும் நோக்கத்துடனேயே இக்கடிதம் எழுதப்பட்டது என்றும் சங்கரத் தேவர் கூறிவந்தார்.

275. இந்த மனுவின் காரணமாகச் சங்கர தேவருக்கு மிகுந்த ஆத்திரம் ஏற்பட்டது. நீலகண்டத் தேவர் குடும்பத்தினருக்கு எதிராக அவர் விரோதம் பாராட்டத் தொடங்கினார். இலட்சுமண தேவருக்கும் இந்த மனுவிற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று குமாரசாமி, பூலோகபாண்டி, காசித் தேவர் ஆகியோர்,

எவ்வளவோ சொல்லியும் சங்கரத் தேவர் அதை நம்ப தயாராக இல்லை. தமக்குத் தொல்லை கொடுக்கும் நோக்கத்துடன் எழுதப்பட்ட இந்த மனுவிற்கு இலட்சுமணத் தேவரே பொறுப்பாவார் எனறு சங்கரத்தேவர் ஆணித்தரமாகச் சொல்லி வந்தார். சங்கரத் தேவர் 3 சமயங்களில் அதாவது 27—7—1980, 1—8—1980, 3—8—1980 ஆகிய நாள்களில் பூலோகபாண்டியத் தேவருக்கும் காசித் தேவருக்கும் ஆளலுப்பி அவர்களை வரவழைத்து தான்தான் மணியைக் கொன்றதாகவும் அவரது சட்லத்தை எரித்ததாக வும், தமக்கு எதிரான மனு எழுதிய இலட்சுமணத் தேவருக்கும் அதே கதி ஏற்படும் என்றும் அச்சுறுத் தியதாக இரு அசோக்குமார் வாதிடுகிறார்.

276. பூலோகபாண்டியத் தேவரும், காசித்தேவ ரும் (அ.த.சா. 21, 24) கமிஷன் முன்பு விசாரிக் கப்பட்டனர். மணியை தாம் கொலை செய்து சடலத்தை எரித்துவிட்டதாகச் சங்கரத்தேவர் ஒப்புக்கொண்டதாகச் சாட்சியம் மேற்குறிப் பிட்ட சம்பவங்கள் பற்றியும் அவர்கள் தங்கள் சாட்சியங்களில் குறிப்பிடுகின்றனர்.

277. கோட்டாட்சியர் முன் 1980-ஆம் ஆண்டு செப் ம்பர் திங்கள் 22ஆம் நாளன்று பூலோக பாண்டியத் தேவரும், அதே நாளன்று காசிப் பாண்டித் தேவரும் கொடுத்த வாக்குமூலங்களில் (சா. ஆ. ஏ. 109, 126) சங்கரத் தேவரின் ஒப்பு மூலம் பற்றிக்குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நான் கூற விரும்புகிறேன்.

278. இந்த இரண்டு வாக்குமூலங்களையும் பற்றி நான் ஏன் இந்நிலையில் குறிப்பிடுகிறேன் என்றால், திரு அசோக்குமார் இந்த இரண்டு வாக்குமூலங்களிலும் மிகுந்த நம்பிக்கை வைத்து அவற்றைத் தமக்குச் சாதகமான வாக்குமூல ங்களாகக் கருதி வாதிட்டுள்ளார்.

279. கோட்டாட்சியர் முன்னர் பூலோகபாண்டி யத் தேவர் கொடுத்துள்ள வாக்குமூலத்தில் (சா.ஆ. ஏ. 109) சங்கரத் தேவர் தமக்குச் சவால் விட்ட தாக அவர் கூறியுள்ளார். அவரது சவால் மேலே கொடுக்கப்பட்டுள்ளது:

''நான் ஹரிஜன் மணியை அடித்துக் கொன்ற விஷயத்திற்கு இந்த டெட்சுமணன் தானே மனுப் போட்டான்.''

280. கோட்டாட்சியர் முன்னர் காசிப்பாண்டித் தேவர் கொடுத்துள்ள வாக்குமூலத்திலும் (சா.ஆ. ஏ. 125) அவர் சங்கரத் தேவர் தம்மை அச்சுறுத் தியதாகக் கூறியுள்ளார். அச்சமயம் சங்கரத் தேவர் பயன்படுத்திய வார்த்தைகள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன:

''அவர் தப்பிவிட்டார். அந்த வகைக்கு ஒரு லட்சம் செலவு செய்தோம். அதேமாதிரி ஒரு லட்ச ரூபாயை உங்கள் அண்ணன் மக்கள் நாலு பேரையும் நீலகண்டன் (1), லட்சுமணன் (2), செல்லத்துரை (3), முத்தையா (4) இவர்களை கொலை செய்து, மணியை எரித்த மாதிரி எரித்து விடுகிறோம் என்று என்னிடம் சொன்னார்''.

281. இந்த இரு வாக்குமூலங்களையும் பார்க்கு மிடத்து நாமே மணியைக் கொன்றதாக ஒப்புக் கொள்ளும் வகையில் சங்கரத் தேவர் பேசியுள்ளார் என்பது தெளிவாகிறது. ஆனால், அவர் உண்மை யில் அவ்வாறு பேசினாரா என்பதுதான் கவனிக்கப்படவேண்டிய பிரச்சினையாகும்.

282. கோட்டாட்சியர் முன் இந்த இரண்டு வாக்குமூலங்களையும் கொடுக்கையில், சங்கரத் தேவரின் அட்டூழியங்களைப்பற்றி புகார் செய்யவே பூலோகபாண்டியத் தேவரும், காசிப்பாண்டித் தேவரும் அவ்வாறு வாக்குமூலங்கள் கொடுத்தனர். அந்தச் சமயத்தில் அவர்கள் அத்தகைய வாக்கு மூலங்களைக் கொடுத்தது பொருத்தமானது; நம்பத் தகுந்தது. ஆனால் இந்த வாக்கு மூலங்களை கொலைக்குற்றம் ஒன்றுக்காக இத் தகைய விசாரணைக் கமிஷன்முன் சங்கரத் தேவ ருக்கெதிராக வழக்கு தொடரப்படும் என்று எதிர் பார்த்து, அச்சமயத்தில் பயன்படுத்திக்கொள்ள லாம் என்ற உள்நோக்கத்துடன் இந்த வாக்கு மூலங்கள் வேண்டுமென்றே சொல்லப்பட்டன என்று கூற முடியாது. சங்கரத் தேவரின் அட்டூழியங்களைப்பற்றிக் கோட்டாட்சியரிடம் புகார் செய்யும் நோக்கத்துடனேயே இத்தகைய வாக்குமூலங்கள் அளிக்கப்பட்டன. வேறொரு சமயத்தில் இந்த வாக்குமூலங்களைப் பயன் படுத்திக்கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் பூலோகபாண்டியத் தேவரும், காசித் தேவரும் இத்தகைய வாக்குமூலங்களைக் கொடுத்தனர் என்று சொல்வது நம்முடியாதது.

283. குற்ற விசாரணை ஒன்று நடந்தால், அல்லது கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டால் சங்கரத் தேவர் கூறியதாகச் சொல்லப்படும் வார்த்தை களைக் கொண்ட இந்த இரண்டு வாக்குமூலங்களும் பயன்படும் என்ற உள்நோக்கத்துடன் பூலோக பாண்டியத் தேவரும், காசித்தேவரும் இத்தகைய வாக்குமூலங்களைக் கொடுத்துள்ளனர் என்று திரு வெங்கடாசாரி சொல்லியுள்ளது நான் ஏற்கவில்லை. இத்தகைய வாதத்தில் உண்மை யிருப்பதாக நான் கருதவில்லை. இந்த இரு சூழ்நிலைகளுக்கும் இடையேயும் இரண்டைப் பகைமை எழுந்த சூழ்நிலையில் இந்தப் புகாருக்கு ஏதாவது ஆதாரமிருக்கலாம். அல்லது அதில் உண்மையிருக் கலாம் என்பது எனது கருத்தாகும். தனது உற வினர்களுக்கு நீங்கு விளைவிக்க சங்கரத் தேவர் எந்த அளவுக்கு அச்சுறுத்தியுள்ளார் என்பதைக் கோட்டாட்சியருக்கு விளக்கவே இத்தகைய வாக்கு மூலங்கள் அளிக்கப்பட்டுள்ளன. எனவே இந்த வாக்குமூலங்கள் போதுமான அளவுக்கு உண்மை யானவை என்ற அனுமானத்தில் இதனைப் பரிசீலிக்கலாம்.

284. இந்த வாக்குமூலங்களினால் ஏற்பட்ட இக்கட்டான நிலையிலிருந்து தப்பித்துக் கொள்வ தற்காகச் சங்கரத் தேவர், தான் 1980 ஆம்ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1ஆம் நாளன்றும், 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3ஆம் நாளன்றும் பூலோக பாண்டியத் தேவரையும் காசித் தேவரையும் சந்திக்கவே இல்லை என்ற பொய் வாக்குமூலத்தை வேண்டுமென்றே கொடுத்துள்ளார். தான் பூலோகபாண்டியத் தேவரையும் காசித் தேவரை யும் சந்தித்ததாகவும், மொட்டைக் கடிதம் எழுதியதற்கு இலட்சுமணத் தேவர்தான் காரணம் என்று தாம் குற்றம்சாட்டியதாகவும்சங்கரத்தேவர் ஒப்புக்கொண்டு வாக்குமூலம் ஒன்றைக் காவல் துறையினருக்குக் கொடுத்துள்ளார் (சா. ஆ. பி. 25) எனவே, சங்கரத் தேவர் இக்கமிஷன்முன் கொடுத் துள்ள வாய்மொழிச் சாட்சியம் முழுவதும் பொய் என்று தெரிகிறது. சங்கரத் தேவர் பொய் சொல்வதற்கு அஞ்சவில்லை என்பதும், அவருடைய வாய்மொழிச் சாட்சியம் நம்பத் தகுந்ததல்ல என்பதையும் சா.ஆ.பி. 25 நிரூபிக்கிறது. இந்த வழக்குக்கு தொடர்பில்லாத ஒப்புமூலங்களின் உண்மைத்தன்மையை இந்த வாக்குமூலம் நிரூபிக் கிறது. ஆனால், இந்த வாக்குமூலங்களில் குறிப் பிட்டுள்ள ஒப்புமூலத்தை கமிஷன் கருத்தில் கொள்ளமுடியாது. ஏனெனில், இந்த வாக்கு மூலங்கள் கமிஷனின் முன் செய்யப்படவில்லை. கோட்டாட்சியர் முன்னரே சொல்லப்பட்டது.

சங்கரத் தேவர் இத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்தினார் என்று பூலோகபாண்டியத் தேவரும், காரித் தேவரும் கமிஷன்முன் கூறியுள்ள சாட்சியத்தை நிரூபிக்கவே சா. ஆ. ஏ. 109, 125 ஆகிய வாக்கு மூலங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். வேறு வகையாகச் சொன்னால், கமிஷன் முன் பூலோகபாண்டியத் தேவரும், காரித் தேவரும் அளித்துள்ள சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாயின், கமிஷன்முன் உள்ள சாட்சியம் மேற்குறிப்பிட்ட ஒப்பு மூலங்களை நிரூபிப்பதற்குப் போதுமானது என்று ஏற்றுக்கொள்வதாயின், பூலோகபாண்டியத்தேவர், காரித் தேவர் கொடுத்த முந்தைய வாக்குமூலங்கள் அதாவது சா. ஆ. ஏ. 109, 125 ஆகியவைகளை அவர்கள் கமிஷனுக்கு முன் கொடுத்துள்ள வாய் மொழிச் சாட்சியத்தை நிரூபிப்பதற்குப் பயன் படுத்திக்கொள்ளலாம். இன்னும் சொல்லப் போனால், காரிப் பாண்டியத்தேவரும், பூலோக பாண்டியத் தேவரும் ஒப்புமூலம் பற்றி உண்மை யான நம்பகமான வாய் மொழிச் சாட்சியம் அளிக்க வேண்டும். அந்த வாய்மொழிச் சாட்சியம் உண் மையானதென்று கமிஷன் நிருபித் அடைந்தால் இந்த இருவரும் முன்னர் கொடுத்த வாக்குமூல களும் நம்பத் தகுந்தவை என்று கமிஷன் ஏற்கும். இந்தக் கோணத்திலிருந்து பார்க்கையில்தான் ஆதி நிராவிடர்களின் வழக்கு தோல்வியுற்றுள்ளது. ஏனெனில் பூலோகபாண்டியத் தேவரும், காரித் தேவரும் ஒப்புமூலம் பற்றிக் கொடுத்துள்ள வாய் மொழிச் சாட்சியம் நிருப்திகரமாக அமையாத தோடு, பொய்யாகவும் உள்ளது என்பது கமிஷனின் கருத்து.

285. பூலோகபாண்டியத்தேவர், காரிபாண்டியத் தேவர் ஆகியோருடைய சாட்சியம் கமிஷனுக்குத் திருப்திகரமாக இல்லை. ஒப்புமூலம் பற்றி இவர்கள் கூறும் சாட்சியம் பொய் என்று தெரிந்து விட்டது. எனவே இதுபற்றிய புதிய கதைகளும் புதிய கோணங்களும் ஏற்றுக்கொள்ள முடியாதவை யாகும். வாய்மொழிச் சாட்சியமே ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்குப் பொய்களைக் கொள்ளும்போது சா.ஆ.ஏ. 109, 125 ஆகியவை அறவே அடிபட்டுப்போகின்றன. வாய்மொழிச் சாட்சியத்தையே கமிஷன் ஏற்கமுடியாத நிலையில் நிருபிப்பதற்கான சாட்சியத்தையும் அதை கமிஷன் ஏற்கமுடியாது.

285. பூலோகபாண்டியத் தேவரும் காரி பாண்டி தேவரும் கமிஷன்முன் கொடுத்த வாய்மொழிச் சாட்சியத்தை இப்பொழுது காணலாம். அதாவது அவர்களது வாய்மொழிச்சாட்சியம் ஏற்கத்தக்கதா என்று ஆராயலாம்.

287. சங்கரத்தேவர் இந்த வழக்குக்குச் சம்பந்த மில்லாத ஒப்புமூலங்களைத் தங்களிடம் கூறியதாக இந்த இரண்டு சாட்சிகளும் கூறின்றனர். அதா வது 1980ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27ஆம் நாளன்றும், 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1ஆம் நாளன்றும், 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3ஆம் நாளன்றும் சங்கரத் தேவர் இத்த கைய ஒப்புமூலங்களைத் தங்களிடம் அளித்ததாக இவர்கள் கூறுகின்றனர். 1980 ஜூலை இறுதி வாரத்தில் சங்கரத் தேவர் மிகவும் பதட்டம் அடைந்திருந்ததாகவும், பூலோகபாண்டியத் தேவ ரையும், காரிப்பாண்டித் தேவரையும் சந்தித்து, இலட்சுமணனே பொய்க் கையெழுத்திட்ட மனு அனுப்பியதாகக் குற்றம் சாட்டியதாகவும், இலட்சு மணன் கொலை செய்யப்பட்டு, அவருடைய உடலும் மணியின் உடலைப்போல எரிக்கப்படும் என்று அவர்கள் இருவருக்கும் எச்சரிக்கை விடுத்த தாகவும் பூலோகபாண்டித் தேவர் தன்னுடைய சாட்சியத்தில் கூறுகிறார் (பக்கம் 430).

288. சங்கரத் தேவர், குமாரசாமித் தேவர் ஆகியோர் கேட்டுக்கொண்டதன் பேரிலேயே தாங்கள் சங்கரத் தேவரின் வீட்டுக்குச் சென்ற தாகப் பூலோகப் பாண்டியத் தேவர் தன்னுடைய சாட்சியத்தில் கூறியுள்ளார். பூலோகபாண்டியத் தேவர் தன்னுடைய சாட்சியத்தில் பயன்படுத்தி யுள்ள சொற்களையும், அதன் ஒரு பகுதியையும் எடுத்து எழுதுவது அவசியமாகும். சங்கரத் தேவர் மீதக் குறிப்பிட்டுள்ளவாறு கத்தியதாக பூலோக பாண்டியத் தேவர் தமது வாக்குமூலத்தில் குறிப் பிட்டுள்ளார்:—

''மணி தம்மா கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டதாக புனைப் பெயரில் மனு ஒன்று காவல் நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், அந்த மனுவை நிலகண்டனும் அவரது சகோதரர்களுமே அனுப்பியுள்ளார்கள் என்றும் சங்கரத்தேவர் எங்களிடம் கூறினார். எங்கள் பிள்ளைகள் இத்தகைய கீழ்த்தரமான செயல்களில் இறங்கமாட்டார்கள் என்று நாங்கள் ஆணித்தர மாக அவரது குற்றச்சாட்டை மறுத்தோம். குறிப்பாக இத்தகைய மனு ஒன்றை அனுப்பி சங்கரத்தேவருக்குத் தன்பம் இழைப்பதில் நீல கண்டனும், அவரது சகோதரர்களுக்கும் என்ன ஆதாயம் ஏற்படப்போகிறது என்று நான் கேட்டேன். இதைப்பற்றி அவர்களிடம் விசா ரித்து, அவர்கள் பதிலைச் சங்கரத்தேவருக்கு சொல்வதாகவும் நான் சொன்னேன். தாம் மணி யைக்கொலை செய்ததையும், அவரது சடலத்தை எரித்ததையும் நிலகண்டன் சகோதரர்களின் வேலைக்காரர்களாகிய காசியும், இராஜசிங்கமே அறிவர் என்று சங்கரத்தேவர் என்னிடம்கூறினார். எனவே இக்கொலை பற்றிக் காசியும் அவரது சகோதரருமே நீலகண்டனுக்கும் அவரது சகோ தரர்களுக்கும் கூறியிருக்க வேண்டும் என்றும், எனவே அவர்களதான்புனைப்பெயரில்அம்மனுவை எழுதியிருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.''

289. இந்தச் சாட்சியம் உண்மையானதல்ல; இதில் பொய்யுரை மிகைப்படுத்திச் சொல்லப் பட்டுள்ளது. சங்கரத்தேவரைக் கொலை வழக்கில் தொடர்புப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் வேண்டுமென்றே இந்தச் சாட்சியம் கொடுக்கப் பட்டுள்ளது. தாம் மணியைக்கொலை செய்ததை யும், அவருடைய சடலத்தை எரித்ததையும் நீலகண்டன் சகோதரர்களின் வேலையாள்களா யே காசியும், இராஜசிங்குமே அறிவர் என்று சங்கரத் தேவர் என்னிடம் கூறினார். எனவே இக்கொலை பற்றிக் காசியும், அவருடைய சகோ தருமே நீலகண்டனுக்கும் அவரு டைய சகோதரர் களுக்கும் கூறியிருக்க வேண்டும் என்றும், எனவே, அவர்கள்தான் புனைப்பெயரில் அம்மனுவை எழுதியிருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்'' என்று சங்கரத் தேவர் சொல்லியதாகக் கூறியுள்ள வாக்குமூலம் காசியையும் இராஜசிங்கையும் கொலை நடந்ததை நேரடியாகப் பார்த்த சாட்சிகளாகக் கொண்டுவரும் நோக்கத்துடனேயே சொல்லப் பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது. வேறு வகையாகச் சொன்னால் காசியையும், இராஜ சிங்கையும் கொலையை நேரில் பார்த்த சாட்சி களாகப் பின்னர் கொண்டுவரும் நோக்கத்துட னேயே இந்த ஒப்புமூலம் பற்றிய வாக்குமூலம் கொடுக்கப்பட்டுள்ளது. காசி, இராஜசிங் ஆகி யோருடைய சாட்சியம் பொய்யானவை. சங்கரத் தேவர் செய்ததாகச் சொல்லப்படும் கொலையை அவர்கள் நேரில் பார்க்கவில்லை என்பதை நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். இவர்கள் சாட்சியம் முழுவதும் பொய்.

290. மணியைத் தாமே கொலை செய்ததாகச் சங்கரத்தேவர் ஒப்புக்கொண்டது போன்ற ஒப்பு மூலம் ஒன்றை அவரிடம் உருவாக்குவதும், அதற்குச் காசியும் சிங்கும் நேரடி சாட்சிகள் என்ற நிலையை உருவாக்குவதுமே பூலோகபாண்டியத்தேவர், காசிப்பாண்டித்தேவர் ஆகியோரின் அடிப்படை நோக்கமாகும் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது.

291. மணியைக் கொலை செய்தது, அதைக் காசியும் சிங்கும் நேரடியாகப் பார்த்தது ஆகிய வற்றை சங்கரத்தேவர் தாமே ஒப்புக்கொண்டார் என்ற விஷமத்தனமாகச் சாட்சியத்தை அளிப்பதே பூலோகபாண்டியத்தேவர், காசிப்பாண்டித் தேவர் ஆகியோரின் நோக்கமாகும். காசியும், அவருடைய சகோதரர் இராஜசிங்கும் சங்கரத்தேவர் செய்ததாகக் கூறப்படும் கொலைக்கு நேரடிச் சாட்சிகள் அல்ல; அவர்கள் சாட்சியம் முழுவதும் பொய்; எனவே அதனைத் தள்ளிவிட வேண்டும் என்று நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். நிலைமை அப்படியிருக்கையில், சங்கரத் தேவர் மணியைத் தான் கொலை செய்ததாகவோ, அவரது சட்ட லத்தை எரித்ததாகவோ, காசியும் சிங்கும் அதனை நேரில் பார்த்ததாகவோ ஒப்புக்கொண்டிருப்பார் என்பது நம்ப முடியாதது. இக்காரணங்களினால் பூலோகபாண்டியத் தேவர், காசிப்பாண்டித்தேவர் ஆகியோர் கொடுத்துள்ள பொய்ச் சாட்சியங்களை நான் தள்ளிவிடுகிறேன்.

292. சங்கரத் தேவர் 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1ஆம் நாளன்று காரில் பாண்டித் தேவரிடம் கூறிய ஒப்புமூலத்தை அடுத்தபடியாகப் பார்ப்போம். காசித் தேவர் இதுபற்றித் தன்னுடைய சாட்சியத்தில் (பக்கம் 465) பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''தான் என் வீட்டில் வைத்து அரிஜன் மணியை அடித்துக்கொன்றுவிட்டு வீட்டுக்கு வெளியே போட்டதாகவும், என் வண்டியில் மணியை தூக்கிப்போட்டு,சண்முக சுந்தரத் தேவர், சுடலைக் கண்ணு, அரிஜன காலனிக்குக் கொண்டு போய் மணி வீட்டு முன் போட்டு, நாங்கள் 10 அல்லது 15 பேர்கள் சுட்டு எரித்ததாகவும், இந்தப் பெட்டிஷனில் குறித்திருக்கிறது. மறு படியும் என் மைத்துனன் ராமகிருஷ்ணன் களவு பொருள்களை ஒளித்ததாகவும் அதே மனுவில் குறிப்பிட்டிருக்கிறது. இந்த விபரம் காசிக்கும் இராஜசிங்குக்கும்தான் தெரியும். இவர்கள் இரு வரும்தான் நீலகண்டன், செல்லத்துரையிடம் வேலைப்பார்க்கிறார்கள். அவர்கள் இரண்டு பேரும் லட்சுமணனிடம் சொல்லி இலட்சுமணன் தான் இந்த பெட்டிஷனைப் போட்டார். ஆகையால் அவனை திருநெல்வேலி வந்து, காரில் தூக்கிப்போட்டு கண்டதுண்டமாக வெட்டி கையில் தந்துவிடுவேன். இந்த மொட்டை பெட்டிஷன் உன்னை என்ன செய்யும் என்று கேட்டேன். அதற்கு நான்தான் மணியை அடித்து கொன்று எரித்தேன். இந்த விவரங்கள் எல்லாம் இந்தமனுவில் இருக்கிறது. நான் லட்சுமணனைக் கொல்லாமல் விடப்போவதில்லை என்றார்.''

293. மணியைக் கொலை செய்ததைக் காசியும் சிங்கும் நேரடியாகப் பார்த்ததாகச் சங்கரத்தேவர் ஒப்புக்கொண்டது எப்படிப் பொய்யானதோ, அதேபோன்று இந்த ஒப்புதல் வாக்குமூலமும் பொய்யானது: குறைபாடு உள்ளது. காசிப் பாண்டித் தேவரின் சாட்சியத்தை இது அறவே தகர்த்துவிடுகிறது.

294. இந்த வழக்குக்குத் தொடர்பில்லாத ஒப்பு தல்வாக்கு மூலத்தைப் பொறுத்தவரையில் (பக்கம் 436) சங்கரத்தேவர் பின்வருமாறு சொல்லியிருப்ப தாகக் கூறப்படுகிறது:

''தான் மணியைக் கொலை செய்ததைக் காசி யும் இராஜசிங்குமே அறிவர் என்றும், எனவே, அவர்கள் சங்களனாங்குளத்தில் வசிக்கக் கூடாது என்றும் சங்கரன் அவர்களிடம் கூறினார்''.

''தாம் மணியைக் கொலை செய்ததைப் பற்றி இராஜசிங்கும் காசியுமே கூறியிருக்க முடியு மென்றும், எனவே லட்சுமணன்தான் அந்த மனுவை அனுப்பியிருக்க வேண்டும் என்றும் சங்கரன் கூறினார்.''
பக்கம் 441—442:

''1980ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3-ம் நாளன்று ஆதி திராவிடர் குடியிருப்பில் சங்கர னுக்கும் எனக்கும் சச்சரவு ஏற்பட்டபோது சங்கரன், தானே மணியைக் கொலைசெய்ததாகவும், சட லத்தை எரித்ததாகவும், இந்த விவரம் காசிக்கும் சிங்குக்கு மட்டுமே தெரியும் என்றும் எனவே, இந்த வேலைக்காரர்களிடமிருந்து லட்சுமணன் விபரம் அறிந்து புனைப் பெயரில் மனு அனுப்பி யிருக்கவேண்டுமென்றும் சங்கரன் குறிப்பிட்டார்.

295. பூலோகபாண்டியத் தேவர் வாக்கு மூலத்தைப்பற்றிச் சொல்லிய கருத்துக்களே காசிப்பாண்டித்தேவரின் வாக்குமூலத்துக்கும் பொருந்தும்.

296. பூலோகபாண்டியத்தேவர், காசிப்பாண்டித் தேவர் ஆகியோரின் சாட்சியங்களை நான் கவன மாக ஆராய்ந்தேன். அவர்களுடைய சாட்சியம் உண்மை என்று என்னால் ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. சங்கரத் தேவர் தங்களிடம் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக இவர்கள் கூறும் வாக்குமூலம் பொய்யானது: புனைந்து கூறப்படுவதாகும். மணியைக் கொலை செய்ததாகவும், அவரது சடலத்தை எரித்ததாகவும், இந்த விவரத்தைக் காசியும் சிங்குமே அறிவர் என்றும் கூறியதாகவும் சங்கரத்தேவர் ஒப்புக்கொண்டதாகத் தோன்றச் செய்வதே இதன் நோக்கமாகும். வேறுவகை யாகச் சொன்னால், காசியும் சிங்கும் சங்கரத் தேவர் செய்ததாகக் கூறப்படும் கொலையை நேரில் பார்த்த சாட்சிகளாக ஆக்குவதே இவர் களுடைய உள் நோக்கமாகும்.

297. இத்தகைய ஒப்புதல் வாக்குமூலங்கள் மிக வும் நம்பகமான சாட்சிகளில் நிராகரிக்கப்பட வேண்டும். இத்தகைய ஒப்புதல்கள் கொடுங் கொலை வழக்குகளில் மிகவும் உன்னிப்பாகப் பரி சீலனை செய்யப்படவேண்டும். வாய்மொழிச் சாட்சியம் மிகவும் கண்ணியமுள்ளவர்களால் அளிக்கப்பட்டிருப்பதோடு, உண்மையாகவும் உறுதி யாகவும் இருந்தாலன்றியும் அதன் அடிப்படையில் ஒருவருக்குத் தண்டனை விதிப்பது நியாயமல்ல. இங்கே சாட்சியம் புனைந்துரைக்கப்பட்டதாகவும், கற்பனையாகவும், பொய்யானதாகவும் அமைந் திருப்பதால் ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு இதனை ஆதாரமாகக்கொண்டு ஒருவரைத் தண்டிப்பது மிகவும் அபாயகரமானதாகும்.

298. இக்காரணங்களினால், சங்கரத் தேவர் கூறியதாகச் சொல்லப்படும் இந்த ஒப்புதல் வாக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்டு இரு அசோக் குமார் வாதித்ததை நான் ஏற்க மறுக்கிறேன்.

தொகுதி II

299. காவல்துறையினர் தேவர் வகுப்பினருக்கு முற்றிலும் உடந்தையாக இருந்ததாகச் சொல்லப்பட்டது பற்றி அடுத்ததாகக் கவனிப்போம். எந்தச்ப் சாட்சியத்தைப் பொறுத்தவரை குற்றம் சாட்டப்பட்டவர் புலன் விசாரணைக்குத் தடையாக இருந்தார் என்பது சாட்சியத்திலிருந்து தெளிவாகத் தெரிகிறது. இதிலிருந்தே அவர்கள் குற்றம் செய்துள்ளனர் என்பதை அனுமானிக்கலாம்.

300. உட்ராஃப், அமீர் அலி ஆகியோர் எழுதிய '' சாட்சியச் சட்டம் '' (14-வது பதிப்பு) 2812ஆம் பக்கத்தில் 112ஆம் விதியில் கூறப்பட்டுள்ள குற்றப் புலன் விசாரணைக்கு குந்தகம் விளைவிக்க ''குற்றம் சாட்டப்பட்டவர் முயற்சி செய்துள்ளார்'' என்று குறிப்பிடும் சட்டத்தின் விளக்கத்தை ஆதி நாராயிடர் சார்பில் வழக்காடிய வழக்குரைஞர் திரு அசோக்குமார் தனக்கு அடிப் படையாக வைத்துக்கொண்டார்.

301. வழக்குரைஞர் திரு அசோக்குமாரின் கூற்றுப்படி காவல்துறையினருடன் சங்கர தேவர் உடந்தையாக இருந்தார், கூட்டுச் சதி செய்தார், ஒத்துழைத்தார் என்பது 11-4-1980 அன்று முத்தையா என்பவர் கொடுத்த புகார் சா. ஆ. பி. 10இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனோ தானோ என்ற முறையிலும், திருப்தி இல்லாத வகையிலும், நேர்மையற்ற முறையிலும் மனுவை விசாரித்தது பற்றியும் சப்-இன்ஸ்பெக்டர் சொக்கலிங்கசாமி மனுவை விசாரித்து முடிவு செய்தது பற்றியும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர் கொடுத்த முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் சந்தேகத்திற்கிடமான சூழ்நிலையில் மணி இறந்தது பற்றிய விசாரணை தொடர்பாக 360/80ஆம் குற்ற எண்ணில் இன்ஸ்பெக்டர் அருணாசலம் திருப்தி இல்லாத வகையிலும், நேர்மையற்ற முறையிலும் விசாரணை நடத்தியது பற்றியும் முத்தையா புகார் கொடுத்துள்ளார்.

302. முத்தையா என்பவர் கொடுத்த புகரான சா. ஆ. பி. 10 ஏற்கெனவே நகல் எடுக்கப் பட்டுள்ளது. ஆனால், அதனுடைய பொருத்தம் குறித்து அதை இங்கே மீண்டும் எடுத்துரைக்கிறேன்

'' நாங்குநேரி தாலுகா நிசையன்விளை போலீஸ் சரகம் சங்கனாங்குளம் சேரியான பெரு மக்கள் சார்பில் எழுதுவது.

31-3-1980ஆம் தேதியில் மணி என்பவர் விஷம் அருந்தி மரணம் அடைந்தார். மணி, சுடலை என்பவரின் மகனாவார்.

மணியின் மரணத்துக்குக் காரணம் வாலிபால் மாடசாமித் தேவரின் தம்பி சங்கரன் என்பவரே. மணியின் மனைவி ஜராஜசெல்வம் சங்கரன்வீட்டில் வேலை செய்து வருகிறாள். ஜராஜசெல்வத்தைச் சங்கரன் வைப்பாக வைத்துக் கொண்டார். இதை அறிந்த மணி தன் மனைவி ஜராஜசெல்வத்தைக் கண்டித்தார். சங்கரன் மணியை அடியடி யென்று அடித்து நொறுக்கிப்போட்டு விட்டார். மனம் உடைந்த மணி விஷம் குடித்துவிட்டுச் சங்கரர் தேவர் வீட்டிலேயே போய்ப் படுத்துக்கொண்டார். சிறு நேரத்தில் மரணம் அடைந்தார். சங்கரன் வீட்டிலேயே மரணம் அடைந்தார். பிரேதத்தை போலீஸில் சொல்லாமலேயே எரித்து விட்டார் சங்கரன். அவரது கையாட்களை வைத்து அவரது கையாட்கள் வள்ளிநாயகத் தேவர், மகன் சண்முக சுந்தரம்-2. சொல்வினங்கும் பெருமாள் மகன் சுடலைக்கண்ணன்—3, நாவிதன் சாமி மகன் மாடசாமி மற்றும் பலர்.

சங்கரத் தேவருக்கு இவ்வளவு தைரியத் திற்குக் காரணம் பாளையங்கோட்டையில் விஜிலன்ஸ் இன்ஸ்பெக்டராக இருக்கும் இராம கிருஷ்ணனின் உதவியே. இராமகிருஷ்ண வஞ்ச ஒழிப்பு அதிகாரியாகையால் இங்கிருக்கிற போலீஸ் கள் சங்கரத் தேவருக்கு அடங்கியே நடக்கிறார் கள். இன்ஸ்பெக்டர் இராமகிருஷ்ணனுக்கு சங்கரத் தேவரின் தங்கையைத் திருமணம் செய்திருக்கிறார் என்பதை இதில் குறிப்பிடத் தக்கது.

மற்றும் சங்கரத் தேவர், சங்கனாங்குளம் சேரியாகிய எங்களூரில் காலம் சென்ற கருணைத்தாள் மனைவி நாகம்மாளோடும் தொடர்பு வைத்துகொண்டு இரவும், பகலும் இங்கேயே முகாம் போடுவதைப் பார்த்தால்வேறு வேறு பெண்களுக்கு எல்லாம் ஒரே பயம். இத்தக் காமுகன் கண் நம் மீதும் படிந்து விடக்கூடாதே வென்று.

சங்கரத் தேவரின் இந்த லீலா விநோத அட்ட காசங்களுக்கும் போலீஸ் துறையில் சர்வாதிகாரம் புரிவதற்கும் காரணம் இராமகிருஷ்ணனின் தைரியமே என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்து கிறோம்.

இந்த விவரங்கள் எல்லாம் நாகம்மாளின் சின்ன மாமா சுந்தரம் என்பவரிடம் தனியாக விசாரித் தால் தெரியவரும்.

11-4-1980. (ஒ.ம.) முத்தையா.

நகல்கள் :—

1. திரு துரைராஜ் டி.ஐ.ஜி. (ஐ.பி.எஸ்.) அவர்கள். பாளையங்கோட்டை.
2. திரு செல்வராஜ், மாவட்ட கலெக்டர், ஐ.ஏ.எஸ்., அவர்கள், திருநெல்வேலி.
3. திரு தமிழ் மாநில போலீஸ் அதிகாரி அவர்கள் (ஐ.ஜி.) அவர்கள், சென்னை.
4. திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், தமிழக மாநிலக் கவர்னர் அவர்கள், சென்னை.
5. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கோவிந்தராஜ், நிசையன்விளை காவல் நிலையம், நிசையன்விளை.

303. திருஞ்ணசாமி 30-1-1980 முதல் 18 12-1980 வரை நிசையன்விளை காவல் நிலையத்திற்கு சப்-இன்ஸ்பெக்டராகப் பணி புரிந்தார். இங்கு சப்-இன்ஸ்பெக்டராக அவர் குறிப்பிடப்படுகிறார்.

304. சா. ஆ. பி. 10 என்பது 11-4 1980 ஆம் நாளிட்டது ஆகும். அது காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு 15—4—1980 அன்று வரப்பெற்றது. அது பல்வேறு காவல்துறை சார்நிலை அதிகாரிகள் மூலமாக சப்-இன்ஸ்பெக்டர் திருஞ்ணசாமிக்கு 30-4-1980-ல் வரப்பெற்றது. 1980 மே மாதத்தில் 31 நாட்களும், 1980 ஜூன் மாதத்தில் 20 நாட்களும் ஆக மொத்தம் 51 நாட்கள் சப்-இன்ஸ்பெக்டர் திருஞ்ணசாமி இது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வழக்குரைஞர் திரு அசோக்குமாரின் கூற்றுப்படி, தேவர் வகுப்பினருடன் அவர் உடந்தையாக

இருந்ததாலும். அந்த வகுப்பினருக்குச் சாதகமாக இந்த வழக்கில் ஆவணங்களைத் தயாரித்ததாலும் சா. ஆ. பி. 10-க்கு நேர்மையற்ற முறையில் முடிவு தெரிவிக்கவும் சப்-இன்ஸ்பெக்டர் இவ்வளவு நாட்கள் எடுத்துக்கொண்டார்.

305. சான்றாவணம் பி. 10 மிகவும் சூழ்ச்சியான ஆவணமாகும். இது குறித்து கவனமாகவும், திறமையாகவும் விசாரணை செய்ய வேண்டியுள்ளது. இந்த மனுவில் குற்றத்தில் தொடர்புபடுத்தக்கூடிய பல தகவல்கள் உள்ளன. வாலிபால் மாடசாமித் தேவரின் சகோதரர் சங்கரத் தேவர் மட்டுமே மணியின் மரணத்திற்குப் பொறுப்பாவார் என்றும், மணியை சங்கரத் தேவர் கடுமையாக அடித்தார் என்றும், மணி மனம் கொதித்து விஷம் குடித்து சங்கரத் தேவரின் வீட்டில் இறந்தார் என்றும். இறந்த உடலை, காவல் துறையினருக்குத் தெரிவிக்காமல் அவர் எரித்து விட்டார் என்றும் அது கூறுகிறது. சங்கரத் தேவரின் இந்தக் கொடுமைகள் அனைத்திற்கும் அவருடைய மைத்துனர் இராமகிருஷ்ணன் பொறுப்பாவார் என்றும் ஒரு கூற்று உள்ளது. சங்கரத் தேவரின் இக் கொடுமைகள் அனைத்திற்கும், மற்றவர்களுடன் அவருடைய கையாட்களான சண்முகசுந்தரம், சுடலைக்கண்ணு, நாவிதன் மாடசாமி ஆகியோர் பொறுப்பாவார்கள் என்றும், இச்சம்பவம் பற்றிய விவரங்கள் அனைத்தும், நாகம்மாவின் மாமா சுந்தரத்திடமிருந்து பெறலாம் என்றும் சா.ஆ.பி. 10-ல் ஒரு கூற்றும் உள்ளது.

306. புலன் விசாரணையைத் தொடங்குவதற்கு 51 நாட்கள் காலதாமதப் படுத்தியதற்காக சப்-இன்ஸ்பெக்டர் கடுமையாகக் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அவர், பொய்யான, மழுப்பலான திருப்தியில்லாத பதில்களைக் கூறினார். காவல்துறையினருடன் உடந்தை, ஒத்தழைப்பு இருந்தது என்பதை திரு அசோக்குமார் விசாரணையின் ஆரம்பத்திலிலேயே போதுமான அடிப்படையுடன் எடுத்துரைத்தார். விசாரணை செய்வதற்கு 51 நாட்கள் காலதாமதம் ஆயிது குறித்து விவரிக்கப்படவில்லை. காவல் துறையினருடன் தேவர் வகுப்பினர் உடந்தையாக இருந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டை ஆராய்கையில் அது ஒரு முக்கிய கருத்தாக அமைந்தது.

307. சா. ஆ. பி. 10 மனு முத்தையாவால் கையெழுத்திடப் பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது; இந்த முத்தையா பற்றிய விவரங்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை; முத்தையாவின் தந்தை பெயர் கொடுக்கப்படவில்லை. முத்தையாவின் முகவரியும் கொடுக்கப்படவில்லை. சப்-இன்ஸ்பெக்டர் எச்சரிக்கையாக இருப்பதற்கு இதுவே போதுமானதாக உள்ளது. மனுவில் கூறப்பட்டுள்ள குற்றம் சாட்டும் தகவல்களைக் கருத்திற்கொண்டு பார்த்தால், மேற்சொன்னது குறித்து கவனமாகவும், அறிவார்ந்த முறையிலும் விசாரணை செய்யப்பட வேண்டும். வழக்கமான நடைமுறைப்படி சப்-இன்ஸ்பெக்டர் முதலில் அறிவார்ந்த விசாரணையை செய்து, இந்த முத்தையாவைக் கண்டுபிடித்து மணி, எந்தச் சூழ்நிலையில் மரணமடைந்தார்என்பதை ஆராய்ந்து கண்டுபிடித்திருக்க வேண்டும். அந்த நடைமுறையில் அவர், மணியின் மனைவி இராஜசெல்வம், அவளின் பெற்றோர்கள், மணியின் தந்தை, தாய், நெருங்கிய உறவினர்கள் ஆகியோரைப் பற்றி விசாரித்திருக்கவேண்டும். மணியைச் சங்கரத் தேவர் கடுமையாக அடித்தாரா என்பதையும் அவர் கண்டறிந்திருக்க வேண்டும். சப்-இன்ஸ்பெக்டர் மணியின் மரணத்திற்கான காரணத்தையும், சங்கரத் தேவர் கொடூரமாக அடித்ததால் மணிக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மையையும் அவர் கண்டறிந்திருக்க வேண்டும். மணி விஷம் குடித்து விட்டு இறந்தாரா என்பது பற்றியும் எப்பொழுது, எப்படி அவர் உடல் எரிக்கப்பட்டது என்பது பற்றியும் அவர் ஆராய்ந்திருக்க வேண்டும். ஐயத்திற்கிடமான சூழ்நிலைல் கொலை செய்யப்பட்ட மரணம் நிகழ்ந்தது பற்றிய குற்றத்தைப் புலனாய்வு செய்கையில் இது மிகவும் முக்கியம் என்பதை சப்-இன்ஸ்பெக்டர் கவனித்திருக்கவேண்டும். இறந்த உடல் எந்த முறையில் எரிக்கப்பட்டது என்பது மிகவும் முக்கியம்; இந்த வழக்கில் உண்மையை கண்டறிய இது மிகவும் உதவும். சண்முகசுந்தரத்தையும், சுடலைக் கண்ணுவையும் அவர் விரிவாக விசாரணை செய்து தொடர்புடைய தகவல்கள் அனைத்தையும் பெற்றிருக்கவேண்டும். நாகம்மாவையும், சுந்தரத்தையும் அவர் விசாரித்திருக்க வேண்டும். இவை அனைத்தும் தொடக்க நடவடிக்கைகளாகும். சா. ஆ. பி. 10-ல் கண்டுள்ள விவரங்களைப் போன்ற ஒரு மனுவைக் கருத்தில் கொண்டு காவல் துறை அதிகாரி ஒருவர் விசாரணை செய்ய வேண்டும்.

308. இந்த மனு சா. ஆ. பி. 10 காலதாமதமின்றி மிகக் குறுகிய காலத்தில் கொடுக்கப்பட்டது என்பது முக்கியமானதாகும். ஏனெனில், மணியின் மரணம் 31–3–1980 அன்று ஏற்பட்டது. சா. ஆ. பி. 10 போதுமான விவரங்களை—தொடர்புபடுத்தக்கூடிய விவரங்கள் பற்றிய முழு விவரங்களைக்—கொண்டிருப்பதைப் பார்த்தால் 10 நாட்கள் காலதாமதமானது அவ்வளவு ஒன்றும் பெரிதல்ல.

309. இது போன்ற ஒரு விஷயம் கடுமையான குற்றம் சம்பந்தப்பட்டதாக இருந்து கடுமையான வினாவை குற்றச் சாட்டுகள் சா.ஆ.பி. 10-ல் அடங்கியுள்ளபோது சப்-இன்ஸ்பெக்டர் 51 நாட்கள் நடவடிக்கை எடுக்காமல், ஆனால் புலன் விசாரணையை ஒரே நாளில் முடித்து வழக்கை முடித்துவிட்டு, இந்த விஷயத்தில் நடவடிக்கை எதுவும் எடுக்கத் தேவையில்லை என்று அறிக்கை அனுப்பி விட்டார் என்பது பற்றி திரு அசோக் குமார் வலுவான எதிர் கருத்துக்களைத் தெரிவித்தார். சப்-இன்ஸ்பெக்டரின் அறிக்கை சா.ஆ.ஜி. 2 ஆக குறிப்பிடப் பட்டுள்ளது.

310. மணி அவருடைய வீட்டில் இயற்கையாக மரணமடைந்தார் என்று திருஞானசாமியின் புலன் விசாரணை சாதாரணமாகத் தெரிவிக்கிறது.

311. அவருடைய அறிக்கை சா.ஆ.ஜி. 2, 30–6–1980 நாளிடப்பட்ட போதிலும், சப்-இன்ஸ்பெக்டர் சங்கனாங்குளம் சேரியில் 21–6–1980 அன்று ஒரே நாளில் விசாரணை நடத்தினார் என்று தெரிவிக்கிறது. சப்-இன்ஸ்பெக்டர் விசாரணையை எந்த இடத்தில் நடத்தினார் என்பது குறித்து கடுமையான, முக்கியமான முரண்பாடுகளை வாய்மொழிச் சாட்சியம் புலப்படுத்துகிறது. சப்-இன்ஸ்பெக்டர் 772ஆம் பக்கத்தில் தன்னுடைய சாட்சியத்தில், மாதா கோயிலின் முன் உள்ள தேவர் வகுப்பினரின் குடியிருப்பில் தான் விசாரணையை நடத்தியதாகவும் முத்தையாவை (D.P.W. 6) சேரியில் தான் விசாரித்ததாகவும் கூறியுள்ளார். சப்-இன்ஸ்பெக்டரின் கூற்றுப்படி அவர் இங்கு சென்ற போது சேரியில் முத்தையா (D.P.W. 6) இல்லை என்றும், எனவே, திருமலாபுரத்திலிருந்து முத்தையாவை அழைத்துவரக் காவலர் ஒருவரை

தான் அனுப்பியதாகவும் அவர் கூறினார். சங்கரத் தேவர் அவர் வீட்டில் விசாரிக்கப் பட்டார் என்று சப்-இன்ஸ்பெக்டர் கூறுவார் ; இராமச்சந்திரதேவர் அவர் வீட்டில் விசாரிக்கப் பட்டார் ; சண்முகசுந்தரம் அவருடைய வீட்டில் விசாரிக்கப்பட்டார் ; சுடலைக்கண்ணுவும் தேவர் வகுப்பினரின் குடியிருப்பில் உள்ள அவருடைய வீட்டில் விசாரிக்கப்பட்டார். இருப்பினும், சப்-இன்ஸ்பெக்டர் அவருடைய அறிக்கையான சா.ஆ. ஜி. 2-ல் விசாரணையை சேரியில் நடத்தியதாக வேண்டுமென்றே உண்மையைத் திரித்துக் கூறினார்.

312. சங்கரத் தேவர், சுடலைக்கண்ணு, சண்முகசுந்தரம், ராம முன்சிப் இராமச் சந்திரன் ஆகிய அனைவரும் சேரியில் விசாரிக் கப்படவில்லை. முத்தையாவும் சங்கனாங்குளம் சேரியில் விசாரிக்கப்படவில்லை. எனவே, விசாரணை நடந்த இடமாக பத்தி 5-ல் சங்கனாங் குளம் சேரி என்று குறிப்பிடப்பட்டிருப்பது முற்றிலும் பொய்யானதாகும். அது பொய் யான பதிவாகும் ; உயர் அதிகாரிகளுக்குத் தவறான எண்ணத்தைத் தோற்றுவிப்பதாக இருக்கும்.

313. குறுக்கு விசாரணையின்போது சாட்சி (கிருஷ்ணசாமி) அளித்த பதில்களை திரு. அசோக் குமார் அடிப்படையாக வைத்துக் கொண்டார். 21–6–1980 அன்று சா.ஆ.பி. 10 தொடர்பாக விசாரணை செய்வதற்கு சப்-இன்ஸ்பெக்டர் சங்கனாங்குளத்திற்குச் செல்ல வில்லை என்பதையும், அன்று அவர் வேறு வேலையில் மும்முரமாக இருந்தார் என்பதையும், மது விலக்குச் சோதனை தொடர்பாக சப்-இன்ஸ்பெக்டர் அரை மணிநேரம் மட்டுமே சங்கனாங்குளத்தில் இருந்தார் என்பதையும் பொது நாட்குறிப்பில் உள்ள பதிவுகள் காட்டு கின்றன. 21–6–1980 அன்று சப்-இன்ஸ்பெக்டர் நடத்தியுள்ளதாக ஒப்புக் கொண்டுள்ள விசாரணை சம்பவங்களை விளக்குவதற்கு குறைந்தது 5 மணி நேரம் பிடிக்கும். 21–6–1980 அன்று பொது நாட்குறிப்பில் உள்ள பதிவுகள், அவர் சங்கனாங்குளத்தில் செலவிட்ட அரை மணி நேரம் தவிர அவர் மற்ற இடங் களுக்குச் செல்வதில் மும்முரமாக ஈடுபட் டிருந்தார் ; சேரியில் வழக்கை (சா.ஆ. பி. 10) புலன் விசாரணை செய்வதற்கு அவர் நேரம் எதையும் செலவிடவில்லை.

314. பொது நாட்குறிப்பில் உள்ள பதிவு களை முக்கியமாக கருத்தில் கொண்டு 21–6–1980 அன்று காவல் துறை சப்-இன்ஸ்பெக் டரின் நடவடிக்கைகள் குறித்து அவரைக் கடுமையாக விமரிக்கக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும். அவருடைய பதில்கள், பதிவேட்டில் 793, 794 பக்கங்களில் உள்ளன. பதிவேட்டில் 793, 794 பக்கங்களில் உள்ளன. பொது நாட்குறிப்பின் 30 ஆம் பக்கத்தில் (சா.ஆ. ஏ. 158) உள்ள பதிவுகள், சப்-இன்ஸ் பெக்டர் சங்கனாங்குளத்தில் மதுவிலக்குசோதனை நடத்துவதற்காக 21–6–1980 அன்று காலை 10-00 மணிக்கு காவல் நிலையத்தை விட்டுச் சென்றார் என்றும், பகல் 12–30 மணிக்குச் சில குற்றவாளிகளுடன் நிசையன்விளை காவல் நிலையத்திற்குத் திரும்பி வந்தார் என்றும் காட்டுகின்றன. 21–6–1980 அன்று அவர் சங்கனாங்குளம் சிராமத்திற்கு மது விலக்குச் சோதனைக்காக மட்டுமே சென்றார் என்பது அந்தப் பதிவுகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது ; இந்த சோதனைக்கு 2½ மணி நேரம் ஆயிற்று.

315. பொது நாட்குறிப்பில் உள்ள இந்தப் பதிவுகளிலிருந்து பார்க்கும்போது 21–6–1980 அன்று சப்-இன்ஸ்பெக்டர் சங்கனாங்குளம் கிராமத்திற்கு சா. ஆ. பி. 10-ஐ விசாரணை செய்வதற்காகச் சென்று, விசாரணையை 21–6–1980 அன்று முடித்துவிட்டதாகச் சொல்வது நேர்மையற்றதாகும்.

316. அடுத்ததாக, சப்-இன்ஸ்பெக்டர், மது விலக்குச் சோதனை நடத்துவதற்காக மகாதேவன் குளத்திற்குச் சென்றார் என்பதையும் பொது நாட்குறிப்பில் உள்ள பதிவுகள் காட்டுன்றன. ஒவ்வொரு மதுவிலக்குச் சோதனைக்கும், மது விலக்குப் புலன் விசாரணைக்கும், அவை தொடர்பான அத்தாட்சிகளைத் தயாரிப்பதற்குக் குறைந்தது 45 நிமிடங்கள் ஆகும் என்று சப்-இன்ஸ்பெக்டர் ஒப்புக் கொண்டுள்ளார்.

317. சங்கனாங்குளம் கிராமம், நிசையன் விளைக் காவல் நிலையத்திலிருந்து சுமார் 12 மைல் மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. சங்கனாங்குளம் மேற்குக்கும், கிழக்குக்கும் இடையே உள்ள தொலைவு 1½ மைல் மீட்டர் ஆகும். நிசையன்விளையிலிருந்து மகாதேவன் குளம் முற்றிலும் வேறுபட்ட, எதிர்நிசையில் அமைந்துள்ளது ; சங்கனாங்குளத்திற்கும், மகா தேவன் குளத்திற்கும் இடையே உள்ள தொலைவு சுமார் 3 மைல் மீட்டர் ; சங்கனாங்குளத்திலிருந்து கிழக்கு மகாதேவன் குளம் சுமார் 4 மைல் மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. நிசையன்விளையிலிருந்து மகாதேவன் குளம் சுமார் 1½ மைல் மீட்டர் தொலைவில் இருக்கும். இவ்வாறாக, 21–6–1980 அன்று மகாதேவன் குளத்தை சென்றடைவதற்கு சப்-இன்ஸ்பெக்டர் சுமார் 18 மைல் மீட்டர் தொலைவு பயணம் செய்ய வேண்டும். மகாதேவன் குளத்தில் சோதனையை முடிப்பதற்கு 21–6–1980 அன்று முழுவதையும் செலவிட்டிருக்கவேண்டும்.

318. சப் இன்ஸ்பெக்டர் சங்கனாங்குளம் சேரிக்குச் சென்று, அந்திருந்து முத்தையாவைக் கூட்டி வருவதற்காக திரும்லாபுரத்திற்குக் காவலர் ஒருவரை அவர் அனுப்பினார் என்றும், அது, சங்கனாங்குளம் சேரியிலிருந்து சுமார் 12 மைல்மீட்டர் தொலைவில் உள்ளது என்றும், காவலர், முத்தையாவை கூட்டி வருவதற்குக் குறைந்தது 2 மணி நேரம் ஆகும் என்றும் சப்-இன்ஸ்பெக்டர் மேலும் சாட்சியம் அளித்தார். திரு. அசோக் குமார், சப்-இன்ஸ்பெக்டரைக் குறுக்கு விசாரணை செய்யும் போது, அவர் மனம் இடிந்து போய் முன்னுக்குப் பின் முரணான அர்த்தமற்ற பொய்யான கூற்றுக்களைக் கூறி னார். மகாதேவன் குளம் நிசையன்விளை யிலிருந்து வேறுபட்ட நிசையில் இல்லை என்று சொல்வதற்கு கூட அவர் முயன்றார். மகா தேவன்குளம், சங்கனாங்குளத்திலிருந்து அதே நிசையில் சற்று தள்ளி அமைந்துள்ளது என்றும், சங்கனாங்குளத்திற்குச் சென்று வந்த பின்னர், தான் நேராக மகாதேவன் குளத் திற்குச் சென்றதாக சப்-இன்ஸ்பெக்டர் சொல்ல விரும்பினார். (முற்றிலும் பொய்யானது) தொடக்கத்திலிருந்து இறுதி வரையில் அவரது சாட்சியம் பொய்யானதே. சப்-இன்ஸ்பெக்டர் அளித்த சாட்சியத்தின் ஒவ்வொரு பகுதியிலும், அவர், பொய்யான சத்தியம் செய்தார் என்றும், உண்மைக்குப் புறம்பான சாட்சியம் அளித்தார் என்றும் 21–6–1980 அன்று பொது நாட் குறிப்பில் உள்ள பதிவுகள், சா. ஆ. பி. 10-ன்

தொடர்பாக விசாரணை நடத்து வதற்கு சப்-இன்ஸ்பெக்டர், சங்கரனாங்குளத் திற்குச் செல்லவில்லை என்று காட்டுவதாகவும் திரு. அசோக் குமார் விளக்கினார். சான்றா வணம் பி. 10, மிக முக்கியமான விஷயம் என்றும், அது குறித்துக் கவனமாகப் பரிசீலனை செய்து, விசாரணை செய்ய வேண்டியுள்ளது என்பதை சப்-இன்ஸ்பெக்டர் ஒப்புக்கொண் டுள்ளார். சா.ஆ. பி. 10 பற்றி விசாரிப்பது தொடர்பாக சப்-இன்ஸ்பெக்டர் உண்மையில் சங்கரனாங்குளம் சேரிக்கோ வேறு ஒரு இடத் திற்கோ சென்றிருந்தால், அது பற்றிப் பொது நாட்குறிப்பில் கண்டிப்பாகப் பதிவு செய்திருக்க வேண்டும் ; குறிப்பாக, வழக்கை விசாரணை செய்வதற்கு மணிக்கணக்கில் ஆகும்போது அவ்வாறு பதிவு செய்திருக்க வேண்டும் ; இவ்வாறாக, சா. ஆ.பி. 10 பற்றி விசாரணை செய்ய சேரிக்கு சப்-இன்ஸ்பெக்டர் எந்த நாளில் சென்றார் என்பது குறித்து பொது நாட்குறிப்பில் பதிவு ஏதும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

319. சப்-இன்ஸ்பெக்டர் 21–6–1980 அன்று காலை 10–00 மணிக்கு சா.ஆ. பி. 10 தொடர் பாகச் சங்கனாங்குளத்திற்குச் சென்றதை மெய்ப்பிக்க நேர்மையற்ற முறையில் முயற்சி செய்த அவர், பதிபாவத்திற்கு அஞ்சாத பொய்யர் என்பதைத் தெளிவு படுத்தியுள்ளது.

320. பொது நாட்குறிப்பில் உள்ள பல்வேறு நாட்கள், பல்வேறு பதிவுகள் பற்றி சப்-இன்ஸ்பெக்டர் கடுமையாகக் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார் ; அவற்றை விரிவாகக் குறிப் பிடுவது தேவையற்றது. சப்-இன்ஸ்பெக்டர் பொது நாட்குறிப்பில் எழுதிய பதிவுகள் குறிப்பாக தேவர் வருப்பினரைப் பற்றிய பதிவுகள் பொய்யானவை, தவறானவை என்று திரு. அசோக் குமார் விளக்கினார்.

321. சா. ஆ. பி. 10 பற்றி விசாரிப்பதற்குச் சங்கனாங்குளம் ராமதtoday திற்கு ஏதாவது ஒரு நாளில் சப்-இன்ஸ்பெக்டர் சென்றார் என்பதைப் பொது நாட்குறிப்பில் காட்டுமாறு நான் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுக் கேட்டபோது அவரால் எந்தப் பதிவையும் காட்ட முடிய வில்லை என்பதை நான் வருத்தத்துடன் குறிக் கின்றேன். இவ்வாறாக, சா. ஆ. பி. 10 பற்றி விசாரிப்பதற்கு சப்-இன்ஸ்பெக்டர் சேரிக்கு எப்போழுதும் செல்லவில்லை என்றும், ஆனால், சங்கரத்தேவருடன் உடந்தையாக இருந்து காவல் நிலையத்தில் பொய்யான வாக்குமூலங்களையும், பொய்யான பதிவுகளையும் அவர் தயாரித்தார் என்றும் நிரூபிப்பதற்கு வேறு எந்த அத்தாட்சி யும் தேவையில்லை. அடுத்து வரும் பாராக்களில் விவரிக்கப்படுவதினின்றும் இது தெளிவாகத் தெரியும்.

322. சங்கரத்தேவருடன் சப்-இன்ஸ்பெக்டர் திருஷ்ணசாமி சேர்ந்து கூட்டுச்சதி செய்தார் என்பதை மெய்ப்பிக்கின்ற சா.ஆ.பி.10 தொடர் பாக விசாரணையை சப்-இன்ஸ்பெக்டர் எந்த முறையில் நடத்தினார் என்பதைக் கவனிப் போம். (DPW 6) முத்தையா தனது வாக்கு மூலத்தில் (சா.ஆ.பி. 11) சங்கரத்தேவரை முழுவதுமாக ஆதரித்துக் கூறியுள்ளார். இவரை சப்-இன்ஸ்பெக்டர் எப்படி இப்பிரச்சினையில் சிக்க வைத்தார் என்பது பற்றி எவ்வித விளக்கமும் இல்லை.

323. சா. ஆ. பி. 10 மனு, முத்தையா என்ப வரால் கையெழுத்திடப் பட்டுள்ளதாகச் சொல் லப்படுகிறது என்றும், வேறு எந்த விவரங்களும் கொடுக்கப்படவில்லை என்றும் நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். எந்த ஒரு முத்தையாவைப் பற்றி விசாரித்ததாகவும் கிருஷ்ணசாமியிடம் எவ்வித விவரங்களோ, தகவல்களோ, புள்ளி விவரங்களோ இல்லை.

324. காவல் நிலையத்திலேயே எப்பொழுதும் இருந்து கொண்டு, சேரிக்குச் செல்லாமலேயே இருக்கும் கிருஷ்ணசாமியின் மனத்தில் திருமலா புரத்தைச் சேர்ந்த (D P W 6) முத்தையா எவ்வாறு தோன்றினார் என்பதும் திருமலா புரத்திலிருந்து இந்த முத்தையாவை அழைத்து வரக் கிருஷ்ணசாமி, காவலரை ஏன் அனுப் பினார் என்பதும் எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது. சப்-இன்ஸ்பெக்டர் சேரிக்குச் செல்லாமலேயே காவல் நிலையத்தில் இருந்து கொண்டு சான்றாவணம் பி. 10 தொடர்பான விசாரணையைத் தொடங்கினார் என்று நான் தெளிவாகக் கண்டறிந்ததால் சங்கரத் தேவரே சப்-இன்ஸ்பெக்டரைத் தூண்டிவிட்டு (DPW 6) முத்தையாவை அழைத்து வந்து விசாரிக்கு மாறு செய்தார்.

325. திருமலாபுரத்தைச் சேர்ந்த (DPW 6) முத்தையாவைப் பற்றி சப்-இன்ஸ்பெக்டருக்கு எந்த நபர் தகவல் அளித்தார் என்பதையும், மணிக்கு அவர் சொந்தக்காரரா என்பதையும் சா. ஆ. பி. 10 தொடர்பாக அவர் எந்த அளவுக்கு உதவுவார் என்பதையும், அவருடைய (சப்-இன்ஸ்பெக்டர்) அறிக்கையும், புலன் விசாரணை நடவடிக்கைகளும் காட்டவில்லை. சங்கரனாங்குளத்தில் 12 முத்தையாக்கள் இருப் பதாக வாக்காளர் பட்டியல் காட்டுகிறது. (DPW 6) முத்தையா தான் சான்றாவணம் பி. 10-ஐ எழுதிக் கொடுத்ததாக மறுத்தால், கிருஷ்ணசாமி மற்ற முத்தையாக்களை விசாரித் திருக்கவேண்டும். அதன்பின்னர், (DPW 6) முத்தையாவை விசாரித்து அவரிடமிருந்து சா.ஆ. பி. 11-ஐ பெற்றிருக்க வேண்டும். அந்த முத்தையாக்களும் விசாரிக்கப்பட்டிருந்தால் அவர்களில் ஒருவர் சா.ஆ. பி. 10-ஐ எழுதிக் கொடுத்ததாகச் சொல்லியிருக்க வேண்டும். குற்றப் புலன் விசாரணைக்கு அது வழி வகுத்து உண்மையை அறுதியிட்டுக் கூறுவதற்கு உதவு வதாக அமைந்திருக்கும்.

326. நீய நடத்தை, கடும் குற்றம் ஆகிய குற்றச்சாட்டுக்களை சங்கரன் மீது சாட்டும் றுதிமொழிப் பத்திரமாக சா. ஆ. பி. 10 கருதப்படுமானால், முத்தையா எழுதிக் கொடுத்த சா. ஆ. பி. 11 வாக்குமூலம் எல்லா விவரங்களும் அடங்கிய எதிர் றுதிமொழிப் பத்திரமாக விளங்குகிறது. சங்கரனும், சப்-இன்ஸ்பெக் டரும் காவல் நிலையத்தில் (DPW 6) முத்தை யாவை விசாரிக்க கூட்டுச் சதி செய்தனர் என்பது தெளிவாகிறது. சப்-இன்ஸ்பெக்டருக்கு (DPW 6) முத்தையாவைப் பற்றி விவரங்கள் அனைத்தும் சங்கரன் கொடுத்திருக்க வேண்டும்.

327. மற்ற இரண்டு முத்தையாக்களையும் தான் விசாரித்ததாக சப்-இன்ஸ்பெக்டர் இறுதிக் கட்டத்தில் தெரிவித்தார். இது, முற்றிலும் பொய்யானது. மற்ற இரண்டு முத்தையாக் களையும் விசாரித்துள்ளதாக அவருடைய அறிக்கை சான்றாவணம் ஜி. 2 குறிப்பிட வில்லை. சான்றாவணம் பி. 10-ஐ எழுதிக்

கொடுத்ததாக முத்தையா (DPW 6) மறுத்த பாது இந்த முத்தையாவின் கையெழுத்தையும் சா. ஆ. பி.11-ல் உள்ள கையெழுத்தையும் சப்-இன்ஸ்பெக்டர் ஒப்பிட்டு நோக்க முயன்றிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. அவ்வாறு செய்திருந்தால் (DPW 6) முத்தையாதான் சான்றாவணம் பி. 10 மனுவை எழுதிக் கொடுத்தாரா என்பதற்கு அது உதவியிருக்கும். ஆனால், இவை எதையும் அவர் செய்யவில்லை. முன்னரே குறிப்பிட்டபடி சா . ஆ. பி. 10 ஐ தான் எழுதிக் கொடுக்கவில்லை என்று (DPW 6) முத்தையா கூறியபோது தேவர் வகுப்பினருக்கு முற்றிலும் ஆதரவாக ஒரு வாக்குமூலத்தை (DPW 6) முத்தையாவிடமிருந்து ஏன் சப்-இன்ஸ்பெக்டர் வாங்கினார் ? கூட்டச் சதியை மெய்ப்பிப் பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி தேவை யில்லை. தொடக்கத்திலிருந்து இறுதிவரை சப்-இன்ஸ்பெக்டர் செய்த புலன் விசாரணை வேண்டுமென்றே ஏனோ தானோ என்ற முறை யிலும், அரைகுறையானதும் மோசடியானது மாக அமைந்துள்ளது.

328. சா. ஆ. பி. 11-ஐப் படித்துப் பார்த்தால் (D. P. W. 6) முத்தையா கொடுத்த வாக்கு மூலத்தை சங்கரத் தேவருடன் சப்-இன்ஸ்பெக்டர் முனைப்பாக கூட்டுச் சதி செய்து இந்த முத்தையா மீது வேண்டுமென்றே பழி கட்டினார் என்பது தெரியவரும் என்பதாக திரு. அசோக் குமார் சொன்ன வாதத்தை நான் எவ்விதத் தயக்கமும் இன்றி ஏற்றுக்கொள்கிறேன். முத்தையா கொடுத்த வாக்குமூலமான சான்றாவணம் பி. 11 மூலுதையும் நகலெடுப்பது முக்கியம். சான்ற வணம் பி. 10-ல் உள்ளவற்றிற்கு முற்றிலும் எதிர் உறுதிமொழிப் பத்திரமாக, விரிவானதாக இது தோன்றும். சா. ஆ. பி. 10-ல் உள்ள ஒவ்வொரு குற்றச்சாட்டைப் பொறுத்த வரையில் திட்டவட்ட மாக தெளிவாகக் குற்றச்சாட்டு மறுக்கப்பட்டிக் றது என்றாலும் சா. ஆ. பி. 11 ஒவ்வொரு கோணத்திலும் சங்கரத் தேவருக்கு முற்றிலும் ஆதரவாகவே உள்ளது என்பது விந்தை.

329. சான்றாவணம் பி. 11-ல் முத்தையா பின் வருமாறு தெரிவிக்கிறார் :-

''எங்கள் ஊர் காலனி மணி இயற்கையாகவே மாரடைப்பால் இறந்தான்''.

330. சான்றாவணம் பி. 11-ல் உள்ள வாக்கு மூலம் இயந்திரம் போல பதிவு செய்யப் பட்டுள்ளது. மாரடைப்பு காரணமாக ஏராமத்தில் அவருடைய வீட்டில் மணி இறந்தார் என்று எந்த அடிப்படையில் முத்தையா கூறினார் என்றும் மணியின் வீட்டில் முத்தையா இருந்தாரா என்றும் முத்தையாவிடம் கேள்விஏதும் கேட்கப்படவில்லை. மேற்கொண்டும் விசாரணை செய்யப்படவில்லை.

331. முத்தையாவை விரிவாகக் கேள்விகள் கேட்டு, மணி தன் வீட்டில் மாரடைப்பால் இயற் கையாக மரணம் எய்தினார் என்று எவ்வாறு அவர் கையாக மரணம் எய்தினார் என்பதைக் கண்டறிய சப்-இன்ஸ்பெக்டர் முயற்சி எடுத்திருக்க வேண்டும் என்று ஒருவர் இயல்பாக எதிர்பார்ப்பார்.

332. தூத்துக்குடியில் கடந்த இரண்டு மாதங் களாக வசித்துவருவதாகச் சொல்லப்படுகிற ஜராஜ செல்வத்தை சப்-இன்ஸ்பெக்டர் விசாரிக்காமல் இருந்ததற்குச் சான்றாவணம் பி.11-ல் 4-வது வரி யிலும், முத்தையா காரணம் சொல்லியிருக்கிறார். அவர், சங்கரத் தேவருடன் சேர்ந்து கூட்டுச் சதி செய்தார் என்பதை அவரது வாக்குமூலம் மீண்டும் எடுத்துக் கூறுகிறது. தூத்துக்குடியில் ஜராஜ செல்வம் இருப்பது பிரச்சினை எதையும் தோற்று விக்காது என்றும், தூத்துக்குடியில் உள்ள மணியின் மனைவி ஜராஜசெல்வத்தை அவர் விசாரித்திருக்க வேண்டும் என்றும் கிருஷ்ணசாமி தன்னுடைய சாட் சியத்திலேயே ஒப்புக்கொண்டுள்ளார். ஜராஜசெல் வத்தை, சப்-இன்ஸ்பெக்டர் விசாரிக்காமல் விட்டு விட்டது முற்றிலும் நேர்மையற்றதாகும். ஜராஜ செல்வத்தை விசாரித்தால், மணியின் மரணம் பற்றியும், இறந்த உடலை எரித்தது பற்றியும் முக்கியமான தொடர்புடைய உண்மைகளைக் கண்டறியும் வகையில் ஜராஜசெல்வம், சம்பவம் பற்றித் தன்னுடைய கூற்றைக் கூறிவிடுவாள் என்று பயந்து சப்-இன்ஸ்பெக்டர் சங்கரத் தேவருடன் கூட்டாகச் சதி செய்து ஜராஜசெல்வத்தை விசா ரிக்காமல் வேண்டுமென்றே தவிர்த்து விட்டார் என்று அசோக்குமார் கூறிய வாதத்தில் நியாயம் உள்ளது என்று நான் எண்ணுகிறேன்.

333. சங்கரத் தேவருக்கும், ஜராஜ செல்வத் திற்குமிடையில் கள்ளத் தொடர்பு இருந்தது என்று சா.ஆ.பி. 10-ல் கூறுவது மறுப்பது சா. ஆ. பி. 11-ல் உள்ள அந்த வாக்குமூலமாகும். மனுவில் கூறப்பட்டுள்ளவாறு சங்கரத் தேவருக்கும் ஜராஜ செல்வத்திற்கும் இடையே கள்ளத் தொடர்பு இல்லை என்று சா. ஆ. பி. 11-ல் முத்தையா விரிவாக மறுத்துக் கூறியுள்ளார். இங்கும்கூட, முத்தையாவிடம் கேள்விகள் கேட்கப்படவில்லை. எந்த அடிப்படையில் சா. ஆ. பி. 11-ல் முத்தையா இந்த வாக்குமூலத்தைக் கொடுத்தார் என்பதும்நிற் சப்-இன்ஸ்பெக்டர் எதுவும் குறிப்பிடவில்லை. சா. ஆ. பி. 11 எப்படிப்பட்ட வாக்குமூலமாக இருந்த போதிலும் முத்தையாவின் வாக்குமூலம் புனைந்து கூறப்பட்டதாகும் என்பதிலும் சப்-இன்ஸ்பெக்டருடன் கூட்டச் சதி செய்யும் சங்கரத் தேவருக்கு முற்றிலும் சாதகமான குற்றச்சாட்டு கள் அடங்கியுள்ளன என்பதிலும் எனக்கு எவ்வித ஐயமுமில்லை. இது சா. ஆ. பி. 10-ல் கூறப் பட்டுள்ள முக்கியமான விஷயத்தை கவனமாகவும், நியாயமாகவும் விசாரணை செய்வதைத் தடுக்கும் ஒரு முயற்சி ஆகும்.

334. (D.P.W. 6) முத்தையாவை இவர் தேர்ந் தெடுத்ததற்குக் காரணம், ஜராஜசெல்வத்திற்கு உறவினராக அவர் இருந்தார் என்பது பொய்யான பதிலாகும். முத்தையா ஜராஜசெல்வத்துக்கு உறவினர் என்று அவரிடம் சொல்லும் எவரையும் அவர் விசாரித்தார் என்று அவருடைய அறிக்கை காட்டவில்லை. சப்-இன்ஸ்பெக்டர் சங்கரனுக் குள்தற்குச் செல்லவேபில்லை என்பது குறித்தும் சங்கரனுடன் சேர்ந்து கொண்டு காவல் நிலையத் திலேயே எல்லா விவரங்களும் தயாரிக்கப்பட்டன என்பதும் நான் ஏற்கனவே விரிவாக விவாதித்துள்ளேன். சாட்சிகளின் கையொப்பங்கள் வெற்றுத்தாளில் வாங்கப்பட்டு அதன் பின்னர், சங்கரன் விரும்பியவாறு அதில் விவரங்கள் சப்-இன்ஸ்பெக்டரால் நிரப்பப்பட்டன.

335. சங்கரத் தேவர் மணியை கடுமையாக அடித்தார் என்றும், அதேநிரவில் மணியின் இறந்த உடல் எரிக்கப்பட்டது என்றும் சங்கரத் தேவரின் வீட்டில் மணி இறந்தார் என்றும் சா. ஆ. பி. 10-ல் கூறப்பட்டிருக்கும்போது, சான்றாவணம் பி. 11-ல் உள்ள குற்றச் சாட்டுகளைப் பார்க்கும் போது, மணி மாரடைப்பு காரணமாக அவரு டைய வீட்டில் இயற்கையாக மரணம் எய்தினார் என்று முத்தையா எவ்வாறு கூறினார் என்பது பற்றி சப்-இன்ஸ்பெக்டர் முத்தையாவை விசாரித்திருக்க

வேண்டும் என்பது அடிப்படைக் கடமையாகும். சங்கரத் தேவரின் வீட்டில் சங்கரத் தேவர் மணியை கடுமையாக அடித்தது, அதன்பின்னர் அவர்உடலை எரித்தது ஆகியவை பற்றி திருஷ்ணசாமி எதுவும் கேட்கவில்லை என்பதை D.P.W. 6 முத்தையாவின் வாக்குமூலம் காட்டுகிறது. முத்தையாவிடமிருந்து வாக்குமூலம் வாங்கும்போது புலன் விசாரணையில் முக்கியமான அம்சங்களான இவைகள் சப்-இன்ஸ்பெக்டரால் வேண்டுமென்றே, புத்திசாலித்தனமான முறையில் தவிர்க்கப்பட்டன. சங்கரத் தேவரும், சப்-இன்ஸ்பெக்டரும் (திருஷ்ணசாமியும்) உடந்தையாக இருந்ததனால்தான் ஏனோதானோ என்று புலன் விசாரணை நடத்தப்பட்டு முக்கியமான தகவல்களை விட்டு விடுகின்ற சா.ஆ. பி. 11 போன்ற வாக்குமூலம் எடுக்கப்பட்டுள்ளன என்பது வெளிப்படை.

336. விசாரணையின் தொடக்கத்தில் திருஷ்ண சாமி தாம் விசாரணையைச் சேரியிலேயே நடத்தியதாகக் கூறினார். பின்னர் தேவர் வகுப்பினரின் குடியிருப்பில் விசாரணை நடைபெற்றதாகத் திரித்துக் கூறினார். இதை நான் இங்குக் குறிப்பிடுகிறேன்.

337. அவர் சேரிக்குச் சென்று திருமலாபுரத்திலுள்ள முத்தையாவைக் கூட்டி வருவதற்கு ஆள் அனுப்பினார் என்று அவர் கூறியது பொய்யானது என்பதிலும்; உண்மைக்கு அவர் மதிப்பே கொடுப்பதில்லை என்பதிலும் எனக்கு எவ்வித ஐயமும் இல்லை. மணியின் வீட்டிற்குப் பக்கத்தில் உள்ளவர்களையும், மணியின் உறவினர்களையும், இராஜ செல்வத்தையும் இராஜ செல்வத்தின் பெற்றோர்களையும், இராஜ செல்வத்தின் ஏனைய நெருங்கிய உறவினர்களையும் அவர்விசாரிக்கவேயில்லை. அவர் விசாரணை செய்ய வேண்டுமென்று முனைப்காக எண்ணியிருந்தால், இராஜசெல்வம், இராஜசெல்வத்தின் தந்தை அல்லது இராஜசெல்வத்தின் தாய் அல்லது ஏனைய உறவினர்களை அவர் விசாரிப்பதற்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என்று அவர் ஒப்புக் கொண்டுள்ளார். நாகம்மாளையும், சுந்தரத்தையும் விசாரிப்பதால் முக்கியமான தகவல் கிடைக்கும் என்று சா. ஆ. பி. 10 நிட்டவட்டமாகக் குறிப்பிட்டபோதிலும், சுந்தரத்தையும் நாகம்மாளையும் விசாரிப்பதற்கு அவர் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

338. சப்-இன்ஸ்பெக்டர், ஒப்புக்காகச் சுடலைக் கண்ணுவை (ஜி.டபிள்யூ. 1) விசாரித்து வாக்குமூலம் பெற்றதைப் பற்றிக் கவலிப்போம். இந்தச் சாட்சியை (ஜி. டபிள்யூ. 1) அழைத்து வருவதில் கமிஷனுக்கு அதிக சிரமம் ஏற்பட்டது. கமிஷனின் முன் வருவதை அவர் தொடர்ந்து தவிர்த்ததோடு சுமார் 10 நாட்கள் கழித்த பின்னர் சாட்சியம் அளித்தார். (மாடசாமித் தேவர் டி. பி. டபிள்யூ. 14 பக்கம் 223 அளித்த சாட்சியத்தைக் காண்க). கமிஷனின் முன் அவரை அழைத்து வருவதற்கு காவல் துறையினரின் உதவி பெறப்பட்டது. சங்கரத் தேவர் அவரை வரவிடாமல் தடுத்து கமிஷனின் முன் வந்து சாட்சியம் அளிக்காமல் தடுத்தார் என்று நான் நினைக்கிறேன். ஆனால், அதிருஷ்டவசமாக காவல் துறையினர் அவரை (ஜி. டபிள்யூ. 1) அவரு டய வீட்டில் விடியற்காலையில் கண்டுபிடித்து கமிஷனின் முன் கொண்டுவந்தனர். ஜி. டபிள்யூ. 1 சுடலைக் கண்ணுவின் வாக்குமூலம் இங்கு கீழே கொடுக்கப் பட்டுள்ளது. (சா. ஆ. ஜி. 1):

''எனக்குச் சங்கனாங்குளம். ஆஜர் மனுவைப் படிக்கக் கேட்டேன். மனுவில் கூறியபடி எவ்விதச் சம்பவமும் நடக்கவில்லை. எங்கள் சேரியைச் சேர்ந்த மணி தபெ. சுடலை என்பவர் சுமார் 4 மாத காலத்திற்கு முன்பு அவன் வீட்டில் வைத்து மாரடைப்பால் இறந்து விட்டான். அவன் இறப்பில் எவ்விதச் சந்தேகமும் கிடையாது. மனுவில் கூறியபடி மருந்து குடித்து சங்கரத் தேவர் வீட்டில் இறக்கவில்லை. மேலும் மணியின் மனைவி ராஜ செல்வம் என்பவள் யாருடைய வீட்டிலும் நிரந்தரமாக வேலை செய்யவில்லை. கூப்பிட்ட வேலைக்குத். தினக்கூலியாக வேலை செய்வாள். சங்கரத் தேவருக்கும், ராஜசெல்வத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ராஜ செல்வம் சுமார் இரண்டு மாதகாலமாகத் தூத்துக் குடியில் இருந்து வருகிறார். அவள் தகப்பனார் ராஜ சகிதம் தூத்துக்குடியில் இருக்கிறார். படிக்கக் கேட்டேன். நான் சொன்னபடி சரி.

1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21ஆம் நாள்.

(ஒ.ம.) செ. சுடலைக் கண்ணு.

339. சங்கரத் தேவர், சப்-இன்ஸ்பெக்டருடன் சேர்ந்து கூட்டு சதி செய்து மேற்சொன்ன பொய்யான வாக்குமூலத்தைத் தயாரித்தார் என்பதற்கு சா. ஆ.ஜி. 1 போதிய உள்ளாந்த சாட்சியமாகும். மாரடைப்பு காரணமாக மணி அவருடைய வீட்டில் இறந்துவிட்டதாக முத்தையாவைப் போலவே இந்தச் சாட்சியும் தெரிவிக்கிறார். மாரடைப்புக் காரணமாக மணி அவருடைய வீட்டில் இறந்து விட்டார் என்று இந்தச் சாட்சி நிட்டவட்டமாக வாக்குமூலம் அளிப்பதற்கான அடிப்படை குறித்து எவ்விதக் கேள்வியும் கேட்கப்படவில்லை. விசாரணையும் செய்யப்படவில்லை, பதிலும் பெறப்படவில்லை, அவர், இந்தத் தகவலைச் செவிவழிச் செய்தியாகக் கேட்டாரா அல்லது சுடலைக்கண்ணுதானே நேரில் சென்று மணியின் மரணத்தைப் பார்த்தாரா; இதுபோன்ற ஏனைய தொடர்புடைய வினாக்களை சப்-இன்ஸ்பெக்டர் ஜி. டபிள்யூ. 1 இடம் கேட்டிருக்க வேண்டும். சப்-இன்ஸ்பெக்டர் இம்மாதிரியான கேள்விகளைக் கேட்டிருக்கவில்லை யானால் மேற்சொன்ன அனுமானம், மேற்கொண்டும் கேள்விகள் கேட்கப் பட்டால் அது சங்கரனுக்கு மேற்கொண்டும் தொல்லை தருவதாகும் என்று பயந்து கேள்விகள் கேட்கப்படவில்லை என்பது வெளிப்படை.

340. மணி, சங்கரத் தேவரால் கடுமையாக அடிக்கப்பட்டார் என்றும், விஷத்தைக் குடித்த பின்னர் சங்கரத் தேவர் வீட்டில் மணி இறந்துவிட்டார் என்றும், இறந்த உடலை சங்கரத் தேவரே எரித்துவிட்டார் என்றும் சா. ஆ. பி. 10 தெரிவிக்கையில் மணி மாரடைப்பு காரணமாக அவருடைய வீட்டிலேயே இயற்கையாக மரணம் எய்தினார் என்று இந்தச் சாட்சிகளிடம் வாக்குமூலங்களை, சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைபோல சப்-இன்ஸ்பெக்டர் ஏன் பதிவு செய்தார் என்பது என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. முக்கியமான அம்சங்களைக் குறித்து அதாவது சங்கரத் தேவர், மணியைக் கடுமையாக அடித்தது, அதே இரவில் இறந்த உடலை எரித்தது ஆகியவை குறித்து சுடலைக்கண்ணுவை (ஜி. டபிள்யூ. 1) விசாரிக்கவில்லை.

341. சங்கரத் தேவர் வீட்டில் விஷத்தைக் குடித்து மணி இறக்கவில்லை என்று ஒரு வாக்கு மூலமும் உள்ளது. இங்கும் கூட, இந்த முக்கிய மான அம்சம் குறித்துச் சாட்சியிடம் வினா எது வும் கேட்கப்பட வில்லை. அவரிடம் விசாரணை யும் செய்யப்பட வில்லை. சொன்னதைச் சொல் லும் கிளிப்பிள்ளை போல இந்தச் சாட்சியும் ஜிராஜசெல்வம் தூத்துக்குடியில் அவளது பெற் றோர்களுடன் வசித்து வந்ததாகத் தெரிவிக்கிறார்.

342. சா. ஆ. பி. 11-ல் முத்தையா அளித்த வாக்குமூலத்தில் உள்ளதுபோல சா. ஆ. ஜி. 11-ம் கொடுக்கப்பட்டுள்ளது. இது, சா. ஆ. பி. 10-க்கு முற்றிலும் எதிர் மறுதிமொழிப் பத்திரமாக அமைந் துள்ளது. வாக்குமூலத்தில் உள்ள கருத்துக்கள் எல்லாம் எழுதப்பட்ட பின்னர் சுடலைக் கண்ணுவி டம் கையொப்பம் வாங்கப்பட்டதா என்று எனக்கு ஐயம் ஏற்பட்டுள்ளது. சப்-இன்ஸ்பெக்டர் ஒரு வெற்றுத் தாளில் சுடலைக்கண்ணுவிடம் கையொப் பம் வாங்கி,அதை சப்-இன்ஸ்பெக்டரிடம்கொடுத்த தாகவும் அவர் அதில் விவரங்களைப் பதிவு செய்த தாகவும் சுடலைக் கண்ணுவின் மூல் வாக்குமூல மான சான்றாவணம் ஜி. 1 காட்டுகிறது. சா.ஆ. ஜி. 1 வாக்குமூலத்தில் சுடலைக்கண்ணுவின் கையொப்பத்திற்கும்,விவரங்களடங்கிய பகுதிக்கும் இடையே உள்ள இடைவெளி, சுடலைக்கண்ணு ஒரு வெற்றுத் தாளில் கையொப்பம் இட்டார் என்பதையும், விவரங்கள் பின்னர் பதிவு செய்யப் பட்டன என்பதையும் தெளிவாக காட்டுகிறது. சுடலைக் கண்ணுவைப் பொறுத்த வரை, விஷயம் அவருடைய வாக்குமூலமான சா. ஆ. ஜி. 1 உடன் முடிந்துவிடலில்லை. சங்கரத் தேவரும், சப்-இன்ஸ்பெக்டரும் கூட்டாகச் சேர்ந்து சதி செய் தனர் என்பதை ஜி. டபிள்யூ. 1 கமிஷன் முன் நிரூபித்துக் காட்டினார்.

343. சங்கரத் தேவரின் வீட்டிற்கு எதிரில் சுடலைக் கண்ணு வசித்து வந்ததால் அவரைத் தேர்ந்தெடுத்தார்கள் என்பது தெளிவு. ஜி.டபிள்யூ. 1 தனது சாட்சியத்தில், சங்கனாங்குளத்தைச் சேர்ந்த மணியைத் தனக்குத் தெரியாதென்றும், அவருடைய மனைவி ஜிராஜசெல்வத்தைத் தனக்குத் தெரியாதென்றும், மணியின் மரணம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். ''மணியின் மரணம்பற்றிய விவரங்களும்எனக்குத் தெரியாது என்றும் தன்னை சப்-இன்ஸ்பெக்டர் விசாரித்தபோதுதான் தனக்கு அந்த விவரங்கள் தெரியவந்தது என்றும் விசாரணையின்போது தனக்கு எதுவும் தெரியாது'' என்று சப்-இன்ஸ் பெக்டரிடம் தான் கூறியதாக அவர் (ஜி. டபிள்யூ. 1) ஒப்புக்கொண்டுள்ளார். அரசு, காவல் துறை ஆயோருக்கான வழக்குரைஞர் திரு. பெரிய நாயகம் முதன்மை விசாரணை செய்தபோது மேற் சொன்ன பதில்கள் சுடலைக்கண்ணுவிடமிருந்து கிடைத்தன என்பது இங்கே வலியுறுத்தப்படுகிறது.

344. திரு. அசோக் குமார் ஜி. டபிள்யூ. 1ஐக் குறுக்கு விசாரணை செய்தபோது அவர் தெரிவித்த தாவது :—

அவர்,ஆதி திராவிடர் குடியிருப்புக்குச் செல்ல வில்லை, அவருக்கு மணியைத் தெரியாது, அவர் யார் என்பதும் தெரியாது, அவர் எங்கு வசித்தார், எப்படித் தன் வாழ்க்கையை நடத்தினார் அவர் எப்படி மரணமடைந்தார், என்பது பற்றி அவ ருக்குத் தெரியாது, சப்-இன்ஸ்பெக்டர் விசாரணை செய்த சமயத்தில் தான் மணியின் மரணம் பற்றி சப்-இன்ஸ்பெக்டர் மூலமாக அவர் தெரிந்துகொண் டார் என்பதை அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

345. மணியைப் பற்றி, அவரது மரணம் பற்றி ஜிராஜசெல்வத்தைப் பற்றி, இந்தச் சாட்சிக்கு எதுவும் தெரியாது என்பது தெளிவாகிறது. சங் கரத் தேவருடன் உடந்தையாக இருந்து நேர்மை யற்ற முறையில் மோசடியாகத் தயாரிக்கப்பட்ட சான்றாவணம் ஜி-1. ஆகும். ஒரு வெற்றுத் தாளில் சுடலைக்கண்ணுவின் கையொப்பத்தைப் பெற்ற பின்னர் சப்-இன்ஸ்பெக்டர்,சங்கரனின் உதவியுடன் அதில் விவரங்களை (சான்றாவணம் ஜி-1) எழுதி யுள்ளார். சங்கரத் தேவருக்கும் சப்-இன்ஸ்பெக்ட ருக்கும் இடையே வலுவான உடன்பாடு இருந்தா லன்றி மற்றபடியே இவ்வாறு எழுதியிருக்க முடியாது.

346. சா.ஆ.பி.10-ல் குறிப்பிடப்படுகிற மற்றொரு நபரான சண்முகசுந்தரம் (டி. பி. டபிள்யூ. 11) எழுதி கொடுத்துள்ளதாகச் சொல்லப்படுகின்ற 1980-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ஆம் நாளிட்ட சான்றாவணம் பி. 22 என்ற வாக்குமூலத்தை நாம் கவனிப்போம். சண்முகசுந்தரம் (டி.பி. டபிள்யூ. 11) சங்கரத் தேவரின் வீட்டிற்குப் பின் பக்கத்தில் அடுத்துள்ள வீட்டில் வசிப்பவர். சான் றாவணம் பி. 22 முழுவதும் மேழ நகலெடுக்கப் பட்டுள்ளது :

''எனக்குச் சங்கனாங்குளம். ஆஜர் மனு வைப் படிக்கக் கேட்டேன். மனுவில் சொன்ன படி எவ்விதச் சம்பவமும் நடக்கவில்லை. அதாவது சங்கரத் தேவர் என்பவர் வாலிபர் மாடசாமித் தேவரின் தம்பி. எங்கள் சேரியைச் சேர்ந்த மணி, த/பெ. சுடலை என்பவர் சுமார் 4 மாத காலத்திற்கு முன்பு அவன் வீட்டில் வைத்து மார டைப்பினால் இறந்துவிட்டான். அவன் இறப்பில் எவ்விதச் சந்தேகமும் இல்லை. மனுவில் கூறிய படி மருந்து குடித்து சங்கரத் தேவர் வீட்டில் இறக்கவில்லை. சங்கனாங்குளம் சேரியிலுள்ள வர்கள் எங்கள் ஊரில் விவசாய கூலியாகப் பணி யாற்றி வருகிறார்கள். மேலும் மனுவில் கூறிய மணியின் மனைவி ஜிராஜசெல்வம் என்பவள் நிரந்தரமாக யாரிடமும் வேலை பார்க்கவில்லை. அவ்வப்பொழுது கூப்பிட்ட வேலைக்கு அன்றாட வேலைக்கு நிலக்கூலியாள்ராக வேலை செய்வாள். சங்கரத் தேவர் வீட்டில் நிரந்தரமாக வேலை செய்யவில்லை. சங்கரத் தேவருக்கும் ஜிராஜ செல்வத்துக்கும் எவ்வித்த் தொடர்பும் கிடையாது. தற்சமயம் ஜிராஜ செல்வம் சுமார் இரண்டு மாத காலமாகத் தன் தகப்பனாருடன் தூத்துக்குடியில் இருக்கிறாள். படிக்கக் கேட்டேன். நான் சொன்னபடி சரி.

1980-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ஆம் நாள்.

(ஒப்பம்) வ. சண்முகசுந்தரம்.

347. இந்தச் சாட்சி (டி. பி. டபிள்யூ. 11) முக்கியமான சாட்சியாக இருந்த போதிலும் கமி ஷனின் முன் அவர் உறுதி மொழிப் பத்திரம் எதை யும் தாக்கல் செய்யவில்லை. இவரும், சுடலைக் கண்ணு. முத்தையா ஆகியோரைப்போல வாக்கு மூலம் கொடுத்துள்ளார். அது, சான்றாவணம்

பி. 10-க்கு எதிராக ஒரு விரிவான எதிர் உறுதி மொழிப் பத்திரமாக உள்ளது. சான்றாவணம் பி. 10-ல் குறிப்பிடப்பட்ட தொடர்புடைய உருப்படியான தகவல்கள் திட்டவட்டமாக மறுக்கப் படுகின்றன. அதில் எழுதப்பட்டுள்ள வாசகம், முத்தையா, கடலைக்கண்ணு ஆகியோர் எழுதிக் கொடுத்துள்ள சா. ஆ. பி. 11, சா, ஆ. ஜி. 1 ஆகியவற்றில் உள்ளது போலவே அமைந்துள்ளது. சா.ஆ.பி. 10-ல் கூறப்பட்டுள்ள சம்பவம் எதுவும் சங்கரத் தேவர் வீட்டில் நடைபெறவில்லை என்று, டி.பி. டபிள்யூ. 11 சண்முகசுந்தரம் கூறுகிறார். சங்கரத் தேவர் வீட்டில் அத்தகைய சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று திட்டவட்டமாக அவர் எவ்வாறு கூறுகிறார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

1980 பிப்ரவரியில் (சான்றாவணம் பி. 22) எழுதிக்கொடுத்ததற்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் மாரடைப்பால் மணி அவருடைய வீட்டில் இறந்து விட்டார் என்பதையும் அதுபற்றி எவ்வித சந்தேகமும் இல்லை என்பதையும் அவர் உறுதியாகக் கூறுகிறார். சங்கரத் தேவர் வீட்டில் விஷம் குடித்துவிட்டுத் தற்கொலை செய்து கொண்டதை சா. ஆ. பி. 10 திட்டவட்டமாகக் குறிப்பிடும்போது, மாரடைப்பு காரணமாக மணி அவருடைய வீட்டில் இயற்கையாக மரணம் எய்தினார் என்று எந்த அடிப்படையில் டி.பி. டபிள்யூ 11 கூறினார் என்பதை சப்-இன்ஸ்பெக்டர் அவரிடம் கேட்கவில்லை. இந்த விஷயம், பற்றி விரிவாகக் கவனமாக புலன் விசாரணை செய்ய வேண்டும் என்பதை திருவேணசாமி உணர்ந்திருக்க வேண்டும். மாரடைப்பு காரணமாக மணி தனது வீட்டில் இயற்கையாக மரணம் எய்தினார் என்று (சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போல) சண்முக சுந்தரம் கொடுத்த வாக்குமூலத்தை (சா. ஆ. பி. 22) அவர் உடனே ஏற்றுக்கொண்டார். எந்தவிதப் புலன் விசாரணையின்றியும், கேள்விகள் கேட்காமலும், சங்கரத் தேவருக்குச் சாதகமான முறையிலும் இத்தகைய வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது மறுக்கமுடியாத ஒன்று. சங்கரத் தேவரும் சப்-இன்ஸ்பெக்டரும் சாட்சிகளும் சேர்ந்து கூட்டாகச் சதி செய்தனர் என்பதை அவை நிரூபிக்கின்றன. எந்த விதமான விளக்கமும் கொடுக்கப்படவில்லை. இதுகுறித்து, திரு. அசோக்குமார் சப்-இன்ஸ்பெக்டரைக் குறுக்கு விசாரணை செய்தபோது, அவர் அதைத் தாங்க முடியாமல் அதற்குப் பொருத்தமான பதிலை அவரால் சொல்ல முடியவில்லை. குறுக்கு விசாரணையின்போது டி. பி. டபிள்யூ. 11 சண்முகசுந்தரம் தனது சாட்சியத்தில்பதிக்கப்படுகிறபோது விஷயம் மோசமாகப் போய்விட்டது. தன்னுடைய சாட்சியத்தில் 692ஆம் பக்கத்தில் டி. பி. டபிள்யூ. 11 பின்வருமாறு கூறுகிறார்: ''சப்-இன்ஸ்பெக்டர் கிராமத்தில் விசாரணை செய்தபோது அங்கு அவர் எதனையும் படிக்கவில்லை. கையொப்பம் எதையும் வாங்கவில்லை. என்னைக் காவல் நிலையத்திற்கு வருமாறு கேட்டுக் கொண்டார். அந்த நாள் நான் காவல் நிலையத்திற்குச் சென்றேன். எனது கையொப்பத்தைப் போட்டேன். ''மாரடைப்பால்தான் மணி இறந்து விட்டார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்று நான் உறுதி செய்ததைப் பற்றி சப்-இன்ஸ்பெக்டர் அவரிடம் கேட்கவில்லை.'' இவ்வாறு 694-ஆம் பக்கத்தில் டி.பி. டபிள்யூ. 11 ஒப்புக் கொண்டுள்ளார்.

348. மணியைச் சங்கரத் தேவர் கடுமையாக அடித்தார் என்ற குற்றச்சாட்டு சா. ஆ. பி. 10-ல் அடங்கியுள்ளதால் இது குறித்து திரு. அசோக் குமார் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார். சங்கரத் தேவர் மணியை அடித்தாரா என்று சப்-இன்ஸ்பெக்டர் தன்னைக் கேட்கவில்லை என்று டி.பி.டபிள்யூ 11 சண்முகசுந்தரம் ஒப்புக்கொண்டுள்ளார். சங்கரத் தேவர் மணியை அடிக்க வில்லை என்றும் அவர் சப்-இன்ஸ்பெக்டரிடம் சொல்லவில்லை.

349. சங்கரத் தேவருக்கும் ஜிராஜ செல்வத் திற்குமிடையே சுள்ளத் தொடர்பு இருந்ததாகச் சொல்லப்படுவதைப் பொறுத்த வரையில், அவர்கள் இருவருக்குமிடையே எந்தவிதக் சுள்ளத் தொடர்பும் இல்லை என்றும் சண்முகசுந்தரம் (டி. பி. டபிள்யூ. 11) திட்டவட்டமாகக் கூறினார். ஜிராஜ செல்வத்தின் கணவர் பெயர் தனக்குத் தெரியாது என்று 692ஆம் பக்கத்தில் சாட்சி ஒப்புக் கொள்கிறார். ''ஜிராஜசெல்வம் திருமணமானவராயா அவர் திருமணம் செய்து கொண்டுள்ளார் என்பது பற்றி எனக்குத் தெரியாது'' என்று 692-ம் பக்கத்தில் அவர் மேலும் ஒப்புக்கொண்டுள்ளார். ஜிராஜசெல்வம் சங்கரத் தேவரிடம் வேலை செய்துள்ளாரா என்பதும் சங்கரத் தேவருக்கும், ஜிராஜி செல்வத்திற்குமிடையே உள்ள உறவு பற்றியும் தனக்குத் தெரியாது என்றும் சாட்சி மேலும் ஒப்புக் கொண்டுள்ளார்.

350. சண்முகசுந்தரத்தை கிராமத்தில் சப்-இன்ஸ்பெக்டர் விசாரணை செய்யவில்லை என்பதையும், சண்முகசுந்தரம் திசையன்விளைக் காவல் நிலையத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார் என்பதையும், காவல் நிலையத்தில் ஒரு வெற்றுத் தாளில்அவர் கையெழுத்திட்டுக் கொடுத்தார் என்பதையும் பின்னர், சப்-இன்ஸ்பெக்டர் அதில் விவரங்களை எழுதி அதில் வேறு ஒரு தேதியை எழுதிக்கொண்டார் என்பதையும் மேற் கொன்ன பதில்கள் தெளிவாகக் காட்டுகின்றன. சா. ஆ. பி. 22-ஐ ஆராய்ந்து பார்த்தால் அதுவே இதனை நிரூபிக்கும்.

351. சப்-இன்ஸ்பெக்டர் கொடுத்த சாட்சியத் தின்பேரிலும் சப்-இன்ஸ்பெக்டர் ஒப்புக்கொண்ட தின்பேரிலும் 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21 ஆம் நாளன்று பொது நாட்குறிப்பில் செய்துள்ள பதிவுகளிலும் இருந்து பார்க்கும்போது சப்-இன்ஸ்பெக்டர், சங்கனாங்குளம் கிராமத்திற்கு 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21ஆம் நாள் அன்றோ அல்லது வேறு ஒரு நாளிலோ செல்லவேயில்லை என்பதும் அவர் விசாரணை எதையும் செய்யவில்லை என்பதும் சங்கரத்தேவருடன் உடந்தையாக இருந்து திசையன்விளைக் காவல் நிலையத்திலேயே எல்லாம் நடந்தது என்பதும் என்னுடைய திட்டவட்டமான கருத்தாகும். சப்-இன்ஸ்பெக்டர் இவ்வாறு நியாயமற்ற முறையில் ஏன் நடந்துகொண்டார் என்பதற்கு அவருக்கும், சங்கரத்தேவருக்கும் இடையே வலுவான உடன்பாடு இருந்ததைத்தவிர வேறு காரணம் இல்லை.

352. சப்-இன்ஸ்பெக்டர் டி. பி. டபிள்யூ 6 முத்தையாவை எப்படி அழைத்து வந்தார் என்பது எனக்குப் புரியவில்லை. சங்கரத் தேவர் டி. பி. டபிள்யூ 6 முத்தையாவை திசையன்விளைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றிருக்க வேண்டும் என்பதும் சப்-இன்ஸ்பெக்டரும் சங்கரத் தேவரும் சேர்ந்து சா.பி.ஆ. 11 வாக்குமூலத்தை அவரிடமிருந்து பெற்றனர் என்பதும், ஒரு வெற்றுத் தாளில் முத்தையாவின் கையொப்பத்தைப்பெற்றனர் என்பதும், அதில் விவரங்கள் பின்னர் எழுதப்பட்டன என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

353. கிராம முன்சீப் இராமச்சந்திரன் ஆற்றிய பங்கு பற்றி அடுத்ததாகக் கவனிப்போம். சா.ஆ.பி. 10 மனுவை விசாரிக்கும்போது இவர், டி.பி.டபிள்யூ. 12 ஆக விசாரிக்கப்பட்டார். 17 ஆண்டுகளாக இவர் சங்கனாங்குளம் கிராமத்தில் கிராம முன்சீப்பாகப் பணியாற்றி வந்துள்ளார். 1980 மார்ச்சிலும் அதன் பின்னரும் அவர் கிராம முன்சீப்பாக இருந்தார். பிறப்பு, இறப்புப் பதிவேட்டை வைத்து வருவதோடு அவரிடம் தெரிவிக்கப்படுகிற பிறப்பு, இறப்பு பற்றிய விவரங்களை மட்டுமின்றி கிராமத்தைச் சுற்றி அவர் அடிக்கடி சென்று பார்வையிட்டுக் கிராமத்தில் நடைபெறும் பிறப்பு இறப்பு சம்பவங்கள் பற்றித் தகவல் தெரிந்து பதிவுகளைச் செய்யவேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் தகவல் தெரிவிக்கவில்லை யென்ற காரணம் காட்டி பிறப்பு, இறப்பு முதலிய புள்ளி விவரங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வில்லை என்று கூறி அவர் தப்பிக்க முடியாது. சம்பந்தப்பட்டவர்கள் தகவல் தெரிவித்தாலும் தெரிவிக்காவிட்டாலும் அவர் தினமும் அல்லது அடிக்கடி கிராமத்தைச் சுற்றிப் பார்த்து தகவல் சேகரித்துப் பதிவேட்டில் பதிவுகளைச் செய்ய வேண்டும் என்பதே அவருடைய கடமையாகும். தமிழ்நாடு 1899ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 3/1899) அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவை மூலம் இந்தக் கடமை அவருக்கு உண்டு.

354. கமிஷன் முன் நடந்த விசாரணையின் முதல் பகுதியில் வழக்குரைஞர் திரு வெங்கடாச் சாரி வாதிட்டார். கிராம முன்சீப் தன்னிடம் தெரிவிக்கப்படும் தகவலை மட்டுமே பதிவு செய் வது அவருடைய கடமை என்றும், தகவல் தெரிவிப் பவர் அவரிடம் வந்து தகவல் தெரிவித்தாலன்றி மற்றபடி பதிவு செய்வது கிராம முன்சீப்பின் கடமை அன்று என்று கமிஷன் முன் நடந்த விசா ரணையின் முதல் பகுதியில் வழக்குரைஞர் திரு வெங்கடாச்சாரி வாதிட்டார். ஆனால், சட்டங்கள், விதிகள் ஆகியவற்றில் சொல்லியுள்ள சட்டங்களின் பற்றி அவருடைய கவனத்தை ஈர்த்த கருத்துக்கள் பற்றி அவருடைய வாதம் அவர் போதுதான் வாதிட்டது தவறு என்று அவர் ஒப்புக்கொண்டார். எனவே, தன்னுடைய கடமை என்ன என்பது பற்றித் தனக்குத் தெரியாது என்று இராமச்சந்திரன் தன்னுடைய சாட்சியத்தில் கூறுகிறார்.

355. தமிழ்நாடு 1899-ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு பதிவு சட்டம் (தமிழ்நாடு சட்டம் 3/1899), தொடர்பாக வருவாய்த்துறை வாரி யத்தின் நிலை ஆணைகளில் 58-ம் பக்கத்தில் தொடர்புடையதான பகுதியை இங்கே நான் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

''5. பிறப்பு இறப்புப் பதிவாளரான கிராம முன்சீப்பின் கடமைகள்.

பிறப்பு, இறப்பு பற்றிய விவரங்களைப் பதிவு செய்யும் பணி, மாவட்ட ஆட்சியாளரின் கட்டளையின்பேரில் கிராம முன்சீப்பிடம் அல்லது கிராம கர்ணத்திடம் ஒப்படைக்கப்படலாம். ஆனால், இப்பணி கிராம முன்சீப்பிடம் மாற்றப் படவேண்டுமென்பதை மனத்தில் கொள்ள வேண்டும். பெரிய கிராமங்களைப் பொறுத்த வரையில் மணியக்காரர் அல்லது கர்ணம் அல்லது இவ்விருவரும் இருந்தால் இப்பணி அதிகாரிகளிடம் கூட பகிர்ந்தளிக்கப்படலாம். பல அதிகாரிகள் இப்பணியைச் செய்வதால் கிராமம் பல வார்டு களாகப் பிரிக்கப்படலாம்.

பிறப்பு, இறப்புப் பதிவுகளை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு 1899ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு பதிவுச்சட்டத்தின் விதித்துறைகள் படிப் படியாகக் கிராமங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளன. 1899ஆம் ஆண்டு 3-வது சட்டம், அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவை இணைப்பு-111-ல் கொடுக்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் பெரும்பாலும் எல்லாப் பகுதிகளிலும் இவ்விதிகள் செயலில் உள்ளன. இச்சட்டத்தின் கீழ் கிராம முன்சீப் பொதுவாக பிறப்பு, இறப்புப் பதிவாளராக நியமிக்கப்படுகிறார். கிராமத்தின் எல்லைக்குள் இரயில்வேப் பகுதிகள் வரும்போது இரயில் நிலைய அதிகாரி, பிறப்பு, இறப்புப் பதிவாளராக நியமிக்கப் படுகிறார். பதிவாளர்கள், தங்கள் அதிகார வரம்புக்குள் நிகழும் பிறப்பு, இறப்புச் சம்பவங் களை விசாரித்து ஏற்கெனவே பதிவு செய்யப் படாத பிறப்பு, இறப்பு விவரங்களைப் பதிவு செய்ய 1899ஆம் ஆண்டு மூன்றாம் சட்டத்தின் 15ஆம் பிரிவின்கீழ் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது. எனவே, பிறப்பு, இறப்பு விவரங் களைக் குடும்பத் தலைவர்களே தெரிவிக்க வேண்டும் என்று கிராம முன்சீப் நினைக்கக்கூடாது. அது அவருடைய கடமையாகும் இருப்பதால் தானே விசாரித்து விவரங்களை அவர் பதிவுசெய்ய வேண்டும். 1899ஆம் ஆண்டு மூன்றாம் சட்டத்தின்கீழ் பிறப்பு, இறப்பு விவரங்களைத் தெரிவிக்கத் தவறியவர்கள் பற்றிய இருவார அறிக்கை ஒன்றை வட்டாட்சியருக்கு அனுப்ப இது உதவும். சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட விதி களைச் சேர்ந்த 15-வது விதியின்படி இது பதி வாளர்களின் கடமையாகும். 1899ஆம் ஆண்டு மூன்றாம் சட்டம் செயலில் இல்லாத பகுதிகளில் கிராமத்தில் பிறப்பு, இறப்பு பற்றிய விவரங்களை விசாரித்துப் பதிவு செய்வது அவருடைய பொறுப் பாகும்.

கிராம முன்சீப் அவருடைய கிராமத்தில் ஒவ்வொரு மாதமும் நிகழும், பிறப்பு, இறப்பு விவரங்களை பதிவு செய்து, அவை பற்றிய விவர அறிக்கை ஒன்றைச் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அதற்கு அடுத்த மாதத்தின் மூன்றாம் தேதிக்குள் அனுப்ப வேண்டும். 1899ஆம் ஆண்டுச் சட்டம் செயலில் உள்ள பகுதிகளில் மேற்சொன்ன அறிக் கைகளை அனுப்புவது கிராம முன்சீப்பின் சட்ட படிக்கான கடமையாகும். இச்சட்டம் செயலில் இல்லாத பகுதிகளிலும் இதே நடைமுறை பின் பற்றப்பட வேண்டும். ஜாராட்சி இருந்தால், மாதாந்திர அறிக்கையின் நகல் ஜாராட்சிக்கும் அனுப்பப்பட வேண்டும்.''

356. கிராம முன்சீப்பை கமிஷன் முன் விசா ரித்தபோது முரண்பாடுகளும் பொய்யான வாக்கு மூலங்களும் கிடைத்தன. சாதாரண வழக்கு களிலும் சப்-இன்ஸ்பெக்டர் (அல்லது காவல்துறை அதிகாரி) கிராமத்திற்கு விசாரணைக்காக வந்தால் கிராம முன்சீப்பின் உதவியைப் பெறுவது கடமை யாகும். ஒரு வழக்கு பற்றி விசாரிப்பதற்காக சப்-இன்ஸ்பெக்டர் கிராமத்திற்கு வந்துள்ளார் என்று கிராம முன்சீப்புக்குத் தெரியவந்தால், சப்-இன்ஸ்பெக்டருடன் சென்று அவர் யாரை விசாரிக்க வந்துள்ளாரோ, அந்த நபர்களை அழைத்து வந்து சாட்சியம் அளிக்க அவர் உதவி செய்ய வேண்டும்.

357. சேரிக்குச் சென்று பார்வையிட்டதாக சப்-இன்ஸ்பெக்டர் கூறிய 1980ஆம்ஆண்டு ஜூலை இங்கள் 21ஆம் நாளன்று கிராம முன்சீப் இராமச் சந்திரத் தேவர் குறிப்பிடத்தக்க பணி எதையும்

செய்யவில்லை; இராஜசெல்வம் தூத்துக்குடியிலிருந்தார் என்று சுருக்கமான வாக்குமூலம் கொண்ட சான்றிதழ் ஒன்றைக் கொடுத்தார். (சான்றாவணம் ஏ. 154, நாள் 21—6—1980.)

358. மணியின் மரணம் பற்றி அவர் எவ்விதத் தகவலும் கொடுக்கவில்லை. சா. ஆ. பி. 10-ல் உள்ள விவரங்களைப் பற்றி அவர் தகவல் எதுவும் சொல்லவில்லை. எந்தப் பகுதி உண்மை, எந்தப் பகுதி பொய் என்பது பற்றிக் கூட அவர் ஒன்றும் சொல்லவில்லை. மேலும், அவர் உதவி எதனையும் செய்யவில்லை. இராஜசெல்வம் தூத்துக்குடியில் அவளின் பெற்றோர்களுடன் வசித்து வந்தார் என்ற சான்றிதழ் ஒன்றை (சா. ஆ. பி. 23) சப்-இன்ஸ்பெக்டர் பெற்றுக்கொண்டார். யாருடனும் உடந்தையாக இல்லாமல் நேர்மையாகவும் உண்மையாகவும் சப்-இன்ஸ்பெக்டர் புலன் விசாரணை செய்திருந்தால் திராம முன்சீப் இராமச்சந்திரனிடமிருந்து அவர், இந்த மாதிரி ஒரு சான்றிதழை (சா. ஆ. பி. 23) பெற்றிருக்கக் கூடாது. அவர் உடந்தையாக இருந்தார் என்பதற்கு இதுவே சான்றாகும்.

359. சா.ஆ.பி. 10-ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தையும் அதாவது, மணியின் மரணம், எங்கு எப்படி இறந்தார், யார் அரசு உடலை எரித்தார், எப்பொழுது எரிக்கப்பட்டது, மணியை சங்கரன் கடுமையாக அடித்து, சங்கரத் தேவருக்கும், இராஜசெல்வத்திற்குமிடையே கள்ளத் தொடர்பு இருப்பதாகச் சொல்லப்படுவது ஆகியவை பற்றிக் கிராம முன்சீப் விசாரித்திருக்க வேண்டும்.

360. 1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ம் நாளன்றுதான் கிராமத்தில் மணியின் மரணம் பற்றி விசாரித்ததாகவும், மணி இயற்கையாக மரணம் எய்தினார் என்று தன்னிடம் சொல்லப்பட்டதாகவும் கிராம முன்சீப் இராமச்சந்திரன் கூறினார். மணி அவரது வீட்டில் 1980 மார்ச்சில் மாரடைப்பு காரணமாக மரணம் எய்தினார் என்பது கிராம முன்சீப் இராமச்சந்திரனுக்குத் தெரியும் என்று அவர் 1980ஆம் ஆண்டு ஜூன் 22ஆம் நாளன்று கொடுத்த சான்றிதழ் (சா.ஆ.பி. 23) தெரிவிக்கிறது. 22ஆம் தேதியன்றுதான் ஒரு நபரை அல்லது நபர்களை விசாரித்து, மணி, மாரடைப்பு காரணமாக மரணம் எய்தினார் என்று அவர்களிடமிருந்து தகவல் பெற்றதாக கிராம முன்சீப் கூறவில்லை.

361. பொருத்தமாகப் பயன்படுத்தும் வகையிலும், எந்த ஒரு முறையிலும் பொருத்தமான நேரத்தில் பயன்படுத்தவும் இராமச்சந்திரத் தேவர் இத்தகைய ஐயத்திற்கிடமான சான்றிதழை வேண்டுமென்றே அளித்துள்ளார் என்பது வெளிப்படை. பலரை, அதாவது மசானம், நல்லையா, முத்தம்மாள் இன்னும் பலரை சாட்சியத்தில் சொல்லியவாறு இராமச்சந்திரன் விசாரித்திருந்தால் சா. ஆ.பி. 23-ன் முதல் பகுதியில் மேற் சொன்னவர்களைத் தவல் கொடுத்தவர்களாக அவர் குறிப்பிட்டிருக்கவேண்டும். தவிர, சா. ஆ. பி. 23-ல் பயன்படுத்தப்பட்ட மொழியும் அதில் சொல்லப்பட்ட தகவல்களும் இராமச்சந்திரத் தேவர் தனக்குத் தெரிந்தவரையில் சொல்லப்பட்டவையாக அமைந்துள்ளன. இராமச்சந்திரன் சா.ஆ.பி. 24 என்ற ஒரு உறுதிமொழிப் பத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளார். ''மணி, சங்கரத்தேவரின் கீழ் பண்ணை ஊழியராக இருந்தார்'' என்று அவர் அதில் தெரிவித்திருக்கிறார். இராமச்சந்திரத் தேவர் அளித்த உறுதிமொழிப் பத்திரத்தில் தொடர்புடைய பகுதி மேழே கொடுக்கப்பட்டுள்ளது:—

''எனது சகோதரரின் கீழ் பண்ணை ஊழியராக உள்ள திரு மணி, அதிகமாக ஆல்கஹால் அருந்தும் பழக்கம் உள்ளதன் காரணமாக மாரடைப்பால் இறந்து விட்டார்; அவருடைய உறவினர்களே அவரது இறுதிச்சடங்குகளை நடத்தினர். தாதிஷ்டவசமாக இந்த மரணத்தைப் பயன்படுத்தி எங்கள் மீது களங்கம் கற்பிக்கிறார்கள்''.

362. ஆனால், அவர் சாட்சியம் அளித்தபோது தன்னை எதிர்நோக்கியுள்ள கடும் பிரச்சினைகள் பற்றி அவர் உணர்ந்து தனக்கு மணியைத் தெரியாது என்றும், தான் அவரைப் பார்த்ததே இல்லை எனறும், சப்-இன்ஸ்பெக்டர், மணியின் மரணம் பற்றி விசாரித்தபோதுதான் மணியைப் பற்றித் தனக்குத் தெரியவந்தது என்றும் பொய்யான தகவலை பொய் என்று தெரிந்தும் கூட தெரிவித்தார்.

363. மணியின் மரணம் பற்றி சப்-இன்ஸ்பெக்டர் விசாரணை செய்த போதுதான் சங்கரத்தேவரின் பணியாளரான மணியைப் பற்றி இராமச்சந்திரத் தேவர் தெரிந்து கொண்டார் என்ற அவருடைய சாட்சியத்தை (அந்த சாட்சியம் முற்றிலும் பொய்யானது) நான் ஏற்றுக் கொள்ளவில்லை. சங்கரத்தேவரின் கீழ் மூன்று பணியாளர்கள் தான் இருந்தனர் என்ற சாட்சியம் கூறுகிறது. பக்கத்தில் வசிக்கும் மூன்று சகோதரர்களும் அவர்களின் கீழ் உள்ள பணியாளர்களைப் பற்றி நன்கு தெரிந்து வைத்துள்ளனர்; ஒரு சகோதரர் மற்றொரு சகோதரரின் கீழ் பணியாற்றும் பணியாளருக்கு வேலை கொடுப்பதும், எப்போதாவது வேலை நிமித்தம் அனுப்புவதும் உண்டு. இக்குடும்பத்தில் அவர்களுக்கிடையே நெருங்கிய சுமுகமான உறவுமுறை நிலவுகிறது. இராமச் சந்திரத் தேவருக்கு சங்கரத்தேவரின் பண்ணை ஊழியர்களைக் கண்டிப்பாகத் தெரிந்திருக்க வேண்டும். சங்கரத் தேவரின் கீழ் பணியாளராக மணி வேலை செய்தார் என்பதைச் சான்றாவணம் பி. 24-ல் அவர் நிட்டவட்டமாக ஒப்புக்கொண்டார். சங்கரத்தேவரின் வீட்டில் விஷம் குடித்து மணி இறந்துள்ளார் என்பது பற்றி உங்களுக்கு ஏதேனும் தெரியுமா என்று சப்-இன்ஸ்பெக்டர் அவரை விசாரித்தபோது (இராமச்சந்திரத் தேவர்) தன் ஊடையச சகோதரர் வீட்டில் அத்தகைய சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று இராமச்சந்திரத் தேவர் சப்-இன்ஸ்பெக்டரிடம் கூறியதாக முதன்மை விசாரணையின்போது அவர் கூறியுள்ளார். சப்-இன்ஸ்பெக்டர் விசாரணை செய்தது பற்றியும், சப்-இன்ஸ்பெக்டரிடம் அவர் என்ன கூறினார் என்பது பற்றியும் இராமச்சந்திரத் தேவர் சான்றாவணம் பி-23-ல் அல்லது சா.ஆ. பி-154-ல் குறிப்பிடவில்லை என்பது பற்றி சப்-இன்ஸ்பெக்டரின் அறிக்கையில் (சா. ஆ. ஜி. 2) குறிப்பேதும் இல்லை. 1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21ஆம் நாள் வரை தனக்கு மணியைப்பற்றித் தெரியாது என்று கிராம முன்சீப் தன் ஊடைய வாக்குமூலத்தில் சாட்சியம் கொடுத்திருப்பது (பாய்யானதும், பொய்ச் சாட்சியமும் ஆகும். சா.ஆ.பி. 24-ல் அவர் கொடுத்துள்ள உறுதிமொழிப் பத்திரத்திற்கு இது முற்றிலும் முரணானதாகும்.

364. மணியின் மரணம் குறித்து கிராம முன்சீப் என்ற முறையில் ஒரு சான்றிதழைக் கொடுக்குமாறு சப்-இன்ஸ்பெக்டர் தம்மைக் கேட்டதாகவும், தான் சா.ஆ.பி. 23-ஐக் கொடுத்த தாகவும் டி.பி. டபிள்யூ 12 ஒப்புக்கொள்கிறார். அவருடைய கூற்றுப்படி சா.ஆ.பி. 23 சாதாரண நிகழ்ச்சியாகும். 1980-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ஆம் நாளன்று தான் விசாரித்துத் தகவல் தெரிவிப்பதாகவும், அடுத்த நாள் விசாரித்து சா.ஆ.பி. 23-ஐ அனுப்பியதாகவும் சப்-இன்ஸ்பெக்டரிடம் அவர் கூறியதாகச் சாட்சியம் அளித்துள்ளார். இது முற்றிலும் பொய்யானதும், விநோதமானதுமாகும். கிராமச்சந்நிதத் தேவர் விசாரணை செய்த பின்னர் சா.ஆ.பி. 23 சான்றிதழ் கொடுக்கப்பட்டிருந்தால் சான்றாவணம் பி. 23 அவ்வளவு சுருக்கமாக அமையாது. என்ன விசாரணை செய்தார், யார் யாரை விசாரித்தார், அவர்கள் அவருக்கு என்ன தகவலைக் கொடுத்தார்கள் என்பது பற்றிய விரிவான அறிக்கையாக அது இருந்திருக்கும். தொடக்கத்திலிருந்து இறுதி வரை இராமச்சந்திரத்தேவரின் சாட்சியத்தின் ஒவ்வொரு பகுதியும் பாய்யானதாகும், இந்த அம்சம் குறித்து பாய்ச் சாட்சியம் கொண்டதாக வும் அமைந்துள்ளது.

365. வழக்குரைஞர் திரு அசோக் குமார் இராமச்சந்திரத் தேவரைக் குறுக்கு விசாரணை செய்யத் தொடங்கியபோது 705-ஆம் பக்கத்தில் அவர் அளித்த பதில்கள் என்ற அளவிற்கு டி.பி. டபிள்யூ 12 பொய்ச் சாட்சியம் சொல்லியுள்ளார் என்பதைக் காட்டும் இத்தச் சாட்சியத்தை நாம் நம்பக் கூடாது.

''மணி, என்னுடைய சகோதரரின் பண்ணை ஊழியர் அல்ல; என்னுடைய சகோதரர் சங்கரத் தேவரின் மே பன்னை ஊழியராக மணி பணி யாற்றினார் என்று என்னுடைய உறுதிமொழிப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சப்-இன்ஸ்பெக்டர் முதலில் என்னை விசாரித்த போதுதான் மணி என்ற ஒருவர் இருந்தார்என்பதே எனக்குத் தெரியவந்தது என்று சா. ஆ.பி. 24. உறுதிமொழிப் பத்திரத்தில் தெரிவிக்கப்படவில்லை (நான் தெரிவித்த முறையில்). சப்-இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்ததாகவும், என்னுடைய சகோதரரைப்பற்றி நான் விசாரித்ததாகவும், அதன் பின்னர் மணியைப்பற்றியும், மணியின் மரணம் பற்றியும் கிராமத்தில் நான் விசாரித்ததாகவும் என்னுடைய உறுதிமொழிப் பத்திரத்தில் நான் தெரிவிக்கவில்லை.

மணியின் குடும்பத்தினர் கிராமத்தில் இல்லை. நான் பெருமாள் என்பவரை விசாரித்தேன். அவருடைய தந்தை பெயர் எனக்குத் தெரியாது. சுவாமிதாஸ் என்பவரை நான் விசாரித்தேன். நான், முத்தையா என்பவரை விசாரித்தேன். (தந்தை பெயர் தெரியாது). சாட்சி நல்லையா, மசானம், ஆகியோரையும் விசாரித்தேன். மணியின் மரணத்திற்குப் பின்னர் சுமார் 3 மாதங்கள் கழித்து நான் இவர்களை விசாரித்தேன்.''

366. உண்மையை இவர் பேசவில்லை என்பதை இவருடைய பதில்கள் காட்டுகின்றன. குறுக்கு விசாரணையில் அவர் குழம்பிப்போனதால் அவருடைய பதில்கள் எடுபடவில்லை. சப்-இன்ஸ் பெக்டர் கிராமத்திற்கு வந்து சென்ற பின் அடுத்த நாள் அதாவது 1980-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22-ஆம் நாளன்று நல்லையா, மசானம், முத்தையா மற்றவர்கள் முதலியோரை தான் விசாரித்ததாக அவர் சொல்லவில்லை. மணியின் மரணத்திற்குப் பின்னர் மூன்று மாதங்கள் கழித்து இவர்களை விசாரித்ததாக அவர் தெரிவித்தார். அவர் குறிப்பிடுகின்ற இந்த விசாரணை சப்-இன்ஸ் பெக்டர் 1980-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ஆம் நாளன்று சென்றதாகச் சொல்லப்படுகின்ற குறிப் போடு எவ்வித்தத்திலும் தொடர்புடையதாக இல்லை. ஆனால், தகவல் கிராம முன்சீப்பிடம் இருந்து ஏற்கெனவே பெறப்பட்டது. தான் விசாரித்த கிராம மக்கள் எவரிடமிருந்தும் கையொப்பம் எதனையும் வாங்கவில்லை என்றும் கையொப்பமிட்ட வாக்குமூலம் எதனையும் வாங்க வில்லை என்றும் அவர் ஒப்புக்கொண்டார்.

367. இவையெல்லாம் வஞ்சகக் கூட்டு, அப்பட்ட மான பொய்யாகும். ஆவணத்தின் 708-ஆம் பக்கத்தில் (டி.பி. டபிள்யூ 12) சாட்சி ஒப்புக்கொண்ட திலிருந்து இது தெளிவாகிறது. அதில் மணியின் மரணம் குறித்த சான்றிதழைத்தான் சப்-இன்ஸ் பெக்டர் தன்னிடம் கேட்டாரென்றும் மணி, எந்தச் குழ்நிலையில் எப்படி இறந்தார் என்பது பற்றி அவர் கேட்கவில்லையென்றும் சாட்சி ஒப்புக் கொள்கிறார். கிராம முன்சீப்பைச் சந்தித்து சா.ஆ.பி. 10 பற்றி விசாரிப்பதற்காக வந்த சப்-இன்ஸ்பெக்டர், மணியைச் சங்கரத் தேவர் கடுமை யாக அடித்தார் என்றும், காவல்துறைக்குத் தெரி விக்காமலேயே அத்த நாளிலேயே இறத்த உடல் எரிக்கப்பட்டது என்றும் சா.ஆ.பி. 10-ல் சொன்ன குற்றச்சாட்டைக் கருத்திற்கொண்டு மணி எந்தச் சூழ்நிலையில் மரணம் அடைந்தார் என்பது பற்றி கிராம முன்சீப்பைக் கண்டிப்பாகக் கேட்டிருக்க வேண்டும்.

368. மூன்று சகோதரர்களும் அவரவர்களுடைய உறுதிமொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும்போது அவர்கள் மூவரும் கூடிப் பேசித் தாக்கல் செய்தார்கள் என்றும், இதனால் இந்த உறுதிமொழிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள் ளப்பட்டன என்றும், கிராம முனிசீப் மசானம் முத்தையா, நல்லையா முதலியோரை விசார ணை செய்திருந்தால், மணி இயற்கையாக மரண மடைந்தாரா அல்லது சந்தேகத்திற்கிடமான சூழ்நிலையில் மரணமடைந்தாரா என்பது பற்றி பிரசினை எழும்போது அது உறுதிமொழிப் பத் திரங்களில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்று (டி.பி.டபிள்யூ 12) சாட்சி, ஆவணத்தின் 717-ஆம் பக்கத்தில் ஒப்புக்கொள்கிறார். மேற் சொன்னவற்றை தன்னுடைய உறுதிமொழிப் பத்தி ரத்தில் அவர் குறிப்பிட விரும்பி, ஆனால் உறுதி மொழிப்பத்திரம் மிக நீளமாகப் போய்விடும் என்று வழக்குரைஞர் கூறினார் என்று சாட்சி (டி.பி. டபிள்யூ 12) கொடுத்த சாக்குப்போக்கு பொருத்த மற்றதும் பொய்யானதுமாகும்.

369. இராமச்சந்திரன் கொடுத்த சான்றாவணம் பி 24 உறுதிமொழிப் பத்திரத்தில் கீழ்க்கண்ட பகுதியை மீண்டும் எடுத்துக் கூறுவது அவசிய மாகும்.—

> ''மேற்சொன்ன நபர்கள் இது போன்ற குற்றச் சாட்டுகளுடன் எனுடைய சகோதரர் சங்கர னுக்குஎதிராக மனு ஒன்றை அனுப்பினர் என்றும் அது காவல் துறையினரால் உரியவாறு விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது என்றும் நான் அறிகிறேன்.''

370. சங்கரனுக்கு எதிராக கொடுக்கப்பட்ட சா.ஆ.பி. 10 மனுவை விசாரணை செய்ததைக் கிராம முனிசீப் இராமச்சந்திரன் அறிவார் என்றும்

கிராம முனிசிப்பும் சில தகவல்களை அளித் தார் என்றும், சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ண சாமிக்கு அவர் இரண்டு சான்றிதழ்களைக் கொடுத் தார் என்றும், முந்தைய பாராக்களில் விவாதிக்கப் பட்டதிலிருந்து தெளிவாகத் தெரிவதுடன் அதைக் கிராம முனிசிப்பும் ஒப்புக்கொண்டுள்ளார். இவ் வாறாக, சா.ஆ.பி. 10-ஐ விசாரித்த சப்-இன்ஸ் பெக்டர் கிராமத்திற்கு வந்தது பற்றி சங்கரனைப் போலவே வேறு சிலரின் மூலமாக இராமச்சந்திரன் அறிந்துகொண்டதில் எவ்விதப் பிரச்சினையும் இல்லை.. சப்-இன்ஸ்பெக்டர் வந்தது பற்றி இராமச்சந்திரனுக்கே தெரியும். மனு குறித்து தன்னுடைய சகோதரர் சங்கரன் மூலமாக அவர் அறிந்துகொண்டார் என்றும் சா.ஆ.பி. 10 குறித்து விசாரணை நடைபெறுவது பற்றி சப்-இன்ஸ்பெக்டர் மூலமாக அவர் அறிந்துகொண்ட போது மனு தொடர்பாகக் காவல் துறை விசா ரணை செய்தது பற்றி அவர் அறிந்துகொண்டார் என்றும், அவர் (கிராம முன்சீப்) சப்-இன்ஸ் பெக்டருக்கு உதவினார் என்றும், இராமச்சந்திரன் சான்றாவணம் பி. 24 உறுதிமொழிப் பத்திரத்தில் பொய்யான வாக்குமூலம் கொடுத்தார். இராமச் சந்திரன் பழிபாவத்திற்கு அஞ்சாத பொய்யர் என்பதையும் சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி நடத்திய விசாரணை பற்றி அவருக்குத் தெரியும் என்பதை உறுதிமொழிப் பத்திரத்தில் சொல்ல அவர் விரும்பவில்லை என்பதையுமே இது காட்டு கிறது.

371. சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி சங்கர தேவருடன் உடந்தையாக இருந்து பொய்யான ஆவணத்தையும், பொய்யான பத்திரங்களையும், பொய்யான வாக்குமூலத்தையும் தயாரித்தார் என்பதில் மேலே குறிப்பிடப்பட்ட காரணங் களினால் எனக்கு எவ்வித ஐயமுமில்லை. தொடக்கத்திலிருந்து இறுதிவரை அவருடைய அறிக்கை சா.ஆ.பி. 2 பொய்யானது. விசாரணை செய்யப்படாமலேயே சில ஆவணங்கள் காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்டன. கமிஷனின் விசாரணை தொடர்பாகக் கிருஷ்ணசாமி அடிக்கடி தான் வருகிற மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்ட அறையிலும், திருநெல்வேலி சந்திப்பு, உசேன் லாட்ஜிலும் (விசாரணையின் போது சப்-இன்ஸ்பெக்டர் தேவர் வகுப்பினருடன் கூடி உரையாடிக்கொண்டிருந்தார் என்பது புகா ராகும்). தேவர் வகுப்பினருடன் கிருஷ்ணசாமி நெருங்கிய தொடர்பு புலப்படுத்தி வந்தார் என்ப தற்கு திருவாளர்கள் டேவிட், அசோக் குமார், என்ற இரு வழக்குரைஞர்களும் காசி என்கிற சாட்சியும் என்னிடம் அடக்கிய புகார்களைக் கூறிக் கொண்டிருந்தனர். சப்-இன்ஸ்பெக்டரின் விரும்பத் தகாத இந்த நடத்தை குறித்து சில சமயங்களில் நான் அவரை எச்சரித்திருள்ளேன். பல நாட்களில் நான், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்ட அறையி லிருந்து ஆய்வு மாளிகைக்குத் திரும்பி வரும்போது சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி காவல் துறை வண்டியுடன் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்ட அறை வளாகத்தில் நின்றுகொண்டிருந்ததையும் தேவர் வகுப்பினருடன் கூடிக் குலவிக்கொண் டிருந்ததையும் நான் பார்த்துள்ளேன்.

372. மாடசாமித் தேவருடன் காவல் துறை யினர் உடந்தையாக இருந்தனர் என்ற குற்றச் சாட்டை மறுக்கும் வகையில் மாடசாமித் தேவர் பற்றி ரவுடிகள் குறிப்பேட்டில் சப்-இன்ஸ்பெக் டர் 8-5-1980 அன்று அவருக்கு எதிராகப் பதிவு செய்துள்ளதை திரு வெங்கடாச்சாரி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார். 8-5-1980 முதல், ஒரே நாளில் அவருக்கு எதிராகக் குறிப்புப் பதிவு செய்யப்பட்டதால், எல்லா மாதங்களிலும் அவர் களிடையே உள்ள உறவு முறை விரோதமாக உள்ளது என்பதை நான் நம்பத் தயாராக இல்லை. அந்தப் பதிவுகள் உள்நோக்கத்துடன் ஒரே நாளில் தயாரிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளன என்பதை அப் பதிவுகளே காட்டுகின்றன. மேலும் விவரக் குறிப்பில் பதிவு செய்யப்பட வேண்டிய தகவல் இது அல்ல. ஒன்றாக இருப்பதற்காக வேண்டு மென்றே இவ்வாறு எழுதப்பட்டுள்ள என்பதை ஒருவர் நம்புவதற்கு இதுவே போதுமானது என் பதை இந்தப் பதிவுகளை நான் ஆராய்ந்தி லிருந்து தெரியவருகிறது. இந்தப் பதிவு அடுத்த தரப்பினர் கவனத்திற்கு எப்படி வந்தது என்பது மற்றொரு அம்சமாகும். விசாரணையின்போது பொது நாட்குறிப்பில் உள்ள பதிவுகள்பற்றி திரு ஜான் வின்சென்ட், எம்.எல்.ஏ. மற்றவர்கள் ஆயோரிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டன. பொது நாட்குறிப்பில் உள்ள பதிவுகளை வழக் குரைஞர் பரிசீலனை செய்து அதில் சேகரிக்கப்பட்ட தகவலின் அடிப்படையிலன்றி சப்-இன்ஸ்பெக்டர் கொடுத்த தகவலின் பேரில் விரிவான கேள்விகள் கேட்கப்பட்டன என்று எனக்குத் தோன்றியது. இந்தத் தகவலை சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி வழக்குரைஞருக்கு எளிதாகக் கொடுத்துள்ளார்.

373. ரவுடிக் குறிப்பேட்டில் பதிவுகள் முறை யாக எழுதப்படுவதில்லை என்பதையும் குறிப்பா கக் கிருஷ்ணசாமி எழுதிய பதிவுகள் உள்நோக்கத் துடன் ஒரே நாளில் எழுதப்பட்டன என்ப தையும் குறிப்பேட்டில் உள்ள பதிவுகள் காட்டு கின்றன. 8-5-1980 நாளிட்ட பதிவில் உள்ள குறிப்பிடத்தக்க சம்பவங்களும் மற்ற நாட்களில் பதிவு செய்யப்பட்ட ஏனைய பதிவுகளும், தேவர் வகுப்பினருடன் சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி நட்புறவுடன் பழகவில்லை என்ற ஒரு எண்ணத்தைக் கொடுப்பதாக உள்ளன. ஏனைய பதிவுகளைப் பார்க்கும்போது இது தெளிவாகத் தெரிகிறது. வேறு எந்தப் பதிவு களும் இத்தகைய விவரங்களைத் தரவில்லை. சப்-இன்ஸ்பெக்டர் கிராமத்திற்குச் சென்று ரவுடி யைப் பார்த்து அவருக்கு எதிராகப் புகார் எதுவும் செய்யவில்லை என்பதை மற்ற பதிவுகள் காட்டு கின்றன. சில வழக்குகள் குறித்து விரிவான விசாரணையும் ஏனைய விவரங்களும் ரவுடிக் குறிப்பேட்டில் எழுதப்படக் கூடாது. தேவர் வகுப்பினருடன் சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி உடந்தையாக இருந்தார் என்பதை ரவுடிகள் குறிப்பேட்டில் உள்ள பதிவு வெளிப்படுத்துகிறது என்று நான் கருதுகிறேன்.

374. தேவர் வகுப்பினருக்கு எதிராக 17 வழக்கு கள் தீர்ப்பளிக்கப்பட்டாமல் உள்ளன. கடுங் குற்றங்கள் சம்பந்தப்பட்ட இந்தப் பதினேழு வழக்குகளில் தேவர் வகுப்பினருக்கெதிராக நட வடிக்கை எதுவும் 8 முதல் 10 மாதங்களாக எடுக்கப்படவில்லை என்று காவல் துறையில ருக்கும் அரசுக்கும் வாதாட வந்த வழக்குரைஞர் திரு பெரியநாயகம் ஒப்புக்கொண்டுள்ளார். அண்மையில்தான் அவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்தப் பதினேழு வழக்குகளில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட வில்லை ; அவர்களைக் கைது செய்ய முயற்சி ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்று திரு அசோக் குமார் தெரிவித்தார். நியாயமான விசாரணையில் ஒருவர் இதைத்தான் எதிர்பார்ப் பார். காவல் துறையினருடன் தேவர் வகுப்பினர் உடந்தையாக இருந்தனர் என்பதற்கு இதுவே மற்றொரு அத்தாட்சியாகும் என்று வழக்குரைஞர் மேலும் தெரிவித்தார். இக்கருத்தை நான் முற்றிலும் ஒப்புக்கொள்கிறேன்.

375. விவரக் குறிப்பேட்டில் சங்கரத்தேவருக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட பதினேழு வழக்குகள் குறித்து குறிப்பேதுமில்லை என்பது இங்கே குறிப்பிடத் தக்கதும் தேவர் வகுப்பினருக்கும் காவல் துறையினருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததை மீண்டும் நிரூபிக்கக் கூடியதுமான மற்றொரு தகவலாக உள்ளது. அவர்களுள் இருவரும் உடந்தையாக இல்லையெனில் பதிவுகள் விவரக் குறிப்பேட்டில் நிச்சயமாகச் செய்யப்பட்டிருக்க வேண்டும். சா.ஆ.பி. 10-ஐப் பொறுத்த வரை, சப்-இன்ஸ்பெக்டர் மணியின் அண்டை வீட்டுக்காரர்களை விசாரிக்கவில்லை என்றும் இராஜசெல்வத்தின் உறவினர் எவரையும் விசாரிக்கவில்லை என்றும், மணியி ன் மாமனார், மாமியார் ஆகியோரைக்கூட விசாரிக்கவில்லை என்றும் காசி, இராஜசிங் ஆகியோரைக்கூட விசாரிக்கவில்லை என்றும், சப்-இன்ஸ்பெக்டர் திருஞ்ஞசாமி 782ஆம் பக்கத்தில் தன்னுடைய சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். இது பற்றி நான் விரிவாக விவாதித்துள்ளேன்.

376. சப்-இன்ஸ்பெக்டர் திருஞ்ஞசாமி (ஜி.டபிள்யூ.2) மாடசாமித் தேவரை 11–11–1980 அன்று இரவு 9.00 மணிக்குக் கைது செய்து இரவு 10.00 மணிக்குக் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார் என்று ஒரு பதிவு உள்ளதாக அவர் 787ஆம் பக்கத்தில் தெரிவித்துள்ளார். மாடசாமித் தேவர் லாக்-அப்பில் வைக்கப்பட்டதாகப் பொது நாட்குறிப்பேடும் தெரிவிக்கிறது. லாக்-அப்பில் ஒருவர் வைக்கப்படும்பொழுது என்ன நடைமுறை பின்பற்றப்பட வேண்டுமோ, அந்த நடைமுறை மாடசாமித் தேவரைப் பொறுத்தவரை பின்பற்றப்படவில்லை என்று அவர் ஒப்புக்கொண்டார். அந்தப் பதிவுகள் பொய்யானவை என்று சப்-இன்ஸ்பெக்டர் ஒப்புக் கொண்டார்.

377. சப்-இன்ஸ்பெக்டரும், தேவர் வகுப்பினரும் உடந்தையாக இருந்தனர் என்பதை மெய்ப்பிக்க சப்-இன்ஸ்பெக்டருடைய வாய்மொழிச் சாட்சியமும் பொது நாட்குறிப்பில் உள்ள பதிவுகளும் எடுத்துக்காட்டாகச் சொல்லப்படலாம். குறுக்கு விசாரணையில் 788ஆம் பக்கத்தில் ஆஜி இராவிடர்களுக்கான வழக்குரைஞர் திரு அசோக் குமார் பின்வரும் கேள்வியைக் கேட்டார். 'இத்தப் பதிவுகள் பொய்யானவை, சங்கரத் தேவருக்கும், அவரு டைய தரப்பினருக்கும் உதவுவதற்காக வேண்டுமென்றே எழுதப்பட்டவை'. இதற்கு சப்-இன்ஸ்பெக்டர் அளித்த பதில் வருமாறு :

'' ஆம், சில பதிவுகள் பொய்யானவையாகவும், தவறானவையாகவும் உள்ளன''.

378. சம்பவம் நடந்த 10 நாட்களுக்குள் சா.ஆ.பி. 10 கொடுக்கப்பட்டபோது சப்-இன்ஸ் பெக்டர், தேவர் வகுப்பினருடன் உடந்தையாக இருந்து, சம்பவம் நடந்தவுடன் கிடைக்கக்கூடிய உண்மையைக் கண்டறிய காவல் துறையினருக்கு உதவக்கூடிய சரியான உண்மையான தகவலைத் தடுக்கும் வகையில் புலன் விசாரணைக்குத் தடையாக இருந்தார் என்று மேற் சொன்ன காரணங்களால் நான் முடிவுக்கு வருவதற்கு எவ்வித தயக்கமும் இல்லை. தேவர் வகுப்பினருக்கும், காவல் துறையினருக்கும் இத்தகைய உடன்பாடு இருப்பது ஆவணத்தில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தர்ப்ப சாட்சியத்தில் இது மிக முக்கியமான பகுதியாகும்.

379. ஐயத்திற்கிடமான சூழ்நிலையில் மணி இறந்தது பற்றி 360/1980 ஆம் குற்ற எண்ணில் புலன் விசாரணை செய்ய காவல் துறை இன்ஸ் பெக்டர் திரு அருணாசலம் உடந்தையாக இருந்து பணியாற்றியதைப் பற்றி அடுத்ததாகக் கருதலாம். அத்தகைய சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று காவல் துறை சூப்பிரண்டு தெரிவித்திருந்த போதிலும் அதற்குச் சிறிது காலத்திற்கு முன்னரே மாவட்ட ஆட்சியாளருக்கு இச்சம்பவம் பற்றித் தெரிவிக்கப்பட்டதால் அவரே விசாரணையைத் தொடங்கினார் என்று நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். எனவே, காவல் துறையினர் இது பற்றிக் கவனமாக விசாரணை செய்ய வேண்டும்.

380. திருநெல்வேலி மாவட்டம், முன்னாள் மாவட்ட ஆட்சியாளரான திரு டி. எம். ஆறுமுகம் அப்போதைய காவல் துறை சூப்பிரண்டான திரு ஆர். இராஜகோபாலன், ஐ.பி.எஸ். அவர்களுக்குக் கீழ்க்கண்ட கடிதத்தை எழுதினார் :

'' ஆதி திராவிடப் பெண்களை கொடுமைப் படுத்தியது, கேலி செய்தது, அவர்களைக் கற்பழித்தது, கொலைகளை மறைத்தது, என்று சொல்லப்படுவதில் சிறிதளவு உண்மை உள்ளது என்றும், பாதிக்கப்பட்ட உள்ளூர் மக்கள் காவல் துறையினரிடம் அல்லது வருவாய்த் துறை அதிகாரியிடம் புகார்களைத் தாக்கல் செய்ய மு ன் வ ர வ ா த தால் இக்குற்றச் சாட்டுகளைத் தள்ளிவிட முடியாது என்றும் சேரன்மாதேவி கோட்டாட்சியர் விரிவான விசாரணை செய்த பின்னர் தெரிவித்துள்ளார். சுடலை என்பவரின் மகனான மணியின் கொலை பற்றியும் ஏனைய விஷயங்கள் பற்றியும் விரிவான விசாரணையை நடத்துமாறு உங்களுடைய சார்நிலை அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டு அவர்களிடமிருந்து அறிக்கை பெற்று உங்களுடைய பதிலை விரைவில் அனுப்புமாறு வேண்டுகிறேன்''.

381. அதன்பேரில் இது குறித்து கவனமாக விசாரணை செய்யுமாறு காவல் துறை சூப் பிரண்டு கொடுத்த திட்டவட்டமான கட்டளை களுடன் இன்ஸ்பெக்டர் அருணாசலம் 25–10–1980 அன்று முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்தார்.

382. இன்ஸ்பெக்டர் அருணாசலம் திசையன் விளைக் காவல் நிலையத்தில் 10–6–1980லிருந்து 2–7–1981 வரை இன்ஸ்பெக்டராகப் பணி யாற்றினார்.

383. இன்ஸ்பெக்டர் அருணாசலம் (ஜி.டபிள்யூ6) புலன் விசாரணையை மேற்கொண்டு 11–11–1980 அன்று வாக்குமூலங்களைப் பதிவு செய்தார். காசி, இராஜசிங், இராஜசெல்வம் முதலியோரையும் மற்றவர்களையும் இவர் விசாரித்தார். சம்பவத்திற்குத் தாங்களே நேரடி சாட்சிகள் என்று காசி, இராஜசிங் ஆகியோர் அளித்த வாக்குமூலங்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் கொடுத்த 161 வாக்குமூலங்கள் இச்சம்பவம் பற்றி விரிவாக விவரிப்பவையாகவும், இந்தச் சம்பவத்திற்கு அவர்கள் எப்படி நேரடிச் சாட்சியாக இருந்தனர் என்பதையும் காட்டுகின்றன. அதே நாளில், இராஜசெல்வமும் விசாரிக்கப்பட்டார். மணியின் சடலம் மாட்டு வண்டியில் எடுத்துச் செல்லப் பட்டு, அவருடைய வீட்டில் இறக்கப்பட்டதாகவும்,

இவையனைத்தையும் சங்கரத் தேவர் கட்டளையிட்டு நடத்தியதாகவும் அவரது வாக்குமூலம் தெரிவிக்கிறது. அதே இரவில் அழுவதற்கும், நெருங்கிய உறவினர்களுக்குச் சொல்லி அனுப்புவதற்கும் நேரம் கொடுக்காமல் பாடையும் கட்டாமல் சங்கரத் தேவரின் கட்டளையின்பேரில் அவருடைய கையாட்கள் மணியின் சடலத்தை ஒரு கதவின் மேல் கிடத்தி அதையே பாடையாக உபயோகப்படுத்தி இரவு 9.00 மணிவிருந்து விடியற்காலை 2 மணிக்குள்ளாக எரித்துவிட்டு எலும்பையும் சாம்பலையும் மணலையும் கிணற்றில் எறிந்துவிட்டனர், என்பதை அவருடைய வாக்கு மூலம் காட்டுகிறது. எரித்ததற்கான எந்தவித தடயமும் அடுத்த நாள் காலையில் அந்நிலத்தில் காணப்படக் கூடாது என்பதே இதன் நோக்கமாகும்.

384. சங்கரத் தேவரின் கையாட்களாக மற்ற வர்கள் இருப்பதால் அவர்களுடைய வாக்குமூலங்களை விவரிப்பது தேவையற்றது. வழக்கமான சடங்குகளை அறவே புறக்கணித்துவிட்டு, மனிதத் தன்மையற்ற முறையில் அதே இரவில் அவசரமாக சடலத்தை எரித்துவிட்டதாகக் கையாட்கள் ஒப்புக்கொண்டனர்.

385. சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படுகிற இடத்தின் வரைபடத்தைக்கூட காவல் துறை இன்ஸ்பெக்டர் திரு அருணாசலம் தயாரிக்கவில்லை. சா.ஆ. ஜி. 27-ல் காவல் துறை உதவி சூப்பிரண்டின் அறிக்கையின் இணைப்பு 'இ' தொடர் எண் 10-ல் ''குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர்,'' என்பதில் ''தெரியவில்லை'' என்று எழுதப்பட்டுள்ளது. காசி, சிங், இராஜசெல்வம் ஆகியோரது வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர் குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர், ''தெரியவில்லை'' என்று எப்படிச் சொல்லப்படலாம் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

386. இன்ஸ்பெக்டர் திரு அருணாசலம் தனது நேரத்தை வீணாக்கிவிட்டுத் தேவர் வகுப்பினருடன் உடந்தையாக இருந்து செயல்பட்டார். முதல் இரண்டு சாட்சிகள் நேரடிச் சாட்சியம் அளித்தபோதும், சடலத்தைத் தேவர் வகுப்பினர் இறக்கிவிட்டது பற்றி இராஜசெல்வம் சாட்சியமளித்த போதும் அதே இரவில் மனிதத் தன்மையற்ற முறையிலும், அவசரம் அவசரமாகவும் சடலத்தை எரிப்பது அவர்கள் ஆற்றிய பங்கு பற்றியும் இவ்வாறு அவசரம் அவசரமாகவும் மனிதத் தன்மையற்ற முறையிலும் சடலத்தை எரித்தது பற்றி சங்கரத் தேவரின் கையாட்கள் கூறியபோதும், சங்கரத் தேவரையும் அவருடைய கையாட்களையும் கைது செய்து, இ.பி.கோ. 302-ஆம் பிரிவின் கீழ் வழக்கு ஒன்றைப் பதிவு செய்திருக்கவேண்டியது இன்ஸ்பெக்டர் அருணாசலத்தின் கடமை என்பது தெளிவாகும். சங்கரத் தேவர், அவருடைய கையாட்கள் ஆகியோரைப் பொறுத்த வரை அவர்களைக் கைது செய்வது, புலன் விசாரணை செய்வது ஆகியவற்றிற்கான வழக்கமான நடைமுறை பின்பற்றப்பட்டிருந்தால் பயனுள்ள தகவல் கிடைத்திருக்கும். இரண்டு சாட்சிகளான காசி, இராஜசெல்வம் ஆகியோர் சாட்சியம் அளித்த பின்னரும் இராஜசெல்வம் சாட்சியம் அளித்த பின்னரும் ஒத்திசைவான சாட்சியத்தை அளித்த பின்னரும் தேவர் வகுப்பினர் ஏன் கைது செய்யப்படவில்லை என்பதற்குக் காவல் துறை, அரசு ஆகியோரது வழக்குரைஞர்களான திரு அருணாசலம், (ஜூடபிள்யூ. 6) திரு பெரியநாயகம் ஆகியோரால் விளக்கம் கூற முடியவில்லை. இந்த மூன்று சாட்சிகளின் வாக்குமூலங்கள் இப்பிரச்சினைக்கு முடிவு அளிப்பதோடு சம்பவம் பற்றிய விவரங்களை விளக்குவதாகவும் அமைந்தன. தேவர் வகுப்பினரையும் அவருடைய கையாட்களையும் உடனடியாகக் கைது செய்ய்யுமாறு இந்த வாக்கு மூலங்கள் கோரின. அவசரம் அவசரமாக மணியின் சடலத்தை எரிக்கும் விஷயத்தில் சங்கரத் தேவரின் கையாட்கள் கொடுத்த சாட்சியம் முற்றிலும் இராஜசெல்வம் கொடுத்த சாட்சியத்தை ஒத்திருக்கிறது. தேவர் வகுப்பினர்களைக் கேள்விகள் கூட கேட்கக்கூடாதா என்பது புரியாத புதிராக இருக்கிறது. சாட்சிக்கு மேல் சாட்சி சாட்சியம் அளித்த பின்னரும் பதிவேட்டில் தொடர் எண் 10-ல் ''குற்றம் சாட்டப்பட்டவர் தெரியாது'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அருணாசலம் விசாரணையை நடத்திய முறை, அவர் காட்டிய பாரபட்சம் ஆகியவை வியப்புக்குரியதாக இருக்கிறது. தேவர் வகுப்பினரை அருணாசலம் கைது செய்து விசாரணை செய்திருக்க வேண்டும். அவர்களை ஜாமீனில் விடுவதற்கு விண்ணப்பம் எதுவும் செய்யப்பட்டிருந்தால் அதைத் தடுத்திருக்க வேண்டும். இன்ஸ்பெக்டர் தேவர் வகுப்பினருடன் உடந்தையாக இருந்தார் என்பதற்கு இதுவே அத்தாட்சியாகும். தேவர் வகுப்பினர் செய்த பல்வேறு விஷமத்தனங்களையும், காவல் துறை விசாரணையை அவர்கள் எவ்வாறு தடை செய்தனர் என்பதையும் அரசு தரப்புச் சாட்சியங்களை எதிர்ச் சாட்சி கூறும் வகையில் செய்ததையும் விவரக் குறிப்பேடுகளும், ரவுடிக் குறிப்பேடுகளும் காட்டுகின்றன. இதனால் அரச தரப்புச் சாட்சிகள் சிலர் விடுதலை செய்யப்பட்டனர். தேவர் வகுப்பினரின் தீய நடவடிக்கைகளை வள்ளியூர் காவல் துறை உதவி சூப்பிரண்டு எழுதிய விவர குறிப்பேடு காட்டுகிறது. அருணாசலம் தேவர் வகுப்பினரை கைது செய்திருந்து ஜாமீன் மனுவின் பேரில் அவர்களை விடுதலை செய்திருந்தால் விவரக் குறிப்பேட்டிலும், ரவுடிக் குறிப்பேட்டிலும் உள்ள பதிவுகள் பற்றி நீதிமன்றத்தின் நாட்டத்திற்கு கொண்டு வரப்பட்டு ஜாமீன் மனு நிராகரிக்கப்பட்டிருக்கும். சங்கரத் தேவரையும் அவருடைய கையாட்களையும் சிறைச்சாலையில் அல்லது காவல் துறை பாதுகாப்பில் காவலில் வைக்கப்பட்டிருந்தால் இந்த வழக்கை மேற்கொண்டும் எளிதாகப் புலன் விசாரணை செய்வதற்கு அது உதவுவதோடு உண்மையும் வெளிப்பட்டிருக்கும். ஆனால், அருணாசலம் சங்கரத் தேவருக்கு உடந்தையாக இருந்து புலன் விசாரணை முழுவதற்கும் தடையாக இருந்தார்.

387. இன்ஸ்பெக்டர் அருணாசலம் தாமதப் படுத்தும் போக்கை மேற்கொண்டுள்ளார். தேவை யில்லாத சாட்சிகளை விசாரித்துள்ளார். இதனால், பயனேதும் இல்லை. வழக்கு பற்றிய விவரக் குறிப்பேட்டை நான் கவனமாக ஆராய்ந்துள்ளேன். இந்தக் கமிஷன் நியமிக்கப்படாமலிருந்தால் இந்த வழக்கைப் பொய்யானது என்றோ கண்டுபிடிக்க முடியாதது என்றோ அருணாசலம் குறிப்பிட்டிருந்திருப்பார் என்று, சாட்சிகளின் 161 வாக்குமூலங்களை ஆராய்ந்த பின்னர் நான் கருத முடிந்தது. சங்கரனையும் அவரது கையாட்களையும் கைது செய்து விசாரித்து ஜாமீன் மனு எதையும் எதிர்ப்பதற்கு இந்த மூன்று முக்கியமான சாட்சிகளான காசி, இராஜசிங், இராஜசெல்வம் ஆகியோரை 11—11—1980 அன்று விசாரித்தது போதுமானது என்பது என்னுடைய கருத்தாகும். இன்ஸ்பெக்டர் அருணாசலம் எப்பொழுதும் தேவர் வகுப்பினருடன் கூடிப்பேசிக் கொண்டிருந்தார் என்றும் அடிக்கடி தேவர் வகுப்பினரோடு சேர்ந்து ஓட்டலிலும் லாட்ஜிலும் தங்கினார் என்றும் வழக்குரைஞர்

களான திரு அசோக் குமார், டேவிட் ஆகியோரும், காசி என்கிற சாட்சியும் கூறியதையே நானும் இங்கு குறிப்பிடுகிறேன். கமிஷனின் விசாரணையின் போது அருணாசலம் தேவர் வகுப்பினருடன் கூடிப் பேசிக்கொண்டிருந்ததை நானும் கண்டேன். திருவாளர்கள் டேவிட், அசோக் குமார் ஆகியோர் கூக்குரலிட்டபோது இன்ஸ்பெக்டர் அருணாசலத்தையும் சப்-இன்ஸ்பெக்டர் திருஷ்ணசாமியையும் என்னுடைய அறைக்கு அழைத்து அவர்களைக் கடுமையாக எச்சரித்துக் கண்டித்து நான் அனுப்பினேன்.

388. இன்ஸ்பெக்டர் அருணாசலம் விசாரணையைத் தொடங்குமுன்னர் தேவர் வகுப்பினரைப் பற்றிய விவரக் குறிப்பேடுகளையும் ரவுடிக் குறிப்பேடுகளையும் பார்க்கக்கூட இல்லை என்றும் தேவர் வகுப்பினரைப் பற்றிய முன் வரலாற்றைப் பதிவு செய்யவில்லை என்றும் அவருடைய சாட்சியம் கூறுகிறது.

389. அருணாசலத்தின் (ஜ. டபிள்யு. 6) சாட்சியத்தையும் நடத்தையையும் பற்றி நான் முழுவதுமாக ஆராய்ந்து பார்த்தபோது, சப்-இன்ஸ்பெக்டர் திருஷ்ணசாமியைப் போலவே இன்ஸ்பெக்டர் அருணாசலமும் தேவர் வகுப்பினருடன் உடந்தையாக இருந்தார் என்பதிலும் இந்த வழக்கை நியாயமாக விசாரணை செய்வதற்கு வேண்டுமென்றே தடையாக இருந்தார் என்பதிலும் எனக்கு எவ்வித ஐயமுமில்லை. தேவர் வகுப்பினர் இன்ஸ்பெக்டர் அருணாசலத்துடன் உந்தையாக இருந்தது மற்றொரு முக்கியமான பகுதியாகும். சந்தர்ப்ப சாட்சியத்தில் இது ஒரு முக்கிய பகுதியாக அமைந்துள்ளது.

390. மணி இறந்த அன்று இரவே அவருடைய சடலம் அவசர அவசரமாகவும், மனிதத் தன்மை யற்ற முறையிலும் எரிக்கப்பட்டதற்கு நாம் கவலைப்போம். மாரடைப்பால் மணி இறந்தார் என்றும், மணியின் உறவினர்களே சடலத்தைக் ''கௌரவமான முறையில் புதைத்தனர்'' என்றும் தேவர் தரப்பினர் வாதாடினர். இராமச்சந்திரத் தேவரின் உறுதிமொழிப் பத்திரத்தில், மணியின் உறவினர்களே ''கௌரவமான முறையில் இறுதிச் சடங்கை நடத்தினர்'' என்று திட்டவட்டமாக வாக்குமூலம் கொடுத்துள்ளார். அவர்களது வழக்கப்படி மணியின் சடலம் எரிக்கப்பட்டது என்று சங்கரத்தேவர் தம்முடைய உறுதிமொழிப் பத்திரத்தில் கூறியுள்ளார். தேவர் வகுப்பினர் சார்பாக விசாரிக்கப்பட்ட முத்தம்மாள் (டி.பி.டபிள்யு. 1), நல்லையா (டி.பி. டபிள்யு. 2) மரானம் (டி. பி. டபிள்யு. 4) முதலிய ஆதிநிராவிடர்களும் மற்றவர்களும் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரங்களும் உள்ளன.

391. இதைப் பொறுத்தவரை தேவர் வகுப்பினர் முற்றிலும் பொய்யர்கள் என்பதை நிருபித்துள்ளனர். தேவர் வகுப்பினர் சார்பாக விசாரிக்கப்பட்ட ஆதிநிராவிட சாட்சிகள் நம்பத்தகுந்த சாட்சிகள் அல்ல. அவர்கள் உண்மைக்கு மதிப்பே கொடுப்பதில்லை. பாடை எதுவும் பயன்படுத்தப்பட வில்லையென்றும், மணியின் சடலம் சிதைந்த ஒரு கதவு மூலம் எடுத்துச் செல்லப்பட்டது என்றும் தேவர் வகுப்பினர் சார்பாக விசாரிக்கப்பட்ட ஆதிநிராவிட சாட்சிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். நச்சுத்தன்மை வாய்ந்த தொழுநோயால் பாதிக்கப்பட்ட ஒருவரின் சடலம் எவ்வாறு எரிக்கப்படுமோ அப்படியே மணியின் சடலமும் எரிக்கப்பட்டது என்பதை ஆதிநிராவிட சாட்சிகளின் சாட்சியம் புலப்படுத்தும்.

392. மணி இறந்த அன்று எந்தவிதமான சடங்கும் நடத்தப்படவில்லை என்றும், இரண்டாவது நாள் சடங்கும் செய்யப்படவில்லை என்றும் இறந்தவர் இந்துவாக இருந்தால் சடலத்தை எரிப்பதற்காக சூரிய அஸ்தமனத்திற்குப் பின் எடுத்துச் சென்றிருக்கப்படமாட்டாது என்றும் டி. பி. டபிள்யு. 1 முத்தம்மாள் 518ஆம் பக்கத்தில் உள்ள தன்னுடைய சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். இந்த குறிப்பிட்ட வழக்கில் என்னைப் பொறுத்தவரை, மணியின் சகோதரி, சகோதரியின் கணவர் ஆகியோருக்கு மணியின் மரணம்பற்றித் தெரிவிக்கப்படவில்லை.

393. மணியின் சடலத்தின்மீது புதிய துணி எதுவும் போர்த்தப்படவில்லை; சடலம் வீட்டிலிருந்து எடுத்துச் செல்லப்படும்போது தாரை/தம்பட்டை அடிக்கப்படவில்லை. சடலம் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்படும்போது பையன்கள் ஆடிப்பாடவில்லை. மணியின் மனைவி வீட்டின் முழைக்கு அழைத்துச் செல்லப்படவில்லை; இந்தக் குறிப்பிட்ட வழக்கில் என்னைப் பொறுத்தவரை, நெல், தேங்காய் வைப்பது போன்ற சடங்குகள் செய்யப்படவில்லை. மணியின் சடலம் குளிப்பாட்டப்படவில்லை. அன்று மணியின் மனைவிக்கு ''தாலி அறுத்தல்'' செய்யப்படவில்லை; இரண்டாம் நாள் சடங்குகளான நவதானியம் போடுதல், பால் ஊற்றுதல், எலுமிச்சம்பழம் பிழிதல், பிரண்டைச் செடி வைத்தல் போன்ற சடங்குகளும், ஏனைய சடங்குகளும் செய்யப்படவில்லை. மொர் வழங்கப்படவில்லை. எனவே, தொடர்புடைய நோட்டுப் புத்தகங்களில் எழுதப்படவில்லை. மணி இறந்த அன்று சடங்குகள் செய்வதற்கு வழக்கமாக வரும் நாவிதரும், சலவைத் தொழிலாளியும் வரவில்லை. சடலத்தை எடுத்துச் செல்வதற்குப் பாடை தயாரிக்கப்படவில்லை என்றும் டி. பி. டபிள்யு. 1 முத்தம்மாள் ஒப்புக்கொள்கிறார். மணியின் சடலத்திற்கு எவரும் நீவைக்கப்படவில்லை. மணி இறந்ததற்காக வழக்கமான சடங்குகளான மேளம் தாளம், தம்பட்டம் ஆகியவை செய்யப்படவில்லை. தங்கள் கதவையே பயன்படுத்திக்கொண்டதாக வும், மூங்கிலான பரண்டையை ஈமச்சடங்குக்குப் பயன்படுத்தப்படவில்லை என்றும் அடுத்தநாள் காலை உழவு வேலைக்கு செல்வதற்கு அவர்கள் அனைவரும் போக விரும்பியதால் சடலத்தை இரவு 9-00 மணிக்கே எரித்து விட்டதாகவும் டி.பி.டபிள்யு. 2 நல்லையா ஒப்புக் கொள்கிறார். சுடுகாட்டில் சடலம் முழுவதுமாக எரியும்வரை 9 அல்லது 10 பேர்கள் அங்கேயே காத்திருந்தனர் என்பதை டி.பி. டபிள்யு 2 ஒப்புக்கொள்கிறார். மணியின் உறவினர்களுக்கு அவரது மரணம் பற்றித் தெரிவிக்கப்படவில்லை என்பதையும் சடலத்தை எரித்த ஆதிநிராவிடர்கள் மணியின் மைத்துவர் மூர்த்தி வரும்வரை காத்திருக்கவில்லை என்பதையும் டி.பி. டபிள்யு 2 ஒப்புக்கொள்கிறார். மணியின் சகலருக்கு மரணம் பற்றித் தெரிவிக்கப்படவில்லை, மணியின் நெருங்கிய உறவினர்களுக்கு இந்த விபரத்தை அவர்கள் தெரிவிக்கவில்லை.

394. இராஜசெல்வம் பணமில்லாதவர் என்கிற காரணத்தினால் வழக்கமான சடங்குகள் செய்யப்படவில்லை என்பதை டி.பி. டபிள்யு. 4 ஒப்புக் கொள்கிறார். மேற்கு சங்கரங்குளம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அப்போது அங்கு இல்லை என்பதை டி.பி. டபிள்யு. 4-ம் மற்றவர்களும்

வெளியாட்களோடு சேர்ந்து கொண்டு சடலத்தை மேற்கொண்ன முறையில் எரிப்பதற்கு முடிவு செய்தனர் என்பதையும் டி.பி. டபிள்யு. 4 ஒப்புக்கொள்ளுகிறார். பக்கத்துக் கிராமத்தில் உள்ள வர்களின் கட்டாயத்தின் பேரிலேயே சடலத்தை அன்று இரவே தாங்கள் எரித்ததாக டி.பி. டபிள்யு 4 மசானம் 566ஆம் பக்கத்தில் உள்ள தனது சாட்சியத்தில் தெரிவித்திருக்கிறார். மணியின் சடலத்திற்கு எவரும் '' கொள்ளி வைக்கவில்லை'' என்பதையும் அவர் ஒப்புக்கொள்கிறார். சாம்பலுடன் கரியும், எலும்புகளும் மண்வெட்டியால் தோண்டி எடுக்கப்பட்டுப் பக்கத்தில் உள்ள கிணற்றில் போடப்பட்டன என்பதையும் அவர் ஒப்புக்கொள்கிறார். சடலத்தை எரித்ததற்கான எந்தவிதமான அடையாளமும் அங்கு இல்லை. இரும்புத் தூண்டுகள்கூட கிணற்றில் போடப் பட்டன.

395. சடலம் புதைக்கப்படும்போதோ அல்லது எரிக்கப்படும்போதோ செய்யப்படவேண்டிய பழக்க வழக்கங்கள், சடங்குகள் ஆகியவைபற்றி டி.பி. டபிள்யு. 9 நாவிதர் மாடசாமி விரிவான சாட்சியமளித்துள்ளார். இதே மாதிரி டி.பி.டபிள்யு. முத்தையாவும் சாட்சியமளித்துள்ளார். சடலம் எரிக்கப்பட்ட சடலம் முழுவதுமாக எரியும்வரை விடியற்காலை 2-00 மணிவரை அங்கேயே இருந்த தாக அவர் ஒப்புக்கொண்டுள்ளார். மணியின் மரணம் பற்றிய செய்தியை இராஜசெல்வத்தின் சகோதரிகளுக்குத் தெரிவிக்கவில்லை என்றும் மணியின் சகலர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட வில்லை என்றும் மணியின் மரணம் பற்றி இராஜ செல்வத்தின் நெருங்கிய உறவினர்களுக்குச் செய்தி தெரிவிக்கப்படவில்லையென்றும் ''கொள்ளி வைத்தல்'' சடங்கை யாரும் செய்யவில்லையென்றும் அவர் ஒப்புக்கொள்கிறார். மிகவும் அவசரம் அவசரமாக சோகமான, நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சியாக சடலம் எரிக்கப்பட்ட விவரம் ஆதி திராவிடர்கள் அளித்தசாட்சியம்மூலம்புலனாகிறது. விடியற்காலை2-00 மணிக்குள்சடலம் எரிக்கப்பட்டு விடவேண்டும் என்றும், சாம்பல், எலும்பு, மண் ஆகியவையும் அந்த இடத்தில் சடலம் எரிக்கப் பட்டதற்கான அடையாளம் எதுவும் இல்லாமல் கிணற்றுக்குள் எறியப்பட்டுவிட வேண்டுமென்றும் ஆதிதிராவிடர்களுக்குக் கட்டளைகளும் எச்சரிக்கை களும் அளிக்கப்பட்டன என்பது ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. இவை யாவும் அவசரமாக, இரகசியமான முறையில் நடைபெற்றன. இராஜ செல்வத்திற்குச் சொத்து எதுவும் இல்லை, எனவே சடங்கு எதுவும் செய்யப்படவில்லை என்ற சாக்குப் போக்கு பொய்யானது. சங்கனாங்குளத்தில் கிணற்றுக்குப் பக்கத்தில் 2 ஏக்கர் நிலம் தனக்கு இருப்பதாகவும், அக் கிணற்று நீர், பாசனத்திற்குப் பயன்படுவதாகவும் இராஜசெல்வம் 23 ஆம் பக்கத்தில் சாட்சியமளித்துள்ளார். இராஜ செல்வத்திற்குச் சொத்து இருப்பதாகவும் மேற்கு சங்கனாங்குளம் கிராமத்தில் சொத்து உள்ள ஒரே நபர் அவர்தான் என்றும், டி.பி. டபிள்யு 4 மசானம் (சாட்சி) 572 ஆம் பக்கத்தில் உள்ள தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். சங்கரத் தேவர் (இவரிடம் மணி பண்ணை ஊழிய ராக வேலை பார்த்து வந்தார்). 100 ரூபாய் கண்டிப்பாகக் கொடுத்திருக்கவேண்டும். சடலத்தை எரிப்பதற்கு இத்தொகையே தேவைப்பட்டது. கொடிய மனிதத்தன்மையற்ற முறையில் சடலம் எரிக்கப்பட்டதாகவும் '' கௌரவமான முறையில் சடலம் புதைக்கப்பட்டது '' என்று தேவர்கள் சார்பில் வாக்குமூலம் கொடுக்கப்பட்டதுமுற்றிலும் பொய்யே என்பதைத் தேவர் வகுப்பினர் சார்பில் அளிக்கப்பட்ட சாட்சியம் தெளிவாகக் காட்டு கிறது. வழக்கின் ஏனைய தகவல்களை ஒதுக்கிவிட்டு மனிதத்தன்மையற்ற முறையில் சடலம் எரிக்கப் பட்டதை மட்டும் கருதிப் பார்த்தோமானால் இச் சம்பவம் கொலை செய்யப்பட்ட ஒரு நிகழ்ச்சியாக இருக்கும். ஆனால் இவ் வரும் பத்திகளில் விவாதிக் கப்படும் காரணங்களைக் கொண்டு பார்த்தால் கொலை நடந்திருப்பதாக நான் அனுமானிக்க வில்லை.

396. நீலகண்டத் தேவரும், அவரின் சகோ தரர்களும் இந்த விசாரணையில் பின்னணியில் இருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டையும் தேவர் வகுப்பினருக்கெதிராகப் பொய்யான குற்றச்சாட்டுகளைக் கமத்த ஆதி நிராவிடர்களை இவர்கள் வேண்டுமென்றே ஏற்பாடு செய்தனர் என்ற குற்றச்சாட்டையும் இந்நிலையில் விவாதிப்பது பொருத்தமானதாக இருக்கும்.

397. இந்த வழக்கில் இலட்சுமணனை விசாரித்திருக்க வேண்டும் என்றும் சா.ஆ.பி. 10 என்ற பொலியான மனுவைத் தாக்கல் செய்வதற்கு அவரே பொறுப்பு என்றும் இலட்சுமணன் விசாரிக்கப்படாததால் அவருக்கு எதிரான கருத்து கொள்ளப்பட வேண்டும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. சாட்சி யத்தைக் கவனமாகப் பரிலவை செய்த போதும் திரு. வெங்கடாச்சாரி கூறிய புகார் களில் எவ்வித சாரமும் இல்லை என்பதை நான் அறிகிறேன். இந்தக் குற்றச்சாட்டுகள், பொருளற்றவை என்பதுடன் நினைத்துக்கூடப் பார்க்க முடியாதவாறு இருக்கின்றன. என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

398. மாடசாமித் தேவர், சங்கரத் தேவர், இராமச்சந்திரத் தேவர் ஆகிய மூன்று சகோ தரர்கள்சார்பில்செய்த உறுதிமொழிப் பத்திரத்தில் இலட்சுமணன், மாடசாமித் தேவர், சங்கரத் தேவர் ஆகியோரின் பெயர்களைத் தவறாகப் பயன்படுத்தினார் என்றும் தகுதிக்கு மீறிய அனுகூலங்களைப் பெற்றார் என்றும் மாட சாமித் தேவரின் பெயரைப் பயன்படுத்திச் சில விரும்பத்தகாத நிலைமைகளிலிருந்து தப்பித்துக் கொண்டார் என்றும் மாடசாமித் தேவரும், சங்கரத் தேவரும் வன்மையாக மறுத்தனர் என்றும், இலட்சுமணன் இவ்வாறு செய்வதற்கு அவர்கள் வன்மையாகக் கண்டித்தனர் என்றும் இதனால் நீலகண்டத் தேவரின் குடும்பத் திற்கும் தேவர் வகுப்பினருக்கும் விரோதம் மூண்டது என்றும் இலட்சுமணனுக்கு எதிராக குற்றச் சாட்டுகளைக் கூறினர். தேவர் வகுப்பினரின் குற்றச்சாட்டுப் பொருளற்றதும் விநோதமானதுமாகும். உறுதிமொழிப்பத்திரத்தில் இத்தகைய குற்றச்சாட்டுக் கூறப்பட்டபோதிலும் மூன்று சகோதரர்களும் மீண்டும் மீண்டும் ஒருவர் சொன்னதையே திரும்பவும் மற்றவர் கூறியபோதிலும் எந்த ஒரு சம்பவமும் நடை பெற்றதாகத் தெரிவிக்கப்படவில்லை. சாட்சி யத்தின் போதும் விவாதங்களின் போதும் இது குறித்து திரு. வெங்கடாச்சாரியிடம் நான் வினாக்களைக் கேட்டபோது, இலட்சுமண னுக்கு எதிராக எந்த ஒரு சம்பவத்தையும் தன்னுடைய கட்சிக்காரர்கள் சாட்சியத்தில் குறிப் பிடவில்லை என்றும், மாடசாமித்தேவரோ, சங்கரத் தேவர் ஆகியோரின் பெயர்களை அவர் தவறாகப் பயன்படுத்திய சம்பவத்தை அவர்கள் கூற வில்லை என்றும். அவர்களுடைய பெயரைப் பயன்படுத்தி அனுகூலம் எதனையும் அடைந்தார் என்று இலட்சுமணனுக்கு எதிராக சம்பவம்

எதையும் அவர்கள் கூறவில்லை என்றும் திரு. வெங்கடாச்சாரி ஒப்புக் கொண்டார். தேவர் வகுப்பினர் பொறுப்புணர்ச்சி ஏதுமின்றி நீல கண்டத் தேவரின் குடும்பத்திற்கு எதிராக குறிப்பாக இலட்சுமணனுக்கு எதிராக விளைவைப் பற்றி கவலைப்படாத, பொய்யான, குற்றச் சாட்டுக்களைக் கூறினர் என்பதையே இது காட்டுகிறது.

393. நீலகண்டத் தேவர், அவரின் மற்ற சகோதரர்கள் ஆகியோரைத் தவிர்த்து சான்றாவணம் பி. 10 என்ற புனைப்பெயரில் எழுதப் பட்ட மனுவிற்கு இலட்சுமணத் தேவரையே முழுமுதும் பொறுப்பாக்க சாட்சியத்தின்போது தேவர் வகுப்பினர் முயற்சி செய்தனர். சா.ஆ. பி. 10 என்ற மனுவைப் பொறுத்தவரை இலட்சுமணனுக்கு எதிராகத் திட்டவட்டமான குற்றச்சாட்டு எதுவும் தேவர் வகுப்பினரின் உறுதிமொழிப் பத்திரத்தில் இல்லை என்று இந்நிலையில் குறிப்பிடுவது பொருத்தமுடையதாக இருக்கும். 'நீலகண்ட தேவர் அவரின் சகோதரர்கள்'' அனைவரும் புனைப்பெயரில் எழுதப்பட்ட சான்றாவணம் பி. 10 மனுவிற்குப் பொறுப்பாளர்கள் என்பதே தேவர் வகுப்பினர் அளித்த மூன்று உறுதிமொழிப் பத்திரங்களில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டாகும்.

400. சங்கரத்தேவர் தனது உறுதிமொழிப் பத்திரத்தில் பின்வருமாறு கூறுகிறார்:—

'' திசையன்விளை காவல் துறை சப்-இன்ஸ் பெக்டர் 21–6–1980 அன்று என்னை விசாரித்த போது மேற்சொன்ன நபர்கள் செய்த விஷமத் தனத்தின் தன்மை முதன் முதலில் எனக்குப் புலப்பட்டது.''

சங்கரத் தேவர் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரத்தை நான் கவனமாக ஆராய்ந்தேன். சா. ஆ. பி. 10 என்ற புனைபெயரில் எழுதப் பட்ட மனுவில் இலட்சுமணனுக்கு எதிராகத் திட்டவட்டமான குற்றச்சாட்டு எதுவும் எனக்குத் தெரியவில்லை.

401. மாடசாமித் தேவரின் உறுதிமொழிப் பத்திரத்தில் அவர் கூறுவதாவது :—

'' என் சகோதரர் திரு. சங்கரனுக்கு எதிராகப் புனைபெயரில் எழுதப்பட்ட மனு ஒன்றை அவர்கள் அனுப்பினர் என்று (நீல கண்டத் தேவர், அவரது சகோதரர்கள்) 1980 ஜூன் மாதத்தில் நான் அறிந்தேன். இதைக் காவல் துறையினர் விசாரித்தனர்.''

இங்கும்கூட அதே கருத்தை நான் கூறி யுள்ளேன். சா. ஆ. பி. 10 என்ற புனைபெயரில் எழுதப்பட்ட மனுவை ,பொறுத்தவரையில் இலட்சுமணனைப் பற்றிய தனிப்பட்ட புகார் எதையும் மாடசாமித் தேவர் கூறவில்லை என்பதை மாடசாமித் தேவர் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரத்தை கவனமாக பரிசீலனை செய்தால் அறிந்து கொள்ளலாம்.

402. இராமச்சந்திரத் தேவரின் உறுதி மொழிப் பத்திரத்தில் பின்வருமாறு '' பன்மை யில் '' தெரிவிக்கப்பட்டுள்ளது :— அதாவது

'' அவர்களுடைய எதிரிகள் சங்கரத் தேவருக்கு எதிராகப் புனைபெயரில் எழுதப் பட்ட மனுவை அனுப்பினர் ; அதை காவல் துறையினர் முறையாக விசாரித்து முடிவு செய்தனர் ''.

இலட்சுமணனுக்கு எதிராகத் தனிப்பட்ட வகையில் எந்தவித குற்றச்சாட்டையும் இராமச் சந்திரன் தாக்கல் செய்யவில்லை.

403. மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாட சாமித் தேவர், சங்கரத் தேவர், இராமச்சந்திரத் தேவர் ஆகியோரின் உறுதிமொழிப் பத்திரங் களில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளினால், இலட்சுமணனை விசாரிக்காதது, இலட்சுமணனை விசாரிக்க வேண்டிய அவசியம் ஆகியவற்றைப் பற்றிய புகார் ஆராயப்பட வேண்டியுள்ளது ; இலட்சுமணத் தேவர் உறுதிமொழிப் பத்திரத்தில் விட்டுவிட்ட படலில்லை. ஆனால் 3 சகோதரர் களுக்கு எதிராகவே குற்றச்சாட்டு கூறப்பட்டது.

404. தேவர் வகுப்பினருக்கெதிராக ஆதி திராவிடர்கள் சாட்டிய குற்றச்சாட்டுகளுக்கு நீலகண்டத் தேவரும், அவருடைய சகோதரர் களும் எந்த விதத்திலும் பொறுப்புடையவர் களா என்பதைப் பற்றி நான் முதலில் விவாதிப் பேன். சங்கனாங்குளம் கிராமத்தில் உயிய மதிப்புடனும் மரியாதையுடனும் தாங்கள் வாழ் வதாகத் தேவர் வகுப்பினர் கூறுவது பொய் யானதுடன் உண்மைக்குப் புறம்பானதுமாகும். மாடசாமித் தேவரும், சங்கரத்தேவரும் 20 வருடங்களுக்கும் மேலாக ரவுடி குறிப் பேட்டில் பெயர் உள்ளவர்கள். ஏற்கெனவே குறிப்பிட்டபடி அவர்கள் கொடுமைகள் பல செய்தவர்கள் ; கிராம மக்களை அச்சுறுத்தி உள்ளனர் என்பதை மாடசாமித் தேவர், சங்கரத்தேவர் ஆகியோர்பற்றிய ரவுடி குறிப்பேடுகள் தெரிவிக்கின்றன. இந்த இரண்டு சகோதரர்களின் கொடுஞ் செயல்பற்றி கிராம மக்கள் பயந்து போயிருந்தனர். தேவர் வகுப்பினர் உயர்ந்த மரியாதையோடும் மதிப் போடும் இருந்தனர் என்று சொல்வது பொருத்த மற்றதும் வேடிக்கையானதும் ஆகும். மாட சாமித் தேவர், சங்கரத்தேவர் ஆகியோர் அச்சுறுத்தி கொடுஞ்செயல் புரிந்து வந்தனர் என்பது தெளிவாகும். சங்கரத் தேவர் 1976-ல் 'மிசாவின்' கீழ் காவலில் வைக்கப் பட்டார். எந்தவித அரசியல் காரணத்திற் காகவும் இல்லை என்பது குறிக்கத்தக்கது.)

405. நீலகண்டத் தேவர் மரியாதைக்குரியவர் என்பதையும் அவர் சங்கனாங்குளம் கிராம மக்களால் மதிக்கப்படுவதுடன் மரியாதைக்கு உரியவராகவும் உள்ளார் என்பதையும் நான் நடவடிக்கைகள் முழுவதையும் ஆய்வு செய்ததிலிருந்து அறியலாம். சங்கனாங்குளம் கிராமத்திற்குப் பல முறை நான் சென்று வந்ததிலிருந்து இந்தக் கருத்தை அறிந்து கொண்டேன்.

406. தேவர் வகுப்பினர் சார்பாகக் கமிஷன் முன் தாக்கல் செய்யப்பட்ட உறுதிமொழிப் பத்திரங்களில் நீலகண்டத் தேவருக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் எதிராகக் குற்றச் சாட்டுகள் செய்யப்பட்ட போதிலும் எதிர் உறுதிமொழிப் பத்திரங்களை அவர்கள் தாக்கல் செய்யவில்லை. சாட்சிகளின் பட்டியலில், கமிஷன் முன் விசாரிக்கப்படவேண்டிய சாட்சிகளின்

பெயர்களின் பட்டியலில், நீலகண்டத்தேவர், அவரின் சகோதரர்கள், அவரின் குடும்பத்தினர் ஆகியோரது பெயரை திரு. அசோக் குமார் குறிப்பிடவில்லை. கமிஷன் முன் சாட்சியம் அளிக்க அவர்கள் முதலில் முன்வரவில்லை. கமிஷன் விசாரணை நடத்திய, விசாரணை அறைக்கு அவர்கள் யாரும் நீலகண்டத்தேவர் தூண்டியதனால் ஆதிதிராவிடர்கள் தொடர்ந்து சாட்சியம் அளித்துள்ளனர் என்றும் அவர் நீல கண்டத்தேவர் இந்த விசாரணையில் பின்னணியில் இருக்கிறார் என்றும் ஆதிதிராவிடர்கள் சார்பில் விசாரிக்கப்பட்ட்சாட்சிகளைப்பற்றி விசாரணையில் ஆரம்ப நிலையில் திரு. சாரி குற்றம் சாட்டினார் எனவே நீலகண்டத்தேவரும் அவரின் சகோதரர்களும் விசாரிக்கப்பட வேண்டுமென்று நான் கருதினேன். கமிஷன் முன் நீல கண்டத்தேவரையும் அவருடைய சகோதரர்களையும் அவர் விசாரிக்க வேண்டும் என்று நான் திரு. அசோக் குமாருக்குத் தெரிவித்தேன். கமிஷன் தன் முன் சாட்சியமளிக்க நீலகண்டத்தேவரும் அவருடைய சகோதரர்களும் தயங்கினர் என்பதால் அவர்களை விசாரிக்க வேண்டும் என்ற கருத்துருவை திரு. அசோக்குமார் ஏற்றுக் கொள்ளவில்லை. கை செய்தல், சொத்தை ஜப்தி செய்தல் போன்ற முறைகள் மூலம் பலவந்த நடவடிக்கைகளை எடுப்பேன் என்று நான் வலியுறுத்தி அச்சுறுத்திய பின்னரே தான் நீலகண்டத்தேவர் அவருடைய குடும்பத்தினர் ஆகியோர் கமிஷன் முன் சாட்சியமளிக்க ஒப்புக் கொண்டனர். அதன் பின்னர் செல்லத்துரை, நீலகண்டத்தேவர் ஆகியோர் சில நாட்கள் கமிஷனுக்கு வந்தனர். கமிஷன் விசாரணை செய்த எல்லா நாட்களிலும் அவர்கள் தொடர்ந்து வரவில்லை. நீலகண்டத்தேவரையும் அவருடைய சகோதரர்களையும் தொடர்ந்து படுத்தி சிக்க வைக்க கூடிய கருத்துக்களை, ஆதிதிராவிடர்களின் சாட்சிகளைத் தேவர் வகுப்பினர் குறுக்கு விசாரணை செய்தபோது, தெரிவித்தனர். அப்போதுதான் செல்லத்துரை விசாரணையின் எல்லா நாட்களிலும் வந்தார். நீலகண்டத்தேவர் அடிக்கடி விசாரணைக்கு வந்தார். ஆனால் நீலகண்டத்தேவர் எல்லா நாட்களும் வரவில்லை. சில நாட்கள் தான் வந்தார் என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். நீலகண்டத்தேவரையும் அவருடைய சகோதரர்களையும் தேவர் வகுப்பினர் தூக்கிப் பேசாமலிருந்திருப்பார்களேயானால் நீலகண்டத்தேவரையும் அவருடைய சகோதரர்களையும் அவர்கள் இதில் சிக்க வைக்காமல் இருந்திருந்தாலும், தொடக்கத்திலிருந்து நீலகண்டத்தேவர் முதலியோர் இதில் அலட்சியமாய் இருந்திருப்பார்கள். மேலும் விசாரணையில் எந்தவிதப் பங்கும் அவர்கள் ஆற்றியிருக்க மாட்டார்கள்.

407. 1980 ஜூன் முதல் இரண்டு குடும்பத்தினருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு, அதன் காரணமாகத் தேவர் வகுப்பினர் அவர்கள் மீதும் கோபம் கொண்டு அவர்களுடைய வேளாண்மை நடவடிக்கைகளை எவ்வாறு தடுத்து நிறுத்தினர், விசையிறப்புக்கள் செயல்படுவதைத் தடுத்தனர் என்பது பற்றி நீலகண்டத்தேவர் அவருடைய சகோதரர்கள், அவர்களின் மாமன்கள் ஆகியோர் சாட்சியமளித்தனர். நீலகண்டத்தேவர் அ.த.சா. 19 ஆகினர். நீலகண்டத்தேவர் அ.த.சா. நியமித்து விசாரிக்கப்பட்டுள்ளார். கமிஷனை நியமித்து வெளியிட்டப்பட்ட அறிவிப்பை (i) (ii) ஆய்வு வரம்புகள் குறித்து (இது தேவர் வகுப்பினர் சம்பந்தப் பட்டது) அவர் சாட்சியமளிக்கவில்லை.

408. மேலே கூறப்பட்ட (i) (ii) ஆய்வு வரம்புகள் தொடர்பாக ஆதி திராவிடர்களுக்கு ஆதரவாக நீலகண்டத்தேவரும் செல்லத்துரைத் தேவரும் சாட்சியமளிக்கவில்லை. நீலகண்டத் தேவர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அது பல பக்கங்களைக் கொண்டது. பழி வாங்கும் நோக்கத்துடன் பயணற்ற, தொடர் பில்லாத கேள்விகள் அவரிடம் கேட்கப்பட்டன. நீலகண்டத்தேவர் கேள்விகளுக்கெல்லாம் பதில் அளித்தார். அவர் உண்மையான பதில்களை கொடுத்தார். பொய்ச் சாட்சியம் சொல்லி யுள்ளதாக அவருடைய சாட்சியத்தில் எந்தப் பகுதியும் இல்லை. இதை நான் இங்கு குறிப்பிட வேண்டும். நீலகண்டத்தேவரின் சாட்சியத்தில் எந்தப் பகுதியும் பொய்யானது அல்லது நீலகண்டத்தேவர் ஆதி திராவிடர்களை ஏற்பாடு செய்தார் என்று சாட்சியமளிப்பதாக திரு. சாரி அவருடைய வாதத்தின்போது என்னிடம் கூறவில்லை. அவர் நேர்மையாகப். பதிலளித்த விதமும், வகையும், எண்ணைக் கவர்ந்தது. பார பட்சமான போக்கை அவர் கடைப்பிடிக்க வில்லை. தேவர் வகுப்பினருக்கு எதிரான குற்றச் சாட்டுகள் குறித்து அவர் ஆதி திராவிடர்களை ஆதரிக்கிறார் என்று அவருடைய சாட்சியத்தில் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை. மணியன்மரணம் குறித்தத் தனக்கு எதுவும் தெரியாது என்றும் சுற்றுப்புற சம்பவம் குறித்தத் தனக்கு எதுவும் தெரியாது என்றும் நீலகண்டத்தேவர் கூறினார். 1980 ஜூன் வரை (இதை மாடசாமித்தேவரே ஒப்புக் கொண்டார்) இரண்டு குடும்பத்தினருக்கும் இடையே கருத்து வேறுபாடு எதுவும் இல்லை என்றும் அவர்கள் உறவு முறை சுமூகமாக இருந்தது என்றும் அவர் மீண்டும் எடுத்துக் கூறினார். நீலகண்டத் தேவரும் அவருடைய சகோதரர்களும் இந்த விசாரணையின் பின்னணியில் உள்ளனர் என்பதையும் அவர்களுக்கு எதிராகத் தேவர் வகுப்பினர் சுமத்திய குற்றச் சாட்டுகளுக்குப் பொறுப்பாவார்கள் என்பதையும் கமிஷனின் கருத்தில் உள்ள எண்ணத்தை அகற்ற தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே நீலகண்டத்தேவரும் அவருடைய சகோதரர்களும் அவருடைய குடும்பத்தினர் ஆகியோர் இந்த விசாரணையில் பங்கு கொண்டனர் என்பது வெளிப்படை. தேவர் வகுப்பினரின் மறுப்பிற்கிடமான எரிச்சலூட்டுகிற நடத்தைத்தான் நீலகண்டத்தேவர் அவருடைய சகோதரர்கள் கமிஷனின் விசாரணையில் அக்கரை எடுத்து கொள்ள காரணமாக அமைந்தது. அக்கரை எடுத்து கொள்ள காரணமாக அமைந்தது. இல்லாவிட்டால் இந்த விசாரணையில் அவர்கள் எவ்வித ஆர்வமும் காட்டியிருக்க மாட்டார்கள்.

409. தேவர் வகுப்பினருக்கு எதிராக ஆதி திராவிடர்களே ஏற்பாடு செய்து நடத்தும் இந்த விசாரணையின் பின்னணியில் நீலகண்டத்தேவரும் அவருடைய சகோதரர்களும் இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது; ஆதாரமற்றது.

410. நீலகண்டத்தேவரும் அவரின் சகோதரர்களும் உண்மையாகச் சாட்சியமளித்தனர் என்பதிலும் மாடசாமித் தேவர் அவருடைய சகோதரர்கள் ஆகியோருக்கு எதிராக விரோத அல்லது பகைமை அல்லது குரோதம் ஆகியவற்றால் அவர்கள் தூண்டிவிட்டப்படவில்லை என்பதை நான் நன்கறிந்தேன். ஆதி திராவிடர்கள் பற்றிய புகார்கள், குற்றச் சாட்டுகள் குறித்து அவர்கள் ஏதுவும் பேசவில்லை. காவல் துறை நடவடிக்கைகள் பற்றியோ அல்லது புனை பெயரில் எழுதப்பட்ட மனு சா.ஆ.பி. 10

பற்றியோ அவர்கள் குறிப்பிடவில்லை. தேவர் வகுப்பினருக்கு எதிராக 17 நடவடிக்கைகள் முடிவடையாமல் உள்ளபோது நீலகண்டத்தேவர் அவருடைய சகோதரர்கள் ஆகியோருக்கு எதிராகக் குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு வழக்கு பற்றிக் கூட எனது கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

411. இலட்சுமணனை விசாரிக்காமல் விட்டு விட்டது முறையான தவறு என்றும் அதனால் பாதகமான கருத்து ஏற்படும் என்றும் திரு. சாரி வன்மையாக தொடர்ந்து வலியுறுத்தியது பற்றி அடுத்ததாகக் கவனிப்போம். அந்த வாதத்தில் எவ்வித சாரமும் இல்லை. அது பயனற்றதுமாகும். நீலகண்டத் தேவர் அவருடைய சகோதரர்கள் ஆகியோருக்கு எதிராக தேவர் வகுப்பினர் கூறிய குற்றச்சாட்டு பொதுவான குற்றச்சாட்டாகும் என்றும் இலட்சுமணனையே குறிப்பாகச் சொல்லித் திட்ட வட்டமாக குற்றச்சாட்டு எதுவும் இல்லை என்றும் முந்தைய பாராக்களில் குறிப்பிட்டுள்ளேன். புனை பெயரில் எழுதப்பட்ட சா. ஆ. பி. 10 மனுவிற்கு இலட்சுமணத் தேவர் மட்டுமே பொறுப்பாளர் என்ற குற்றச்சாட்டு எதுவும் கூட கூறப்படவில்லை. குறிப்பிட்ட ஒருவருக்கு எதிராக குறிப்பிட்ட குற்றச் சாட்டு எதுவும் இல்லை எனில் அவரை விசாரிக்க வேண்டிய அவசியமில்லை என்றும், பாதகமான கருத்து சொல்லப்பட வேண்டிய தில்லை என்றும் விரி உள்ளது. வாதிடப்படாத ஒரு பிரச்சினை குறித்து சாட்சியம் கூறப்பட வேண்டியதில்லை; பரிசீலிக்கப்பட வேண்டியதில்லை. இலட்சுமணத் தேவருக்கு எதிராக குற்றச்சாட்டு கையாளப்படும்போது அக்குற்றச் சாட்டு வேறுபட்ட ஒன்றாக உள்ளது. அது மாடசாமித் தேவர், சங்கரத்தேவர் ஆகியோரது பெயர்களைத் தவறாகப் பயன்படுத்தி இலட்சுமணன் சில அனுசூலங்களைப் பெற்றார் என்பதாகும்.

412. இலட்சுமணன், அருடைய சகோதரர்கள், அவருடைய தந்தை, அவருடைய மாமாக்கள், அருடைய அத்தை ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். சாட்சிகளை அடுக்கிக் கொண்டு போவதில் பயனேதும் இல்லை. சா. ஆ. பி. 10 தொடர்பாக இலட்சுமனனுக்கு எதிராக குறிப்பிட்ட குற்றச்சாட்டு எதுவும் இல்லாதபோது அவரை விசாரிக்க வேண்டிய அவசியமில்லை. தப்பினரின் ஒழுங்கு நடவடிமுறை விதிகளின்படி இலட்சுமணன் கமிஷன் முன் சாட்சியமளித்தால் அவர் தகுதியற்ற வராகி விடுவார் என்பதை வாதத்தின்போது நான் அறிந்தேன். அவர் தி. மு. கழகத்தின் மாவட்டச் செயலாளராக இருக்கிறார். அவர் கமிஷன் முன் சாட்சியமளித்தால் ஒழுங்குமுறை விதிகளை மீறியதற்காக அவரைத் தகுதியற்ற வராக ஆக்கி விடலாம். தி.மு.கழகத்தின் உறுப்பினராக உள்ள சந்திரசேகரனைப் பொறுத்த வரையிலும் இதே நிலைமைதான். சில குற்றச் சாட்டுகளும் கடுமையான புகார்களும் சந்திர சேகரனைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளன. ஆனால் அந்த காரணத்திற்காக அவர் விசாரிக்கப்படவில்லை. கட்சி அரசியலில் இலட்சுமணனுக்குத் தொல்லை கொடுக்கும் உள்நோக்கத்துடன் இலட்சுமணனை விசாரிக்க வில்லை என்ற இந்த குற்றச்சாட்டு கூறப் பட்டுள்ளது என்று எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. எந்தவொரு கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும் இலட்சுமணனை விசாரிக்காததில் நியாயமிருக்கிறது என்று என்னுடைய மனத்திற்குப் புலப்படுகிறது. பாதகமான கருத்து சொல்லப்படும் சா. ஆ. பி. 10 என்று புனைபெயரில் எழுதப்பட்ட மனுவை எழுதியது இவர்தான் என்ற நோக்கில் இலட்சுமனனை விசாரிக்காதது என்ற கருத்து முற்றிலும் பொருளற்றது. தேவர் வகுப்பினரைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமியுடன் எவ்வாறு உடந்தையாக இருந்து செயற்பட்டனர். அவ்வாறு உடந்தையாக இருந்ததால் சா. ஆ. பி. 10 மனு எவ்வாறு மோசடியான வருந்தத் தக்க முறையில் முடிவு செய்யப்பட்டது என்பதை முந்தைய பாராக்களில் நான் விரிவாக விவாதித்துள்ளேன். அதாவது புனை பெயரில் எழுதப்பட்ட சா.ஆ.பி.10 பற்றி சப்-இன்ஸ்பெக்டருடன் தேவர் வகுப்பினர் உடந்தையாக இருந்ததால் அவர் விசாரணை எதுவும் செய்யவில்லை; சங்கனாங்குளம் ரோமத்திற்குச் செல்லவில்லை; வெற்றுத் தாள்களில் சாட்சிகளின் கையொப்பங்களைப் பெற்றார், அதில் விவரங்களைப் பின்னர் பூர்த்தி செய்தார் என்று முந்தைய பாராக்களில் விவரிக்கப்பட்டுள்ளபோதும் அது பயனற்ற தாகும். எனவே புனைபெயரில் எழுதப்பட்ட அந்த மனுவைப்பற்றிப் பாதகமான ஒரு கருத்தைச் சொல்வது பொருத்தமற்றதாகும். சா.ஆ. பி. 10 தொடர்பாக இலட்சுமனனை விசாரிக்காதது கடும் விளைவுகளைத் தோற்று விக்குமென்று தேவர் வகுப்பினர் வாதிட்டது பொய்யானது மட்டுமின்றி அதனால் பயனேதும் இல்லை. மேலே விவாதிக்கப்பட்ட முறையில் சா.ஆ.பி. 10 முடிவுற்றபோது இலட்சுமனத் தேவரை விசாரிப்பதால் பயனேதும் ஏற்படப் போவதில்லை. இலட்சுமனத் தேவரை விசாரிக்கவில்லை என்று குற்றச்சாட்டு பழிப் வாங்கும் நோக்கத்தோடும் பொய்யாகவும் கூற பட்டதாகும். தி.மு. கழகத்தின் செயலராக உள்ள இலட்சுமனைச் சிக்கலான நிலைமையில் சிக்க வைப்பதற்கு அரசியல் நோக்கத்தோடு இது தூண்டி விடப்பட்டதாகும். இலட்சுமனை விசாரிக்கவில்லை என்று தேவர் வகுப்பினர் கூறும் புகார் கேலிக்குரியது.

413. இரண்டு கும்பல்களுக்கிடையே நெடு நாளாக விரோதம் இருந்து வந்துள்ளது என்று கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சிய ளர், காவல் துறை சூப்பிரண்டு ஆகியோர் அளித்த வாக்குமூலம் முற்றிலும் தவறானது; அனை வரும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏற்கெனவே கண்டறிந்தபடி, இரண்டு கும்பல்களுக்கிடையே சொத்து தகராறு அல்லது வழக்கு எதுவும் இல்லை என்று இராமச்சந்திரத் தேவர் ஒப்புக் கொண்டுள்ளார். வீரபுநாராயணபத்திலுள்ள கடலை மாடசாமி திருக்கோயிலுக்கு அறங் காவலர்களைத் தேர்ந்தெடுக்கும் சமயத்தில் தான் 1980 ஜூலில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்று மாடசாமித் தேவர் ஒப்புக் கொண்டுள்ளார். 1980 ஜூன் வரை இரண்டு கும்பல்களுக்கிடையே உறவு முறை சுமுகமாக இருந்தது என்பதைப் பதிவு செய்யப்பட்டுள்ள பல ஆவணச் சாட்சியங்களிலிருந்து அறியலாம். வடக்கு விஜயநாராயணம், சேரன்மாதேவி ஆகிய இடங்களில் நடைபெறும் கூட்டம் ஒன்றிற்கு மாடசாமித் தேவரும். சங்கரத் தேவரும் வராமல் இருந்து விட்டனர் என்றும் இராமச்சந்திரன் அருடைய சகோதரர்களுடன் கூட்டுச் சேர்ந்து அறிவிப்பில் பொய்யான கையொப்பம் இட்டார் என்றும் கோட்டாட்சியர்

தெரிவித்தார். தேவர் வகுப்பினரைச் சந்தித்து விசாரிக்க கோட்டாட்சியர் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. இதே போல் மாவட்ட ஆட்சியாளரும் எவ்வித நடவடிக்கையும் எடுக்க வில்லை. இந்த மூன்று சகோதரர்களை இவரும் விசாரிக்கவில்லை. கோட்டாட்சியரைத் தவிர்த்தது போலவே மாவட்ட ஆட்சி யாளரையும் புறக்கணித்தனர். காவல் துறை சூப்பிரண்டு நிலையிலும் இவ்வாறே நடை பெற்றது. தேவர் வகுப்பினர் விசாரணைக்கு வரவில்லை ; காவல் துறை சூப்பிரண்டு அவர்களை விசாரிக்கவும் இல்லை.

414. தேவர் வகுப்பினரை விசாரிக்காமலும் அவர்களுடைய வாக்குமூலங்களைத் தெரிந்து கொள்ளாமலும் மேலே குறிப்பிடப்பட்ட அதிகாரிகள், இரண்டு குடும்பங்களுக்குமிடையே நெடுநாளாக விரோதம் இருந்து வந்துள்ளது என்று எவ்வாறு வாக்குமூலங்களைக் கொடுத் தனர் என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. இந்த வாக்குமூலங்கள் அவியமற்றவை : சாட்சி யத்திற்கும் ஆவணங்களுக்கும் முரண்காக உள்ளன: தேவர் வகுப்பினரே ஒப்புக் கொண்டுள்ளனர். மேற்சொன்ன அதிகாரிகள் தேவர் வகுப்பினரை விசாரணை செய்து திட்டவட்டமான கேள்வி களைக் கேட்டிருந்தார்களானால், இரண்டு குடும்பங்களுக்கிடையே உள்ள கருத்து வேறு பாடும், விரோதமும் அண்மையில்தான் ஏற் பட்டது என்பதையும் சுடலைமாடசாமி திருக் கோயில் அறங் காவலர்களைத் தேர்ந்தெடுக்கும் சமயத்தில்தான் 1980 ஜூன் மாதத்தில்தான் ஏற்பட்டது என்பதையும் மேற்சொன்ன அதிகாரிகள் எளிதாகக் கண்டுபிடித்திருக்க முடியும்.

சடலத்தை எரிப்பதற்கான செலவு.

415. மணியின் சடலத்தை எரித்த பின்னர் அன்று சங்கரத் தேவர் அவருடைய கையாட் களுடன் இராஜசெல்வத்தின் வீட்டிற்கு வந்து, மணியின் சடலத்தை எரிப்பதில் சங்கரத் தேவர் செலவிட்டதாகச் சொல்லப்படுகிற தொகையைத் திருப்பித் தருமாறு கேட்டது பற்றிய புகாரை நாம் கவனிப்போம்.

416. சடலத்தை எரிப்பதற்கான செலவுகளைத் திருப்பித் தருமாறு சங்கரத் தேவர் கேட்ட போது, தன்னைச் சுற்றிப்பிர்தோடு மணியையும் கொலை செய்த சங்கரன் எந்த தைரியத்தோடு சடலத்தை எரிப்பதற்கான செலவுகளைக் கேட் கிறார் என்பது இராஜசெல்வத்தின் வாதமாகும். முற்றிலும் பொய்யானதும், இயற்கைக்கு மாறா னதும் ஆகுமென்று இந்தச் சாட்சியத்தைத் தள்ளிவிடுவதில் எனக்கு எவ்வித தயக்கமும் இல்லை. சந்தர்ப்ப சாட்சியத்தில் ஒரு முக்கிய மான பகுதியாக இருக்கும் வகையில் இத்தகைய ஒரு பொருளற்ற கதை வேண்டுமென்றே பொய்யாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இறந்த உடலைத் தான் எரித்ததாக அடுத்த நாள் சங்கரத்தேவர் இராஜசெல்வத்திடமும் மற்ற வர்களிடமும் ஒப்புக்கொண்டார். சடலத்தை எரிப்பதில் சங்கரத் தேவருக்கு முழுப் பொறுப் பையும் மறைமுகமாக சுமத்தும் ஒரு புத்தி சாலித்தனமான முயற்சியாகும். சங்கரத்தேவர் மணியைக் கொலை செய்து விட்டு, இராஜ செல்வத்தின் விருப்பத்திற்கெதிராக அவசர மாகவும், மனிதத் தன்மையற்ற முறையிலும் சடலத்தை எரிப்பதற்குக் கட்டளையிட்டு இருந் தால், அவர் இராஜசெல்வத்தின் வீட்டிற்குத் திரும்பவும் வந்து, விரும்பத்தகாத ஒரு சூழ் நிலையை உருவாக்கி தான் தான் கொலை செய்தவரென்று சொல்லியிருக்க மாட்டார். சங்கரத் தேவர் வசதி படைத்தவராதலால் சடலத்தை எரிப்பதற்காக ஆன செலவை விட்டு விட அவரால் முடியும். சங்கரத் தேவர் இந்த நடைமுறையை மேற்கொண்டார் என்பது நம்ப முடியாதது. இது கடும் தொல்லைக்கு அவரை உட்படுத்தியது. இது மனித நடை முறைக்கும், இயல்புக்கும் மாறானதாகும்.

417. எல்லாவற்றிற்கும் மேலாக இந்தக் கதை முற்றிலும் செயற்கையானது. முரண்பாடுகளைக் கொண்டதாகச் சாட்சியம் இருக்கிறது. இதைப் பொறுத்த வரை இராஜசெல்வத்தின் தாயார் ஜெபமணி இராஜசெல்வத்தின் கூற்றை ஆதரிக் கிறார். ஜெபமணியின் சாட்சியமும் முரண் பாடு உடையதாய் இருக்கிறது. தாயும் மகளும் சரளமாகப் பொய் கூறியுள்ளனர்.

418. அவர்களுடைய சாட்சியத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. சங்கரத்தேவரும் அவருடைய கையாட்களும் இராஜசெல்வத்தின் வீட்டிற்கு வந்து 2 மூட்டை நெல்லையும், இராஜசெல்வத்தின் தங்கத்தாலியையும் எடுத்துச் சென்றுவிட்டனர் என்று இராஜசெல்வத்தின் சாட்சியத்தில் கூறப்பட்டுள்ளது. இரண்டாம் நாள் சங்கரத்தேவர் இரண்டு மூட்டை நெல் எடுத்துச் சென்றார் என்றும், சில நாட்கள் கழித்து சங்கரத்தேவர் மீண்டும் இராஜ செல்வத்தின் வீட்டிற்கு வந்து சடலத்தை எரிப் பதற்கான செலவுத் தொகையைத் திருப்பி கொடுப்பதற்கு இன்னும் தொகை வேண்டும் என்று கோரியதாகவும் இன்ஸ்பெக்டர் அருணா சலம் முன் தான் அளித்த 161 வாக்குமூலத்தில் இராஜசெல்வம் முற்றிலும் வேறுபட்ட கூற்றைக் கூறினார். அதன் பின், தன்னுடைய தாலியை விற்று அதில் கிடைக்கும் பணத்தைச் சங்கரத் தேவரிடம் கொடுக்கும்படியாக இராஜசெல்வம் தனது தங்கத் தாலியை ஜெபமணியிடம் கொடுத்தார் ; ஜெபமணி நிசையன்விளைக்குச் சென்று பொற்கொல்லர் ஒருவரிடம் அதை விற்று, கிடைத்த தொகையை. சங்கரத் தேவரிடம் கொடுத்தார். அன்றே சங்கரத் தேவர் இரண்டு மூட்டை நெல்லையும், தாலி யையும் எடுத்துச் சென்றார் என்பது இராஜ செல்வத்தின் வாதம் நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். சம்பவம் உண்மையாக இருந்தால், சாட்சியத்தில் இத்தகைய முக்கிய மான முரண்பாடுகள் அமைய முடியாது. நெல்லின் அளவு பற்றி இவ்வேறு வகையான கூற்றுக்கள் சொல்லப்பட்டுள்ளன. தான் 4 மூட்டை நெல்லை வைத்திருந்ததாகவும், அவற்றைச் சங்கரத் தேவர் எடுத்துச் சென்று விட்டதாகவும், பிரதமருக்கு இராஜசெல்வம் கொடுத்த சா.ஆ. ஏ. 16 மனுவில் குறிப்பிட் டுள்ளார். இராஜசெல்வத்தின் கூற்றுக்கு இசைவாக ஜெபமணி அளித்த சா.ஆ.ஏ. 3 உறுதி மொழிப் பத்திரத்தில் இந்தச் சம்பவம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஜெபமணி மழுப்பிப் பேசி தேவர் வகுப்பினர் தன்னுடைய மகளுடைய தாலியை எடுத்துச் சென்றனர் என்று கூறியுள்ளார்.

419. ஏழை ஆதிதிராவிடர்களான மணி, இராஜசெல்வம் ஆகியோர் தங்களுடைய அன்றாடப் பயனுக்காக நெல்லைப் பயன் படுத்தி இருக்க வேண்டும் என்றும், சங்கரத் தேவர் வசதியாக எடுத்துச் செல்வதற்காக

இராஜசெல்வம் தன்னுடைய வீட்டில் இரண்டு அல்லது நான்கு மூட்டை நெல்லை இருப்பில் வைத்திருக்க வேண்டும் என்றும் கருத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளது. தாய், மகள் ஆகியோரது சாட்சியத்தை நான் முற்றிலும் நம்பவில்லை. மணியின் சடலத்தைச் சங்கரத்தேவர் எரித்தார்; அதனால் அதற்கான செலவை அவர் திருப்பிக் கேட்டார் என்று இராஜசெல்வம் கூறிய வாக்குமூலத்திற்கு ஒத்திருக்கும் வகையில் வேறொரு வாக்குமூலம் அளிப்பதற்காக இந்தப் பொய்யான கோட்பாடு கொண்டுவரப் பட்டுள்ளது.

420. சந்தர்ப்ப சாட்சியத்தில் ஏனைய பகுதிகளை நீரு. அசோக் குமார் நிராகரிக்கவில்லை யென்று வைத்துக்கொண்டாலும் மிக முக்கியமான ஒரு பகுதியை அதாவது மணியின் சடலம் மாட்டு வண்டியில் எடுத்துச் செல்லப்பட்டது. மாட்டு வண்டியில் எடுத்துச் சென்று அதை இராஜ செல்வத்தின் வீட்டில் இறக்கி விடுமாறு சங்கரத் தேவர் தன்னுடைய கையாட்களுக்குக் கட்டளை யிட்டது. '' காவலாள் வருவார்கள் நீ பதில் சொல்ல வேண்டும் '' என்ற பகுதியை ஐயத்திற்கிடமின்றி அவர் நிரூபித்துள்ளார் என்ற வாதத்தை மட்டும் கவனிக்க வேண்டி யுள்ளது.

421. உச்ச நீதிமன்றத்தின் முடிவை நீரு. அசோக் குமார் தன்னுடைய வாதத்திற்கு ஆதரவாகக் கூறியுள்ளார். (ஏ. ஐ. ஆர். 1955 எஸ். சி. 801) அதன் விவரம் :—சந்தர்ப்ப சாட்சியத்தில் குறிப்பிட்ட ஒரு தகவல் அல்லது சம்பவத்தை குற்றம் சாட்டப்பட்டவர் நன்கு அறிந்திருந்து, அதனைச் சொல்லும்படியான நிலைமை ஏற்பட்டால், குற்றம் சாட்டப்பட்டவர் அது பற்றி மன நிறைவு அளிக்கும் வகையில் எடுத்துச் சொல்லத் தவறுவதே அவருக்கு எதிரான சந்தர்ப்ப சாட்சியத்தில் முக்கியமான சான்றாகும். அத்தக் குறிப்பிட்ட நிலையைக் குறிப்பாகச் சடலம் குற்றம் சாட்டப்பட்ட வருடன் தொடர்புடைத்தப்பட்டு அது பற்றி அவருக்கு தெரிந்திருந்தால், அது தொடர்பான சூழ்நிலையை எடுத்துச் சொல்ல அவர் தவறுவதை அடிப்படையாகக் கொண்டு அவரைக் குற்றவாளி எனத் தீர்மானித்துத் தீர்ப்பு வழங்கப்படலாம். குற்றம் சாட்டப்பட்டவர் உண்மையில் குற்றவாளியா அல்லவா என்பதைத் தீர்மானிக்க இக்கோட்பாட்டைப் பின்பற்று வதில் எவ்வித ஐயமுமில்லை. தொடர்புடைய தகவல்கள் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப் பட்டுள்ளனவா என்பதே பிரச்சினையாகும்.

422. இராஜசெல்வம், அவருடைய தாய் ஜெபமணி, காசி ஆகியோர் அளித்த சாட்சியத்தையே தொடர்புடைய தகவல்கள் பற்றிய சாட்சியம் சார்ந்துள்ளது. இராஜசெல்வம் தன்னுடைய சா.ஆ.ஏ. 1 உறுதிமொழிப் பத்திரத்தில் பின்வருமாறு கூறுகிறார் :—

'' அன்று மாலை சுமார் 6 மணிக்குச் சங்கரத்தேவர் அவர் தம்பிகள் இராமச் சந்திரன், சந்திரன் அவர்களும், சங்கரத் தேவர் மகன் சின்னத் தம்பியும், வள்ளிநாயகத் தேவர் மகன் சண்முகசுந்தரத் தேவர், சித்திரைத் தேவர் மகன் பலவேசக்கண்ணு தேவர். அவர் மகன் சித்திரைத் தேவர் இன்னும் சில பேர்களும் ஒரு மாட்டு வண்டியில் எங் புருஷனைக் கொண்டு வந்து என் வீட்டு முத்தத்தில் போட்டார்கள். வண்டியை வள்ளிநாயகத் தேவர் மகன் சண்முகசுந்தரத் தேவர் ஓட்டி வந்தார். என் புருஷனுக்கு உயிர் இல்லை. என் கணவர் அடிபட்டு உடம்பில் வீக்கமாக இருந்தது. சங்கரத் தேவர் ' உன் கணவன் மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்டு விட்டான் ' என்று சொன்னார்''.

423. மேலே நகலெடுக்கப்பட்டுள்ள உறுதி மொழிப் பத்திரத்தில் காணப்படும் செயற்கைத் தன்மை இந்த வழக்கு முற்றிலும் பொய்யானது என்று நிராகரிக்கப் போதுமானது.

424. இராஜசெல்வம் இயன்ற அளவிற்குப் பலரை இந்த வழக்கில் தொடர்புபடுத்தி யுள்ளார்? இந்தச் சம்பவத்தில் பலர் வெளிப் படையாகப் பங்கு கொண்டனர் என்பது நம்ப முடியாததாக உள்ளது. இராஜசெல்வத் தின் வீட்டிற்கு மாட்டு வண்டியை ஓட்டிச் செல்ல சண்முக சுந்தரமே போதும். சுமார் 12 பேர் மாட்டு வண்டியுடன் சென்றனர் என்பது வியப்பாக இருக்கிறது.

425. சங்கரத் தேவரின் குடும்பத்திலுள்ள பலரையும் அவருடைய கையாட்கள் பலரையும் முடித்தவரையில் சேர்த்த முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இராஜசெல்வத்தின் சாட்சி யத்தை நான் நம்பத் தயாராக இல்லை.

426. அந்தத் தெருவில் வசிப்பவர் பலர் வெளியே நின்று கொண்டிருந்தனர் என்பதையும் 7 அல்லது 8 பேர் இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தனர் என்பதையும் காசி ஒப்புக்கொண்டுள்ளார். அந்தத் தெருவில் வசிக்கும் தனிப்பட்ட நபர்களில் யாரையது ஒருவரை விசாரிக்காமல் விட்டது, இராஜ செல்வத்தின் வாய்மொழி சாட்சியத்தை மதிப் பிடுவதில் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. இந்த வழக்கில் பல முக்கியமான பகுதிகளில் அவர் பொய் சொல்லியிருக்கிறார் என்பதை நிரூபித்துள்ளார்.

427. நாங்குனேரி மருத்துவ மனையிலிருந்து தன்னுடைய கணவருடன் ஜெபமணி திரும்பி வந்த அன்றும், அவர், திரும்பி வந்த போதும் சங்கரத் தேவரும் அவருடைய கையாட்களும் மாட்டு வண்டியில் வந்து மணியின் சடலத்தை இறக்கிக் கொண்டிருந்ததைத் தான் கண்டதாக ஜெபமணி கூறுகிறார். மணியின் சடலத்தை மாட்டு வண்டியில் எடுத்துச் சென்று இராஜ செல்வத்தின் வீட்டில் இறக்கிவிட்டது பற்றி சங்கரத் தேவர், அவருடைய குடும்பத்தினர், அவருடைய கையாட்கள், ஆகியோரைத் தொடர்பு படுத்தி இராஜசெல்வம் கூறியது போலவே ஜெபமணி சா. ஆ. எ. 3 என்ற தன்னுடைய உறுதிமொழிப் பத்திரத்தில் கற்பனைக் கதையைக் கூறியுள்ளார்.

428. நாங்குனேரி மருத்துவ மனையிலிருந்து ஜெபமணி மாலை 6—00 மணிக்கு ஸ்ராமத் திற்குத் திரும்பியிருக்கவேண்டும் என்று சொல்வது இயலாதது என்றும், அவர் வீட்டிற்குத் திரும்பும் போது இரவு சுமார் 8—00 மணி இருக்கும் என்றும் ஜெபமணியைக் குறுக்கு விசாரணை செய்த போது திரு வெங்கடாச்சாரி தெளிவாக எடுத்துரைத்தார். குறுக்கு விசாரணையை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் வெங்கடாச்சாரியின் வாதத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

உண்மையில் சடலம் இராஜசெல்வத்தின் வீட்டில் மாட்டு வண்டியிலிருந்து இறக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிற நேரத்தில் ஜெபமணி வீட்டிற்குத் திரும்பிவரவில்லை.

429. ஜெபமணி எவ்வாறு சரளமாகப் பொய் சொல்லியுள்ளார் என்பதையும், வழக்கின் மற்ற பகுதிகளைப் பார்க்கும்போது அவருடைய சாட்சியம் எவ்வாறு பயனற்றது என்பதையும் முந்தைய பத்திகளில் நான் விரிவாக விவாதித்துள்ளேன். அவருடைய சாட்சியம் முற்றிலும் நம்பத் தகுந்ததாகயில்லை. அவருடைய சாட்சியத்தை நான் நம்பவில்லை. சடலம் மாட்டு வண்டியிலிருந்து இறக்கப்பட்டபோது, உடம்பில் எல்லா இடங்களிலும் அடித்ததற்கான அடையாளங்களும் வீக்கமும் இருந்தது என்று இராஜசெல்வம் சாட்சியம் அளித்திருந்தார். ஆனால், இன்ஸ்பெக்டர் அருணாசலத்தின் முன் அவர் அளித்த 161 வாக்கு மூலத்தில் உடம்பில் வீக்கம் எதையும் தான் பார்க்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

430. சங்கரத் தேவரால் தான் கற்பழிக்கப்பட்டதாக இராஜசெல்வம் கொடுத்த புகாரை பொறுத்தவரை அந்தச் சாட்சியம் நம்பத் தகுந்ததாகயில்லை என்று மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இராஜசெல்வம், கற்பழிக்கப்பட்டார் என்று இந்த வழக்கில் சொல்லப்பட்ட விவரங்கள் அவருக்கு எதிராகவே அமைந்துள்ளன. சம்பவப் பாக்கியைப் தீர்ப்பதற்காகச் சங்கரத்தேவரின் வீட்டிற்கு மணி சென்றார் என்ற அவருடைய கூற்று பொய்யானது என்று அறியப்பட்டுள்ளது.

431. இந்தச் சம்பவத்திற்குக் காரியும், இராஜரிங்கும் நேரடிச் சாட்சிகள் என்று சொல்வதற்காக வாய்மொழியாகவும் ஆவணங்களின் மூலமாகவும் அவர் சரளமாகப் பொய் சொல்லியுள்ளார். அவர் பொய்யே பேசுகிறார் என்பதும் பொய்யான விவரங்களுடன் ஆவணங்களைத் தயாரித்துள்ளார் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

432. மணி இறந்த நாளுக்கு அடுத்த நாள் சங்கரத் தேவர் தன் வீட்டிற்கு வந்து மணியின் சடலத்தை எரிப்பதற்குத் தான் செலவிட்டுள்ளதாகச் சொல்லப்படுகிற தொகையைத் தனக்குத் திருப்பித் தருமாறு கேட்டார் என்றும் அவர் சொல்லிய கூற்று பொய் என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது. வழக்கின் இந்தப் பகுதியில் அவர் அளித்த சாட்சியம் முற்றிலும் பொய்யானது; இது அப்பட்டமான பொய், அவருடைய சாட்சியத்தில் ஒன்றுமாகவும், சில விசாரணை வாக்குமூலத்தில் மற்றொன்றுமாகவும் சொல்லுகிறார். இன்ஸ்பெக்டர் அருணாசலத்தின் முன் அவர் கொடுத்த 161 வாக்குமூலத்தில் சொல்லியது வேறாக இருக்கிறது. அவருடைய சாட்சியம் முழுவதும் முரண்பாடானதாகவும் பொய்யானதாகவும் உள்ளது. சம்பவப் பாக்கியைத் தீர்த்து வைக்க மணி சங்கரத் தேவர் வீட்டிற்குச் சென்றார் என்ற அவருடைய சாட்சியம் பொய்யானது. ஏனெனில் கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் வாதம் பொய் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. வேறு வகையில் சொன்னால் துக்கரமான நாளன்றும், அதற்கு அடுத்த நாளும் நடந்துள்ளதாகச் சொல்லப்படுகிற நிகழ்ச்சிகள் பற்றி அவர் அளித்த சாட்சியம் முற்றிலும் பொய்யானது, உண்மையைப் பற்றிக் கவலைப்படாமல் இந்த வாக்கு மூலங்களை அவர் அளித்துள்ளார். சங்கரத் தேவர் தன்னுடைய கையாட்களுடன் மணியின் சடலத்தை எடுத்துச் சென்று இராஜசெல்வத்தின் வீட்டில் இறக்கினார் என்று அவர் வாய் மொழியாகச் சொல்லிய கற்பனைக் கதை பொய்யானது, அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது, வழக்கின் ஏனைய முக்கியமான பகுதிகளில் அவர் உண்மையாக சாட்சியம் அளித்திருந்தால் சங்கரத் தேவர் மணியின் சடலத்தை இராஜசெல்வத்தின் வீட்டில் இறக்கினார் என்ற தகவலை அவர் கற்பனையாகக் கூறியிருந்த போதிலும் அதை ஏற்றுக்கொள்ள ஒருவர் நினைக்கலாம். ஆனால், அது அந்த மாதிரி அல்ல, சங்கரத் தேவர் அவருடைய கையாட்களுடன் மணியின் சடலத்தை மாட்டு வண்டியில் எடுத்துச் சென்று இராஜசெல்வத்தின் வீட்டில் இறக்கினார் என்று கோட்டாட்சியர் முன்போ அல்லது காவல்துறை உதவி சூப்பிரண்டு முன்போ இராஜசெல்வம் இந்தக் கூற்றைக் கூறவில்லை என்ற மற்றோரு முக்கியமான தகவலும் உள்ளது.

433. இந்த வழக்கு முன்பே முடிவு செய்யப்பட்டதல்ல என்று எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. மணியின் சடலத்தை இராஜசெல்வத்தின் வீட்டில் இறக்கிவிட்டது உட்பட சம்பவத்திற்குக் காரியையும், சிங்கையும் நேரடி சாட்சிகளாகச் சேர்ப்பதற்கும் முடிவு செய்யப்பட்டது.

434. இக்காரணத்தினால் திரு. அசோக்குமாரின் இந்த வாதத்தை நான் மறுக்கிறேன்.

435. இந்த விசாரணையை நடத்துவதிலும் நான் முடிவிற்கு வருவதிலும், எஸ். ஆர். தாஸ் கமிஷன் (நீதிபதி எஸ். ஆர். தாஸ், முன்னாள் இந்தியத் தலைமை நீதிபதி) தெரிவித்த நெறிமுறைக் கோட்பாடுகளை நான் மனத்தில் கொண்டுள்ளேன் :

"நமது சட்டங்களையும் நீதி நிர்வாகத்தையும் தலை சிறந்ததாகச் செய்துள்ள இரண்டு முக்கியமான கோட்பாடுகளைக் கமிஷன் இந்த விசாரணை முழுவதிலும் முதன்மையாகக் கருத்தில் கொண்டு விசாரணையை நடத்தியுள்ளது. இந்த இரண்டு கோட்பாடுகளும் கொடுங்கோலாட்சியையும் தன்னிச்சையான ஆட்சி முறையையும் தடுப்பதில் பெரிதும் உதவியுள்ளன.

(i) குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் அவருடைய குற்றம் உண்மையானது என்று சந்தேகமற நிரூபிக்கப்பட்டாலன்றி அவர் குற்றமற்றவர் என்றே கருதப்படவேண்டும். அவருக்கு எதிரான சாட்சியமும் நம்பகமாக இருப்பதுடன் எவருடைய நிர்ப்பந்தமின்றிக் கொடுக்கப்படவேண்டும். வழக்கின் மறுக்க முடியாத சூழ்நிலைகளும் கருத்திற் கொள்ளப்படவேண்டும்.

(ii) சந்தேகம் எவ்வளவு வலுவாக இருந்த போதிலும் அந்த சந்தேகத்தின் அடிப்படையிலேயே ஒருவரைக் குற்றவாளியாகத் தீர்மானித்துத் தண்டிக்கப்படக் கூடாது.

எனவே, இக் கமிஷன் தங்கள் மூன் கொடுக்கப்பட்ட சாட்சியங்களை நன்கு அலசி ஆய்ந்தும், குற்றச் சாட்டுக்கள் எவ்வளவு ஆணித்தரமாகச் சொல்லப்பட்ட போதிலும் அவற்றை அப்படியே எடுத்துக் கொள்ளாமல் அவற்றை நன்கு ஆராய்ந்து நமது சட்டங்களில் கூறப்பட்டுள்ள தலையாய கோட்பாடுகளை மனத்தில் கொண்டும் ஒவ்வொரு முடிவையும் செய்துள்ளது. தம்முன் அளிக்கப்பட்ட சாட்சியங்களை ஆராய்வதிலும் தன் இயல்பு நடைமுறைகளை முறைப்படுத்துவதிலும், சாட்சியச் சட்டத்திலும் நடைமுறைச் சட்டங்களிலும் கூறப்பட்டுள்ள தொன்மையான கோட்பாடுகளைக் கமிஷன்

கருத்திற்கொண்டே செயல்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளாக நமது முன்னோர்களின் அனுபவத்தினாலும் அறிவினாலும் இக் கோட்பாடுகள் உருவானவை என்ற காரணத்தினாலேயே இக் கோட்பாடுகளைக் கமிஷன் கருத்திற்கொண்டது. இரு தரப்பில் கூறப்பட்டுள்ளதையும் சீர்தூக்கிப் பார்த்து உண்மையைக் கண்டறிவதில் கமிஷன் கடமை பிறழாது நடந்துள்ளது. நீதி வழங்கப் பட்டுள்ளது என்பதோடு அல்லாது நீதி வழங்கப் பட்டுள்ளது என்று அனைவருக்கும் மன நிறை வளிக்கும் வகையில் தனது கடமையைச் செய் துள்ளது.

436. நீதிபதி எச். ஆர் கன்னா கமிஷன் வகுத்த நடைமுறைகளையும் நான் இங்குக் குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகும் :

" குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்பட்டனவா அல்லவா என்று முடிவு செய்ய கமிஷன் தம் முன் வைக்கப்பட்டுள்ள ஆணைச் சாட்சியங்களையும், வாக்குமூலங்களையும், ஏனைய தஸ்தாவேஜுகளை யும் அந்தந்த வழக்கின் தனிப்பட்ட சூழ்நிலை களையும் கருத்தில் கொள்ள வேண்டும். நீதி மன்றத்தில் வழக்கு விசாரணையில் குற்றம் ஒன்று எவ்வாறு சந்தேகமற நிரூபிக்கப்பட வேண்டுமோ அவ்வாறே கமிஷன் முன்பும் ஒரு குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட வேண்டும். நீதிமன்றத்திற்குப் பயன்படுத்தப்படும் கோட்பாடுகளே கமிஷன் விசாரணையிலும் பயன்படுத்தப்பட வேண்டும். ஏனெனில், இக் கோட்பாடுகள் ஆண்டாண்டுகளாக நமக்கு ஏற்பட்டுள்ள அனுபவ அறிவின் அடிப்படை யில் அமைந்தனவாகும்.

437. சந்தேகத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கக் கூடாது என்பது பற்றியும், குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் விளக்கும் வகையில் ஆர். வி. காட்ஜ் வழக்கில் பாரன் ஆல்டர்சன் அவர்கள் ஜூரிகளுக்கு அளித்த அறிவுரையை நான் இங்கே குறித்துள்ளேன். (1838, 2 ஸ்டார்க் ஒ.ரி. 227)

" ஒன்றுக்கொன்று ஒத்த வகையில் சூழ்நிலை களை அமைத்துக்கொள்வதில் மனிதமனம் வல்லமை வாய்ந்ததாகும். அவையாவின் சிறு சிறு சம்பவங் களை ஒன்றாக இணைத்து ஒரு முடிவுக்கு வருவதில் மனத்திற்கு ஏனோ ஓர் அலாதியான இன்பம் ஏற்படு கிறது. ஒருவருடைய அறிவு அதிகமாக அதிகமாக இத்தகைய இறனும் அதிகமாகிறது. ஒரு சமயங் களில் தனக்குக் கிடைக்காத ஒரு தகவலைத் தானா கவே அனுமானம் செய்து கொள்வதில், தாம் ஏற்கெனவே செய்துள்ள முடிவுக்கு ஏற்ற வகையில் அச் சூழ்நிலைகளை இத்தகைய அறிவுடையவர் கள் உருவாக்கிக் கொள்கின்றனர். "

இதே கருத்து உச்ச நீதிமன்ற வழக்குகளிலும் சொல்லப்பட்டுள்ளது. (ஏ. ஐ. ஆர். 1963, பக்கம் 74.)

438. சாட்சியச் சட்டம் பற்றி சர்க்கார் எழுதி யுள்ள நூலில் கூறப்பட்டுள்ளது பற்றியும் திரு. வெங்கடாசாரி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார். (தொகுதி II, 13ஆம் பதிப்பு, 1981, பக்கம் 1065.)

" ஒருவர் குற்றம் செய்தவர் என்பது சந்தே கமற நிரூபிக்கப்பட்டாலன்றி அவர் நிரபராதியே ஆவார். இதை தையார் மிக அழகாக எடுத்து எழுதியுள்ளார், குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவர் குற்றவாளி என்று சந்தேகமற நிரூபிக்கப்பட் டாலன்றி அவர் நிரபராதியே ஆவார். இது தான் நீதி; நடைமுறை, சட்ட விளக்கம் ."

439. எனது தீர்ப்புகளையும் முடிவுகளையும் நான் இப்பொழுது விளக்கி எழுதுகிறேன்.

440. கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் வழக்கும் கொலை செய்யப்பட்டதாகக் கூறப் படும் வழக்கும் ஒன்றோடொன்று தொடர்புடை யதுதான். இவற்றைப் பிரிக்க முடியாது. இரண்டு நிகழ்ச்சிகளும் தனிப்பட்ட ஒரு சம்பவத்தை உள்ளடக்கியவை. இராஜ செல்வத்தின் கூற்றுப்படி (காவல்துறை உதவி சூப்பிரண்டு முன் அவர் அளித்த வாக்குமூலத்தை (சா. ஆ. ஏ. 9 1980ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26 நாள்) காண்க. சங்கரத் தேவர் இராஜசெல்வத்தைக் கற்பழிக்க முயற்சி செய்தார் என்பதே அவருடைய வாதமாகும். கற் பழிக்க முயற்சி செய்யப்பட்டதேயன்றி கற்பழிக் கப்படவில்லை. கற்பழிப்பு வழக்கு நிரூபிக்கப்பட வில்லை.

441. கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிற வழக்கு நிரூபிக்கப்படவில்லை. அப்படியிருக்கும் போது மணியும் இராஜசெல்வமும் பேசிக் கொண்டு சங்கரத் தேவருடன் எல்லாத் தொடர்புகளையும் மணி முறித்துக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்து, அதன் பின்னர், தன்னுடைய சம்பளப் பாக்கியைத் தீர்த்துக் கொள்ள சங்கரத் தேவர் வீட்டிற்குச் சென்றதாகச் சொல்வதும் பொய்யானதாகும். சம்பளத்தைச் சரி செய்து வாங்கி வருவதற்காக சங்கரத் தேவரின் வீட்டிற்கு மணி சென்றதே கற்பழிப்பு சம்பவத்தினால்தான். கற்பழிப்புச் சம்பவம் நடைபெற்றதாகச் சொல்வது நிரூபிக்கப்பட வில்லை. சங்கரத் தேவருடன் தகைக்குள்ள தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ளவும், சம் பளக் கணக்கைத் தீர்த்துக் கொள்ளவும் மணி சங்கரத் தேவர் வீட்டிற்குச் செல்ல வேண்டியதே இல்லை.

442. சம்பளக் கணக்கைத் தீர்த்துக் கொள்ள தற்காக மணி கேட்ட முறை, தன்னை இழிவு படுத்துவதாக உள்ளது என்று சங்கரத் தேவர் கூறியது, சங்கரத் தேவர் தனுடைய பொறு மையை இழந்து மணியை அவருடைய வீட்டில் கொலை செய்தார் அல்லது நாற்சந்திப்பில் மணி யைத் தள்ளி அவர் இறக்கும் அளவிற்கு அவரைக் கடுமையாக அடித்தார் என்பது, கொலை செய் யும்போது 'செருக்கியின் மகன் சம்பளம் கேட்கும் முறை இதுதானா ' என்று சங்கரத் தேவர் உரக்கக் கூறியது, இவ்வாறு கூறி கொண்டே அவர் மணி யின் கழுத்தில் ஏறி மிதித்து அதனால் மணி நிலத் தில் விழுந்து விட்டார் என்பது முற்றிலும் பொய் யாகும். மணி தன்னுடைய சம்பளக் கணக்கைத் தீர்ப்பதற்காகச் சங்கரத் தேவரிடம் கேட்ட முறை அவரை மதிப்பிழக்கச் செய்து விட்டது. இது நடைபெறவேயில்லை. எனவே, சங்கரத் தேவர் தன்னுடைய பொறுமையை இழக்கும் பிரச்சினையே எழவில்லை.

443. தன்னுடைய மனைவி கற்பழிக்கப்பட்டாள் என்ற நிலையில் கடுமையான மன உளைச்சல் கொண்டு மணி சங்கரத் தேவர் வீட்டில் தற் கொலை செய்து கொண்டார் என்ற பிரச்சினைக்கு இடமேயில்லை. கற்பழிப்பு பொய்யானது என்று மெய்ப்பிக்கப்படுமானால் மணியின் மனக்கலக்கத் துக்கோ, அதனால் நேர்ந்ததாகக் கருதும் தற் கொலைக்கோ இடமேற்பட்டிருக்காது.

444. மணி அவரது வீட்டில் மாரடைப்பால் இயற்கையாக மரணமடைந்தார் என்ற சாட்சியம் நிரூபிக்கப்படவில்லை; மணி அவருடைய வீட்டில் இறக்கவில்லை; இப் பகுதி குறித்து தேவர் வகுப்பினர் அளித்த சாட்சியம் பொய்யானது. மொத்தத்தில் இச் சூழ்நிலைகள் அனைத்தையும் கருதிப் பார்த்ததில், கள்ளச்சாராயத்தை மிதமிஞ்சிக் குடித்ததனால் சங்கரத் தேவர் வீட்டில் மணி இறந்துவிட்டார் என்று நான் நீர்மானித்தேன். விஷத்தைக் குடித்துவிட்டு மணி தற்கொலை செய்து கொண்டார் என்ற பிரச்சினைக்கே இடமில்லை.

445. கள்ளச்சாராயத்தை மிதமிஞ்சிக் குடித்ததனால் மணி இறந்து விட்ட பின்பு அவருடைய சடலம் சங்கரத் தேவரின் வண்டிக்காரர்களால் மணியின் வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. சங்கரத் தேவர், அவருடைய கையாட்கள், அவருடைய குடும்பத்தினர் (பலர்) மாட்டு வண்டியுடன் சென்றனர் என்பதை நான் நம்பவில்லை. காசிக்குச் சொல்லியனுப்பிய பின்னர் மணியின் சடலம் ஜிராஜசெல்வத்தின் வீட்டிற்குச் சங்கரனால் அனுப்பி வைக்கப்பட்டது என்று நான் நீர்ப்பனித்தேன். காசி என்னும் அவரே மாட்டு வண்டியை ஓட்டிச் சென்றார்; அல்லது சங்கரத் தேவரின் வண்டிக்காரர் மாட்டு வண்டியை மணியின் சடலத்துடன் ஜிராஜ செல்வத்தின் வீட்டிற்கு ஓட்டிச் சென்றார். மணி இயற்கையாக மரணம் அடையாதாலும், அவர் கள்ளச்சாராயத்தை மித மிஞ்சிக் குடித்ததனால் இறந்துவிட்டார் என்பதாலும் அவரைச் சேர்ந்த வர்கள், ஜிராஜசெல்வம், காசி உட்பட மற்றவர் கள், சங்கரத் தேவர் ஆகியோர், சம்பவம் நடந்த இடத்திற்குக் காவல் துறையினர் வந்தால் அதனால் ஏற்படும் தொல்லைகள், சவப் பரிசோதனை, புலன் விசாரணை, கைது செய்தல், ஆகியவற்றைத் தவிர்க்கும் பொருட்டு இயன்ற விரைவில் மணியின் சடலத்தை எரித்துவிட வேண்டும் என்று முடிவு செய்தனர்.

446. சங்கரத் தேவர் சொல்லியபடி, கட்டளையிட்டபடி மணியின் சடலம் அவசரம் அவசரமாக எரிக்கப்படவில்லை; ஜிராஜசெல்வம், அவருடைய பெற்றோர், காசி, ஆகியோரின் முழுச் சம்மதத்தின் பேரிலேயே சங்கரத் தேவரால் இந்த முடிவு எடுக்கப்பட்டது. கொலை அல்லது தற்கொலை வழக்காக இல்லாதபோதிலும் கள்ளச் சாராயத்தை மிதமிஞ்சிக் குடித்ததனால் மரணம் ஏற்பட்டது என்றதால் காவல் துறையினர் சம்பவம் நடந்த இடத்திற்கு வருவார்கள் என்ற அச்சம் அவர் களுக்கு இருந்தது.

447. காவல்துறை சூப்பிரண்டு அளித்த அறிக்கையை (1980-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3-ஆம் நாளிட்ட சான்றாவணம் ஜி. 33) இங்கே நான் முழுவதுமாக ஏற்றுக் கொள்கிறேன். தேவர் வகுப்பினரும் ஆதி திராவிடர்களும் கூட்டாகச் சேர்ந்தே சடலத்தை எரித்தனர் என்று கவனமான முழு விசாரணைக்குப் பின்னர் காவல் துறை சூப்பிரண்டு அதில் குறிப்பிட்டுள்ளார்.

448. சங்கரத் தேவர் கட்டளையிட்டபடி சடலம் எரிக்கப்பட வில்லை, ஆனால் ஜிராஜசெல்வம் அவர்களின் பெற்றோர், காசி, ஆகியோரின் முழு ஒத்துழைப்பைப் பெற்று அவர்கள் சம்மதத்தின் பேரில் சங்கரத் தேவர் முடிவெடுத்தார் என்று நான் நீர்ப்பனித்துள்ளதால், மணி நிறத்தவ மதத்தைச் சார்ந்தவரா அல்லது இந்துவா என்ற சாட்சியத்தை விவாதிக்க வேண்டியது அவசியமில்லை. மணியின் சடலத்தை இயன்ற விரைவில் எரிப்பதற்கு அனைவரும் முடிவு செய்துள்ளனர்.

449. மணி கொலை செய்யப்பட்டதற்கு ஜிராஜசிங்கும் ஸ்டாலினும் நேரடிச் சாட்சிகள் என்றும் சங்கரத் தேவர் மணியைக் கடுமையாக அடித்து அவரைக் கொலை செய்துவிட்டார் என்றும் காசி சொன்ன சாட்சியம் முற்றிலும் பொய்யானதும், பழி பாவத்திற்கு அஞ்சாமல் சொல்லப்பட்டதும் ஆகும். அத்தகைய சம்பவம் எதுவும் நடைபெற வில்லை. எனவே, நேரடிச் சாட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை.

450. சப்-இன்ஸ்பெக்டர் திருஞானசாமியும், இன்ஸ்பெக்டர் அருணாசலமும் செய்ததாகச் சொல்லப்படும் குற்றப்புலன் விசாரணை உடந்தையாக இருந்ததன் மூலம் மாசுள்ளதாகிறது. புலன் விசாரணை ஒரு மோசடியாகும். அவதூறாகவும் உள்ளது. தேவர் வகுப்பினருடன் அவர்கள் முழுவதும் உடந்தையாக இருந்தனர்.

451. வேறு ஆறு பேர்களை அதாவது மஞ்சுளா, வசந்தா, வசந்தி, கிரேஸ், பிரேமா, மைக்கேல் அம்மாள் ஆகியோர் கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லப்படுவதும் பொய். இக் குற்றச்சாட்டுக்கு ஆதாரமாகச் சொல்லப்பட்ட சாட்சியங்கள் பயனற்றதோடு பொய்யானவை ஆகும்.

452. ஆதி திராவிடர்களைப் போலவே தேவர் வகுப்பினரும் பழி பாவத்திற்கு அஞ்சாமல் பொய் சொல்பவர்கள் என்று நிரூபிக்கப்பட்டுள்ளதாக நான் தீர்ப்பளிக்கிறேன். அவர்கள் சாட்சியம் அளிக்கும்போது கமிஷன் நடவடிக்கைகளின் நிறப்புத் தன்மையை இழிவு படுத்தும் வகையில் சாட்சியம் அளித்தனர். அவர்கள் அடிக்கடி பொய் சொல்லியுள்ளனர் என்பதைக் குறுக்கு விசாரணையின்போது அவர்கள் அளித்த சாட்சியம் காட்டும். அவர்கள் என் முன் சாட்சியம் அளித்தபோது அவர்களை நான் முற்றிலும் நம்பத் தயாராக இல்லை. பல உதாரணங்களில், மாடசாமித் தேவர் எந்த அளவிற்குப் பொய் சொல்லுவார் என்பதைக் காட்ட நான் இரண்டு உதாரணங்களை மட்டும் குறிப்பிடுவேன் :

453. மாடசாமித் தேவர் சான்றாவணம் பி. 28 என்ற தன்னுடைய உறுதிமொழிப்பத்திரத்தில் (பக்கம் 2) பின்வருமாறு கூறியுள்ளார் :

''திரு. சங்கரன்தேவ் வேலை பார்த்த திரு. மணி என்பவர் ஜாத்திற்கிடமான சூழ்நிலையில் இறந்தது பற்றி மறைத்து ஒரு குற்றச்சாட்டைச் செய்துள்ளது அக்கிரமம். உண்மையில் நமக்குத் தெரிந்து மணி மாடைப்பால் இறந்து விட்டார். அவரது உறவினர்களே அவரது ஈமச் சடங்கினை நடத்தினர்.''

ஆனால், ஆவணத்தின் 762ஆம் பக்கத்தில் டி.பி. டபிள்யு. 14ஆக குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது, மாடசாமித் தேவர், '' எனக்கு மணியைப் பற்றித் தெரியவே தெரியாது'' என்று பொய் சொல்கிறார். மாடசாமித் தேவர் பழிபாவத்திற்கு அஞ்சாமல் பொய் சொல்பவர் என்பதையே இது காட்டுகிறது.

454. சுடலைமாடசாமி திருக்கோயிலுக்கு அறங்காவலர்களை நியமிக்கும் சமயத்தில், மாடசாமித் தேவர் சா. ஆ. ஏ. 98-ல் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களை நியமிக்குமாறு கேட்டுக்கொண்டு நீலகண்டத் தேவரிடம் தான் கொடுத்த பெயர்ப் பட்டியலைக் (சா.ஆ. ஏ. 93) கொடுத்தார். நீலகண்டத் தேவர் தன்னுடைய சாட்சியத்தில்

போது சா.ஆ.ஏ.93 என்ற இத்தப்பட்டியலைக் காட்டினார். இது, மாடசாமித் தேவரின் கைப்பட எழுதப்பட்டது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. தனக்கும் மாடசாமித் தேவருக்கும் இடையே உள்ள உறவு முறை சுமுகமாகவும், அன்பாகவும் உள்ளது என்பதை மெய்ப்பிக்க நீலகண்டத் தேவர் சா. ஆ. ஏ. 93 பட்டியலைக் காட்டினார். ஆவணத்தின் 764ஆம் பக்கத்தில் மாடசாமித் தேவர் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது, அந்த நிலைமையிலிருந்து தப்பித்துக்கொள்ள அவர் முயற்சி செய்து, முன்னாள் அமைச்சர் திரு. எட்மண்டுக்குச் சீட்டு அனுப்பியதாகப் பொய்யாகத் தெரிவித்தார். அவருடைய சாட்சியம் முற்றிலும் பொய். மேற்படி பட்டியலை மாடசாமித் தேவர் திரு. எட்மண்டுக்குக் கொடுத்திருந்தால், எப்படி நீலகண்டத்தேவர் இந்தப் பட்டியலைத் தன்னுடைய சாட்சியத்தின் போது காட்டியிருக்க முடியும் என்பது எனக்குப் புரியவில்லை. சா. ஆ. ஏ. 93 அமைச்சருக்கு முகவரியிடப் பட்டதாகவோ, அவருக்கு அனுப்பப்பட்டதாகவோ அதில் சாட்சியம் எதுவும் இல்லை. நீலகண்டத் தேவர் அப் பட்டியலைக் காட்டும் போது, மாடசாமித் தேவர் நீலகண்டத் தேவருக்கு கொடுக்கப்பட்டதாகக் கருதப்பட்டுள்ளது. மாடசாமித்தேவர் திரு. எட்மண்டை அறிமுகப்படுத்திய இந்தகதை, மாடசாமித் தேவர் எப்படிச் சரளமாகப் பொய் பேகிறார் என்பதைக் காட்டுகிறது. நிகழ்ச்சிகளைப் பெருக்கிக் கொண்டே போவது அவசியமற்றது. ஒளிவு மறைவின்றி, உண்மையாக, நேர்மையாக சாட்சியம் அளித்ததன் மூலம் தேவர் வகுப்பினர் கமிஷனுக்கு உதவவில்லை என்பதைத் தெரிவித்தாலே போதுமானது. காரி, சிங் என்ற ஆதிதிராவிடர்களைக் காட்டியும் மாடசாமித் தேவர் எந்த விதத்திலும் சிறந்தவர் அல்லர்.

455. உண்மையைப் புறக்கணித்து சங்கரத் தேவரும் ஆதி திராவிடரைவிட அதிகமாகப் பொய் சொல்கிறார். சங்கரத் தேவர் சரளமாகப் பொய் சொல்லும் இந்த அம்சம் முத்தை பத்தினில் விவாதிக்கப்பட்டதிலிருந்து தெரியவருகிறது. எனினும், சங்கரத் தேவர் பழிபாவத்திற்கு அஞ்சாமல் பொய் சொல்கிறவர் என்பதையும் உண்மையைக் கண்டறிவதற்காக உண்மையான சாட்சியம் கொடுப்பதன் மூலம் அவர் எப்பொழுதும் கமிஷனுக்கு உதவவில்லை என்பதையும் காட்டும் ஒரு கதையில் (இது ஏற்கெனவே விவாதிக்கப் பட்டுள்ளது). நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

456. சங்கரத் தேவருக்கும் அவருடைய இரண்டு மாமாக்களுக்கும் இடையே 1—8—1980 அன்றும் 3—8—1980 அன்றும் பேச்சு வார்த்தை நடைபெற்றது என்றும், அப்பேச்சுவார்த்தையின் போது சங்கரத் தேவர் அவருடைய மாமாக்களிடம் நீதிமன்றத்துக்கு வெளியே ஒப்புக்கொண்டார் என்றும், சங்கரத் தேவரின் மாமாக்கள் நிட்ட வட்டமாகச் சாட்சியம் அளித்தனர் எனினும் தனக்கு தன்னுடைய மாமாக்களுக்குமிடையே 1—8—1980 அன்றும், 3—8—1980 அன்றும் எந்தவிதமான பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை என்று சங்கரத் தேவர் சாட்சியம் அளித்தார்.

457. சா. ஆ. பி. 25 என்பது சங்கரத் தேவர் தான் கையொப்பமிட்டு எழுதிக் கொடுத்த வாக்குமூலமாகும். காலவ்துறை முன்பு அது தாக்கல் செய்யப்பட்டது. சங்கரனுக்கும் அவருடைய மாமாக்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது என்றும் அப்போதே புனை பெயரில் எழுதப்பட்ட மனுவிற்கு நீயே பொறுப்பு என்று சங்கரத்தேவர் இலட்சுமணனைக் குற்றம் சாட்டினார் என்றும் சா.ஆ.பி. 25 இல் திட்டவட்டமாகச் சங்கரன் ஒப்புக்கொண்டுள்ளார். 1—8—1980 அன்றும், 3—8—1980 அன்றும் சங்கரத் தேவர் அவருடைய மாமாக்களைச் சந்தித்தார் என்றும் அ போது அவர்களிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது என்றும் சா. ஆ. பி. 25 தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறாகச் சங்கரனுக்கும் அவருடைய மாமாக்களுக்கும் இடையே சந்திப்பு நடைபெற்றதையும், பேச்சுவார்த்தை நடைபெற்றதையும், வாய்மொழிச் சாட்சியத்தில் மறுத்துள்ளது முற்றிலும் பொய் என்பதும் அது உண்மைக்குப் புறம்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும் தெளிவாகிறது. சங்கரத்தேவர் பொய்யர் என்பது சான்றாவணம் பி. 25 வாக்கு மூலத்தின் மூலம் தெளிவாகிறது. இந்த வாய் மொழிச் சாட்சியத்தை நம்பக்கூடாது.

458. மாடசாமித் தேவரும் சங்கரத் தேவரும் ஆதி திராவிடர்களைப் போலவே நம்பத்தக்க வர்கள் அல்லர். அவர்களிடம் பணம் இருக்கிறது. ஆனால் அவர்களிடம் நேர்மை என்பதே கிடையாது.

459. இந்த அறிக்கையை முடிவு செய்யும் முகமாக, என்னுடைய நீர்ப்பை முடிவு செய்வதில் எனக்குக் கணிசமான அளவிற்கு இடர்ப்பாடு ஏற்பட்டது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். சில அம்சங்களைப் பொறுத்தவரை சந்தர்ப்ப சாட்சியத்தின் சில முக்கியமான இணைப்புகளைக் கொண்டிருந்து. அசோக்குமார் அவருடைய நிறைமாத வாதத்தால் தேவர் வகுப்பினருக்கெதிராக சொல்லியுள்ளார். ஆனால், எல்லா இணைப்புகளும் சொல்லப்படவில்லை. அந்த இணைப்பு முழுமையாகவும் இல்லை.

460. சந்தர்ப்ப சாட்சிய அடிப்படையிலான வழக்காக இருப்பதால் தேவர் வகுப்பினருக்கு எதிராக சில முக்கியமான இணைப்புகள் நிரூபிக்கப் பட்ட போதிலும், இக்குற்றத்தைச் சங்கரத்தேவர் செய்தார் ; சங்கரத்தேவர் மட்டுமேன்றி வேறு எவரும் செய்யவில்லை என்ற முடிவுக்கு வர இயலாத நிலையில் இருக்கிறேன். சந்தர்ப்ப சாட்சியத்தின் அடிப்படையில் தண்டனை அளிக்கலாம் என்பதற்கு விதிகளில் சொல்லப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளும், நெறிமுறைக்கோட்பாடுகளும் இந்தக் குறிப்பிட்ட வழக்கில் நிறைவேற வில்லை. இந்த குறிப்பிட்ட வழக்கு சந்தேகத்திற்கு இடமான ஒன்றாகும். இது எனக்குச் சிரமத்தைக் கொடுத்தது. பல கருத்துக்களில் இது தேவர் வகுப்பிலருக்கு ஆதரவான வழக்கல்ல. தேவர் வகுப்பினருக்கு ஆதரவாக அவர்கள் குற்றம் செய்தவர்கள் அல்லர் என்று நான் நீர்ப்பளித்தால், அது தகுதி அடிப்படையில் அளிக்கப்பட்ட விடுதலையாகாது. தேவர் வகுப்பினர் நிரபராதிகள் என்ற நீர்ப்பு அல்ல இது. குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்று ஐயத்திற்கிடமின்றி நீர்ப்பளிக்கப் படவில்லை என்பதால்தான் தேவர் வகுப்பினர் விடுதலை செய்யப்பட்டனர்.

461. 11—4—1980 நாளிட்ட சா. ஆ. பி. 10 திகழ்சி நடைபெற்ற பின் உடனடியாகப் புகார் கொடுக்கப்பட்டிருந்தது. தேவர் வகுப்பிருடன் உடந்தையாக இராமல் நேர்மையான காவல் துறை அதிகாரி ஒருவரால் உரியவாறு புலன் விசாரணை செய்யப்பட்டிருந்தால், முடிவு வேறு விதமாக அ ந்திருக்கும். வழக்கின் போக்கும் தன்மையும் மாறியிருக்கும். நேர்மையான காவல்துறை அதிகாரி உரியவாறு விசாரிப்பதில் தொடர்புடைய

முக்கியமான நேர்மையான சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும். சம்பந்தப்பட்ட ஆதி திராவிடர்கள் நேர்மையான, முறையான வகையில் விசாரிக்கப்பட்டிருந்தால், கற்பனையின்றிக் கலப்பிடமின்றி அறிவுறுத்தலின்றி ஆதி திராவிடர்களின் உண்மையான முதல் கூற்று வெளிப் பட்டிருக்கும். உண்மை வெளிப்பட்டிருக்கும் ; சா. ஆ. பி. 10 மனுவை நேர்மையற்ற முறையில் முடிவு செய்ததால் சுமார் ஆறு மாதங்கள் காலதாமதத்தை ஏற்படுத்தியது. இக்கால அளவில் (1980 ஜூன் முதல் 1980 அக்டோபர் வரை) இந்த வழக்குக்கு மூல காரணமாக உள்ளவர்களின் கைபொம்மையாக ஆதி திராவிடர்கள் ஆகிவிட்டனர் ; முரண் பாடுகள் இந்த வழக்கின் போக்கு ஆகியவற்றால், ஆதி திராவிடர்கள் தோற்று விட்டனர். இந்த விரும்பத்தகாத சூழ்நிலைகள் ஆரம்ப நிலையில் ஏற்பட்டிருக்க முடியாது. ஆதி திராவிடர்களைக் காவல்துறையினர் மடக்கி விட்டனர். தேவர் வகுப்பினரும் காவல் துறையினரும் வஞ்சகமாகக் கூட்டு சேர்ந்து உண்மையை வெளிக்கொணர்வதில் தடையாக நின்றனர்.

462. ஒரு நபர் கமிஷனான என்னை நியமிக்கும் அறிவிக்கையில், இதுபோன்ற சம்பவங்கள் எதிர் காலத்தில் நிகழாமல் தடுப்பதற்கு அதாவது ஆதி திராவிடர்களைக் கொலை செய்தல், ஆதிதிரா விடப் பெண்களையும், மகளிரையும் கற்பழித்தல் ஆகியவை நிகழாமல் தடுப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்யவேண்டு மென்று மூன்றாவது வரம்பு நிபந்தனை என்னைக் கேட்டுக் கொள்கிறது.

463. தேவர் வகுப்பினர் குற்றம் செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. உண்மையில், எனக்கு அவர்கள் மீது மிகுந்த ஐயப்பாடு உள்ளது. சங்கரத் தேவருக்கு ஐயத்தால் உறும் நலனை மட்டுமே அளித்து அவரை விட்டுவிட்டேன். எனவே, நிசையன்விளையில் காவல்துறை அதிகாரி களுடன் தேவர் வகுப்பினர் உடந்தையாக இருந்த விரும்பத்தகாத நடத்தை குறித்து எனது பாதக மான கருத்துக்கள் காரணமாக நான் சில கருத்துக் களைத் தெரிவித்துள்ளேன். மாடசாமித் தேவரும் சங்கரத்தேவரும் இருபது வருடங்களுக்கும் மேலாக வரலாறு படைத்த ரவுடிகளாக இருந்துவந்துள்ளனர் என்பதையும் அவர்கள் கொடுமையானவர்கள், யதேச்சாதிகாரம் படைத்தவர்கள் என்பதையும், குண்டர்கள் என்பதையும் என்னுடைய அறிக்கையின் தொடக்கத்தில் விரிவாக விவரித்துள்ளேன்.

464. தேவர் வகுப்பினர் ஆள் பலம், பண பலம், அரசியல் பலம் ஆகியவற்றை உடையவர்கள் என்றும், காவல்துறை அதிகாரிகள் தேவர் வகுப்பின ருடன் நெருங்கிப் பழகி வந்தனர் என்றும், வள்ளி யூர் காவல்துறை உதவி சூப்பிரண்டு திரு கோபால கிருஷ்ணா கொடுத்த அறிக்கையும் (சா.ஆ.ஜி. 25., நாள் 5—8—1980) விசாரணை ஆவணங்களும் நிரூபித்தன. காவல்துறை உதவி சூப்பிரண்டின் அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 5) தேவர் வகுப்பினருக்கு மக்களிடம் மரியாதை கிடையாது. ஆனால் இவர்கள் கொடூர மானவர்கள் என்பதால் கிராம மக்கள் இவர்களைக் கண்டு மிகவும் அஞ்சினர் ஏனெனில்,

465. மாடசாமித் தேவர், சங்கரத்தேவர் ஆகியோரைப்பற்றி கிராமக் குற்ற விவரக் குறிப் பகுதி 4இல் கடுமையான அருவருக்கத்தக்க குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. தேவர் வகுப் பினரில் இவர்கள் மோசமான நாட்டறித்த ரவுடிகள் என்பதையும்,அந்தப்பகுதியில் தங்களைவிட எவரும் உயர்ந்தவராக இருக்கக்கூடாது என்ற ஒரு மோச மான உணர்ச்சி உடையவர்கள் என்பதையும் ஒவ் வொருவரும் தங்களிடம் வந்து அடிபணிய வேண்டும் என்பதையும் அந்தக்குறிப்புகள் விவரிக்கின்றன. நிசையன்வினை காவல் நிலையத்தில் நியமிக்கப் பட்ட காவல்துறை அதிகாரிகள் திறமையற்றவர் களாக ஆகிவிட்டனர் என்பதையும் தேவர்களுக்குத் தங்களை முழுவதுமாக அடிமைகளாக்கிக் கொண்டார்கள் என்பதையும், காவல் நிலையம் தேவர் வகுப்பினர்களாலேயே செயற்பட்டு வருகிறது என்பதையும் என்னுடைய முந்தைய விவாதங்கள் புலப்படுத்துகின்றன. காவல்துறை அதிகாரிகள் அடிமையாக்கிவிட்டது பற்றியும், தேவர்களின் கைபாவையாக அவர்கள் எவ்வாறு செயற்பட்டனர் என்பது பற்றியும் நிலைமை யைக் காவல்துறையினர் தவறாகக் கையாண்ட தாலும், உடந்தையாக இருந்ததாலும் இந்த வழக்கின் உண்மையான புலன் விசாரணை எவ் வாறு தடைப்பட்டது என்பது பற்றியும் வழக்கின் ஒவ்வொரு அம்சமும் ஐயத்திற்கிடமாகத் தோன்று வது பற்றியும் நான் குறிப்பிட்டுள்ளேன். தேவர் வகுப்பினர் எவ்வாறு அடிக்கடி காவல்துறைப் புலன் விசாரணையில் குறுக்கிட்டனர் என்பதையும் சாட்சிகளை மடக்கினர் என்பதையும் அவருடைய மோசமான நடத்தை, சாட்சிகளைக் கலைத்தல் ஆகியவற்றால் எவ்வாறு சில குற்றவியல் வழக்குகள் வீடுதலையில் முடிந்தன என்பதையும் விவரக் குறிப்பேடுகள் காட்டுகின்றன. நிசையன்வினை காவல் நிலையத்தில் உள்ள காவல்துறை அதிகாரிகள் அனைவரும் நிறமையற்றவர்கள், கோழைகள் என்றும் தேவர் வகுப்பினரின் கட்டளையின் பேரில் அவர்களுடன் உடந்தையாக இருந்து செயற்பட்டு வந்தனர் என்றும் நான் நம்புகிறேன்.

466. குறிப்பிட்ட இவ்வழக்கில் சப்-இன்ஸ்பெக்ட ருக்கும் தேவர் வகுப்பினருக்குமிடையே உடன்பாடு இருந்ததன் காரணமாக வழக்கின் உண்மையைக் கண்டறிவதில், அதாவது, மணியைக் கொலை செய்தது, தடைப்பட்டுள்ளது. சம்பவம் நடந்த தாகச் சொல்லப்படுகிற நிகழ்ச்சி நடந்த பின்னர் ஒரு வாரத்திற்குள் புகார் (சா.ஆ.பி. 10)கொடுக்கப் பட்ட போதிலும் உண்மை புலனாகவில்லை. நிசையன்வினை காவல்நிலையத்தில் இத்தகைய ஒரு அவல நிலை தொடர்ந்து நடந்து வருவது பெருத்த அவமானமாகும். வள்ளியூர் காவல் நிலைய உதவி சூப்பிரண்டு அலுவலகமும் இதற்குச் சளைத்ததல்ல. ஒழுக்கக் கண்காணிப்பு—இஞ்ச ஒழிப்புத் துறையின் காவல்துறை இன்ஸ்பெக்டர் ஆக உள்ள திரு இராமகிருஷ்ணன் தேவர்களின் மைத்துனர் ஆனதால் அவர்கள் சார்நிலைக் காவல் துறை அதிகாரிகளைப் பயமுறுத்துவதற்கு அவரைப் பயன்படுத்திக் கொண்டனர் என்று விசாரணையில் என்னிடம் புகார்கள் கொடுக்கப்பட்டன.

467. மாடசாமித் தேவர், சங்கரத்தேவர் ஆகி யோரைப் பற்றிய ரவுடிக் குறிப்பேடுகளும் விவரக் குறிப்பேடுகளும் மேலும் 20 வருடங்களுக்கு நியாய மாகவும் கண்டிப்பாகவும் வைத்து வரப்பட வேண்டும். நிசையன்வினை காவல்துறை இன்ஸ் பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் ஆகியோரும், வள்ளி யூர் காவல்துறை உதவி சூப்பிரண்டும் தேவர் வகுப்பினரைச்சாராத வேறு வகுப்பினராக இருக்க வேண்டும். தேவர் வகுப்பினரின் நடவடிக்கைகள் மிகக் கவனமாகக் கண்காணிக்கப்படவேண்டும். வள்ளியூர் காவல்துறை உதவி சூப்பிரண்டு அளவில் அவர்கள் மீதான நடவடிக்கைகள் நின்றுவிட அனுமதிக்கப்படக்கூடாது.

468. மற்ற இடங்களில் காவல்துறை உதவி சூப்பிரண்டு நிலையில் நடவடிக்கைகள் முடிந்து விடுகின்றன. திருநெல்வேலி மாவட்டம் போன்ற ஒரு காவல்நிலையத்தில் (பணிச்சுமை மிக்க மாவட்டம்) காவல்துறை சூப்பிரண்டும் காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலும் பணிச் சுமை மிக்கவர்கள். இவர்களுடைய நேரடி கவனத்தைச் செலுத்த அவர்களுக்கு நேரமிருக்காது. நடவடிக்கை எடுக்கவேண்டிய பெரிய பிரச்சினை அவர்களுக்கு உண்டு. அப்படி இருந்தாலும், நிசையன்வினை காவல் நிலையத்தைப் பொறுத்த வரையில் திருநெல்வேலி மாவட்ட காவல்துறை சூப்பிரண்டு நேரடி கவனம் செலுத்தி சார்நிலைக் காவல்துறை அதிகாரிகள் (சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர், காவல்துறை உதவி சூப்பிரண்டு, வள்ளியூர்) செய்த பணியை மேற்பார்வையிட்டு நேரடிக் கட்டுப்பாடு செலுத்த வேண்டும் என்பதே எனது கருத்தாகும். நிசையன்வினை, வள்ளியூர் ஆகிய இடங்களில் உள்ள காவல்நிலையங்களில் நடைபெறும் பணியைக் காவல்துறை சூப்பிரண்டு நேரடியாக மேற்பார்வையிட்டுக் கட்டுப்படுத்து கிறார் என்றும் காவல்துறையினரை தம் வசம் இழுக்க முடியாது என்றும், தேவர் வகுப்பினர் உணருமாறு செய்யவேண்டும். அப்போதுதான் குற்றங்கள் உரியவாறு புலன் விசாரணை செய்யப் படும். தேவர் வகுப்பினரின் கொடுமை ஒழியும். நிசையன்வினை காவல்துறை அதிகாரிகள் சங்கணாங் குளம் கிராமத்தைத் நிறமையான முறையில் மேற் பார்வையிடவும் ஆதி திராவிடர்களின் பொதுவான நலன், பயன் கருதியும் சங்கணாங்குளம் கிராமத் திற்குச் செல்லும் அனுகு சாலையில் நாங்குநேரி-நிசையன்வினை சாலையை இணைப்பதற்குச் சாலை ஒன்று உடனடியாக அமைக்கப்படவேண்டும்.

469. தேவர் வகுப்பினருக்கெதிராக 17 வழக்குகள் நீர்ப்பளிக்கப்படாமல் உள்ளன என்று என்னிடம் கூறப்பட்டுள்ளது. இது மிக மோசமான நிலமையாகும். இதுபற்றி ஆய்ந்து பரிசிலிக்கப்பட வேண்டும். 17 வழக்குகளிலும் காவல்துறையினர் செயலற்றவர்களாக முற்றிலும் வேறுபட்டவர் களாகச் செயல்பட்டனர் என்பதும் தேவர் வகுப்பினருடன் உடந்தையாக இருந்ததால், சுமார் 10 மாதங்களாக இந்த வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை என்பதும் வியக்கத் தக்கதாயிருக்கிறது. திருநெல்வேலி மாவட்ட காவல்துறை சூப்பிரண்டு நேரடி மேற் பார்வையிட்டுக் கண்காணித்தாலன்றி மற்றப்படி இந்த அவலநிலை தொடர்ந்து நீடிக்கும். இதை கண்காணிக்க முடியாது அல்லது ஒழிக்க முடியாது. காவல்துறை சூப்பிரண்டுடன் நான் இதுபற்றி நேரடியாக விவாதித்துள்ளேன். இதில் தன்னால் இயன்றதைச் செய்வதாக அவர் உறுதியளித்துள் ளார். திருநெல்வேலியில் தங்களது கொடுமையான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த காவல்படை போன்ற ஒரு படை உள்ளது என்பதைத் தேவர் வகுப்பினர் உணரும் நாள் விரைவில் வரும் என்று நான் நம்புகிறேன்.

470. கள்ளத்தனமாகச் சாராயம் வடித்து இறக்குவது பெரிய அளவில் நடைபெற்றுவருவது என்பது இந்தக் கிராமத்தை நான் சென்று பார்வையிட்டபோது தெரியவந்தது. காவல் துறையினரின் தகுதியின்மை, கவனமின்மை காரணமாகவே இவ்வாறு நடைபெற்றுவருகிறது. இக்கிராமத்திற்குப் பலமுறை நான் சென்றபோது பல இடங்களில் கள்ளத்தனமாகச் சாராயம் வடித்து இறக்கப்படுவதை நான் கண்டேன். சாராயம் கள்ளத்தனமாக வடித்து இறக்கப் படுவதற்காக வயல்களில் பல இடங்களில் தற்காலிக அடுப்புகளும், அடுப்புகள் எரிய வைக்கப்பட்டதற் கான அடையாளங்களும் அங்கு இருப்பதை நான் கண்டேன். பணம் சம்பாதிப்பதற்கும் ரவுடி நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபடுவதற்கும் ஆதார மாக கள்ளச்சாராயம் வடித்து இறக்குவது பயன் பட்டு வந்துள்ளது. காவல்துறையினர் இதுபற்றிக் கவனமாக நடவடிக்கை எடுத்து கள்ளத்தனமாகச் சாராயம் வடித்து இறக்குவதைத் தடுக்க அடிக்கடி திடீர் சோதனைகளை மேற்கொள்ளவேண்டும்.

471. தேவர் வகுப்பினரின் தயவை நாடாமல் சங்கணாங்குளம் ஆதி திராவிடர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்த இயலும் வகையில் சிறு தொழில்கள் துறையின் சிறப்பு பிரிவு ஒன்று அங்கு தொடங்கப்படவேண்டும்.

472. மாடசாமித் தேவர் அல்லது சங்கரத் தேவர் அல்லது ஸ்ரீமச்சந்திரத் தேவர் ஆகியோரின் குடும்பத்தினர் எவரும் கோயில் ஒன்றின் அறங் காவலராக அல்லது கிராம முன்சீப்பாக அல்லது கர்ணமாக நியமிக்கப்படக்கூடாது. மாடசாமித் தேவர் அவருடைய சகோதரர் ஆகியோரின் குடும்பத்தினர் எவரும் துப்பாக்கி வைத்திருப்பதற் கான உரிமம் கொண்டிருந்தால், மேலே சொல்லப் பட்டுள்ளவற்றைக் கருத்தில் கொண்டு பொது மக்களின் பாதுகாப்பு கருதி உடனடியாக அத் தரத்து செய்யப்படவேண்டும். காவல்துறையினரும் இராமச்சந்திரத் தேவரும் உடந்தையாக இருந்து எவ்வாறு நிலைமையை தமக்கு சாதகமாகப்யன் படுத்திக் கொண்டு கமிஷன் விசாரணையின் முன்பு பொய்யான சாட்சியத்தை உருவாக்கினர் என்பது பற்றியும் அவருடைய (கிராம முன்சீப் இராமச்சந் திரன்)மோசடியான நடத்தையின் மூலம் உண்மை புலப்படவில்லை என்பதையும் விசாரணை தடைப் பட்டு பெரும் ஐயத்திற்கிடமான குழ்நிலை நிலவியது.என்பதையும் நான் ஏற்கெனவே விவாதித் துள்ளேன்.

473. நிசையன்வினை காவல் நிலையம்,வள்ளியூர் காவல்நிலையம் ஆகியவற்றிற்கு நியமிக்கப்படும் காவல்துறை அதிகாரிகள் நிறமை மிக்கவர்களாக இருக்கவேண்டும் ; அவர்கள் தேவர் வகுப்பினரின் நடவடிக்கைகளை அடிக்கடி கண்காணிப்பதற்கு உரிய தேர்மையும் நிறமையும் தைரியமும் உடைய வர்களாக இருத்தல் வேண்டும்.

474. மற்றவர்களிடமிருந்தும் மற்ற அமைப்பு களிடமிருந்தும் வரப்பெற்ற கருத்துக்கள், ஆதி திராவிடர்களின் வாழ்க்கை நிலையையும் நலனை யும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தெரிவிப்பதாக உள்ளன. கொலையும் கற்பழிப்பும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளன என்ற அடிப்படையில் அவை தெரிவிக்கப்பட்டுள்ளன. எவே, இத்தக் கருத்துக்கள் தமக்கு உதவவில்லை. இதுதொடர்பாக அரசு ஏற்கெனவே பல நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது. கமிஷனாக உள்ள நான் இதுபற்றிக் கருத்துகளைத் தெரிவிப்பதற்கில்லை. ஏனெனில், ஆய்வு வரம்பில் இனம் (i.i) வேறு ஒரு அம்சத்தைப் பற்றி குறிப்பிடுகிறது. ஆதி திராவிடர்களின் நலனைப் பெருக்குவதற்காக நடவடிக்கைகளைக் குறிப்பிடவில்லை.

475. சம்பவம் நடந்த காலத்திலும், நான் ஒரு நபர் கமிஷனாக பதவி ஏற்றுக்கொண்ட நில மாதங்களிலும் திரு டி.எம். ஆறுமுகம், ஐ.ஏ.எஸ., திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளராகப் பணியாற்றினார். ஆதி திராவிடர்களின் புகார் களை முழுமையாகவும் பரிவோடும் விசாரணை

செய்வதில் மாவட்ட ஆட்சியாளர் திரு டி.எம். ஆறுமுகம் ஆற்றிய பணியைப் பாராட்ட விரும்பு கிறேன். ஆதி திராவிடர்களின் புகார்களையும் ஆதி திராவிடர்களின் நலனில் அக்கறை கொண்ட மக்களின் புகார்களையும் அவர் பொறுமையோடும் மிகுந்த பரிவோடும் கேட்டார். திரு ஜான் வின்சென்ட், எம். எல். ஏ. விரும்பியவாறு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்ட அறையில் எவ்வித க் காலதாமதமுமின்றி ஒரு கூட்டம் கூட்ட அவர் ஏற்பாடு செய்தார். இதனால், ஒரு நபர் கமிஷன் நியமிக்கப்பட்டது. திரு டி. எம். ஆறுமுகம் முழுமையான பரிவுடன் கூடிய விசாரணையை நடத்தியுள்ளார் என்பதை ஆவணங்கள் புலப்படுத்து கின்றன. நான் எடுத்த முடிவையே அவரும் எடுத்துள்ளார் என்பதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். மாவட்ட ஆட்சியாளராக, மிகவும் பிரபலமான, பரிவுணர்வுள்ள அதிகாரியாக அவர் பணியாற்றி வருகிறார் என்பதையும் பொதுமக்களின் நலனை எப்போதும் கவனித்து வருகிறார் என்பதையும் நான் அறிந்துகொண்டேன்.

476. விசாரணையை நடத்துவதற்காகக் கமிஷன் திருநெல்வேலிக்குச் சென்றபோதெல்லாம் பாளையங்கோட்டையில் உள்ள ஆய்வாளர் மாளிகையில் ஏற்பாடுகளைச் செய்தனர் என்பதற் காக திரு ஆறுமுகத்திற்கு அவருக்குப்பின் மாவட்ட ஆட்சியாளராகப் பொறுப்பேற்றுக் கொண்ட திரு நிர்மல் சிங் ஹீராவுக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் இருவரும் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தனர்; கமிஷன், கமிஷனின் பணியாளர்கள் ஆகியோரது வசதிகளைக் கவனித்துக்கொள்ள சார் நிலைப் பணியாளர்களுக்கு அவர்கள் கட்டளை களைப் பிறப்பித்திருந்தனர். திருநெல்வேலியில் என்னுடைய விசாரணையை நான் செவ்வனே நடத்தியதற்குக் காரணம் திரு ஆறுமுகம், திரு என். எஸ். ஹீரா ஆகியோர் நான் தங்கு வதற்குச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்ததையே யாகும்.

477. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர் திரு. ஆறுமுகத்தைப் பற்றி நான் சொல்லவில்லை யானால் நான் என்னுடைய கடமையிலிருந்து தவறியவனாவேன். நான் திருநெல்வேலி செல் லும் போதெல்லாம் என்னைக் கவனித்து என் னுடைய உணவிற்குச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தார். வீட்டிற்குத் திரும்பும்போது (இரவு வெகுநேரம் கழித்து) திரு ஆறுமுகம் ஆய்வு மாளிகைக்கு வந்து எனக்குச் செய்த வசதிகள், உணவு முதலியவை பற்றி விசாரித்தார். அவர் எனனிடம் காட்டிய அன்புக்கும் பாசத் திற்கும் நான் நன்றி உடையவனாக இருக் கிறேன்.

478. திருநெல்வேலியில் வசதியாக நாங்கள் தங்குவதிற்கு ஏற்பாடுகள் செய்த வரவேற்புத் துணை வட்டாட்சியர் திரு பூர்ணலிங்கத்திற்கும் என்னு டைய நன்றி உரியதாகும். குறிப்பாக குறுகிய கால அளவிற்குள் எனக்கும் என்னுடைய பணி யாளர்களுக்கும் பயணச்சிட்டுக்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்வதற்கும் திரு பூர்ணலிங்கம் செய்த பேருதவியை நான் குறிப்பிடவேண்டும்.

479. காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு ஹரிஹரன், ஐ.பி.எஸ்., அவர் களுக்கும், திருநெல்வேலி மாவட்ட காவல்துறை களுக்கும், திருவாளர் திரு ரஞ்சித் சிங் ஐ.பி.எஸ்., அவர் களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய கமிஷன் பணி தொடர்பாக அவர்களிடமிருந்து பெரும் உதவியை நான் பெற்றேன். சில சமயங்களில் டெபுடி இன்ஸ்பெக்டர் - ஜெனரல் திரு ஹரி ஹரனே, ஐ.பி.எஸ். அவர்களுடனும், காவல் துறை சூப்பிரண்டு திரு ரஞ்சித் சிங் ஐ.பி.எஸ். அவர்களுடனும் நான் விவாதித்தேன். அவர்கள் பயனுள்ள சிறந்த கருத்துக்களைத் தெரிவித்த னர். அப்போது காவல்துறை சூப்பிரண்டாக இருந்த திரு ராஜகோபாலன், ஐ.பி.எஸ். அவர்கள் ஆற்றிய திறமையான புலன்விசார ணைப் பணியைப் பற்றி இந்த வழக்கின் தருதி பற்றி விவாதித்தபோது நான் ஏற்கெனவே பாராட்டியுள்ளேன். அதை இங்கே மீண்டும் குறிப்பிட வேண்டியதில்லை.

480. நான் விசாரணையை நடத்தும்போது மிகவும் உதவிபுரிந்த சிறப்புப் பிரிவு இன்ஸ் பெக்டர் திரு எஸ். ஜெராமசாமிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் ராமத்தேருக்குச் சென்றபோது அவர் என்னுடன் வந்த ஒருசில நேரத்தைத் தவிர கமிஷனின் எல்லா விசாரணையிலும் அவர் கலந்து கொண்டார். காவல்துறைக் கோப்புகளிலும் ஆவணங்களிலும், காவல்துறை விசாரணையிலும் ஜெயப்பாடு எழும்போதெல்லாம் நான் திரு எஸ். ஜெராமசாமியைக் கலந்து பேசினேன். அவரிட மிருந்து உடனடியான பயனுள்ள உதவி எனக்குக் கிடைத்தது.

481. வழக்கறிஞர்கள், மன்ற உறுப்பினர்கள், அனைத்துத் தரப்பினருக்கும் ஆஜரான வழக் குரைஞர்கள் ஆகியோர் ஒவ்வொருவரிடமிருந்தும் நான் பெற்ற நல்லுதவிகளும் ஒத்துழைப்புக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வழக்குரைஞர் திரு பெரியநாயகம் அரசுக்கும் காவல்துறையினருக்கும் வாதாடினார். சிறந்த உதவியை அவர் எனக்கு நல்கினார். கமிஷனின் விசாரணை எல்லாவற்றிற்கும் திரு. பெரிய நாயகம் வந்திருந்தார். கமிஷன் பார்வையிடச் சென்ற போது கூடவே வந்திருந்தார்.

482. கமிஷனுக்கு உதவுவதற்காக வழக்குரைஞர் திரு. ஜான் பொன்னையா வந்திருந்தார். கமிஷன் விசாரணையை நடத்தியபோது அவர் துணை நின்றார்.

483. வழக்கை விரிவாகவும் முழுமையாகவும் தயாரித்ததற்காகவும், முழுமையான நுணுக்கி குறுக்கு விசாரணைக்காகவும் வழக்குரைஞர் திரு. வெங்கடாசாரிக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சாட்சியத்தை அறிவார்ந்த முறை யிலும் பயனுள்ள முறையிலும் ஆராய்ந்ததற்காகவும் விரிவாக வாதிட்டதற்காகவும் திரு சாரியிடமிருந்து நான் பயன் பெற்றேன்.

484. விசாரணையின் ஆரம்ப நிலையில் சில நாட்கள் வழக்குரைஞர் திரு கார்த்திசன் வாதாடினார். அவருடைய தன்னடக்கம், அறி வார்ந்த குறுக்கு விசாரணை ஆகியவை பற்றி நான் பெரிதும் பெருமை அடைகிறேன். வழக் கறிஞர்கள் மன்றத்தின் தலைவர் என்ற வகையில் அவர் பெற்றவரும் புகழுக்கு அவர் முற்றிலும் தகுதியுடையவர் ஆவார்.

485. திரு சாரி விசாரணைக்கு வராத போதெல்லாம் அவருடைய உதவியாளர்கள் திரு வாளர்கள் இராஜேந்திரன், முத்துகிருஷ்ணன் ஆகியோர் எனக்கு உதவி செய்தவர். அவர்களிட மிருந்து நான் பயன் பெற்றேன்.

486. ஆதி திராவிடர்களுக்காக வாதாடிய வழக்குரைஞர் திரு அசோக் குமார் பற்றி சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். வழக்குரைஞராகப் பணியாற்றத் தொடங்கிய குறுகிய கால அளவிலேயே அதிக ஊதியம் பெறும் அளவிற்கு அவர் புகழ் அடைந்துள்ளார். வழக்கின் விவரங்களைப் பற்றி அவர் மிக நன்றாக அறிந்துள்ளார். அவருடைய தன்னடக்கமான அறிவுக் கூர்மையான பயனுள்ள குறுக்கு விசாரணை முறையை நான் பாராட்டுகிறேன். வழக்குரைஞர் திரு அசோக் குமார் மனதைக் கவரும் நடத்தை கொண்டவர். தன்னுடைய வாதங்களை நீதிமன்றத்தில் பணிவோடு சொல்லக் கூடியவர். தன்னுடைய வாதத்தை ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் சொல்லக்கூடியவர். திரு அசோக் குமாரின் அறிவுக்கூர்மை மிக உயரியது. அவருடைய வாதங்கள் தெளிவாகும் கருத்துக்களை மட்டும் குறிப்பாக விளக்குவதாகவும் உள்ளன. அவருடைய தோற்றமும், நடத்தையும் எடுப்பாகவும் கம்பீரமாகவும் அமைந்திருந்தன. அவர் ஏற்கெனவே இந்த முறையில் வழக்காடி வருகிறார். வழக்காடிகள் மன்றத்தின் சிறப்பான வழக்காடியாக விரைவில் ஆகிவிடுவார் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

487. வழக்குரைஞர் திரு டேவிட், வழக்குரைஞர் திரு மோசஸ் கனகசபை ஆகியோர் அளித்த உதவிக்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். திரு அசோக் குமார் விசாரணைக்கு வராதபோது வழக்குரைஞர் திரு மோசஸ் கனகசபை சில சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்தார். நியாக மனப்பான்மை, கடமைப் பற்றுறுதி, ஆகியவற்றுடன் ஆதரவற்ற ஆதி திராவிடர்களுக்குப் பாதுகாப்பு, உதவி செய்யும் காரியத்திற்காகவே வழக்குரைஞர் திரு டேவிட் விசாரணைக்காக வேலூரிலிருந்து வந்ததற்கு நான் நன்றி பாராட்டுகிறேன்.

488. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் ஒட்நரராகப் பணியாற்றும் திரு கிருஷ்ணன், எப்போதும் சிரித்த முகத்துடன் ஆற்றிய பணியை நான் குறிப்பிட வேண்டும். குறிப்பாக நள்ளிரவு 12.00 மணிக்கு மருத்துவர் ஒருவரை அழைத்து வர வேண்டிய அவசியம் ஏற்பட்ட போது கூட, திரு கிருஷ்ணன் முகம் சுளிக்காமல் பணியாற்றினார்.

489. விசாரணை முழுவதற்கும் என்னுடன் இருந்து பணியாற்ற சுருக்கெழுத்து தட்டச்சரான திரு டி. மனோகரனை அனுப்பிவைத்ததற்காகச் சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளருக்கும், சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தின் முன்னாள் முதன்மை நீதிபதி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

490. தலைமைச் செயலகம், பொதுத்துறை (சட்டம்-ஒழுங்கு-ஏ) அரசு இணைச் செயலாளர் திரு கிருபாகரன் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும் என் நன்றி உரியதாகும். கமிஷனின் பணித் தொடர்பாக சில சமயம் நான் அவரிடம் பேசினேன். என்னுடைய எல்லாக் கோரிக்கைகளையும் கால தாமதமின்றி உடனடியாக அவர் நிறைவேற்றினார் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

491. என்னுடைய பணியாளர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வேன்.

492. தனி நபர் கமிஷனாக என்னுடைய விசாரணையை நடத்தியபோது செயலாளர் திரு ஒ. ஒவ்ரெட்டி அவர்கள் என்னுடன் ஒத்துழைத்துப் பெருதவி செய்தார் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். சுறுசுறுப்பு உள்ளவராகவும் அறிவுக் கூர்மையுடையவராகவும் அவர் திகழ்ந்தார். திருநெல்வேலிக்கு நான் சென்றபோது கமிஷனின் விசாரணையில் பகல் முழுவதிலும், ஆய்வு மாளிகையில் காலையிலும், மாலையிலும் அவர் பணியாற்றினார். என்னுடைய வரைவு அறிக்கையில் கண்ட தவறுகளை அவர் சரிசெய்தார். இது குறித்து அவர் ஆற்றிய சிறப்பு மிக்க பணியை நான் பாராட்டுகிறேன். பல்வேறு தவறுகள், இலக்கண, எழுத்துப்பிழைகளை அவர் கட்டிக்காட்டினார். அவ்வப்போது அவை சரி செய்யப்பட்டன. அவருக்கு நான் நன்றி கூறுகிறேன். திருநெல்வேலிக்கு போகும்போதும் திருநெல்வேலியிலிருந்து திரும்பும்போதும் மகிழ்ச்சியாக அளவளாவிக் கொண்டு என்னோடு அவர் உடன் வந்ததை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

493. என்னுடைய நேர்முக உதவியாளர் திரு சி. என். நீலகண்டன் செய்த உதவியை நான் நன்றியோடு பாராட்டுகிறேன். அவருடைய பணி மிக உயர்ந்தது. அவர்தான் இந்தக் குழு முழுவதற்கும் உயிர் காட்டளைப்பிட்டு பணியாற்றினார். திருநெல்வேலிக்குப் பயணம் செய்வதற்கும் அங்குத் தங்கியிருப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகளை அவரே கவனித்துக்கொண்டார். அதேபோல ஏனைய பணியாளர்களின் வசதிகளையும் அவர் கவனித்துக் கொண்டார். திரு நீலகண்டன் சுமுகமானவர். அவருடைய முயற்சியும் ஊக்கமும் குறிப்பிடத்தக்கவை. அவர் இடைவிடாது உழைக்கவில்லையென்றால் இக் கமிஷன் விசாரணையை 1982 ஏப்ரல் மாத இடைநிலையில் முடித்திருக்க முடியாது.

494. எல்லாவற்றிலும் எனக்கு உதவிபுரித்து என்னுடைய கமிஷன் பணியை எளிதாக முடிப்பதற்கு உதவி செய்த தேர்வுநிலை உதவியாளர் திரு கிருஷ்ணமூர்த்திக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர், முழுமன தோடு இப்பணியைச் செய்பவர். எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் விளங்குபவர். பணியாளர்கள் அனைவரும் எங்களோடு ஒத்துழைத்து செவ்வனே பணியாற்றியதற்கு இவரே முக்கிய பொறுப்பாவார். அவர், அறிவுக்கூர்மை படைத்த அதிகாரி என்று குறிப்பிட விரும்புகிறேன். திருநெல்வேலிக்குப் போகும்போதும், திருநெல்வேலியிலிருந்து திரும்பும்போதும் அவர் மகிழ்ச்சியாக அளவளாவிக்கொண்டு உடன் வந்து என்னுடைய வசதிகளைக் கவனித்துக்கொண்டார்.

495. நீதிமன்ற அதிகாரி திரு வி. சுப்பிரமணியன் ஆற்றிய நிறைவான பணியை நான் இங்கு குறிப்பிடவில்லையானால் நான் கடமை தவறியவனாவேன். நீதிமன்ற ஆவணம் அதிக பக்கங்களைக் கொண்டதாக இருக்கிறது. 900 பக்கங்களுக்கு மேற்பட்டு சாட்சியம் உள்ளது. 250க்கும் மேற்பட்டு ஆவணச் சாட்சியம் உள்ளது. அதிருஷ்ட வசமாக அவர் நீதிபதி திரு கே. எஸ். வெங்கடாரமன் கமிஷனில் பணியாற்றியுள்ளார். எனவே, அவர் பணியை எளிதாகப் புரிந்துகொண்டார். நீதிமன்ற எழுத்தராக அவர் எனக்கு உதவியதை நான் குறிப்பிட்டாக வேண்டும். நான் நீதிபதியாக இருந்த போது சென்னை உயர் நீதிமன்றத்தின் பெஞ்சுகளிராக்குகள் பலரிடமிருந்து உதவி பெற்றது போலவே, இவரிடமிருந்தும் உதவி பெற்றேன். நான் இந்த அறிக்கையைச் சொல்லும்போது

திரு வி. சுப்பிரமணியத்திடமிருந்து பெற்ற குறிப்பிடத்தக்க உதவியைச் சுட்ட விரும்பு கிறேன். சாட்சியங்களும், சான்றாவணங்களும் எந்த எந்தப் பக்கங்களில் வருகின்றன என்பதை அவர் நன்கு நினைவில் வைத்துக்கொண்டிருந் தார். அதனால் நான் இந்த அறிக்கையை மிகக் குறுகிய காலத்திற்குள் தயாரித்தேன். திரு சுப்பிரமணியத்திடமிருந்து கிடைத்த இந்த மகத்தான உதவியே அறிக்கையை நான் தயாரிப்பதற்குப் பேருதவியாக அமைந்தது.

496. சுருக்கெழுத்துத் தட்டச்சரான திரு பி. சுப்பிரமணியன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரும் திறமையாகப் பணியாற்றினார்.

497. இறுதியாகச் சுருக்கெழுத்துத் தட்டச்ச ரான திரு. டி. மனோகரன் ஆற்றிய திறமை மிக்க பணியையும், சுருக்கெழுத்துத் தட்டச்ச ரான அவரிடமிருந்து நான் பெற்ற உதவியையும் குறிப்பிடவேண்டும். என்னிடம் பணியாற்றிய தனால் அவர் மிகவும் வேகமாகக் குறிப்பெழுதிக் கொண்டார். மிகத்திறமையான சுருக்கெழுத்துத் தட்டச்சர் என்ற நிலையை அவர் அடைந்து விட்டார் என்று குறிப்பதில் நான் மகிழ்ச்சி யடைகிறேன். சென்னை உயர் நீதிமன்றத்தில் அவர் சுருக்கெழுத்துத் தட்டச்சராகச் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்பது என் கருத்து. அவர் எல்லா நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறேன். அவர் முழு மனத் தோடும், மலர்ந்த முகத்துடனும் ஒத்துழைத் தார். நான் விரும்பிய போது காலையிலும், பிற்பகலிலும், மாலையிலும் என்னுடைய வீட் டிற்கு அவர் வந்து பணியாற்றினார்.

நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி,
விசாரணைக் கமிஷன்.

தமிழ்நாடு TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY மன்றம்
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

©
தமிழ் நாடு அரசு
1982



சுருக்கம்.

சட்டம், ஒழுங்கு—திருநெல்வேலி மாவட்டம்—நாங்குனேரி வட்டம்—சங்கனாங்குளம் கிராமம்—1980ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் 17 ஆதி திராவிடப் பெண்களைக் கற்பழித்ததாகவும், திரு. மணியைக் கொலை செய்ததாகவும் சொல்லப்படும் குற்றச்சாட்டு—விசாரணைக் கமிஷன் சட்டத்தின் கீழ் விசாரணை—ஆணையிடப்படுகிறது.

பொதுத் (சட்டம்-ஒழுங்கு—ஏ) துறை.

———

அரசு ஆணை எண். 2730, நாள் 11—12—1980.

ஆணை:

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், சங்கனாங்குளம் கிராமத்தில் 1980ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் 17 ஆதி திராவிடப் பெண்களைக் கற்பழித்ததாகவும், திரு. மணியைக் கொலை செய்ததாகவும் கூறப்படும் குற்றச்சாட்டுகளில், கற்பழித்தல், கொலை தொடர்பான இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து உயர்நீதிமன்ற நீதிபதி பதவித்தரத்தில் நீதித்துறை அதிகாரி ஒருவரால் விசாரிக்கப்பட வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. அவ்வண்ணமே மேற்சொன்ன குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க சென்னை உயர்நீதிமன்றத்தின் ஒய்வு பெற்ற நீதிபதியான திரு கே. எஸ். ராமமூர்த்தியை 1952 ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 60/1952) விசாரணைக் கமிஷனாக நியமித்துள்ளது.

2. பின்வரும் அறிவிக்கை 12—12—1980ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்படும்.

அறிவிக்கை.

இதன்பின்னர் குறிப்பிடப்படக்கூடிய பொது முதன்மை வாய்ந்த ஒரு பொருள் குறித்து விசாரணை செய்வதற்கு விசாரணைக் கமிஷனை நியமிக்க வேண்டியது அவசியமென்று தமிழ்நாடு அரசு கருதுவதாலும்;

எனவே, 1952ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களால், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், சென்னை, உயர் நீதிமன்றத்தின் ஒய்வு பெற்ற நீதிபதியான திரு. கே. எஸ். ராமமூர்த்தியை ஒரு நபர் கமிஷனாகக் கொண்டு விசாரணைக் கமிஷனை இதனால் நியமித்துள்ளார்.

2. கமிஷனின் ஆய்வு வரம்புகள் பின்வருமாறு இருக்கும்.

அவையாவன:—

(i) திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், சங்கனாங்குளம் கிராமத்தில் 1980 ஏப்ரல், மே மாதங்களில் சில ஆதி திராவிடப் பெண்களைக் கற்பழித்ததாகவும் மணி என்பவரைக் கொலை செய்ததாகவும் சொல்லப்படும் சம்பவங்கள் குறித்து விசாரித்து தெரிவித்தல்:

(ii) இக்குற்றச்சாட்டுகளில் உண்மை எதுவும் உள்ளதா என்று கண்டறிதல்; ஆம் எனில், இந்த நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பான குற்றவாளிகளைக் கண்டுபிடித்தல்;

(iii) இனிமேல், இத்தகைய நிகழ்ச்சிகள் நிகழாவண்ணம் தடுக்கத் தக்க நடவடிக்கைகளைப் பரிவுரை செய்தல்.

3. கமிஷன் தனது விசாரணையை முடித்து இந்த அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் மாநில அரசுக்கு அறிக்கையை அனுப்பும்.

4. கமிஷன் விசாரிக்க வேண்டிய விசாரணையின் தன்மையையும் வழக்கின் ஏனைய சூழ் நிலைகளையும் கருத்திற்கொண்டு, 1952 ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 5 ஆம் பிரிவைச்சேர்ந்த (2),(3),(4),(5) உட்பிரிவுகளின் விதித் துறைகள் கமிஷனுக்குப் பொருந்தவேண்டும் என்று தமிழ்நாடு அரசு கருதுவதால், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களால், அப்பிரிவைச் சேர்ந்த (2), (3), (4), (5), உட்பிரிவுகளின் விதித்துறைகள் அனைத்தும் கமிஷனுக்குப் பொருந்தவேண்டும் என்று இதனால் கட்டளையிடுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

வி. கார்த்திகேயன்,
அரசுத் தலைமைச் செயலாளர்.

பெறுநர்:

இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை-2. (12—12—80 நாளிட்ட தமிழ் நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் அறிவிக்கை வெளியிடுவதற்காக).

நீதிபதி திரு கே. எஸ். இராமமூர்த்தி, எண். 7, ஆலிவர் ரோடு, சென்னை-4.

பொதுத் (செய்தி-மக்கள் தொடர்பு) துறை, சென்னை-9 (பத்திரிகைச் செய்தி வெளியிடுவதற்காக).

காவல்துறை டைரக்டர்-ஜெனரல், சென்னை-4.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி.

நகல் பெறுவோர்:

காவல்துறை சூப்பிரண்டு, திருநெல்வேலி.

உள்துறை, சென்னை-9.

சட்டத்துறை, சென்னை-9.

பொதுத் (சிறப்பு-அ) துறை, சென்னை-9.

பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை-1.

இந்திய அரசுச் செயலாளர், உள் விவகார அமைச்சகம், புதுடில்லி.

இந்திய அரசுச் செயலாளர், சட்டம், நீதி, கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம், புதுடில்லி.

முதலமைச்சரின் செயலாளர், சென்னை-9.


(உண்மை நகல்)

(ஒ.ம்.) செயலாளர்,
நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி
விசாரணைக் கமிஷன்.


இணைப்பு II.

மரபுவழிப்பட்டியல்

முத்தையா, ராஜூ
(சகோதரர்கள்)



இணைப்பு III



1 ஆறுமுகம், த/பெ. முத்தையா தேவர், ஒட்டு வீடு.

2 வெள்ளையம்மாள், மே/பா. சுப்பையா தேவர், ஒட்டு வீடு.

3 சுப்பையா தேவர், த/பெ. வெள்ளையத் தேவர், ஒட்டு வீடு.

4 சேது, த/பெ. சுப்பையா தேவர், பனை ஓலை வேயப்பட்ட வீடு.

5 முத்தையா, த/பெ. மாடசாமி.

5A சுப்பம்மாள், க/பெ. மாடசாமி, ஒட்டு வீடு.

6 சண்முகராஜா, த/பெ. மாடசாமித் தேவர்.

7 மாடசாமி, த/பெ. சிவசுப்பிரமணியத் தேவர், கரை வீடு.

8 கந்தையா தேவர், த/பெ. ஆறுமுகத் தேவர், மொட்டை மாடி வீடு.

9 பூலோக பாண்டித் தேவர், த/பெ. ஆறுமுகத் தேவர், மொட்டை மாடி வீடு.

10 கோபால், த/பெ. திருமலைக் கொழுந்து தேவர், ஒட்டு வீடு.

11 காசி, த/பெ. ஆறுமுகத் தேவர்.

12 சந்திர சேகரன் (சங்கரனின் சகோதரர்), த/பெ. சிவசுப்பிரமணியத் தேவர்.

13 குமாரசாமி தேவர் (நீலகண்டத் தேவரின் தந்தை த/பெ. ஆறுமுகத் தேவர், ஒட்டு வீடு.

14 ஆறுமுகம், த/பெ. குமாரசாமித் தேவர்.

15 கோபால், டீக்கடை.

16 செந்தூர்பாண்டியன், த/பெ. திருமலை கொழுந்து தேவர்.

17 சுடலைக் கண்ணுத் தேவர்.

17A சுப்பையாத் தேவர், த/பெ. சுப்பையா தேவர்.

18 சண்முக சுந்தர தேவர், த/பெ. சங்கர பாண்டித் தேவர்.

19 தனுஷ்கோடி, த/பெ. அங்கமுத்துத் தேவர், ஒட்டு வீடு.

20 வெள்ளைத்தாய், க/பெ. சுப்பிரமணிய தேவர்.

21 மாடசாமித் தேவர், த/பெ. வேதமுத்து தேவர்.

22 என். டி. நடராஜ தேவர்.

23 என். டி. சுப்பையா தேவர், த/பெ. தாணுத் தேவர், தளம் போட்ட ஒட்டு வீடு.

24 எம்.டி. பூலோகப் பாண்டியத் தேவர், த/பெ. தாணுத் தேவர்.

25 முத்தையா, த/பெ. சுடலைமுத்து தேவர்.

26 ஆனந்த பெருமாள் தேவர்.

27 இராமையா தேவர், த/பெ. சித்ரகனித் தேவர்.

28 சங்கரத் தேவர், த/பெ. சிவசுப்பிரமணியத் தேவர்.

A இராமையா தேவர், த/பெ. பூஜித் தேவர்.

B குமாரசாமி தேவர், த/பெ. பரமுத் தேவர்.

C & D பரமவத் தேவர், ஒட்டு வீடு.

E குமாரசாமி, த/பெ. சுப்பையா தேவர்.

F பிச்சையா தேவர், த/பெ. சுப்பிரமணிய தேவர்.

G மாடசாமித் தேவர், த/பெ. சண்முகத் தேவர்.

H இளங்கோவன், த/பெ. பூலோகத் தேவர்.

I சித்திரத் தேவர், த/பெ. ஆறுமுகத் தேவர்.

J சண்முகசுந்தரம், த/பெ. முத்தையா தேவர்.

K சுப்புதாயம்மாள், த/பெ. இராமையா தேவர்.

L கந்தையா தேவர், த/பெ. சுப்புத் தேவர்.


M வெள்ளத்தாய், க/பெ. வெள்ளையத் தேவர்.

கமிஷனின் உத்தரவுகளுக்கேற்ப தயாரிக்கப்பட்டது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு IV.

சிவசுப்பிரமணிய தேவர், ஆறுமுகத் தேவர் (சகோதரர்கள்)



106-7—20

இணைப்பு V.

குறிப்பு எண். —ஜி.3/29711-பி/80—சான்றாவணம் எண். ஜி. 25, தாக்கல் செய்யப்பட்ட நாள் 8—12—1981, தாக்கல் செய்தவர் ஜி. டபிள்யு 8.

அனுப்பப்படுகிறது—

விசாரணை அறிக்கை கீழே உள்ளவாறு அனுப்பப்படுகிறது.

1. மனுதாரர்—மசானம் (புனைபெயர்)

2. எதிர் மனுதாரர்—சங்கனாங்குளத்தைச் சேர்ந்த வாலிபால் மாடசாமி.

3. மனுவில் கண்டுள்ள விவரங்கள் :—(1) தனது மைத்துனர் திருநெல்வேலி ஒழுக்கக் கண காணிப்பு-இலஞ்ச ஒழிப்பு காவல்துறை இன்ஸ் பெக்டர் திரு. இராமகிருஷ்ணத் தேவரின் உதவியுடன் எதிர்மனுதாரர் உள்ளூர்க் காவல் துறைப் பணியாளர்களை மோசமாக நடத்துகிறார்.

(2) 15—2—1980 அன்று செல்லையாத் தேவர் என்பவர் கொலை செய்யப்பட்டார் ; தகவல்களை மாற்றியமைக்க வழக்கின் புலன் விசாரணையில் எதிர் மனுதரர் குறுக்கிடுகிறார்.

(4) விசாரித்தவர்—காவல்துறை உதவி சூப்பிரண்டு, வள்ளியூர்.

(5) எப்பொழுது விசாரிக்கப்பட்டது என்பது—5—8—1980 அன்று சங்கனாங்குளத்திலும், திசையன்விளையிலும்.

(6) விசாரணை அறிக்கை.—15—2—1980 அன்று குமாரபுரத்திற்கும் மகாதேவன் குளத்திற்கு மிடையே கொலை ஒன்று செய்யப்பட்டது. இதில் குமாரபுரத்தைச் சேர்ந்த செல்லையாத் தேவர் என்பவர் குற்றம் சாட்டப்பட்ட ஆறுபேரால் கொலை செய்யப்பட்டார். குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் நீதிமன்றத்தில் சரணடைந்தனர். முறையான விசாரணைக்குப் பின்னர் 22—4—1980 அன்று இந்த வழக்கில் குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்யப்படுகிறது. சங்கனாங்குளத்தைச் சேர்ந்த வாலிபால் மாடசாமியும் அவரது சகோதரர் சங்கரனும் அந்தப் பகுதியில் சமூக விரோதிகள் என்பதும், அவர்களுக்கு அப்பகுதியில் சாதிப்பற்றும், ஆள்பலமும் இருப்பதால் அவர்கள் செல்வாக்கு உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதும் உண்மை. தவிர, அவர்களுடைய மைத்துனர் திருநெல்வேலியில் ஒழுக்கக் கண காணிப்பு-இலஞ்ச ஒழிப்பு இன்ஸ்பெக்டராக இருப்பதால் தாங்கள் செல்வாக்கு மிக்கவர்களாக இருப்பதாகக் கருதினார்கள். விஜயநாராயணம் காவல் நிலையம், நிசையன்விளைக் காவல் நிலையம் ஆகியவற்றின் பணிகளில் அவர்கள் அடிக்கடி குறுக் கிட்டனர். இதுபோன்ற மொட்டையான புனை பெயரில் எழுதப்பட்ட மனுதான் அவர்களுக்கு எதிராக வரும். அவர்களுடைய அக்கிரமத்திற்கு அஞ்சி நேரடி சாட்சியம் அளிக்க எவரும் வர மாட்டார்கள். அப்பகுதியில் இவர்கள் கள்ளச் சாராயம் விற்பனை செய்பவர்களாக நம்பப் படுகின்றார்கள்.

(7) விசாரணையின் முடிவு.—மனுதாரர் புனை பெயரில் உள்ள ஒருவராவார் ; நேரடி சாட்சியம் எதுவும் அவரிடமிருந்து வரவில்லை. இசையன் விளையில் விசாரணை செய்யப்பட்டபோது, வாலிபால் மாடசாமியும் சங்கரனும் புலன் விசாரணையில் தலையிட முயற்சி செய்தனர். ஆனால், அவர்களுக்கு உரியவாறு எச்சரிக்கை செய்யப்பட்டது என்பது புலப்படுகிறது. இந்த வழக்கு குறித்து ஏற்கெனவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(8) ஏற்கெனவே எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை :

இந்த வழக்கு குறித்து ஏற்கெனவே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் யாரும் தலையிட்டதாகச் சொல்லமுடியாது. சங்கனாங்குளத்தைச் சேர்ந்த வாலிபால் மாட சாமியும் அவருடைய சகோதரர் சங்கரனும் சமூக விரோதிகள் என்பதும், அவர்கள் தங்களுடைய சாதி அதிகாரம், பணபலம், குண்டர்கள் பலம் ஆகியவற்றின் மூலம் அப்பகுதி மக்களை அடக்க முயற்சி செய்கின்றனர் என்பதும் உண்மை. காவல் துறைப் பணியில் அவர்கள் அடிக்கடி குறுக்கிட முயற்சித்தனர். மேலும், மாவட்டத்தில் அவர் களுடைய மைத்துனர் காவல்துறை அதிகாரியாக இருப்பது அவர்களுடைய சமூக விரோத நடவடிக் கைகளைத் தொடருவதற்கு பக்க பலமாக அமைந்துள்ளது. சங்கனாங்குளம் பகுதியில் சகஜமான நிலைமை உருவாக்குவதற்கு அவர் களுடைய மைத்துனர் திருநெல்வேலியிலிருந்து மாற்றப்படுவதே விரும்பத்தக்கது.

(ஒ.ம.) காவல்துறை உதவி சூப்பிரண்டு, வள்ளியூர்.

(உண்மை நகல்)

செயலாளர்,

நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி விசாரணை கமிஷன்.

இணைப்பு VI

சாட்சிகளின் பட்டியல்.

அட்டவணை.

அரசுத் தரப்பு சாட்சிகள்.

சாட்சி எண். (1)	சாட்சிகளின் பெயர். (2)	சாட்சி எண். (1)	சாட்சிகளின் பெயர். (2)
அரசுத் தரப்பு சாட்சி 1	ஆர். இராஜசெல்வம்.	அ.த.சா. 15	கே. முருகன்.
		அ.த.சா. 16	எஸ். ஆறுமுகம்.
அ.த.சா. 2	ஜெபமணி.	அ.த.சா. 17	தேவதாஸ்.
அ.த.சா. 3	பி. காசி.	அ.த.சா. 18	எம். செல்வராஜ்
அ.த.சா. 4	பி. இராஜசிங்.	அ.த.சா. 19	கே. நீலகண்டன்.
அ.த.சா. 5	ஏ. ஸ்டாலின்.	அ.த.சா. 20	டி. ஏ. கே. செல்லத்துரை.
அ.த.சா. 6	அம்மாமுத்து.	அ.த.சா. 21	பூலோகபாண்டியத் தேவர்.
அ.த.சா. 7	பிரேமா.	அ.த.சா. 22	மைக்கேல் அம்மாள்.
அ.த.சா. 8	வசந்தி.	அ.த.சா. 23	பூர்ணம்மாள்.
அ.த.சா. 9	மஞ்சுளா,	அ.த.சா. 24	ஏ. காசி பாண்டியன்.
அ.த.சா. 10	வசந்தா.	அ.த.சா. 25	டி. ஏ. குமாரசாமித் தேவர்.
அ.த.சா. 11	புஷ்பம்.	அ.த.சா. 26	வேணுகோபால்.
அ.த.சா. 12	கிரேஸ்.	அ.த.சா. 27	நம்பியம்மாள்.
அ.த.சா. 13	எம். ஜான் வின்சென்ட்.	அ.த.சா. 28	அந்தோணியம்மாள்.
அ.த.சா. 14	ஆர். செல்லையா.		

எதிர் மனுதாரர் சாட்சிகள்.

எதிர் மனுதாரர் சாட்சி 1	முத்தம்மாள்.	எ.ம.சா. 8	ஏ. மந்தையாத் தேவர்.
		எ.ம.சா. 9	எஸ். மாடசாமி (நாவிதர்).
எ.ம.சா. 2	நல்லையா.	எ.ம.சா. 10	வி. பெரியசாமி.
எ.ம.சா. 3	கணேச சுப்பிரமணியன் (வருவாய்த்துறை ஆய்வாளர்).	எ.ம.சா. 11	வி. சண்முகசுந்தரம்.
		எ.ம.சா. 12.	எஸ். இராமச்சந்திரன் (கிராம முன்சீப்).
எ.ம.சா. 4	மானுவேல் என்கிற மசானம்.		
எ.ம.சா. 5	எம். மருது பாண்டியன்.	எ.ம.சா. 13.	எஸ். சங்கரன்.
எ.ம.சா. 6	எஸ். முத்தையா.	எ.ம.சா. 14	எஸ். மாடசாமித்தேவர்(வாலிபால்)
எ.ம.சா. 7	கண்ணம்மாள்.		

அரசு சாட்சிகள்,

அரசுச் சாட்சி 1	சுடலைக்கண்ணு.	அ.சா. 7	பி. இருவேங்கிடம் (கோட்டாட்சியர்).
அ.சா. 2	ஏ. கே. கிருஷ்ணசாமி (சப்-இன்ஸ்பெக்டர்).	அ.சா. 8	கே. என். வி. ஆர், எம். கோபால கிருஷ்ணா, ஐ.பி.எஸ். (காவல்துறை உதவி சூப்பிரண்டு)
அ.சா. 3	டாக்டர் கௌசல்யா கேசவன் (மருத்துவ அதிகாரி).	அ.சா. 9	டி.எம். ஆறுமுகம். ஐ.ஏ. எஸ். (மாவட்ட ஆட்சித் தலைவர்).
அ.சா. 4	டாக்டர் கோபாலகிருஷ்ணன் (மருத்துவ அதிகாரி).	அ.சா. 10	ஆர். இராஜகோபாலன், ஐ.பி.எஸ். (காவல் துறை சூப்பிரண்டு).
அ.சா. 5	பி. விசுவநாதன் (வட்டாட்சியர்).		
அ.சா. 6	எம். அருணாசலம் (காவல் துறை இன்ஸ்பெக்டர்).		

(உண்மை நகல்)

(ஒ.ம்.) செயலாளர்,

நீதிபதி.கே. எஸ். இராமமூர்த்தி,
விசாரணைக் கமிஷன்.

இணைப்பு VII.

சான்றாவணங்களின் அட்டவணை.

நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி விசாரணைக் கமிஷன், சென்னை.

சான்றாவணத்தின் தொடர் எண். (1)	சான்றாவணத்தின் விவரமும் நாளும். (2)	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது. (3)	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது. (4)	யாரால் தாக்கல் செய்யப் பட்டது. (5)
ஏ. 1	விசாரணைக் கமிஷன் முன் இராஜ செல்வம் அளித்த உறுதிமொழிப் பத்திரம்.	31—3—81	அ.த.	அ.த.சா. 1
ஏ. 2	விஜயநாராயணம் வருவாய்த் துறை ஆய்வாளரின் அறிக்கை.	1—4—81	அ.த.	அனைவரின் இசைவுடன்.
ஏ. 3	விசாரணைக் கமிஷன் முன் ஜெபமணி அளித்த உறுதிமொழிப்பத்திரம்.	27—4—81	அ.த.	அ.த.சா. 2
ஏ. 4	ஜெபமணியின் கணவரை மருத்துவமனையிலிருந்து விட்டிற்கு அனுப்பப்படும்போது கொடுக்கப்பட்ட சான்றிதழ்.	27—4—81	அ.த.	அ.த.சா. 2
ஏ. 5	(இறந்துவிட்ட) மணியின் பிரேம் போட்ட புகைப்படம்.	27—4—81	அ.த.	அ.த.சா. 2
ஏ. 6	இராஜின் மனைவி ஜெபமணி திசையன்விளை காவல் துறை இன்ஸ்பெக்டர் முன்பு அளித்த 161 வாக்குமூலம்.	28—4—81	அ.த.	அ.த.சா. 2
ஏ. 7	நாங்குனேரி இரண்டாம் வகுப்பு நிர்வாக மாஜிஸ்டிரேட்டின் சவ விசாரணை அறிக்கையில் இராஜசெல்வத்தின் வாக்குமூலம்.	29—4—81	அ.த.	அ.த.சா. 1
ஏ. 7(a)	நாங்குனேரி இரண்டாம் வகுப்பு எக்ஸிகியூடிவ் மாஜிஸ்டிரேட் முன்பு நடத்தப்பட்ட சவ விசாரணை அறிக்கையில் இராஜசெல்வம் கொடுத்த வாக்குமூலத்தில் அவருடைய கையொப்பம்.	29—4—81	அ.த.	அ.த.சா. 1
ஏ. 8	நீதிமன்றத்தில் அ.த.சா. 1 இடமிருந்து வாங்கப்பட்ட (இராஜசெல்வம்) மாதிரிக் கையொப்பம்.	29—4—81	அ.த.	அ.த.சா. 1
ஏ. 9	காவல் துறை சூப்பிரண்டு முன்பு இராஜசெல்வம் அளித்த வாக்குமூலமும் அவருடைய கையொப்பமும்.	29—4—81	அ.த.	அ.த.சா. 1
ஏ. 10	திசையன்விளை காவல் துறை இன்ஸ்பெக்டர் முன்பு இராஜசெல்வம் (அ.த.சா. 1) அளித்த வாக்குமூலத்தில் இராஜசெல்வத்தின் கையொப்பம்.	30—4—81	அ.த.	அ.த.சா. 1
ஏ. 11	திசையன்விளை காவல் நிலைய இன்ஸ்பெக்டர் இராஜசெல்வத்திடமிருந்து பதிவு செய்த 161 வாக்குமூலம்.	30—4—81	அ.த.	அ.த.சா. 1

அ.த.—அரசுத் தரப்பு. அ.த.சா.—அரசுத் தரப்பு சாட்சி.

சான்றாவணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும் நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏ 11(உ)	திசையன்விளை காவல் நிலைய இன்ஸ்பெக்டர் பதிவு செய்த 161 வாக்குமூலத்தின் ஒரு பகுதி.	30—4—1981	அ.த.	அ.த.சா. 1
ஏ 12	இராஜசெல்வம் தொடர்பாக பெண் மருத்துவர் கொடுத்த காயம்பற்றிய சான்றிதழ்.	30—4—1981	அ.த.	அ.த.சா. 1
ஏ 13	திசையன்விளை காவல் நிலைய இன்ஸ்பெக்டர் 378/80 ஆம் குற்ற எண்ணில் பதிவுசெய்த இராஜசெல்வத்தின் வாக்கு மூலத்தில் குறியிடப்பட்ட பகுதி.	30—4—1981	அ.த.	அ.த.சா. 1
ஏ 14	காவல் துறை இன்ஸ்பெக்டர் 360/80 ஆம் குற்ற எண்ணில் பதிவு செய்த இராஜசெல்வத்தின் 161 வாக்குமூலத்தில் குறியிடப்பட்ட பகுதி.	30—4—1981	அ.த.	அ.த.சா. 1
ஏ 15	திசையன்விளை காவல் துறை இன்ஸ்பெக்டர் பதிவு செய்த இராஜசெல்வத்தின் 161 வாக்குமூலத்தில் குறியிடப் பட்ட பகுதி.	30—4—1981	அ.த.	அ.த.சா. 1
ஏ 16	மாண்புமிகு இந்தியப் பிரதம ரிடம் இராஜசெல்வம் கொடுத்த மகஜர்.	30—4—1981	அ.த.	அ.த.சா. 1
ஏ 17	விஜயநாராயணம் சாவடியில் நடைபெறும் கூட்டம் தொடர்பாக சேரன்மாதேவி கோட்டாட்சியர் 6—9—80 அன்று பிறப்பித்த ஏ. 2/14181/80 ஆம் எண். அறிவிப்பு.	2—5—1981	அ.த.	அ.த.சா. 3
ஏ. 18	மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு ஆர். வி. சாமிநாதன் பத்திரிக்கைக்கு அளித்த செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் அ.த.சா. 3 கொடுத்த அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரம்.	2—5—1981	அ.த.	அ.த.சா. 3
ஏ 19	கமிஷன் முன்பு அ.த.சா. 3 காசி கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	2—5—1981	அ.த.	அ.த.சா. 3
ஏ 20	சேரன்மாதேவி கோட்டாட்சியர் முன்பு காசி கொடுத்த மூல வாக்குமூலம்.	18—5—1981	அ.த.	அ.த.சா. 3
ஏ 21	வட்டாட்சியர் முன்பு வி. காசி கொடுத்த வாக்குமூலமும், சவ விசாரணை அறிக்கையில் அவரது கையொப்பமும்.	20—5—1981	அ.த.	அ.த.சா. 3
ஏ 22	விசாரணைக் கமிஷனுக்கு பி. காசி 8—3—81 அன்று அனுப்பிய மனு.	21—5—1981	அ.த.	அ.த.சா. 3

அ.த.=அரசுத் தரப்பு. அ.த.சா.=அரசுத் தரப்பு சாட்சி.

சான்றாவணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏ. 23	காவல்துறை உதவி சூப்பிரண்டு முன்பு செல்லத்துரையின் மனைவி கிரேஸ் கொடுத்த வாக்குமூலத்தில் காசியின் கையொப்பம்.	21—5—1981	அ.த.	அ.த.சா. 3
ஏ. 23(a)	காவல்துறை உதவி சூப்பிரண்டு முன்பு இராஜசெல்வம் கொடுத்த வாக்குமூலத்தில் காசியின் கையொப்பம்.	21—5—1981	அ.த.	அ.த.சா.3
ஏ. 23(b)	காவல்துறை உதவி சூப்பிரண்டு முன்பு காசியின் மனைவி புஷ்பம் கொடுத்த வாக்கு மூலத்தில் காசியின் கையொப் பம்.	21—5—1981	அ.த.	அ.த.சா. 3
ஏ. 23(c)	காவல்துறை உதவி சூப்பிரண்டு முன்பு முத்தையாவின் மகள் மஞ்சுளா கொடுத்த வாக்கு மூலத்தில் காசியின் கையொப்பம்.	21—5—1981	அ.த.	அ.த.சா. 3
ஏ. 24	கோட்டாட்சியர் முன்பு அ.த.சா. 4 கொடுத்த வாக்குமூலமும் அதில் அவருடைய கையொப்பமும்.	22—5—1981	அ.த.	அ.த.சா. 4
ஏ. 25	கமிஷன் முன்பு தாக்கல் செய்யப் பட்ட இராஜசிங்கின் உறுதி மொழிப் பத்திரம்.	22—5—1981	அ.த.	அ.த.சா. 4
ஏ. 26	திசையன்விளை காவல்துறை இன்ஸ்பெக்டர் முன்பு அ.த.சா. 4 மூலமாக குறியிடப்பட்ட காசியின் 161 வாக்குமூலம்.	23—5—1981	அ.த.	அ.த.சா. 4
ஏ. 27	திசையன்விளை காவல்துறை இன்ஸ்பெக்டர் முன்பு இராஜ சிங் அளித்த 161 வாக்குமூலம்.	23—5—1981	அ.த.	அ.த.சா. 4
ஏ. 28	கோட்டாட்சியர் முன்பு ஸ்டாலின் கொடுத்த வாக்கு மூலம்.	4—6—1981	அ.த.	அ.த.சா. 5
ஏ. 29	அ.த.சா. 5 ஸ்டாலின் காவல் துறைக்குக் கொடுத்த புகாரின் நகல்.	4—6—1981	அ.த.	அ.த.சா. 5
ஏ. 30	ஏ. ஸ்டாலின் 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22ஆம் நாளன்று கொடுத்த மனுவின் நகல்.	4—6—1981	அ.த.	அ.த.சா. 5
ஏ. 31	சங்கனாங்குளம் அம்மாமுத்துத் தேவரின் மகன் ஸ்டாலினுக்கு முகவரியிடப்பட்ட 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9ஆம் நாளிட்ட உள்துறையின்45071/ காவல்துறை 14/81-2ஆம் எண் கடிதத்தின் நகல்.	4—6—1981	அ.த.	அ.த.சா. 5
ஏ. 32	திருநெல்வேலி, நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் அ.த.சா. 5க்கு அனுப்பிய குற்றப் பத்திரிகையின் நகல்.	4—6—1981	அ.த.	அ.த.சா. 5

அ.த.=அரசுத் தரப்பு. அ.த.சா.=அரசுத் தரப்பு சாட்சி.

சான்றாவணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏ. 33	திருநெல்வேலி, நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் அ.த.சா. 5க்கு அனுப்பிய குற்றப் பத்திரிகையின் நகல்.	4–6–1981	அ.த.	அ.த.சா. 5
ஏ. 34	ஏ. ஸ்டாலின் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரம்.	4–6–1981	அ.த.	அ.த.சா. 5
ஏ. 35	அ.த.சா. 5, அ. த.சா. 5இன் மனைவி ஆகியோருடைய பெயர்கள் அடங்கிய வாக்காளர் பட்டியலில் இனம் எண் 561 முதல் 564 வரை.	6–6–1981	அ.த.	அ.த.சா. 5
ஏ. 36	அ.த.சா. 5 ஸ்டாலின் கும்பலுக்கு அனுப்பிய 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11ஆம் நாளிட்ட மனு.	6–6–1981	அ.த.	அ.த.சா. 5
ஏ. 37	நாங்குனேரி சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் சங்கனாங்குளம் கிராமத்தின் தொகுதி எண் 5 தொடர்பாக வாக்காளர் பட்டியல் 351 முதல் 357 வரை உள்ள தொடர் எண்கள்.	6–6–1981	அ.த.	அ.த.சா. 5
ஏ. 38	மாண்புமிகு முதலமைச்சருக்கு அ.த.சா. 1 அனுப்பிய மனு.	8–6–1981	அ.த.	அ.த.சா. 1
ஏ. 39	திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பு 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1ஆம் நாளன்று ஆர். இராஜசெல்வம் (அ.த.சா. 1) கொடுத்த வாக்கு மூலம்.	8–6–1981	அ.த.	அ.த.சா. 1
ஏ. 40	ஒழுக்கக் கண்காணிப்பு இன்ஸ்பெக்டர் இராமகிருஷ்ணனின் வீட்டிற்காக வாலிபால் மாட சாமித் தேவரின் பெயரில் கொடுக்கப்பட்ட புகைப்பட புகைவிளக்கு அமைப்பதற்கு.	8–6–1981	அ.த.	அ.த.சா. 6
ஏ. 41	கமிஷன் முன்பு அ.த.சா. 6 திரு. அம்மாமுத்துத் தேவர் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரம்.	8–6–1981	அ.த.	அ.த.சா. 6
ஏ. 42	திருநெல்வேலி காவல்துறை சூப்பிரண்டு 1981ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22ஆம் நாள் அன்று அனுப்பப்பட்ட மனுவின் நகல்.	9–6–1981	அ.த.	அ.த.சா. 6
ஏ. 43	கமிஷன் முன்பு உறுதி மொழிப் பத்திரம் கொடுப்பதற்காக பொது மக்களுக்கு வெளியிடப் பட்ட கமிஷனின் அறிவிக்கை (ரோனியோ நகல்).	9–6–1981	அ.த.	அ.த.சா. 6

அ.த.=அரசுத் தரப்பு. அ.த.சா.=அரசுத் தரப்பு சாட்சி.

சான்றாவணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியீட்டப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏ. 44	சங்கனாங்குளம் கிராமம் தொடர்பாக வாக்காளர் பட்டியலில் உள்ள 530, 531, 532, 533, 534, 535 தொடர் எண்கள்.	9—6—1981	அ.த.	அ.த.சா. 6
ஏ. 45	விசாரணைக் கமிஷன் முன்பு அ.த.சா. 7 பிரேமா கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	10—6—1981	அ.த.	அ.த.சா. 7
ஏ. 46	விசாரணைக் கமிஷன் முன்பு அ.த.சா. 8 வசந்தி கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	22—6—1981	அ.த.	அ.த.சா. 8
ஏ. 47	அ.த.சா. 9 மஞ்சுளா கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	22—6—1981	அ.த.	அ.த.சா. 9
ஏ. 48	மாண்புமிகு இந்தியப் பிரதம மந்திரிக்கு அ.த.சா. 9 மஞ்சுளா கொடுத்த மனு.	22—6—1981	அ.த.	அ.த.சா. 9
ஏ. 49	அ.த.சா. 9 மஞ்சுளாவிற்கு பெண் மருத்துவ அதிகாரி கொடுத்த காயம் பற்றிய சான்றிதழ்.	22—6—1981	அ.த.	அ.த.சா. 9
ஏ. 50	திசையன்விளை காவல் நிலையத்தில் மஞ்சுளா 1980ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15ஆம் நாள் அன்று கொடுத்த மூல புகார் (379/80ஆம் குற்ற எண்ணில்).	22—6—1981	அ.த.	அ.த.சா. 9
ஏ. 51	விசாரணைக் கமிஷன் முன்பு அ.த.சா. 10 வசந்தா கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	22—6—1981	அ.த.	அ.த.சா. 10
ஏ. 52	இராஜசெல்வம் கற்பழிக்கப்பட்ட நிகழ்ச்சி தொடர்பாக அ.த.சா. 11 புஷ்பம் கொடுத்த உறுதி மொழிப் பத்திரம்.	23—6—1981	அ.த.	அ.த.சா. 11
ஏ. 53	மஞ்சுளாவைக் கற்பழித்தது தொடர்பாக அ.த.சா. 11 புஷ்பத்தின் மூல உறுதிமொழிப் பத்திரம்.	23—6—1981	அ.த.	அ.த.சா. 11
ஏ. 54	360/80ஆம் குற்ற எண்ணுக்கு திசையன்விளைக் காவல் நிலையத்தின் முழு வழக்கு நாட்குறிப்பு.	23—6—1981	அ.த.	அ.த.சா. 11
ஏ. 55	360/80 குற்ற எண்ணில் குற்ற நடைமுறை விதிக்கோவையின் 161 (3) பிரிவின் கீழ் அ.த.சா. 11 புஷ்பம் கொடுத்த வாக்கு மூலம்.	23—6—1981	அ.த.	அ.த.சா. 11
ஏ. 56	ஐயத்திற்கிடமான சூழ்நிலையில் மணி இறந்தது பற்றி 360/80 குற்ற எண்ணில் திசையன் விளைக் காவல் நிலையத்தில் உள்ள முழு வழக்கு நாட் குறிப்பு.	23—6—1981	அ.த.	அ.த.சா. 11

அ.த.=அரசுத் தரப்பு. அ.த.சா.=அரசுத் தரப்பு சாட்சி.

சான்றாவண தீர்ின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று நாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	நாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏ. 57	மஞ்சுளா கற்பழிக்கப்பட்ட நிகழ்ச்சி தொடர்பாக வழக்கு நாட்குறிப்பில் குற்றவியல் நடைமுறை விதிக்கோவை 161 (3) பிரிவின்கீழ் புஷ்பத் ின் வாக்குமூலம்.	23–6–1981	அ.த.	அ.த.சா. 11
ஏ. 58	வள்ளியூர் காவல்துறை உதவி சூப்பிரண்டு முன்பு 1980ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 29ஆம் நாளன்று புஷ்பம் கொடுத்த வாக்குமூலம்.	23–6–1981	அ.த.	அ.த.சா. 11
ஏ. 59	விசாரணைக் கமிஷன் முன்பு அ.த.சா. 12 கிரேஸ் கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	23–6–1981	அ.த.	அ.த.சா. 12
ஏ. 60	அ.த.சா. 8 கற்பழிக்கப்பட்ட நிகழ்ச்சி தொடர்பாக அ.த.சா. 12 கொடுத்த உறுதி மொழிப் பத்திரம்.	23–6–1981	அ.த.	அ.த.சா. 12
ஏ. 61	வள்ளியூர் காவல்துறை உதவி சூப்பிரண்டு முன்பு 1980ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 21ஆம் நாளன்று அ.த.சா. 12 கொடுத்த வாக்குமூலம்.	23–6–1981	அ.த.	அ.த.சா. 12
ஏ. 62	திசையன்விளை காவல் நிலையத் தின் 360/80 குற்ற நாட்குறிப் பில் அ.த.சா. 12 கொடுத்த 161 (3) வாக்குமூலம்.	23–6–1981	அ.த.	அ.த.சா. 12
ஏ. 63	திரு. ஜான் வின்சென்ட், எம். எல். ஏ. (அ.த.சா. 13) கொடுத்த உறுதிமொழிப் பத் திரம்.	24–6–1981	அ.த.	அ.த.சா. 13
ஏ. 64	ஆறுமுகம், முருகன் ஆகியோரால் கோர்ட்டாருக்கு அனுப்பப் பட்ட மனுவின் நகல் அ.த.சா. 13க்கு அனுப்பப்பட்ட நகல்.	24–6–1981	அ.த.	அ.த.சா. 13
ஏ. 65	1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13ஆம் நாளிட்ட பத் திரிகைக் குறிப்பில் அ.த.சா. 13 கொடுத்த எதிர் வாக்கு மூலம்.	24–6–1981	அ.த.	அ.த.சா. 13
ஏ. 66	மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் அ. த.சா. 13 அனுப்பிய கடிதம்.	24–6–1981	அ.த.	அ.த.சா. 13
ஏ. 66 (1)	திருநெல்வேலி காவல்துறை சூப்பிரண்டுக்கு திரு. ஜான் வின்சென்ட், எம். எல். ஏ. அனுப்பிய கடிதம்.	8–12–1981	அ.த.	அ.த.சா. 8

அ.த.=அரசுத் தரப்பு. அ.த.சா.=அரசுத் தரப்பு சாட்சி.

சான்றாவணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏ. 66 (b)	வள்ளியூர் காவல்துறை உதவி சூப்பிரண்டுக்கு திரு. ஜான் வின்சென்ட், எம். எல். ஏ. அனுப்பிய 1980ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 25ஆம் நாளிட்ட மனுவின் நகல்.	9—12—1981	அ.த.	அ.த.சா. 8
ஏ. 67	திசையன்விளைக் கவல் நிலையத்தின் 360/80 குற்ற எண்ணின் (அ.த.சா. 9) மஞ்சுளாவின் 161 (3) வாக்கு மூலம்.	25— 6—1981	அ.த.	அ.த.சா. 9
ஏ. 68	திசையன்விளைக் காவல் நிலையத்தின் 379/80 குற்ற எண்ணின் 161 (3) பிரிவின்கீழ் அ.த.சா. 9 கொடுத்த வாக்கு மூலமும் சவ விசாரணை அறிக்கையில் அ.த.சா. 9 கொடுத்த வாக்கு மூலமும்.	25— 6—1981	அ.த.	அ.த.சா. 9
ஏ. 69	வள்ளியூர் காவல்துறை உதவி சூப்பிரண்டு முன்பு அ.த.சா. 9 கொடுத்த வாக்குமூலம்.	25— 6—1981	அ.த.	அ.த.சா. 9
ஏ. 70	சேரன்மாதேவி கோட்டாட்சியர் முன்பு அ.த.சா. 9 கொடுத்த வாக்குமூலம்.	25— 6—1981	அ.த.	அ.த.சா. 9
ஏ. 71	மணி இறந்தது தொடர்பாக கமிஷன் முன்பு அ.த.சா. 14 (செல்லையா) கொடுத்த உறுதி மொழிப் பத்திரம்.	25— 6—1981	அ.த.	அ.த.சா. 14
ஏ. 72	நாய்களைக் கொல்வது தொடர்பாக அ.த.சா. 14 கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	25—6—1981	அ.த.	அ.த.சா. 14
ஏ. 73	மாண்புமிகு முதலமைச்சருக்கு திரு ஜான் வின்சென்ட் எம். எல்.ஏ. 1—10—1980 அன்று எழுதிய கடிதம்.	27—6—1981	அ.த.	அ.த.சா. 13
ஏ. 74	நாங்குனேரி காவல்துறை சப்-இன்ஸ்பெக்டருக்கு 28—10—80 அன்று அ.த.சா. 13 எழுதிய கடிதம்.	27—6—1981	அ.த.	அ.த.சா. 13
ஏ. 75	கொலை, கற்பழிப்பு தொடர்பாக திரு ஜான் வின்சென்ட் எம்.எல்.ஏ. 24—9—1980 அன்று எழுதிய நாட்குறிப்பு.	27—6—1981	அ.த. (சாட்சிக்கு திருப்பி அனுப்பப்பட்டது.)	அ.த.சா. 13
ஏ 76	சப்-இன்ஸ்பெக்டர் திரு பால கிருஷ்ணனின் வாக்குமூலத்தின் நகல்.	27—6—1981	அ.த.	அ.த.சா. 13

அ.த.=அரசுத் தரப்பு. அ.த.சா.=அரசுத் தரப்பு சாட்சி.

சான்றாவணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏ. 77	திசையன்விளை காவல் நிலையத்தின் 358/80 குற்ற எண்ணின் முதல் தகவல் அறிக்கையின் நகல்.	6—7—1981	அ.த.	அ.த.சா. 16
ஏ. 78	கமிஷன் முன்பு வி. தேவதாஸ் (அ.த.சா. 17) தாக்கல் செய்த மூல உறுதிமொழிப் பத்திரம்.	7—7—1981	அ.த.	அ.த.சா. 17
ஏ. 79	காவல்துறை உதவி சூப்பிரண்டு முன்பு 7 பேர்களுடன் அ.த.சா. 17 கொடுத்த வாக்கு மூலம்.	7—7—1981	அ.த.	அ.த.சா. 17
ஏ. 80	காவல்துறை இன்ஸ்பெக்டர் 360/80 குற்ற எண்ணில் பதிவு செய்த அ.த.சா. 17இன் வாக்குமூலம்.	7—7—1981	அ.த.	அ.த.சா. 17
ஏ. 81	379/80 குற்ற எண்ணில் காவல் துறை இன்ஸ்பெக்டர் பதிவு செய்ததாகச் சொல்லப்படுகிற அ.த.சா. 17-இன் வாக்குமூலம்.	7—7—1981	அ.த.	அ.த.சா. 17
ஏ. 82	378/80 குற்ற எண்ணில் இன்ஸ்பெக்டர் அ.த.சா. 17 இடமிருந்து பதிவு செய்ததாகச் சொல்லப்படுகிற வாக்குமூலம்.	7—7—1981	அ.த.	அ.த.சா. 17
ஏ. 83	கமிஷன் முன்பு திரு எம். செல்வராஜின் உறுதிமொழிப் பத்திரம்.	7—7—1981	அ.த.	அ.த.சா. 18
ஏ. 84	சேரன்மாதேவி கோட்டாட்சியர் முன்பு எம். செல்வராஜ் (அ.த.சா. 18) கொடுத்த வாக்குமூலம்.	7—7—1981	அ.த.	அ.த.சா. 18
ஏ. 85	சங்கனாங்குளம் சால்வேஷன் ஆர்மி சர்ச்சின் கணக்கெடுப்புப் பதிவேடு.	9—7—1981	அ.த.	அ.த.சா. 17
ஏ. 86	அ.த.சா. 19 ஐ சங்கனாங்குளத்திற்கு வருமாறு கேட்டுக் கொண்டு வாலிபால் மாட சாமித்தேவர் அவருக்கு எழுதிய கடிதம்.	9—7—1981	அ.த.	அ.த.சா. 19
ஏ. 87	மாடசாமித்தேவர் கே. நீலகண்டனுக்கு 20—5—77 அன்று எழுதிய கடிதம்.	9—7—1981	அ.த.	அ.த.சா. 19
ஏ. 88	எஸ். சத்தியமூர்த்தி கே. நீலகண்டனுக்கு 6—1—1977 அன்று எழுதிய கடிதம்.	9—7—1981	அ.த.	அ.த.சா. 19

அ.த.=அரசு தரப்பு. அ.த.சா.=அரசுத் தரப்பு சாட்சி

சான்றாவணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏ. 89	சத்தியமூர்த்தி கே. நீலகண்டனுக்கு 1—12—1978 அன்று எழுதிய கடிதம்.	9—7—1981	அ.த.	அ.த.சா. 19
ஏ. 90	கே. நீலகண்டனின் மகள் அம்மாச்சியார் 29—7—1979 அன்று அனுப்பிய மங்கல நீராட்டு விழா அழைப்பிதழ்.	9—7—1981	அ.த.	அ.த.சா. 19
ஏ. 91	மாடசாமித்தேவர், அவருடைய தரப்பினர் புகைப்படங்கள் அடங்கிய ஆல்பம்.	*9—7—1981 (21—7—1981 அன்று தரப்பினருக்கு திருப்பி அனுப்பப்பட்டது.)	அ.த.	அ.த.சா. 19
ஏ. 92	மாடசாமித்தேவர், அவருடைய தரப்பினர் புகைப்படங்கள் அடங்கிய ஆல்பம்.	*9—7—1981 (21—7—1981 அன்று தரப்பினருக்கு திருப்பி அனுப்பப்பட்டது.)	அ.த.	அ.த.சா. 19
ஏ. 93	அறங்காவலர் பதவி தொடர்பாக மாடசாமித்தேவர் இலங்க மணித்தேவர் மூலமாக எழுதிய கடிதம்.	9—7—1981	அ.த.	அ.த.சா. 19
ஏ. 94	சத்தியமூர்த்தி ஸ்டாலினின் தந்தை அம்மாமுத்துக்கு 1—10—1969 அன்று எழுதிய கடிதம்.	10—7—1981	அ.த.	அ.த.சா. 5
ஏ. 95	இராமசந்திரன் அ.த.சா. 5 ஸ்டாலினுக்கு 22—1—1970 அன்று எழுதிய கடிதம்.	10—7—1981	அ.த.	அ.த.சா. 5
ஏ. 96	சங்கரத்தேவர் கிராம முன்சீப் இராம. சந்திரனுக்கு 3-11-1971 அன்று எழுதிய கடிதம்.	10—7—1981	அ.த.	அ.த.சா. 5
ஏ. 97	ஸ்டாலின், சங்கரத்தேவருக்கு 15—11—1971 அன்று எழுதிய கடிதம்.	10—7—1981	அ.த.	அ.த.சா. 5
ஏ. 98	சங்கரன், பூந்தகுளம் இராம கிருஷ்ணனுக்கு 4—6—1971 அன்று எழுதிய கடிதம்.	10—7—1981	அ.த.	அ.த.சா. 5
ஏ 99	செட்டியாருக்கு அனுப்பப்பட்ட ஒரு உறை.	10—7—1981	அ.த.	அ.த.சா. 5
ஏ. 100	சங்கரத்தேவர் ஸ்டாலின் மூல மாக ஆத்தங்கரை பேட்டைக் குளம் சித்திக்குக்கு 21—5—1972 அன்று எழுதிய கடிதம்.	10—7—1981	அ.த.	அ.த.சா. 5
ஏ. 101	இராமச்சந்திரன் ஸ்டாலினின் தந்தை அம்மாமுத்துவுக்கு 11—6—1974 அன்று எழுதிய கடிதம்.	10—7—1981	அ.த.	அ.த.சா. 5
ஏ. 102	சங்கரத்தேவர் அம்மாமுத்துவுக்கு 9—4—1975 அன்று எழுதிய கடிதம்.	10—7—1981	அ.த.	அ.த.சா. 5

அ.த. = அரசுத் தரப்பு. அ.த.சா. = அரசுத் தரப்பு சாட்சி.

சான்றா வணத்தின் தொடர் எண்.	சான்றாவத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்ட.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏ. 103	சேரன்மாதேவி கோட்டாட்சியர் முன்பு கே. நீலகண்டனும் செல்லத்துரையும் 22—9—80 அன்று கொடுத்த வாக்கு மூலம்.	10—7—1981	அ.த.	அ.த.சா. 19
ஏ. 103 (a)	கோட்டாட்சியர் முன்பு கே. நீலகண்டனும் செல்லத்துரையும் கொடுத்த வாக்குமூலத்தில் சான்றாவணம் ஏ 103இல் குறியிடப்பட்ட பகுதி.	23—7—1981	அ.த.	அ.த.சா. 20
ஏ. 103 (b)	கோட்டாட்சியர் முன்பு கே. நீலகண்டனும் செல்லத்துரையும் கொடுத்த வாக்குமூலத்தில் குறியிடப்பட்ட பகுதி.	23—7—1981	அ.த.	அ.த.சா. 20
ஏ. 104	22—4—80 நாளிட்ட 'மாலை முரசு' பத்திரிகைச் சம்பு வெளியீடு—''பெற்றோர்—ஆசிரியர்'' சங்கத்தில் நீலகண்டன் தலைமை வகித்தல்.	10—7—1981	அ.த.	அ.த.சா. 19
ஏ. 105	'தினமலர்' நாளிதழின் முதல் பேப்பர் இராமசுப்பையரால் நீலகண்டனுக்கு (அ.த.சா. 19) கொடுக்கப்பட்ட செய்தி.	10—7—1981	அ.த.	அ.த.சா. 19
ஏ. 106	திசையன்விளை காவல் நிலையத்தில் 26—9—1980 அன்று 343/80 குற்ற எண்ணில் நீலகண்டத்தேவரின் தந்தை கொடுத்த முதல் தகவலறிக்கை.	10—7—1981	அ.த.	அ.த.சா. 19
ஏ. 107	சங்கனாங்குளம் எதிரடிக் குடியிருப்பிலிருந்து நீலகண்டத் தேவருக்கு 4—11—1980 அன்று எழுதப்பட்ட கடிதம்.	20—7—1981	அ.த.	அ.த.சா. 19
ஏ. 108	சுடலைமாடசாமி திருக்கோயிலுக்கு அறங்காவலர்களை நியமித்து 18—7—1980 நாளிட்ட 4802/78/ஏ 4ஆம் எண் ஆணையின் நகல்.	20—7—1981	அ.த.	அ.த.சா. 19
ஏ. 109	கோட்டாட்சியர் முன்பு அ.த.சா. 19 பூலோக பாண்டியத்தேவர் கொடுத்த வாக்குமூலமும் அதில் பூலோக பாண்டித் தேவரின் கையொப்பமும்.	21—7—1981	அ.த.	அ.த.சா. 19
ஏ. 109(a)	கோட்டாட்சியர் முன்பு பூலோக பாண்டித்தேவர் கொடுத்த வாக்குமூலத்தில் சா.ஆ.ஏ. 109ல் குறியிடப்பட்ட பகுதி.	23—7—1981	அ.த.	அ.த.சா. 20
ஏ. 110	பதினேழு பெயர்களடங்கிய பகுதி அறிக்கையும் அதில் பூலோக பாண்டித்தேவரின் கையொப்பமும்.	21—7—1981	அ.த.	அ.த.சா. 19

அ. த.=அரசுத் தரப்பு. அ. த. சா.=அரசுத் தரப்பு சாட்சி.

சான்றாவண தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியீடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏ. 111	திசையன்விளை சப்-இன்ஸ்பெக்டருக்கு அ.த.சா. 20 கொடுத்த 1—8—1980 நாளிட்ட தந்தி.	22—7—1981	அ.த.	அ.த.சா. 20
ஏ. 112	வள்ளியூர் காவல்துறை உதவி சூப்பிரண்டுக்கு டி. ஏ. கே. செல்லத்துரை (அ.த.சா. 20) சி.டி. 341/81-ல் 5—8—1980 அன்று கொடுத்த மனு.	22—7—1981	அ.த.	அ.த.சா. 20
ஏ. 113	திருநெல்வேலி காவல் துறை சூப்பிரண்டுக்கு அ.த.சா 20 (டி. ஏ. கே. செல்லத்துரை) 4—8—1980 அன்று கைப்பட எழுதிய கடிதம்.	22—7—1981	அ.த.	அ.த. சா.20
ஏ. 114	திருநெல்வேலி காவல்துறை சூப்பிரண்டுக்கு 13—8—1980 அன்று அனுப்பப்பட்ட மனு. இதன் நகல் திருநெல்வேலி சந்திப்பு, காவல்துறை இன்ஸ்பெக்டருக்கும் சப்-இன்ஸ்பெக்டருக்கும் அனுப்பப்பட்டது.	22—7—1981	அ.த.	அ.த. சா.20
ஏ, 115	மனு தொடர்பாக திருநெல்வேலி சந்திப்பு காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் பெற்ற 13—8—1980 நாளிட்ட 101/80-ஆம் எண் கடிதம்.	22—7—1981	அ.த.	அ.த.சா. 20
ஏ. 116	திரு. இராமகிருஷ்ணனுக்கு எதிராக புகார் கூறி திருநெல்வேலி காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் பல்வேறு அதிகாரிகளுக்கும் 19—8—1980 அன்று அனுப்பப்பட்ட மனு.	22—7—1981	அ.த.	அ.த.சா. 20
ஏ. 117	மாடசாமித்தேவர் அனுப்பிய அழைப்பிதழ்—மனுவுடன் இணைக்கப்பட்டது.	22—7—1981	அ.த.	அ.த.சா. 20
ஏ. 118	காவல்துறை சப்-இன்ஸ்பெக்டருக்கு டி.ஏ.கே. செல்லத்துரை 26—3—1981 அன்று அனுப்பிய மனு.	23—7—1981	அ.த.	அ.த.சா. 20
ஏ. 119	மாவட்ட ஆட்சித் தலைவருக்கு டி. ஏ. கே. முத்தையா 23—3—1981 அன்று அனுப்பிய மனு.	23—7—1981	அ.த.	அ.த.சா. 20
ஏ. 120	அ.த.சா. 20 டி.ஏ.கே. செல்லத்துரை கோட்டாட்சியருக்கு 27—8—1980 அன்று அனுப்பிய மனு.	23—7—1981	அ.த.	அ.த.சா. 20
ஏ. 121	திசையன்விளை காவல்துறைக்கு அ.த.சா.21 (நாள் 4—8—1980) கொடுத்த வாக்குமூலம்.	25—7—1981	அ.த.	அ.த.சா. 21

அ.த.=அரசுத் தரப்பு. அ.த.சா.=அரசுத் தரப்பு சாட்சி.

சான்றாவணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியீடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏ. 122	கமிஷன் முன்பு செல்வி மைக்கேல் அம்மா (அ.த.சா. 22) கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	3—8—1981	அ.த.	அ.த.சா. 22
ஏ. 123	கமிஷன் முன்பு பூர்ணம்(அ.த.சா. 23) கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	3—8—1981	அ.த.	அ.த.சா. 23
ஏ. 124	கடலைமாடசாமி திருக்கோயில் தலைவரைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக சேரன்மாதேவி இந்து சமய அறநிலையத்துறை ஆய்வாளர் 22—7—80 அன்று அனுப்பிய 168/80ஆம் எண் அறிவிப்பு.	4—8—1981	அ.த.	அ.த.சா. 24
ஏ. 125	சேரன்மாதேவி கோட்டாட்சியர் முன்பு 22—9—80 அன்று அ.த.சா. 24, கொடுத்த வாக்குமூலம்.	4—8—1981	அ.த.	அ.த.சா. 24
ஏ. 125 (a)	கோட்டாட்சியர் முன்பு அ.த. சா. 25 கொடுத்த வாக்கு மூலத்தின் பகுதி.	5—8—1981	அ.த.	அ.த.சா. 24
ஏ. 126	22—10—1980 நாளிட்ட 358/80 குற்ற எண்ணில் காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர் முன்பு காசிப்பாண்டியன் கொடுத்த வாக்குமூலம்.	4—8—1981	அ.த.	அ.த.சா 24
ஏ. 127	சேரன்மாதேவி கோட்டாட்சியர் முன்பு டி. ஏ. குமாரசாமிதேவர் (அ.த.சா. 25) கொடுத்த வாக்கு மூலம்.	6—8—1981	அ.த.	அ.த.சா. 25
ஏ. 128	சேரன்மாதேவி கோட்டாட்சியர் முன்பு பி. எஸ். வேணுகோபால் (அ.த.சா. 26) கொடுத்த வாக்குமூலம்.	21—8—1981	அ.த.	அ.த.சா 26
ஏ. 129	காசியும் ஏனைய ஆதி திராவிடர் களும் மாண்புமிகு முதலமைச் சருக்கு 15—10—1980 அன்று கொடுத்த மனு.	21—8—1981	அ.த.	அ.த.சா. 3
ஏ. 130	20—5—1981 அன்று மாலை 3-00 மணிக்கு விசாரணையில் கலந்து கொள்ளுமாறு, நாங்குனேரி வட்டாட்சியர் அலுவலகத் திலிருந்து ஜெபமணிக்கு அனுப் பப்பட்ட 15—5—1981 நாளிட்ட பி8/4464/81ஆம் எண் அறிவிப்பு.	26—8—1981	அ.த.	எ.மா.சா. 3
ஏ. 131	வட்டாட்சியர் அலுவலகத்தில் 20—5—1981 அன்று விசார ணைக்கு வருமாறு ஜெபமணிக்கு கோட்டாட்சியர் அலுவலகத் திலிருந்து அனுப்பப்பட்ட 3—5—1981 நாளிட்ட பி1/5849/81ஆம் எண் குறிப்பாணை.	26—8—1981	அ.த	எ.ம.சா 3

அ.த.=அரசுத் தரப்பு. அ.த.சா.=அரசுத் தரப்பு சாட்சி.
எ.ம.சா.=எதிர் மனுதாரர் சாட்சி.

சான்றாவணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏ. 132	கமிஷன் முன்பு முத்தையாவின் மனைவி கண்ணம்மாள் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரத்தில் அவருடைய கையொப்பம்.	11—9—1981	அ.த.	எ.ம.சா. 6
ஏ. 133	கண்ணம்மாவின் கையொப்பத்துடன் ஆதிதிராவிடர் குடியிருப்பு மக்கள் மாண்புமிகு முதலமைச்சருக்கு அனுப்பிய மனு.	11—9—1981	அ.த.	எ.ம.சா. 6
ஏ. 134	11—12—1980 நாளிட்ட 'மக்கள் குரல்' செய்தித் தாளில் பாஸ்டர் கேப்டன் செல்லப்பா, அவருடைய (எ.ம.சா. 6) மனைவி திருமதி கண்ணம்மாள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆகியோர் உள்ள புகைப்படம்.	21—9—1981	அ.த	எ.ம.சா. 6
ஏ. 135	கண்ணம்மாவின் கையொப்பத்துடன் மாண்புமிகு முதலமைச்சருக்கு ஆதிதிராவிட குடியிருப்பு மக்கள் அனுப்பிய மனுவின் நகல்.	21—9—1981	அ.த	எ.ம.சா. 7
ஏ. 136	திசையன்விளை காவல்துறை இன்ஸ்பெக்டர் முன்பு 379/80 சி.டி. எண்ணில் (மஞ்சுளா கற்பழிக்கப்பட்டது) எ.ம.சா. 7 கண்ணம்மாள் கொடுத்த வாக்குமூலம்.	21—9—1981	அ.த.	எ.ம.சா. 7
ஏ. 136(a)	திசையன்விளை காவல் துறை இன்ஸ்பெக்டர் முன்பு கண்ணம்மாள் கொடுத்த 161 வாக்கு மூலத்தில் (சா.ஆ.ஏ. 136) ஒரு பகுதி.	21—9—1981	அ.த.	எ.ம.சா. 7
ஏ. 137	ஐயத்திற்கிடமான மரணம் குறித்து 360/80 சி.டி. எண்ணில் திசையன்விளை காவல் துறை இன்ஸ்பெக்டர் முன்பு கண்ணம்மாள் கொடுத்த 161 வாக்கு மூலம்.	21—9—1981	அ.த.	எ.ம.சா. 7
ஏ. 138	எ.ம.சா. 7 கண்ணம்மாள் கையொப்பத்துடன் மாண்புமிகு முதலமைச்சருக்கு புகைப்பம் கொடுத்த மனு.	21—9—1981	அ.த.	எ.ம.சா. 7
ஏ. 139	இருவார இதழ் 'துக்ளக்' பத்திரிகையில் வெளிவந்த சில படங்கள்(புகைப்படங்கள்).	22—9—1981	அ.த.	எ.ம.சா. 7
ஏ. 140	மாண்புமிகு பிரதம மந்திரி, மஞ்சுளா. இராஜசெல்வம் ஆகியோர் உள்ள புகைப்படம்.	22—9—1981	அ.த.	எ.ம.சா. 7

அ. த.=அரசுத் தரப்பு. எ. ம. சா.=எதிர் மனுதாரர் சாட்சி.

சரன்றா வணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏ. 141	சங்கனாங்குளத்தில் கற்பழிப்பு சம்பவங்களும் மணியின் கொலையும் பற்றி 25—10—80 அன்று 'மாலை முரசு' பத்திரிகையில் வெளிவந்த செய்தி.	24—9—1981	அ.த.	எ.ம.சா. 8
ஏ. 142	எ.ம.சா 8 ஏ. கந்தையாவின் விற்பனைப் பத்திரம்.	24—9—1981	அ.த.	எ.ம.சா. 8
ஏ. 143	சங்கனாங்குளம் கிராமத்தில் 1980 ஆம் ஆண்டு இறப்புப் பதிவேடு.	25—9—1981	அ.த.	எ.ம.சா. 3
ஏ. 144	கமிஷன் முன்பு திருமதி அந்தோணி அம்மாள் கொடுத்த உறுதி மொழிப் பத்திரம்.	15—10—1981	அ.த.	எ.ம.சா. 28
ஏ 145	சங்கனாங்குளத்தைச் சேர்ந்த மாடசாமித் தேவரின் மகன் சண்முகராஜாவின் பெயரில் எ.ம.சா 13 கொடுத்த வெற்றுக் கடன் தீர்ப்பு சான்றிதழ்.	19—10—1981	அ.த.	எ.ம.சா. 12
ஏ. 146	சுரந்தை கிராமத்திலிருந்து செல்வி என்பவர் 4—9—81 அன்று எழுதிய உள்நாட்டுக் கடிதம்.	19—10—1981	அ.த.	எ.ம.சா. 12
ஏ. 147	சங்கனாங்குளத்தைச் சேர்ந்த சங்கரனின் (எ.ம.சா. 13) ரவுடிக் குறிப்பேட்டின் முழுக் கோப்பும்.	5—11—1981	அ.த.	எ.ம.சா. 13
ஏ. 148	29—10—80 ஆம் நாளிட்ட ''விசிட்டர் லெண்ஸ்'' கொடுத்தல்.	6—11—1981	அ.த.	எ.ம.சா. 14
ஏ. 149	நாங்குநேரி வட்டாட்சியரிட மிருந்து 16—7—80 ஆம் நாளிட்ட பி1/11948/80 ஆம் எண் கடிதம்.	6—11—1981	அ.த.	எ.ம.சா. 14
ஏ. 150	திருநெல்வேலி, இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்) செயலாளர் எம். பாண்டியன், மாண்புமிகு முதலமைச்சருக்கு 30—10—80 அன்று எழுதிய மனு.	6—11—1981	அ.த.	எ.ம.சா. 14
ஏ. 151	சிந்துபூந்துறை, இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியின் செயலாளர் வி. எஸ். காந்தி, மாண்புமிகு முதலமைச்சருக்கு 27—10—80 அன்று எழுதிய மனு.	6—11—1981	அ.த.	எ.ம.சா. 14
ஏ. 152	மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு ஆர். வி. சாமிநாதன் வெளியிட்ட எதிர் விளக்க அறிக்கை, 10—10—80 நாளிட்ட 'தினத்தந்தி'யில் வெளியிடப்பட்டது.	6—11—1981	அ.த.	எ.ம.சா. 14

அ.சா.=அரசுச் சாட்சி. அ.த.=அரசுத் தரப்பு. எ.ம.சா.=எதிர் மனுதாரர் சாட்சி.

சான்றா வணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியீடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏ. 153	சங்கரத்தேவர் தொடர்பாக ரவுடிக் குறிப்பேட்டில் 18—1—80 முதல் 22—12—80 வரை உள்ள பதிவுகள்.	25—11—81	அ.த.	அ.சா. 2
ஏ. 154	இராஜசெல்வம் தூத்துக்குடியில் தங்கியிருந்தார் என்பதற்கு கிராம முன்சீப் எஸ். இராமச்சந்திரன் 21—6—80 அன்று கொடுத்த சான்றிதழ்.	25—11—81	அ.த.	அ.சா. 2
ஏ. 155	கருப்பையா 9—9—80 அன்று அ.சா. 2-க்கு கொடுத்த அறிவிப்பு.	26—11—81	அ.த.	அ.சா. 2
ஏ. 156	31—8—80 அன்று ஜி.டி. பதிவேட்டில் உள்ள பதிவுகள்.	26—11—81	அ.த.	அ.சா. 2
ஏ. 157	449/81 ஸி. எம். பி.—யில் சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமியின் வாக்குமூலம்.	26—11—81	அ.த.	அ.சா. 2
ஏ. 158	21—6—80 அன்று அ.சா. 2,10—00 மணிக்கு காவல் நிலையத்தை விட்டுச் சென்றார் என்பதற்கு ஜி.டி.யில் உள்ள பதிவு.	26—11—81	அ.த.	அ.சா. 2
ஏ. 159	28—8—80 முதல் 23—9—80 வரை உள்ள கால அளவிற்கு பொது நாட்குறிப்புப் பதிவேடு.	26—11—81	அ.த.	அ.சா. 2
ஏ. 160	வாலிபால் மாடசாமித் தேவர் விவரக் குறிப்பேட்டில் அ.சா. 2 செய்த பதிவு.	27—11—81	அ.த.	அ.சா. 2
ஏ. 161	8—5—80 முதல் 15—11—80 வரை உள்ள கால அளவுக்கு பதிவு முழுவதும் (வாலிபால் மாடசாமியின் விவரக் குறிப்பேடு).	27—11—81	அ.த.	அ.சா. 2
ஏ. 162	சேரன்மாதேவி சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டின் 27—10—80 ஆம் நாளிட்ட நடவடிக்கைக் குறிப்பின் நகல்	28—11—81	அ.த.	அ.சா. 6
ஏ. 163	சங்கரத் தேவரின் விவரக்குறிப்பேடு 16—11—59 அன்று தொடங்கப்பட்டது.	28—11—81	அ.த.	அ.சா. 6
ஏ. 164	திருநெல்வேலி மாவட்ட வருவாய் அதிகாரியின் நடவடிக்கைக் குறிப்பு ஆர். ஓ. ஸி. எண். டபிள்யூ 4/146448/80, நாள் 7—11—80.	7—12—81	அ.த.	அ.சா. 6
ஏ. 165	திசையன்விளை காவல்துறை இன்ஸ்பெக்டரின் (அ. சா. 6) 1—7—80 அன்று தன் கைப்பட எழுதிய அறிக்கை முழுவதும்.	7—12—81	அ.த.	அ.சா. 6

அ.சா.=அரசுச் சாட்சி. அ.த.=அரசுத் தரப்பு. ஏ.ம.சா.=எதிர் மனுதாரர் சாட்சி.

சான்றாவணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் ஏற்றானன்று நாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏ. 166	அந்தக் கிராமத்தில் கொலை வழக்கு ஒன்றில் மாடசாமித் தேவர் சாட்சியைப் பயமுறுத்தினார். இதனால் அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் விடுதலைப் பெற்றார் இதைக் காட்டும் விவர அறிக்கையில் 75-ஆம் பக்கத்தில் உள்ள குறிப்பின் பகுதி.	7—12—81	அ.த.	அ.சா. 6
ஏ. 167	சங்கனாங்குளம் கிராமத்தின் குற்ற வழக்குக் குறிப்பு முழுவதும் (பகுதி 4)	7—12—81	அ.த.	அ.சா, 6
ஏ. 168	கிராமக் குற்ற வழக்குக்குறிப்பின் 80-ஆம் பக்கத்தில் குறியிடப் பட்ட பகுதி (29—6—76)	7—12—81	அ.த.	அ.சா. 6
ஏ. 169	மாடசாமி தொடர்பாக (ஆதி நிராவிடர்) கிராமக் குற்ற விவரக் குறிப்பில் 65 ஆம் பக்கத்தில் உள்ள பதிவுகள்.	7—12—81	அ.த.	அ.சா. 6
ஏ. 170	சங்கனாங்குளம் கிராமக் குற்ற விவரக் குறிப்பில் (பகுதி 4) 67 ஆம் பக்கத்தில் உள்ள பதிவுகள். லிங் மாடசாமி (ஓடைக்கரையான் என்றும் அழைக்கப்படுவர்) தொல்லை கொடுப்பவர் என்று விவரிக்கப்பட்டுள்ளார். மாசடாமித் தேவரின் அடியாள்.	7—12—81	அ.த.	அ.சா. 6
ஏ. 171	நிசையன்விளை காவல்துறை இன்ஸ்பெக்டருக்கு பி. காசி 26—9—80 அன்று எழுதிய மனு.	7—12—81	அ.த.	அ.சா. 6
ஏ. 172	சங்கனாங்குளம் கிராம முன்சிப் கையொப்பத்துடன் கோட் டாட்சியர் அனுப்பிய 6—9—80 நாளிட்ட அறிவிப்பின் சார்வு செய்யப்பட்ட நகல்.	8—12—81	அ.த.	அ.சா. 7
ஏ. 173	நாங்குனேரி வட்டாட்சியர் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர் 24—11—80 அன்று அனுப்பிய சி6/21001/80 ஆம் எண் கடிதத்தின் நகல்.	8—12—81	அ.த.	அ.சா. 7
ஏ. 174	குற்றச் சாட்டையும் தடியடியையும் கண்டித்து நடத்திய கிளர்ச்சி குறித்து 1980-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14-ஆம் நாளிட்ட 'இந்தியன் எக்ஸ் பிரஸ்' நாளிதழில் வெளியிடப் பட்ட செய்தி.	10—12—1981	அ.த.	அ.சா. 9
ஏ. 175	குற்றச்சாட்டைக் கண்டித்து 1980-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10-ஆம் நாளிட்ட 'மாலை முரசு' நாளிதழில் வெளிவந்த செய்தி.	10—12—1981	அ.த.	அ.சா. 9

அ.சா.=அரசுச் சாட்சி. அ.த.=அரசுத் தரப்பு.

சான்றாவணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏ. 176	1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31ஆம் நாளிட்ட 'மாலை முரசு' நாளிதழில் வெளிவந்த பத்திரிகைச் செய்தி.	10–12–1981	அ.த.	அ.சா. 9
ஏ. 177	1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ஆம் நாளிட்ட 'நீரோட்டம்' நாளிதழில் வெளிவந்த பத்திரிகைச் செய்தி.	10–12–1981	அ.த.	அ.சா. 9
ஏ. 178	திருநெல்வேலி காவல் துறை சூப்பிரண்டு, திருநெல்வேலி காவல்துறை டெபுடி–இன்ஸ் பெக்டர் ஜெனரலுக்கு 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18ஆம் நாளன்று எழுதிய கடிதம். (உண்மை நகல்) (ஒ.ம்.) செயலாளர், நீதியதி கே. எஸ். ராமமூர்த்தி, விசாரணைக் கமிஷன்.	10–12–1981	அ.த.	அ.சா. 10

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

—அ.த.=அரசுத் தரப்பு. அ.சா.=அரசுச் சாட்சி.

இணைப்பு VIII.

சான்றனு வணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
பி. 1	வள்ளியூர் காவல்துறை உதவி சூப் பிரண்டு முன்பு முத்தம்மாள் கொடுத்த வாக்குமூலம்.	24—8—1981	எ.ம.	எ.ம.சா. 1
பி. 2	கமிஷன் முன்பு தாக்கல் செய்யப் பட்ட முத்தம்மாளின் (எ.ம. சா.) 1 உறுதிமொழிப் பத்திரம்.	24—8—1981	எ.ம்.	எ.ம.சா. 1
பி. 3	எ.ம.சா. 2இன் மருமகளான இராமமூர்த்திக்கும், சாந்தா விற்கும் நடைபெற்ற திருமண அழைப்பிதழ்.	24—8—1981	எ.ம.	எ.ம.சா. 2
பி. 4	விசாரணைக் கமிஷன் முன்பு எ.ம.சா. 2 எம். நல்லையா கொடுத்த உறுதி மொழிப் பத்திரம்.	24—8—1981	எ.ம.	எ.ம.சா. 2
பி. 5	உட்கோட்டம் 4, நில அளவை எண் 2076, 1839 பசலிக்கு அடங்கல் புத்தகத்தில் உள்ள பதிவு.	26—8—1981	எ.ம.	எ.ம.சா. 3
பி. 6	உட்கோட்டம் 1, நில அளவை எண் 2073, 1389 பசலிக்கு அடங்கல் புத்தகத்தில் உள்ள பதிவு.	26—8—1981	எ.ம.	எ.ம.சா. 3
பி. 7	1389 அடங்கல் பசலியிலுள்ள பதிவு அடிப்படையில் வரு வாய்த் துறை ஆய்வாளர் (எ.ம.சா. 3) கொடுத்த சான்றிதழ்.	26—8—1981	எ.ம.	எ.ம.சா. 3
பி. 8	நாங்குனேரி வட்ட ஆட்சியர் (எ.ம.சா. 4) முன்பு மனுவேல் என்கிற மசானம் கொடுத்த வாக்குமூலங்கள் அதில் அவ ருடைய கையொப்பமும்.	27—8—1981	எ.ம.	எ.ம.சா. 4
பி. 9	கமிஷன் முன்பு மனுவேல் என் கிற மசானம் (எ.ம.சா. 4) கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	27—8—1981	எ.ம.	எ.ம.சா. 4
பி. 10	முத்தையாவால் கொடுக்கப் பட்டுள்ளதாகச் சொல்லப்படு கிற 1980ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 11ஆம் நாளிட்ட மனு.	11—9—1981	எ.ம.	எ.ம.சா. 6
பி. 11	திசையன்விளை காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் முன்பு முத்தையா கொடுத்த வாக்கு மூலம்.	11—9—1981	எ.ம.	எ.ம.சா. 6

எ.ம.=எதிர் மனுதாரர். எ.ம.சா.=எதிர் மனுதாரர் சாட்சி.

சான்றா வணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது,	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
பி. 12	வள்ளியூர் காவல் துறை உதவி சூப்பிரண்டு முன்பு திசையன் விளை காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் ஆகியோர் பதிவு செய்த வாக்கு மூலம் தொடர்பான கோப்பு முழுவதும்.	11–9–1981	எ.ம.	எ.ம.சா. 6
பி. 13	விசாரணைக் கமிஷன் முன்பு ஏ. கந்தையா கொடுத்த உறுதி மொழிப் பத்திரம்.	22–9–1981	எ.ம.	எ.ம.சா. 8
பி. 14	கமிஷன் முன்பு எஸ். மாடசாமி கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	22–9–1981	எ.ம.	எ.ம.சா. 9
பி. 15	திசையன்விளை காவல் துறை இன்ஸ்பெக்டர் முன்பு 360/80ஆம் குற்ற எண் எஸ். மாடசாமி (நாவிதர்) எ.ம.சா. 9 கொடுத்த 161 வாக்குமூலம்.	25–9–1981	எ.ம.	எ.ம.சா. 9
பி. 16	புதுடெல்லி உள்துறை அமைச்சருக்கு எ.ம.சா. 10, பெரிய சாமி, கொடுத்த தந்தி.	26–9–1981	எ.ம.	எ.ம.சா. 10
பி. 17	திரு. ஜான் வின்சென்ட், எம்.எல்.ஏ., அவர்களின் உரையைக் கண்டித்து தாழ்த்தப்பட்ட வகுப்பினர் லீக்கின் தலைவர், எம். மாடசாமி. வெளியிட்ட பொதுக் கூட்ட அறிவிப்பு.	26–9–1981	எ.ம.	எ.ம.சா. 10
பி. 18	சங்கனாங்குளத்திலுள்ள ஆதி திராவிடர்கள் 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29ஆம் நாளன்று வெளியிட்ட அச்சிடப் பட்ட அறிக்கை.	26–9–1981	எ.ம.	எ.ம.சா. 10
பி. 19	எ.ம.சா. 10 வி. பெரியசாமி கொடுத்த உறுதி மொழிப் பத்திரம்.	26–9–1981	எ.ம.	எ.ம.சா. 10
பி. 20	லீக் மாடசாமியும் வி. பெரிய சாமியும் (எ.ம.சா. 10) கூட்டாகச் சேர்ந்து கொடுத்த பத்திரிகைச் செய்தியின் நகல்.	26–9–1981	எ.ம.	எ.ம.சா. 10
பி. 21	1981ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 30ஆம் நாளிட்ட 'தினத் தந்தியில்' குறியிடப் பட்ட பகுதி.	12–10–1981	எ.ம.	எ.ம.சா. 10
பி. 22	திசையன்விளை காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் முன்பு சண்முகசுந்தரம் (எ.ம.சா. 11) கொடுத்த வாக்குமூலம்.	12–10–1981	எ.ம.	எ.ம.சா. 11

எ.ம.=எதிர் மனுதாரர். எ.ம.சா.=எதிர் மனுதாரர் சாட்சி.

சான்றாவணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
பி. 23	மணி இறந்தது குறித்து எ.ம.சா. 12 (கிராம முன்சீப் இராமச் சந்திரன்) கொடுத்த இறப்புச் சான்றிதழ்.	19–10–1981	எ.ம.	எ.ம.சா. 12
பி. 24	கமிஷன் முன்பு எஸ். இராமச் சந்திரன் (எ.ம.சா. 12) கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	19–10–1981	எ.ம.	எ.ம.சா. 12
பி. 25	திசையன்விளை காவல் துறை உதவி சப்-இன்ஸ்பெக்டர் முன்பு 341/80 குற்ற எண்ணில் எஸ். சங்கரன் (எ. ம. சா. 13) கொடுத்த வாக்குமூலம்.	3–11–1981	எ.ம.	எ.ம.சா. 13
பி. 26	புனைபெயரில் எழுதப்பட்ட மனு தொடர்பாக திசையன்விளை காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர் முன்பு எஸ். சங்கரன் கொடுத்த வாக்குமூலம்.	3–11–1981	எ.ம.	எ.ம.சா. 13
பி. 27	கமிஷன் முன்பு எ.ம.சா. 13 (எஸ். சங்கரத் தேவர்) தாக்கல் செய்த பிரமாண உறுதிமொழிப் பத்திரம்.	4–11–1981	எ.ம.	எ.ம.சா. 13
பி. 28	கமிஷன் முன்பு எஸ். மாடசாமித் தேவர். எ.ம.சா. 14, கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	6–11–1981	எ.ம.	எ.ம.சா. 14
பி. 29	உள் துறையின் 1981-ஆம் ஆண்டு மே திங்கள் 7ஆம் நாளிட்ட 172137/காவல் 11/80-4-ஆம் எண் கடிதம் குறித்த கோப்பு முழுவதும்.	26–11–1981	எ.ம.	அ.சா. 2
பி. 30	திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளருக்குச் சேரன்மாதேவி கோட்டாட்சியர் 1980-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13ஆம் நாளன்று அனுப்பிய ஆர். சி. ஏ. 2/14181/80-ஆம் எண் கடிதம்.	8–12–1981	எ.ம.	அ.சா. 7
பி. 31	டி. ஏ. கே. செல்லத்துரை 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19ஆம் நாளன்று மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்பிய தந்தி.	10–12–1981	எ.ம.	அ.சா. 9

(உண்மை நகல்)

(ஒ.ம்.) செயலாளர்,

நீதியரசர் கே. எஸ். ராமமூர்த்தி,
விசாரணைக் கமிஷன்.

எ.ம.=எதிர் மனுதாரர். எ.ம.சா.=எதிர் மனுதாரர் சாட்சி.
அ.சா.=அரசுச் சாட்சி.

இணைப்பு IX.

சான்றாவணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஜி. 1	திசையன்விளை காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் முன்பு எஸ். சுடலைக்கண்ணு கொடுத்த வாக்குமூலம், அதில் அவருடைய கையொப்பம் உள்ளது.	24–11–1981	அரசு.	அ.சா. 1
ஜி. 2	திசையன்விளை காவல் துறை இன்ஸ்பெக்டருக்கு 1980–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30–ஆம் நாளன்று அ. சா. 2 (காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர்) அனுப்பிய அறிக்கை.	24–11–1981	அரசு.	அ.சா. 2
ஜி. 3	1981–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11–ஆம் நாளிட்ட பொது நாட்குறிப்பில் பதிவு.	25–11–1981	அரசு.	அ.சா..2
ஜி. 4	திசையன்விளை காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் முன்பு கொடுத்த வாக்குமூலத்தில் வேயலின் இடது பெருவிரல் அடையாளம்.	25–11–1981	அரசு.	அ.சா. 2
ஜி. 5	திசையன்விளை காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் முன்பு கொடுத்த வாக்குமூலத்தில் மாடத்தியின் இடது பெருவிரல் அடையாளம்.	25–11–1981	அரசு.	அ.சா. 2
ஜி. 6	காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் முன்பு கொடுத்த வாக்குமூலத்தில் டேனியலின் மனைவி சுந்தரத்தின் இடது பெருவிரல் அடையாளம்.	25–11–1981	அரசு.	அ.சா. 2
ஜி. 7	காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் முன்பு கொடுத்த வாக்குமூலத்தின் செல்லையாவின் மனைவி அமிர்தத்தின் கையொப்பம்.	25–11–1981	அரசு.	அ.சா. 2
ஜி. 8	காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் முன்பு கொடுத்த வாக்குமூலத்தில் பாலராஜின் மனைவி கமலத்தின் கையொப்பம்.	25–11–1981	அரசு.	அ.சா. 2
ஜி. 9	காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் முன்பு கொடுத்த வாக்குமூலத்தில் செல்லையாவின் மனைவி கண்ணகியின் கையொப்பம்.	25–11–1981	அரசு.	அ.சா. 2
ஜி. 10	காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் முன்பு கொடுத்த வாக்குமூலத்தில் சத்தியநேசனின் மகன் எஸ். சகாதேவனின் கையொப்பம்.	25–11–1981	அரசு.	அ.சா. 2
ஜி. 11	டாக்டர் கௌசல்யா கேசவன் (அ.சா. 3) கொடுத்த உறுதி மொழிப் பத்திரமும் அறிக்கையும்.	26–11–1981	அரசு.	அ.சா. 3

எ.ம.=எதிர் மனுதாரர். அ.சா.=அரசுச் சாட்சி.

சான்றவண்ணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஜி. 12	1981ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14ஆம் நாளன்று வாட்டாட்சியருக்கு அ.சா.4 (டாக்டர் ஆர். கோபால கிருஷ்ணன்) எழுத்து மூலமாக தெரிவித்த கருத்து.	26–11–1981	அரசு.	அ.சா. 4
ஜி. 13	விசாரணைக் கமிஷன் முன்பு அ.சா. 4 (டாக்டர் ஆர். கோபால கிருஷ்ணன்) கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	26–11–1981	அரசு.	அ.சா. 4
ஜி. 14	1980ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31ஆம் நாள் அன்று மருத்துவ மனை நுழைவு–வெளியே அனுப்பும் பதிவேட்டில் உள்ள பதிவு (தொடர் எண் 420).	26–11–1981	அரசு.	அ.சா. 4
ஜி. 15	சவ விசாரணை, கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட எலும்புகள் தொடர்பாக நாங்குனேரி வட்டாட்சி அலுவலகத்தில் உள்ள கோப்பு முழுவதும்.	27–11–1981	அரசு.	அ.சா. 5
ஜி. 16	நாங்குனேரி வட்டாட்சியர்– இரண்டாம் வகுப்பு எக்சிகியூடிவ் மாஜிஸ்ட்ரேட் முன்பு பொன்னையா கொடுத்த வாக்குமூலம்.	26–11–1981	அரசு.	அ.சா. 5
ஜி. 17	நாங்குனேரி வட்டாட்சியர் திருநெல்வேலி நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் 1981ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14ஆம் நாளன்று அனுப்பிய சி. 6/22274/80ஆம் எண் கடிதம்.	26–11–1981	அரசு.	அ.சா. 5
ஜி. 18	கமிஷன் முன்பு பி. விஸ்வநாதன் கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	26–11–1981	அரசு.	அ.சா. 5
ஜி. 19	360/80 முதல் தகவல் அறிக்கையில் நகல் ஐயத்திற்கிடமான மரணம்.	28–11–1981	அரசு.	அ.சா. 6
ஜி. 20	378/80 இராஜ செல்வத்தை கற்பழித்தது. வழக்கின் குறிப்பு முழுவதும்.	28–11–1981	அரசு.	அ.சா. 6
ஜி. 21	கமிஷன் முன்பு காவல் துறை இன்ஸ்பெக்டர் எம். அருணாச்சலம் கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	28–11–1981	அரசு.	அ.சா. 6
ஜி. 22	சேரன்மாதேவி கோட்டாட்சியர் முன்பு டி.ஏ.கே. இலட்சுமணன் (அ.சா. 7 மூலமாக) கொடுத்த வாக்குமூலம்.	8–12–1981	அரசு.	அ.சா. 7

சான்றா வணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப் பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஜி. 23	1980ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30ஆம் நாளிட்ட நே. மு. க. எண் ஏ3/14181/80—திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளருக்கு கோட்டாட்சியர் அனுப்பிய அறிக்கை.	8–12–1981	அரசு.	அ.சா. 7.
ஜி. 24	விசாரணைக் கமிஷன் முன்பு கோட்டாட்சியர் பி. திருவேங்கடம் (அ.சா. 7) கொடுத்த உறுதிமொழிப் பத்திரம்.	8–12–1981	அரசு.	அ. சா. 7.
ஜி. 25	வாலிபால் மாடசாமித் தேவருக்கு எதிராக மசானத்தின் புனைபெயரில் எழுதப்பட்ட மனு குறித்த விசாரணை—வள்ளியூர் காவல் துறை உதவி சூப்பிரண்டின் விசாரணை அறிக்கை.	8–12–1981	அரசு.	அ.சா. 8.
ஜி. 26	ஒழுக்கக் கண்காணிப்பு—இலஞ்ச ஒழிப்பு இன்ஸ்பெக்டர் இராமகிருஷ்ணனுக்கு எதிராக நாங்குனேரி பொதுமக்கள் கொடுத்த அனாமதேய மனு—வள்ளியூர் காவல் துறை உதவி சூப்பிரண்டின் விசாரணை அறிக்கை.	8–12–1981	அரசு.	அ.சா. 8.
ஜி. 27	வள்ளியூர் காவல் துறை உதவி சூப்பிரண்டின் (அ. சா. 8) கடுங் குற்றம் பற்றிய அறிக்கை.	8–12–1981	அரசு.	அ.சா.8.
ஜி. 28	விசாரணைக் கமிஷன் முன்பு அ. சா. 8 காவல் துறை உதவி சூப்பிரண்டு கோபாலகிருஷ்ணா, ஐ.பி.எஸ். கொடுத்த உறுதி மொழிப் பத்திரம்.	8–12–1981	அரசு.	அ. சா. 8.
ஜி. 29	1980ஆம் ஆண்டு செப்டம்பர் 27ஆம் நாளிட்ட "மாலை முரசு" நாளிதழில் பத்திரிகைச் செய்தி.	10–12–1981	அரசு.	அ. சா. 9.
ஜி. 30	திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர், சென்னை-9 அரசுத் தலைமைச் செயலாளருக்கு 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6ஆம் நாளன்று அனுப்பிய ஆர்.சி. எண். கே. 3/131850/80ஆம் எண் நேர்முகக் கடிதம் (இரகசியம்).	10–12–1981	அரசு.	அ. சா. 9.
ஜி. 31	மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளருக்கு 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13ஆம் நாளன்று அ. சா. 9 அனுப்பிய கடிதம் (1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13ஆம் நாளிட்ட 131850/80ஆம் எண் கொண்ட நேர்முகக் கடிதம்).	10–12–1981	அரசு.	அ.சா. 9.

அ. சா.=அரசுச் சாட்சி.

சான்றாவணத்தின் தொடர் எண்.	சான்றாவணத்தின் விவரமும், நாளும்.	இந்த வழக்கில் சான்றாவணம் எந்நாளன்று தாக்கல் செய்யப்பட்டது.	எவ்வாறு குறியிடப்பட்டுள்ளது.	யாரால் தாக்கல் செய்யப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
ஜி. 32	முதலமைச்சரின் செயலாளருக்கு 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21ஆம் நாளன்று பி.ஆர். 12/80ஆம் எண்ணில் அனுப்பிய கடிதம் நேர்முகக் கடிதம் (இரகசியம்).	10–12–1981	அரசு.	அ. சா. 9
ஜி. 33	1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3ஆம் நாளிட்ட ந.கோ. எண். 912/எக்ஸ்/எஸ்.பி./80 ஆம் எண் கடிதம்—திருநெல்வேலி காவல் துறை சூப்பிரண்டு, சென்னை-4-ல் உள்ள காவல் துறை டைரக்டர் ஜெனரலுக்கு அனுப்பிய அறிக்கை.	10–12–1981	அரசு.	அ.சா. 10.
ஜி. 34	திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர், திருநெல்வேலி காவல் துறை சூப்பிரண்டுக்கு 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6ஆம் நாளன்று அனுப்பிய சி.3/131850/80 ஆம் எண்ணில் அனுப்பிய நேர்முகக் கடிதம்.	10–12–1981	அரசு.	அ. சா. 10.
ஜி. 34 (1)	சா.ஆ.ஜி.34-ல் செய்த மேலொப்பம் 1980 அக்டோபர் திங்கள் 6ஆம் நாளிட்ட சி. 3/131850/80ஆம் எண்ணிட்ட நேர்முகக் கடிதம்.	10–12–1981	அரசு.	அ. சா. 10
ஜி. 35	காவல் துறை சூப்பிரண்டு, வள்ளியூர் காவல் துறை உதவி சூப்பிரண்டுக்கு 1980ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15ஆம் நாளன்று அனுப்பிய ஜி.டி.ஆர். 25/80 (வி.எல்.ஆர்) ஆம் எண் குறிப்பு. இந்த நகல் திருநெல்வேலி காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.	10–12–1981	அரசு.	அ. சா. 10.
ஜி. 36	சேரன்மாதேவி கோட்டாட்சியரிடமிருந்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளருக்கு 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13ஆம் நாளன்று அனுப்பப்பட்ட ஆர்.சி. எண். ஏ2/14181/80ஆம் எண் கடிதத்தின் நகல்.	26–2–1982	அரசு.	எல்லாத் தரப்பினரின் ஒப்புதலுடன்

(உண்மை நகல்)

(ஒ.ம்.) செயலாளர்,
நீதியதி கே. எஸ். இராமமூர்த்தி,
விசாரணைக் கமிஷன்.

இணைப்பு X.

நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி விசாரணைக் கமிஷன், பழைய டவர் பிளாக் (தரை தளம்) நந்தனம், சென்னை-35.

விதிமுறைகள்.

1. கமிஷன் தனது விசாரணையைத் திருநெல்வேலி, மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டரையில் நடத்தும்.

2. கமிஷன் தனது விசாரணைகளைத் திருநெல்வேலியில் இரண்டு வேளைகளில் நடத்தும். அதாவது ஞாயிற்றுக்கிழமைகள், அரசு விடுமுறை நாள்கள் நீங்கலாக எல்லா நாள்களிலும் காலை 11·00 மணியிலிருந்து பிற்பகல் 1 மணி வரையிலும் பிற்பகல் 2·30 மணியிலிருந்து மாலை 4·00 மணி வரையிலும் நடத்தும்.

3. இந்த விசாரணையில் பொதுமக்கள் பங்கு கொள்ளலாம். ஆனால், விசாரணையை உரியவாறு நடத்தவும் பொதுவாக பொதுமக்களின் நலன் கருதி கமிஷன் விதிக்கக்கூடிய சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு விசாரணையில் பொதுமக்கள் பங்கு கொள்ளலாம்.

நடைமுறைகள்.

4. கமிஷன் அவ்வப்போது கட்டளையிடுகிறவாறு அழைப்பாணைகள் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு ஒப்புறுதிப் பதிவு அஞ்சலில் அல்லது வேறு வழியில் அனுப்பப்படவேண்டும்.

5. அழைப்பாணைகள் ஒவ்வொன்றும் கமிஷனின் செயலாளரால் கையொப்பமிடப்படவேண்டும். அதில் கமிஷனின் அலுவலக முத்திரை இருக்கவேண்டும். சம்பந்தப்பட்ட நபர் வரவேண்டிய இடமும் காலமும் பற்றி அதில் குறிப்பிடவேண்டும். சாட்சியம் அளிப்பதற்காக அல்லது ஆவணங்களைக் கொண்டு வந்து காட்டுவதற்காக அல்லது இவ்விரு செய்கைகளுக்காகச் சம்பந்தப்பட்ட நபர் வரவேண்டுமா என்பதை அதில் குறிப்பிட வேண்டும்.

6. ஆவணங்களைக் கொண்டு வந்து காட்டுவதற்காக வரவழைக்கப்பட்டவர்கள் தாமாகவோ அல்லது அதிகாரம் பெற்ற ஏஜெண்டு மூலமாகவோ அவற்றைக் கொண்டு வந்து காட்டலாம்.

7. ஒருவருக்காக அல்லது பலபேருக்காக வாதாட வரும் வழக்குரைஞர்கள் தாங்கள் யாருக்காக வாதாட வருகிறார்களோ அவர்களிடமிருந்து வழக்காடுவதற்கான குறிப்புக்களைத் தாக்கல் செய்ய வேண்டும்.

8. சாட்சி ஒருவரின் சாட்சியம் பதிவு செய்யப்படவேண்டிய மொழி, கமிஷன் கட்டளையிட்டவாறு உள்ள மொழியில் இருக்கவேண்டும்.

9. விசாரணையில் உதவுவதற்கு நீதிமன்றத்தில் நீதியை எடுத்துக் கூறும் நடுநிலை அறிவுரையாளராக கமிஷன் எவரையும் நியமிக்கலாம்.

10. பிரமாணமும் உறுதிமொழியும்.—பிரமாணம் எடுத்துக்கொள்வதன் மூலம் கமிஷன் சாட்சியத்தைப் பதிவு செய்ய வேண்டும். அதனைக் கமிஷன் அனுமதிக்கக் கூடிய வழக்குரைஞர்கள் அல்லது மற்றவர்கள் குறுக்கு விசாரணை செய்யலாம்.

11. உறுதிமொழிப் படிவம் பின்வருமாறு இருக்கும்:—

"பிரச்சினையில் உள்ள இந்த விஷயம் குறித்துக் கமிஷனுக்கு நான் கொடுக்கும் சாட்சியம் உண்மை, முற்றிலும் உண்மை உண்மையைத் தவிர வேறு இல்லை என்று எல்லாம் வல்ல இறைவனின் முன்னிலையில் நான் ..... உறுதி கூறுகிறேன்".

12. மேற்சொன்ன படிவத்தில் உறுதியுரை கொடுக்க மறுப்புத் தெரிவிப்பவர்கள் தொடர்பாகப் பின்வரும் சொற்களை அமைத்துக்கொள்ளலாம்.

"பிரச்சினையில் உள்ள இந்த விஷயம் குறித்து கமிஷனுக்கு நான் கொடுக்கும் சாட்சியம் உண்மை; முற்றிலும் உண்மை, உண்மையைத் தவிர வேறு இல்லை என்று நான்.....உளமார உண்மையாக உறுதி கூறுகிறேன்."

13. உறுதிமொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ள நபர்கள் அல்லது சாட்சியம் கொடுக்க முன்வந்துள்ளவர்களின் பெயர்கள் ஒரு பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். அவர்களுக்கு அழைப்பாணைகள் அனுப்பப்படும்போது அது குறித்த குறிப்பு ஒன்று மேற்சொன்ன பதிவேட்டில் எழுதப்பட வேண்டும்.

14. குறிப்பில் எழுதப்பட்ட பிரச்சினை தொடர்பாகச் சாட்சியம் அளிக்கக் கூடியவர் என்று கமிஷனுக்குத் தெரிந்தால் அது ஒருவரை விசாரிப்பதற்கு உரிமையுடையது. கமிஷனின் அனுமதியுடன் வழக்குரைஞர்கள் அல்லது மற்றவர்கள் அந்த நபரைக் குறுக்கு விசாரணை செய்ய உரிமையுடையவர்கள் ஆவர்.

15. கமிஷன் பெற்ற சொத்துக்கள், சான்றாவணங்கள் பற்றிய விவரங்கள் சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும். விசாரணை முடிந்த பின்பு இறுதியில் அவற்றை முடிவு செய்யக் கமிஷன் தகுந்த ஆணைகளைப் பிறப்பிக்கும்.

16. பதிவேடுகளும் நாட்குறிப்புகளும்.—நிர்வாகப் படிவம் 2-ல் கமிஷன் நாட்குறிப்பு ஒன்றை வைத்து வரும். ஒவ்வொரு நாளும் நடவடிக்கை தொடங்கும் நேரத்தையும் அவை முடியும் நேரத்தையும் இந்த நாட்குறிப்பு காட்டும். விசாரணையில் அன்றாடம் ஏற்படும் முன்னேற்றத்தை இது தெளிவாகக்காட்டும். பதிவுகள் எந்த நாளுக்குத் தொடர்புடையனவோ அந்த நாளில் கமிஷன் அப்பதிவுகளுக்குக் கையெழுத்திடும்.

17. நீதிமன்றக் கட்டணங்கள், அழைப்பாணைக் கட்டணங்கள் ஆகியவை படிவம் எண். 12-இல் உள்ள பதிவேட்டில் பதிவு செய்யப்படும்.

18. சாட்சிகளுக்கு அன்றாடப் படி கொடுப்பதற்காக பதிவேடு பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் வைத்து வரப்படும். படிவம் எண். 69, அன்றாடம் தொகை கொடுத்தல் ஆகியவை பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் ரொக்க / நிலுவைப் பதிவேட்டில் (படிவம் எண். 55) எழுதப்படும்.

19. விசாரணைப் புத்தகம் பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் படிவம் எண். 60-இல் வைத்து வரப்படும்.

20. கமிஷனுக்கு அனுப்பப்படும் தகவல்கள் சென்னை-35, நந்தனம், விசாரணைக் கமிஷன் செயலாளருக்கு (பழைய டவர் பிளாக் தரைத் தளம்) அனுப்பப்பட வேண்டும். வைத்து வரப்படும் வரவுப் பதிவேட்டில் அவை பதிவு செய்யப்பட வேண்டும்.

21. விசாரணையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றாவணங்கள் பின்வருமாறு குறியிடப்படவேண்டும்.—

(1) அரசு ஆவணங்களைக் குறிப்பிடும்போது ''ஜி.இ.'' (அரசு சான்றாவணம்) என்றும் அதன் பின்னர் ஜி. இ.1, ஜி.இ.2, ஜி.இ.3 என்று தொடர்ந்து குறியிடப்பட வேண்டும்.

(2) மற்றவர்களுடைய ஆவணங்களை அதாவது, நிறுவனங்களின் உறுப்பினர்கள் அல்லது பொது மக்களின் ஆவணங்களைக் குறிப்பிடும்போது ''பொ. சா'' (பொது மக்கள் சான்றாவணம்) என்ற எழுத்துக்களாலும் அதன் பின்னர் பொ. சா. 1, பொ. சா. 2, பொ. சா. 3 என்று குறியிடப்படவேண்டும்.

(3) கமிஷனின் ஆவணத்தைக் குறிப்பிடும்போது ''க. சா.'' (கமிஷனின் சான்றாவணம்) என்று குறியிடப்படவேண்டும். அதன் பின்னர் க. சா. 1, க.சா. 2, க.சா. 3 என்று தொடர்ந்து குறியிடப்படவேண்டும்.

22. சான்றாவணங்களை அவை கமிஷனாலும் அல்லது குறிப்பிட்ட ஒரு தரப்பினராலும் காட்டப்பட்டால் அராபிக் எண்களில் தொடர்ச்சியாகக் குறியிடப்பட வேண்டும்.

23. விசாரணையில் கலந்து கொள்ளும் அதிகாரிகளுக்கு நீதிமன்ற வருகைச் சான்றிதழ் கொடுக்கப்பட வேண்டும்.

24. அன்றாடப் படி கொடுத்தல்.—சாட்சிகளுக்குக் கொடுக்கப்படும் அன்றாடப் படி கமிஷனின் விருப்பத்தின் பேரில் கொடுக்கப்பட வேண்டும். சிவில் நடைமுறை விதிகளின் கீழும் சுற்றாணைகளின் கீழும் அனுமதிக்கப்படுகிற வீதங்களில் மேற்சொன்ன அன்றாடப் படி நிர்ணயிக்கப்படவேண்டும்.

25. செல்லறைச் செலவுகள்.—செல்லறைச் செலவுகளுக்குத் தொகை கொடுப்பதற்குச் செல்லறைச் செலவுப் பதிவேடு ஒன்று உரிய படிவத்தில் வைத்து வரபடவேண்டும். அளிக்கப்பட்ட தொகைகளைப் பற்றிய விவரங்களைக் காட்டும் ரொக்கப் பதிவேடு வைத்து வரப்பட வேண்டும்.

26. நடைமுறைகளையும் விதிமுறைகளையும் அவ்வப்போது திருத்துவதற்குக் கமிஷனுக்கு உரிமை உண்டு.

(ஒம்) கே. எஸ். இராமமூர்த்தி,
விசாரணைக் கமிஷன்.

(உண்மை நகல்)

(ஒம்) செயலாளர்,
நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி
விசாரணைக் கமிஷன்

இணைப்பு XI.

சங்கனாங்குளம் கிராமத்தைப் பார்வையிட்டது பற்றிய குறிப்புகள்.

பார்வையிட்ட நாள்—25-12-1980.

திருநெல்வேலிக்கு இன்று காலை நான் வந்து சேர்ந்தேன், மதிய உணவு இடைவேளைக்குப் பின்னர் பிற்பகல் இரண்டு மணியிலிருந்து மாலை 5·00 மணி வரை நான் சங்கனாங்குளம் கிராமத்தைப் பார்வையிட்டேன். இந்தக் கிராமத்திற்கு நான் வருவது பற்றி அந்த கிராம மக்கள் அறிந்திருந்ததாகத் தோன்றியது. எனவே, கிராமத்திலுள்ள மக்கள் அனைவரும், ஆதி திராவிட காலனி முழுவதும் ஆண்களும் பெண்களுமாக சுமார் 40 பேர் கூடிவிட்டனர். நான் வந்த செய்தி பற்றி அவர்களுக்கு விளக்கிக் கூறினேன். இக்கிராமத்தில் 17 ஆதி திராவிடப் பெண்களைக் கற்பழித்ததாகச் சொல்லப்படுகிற குற்றச்சாட்டு பற்றியும், மணி என்பவரைக் கொலை செய்ததாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டு பற்றியும் விசாரிப்பதற்காக ஒரு நபர் கமிஷனாக நான் நியமிக்கப்பட்டுள்ளது பற்றியும் அவர்களுக்கு விளக்கினேன். என்னுடைய கடமைகளை முறையாக நிறைவேற்றும் பொருட்டு உண்மையான சாட்சியம் கொடுப்பதன் மூலம் கிராம மக்கள் எனக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று அவர்களிடம் கூறினேன். அந்தக் கிராமத்திற்குச் சென்றபோது அவர்கள் எழுதிய மூன்று முறையீடுகள் பெறப்பட்டுள்ளன. கிராம மக்களை நான் கேட்கும் முன்பே விசாரணை திருநெல்வேலியில் நடைபெறவேண்டுமென்றும், அப்பொழுதுதான் தங்களுக்கு நியாயம் கிடைக்கும் என்றும் விசாரணை நாங்குனேரியிலோ அல்லது கிராமத்திலோ நடத்தப்படக் கூடாது என்றும் அவர்கள் விரும்பினர். அவர்கள் கேட்டுக்கொண்டதனால் நான் விசாரணையைத் திருநெல்வேலியில் நடத்துவது என்று முடிவு செய்தேன். விசாரணைக்குத் தகுந்த இடத்தை முடிவு செய்யுமாறு மாவட்ட ஆட்சியாளருக்குக் கட்டளைகள் பிறப்பித்தேன். கிராமத்திற்கு நான் சென்றபோது மாவட்ட ஆட்சியாளர் திரு டி. எம். ஆறுமுகமும், திருநெல்வேலி காவல் துறை சூப்பிரண்டு திரு ஆர். இராஜகோபாலனும் என்னுடன் வந்தனர். விசாரணை ஆறு வாரங்களுக்குப் பின்னர் தொடங்கும் என்றும் உள்ளூர்த் தமிழ் நாளிதழ்களில், விசாரணை நாள் அறிவிக்கப்படும் என்றும் அக்கிராம மக்களுக்கு நான் கூறினேன். அங்குக் கூடியிருந்த மக்களின் பொதுவான பல புகார்களைக் கேட்டுவிட்டு மாலை 5·30 மணிக்கு அவ்விடத்திலிருந்து திரும்பினேன்.

(ஒம்) கே. எஸ். இராமமூர்த்தி,
விசாரணைக் கமிஷன்.

(உண்மை நகல்)

(ஒம்) செயலாளர்,
நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி
விசாரணைக் கமிஷன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விசாரணைக் கமிஷன் நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி 1981 மார்ச் 6 ஆம் நாளன்று சங்கனாங்குளம் கிராமத்திற்குச் சென்று பார்வையிட்டது பற்றிய குறிப்புகள்:

நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி 6—3—1981 அன்று பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலியிலிருந்து சங்கனாங்குளத்திற்குப் புறப்பட்டு மாலை 4 மணிக்கு அக் கிராமத்தைச் சென்றடைந்தார். அவருடன் காவல் துறை சூப்பிரண்டும், சேரன்மாதேவி கோட்டாட்சியரும் சென்றனர். சங்கனாங்குளம் ஆதி திராவிடர்கள் சார்பாக வழக்குரைஞர்கள் திருவாளர் அசோக் குமாரும், மோசஸ் கனகசபையும் அக்கிராமத்தில் உள்ள சால்வேஷன் ஆர்மி மாதாகோவிலில் கமிஷனைச் சந்தித்தனர். இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிற சில பெண்கள் கமிஷனின் முன் முறையிட வந்தனர். திருமதி இராஜசெல்வம், மஞ்சுளா, புஷ்பம் ஆகியோர் மேற்சொன்னவர் களுடன் இருந்தனர். ஆதி திராவிடர்களின் நலனுக்காகத் தான் ஆதரவாக இருப்பதால் அவருடைய வீடும், அவருடைய தந்தை வீடும் சேதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் தன்னையும், தன்னுடைய அம்மாவையும் எதிர் தரப்பைச் சேர்ந்த (தேவர் வகுப்பினர்) நபர்கள் தாக்கினர் என்றும் சங்கனாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த தேவர் வகுப்பினரான திரு ஸ்டாலின் கமிஷனின் முன் முறையிட்டார். தாக்குதல் பற்றியும் வீடுகள் சேதப்படுத்தப்பட்டது பற்றியும் நிசையின்விளை காவல் நிலையத்தில் தான் புகார் ஒன்றைக் கொடுத்ததாகவும் அவர் கூறினார். வழக்குரைஞர்கள் தங்களது உறுதி மொழிப் பத்திரங்களை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்ட அறையில் 7—3—1981 அன்று பிற்பகல் 1 மணிக்குத் தன்னிடம் கொடுக்குமாறு கமிஷன் கட்டளையிட்டது:

சர்ச்சிலிருந்து ஒரு சில கஜ தூரத்தில் உள்ள கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லப் படுகிற நீரேற்று நிலையத்தைக் கமிஷன் திருநெல்வேலி காவல் துறை சூப்பிரண்டுடனும், சேரன்மாதேவி கோட்டாட்சியருடனும் சென்று பார்வையிட்டது. அதன்பின்னர் மணியின் சடலம் எரிக்கப்பட்ட இடத்தையும் (நீர் ஏற்று நிலையத்திலிருந்து சில கஜ தூரத்தில் உள்ளது) மணியின் எலும்புகள் எறியப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிற கிணற்றையும் வழக்குரைஞர்கள் அசோக் குமாரும், மோசஸ் கனகசபையும் காட்டினர். பின்னர் மாடசாமித் தேவரையும் அவருடைய குழுவினரையும் சந்திக்க சங்கனாங்குளம் கிராமத்திற்குக் கமிஷன் சென்றது. தேவர் வகுப்பினரில் வீட்டிற்கு வெளியே அமர்ந்து வினவ, கமிஷனுக்குநாற்காலி போடப்பட்டது. உறுதிமொழிப் பத்திரங்களைத் தயாரிக்கவும், தங்களுடைய தரப்பைக் கமிஷன் முன்எடுத்துரைக்க வழக்குரைஞர் ஒருவரை அமர்த்தவும் மாடசாமியும் அவருடைய சகோதரர்களும் திருநெல்வேலிக்குச் சென்றுள்ளதாகத் தேவர் வகுப்பினரில் ஒருவர் கூறினார். மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் 7—3—1981 அன்று பிற்பகல் 1 மணிக்கு விசாரணை நடத்தும் கமிஷன் முன் அவர்களுடைய தரப்பை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கமிஷன் அவர்களுக்குத் தெரிவித்தது. விசாரணையை நடத்த அவர்கள் அவைவரும் கமிஷனுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று அவர்களைக் கமிஷன் கேட்டுக் கொண்டது.

பின்னர், மணியின் மரணம் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிற இடத்தையும் மாடசாமி, அவருடைய ஆட்களால் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்ட வீடு களையும் (இவை இருவாளர் ஸ்டாலினுக்கும் அவருடைய தந்தைக்கும் சொந்த மானவை) காவல் துறை சூப்பிரண்டுடனும் சேன்மாதேவி கோட்டாட்சியருடனும் கமிஷன் சென்று பார்வையிட்டது.

கமிஷன் மாலை 5-40க்குப் புறப்பட்டுத் திருநெல்வேலியை மாலை 6-45 மணிக்குச் சென்றடைந்தது.

(ஒம்) கே. எஸ். இராமமூர்த்தி,
விசாரணைக் கமிஷன்.

(உண்மை நகல்)

(ஒம்) செயலாளர்,
நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி
விசாரணைக் கமிஷன்.

விசாரணைக் கமிஷன் நீதிபதி திரு. கே. எஸ். இராமமூர்த்தி 29—3—1981 ஞாயிற்றுக் கிழமை கீழ்க்கண்டவர்கள் முன்னிலையில் சங்கனாங்குளம் கிராமத்தைச் சென்று பார்வையிட்டது பற்றிய குறிப்புகள்.

திரு. வெங்கடாச்சாரி—தேவர் வகுப்பினருக்கான வழக்குரைஞர்.
திரு மோசஸ் கனகசபை, திரு டேவிட்—ஆதி திராவிடர்களுக்கான வழக்குரைஞர்கள்
திரு பெரியநாயகம்—அரசுக்கான வழக்குரைஞர்.
திரு நடராஜன்—காவல் துறை இணை சூப்பிரண்டு.
கோட்டாட்சியர் (பொறுப்பு) சேரன்மாதேவி கோட்டம்.
வட்டாட்சியர், நாங்குநேரி.
திரு அருணாசலம்—காவல் துறை இன்ஸ்பெக்டர், கமிஷனின் பணியாளர்கள்.

எல்லாத் தரப்பினருக்குமான வழக்குரைஞர்கள், கோட்டாட்சியர், வருவாய்த் துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் ஆகியோருடன் நான் திருநெல்வேலி ஆய்வு மாளிகையை விட்டுச் சுமார் 7 மணிக்குப் புறப்பட்டேன்.

காலை சுமார் 8-15 மணிக்கு நான் சங்கனாங்குளம் கிராமத்தைச் சென்றடைந்தேன். கீழே குறிப்பிட்டுள்ள இடங்களில் அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் கற்பழிக்கப்படுகிறதாகச் சொல்லப்படுகிற எட்டுச் சம்பவங்களை ஆதி திராவிடர்களுக்கான வழக்குரைஞர் எடுத்துரைத்தார்.

(1) நீரேற்று அறை . . . . . 1. இராஜசெல்வம்.
2. பாப்பம்மாள்.
3. வசந்தி.

(2) 4, 5 இலங்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்குச் சொந்தமான வீடு. 4. மஞ்சுளா.
5. வசந்தா.

(3) அரிசி ஆலை . . . . . 6. கிரேஸ்.

(4) புதர்களுக்கு நடுவே . . . . . 7. பிரேமா த./பெ. ராஜ்.

(5) வாழைத் தோப்பு (இணைற்றுக்குகே) . . . . 8. மைக்கேல் அம்மாள்.
ஏசுவடியான்.

வழக்குரைஞர்கள் அனைவரையும் கலந்தாலோசித்து அவர்களுடைய கருத்துரையின் பேரில் பின்வரும் இடங்களில் பார்வையிடுவதென்று முடிவு செய்யப்பட்டது. கிராமத்தில் வேறு எந்த இடத்தையும் நான் பார்வையிட வேண்டியதில்லை என்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(1) சால்வேஷன் ஆர்மி கட்டிடத்திற்குத் தெற்குப் பக்கத்தில் ஒரு பர்லாங் தூரத்தில் உள்ள நீரேற்றும் அறையைப் பார்வையிடுதல்.

(2) மணியின் சடலம் எரிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிற இடத்தைப் பார்வையிடுதல்.

(3) மணியை அடித்துக் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிற இடத்தைப் பார்வையிடுதல்.

(4) கற்பழிக்கப்பட்ட பெண்களின் வீடுகளைப் பார்வையிடுதல்.

(5) மணியின் எலும்புகள் எறியப்பட்டதாகச் சொல்லப்படுகிற கிணற்றைப் பார்வையிடுதல்.

நீரேற்று அறை.—நீரேற்று அறையின் பரப்பளவு சுமார் 10′ × 12′ உள்ளது. கிழக்குப் பக்கத்திலும் மேற்கு சுவரிலும் சன்னல்கள் உண்டு. பூட்டுவதற்கான வசதியுடன் கதவுகளும் உண்டு. நுழைவாயிலில் வெளிப்பக்கத்திலிருந்தும், உள்பக்கத்திலிருந்தும் பூட்டிக்கொள்ளும் வசதியுடன் கதவு ஒன்று உள்ளது. மேற்சொன்ன அறையில் மின் விளக்கு போடப்பட்டுள்ளது. கூரையின் உயரம் சுமார் 7 அடி ஆகும். உத்திரம் போடப்பட்ட கூரை. மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் கிணற்றில் அதிகத் தண்ணீர் இருக்குமென்று என்னிடம் கூறப்பட்டது. இப்பொழுதுகூட பக்கத்தில் வாழைத் தோப்பு அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளது. கிணற்றுக்கு அருகே கற்பழிப்பு நடை பெற்ற சமயத்தில் மிளகாய்ப் பயிர் விளைவிக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது. மிளகாய்ப் பயிருக்கு மணி நீர் பாய்ச்சினார். சிவந்தியாபுரம் கிராமம் நீரேற்று அறையிலிருந்து சுமார் 1 மைல் தொலைவிலுள்ளது.

நீரேற்று அறையில் கற்பழிக்க வேண்டும் என்று ஒருவர் நினைத்தால் அங்குப் போதுமான வசதியுள்ளது. மணியின் சடலம் எரிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிற இடத்திற்கு (கிணற்றிலிருந்து கிழக்குப் பக்கத்தில் சுமார் 1 பர்லாங் தொலைவிலுள்ள) நாங்கள் அடுத்ததாகச் சென்றோம். சடலம் எரிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிற ஒரு

குறிப்பிட்ட இடம் காட்டப்பட்டது. அந்த இடம் முழுவதும் முட்புதர்களால் சூழப் பட்டுள்ளது. அந்த இடம் பனை மரத் தோப்புக்கு நடுவே உள்ளது. நெருப்புப் பட்டதற்கான அடையாளம்கொண்ட சில கற்கள் அங்கே இருந்ததை நான் கண்டேன். மணியின் உடலை எரிப்பதற்கு அக்கற்கள் பயன்படுத்தப்பட்டன என்றும், விசாரணைக்காக காவல் துறையினர் சில கற்களை எடுத்துச் சென்றனர் என்றும் ஆதி திராவிடர்களுக்கான வழக்குரைஞர் திரு மோசஸ் கனகசபையும், திரு டேவிட்டும் கூறினர். உதாரணமாக தீப்பட்டதற்கான அடையாளங்கொண்ட ஒரு கல்லை எடுத்துக்கொள்ளுமாறு நான் என்னுடைய பணியாளர்களுக்குக் கட்டளையிட்டேன். இதேமாதிரி அடையாளங்கள் கொண்ட சில கற்களும் என்னிடம் காட்டப்பட்டன. மேற்சொன்ன கற்கள் முன்பு அங்கு இல்லை என்று திரு வெங்கடாச்சாரி மறுத்தார். இது குறித்து முன்னுக்குப் பின் முரண்பாடான கருத்து உள்ளது. முன்பு இதே போன்ற கற்கள் அங்கு இருந்தன என்றும் காவல்துறையினர் விசாரணைக்காகச் சில கற்களை எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் திரு கனகசபை உறுதிப்படுத்தினார். திரு வெங்கடாச்சாரி கேட்டுக்கொண்டதன்பேரில் மணி எரிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிற இடத்திலிருந்து ஒரு சில அடி தொலைவிலிருந்து கறுப்பு நிறத்திலான இதேபோன்ற ஒரு கல் எடுக்கப்பட்டது. இதேபோன்ற கறுப்பு நிறக் கற்கள் அந்த இடத்தைச் சுற்றிலும் அதிக அளவில் இருப்பதைத் திரு வெங்கடாச்சாரி காட்டினார். கள்ளத்தன மாகச் சாராயம் காய்ச்சப்படுகிற இடத்தையும் இந்தக்கற்கள் அடுப்புக்களாகப் பயன் படுத்தப்பட்டு வருவதையும் தியோடு சம்பந்தப்படுவதால் அவை கறுப்பாக இருக்கின்றன என்பதையும் அவர் எனக்குக் காட்டினார். மணியின் சடலம் எரிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிற இடத்திற்கு வெகு அருகாமையில் உள்ள செடிகளும் முட்புதர்களும் கருகிய அடையாளமும் அல்லது இப்பட்ட அடையாளமும் இல்லாமலிருந்தன. செடிகளும் புதர்களும் பச்சைநிறமாகவே உள்ளன. மணியின் சடலம் எரிக்கப்பட்ட இடத்திலிருந்து சுமார் 1 பர்லாங் தொலைவில் வழக்கமான கடுகாடு அமைந்துள்ளது என்று திரு கனகசபை மோசஸ் கூறினார். திரு கனகசபை கேட்டுக்கொண்டதன் பேரில், மணியின் சடலம் எரிக்கப்பட்ட இடத்திலிருந்து சுமார் 20 கரித்துண்டுகள் (எலும்புத்துண்டு என்று திரு கனகசபை கூறும் ஒரு துண்டு உட்பட) எடுக்கப்பட்டன. முட்புதர்களைச் சுற்றிலும் (இந்த இடத்தில் மணியின் சடலம் எரிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது) நிலம் தரிசாக உள்ளது.

மணியின் உடலில் உள்ள எலும்புகள் எறியப்பட்டதாகச் சொன்ன கிணற்றையும் நான் பார்த்தேன். இதுபற்றி குறிப்பிட்ட கருத்து எதுவும் இல்லை. மேற்சொன்ன கிணறு திரு சுந்தரராஜன் என்பவருக்குச் (அவர் இறந்த விட்டார்) சொந்தமானது. அவருடைய மகன் சுப்பன். கிணற்றுக்குப் பக்கத்தில், தீப்பட்டதற்கான அடை யாளங்களைக்கொண்ட கற்களை திரு வெங்கடாச்சாரி எனக்குக் காட்டினார். மேற்கொண்டும் ஆராய்ந்ததில் அந்த இடம் கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதை நான் கண்டேன். அங்கு இரண்டு அடுப்புகள் உள்ளன. திரு வெங்கடாச்சாரி கேட்டுக்கொண்டதன் பேரில் எனதுடைய பணியாளர்கள் சாட்சியத்திற்காக ஒரு கல்லை அங்கிருந்து எடுத்துக்கொண்டனர்.

நாங்குநேரி-திசையன்விளை முக்கிய சாலையில் உள்ள வண்டிப்பாதையை நான் பார்வையிட்டேன். அடுத்து நாங்கள் ஆதி திராவிடர் குடியிருப்புக்குச் சென்றோம். சால்வேஷன் ஆர்மி கட்டிடத்திற்கு எயரே ''திரட்சண்ய சேனை மண்டபம்'' என்று தமிழிலும் ''சால்வேஷன் ஆர்மி'' என்று ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளதைப் பற்றி திரு வெங்கடாச்சாரி என்னிடம் காட்டினார்.

திரு கனகசபை காட்டிய சிலந்த ஒரு வீட்டுக்கு நாங்கள் சென்றோம். கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிற மஞ்சுளாவிற்கு அது சொந்தமானது என்று தெரிவிக்கப்படுகிறது. வீட்டிற்கு உள்ளேயிருந்து கதவைப்பூட்டிக் கொள்வதற்கான ஏற்பாடுகள் அங்கு இல்லை. ஆனால், பின்பக்கக் கதவில் அத்தகைய ஏற்பாடு உள்ளது.

மஞ்சுளாவின் வீட்டிற்கு அடுத்து மேற்குப் பக்கத்தில் மதகுருவின் (பாஸ்டர்) வீடு உள்ளது. வீட்டிற்குத் தெற்கே வானொலி அறை ஒன்று உள்ளது. அடுத்து நாங்கள் கிரேஸின் வீட்டிற்குச் சென்றோம்.

பின்னர் நாங்கள் இராஜ் என்பவரின் மகனான வசந்தாவின் வீட்டிற்குச் சென்றோம். வசந்தா மூத்த சகோதரி. பிரேமா இளைய சகோதரி. இருவரும் வீட்டிலிருந்தனர். சங்கரத்தேவர் வசந்தாவையும் சின்னத்தம்பித் தேவர் பிரேமாவையும் கற்பழித்ததாகச் சொல்லப்படுகிறது. வசந்தாவைக் கற்பழித்த நபர் இரவில் கதவைத் தட்டி உள்ளே வந்தார். அப்போது பிரேமா வீட்டில் இல்லை. பிரேமாவின் அம்மா மருத்துவ மனையில் உள்ள பிரேமாவின் அப்பாவைக் கவனிக்கத் தூத்துக்குடி சென்றிருந்தார். (இது சாட்சியமாகும்) (இந்த மாதிரி வீடுகளில் கற்பழிக்க வேண்டும் என்று ஒருவர் வீரும்பினால் அம்மாதிரி வீடுகளில் கற்பழிப்பதற்கான வாய்ப்பு உள்ளது). ஒவ்வொரு வீட்டிலும் திறந்த வெளி தனியே உள்ளது. 8 அடி முதல் 10 அடி வரை இடைவெளியில் இந்த வீடுகள் பிரிக்கப்பட்டுள்ளன.

வசந்தாவின் வீட்டிற்கு அடுத்து கிழக்கே இராஜசெல்வத்தின் வீடு உள்ளது. அதாவது, இறந்துபோன மணியின் வீடு உள்ளது. மணியின் சடலம் எடுத்துச்செல்லப் பட்டுத் தேவர் வகுப்பினரால் வைக்கப்பட்ட மேடையைத் திரு கனகசபை என்னிடம் காட்டினார். இராஜசெல்வத்தின் வீட்டுக் கதவிற்கு அருகே உள்ள சுவரில் ஒரு குறிப்பு உள்ளது. அதாவது, 12—9—1975-லிருந்து 18—7—1979 வரை பெருமாள் என்பவரின் மனைவி வள்ளியம்மாள் என்று எழுதப்பட்டிருந்தது. இந்தக் குறிப்புப் பற்றி என்னிடம் காட்டப்பட்டது. ஆனால் அதுபற்றி எனக்கு எந்தவிதக் கருத்தும் ஏற்படவில்லை.

பின்னர், தேவர் வகுப்பினர் வசிக்கின்ற சங்கனாங்குளம் கிராமத்தின் பகுதிக்குச் சென்றேன். சங்கரத்தேவர், அவருடைய சகோதரர்கள் உள்ள வீடுகளுக்கு நான் சென்று பார்வையிட்டேன். ஒன்றை ஒன்று பார்க்கின்ற வகையில் இரு பக்கங்களிலும் ஒரே வரிசையில் அந்த வீடுகள் கட்டப்பட்டிருந்தன. தேவர் வகுப்பினர் மணியை அடித்துக் கொன்றதாகச் சொல்லப்படுகிற தெருவின் சந்திப்புக்கு நான் சென்றேன். அந்த இடத்தை நான் பார்வையிட்டேன். அந்தத் தெருவின் பெயர் வடக்குத் தெருவாகும். அங்கு மாடசாமியும் அவருடைய சகோதரர்களும் வசிக்கின்றனர். மணி அடித்துக் கொல்லப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிற இடமும் இந்த சம்பவத்தைப் பார்த்த காசியும் சிங்கும் பார்த்த இடமும் எனக்குக் காட்டப்பட்டன. அதாவது, தெருவின் சந்திப்புக்களிலும் தெருவின் கிழக்குப் பக்கத்திலும் உள்ள இடம். அங்கு ஒரு வழி உள்ளது. அந்த இடத்திற்குக் கிழக்கே (மணி அடித்துக் கொல்லப் பட்ட இடம்) ஒரு சிறிய குடிசை உள்ளது. திரு. வெங்கடாச்சாரியின் கூற்றுப்படி அங்கு ஒரு டீக்கடை இருந்தது என்றும் ஆனால், கனகசபையின் கூற்றுப்படி சம்பவம் நடந்த சமயத்தில் அது வெற்று நிலமாக இருந்தது என்றும் முரண்பாடான கருத்துக் கள் உள்ளன.

குடிசைக்குப் பயன்படுத்தப்பட்ட ஓலைகள் புதிதாகத் தோன்றுவதாக திரு டேவிட் கூறினார். டீக்கடையின் நுழைவு வாயிலுக்கு வெளியே ஆட்டுக்கல் ஒன்று உள்ளது. அரிசி ஆட்டப்பட்டு வருவதை அது குறிப்பிடுகிறது. கொட்டகைக்கு உள்ளே பழைய அடுப்பு இருப்பதை நான் பார்த்தேன். அது டீக்கடைக்குப் பயன்படுத்தப்பட்டிருக்க லாம். (டீக்கடை இருப்பது அல்லது வெற்று நிலம் இருப்பது சம்பந்தப்பட்ட தரப்பின ரால் மெய்ப்பிக்கப்பட வேண்டும்.) அது ஒரு சாட்சியமாகும். இது குறித்து தரப்பினர் வாய்மொழிச் சாட்சியம் கூறுமாறு நான் விரும்புகிறேன்.

மணி அடித்துக் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிற இடத்திலிருந்து சுமார் 60 அடி தொலைவில் கிழக்குப் பக்கத்தில் காசியும் அவருடைய சகோதரர் சிங்கும் வண்டியில் வைக்கோல் ஏற்றிக் கொண்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது. திறந்தவெளி வழியே நிகழ்ச்சியை அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தனர்.

மணி அடித்துக் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிற இடத்தை எல்லாத் தரப் பினரின் ஒப்புதலுடன் காசியும் சிங்கும் காட்டியவாறு நிழற் படத்தில் குறித்துக்கொள்ளப் பட்டது. மணியின் சடலம் காலனிக்கு எடுத்துச் செல்லப்பட்ட தெருவை நான் பார்த்தேன். மணி அடித்துக் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிற இடத்திலிருந்து 10 அடி தொலைவில் கிணறு ஒன்று உள்ளது. அது ஒரு பொதுக்கிணறாகும். பாத் திரங்களைக் கழுவுவதற்கும், பிறவற்றுக்கும் அந்தக் கிணற்றின் நீர் பயன்படுத்தப்படு கிறது. குடிப்பதற்கும், சமைப்பதற்கும் அந்த நீரைப் பயன்படுத்த முடியாது. கிணற்றில் நிறையத் தண்ணீர் இருந்தது. நான் அந்த இடத்தைப் பார்வையிட்ட போதும், சங்கனாங்குளத்தில் உள்ள மக்கள் கிணற்று நீரைப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். கிணற்றிலிருந்து அவர்கள் நீரிரைத்துக் கொண்டிருந்தனர். மணியின் சடலம் மாட்டு வண்டியில் எடுத்துச் செல்லப்பட்ட பாதை மணியின் வீட்டைச் சென்றடைகிறது.

மணி அடித்துக் கொல்லப்பட்ட இடத்திற்குப் பக்கத்தில் சந்திரசேகரனின் வீடும், நீலகண்டத் தேவரின் வீடும் உள்ளன. அங்கு நீலகண்டனின் தந்தையும், சகோதரரும் தற்போது வசிக்கின்றனர்.

திரு சுந்தையாத் தேவர் வசிக்கின்ற (பாண்டித் தேவரின் மருமகன்) பாண்டித் தேவரின் வீட்டின் மாடிப்படிகளில் நான் ஏறி நின்றேன். இது பார்வையிட்டுப்பட வேண்டிய ஒரு முக்கியமான இடமாகும். ஏனெனில், இந்த மாடியிலிருந்துதான் ஸ்டாலின் என்பவர் மணி அடிக்கப்பட்டதைப் பார்த்தார். அந்த சமயத்தில் மாடியில், அவிக்கப் பட்ட நெல்லை ஸ்டாலின் உலர வைத்துக் கொண்டிருந்தார். அவர் வராந்தாவிற்கு வரும்போது, தேவர் வகுப்பினர் மணியை அடித்துக் கொலை செய்வதை அவர் பார்த்தார். இவற்றை நான் கவனத்துடன் குறித்துக்கொண்டேன். பனை ஓலைகளால் அந்த இடம் நெருக்கமாக மூடப்பட்டிருந்தது. அவற்றை முற்றிலும் அகற்றிவிட்டால் அந்த இடத்தைப் பார்க்க இயலாது என்பதை நான் அறிந்தேன். இது சாட்சியத்தின் விரிவான கூறாகும். ஏனெனில், நிகழ்ச்சி நடந்த சமயத்தில் பனை ஓலைகள் அந்த இடத்தில் இல்லை என்றும், நிகழ்ச்சி நடந்த பின்னர் அவை அங்கு போடப்பட்டன என்றும் ஸ்டாலின் கூறுகிறார். பனை ஓலைகள் அங்கு இல்லாமலிருந்தாலும் அடுத்த வீட்டிலிருந்து தடை உள்ளது. அங்குப் பனை ஓலைகள்

கட்டி வைக்கப்பட்டிருந்தன. படிக்கட்டைப் பொறுத்தவரை, மழையிலிருந்தும், வெளியிலிருந்தும் பாதுகாப்பதற்காக வெளிப்பக்க சுவருக்கு அருகே அவை வைக்கப் பட்டிருந்தன. இந்த வீட்டின் சொந்தக்காரர் பூலோக பாண்டித் தேவர் ஆவார். தேவர் வகுப்பினருக்கு அவர் உறவினர். இவர் இலட்சுமணத் தேவரின் சித்தப்பா ஆவார். பூலோக பாண்டித் தேவர் வீட்டிலுள்ள பனை ஓலைகள் புதியவை என்றும் சம்பவம் நடந்த சமயத்தில் அவை அங்கு இல்லை என்றும் ஸ்டாலின் முரண்பாடான கருத்தை கூறினார். தேவர் வகுப்பினர் மணியை அடித்ததை ஸ்டாலின் பார்ப்பதற் கான சாத்தியக் கூறு பற்றி ஒரு சரியான கருத்தை என்னால் உருவாக்க முடியவில்லை. இது குறித்து தரப்பினர் சாட்சியம் கூறுமாறு நான் எதிர்பார்க்கிறேன். இது குறித்து முக்கியமான தொடர்புடைய சாட்சியத்தைக் கூறுமாறு நான் வழக்குரைஞர்களுக்குத் தெரிவித்துள்ளேன். இது குறித்து இரு தரப்பினரும் சொல்லக்கூடிய சாட்சியத்தின் பேரிலேயே நான் என்னுடைய சரியான கருத்தைக் கூற முடியும்.

அடுத்து இரண்டு வீடுகளும் இராஜதுரைத் தேவருக்கும் காசித் தேவருக்கும் சொந்த மானவை. எதிர் வரிசையில் உள்ள வீடுகள் வேறு சிலருக்குச் சொந்தமானவை. இராஜதுரைத் தேவர் வீட்டிற்கு எதிர் வீட்டிலுள்ளவர் தனுஷ்கோடி தேவர் ஆவார் என்று சொல்லப்படுகிறது. தனுஷ்கோடி தேவர் வீட்டிற்கு வடக்குப்பக்கம் சண்முக சுந்தரத் தேவருக்குச் சொந்தமான வீடு உள்ளது. இந்தத் தெரு முழுவதும் மக்கள் இருப்பதாகத் தோன்றுகிறது.

பின்னர் 'ஸ்ரீ சிவக்பிரமணியம் ரைஸ் மில்' என்ற பெயர் கொண்ட அரிசி ஆலைக் குச் சென்றோம். அது தெற்கு விஜயநாராயணத்தில் அமைந்துள்ளது. சங்கரத்தேவர் கிரேஸ் என்பவரை இங்கு கற்பழித்ததாகச் சொல்லப்படுகிறது. நெல் அரைப்பதற்காக சங்கனாங்குளம் கிராம காலனியிலிருந்து வருவார் என்றும், அச்சமயத்தில் அவர் கற்பழிக்கப்பட்டார் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (இது ஒரு சாட்சியாகும்). அரிசி ஆலையிலிருந்து முறையான சாலை வழியாக சுமார் 6 கிலோ மீட்டர் தொலைவில் சங்கனாங்குளம் கிராமம் அமைந்துள்ளது. ஆனால், அரிசி ஆலைக்குப் பக்கத்தில் சங்கனாங்குளத்திலிருந்து ஒரு பாதை வருகிறதென்றும், வருவாய்த்துறை ஆய்வாளர் கூற்றுப்படி அது சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவு என்றும் சொல்லப்படுகிறது. அரிசி ஆலையின் நுழைவு வாயிலுக்கு மிகக்கே ஆதி திராவிடர்களின் வீடுகள் நெருக்கமாக உள்ளன. அங்கு ஆண்களும் பெண்களும் வசிக்கின்றனர். ஆலைக்குப் பக்கத்தில் முக்கிய சாலை உள்ளது. அரிசி ஆலைக்குப் பக்கத்தில் பேருந்து நிறுத்துமிடம், டீக்கடை ஆகியவை உள்ளன. சங்கரத்தேவர் கற்பழித்ததாகச் சொல்லப்படுகிற நாளன்று அங்கு 3 பேர் வேலையிலிருந்தனர் என்றும் சொல்லப்படுகிறது. இது ஒரு சாட்சிய மாகும். நான் எந்தவிதக் கருத்தும் சொல்லவில்லை.

இதற்கு மேல் நான் பார்வையிடப்பட வேண்டிய இடங்கள் ஒன்றுமில்லை என்று சம்பந்தப்பட்ட தரப்பினரின் வழக்கறிஞர்கள் அனைவரும் கூறினர். நாங்கள் அனைவரும் ஆய்வு மாளிகைக்கு நண்பகல் 12-45-க்குத் திரும்பினோம்.

கே. எஸ். இராமமூர்த்தி,
விசாரணைக் கமிஷன்.

(உண்மை நகல்)

(ஒ-ம்) செயலாளர்,
நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி
விசாரணைக் கமிஷன்.

நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி விசாரணைக் கமிஷன் 19—5—1981 அன்று சங்கனாங்குளம் கிராமத்திற்குச் சென்று பார்வையிட்டது பற்றிய குறிப்புகள்.

வழக்குரைஞர்கள் திருவாளர்கள் பெரியநாயகம், டேவிட், அசோக் குமார், கார்த்தீசன், முருகேசன் ஆகியோருடனும் சிறப்புப்பிரிவு இன்ஸ்பெக்டர் திரு இராமசாமியுடனும் என்னுடைய பணியாளர்களுடனும் நான் ஆய்வு மாளிகையை விட்டு 4-00 மணிக்குப் புறப்பட்டு மாலை 5-15 மணிக்குச் சங்கனாங்குளம் கிராமத்தைச் சென்றடைந்தேன்.

2. சங்கரத்தேவரின் வீட்டின் கொல்லைப்புறத்தை முதலில் கண்டோம். களத்தை நோக்கித் தெற்கிலிருந்து வடக்காகவும் மேற்குநோக்கி மின்சாரக் கம்பத்திற்கும், மாட்டு வண்டியில் காசியும் இராஜசிங்கும் வைக்கோலை ஏற்றியதாகச் சொல்லப்பட்ட இடத்திற்கு மேற்கு நோக்கியும் மணி அடித்துத் தள்ளப்பட்டதாகச் சொல்லப்பட்டது. சங்கரத்தேவரின் வீட்டின் கொல்லைப்புறத்திலிருந்து போரடிக் களம் வரையில் உள்ள வழி முழுவதும் முட்புதர்கள் நிறைந்துள்ளன. இந்தப் பாதையைச் சங்கரத்தேவர் தெரிந்தெடுத்திருப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை. சங்கரத்தேவரின் வீட்டின் கொல்லைப் புறத்திலிருந்து களத்திற்கு வர வெகு நேரமாகும். சங்கரத்தேவரின் வீட்டின் கொல்லைப்புறத்தில் பனை ஓலைகளினால் அமைந்த வலுவான வேலி ஒன்று அமைந்துள்ளது. இது, அவரது வீட்டின் கொல்லைப்புறத்தின் சுற்றுப்புறச் சுவராக அமைந்துள்ளது. இதில் 9 அங்குலம் அகலமுள்ள குறுகிய வாயில் ஒன்று உள்ளது. இந்த வாயிலைத்தவிர வேறு எந்த வழியும் சங்கரத்தேவரின் வீட்டின் கொல்லைப் புறத்தில் நுழைய பயன்படுத்த முடியாது. களிமண்ணால் ஆன சுவர் ஒன்று உள்ளது. அதன் நெடுக கனமான பனை ஓலைகள் வேயப்பட்டு பாதுகாப்பாக அமைந்துள்ளது. சங்கரத்தேவரின் வீட்டின் கொல்லைப் புறத்தில் வைக்கோல் வைக்குமிடம் ஒன்று உள்ளது.

3. காசியும் இராஜசிங்கும் வைக்கோலை ஏற்றிக் கொண்டிருந்த களத்திலும் முட்புதர்கள் உள்ளன. இந்த இடம் காலியான மனை அல்ல. இதைக் களம் என்றே சொல்ல முடியாது. ஆனால், இதைச் சுற்றி வைக்கோல் போடப்பட்டுள்ளது. வண்டிப்பாதையின் ஊடே மேற்கு நோக்கிச் சென்றேன். மணி அடித்துக் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படும் இடத்தில் நின்றேன். களத்திலிருந்து இந்த இடம் சுமார் 200 அடி மேற்கில் உள்ளது. கொலை நடந்ததாகச் சொல்லப்படும் இடம் மின்சாரக் கம்பத்திலிருந்து ஒரு சில அடி தள்ளி உள்ளது. அதாவது, நான்கு சாலை சந்திப்பின் அருகே அமைந்துள்ளது.

4. களத்தில் நின்றுகொண்டிருக்கும் ஒருவர் சங்கரத்தேவர் அவருடைய ஆட்களுடன் மணியை அடித்துக்கொன்றதாகச் சொல்லப்பட்டதிலிருந்து எவராவது விழுந்து கிடந்தால் பார்க்க முடியுமா என்பதை சோதனை செய்து பார்த்தேன். இத்தகைய தொலைவிலிருந்து அதாவது 200 அடி தொலைவிலிருந்து அங்கு நடக்கும் நிகழ்ச்சியைப் பார்க்க முடியாது என்பதை நான் கண்கூடாகக் கண்டேன். அடுத்ததாக களத்தின் அருகே வண்டிப்பாதையில் காசியை நிற்குமாறு சொல்லி மணி அடித்துக் கொல்லப்பட்டதாகச் சொல்லப்பட்ட இடத்தில் நான் நின்று கொண்டேன். நான் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து சில வார்த்தைகளைச் சொன்னேன். சில வார்த்தைகளை உரக்கவும் சொன்னேன். ஆனால், நான் சொன்னதைக் காசியால் கேட்க இயலவில்லை. ஒரே ஒரு முறைதான் நான் மிகவும் உரக்கச் சொன்னதை அவரால் கேட்கமுடிந்தது. எனவே, வண்டிப்பாதையில் களத்தின் அருகே நிற்கும் ஒருவர் கொலை நடந்ததாகச் சொல்லப்படும் இடத்திலிருந்து ஒருவர் கூக்குரலிடுவதைக் கேட்க முடியாது என்பதுதான் எனது கருத்தாகும்.

5. மணி அடித்துக் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படும் இடம் மக்கள் புழங்கும் இடமாகும் என்பதை என்னுடைய ஆய்வுக்குறிப்புகளில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். மணி அடித்துக் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படும் இடம் பற்றிய விவரங்களை மீண்டும் எடுத்துரைக்கவேண்டிய அவசியமில்லை. சாலைச் சந்திப் பிலிருந்து சேரிக்குச்செல்லும் வண்டிப்பாதையையும் பார்த்தேன். சாலைச் சந்திப்பிலிருந்து வண்டி ஒன்று சேரிக்குச் செல்ல முடியும் என்பது தெளிவாகிறது. காசி எனக்கு வேறு ஒரு வண்டிப்பாதையைக் காண்பித்தார். இப்பாதை வழியாகத் தான் மணியின் சடலத்தை எடுத்துச் சென்ற மாட்டு வண்டி சென்றது என்று காசி கூறினார். எனவே. இதுபற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை.

6. சுற்றுலா மாளிகைக்கு இரவு 8—45 மணியளவில் நாங்கள் திரும்பினோம்.

கே. எஸ். இராமமூர்த்தி,
விசாரணைக் கமிஷன்.

(உண்மை நகல்)

(ஒ-ம்) செயலாளர்,
நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி
விசாரணைக் கமிஷன்.

விசாரணைக் கமிஷன் நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி 1981 அக்டோபர் 17ஆம் நாள் சனிக்கிழமை அன்று சங்கனாங்குளம் சென்று பார்வையிட்டது பற்றிய ஆய்வுக் குறிப்புகள் :

தேவர் வகுப்பினரின் வழக்குரைஞர் திரு. வெங்கடாச்சாரி, ஆதி திராவிடர்களின் வழக்குரைஞர் திரு. அசோக் குமார், அரசு தரப்பு வழக்குரைஞர் திரு. பெரியநாயகம், கமிஷன் வழக்குரைஞர் திரு. ஜான் பொன்னையா, காவல் துறையின் சிறப்பு குற்றப் புலனாய்வு பிரிவு இன்ஸ்பெக்டர் திரு. எஸ். இராமசாமி, நாங்குனேரி வட்டம் தாசில்தார், கமிஷன் பணியாளர் ஆகியோர் முன்னிலையில் திருநெல்வேலியிலுள்ள சுற்றுலா மாளிகையிலிருந்து சம்பந்தப்பட்ட எல்லா தரப்பு வழக்குரைஞர்களுடன் காலை 7–15 மணியளவில் புறப்பட்டேன். காலை 8–20 மணியளவில் நாங்கள் சங்கனாங்குளம் போய்ச் சேர்ந்தோம். கிழக்கு சங்கனாங்குளத்திலுள்ள (தேவர் வகுப்பினரின் குடியிருப்பு) மாதா கோவிலைச் சென்று பார்த்தேன். இது சவேரியார் கோயில் என்று அழைக்கப்படுகிறது. இங்கு தான் சப்-இன்ஸ்பெக்டர் திருஞானசாமி, 21–6–1980 அன்று தன்னுடைய விசாரணையை நடத்தியதாகச் சொல்லப்படுகிறது. இந்த இடம் முழுவதும் திறந்த வெளியாகும். இன்ஸ்பெக்டர் விசாரணை நடத்தியதாகச் சொல்லப்படும் நேரம் பிற்பகல் 12 மணி கடும் வெயிலில் திருஞானசாமி தலனுடைய விசாரணையை நடத்தியிருப்பார் என்பது நடைமுறைக்கு ஒவ்வாதது ; நம்பமுடியாதது.

சங்கரத் தேவர் வீட்டில் பின்புறம் அமைந்துள்ள சண்முகசுந்தரம் வீட்டின் அமைப்புப் பற்றி திரு. டேவிட் சண்முகசுந்தரத்தைக் குறுக்கு விசாரணையில் பல கேள்விகள் கேட்டார். அவை இந்த வழக்கிற்கு முற்றிலும் தொடர்பில்லாதது. சங்கரத் தேவர் சண்முகசுந்தரத்தைக் கூப்பிடப் பின்புறம் செல்ல வேண்டிய தேவையே யில்லை.

அடுத்ததாகக் கந்தையா தேவரின் வீட்டை நான் சென்று பார்த்தேன். இது மிகவும் சிறிய வீடு. ஒரே ஒரு சிறு அறைதான் இங்கு உள்ளது. குறிப்பிடத் தகுந்த நிலையில் வேறு எந்த அறையும் இல்லை. பின்புறத்தில் ஆடு மாடுகள் கட்டப்பட்டுள்ளன. குப்பையும் கூளமும் நிறைந்துள்ள இந்த இடம், நெல் புழுங்குவதற்கு ஏற்ற இடமல்ல. இந்த இடத்தில் எச்சமயத்திலும் நெல் புழுங்கப் பட்டிருப்பதாகத் தெரியவில்லை. கந்தையா தேவரின் வீட்டில் மாடி அறையில் ஏகப்பட்ட தட்டுமுட்டுச் சாமான்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்த இடத்தில் நெல் உலர வைக்கப்படடிருக்கும் என்று எவக்குத் தோன்றவில்லை. இது வெகு சிறிய அறை. இந்த அறை முழுவதிலும் ஏராளமான தட்டுமுட்டுச் சாமான்களே உள்ளன. மேலும் மாடிக்குச் செல்லும் மரப்படிக்கட்டு செங்குத்தானது. எனவே நெல் எடுத்துக் கொண்டு ஒருவர் இந்தப் படிக்கட்டுகளில் ஏறுவது முடியாத காரியமாகும். குறிப்பாக நெல் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு மாடிக்குச் செல்லுவது என்பது அறவே இயலாததாகும்.

மாடி அறையில் நெல் உலர் வைக்க முடியாது என்பது எது தெளிவான கருத்தாகும்.

மாடியிலுள்ள வளைவில் பனை ஓலைகள் வைக்கப்பட்டு மறைக்கப்பட்டுள்ளது. எனவே சாலைச் சந்திப்பில் நடப்பதை இங்கிருந்து பார்க்க முடியாது. குறிப்பாகத் தெரு விளக்கின் அருகே சாலைச் சந்திப்பில் நடப்பனவற்றை இங்கிருந்து பார்க்க முடியாது. கீழ் வராண்டாவில் இருப்புக் கம்பிகள் பொருத்தப் பட்டுள்ளன. எனவே சாலையிலிருந்து இந்த வராண்டா வழியாக மாடிச்சுத் தாவிச் செல்ல முடியாது. வெய்யிலினின்றும் பாதுகாப்பாக துத்தநாகத் தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. இத்தகடுகளின்மீது எளிதில் ஏற முடியாது. மேலும் தன்னுடைய வீடு வெளியார் நுழைய முடியாத கோட்டை என்று கந்தையா தேவர் ஒரு பொழுதும் சொல்லவில்லை. தன்னுடைய வீட்டில் வயது வந்த பெண்கள் இருப்பதால் வடக்கு வளைவைப் பனை ஓலைகள் கொண்டு மூடி விட்டதாகவே அவர் சொல்லியுள்ளார். குறுக்கு விசாரணையில் திரு. டேவிட் கேட்ட கேள்விகள் முக்கியமானவையல்ல. வளைவில் உள்ள ஓட்டை மூலமாகச் சாலைச் சந்திப்பில் நடப்பதைப் பார்க்க முடியாது. ஏனெனில் இந்த வளைவு பனை ஓலைகளால் அடைக்கப் பட்டுள்ளது.

அடுத்து இராமச்சந்திரத் தேவரின் வீட்டையும் சென்று பார்த்தேன். நெல் புழுங்குவதற்கும், காய வைப்பதற்கும் இங்கு ஏராளமான வசதியுள்ளது. நெல் உலர வைக்க முதல் மாடியிலும். ஏராளமான காலியிடம் உள்ளது. நெல்லைப் புழுங்க வைத்துக் காய வைக்க இராமச்சந்திரத் தேவர் விரும்பினால் அதை அவர் தன் வீட்டிலேயே செய்திருக்க முடியும்; இதற்காக சுந்தையா தேவரின் வீட்டிற்குச் செல்ல வேண்டியதில்லை என்பது எனது தெளிவான கருத்தாகும்.

நாங்கள் சுற்றுலா மாளிகைக்கு 12–00 மணியளவில் திரும்பினோம்.

கே. எஸ். இராமமூர்த்தி,
விசாரணைக் கமிஷன்.

(உண்மை நகல்)

(ஒ-ம்) செயலாளர்,
நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி,
விசாரணைக் கமிஷன்.



நீதிபதி கே. எஸ். ஸ்ரீமூர்த்தி விசாரணைக் கமிஷன் 7—11—1981 அன்று சங்கனாங்குளம் கிராமத்தைப் பார்வையிட்டபோது எடுத்த குறிப்புகள் :

தேவர் வகுப்பு வழக்குரைஞர். ஆதிதிராவிடர் தரப்பு வழக்குரைஞர், கமிஷன் வழக்குரைஞர், அரசு தரப்பு வழக்குரைஞர் காவல் துறையினர் ஆகியோருடன் காலை 9—30 மணி அளவில் சங்கனாங்குளம் போய்ச் சேர்ந்தோம். சாலையின் எதிர்ப் புறம் உள்ள செவந்தியாபுரம் அரிசி ஆலையை முதலில் பார்வையிட்டோம். ஆறு அல்லது ஏழு கிடங்குகளைப் பார்வையிட்டோம். இவற்றில் ஒரு சிலவற்றில் நெல் வைக்கப்பட்டிருந்தது. கிடங்குகளைப் பற்றிக் குறிப்பாக ஒன்றும் சொல் வதற்கு இல்லை. அரிசி ஆலைக்கு மேற்கிலும் மேற்கிலும் இரண்டு பெரிய வாயில்கள் உள்ளன. மேற்குப் பக்கத்தில் ஆதிதிராவிடர்கள் குடியிருப்பு உள்ளது. அரிசி ஆலையின் அருகே சாலையோரத்தில் தேநீர்க் கடை. வெற்றிலைப் பாக்குக் கடை, மளிகைக் கடை ஆகியவை பெருந்து நிற்கும் இடத்திற்கு எதிராக உள்ளன. இது மக்கள் வெகுவாக புழங்கும் இடம். அரிசி ஆலையின் உள்ளே அரிசி புழுங்கும் உலை ஒன்று உள்ளது. இது முன்னர் அங்கு இல்லை என்றும் ஆலைக்குள் அரிசி புழுங்கப் படுகிறது என்பதை நிரூபிக்கச் சமீபத்தில் கொண்டுவரப்பட்டதாகவும் ஸ்டாலின் கூறுகிறார். ஆனால் ஸ்டாலின் கூறுவதைச் சங்கரத் தேவர் மறுத்தார். இந்தச் சாட்சியத்தைக் கருதிப் பார்ப்பது அவசியமற்றது. ஆனால், நெல்லை அவிப்பதற்கு உலை ஒன்று உள்ளது என்று சொல்வதே போதுமானது. அரிசி ஆலையின் பின்புறத்தில் அதிக வெற்றிடம் உள்ளது. வண்டி நிறுத்துமிடமும் உள்ளது. அரிசி ஆலைக்குப் பின்புறத்தில் பெரிய கற்களைப் பயன்படுத்திய அடுப்பு ஒன்றும் இருப்பதை நான் பார்த்தேன். நெல்லை அவிப்பதற்கு இந்த அடுப்புப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. அறுவடைக் காலத்தில் உழவுத் தொழிலாளர் களுக்கு உணவு தயாரிப்பதற்காக இந்த அடுப்பு பயன்படுத்தப்படுகிறது என்று ஸ்டாலின் சொன்ன போதிலும் பகலில் சாப்பாடு தயாரிப்பதற்காக அவை பயன் படுத்தப்பட்டன. அப்படி இருந்தும் நெல்லை அவிப்பதற்காக அந்த அடுப்பு பயன் படுத்தப்படவில்லை என்று சொல்ல முடியாது. அடுப்புப் பயன்படுத்தப்பட்டது. அது நெல்லை அவிப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது : பயன்படுத்தப் பட்டு வருகிறது என்று குறிப்பிட்டால் போதுமானதாகும்.

அடுத்து, நாங்கள் மேற்கு சங்கனாங்குளத்திற்குச் சென்றோம். இராஜசெல்வத்தின் வீடு கிழக்கு முனையில் உள்ளது. மஞ்சுளா வீடு மேற்குப் பக்கத்தில் மாதா கோயிலின் முடிவில் உள்ளது. என்னுடைய முந்தைய ஆய்வின்போது இந்த வீடு காணப்பட்டது. தற்போது இது முற்றிலும் சிதைந்துள்ளது. பாழடைந்து எவராலும் பயன்படுத்தப்படவில்லை. மஞ்சுளாவின் பெற்றோர் திருமலாபுரத்திற்குச் சென்று விட்டனர். அதாவது, கண்ணம்மாள், முத்தையா ஆகியோர் இங்கு வசிக்கவில்லை.

அடுத்து, மைக்கேல் அம்மாள் வீடு இருந்த இடங்களைப் பார்வையிட்டேன். மசானத்தின் வீட்டிற்குப் பக்கத்திலும் பால்ராஜ் வீட்டின் பக்கத்திலும் அது அமைந் துள்ளது என்று சாட்சியத்தில் கூறப்பட்டது. இரு பக்கத்திலும் வெற்று நிலமே உள்ளது என்றும் இரு பக்கத்திலும் வீடு இருந்ததற்கான அடையாளமே இல்லை என்றும் நான் அறிந்தேன். இரண்டு பக்கத்திலும் வெற்று நிலம் இருந்தது என்பது தெளிவாகிறது. மைக்கேல் அம்மாளுக்கு சங்கனாங்குளத்தில் வீடு எதுவும் இல்லை என்றும், அவர் சங்கனாங்குளத்தை விட்டு நீண்ட நாள்களுக்கு முன்னரே சென்று விட்டார் என்றும் திரு வெங்கடாச்சாரி சொன்ன வாக்குத்திற்கு ஆதரவாக உள்ளது. தன்னுடைய வீடு மசானத்தின் வீட்டிற்குக் கிழக்குப் பக்கத்தில் உள்ளது என்று மைக்கேல் அம்மாளின் தாய் பூர்ணம் அம்மாள் சாட்சியம் அளித்துள்ளார். மசானம் வீட்டிற்கு மேற்குப் பக்கத்தில் உள்ளது என்று மற்றொரு முரண்பாடான சாட்சியமும் கூறப்பட்டுள்ளது. அதே வரிசையில் அடுத்து காயின் வீடு உள்ளது.

இராஜசெல்வத்தின் வீட்டில் என்ன நடந்தது என்பதை அவர் பார்த்திருக்க முடியுமா என்பதைச் சரிபார்ப்பதற்காக முத்தம்மாளின் வீட்டை நான் பார்வையிட் டேன். முத்தம்மாளின் வீட்டு மேற்கூரை மிகத் தாழ்வாக உள்ளது. இராஜ செல்வத்தின் வீட்டில் என்ன நடந்தது என்பதை முத்தம்மாள் தன் வீட்டிலிருந்து பார்த்திருக்க முடியாது. மேலும், இராஜசெல்வத்தின் வீடு முத்தம்மாளின் வீட்டிற்கு நேர் எதிரே இல்லை. எதிர் வரிசையில் ஒரு வீடு தள்ளி அமைந்துள்ளது. மசானத்தின் வீ[illegible] அல்ல[illegible] 3 வீடு தள்ளி அமைந்துள்ளது. இராஜ செல்வத்தின் வீடும் தள்ளி அமைந்துள்ளது. இராஜசெல்வத்தின் வீட்டில் நடக்கும் நிகழ்ச்சி குறித்த சத்தத்தை அவர் கேட்பது என்பது கடினமாகும். தொலைவும் அதிகமாக உள்ளது. இராஜசெல்வத்தின் வீட்டிலிருந்து வரும் சத்தத்தை மசான மும் நல்லையாவும் கேட்டிருக்க முடியாது. கண்ணம்மாவின் கணவர் முத்தையா இராஜசெல்வம் இருந்த அதே வரிசையில் கடையில் மாதாகோயிலுக்கு அருகில் வசிக் கிறார். இராஜசெல்வத்தின் வீட்டிலிருந்து வரும் சத்தம் எதனையும் (அரை பர்லாங்) கேட்பது அரிது.

சின்னத்தம்பி மைக்கேல் அம்மாளைக் கற்பழித்ததாகச் சொல்லப்பட்ட வாழைத் தோப்பை நான் பார்வையிட்டேன். தொலை தூரத்தில் அறுவடைப் பணியை அவர் கவனித்துக் கொண்டிருந்தபோதும் அவருக்குத் தாகம் எடுத்த போதும், தண்ணீர் குடிப்பதற்காக அவர் வேணுகோபாலின் கிணற்றுக்கு வருவார் என்றும், அப்போது சின்னத்தம்பி அங்கு வருவார் என்றும் அச்சமயத்தைப் பயன்படுத்தி சின்னத்தம்பி மைக்கேல் அம்மாளைக் கற்பழித்திருப்பார் என்றும் வாதிடப்பட்டது. மைக்கேல் அம்மாள் அறுவடைப் பணியைச் செய்து கொண்டிருந்த இடத்திற்குப் பக்கத்தில் உள்ள இரண்டு கிணறுகளிலிருந்து அவர் தண்ணீர் எடுத்திருக்க முடியாதா என்பது பற்றிக் குறுக்கு விசாரணையில் தெரியவருகிறது. ஒரு கிணற்றில் தண்ணீர் உப்பாக உள்ளது. மற்றொரு கிணற்றில் படிக்கட்டு இல்லை என்று ஸ்டாலின் கூறுகிறார். நான் வேணுகோபாலின் கிணற்றைப் பார்வையிட்டேன். கிணற்றைச் சுற்றிக் கைப்பிடிச் சுவர் கட்டப்பட்டுள்ளது. அதில் தண்ணீர் ஆழத்தில் உள்ளது. கிணற்றுக்குள் இறங்கிக் குடிக்க நீர் எடுப்பது என்பது நம்பத்தகாததாக உள்ளது. படிக்கட்டுகள் மேல் மட்டம் வரையில் வரவில்லை. ஒருவர் சுமார் 4 அடி உயரம் வரை ஏற வேண்டியுள்ளது. படிக்கட்டுகளிலிருந்து கைப்பிடிச் சுவர் எதுவும் இல்லை. கிணற்றைப் பார்த்தால் படிக்கட்டுக்களைப் பயன்படுத்திக் கிணற்றுக்குள் எவரும் இறங்கமாட்டார்கள் என்பதும் தெளிவாகிறது. ஒருவர் கிணற்றுக்குள் இறங்க வேண்டுமானால், கிணற்றில் இறங்குவதற்கான துணிவும் எந்தவித பிடிப்பும் இன்றி ஏறுவதற்குத் தைரியமும் இருக்க வேண்டும் என்பது எனக்குத் தெளிவாகிறது. படிக்கட்டுகள் மிகவும் அபாயகரமானவை. மைக்கேல் அம்மாள் இந்தப்படிக்கட்டுகளைப் பயன்படுத்தியிருக்கமாட்டார் என்பதிலும், தண்ணீர் எடுப்பதற்காக இந்தக் கிணற்றுக்கு வந்திருக்கவே மாட்டார் என்பதிலும் எனக்கு எவ்வித ஐயமுமில்லை.

ஆய்வுக்குப் பின்னர் பிற்பகல் 1–00 மணிக்கு நாங்கள் திருநெல்வேலியை வந்தடைந்தோம்.

கே. எஸ். இராமமூர்த்தி,
விசாரணைக் கமிஷன்.

(உண்மை நகல்)

(ஒம்) செயலாளர்,
நீதிபதி கே. எஸ் இராமமூர்த்தி,
விசாரணைக் கமிஷன்.

———


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS